2942

T.N.L.A Debates

Official Report

Vol 26 NO2

7, May 1986

D
V211,31 N86

N86·26·2
136487

வெளியீடு 10-2-1987

Issued 10-2-1987

2942

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

புதன்கிழமை மே 7, 1986-தொகுதி 26 எண். 2

Wednesday 7th May, 1986-Volume 26 No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600009

Legislative Assembly Secretariat, Fort St. George,
Madras-600009

விலை ரூ. 3]

[Price Rs. 3

D
V211, 31 N86
N86-26-2

136487
சென்னை-600 008.

# உள்ளடக்கம்

பக்கங்கள்.

1. தகவல் கோரல்—

(அ) வால்குடி தொகுதி உறுப்பினரின் தேர்தல் வழக்கில் உயர்நீதி மன்றம் அளித்துள்ள தீர்ப்பு .. .. .. 175—176

(ஆ) உள்ளாட்சி மன்றத் தேர்தல்கள் குறித்து 184

2. அறிக்கைகள் அளித்தல்—

(அ) விதி 111-ன் கீழ் குதிரைப் பந்தய ஒழிப்பு குறித்து மாண்புமிகு சட்ட அமைச்சரின் அறிக்கை.. .. .. 176—184

(ஆ) விதி 111-ன் கீழ் தம் வீட்டில் வருமான வரி அதிகாரிகள் அல்லது சி. பி. ஐ. சோதனை செய்தார்கள் என்ற செய்தியை மறுத்து சட்ட அமைச்சர் விடுத்த அறிக்கை .. .. .. 184—186

3. கவன ஈர்ப்பு—

(அ) திருமங்கலம், உசிலம்பட்டி வட்டங்களில் வறட்சி நிலை .. .. .. 186—190

(ஆ) மேட்டுப்பாளையம் நகரில் குடிநீர் தட்டுப்பாடு .. .. .. 190—193

4. அரசினர் சட்ட முன்வடிவு—

வேளாண் விளைபொருள் சந்தைகள் (திருத்த) சட்டமுன்வடிவு 1986 .. .. 193—195

5. வரவு–செலவுத் திட்டம் 1986–87 வாக்கெடுப்பு —(தொடர்ச்சி)

(அ) கோரிக்கை எண். 15—காவல் துறை ..

(ஆ) கோரிக்கை எண். 16—தீயணைப்புப் பணிகள்—(தொடர்ச்சி) 196—258

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் .. .. .. 196—266

(இ) கோரிக்கை எண். 29—தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும்— 269

| | |
|---|---|
| மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் .. .. .. | 385—424 |
| திரு. எஸ். பி. மணவாளன் .. | 270—276 |
| திரு. எம். அண்ணாதாசன் .. | 276—225 |
| திரு. ஆ. நடராசன் .. .. | 285—296 |
| திரு. ஏ. தங்கராசு .. .. | 296—300 |
| திரு. ஜே. ஹேமச்சந்திரன் .. | 300—311 |
| திரு. த. பழனி.. .. .. | 311—317 |
| திரு. கு. சுப்பராயன் .. .. | 317—330 |
| திரு. வி. தங்கவேலு .. .. | 330—334 |
| திரு. ஆர். செங்காளியப்பன் .. | 340—348 |
| திரு. மா. சின்னராசு .. .. | 349—361 |
| திரு. குமரி அனந்தன் .. .. | 262—371 |
| திரு. ஆர். ரெங்கசாமி .. .. | 372—385 |

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் ... 426—528


# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**1986, மே 7, புதன்கிழமை,**

**சித்திரை 24, அக்ஷய, திருவள்ளுவர் ஆண்டு—2017.**

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"உறின்உயிர் அஞ்சா மறவர் இறைவன்
செறினும்சீர் குன்றல் இலர்"

போர் வந்தால் உயிரின்பொருட்டு அஞ்சாமல் போர் செய்யத் துணியும் வீரர், அரசன் சினந்தாலும் தம்முடைய சிறப்புக் குன்றாதவர் ஆவர்.

குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 1. தகவல் கோரல்.

### (அ) லால்குடி தொகுதி உறுப்பினரின் தேர்தல் வழக்கில் உயர்நீதி மன்றம் அளித்துள்ள தீர்ப்பு

* **திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் இன்பர்மேஷன். இந்த மாமன்றத்திலே லால்குடி தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப் பெற்ற எங்கள் கட்சி சட்டமன்றப் பேரவை உறுப்பினர் திரு. வெங்கடாசலம் அவர் களின் தேர்தல் குறித்து உயர்நீதிமன்றம் அளித்த தீர்ப்பை ஒட்டி 28—4—1986 ஆம் தேதியன்று இந்தப் பேரவையில் ஒரு பிரச்சினை எழுந்தது. அந்தப் பிரச்சினை குறித்து மன்றத்திலே இருக்கின்ற பல்வேறு உறுப்பினர்களும், தாங்களும் பல கருத்துக்களை வெளியிடும் நேரத்தில் தாங்கள் அன்றையதினம் பேசுகின்ற நேரத்தில் அரசியல் சட்டத்தை மேற்கோள் காட்டியுள்ளீர்கள். அரசியல் சட்டம் 329 (பி) பிரிவிலே No election to either House of Parliament or to the House or either House of the Legislature of a State shall be called in question

except by an election petition presented to such authority and in such manner as may be provided for by or under any law made by the appropriate Legislature." என்பதை மேற்கோள் காட்டி தங்களுடைய கருத்தைச் சொன்னீர்கள். அதாவது, தேர்தல் வழக்கு என்பது, தேர்தல் நடந்து 45 நாட்களுக் குள்ளாகவே அந்தத் தேர்தல் வழக்கு சம்பந்தமான பிரச்சினைகள் நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும், அப்படியிருந்தால்தான் சட்டமன்றப் பேரவை உறுப் பினர்கள் நிர்பயமாக, ஸ்திரத்தன்மையோடு சுதந்திரமாகப் பணியாற்றுவதற்குத் துணையாக இருக்கும் என்ற முறையில் கருத்து சொன்னீர்கள். ஆனால் 45 நாட்களுக்குப் பிறகு, தேர்தல் காலத்தில் தவறு நடந்திருந்தாலும்கூட நீதிமன்றம் தலையிட இயலாது என்ற கருத்து அன்றையதினம் பிரதிபலிக்கப் பட்டது. இன்றையதினம் காலையிலே நம்முடைய சட்டமன்றப் பேரவை உறுப்பினர் திரு. வெங்கடாசலம் அவர்கள் டெல்லியி லிருந்து தொலைபேசியிலே பேசினார்கள். அவர்கள் உச்சநீதி மன்றத்திலே தொடர்ந்த வழக்கிலே உச்சநீதிமன்றம் தடை யாணை வழங்கியிருப்பதாகச் சொன்னார்கள். அதுவும் ஒருசில பத்திரிகைகளில் வந்திருக்கிறது. அன்று தாங்கள் சொன்ன கருத்துக்கு வலுவூட்டுவதாக உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு கிடைத் திருப்பதாகத் தெரிகிறது. இது சம்பந்தமாக நீதிமன்றத்தி லிருந்து தகவல் வந்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : உயர்நீதி மன்றத்திலிருந்தும் தகவல் இல்லை ; உச்சநீதிமன்றத்திலிருந்தும் தகவல் இல்லை.

## 2. அறிக்கைகள் அளித்தல்.

### (அ) விதி 111-ன் கீழ் குதிரைப் பந்தய ஒழிப்பு குறித்து மாண்புமிகு சட்ட அமைச்சரின் அறிக்கை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : மாண்புமிகு சட்ட அமைச்ச ரவர்கள் 111 வது விதியின்கீழ் ஒரு அறிக்கையை அளிப்பார்கள்.

**திரு. அ. ரகுமான்கான்** : தலைவரவர்களே, திரு. சித்தன் அவர்கள் கேட்டதைப்போல நானும் ஒரு ஒழுங்குப் பிரச் சினையை எழுப்ப விரும்புகிறேன். அமைச்சரவர்கள் 111-வது விதியின் கீழ் அறிக்கையை வைத்ததற்குப் பிறகு நான் கேட்க முடியாது. அதனால் நான் இப்பொழுதே கேட்கிறேன்,



திரு. சித்தன் அவர்கள் கேட்பதற்கு அனுமதித்ததைப்போல எனக்கு அனுமதி கொடுங்கள். அதற்குப்பிறகு அவர்கள் அறிக்கை வைக்கட்டும்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்** : பேரவைத் தலைவர் அவர்களே, நான் அறிக்கை வைத்ததற்குப் பிறகு வேண்டு மானால் அவருக்கு அனுமதி கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : அவர்கள் அறிக்கை வைத்த பிறகு திரு. ரகுமான்கான் அவர்கள் கேட்கலாம்.

**திரு. அ. ரகுமான்கான்** : தலைவரவர்களே, அவர்கள் அறிக்கை வைத்துவிட்டபிறகு புரொசீடிங்க்ஸ் வேறுவிதமாகப் போய்விடு கிறது. நான் குறிப்பிட விரும்புவது முக்கியமான பிரச்சினை. சித்தன் அவர்களுக்கு வாய்ப்பு கொடுத்ததைப்போல எனக்கும் வாய்ப்பு கொடுங்கள். பிறகு அமைச்சர் அறிக்கை வைக்கட்டும், வேண்டாமென்று நான்சொல்லவில்லை.

**THE HON. THIRU C. PONNAIYAN** : Hon. Speaker has called me to make a statement.

**திரு. அ. ரகுமான்கான்** : திரு. சித்தன் அவர்களுக்குக் கொடுத்த அந்த உரிமையை எனக்கும் கொடுங்கள் என்றுதான் கேட்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : அமைச்சரவர்கள் கொடுக் கப்போகின்ற அறிக்கை சம்பந்தமாகக் கேட்கப் போகிறீர்களா ?

**திரு. அ. ரகுமான்கான்** : அது என்ன அறிக்கை என்று எனக்குத் தெரியாதே.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : பிறகு எப்படி கேட்கப் போகிறீர்கள் ?

**திரு. அ. ரகுமான்கான்** : திரு. சித்தன் அவர்கள் சுப்ரீம் கோர்ட்டைப் பற்றிக் கேட்டதைப்போல, நானும் சுப்ரீம் கோர்ட் சம்பந்தமாகக் கேட்க வேண்டும்.

**THE HON. THIRU C. PONNAIYAN**. Mr. Speaker, Sir, since I have been called, I may be permitted to address the House.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சரவர்கள் வைக்கப் போவது என்ன அறிக்கை என்று தெரியுமா?

**திரு. அ. ரகுமான்கான்:** என்ன அறிக்கை என்று எனக்குத் தெரியாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சரவர்கள் படிக்கப் போகின்ற அறிக்கை என்னவென்று தெரியாது அல்லவா? எனவே, அவர்கள் படித்த பிறகு கேளுங்கள்.

**திரு. அ. ரகுமான்கான்:** அவர்கள் அறிக்கை கொடுத்த பிறகு, இதுசம்பந்தமாகக் கேள்வி கேட்கக் கூடாது என்று தாங்கள் சொல்லிவிடக் கூடாது. 111-வது விதியின்கீழ் அறிக்கை வைத்த பிறகு, அறிக்கை வைத்தாகிவிட்டது, இதைப்பற்றிப் பேசக் கூடாது என்று சொல்லி நான் கேட்பதற்கு மறுக்கக்கூடாது. எனவேதான் தயவுசெய்து முன்கூட்டியே கேட்பதற்கு விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு உறுப்பினரவர்கள் இந்தச் சமயத்தில் பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்புவதற்கு இடமில்லை. ஆகவே, இனிமேல் இப்படிப்பட்ட. . . . . .

**திரு. அ. ரகுமான்கான்:** திரு. சித்தன் அவர்களுக்கு வாய்ப்பு கொடுத்திருக்கிறீர்களே.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது உறுப்பினர் சம்பந்தப் பட்ட பிரச்சினை என்பதால் கேட்டார்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருவருக்குக் கொடுத்ததால், 234 பேர்களுக்கும் கொடுக்க வேண்டுமென்ற அவசியமில்லை. அவருக்கு உரிமை இருக்கிறது. எனவே, ஒரு ஸ்டேட்மெண்ட் வைத்தால், அதற்குப் பிறகு கேட்கவேண்டும். கேட்க விட்டால் தான் உட்காருவேன் என்று சொல்வதும் சரி அல்ல. (குறுக்கீடு)

**திரு. அ. ரகுமான்கான்:** அப்படிச் சொல்லவில்லை. ஒரு முக்கியமான பிரச்சினை சம்பந்தமாக ஏற்கனவே தங்களிடத்தில் அனுமதி பெற அதுகுறித்துக் கேட்டு, நாவலர் அவர்களிடத்திலும் பேசி, சட்ட அமைச்சர் அவர்களிடத்திலும் பேசி, ஒரு பிரச்சினையைக் கேட்கப் போகிறேன், அனுமதி கொடுங்கள் என்று



கேட்டதற்குப் பிறகு ஒரு அறிக்கை விதி 111-ன் கீழ் வைத்து, எதுவும் பேசமுடியாது என்று சொல்வது உறுப்பினர்களுடைய உரிமையை மறுப்பதாகாதா? ஆகவே, உங்களைக் கேட்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் அவர்களுடைய அறிக்கையை வைக்கட்டும்; உறுப்பினர் அவர்கள் அதைப் பற்றி அல்லாமல் என்ன சந்தேகம் இருக்கிறதோ அதைக் கேட்கட்டும், அவர் பதில் தரட்டும். (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எந்த வம்பும் இல்லை.

**திரு. அ. ரகுமான்கான்:** இது சம்பந்தமாக ஒரு அறிக்கை வைத்துவிட்டு, பேசவிடாமல் தடுக்கிற வகையில், அதன் மீது பேசமுடியாது என்றால்—நான் கேட்பது வேறு ஒன்றும் இல்லை. அறிக்கை வைக்கட்டும். பதில் சொல்லட்டும். வேண்டாம் என்று சொல்லவில்லை. முக்கியமான தமிழ்நாடு சம்பந்தமான பிரச்சினை. தாங்கள் அதைச் சொல்ல அனுமதி வழங்க வேண்டும். . .

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** புரொவிஷன்ஸ் இல்லை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்டேட்மெண்ட் அண்டர் ரூல் 111 . . . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதுவாக இருந்தாலும், 111-வது விதியின் கீழ் ஒரு அறிக்கை வைக்கிறார்கள். ஏதாவது ஒரு விதியின் கீழ்தான் தாங்களும் கொண்டு வரவேண்டும். அப்படி வந்தால், மறுத்தால் உரிமை மறுக்கப்படுகிறது என்று சொல்லலாம். சொல்லியே தீரவேண்டும் என்று சொல்வது எப்படி சரியாகும்?

**திரு. அ. ரகுமான்கான்:** நான் சட்ட அமைச்சர் அவர்களிடத்திலும் சொல்லி இருக்கிறேன். குதிரைப் பந்தய ஒழிப்பு சம்பந்தமாக உள்ள அறிக்கைதான் அது. அது இல்லையெனில் நான் உட்காருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர் அறிக்கையைப் படிக்கட்டும்.

**திரு. அ. ரகுமான்கான் :** இதிலிருந்து என்ன தெரிகிறது? குதிரைப் பந்தயம் சம்பந்தமாக ஒரு அறிக்கை வைத்துவிட்டு, பேசக்கூடாது என்றால் எப்படி? சாந்திபூஷன் சுப்ரீம்கோர்ட்டிலே குதிரைப் பந்தய ஒழிப்பு அரசாங்கத்தின் கொள்கை அல்ல என்று சொல்கிறார். சட்டசபையில், ஒழிப்பது எங்கள் கொள்கை என்கிறீர்கள். . .

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** அவர் பேசுவதைப் பேசிவிட்டார். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குதிரைப் பந்தயங்களின் பேரில் பணயம் வைப்பதை அல்லது பந்தயம் கட்டுவதை ஒரு குற்றமாக ஆக்கி, 1949 ஆம் ஆண்டு சென்னை மாநகர்க் காவற்படை மற்றும் சூதாடுதல் (திருத்தச்) சட்டமானது (தமிழ்நாடு சட்டம் 7/1949) இயற்றப்பட்டது. இச்சட்டம், அறிவிக்கப்படும் (குறுக்கீடு) ஒரு தேதியிலிருந்து நடைமுறைக்கு வருவதாக இருந்தது. 1975 ஆம் ஆண்டில் 1974 ஆம் ஆண்டு சென்னை குதிரைப் பந்தயங்கள் (பணயம் வைத்தல் அல்லது பந்தயங்கட்டுதல்) சட்டத்தின் மூலமாக (தமிழ்நாடு சட்டம் 44/1974) மேற்சொன்ன 7/1949 ஆம் சட்டமானது, 1975 மார்ச்சு 31 ஆம் நாள் முதற்கொண்டு நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது. இதன் விளைவாக, குதிரைப் பந்தயங்களின் பேரில் பணயம் வைத்தல் அல்லது பந்தயம் கட்டுதலானது, சட்ட பூர்வமாக, 1975 மார்ச்சு 31-ம் நாள் முதற்கொண்டு ஒழிக்கப்பட்டது.

சென்னை குதிரைப் பந்தய சங்கம் தாக்கல் செய்த நீதிப் பேராணை மனு ஒன்றில், சென்னை உயர்நீதிமன்றம் இச்சட்டம் செல்லும் என்று தீர்ப்பளித்தது. அதன்பேரில், இதைச் சென்னை குதிரைப் பந்தயச் சங்கம் உச்ச நீதிமன்றத்திற்குக் கொண்டு சென்றது. உச்ச நீதிமன்றம் உரிமை வழக்கு மேல் முறையீடு எண் 1715 (எண் :)'/ 1975-ல் உரிமை வழக்கு பல்வகை மனு 8168/1975-ல் 20—11—1975 ஆம் நாளிட்ட தனது ஆணையில், மேற்சொன்ன தீர்ப்பையும், உயர்நீதிமன்றத்தின் ஆணையையும், 1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு குதிரைப் பந்தயங்கள் (பணயம் வைத்தல் அல்லது பந்தயங் கட்டுதல் ஒழிப்பு) சட்டத்தின் மூலமாக 1975 மார்ச்சு 31 ஆம் நாள் முதற்கொண்டு நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்ட 1949 ஆம் ஆண்டு சென்னை மாநகர காவற்படை மற்றும் சூதாடுதல் (திருத்தச்) சட்டம் செயற்படுவதையும்

நிறுத்தி வைத்துத் தடையாணை பிறப்பித்தது. இந்த ஆணை யின் காரணமாக, சென்னை குதிரைப் பந்தயச் சங்கமானது, சென்னையிலும், உதகமண்டலத்திலும் குதிரைப் பந்தயங்களை நடத்தி வந்தது.

நிலைமை இவ்வாறிருக்க, சென்னை குதிரைப் பந்தயச் சங்கம் குதிரைப் பந்தயங்களை நடத்துவதில் காணப்பட்ட ஒழுங்கீ னங்கள் குறித்து, தமிழ்நாடு அரசுக்கு முறையீடுகள் வந்தன. மேற்சொன்ன சங்கத்தின் பல்வேறு முறைகேடுகள் மற்றும் ஒழுங் கீனச் செயல்கள், பந்தயத்திற்குச் செல்கின்ற பொதுமக்களின் நலன்களை வெகுவாகப் பாதித்திருக்கின்றது என்பதும் அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. பந்தயத்திற்குச் செல் கின்ற பொதுமக்களின் நலன்களுக்குச் சிறந்தவகையில் சேவை செய்யவேண்டியது தேவை என்பதை அரசு நிறைவுறக் கண்டு, மாநில அரசோ, மாநிலத்திற்கு முற்றிலும் சொந்தமான ஒரு கழகமோ அல்லது நிறுவனமோ குதிரைப் பந்தயங்களை நடத்த இயலும் வகையிலும், பொது மக்களின் நலன்களைப் பேணிக்காக் கவும், அதிலும் குறிப்பாக குதிரைப் பந்தயத்திற்குச் செல்கின்ற பொதுமக்களின் நலன்களைப் பேணிக்காக்க குதிரைப் பந்தய சங்கத்தின் மற்ற நோக்கங்களை நிறைவேற்ற இயலும் வகை யிலும், சென்னை குதிரைப் பந்தயச் சங்கத்தின் நிறுவனத்தை, ஒரு பொதுக்காரியத்திற்காகக் (for a public purpose) கையகப்படுத்துவதென்றும் கொள்கை முடிவொன்றை அரசு எடுத்தது. அதன்படியே, சட்டமொன்று, அதாவது 1985 ஆம் ஆண்டு சென்னை குதிரைப் பந்தயச் சங்கம் (நிறுவனத்தைக் கையகப்படுத்துதலும், உரிமை மாற்றஞ் செய்தலும்) சட்ட மானது, தமிழ்நாடு சட்டமன்றத்தின் இரண்டு அவைகளாலும் நிறைவேற்றப்பட்டது; அது குடியரசுத் தலைவரின் இசை வையும் 9—4—1986 அன்று பெற்றது. இந்தச் சட்டத்தின்படி, சென்னை குதிரைப் பந்தயச் சங்கத்தின் நிறுவனமானது, உடைமைகள்

(மற்பகல் 9-10.)

(Assets) மற்றும் சொத்துக்கள் அனைத் துடனும் சேர்த்து, மாநில அரசிடம் ஒப்படைக்கப்பட்டு மேவி நிற்கின்றன. அரசு இச்சட்டத்தின் 9 (2) ஆம் பிரிவின்படி பணிகளை ஆற்றுவதற்காக காப்பாளர் (Custodian) ஒருவரையும் நியமித்திருக்கின்றது.

(முற்பகல் 9-10.)

இதற்கிடையே, சென்னை உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்த்துத் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டை (1715 (எண்)/1975) திரும்பப் பெற அனுமதி கோரி சென்னை குதிரைப் பந்தயச் சங்கத்தால் மனு ஒன்று உச்ச நீதிமன்றத்தின் முன்பு தாக்கல் செய்யப்பட்டது. இம்மனு உச்ச நீதிமன்றத்தின் முன் 6—5—1986 அன்று விசாரணைக்கு வந்தது; உச்ச நீதிமன்றம், மேல் முறையீட்டு மனுவைத் திரும்பப் பெற்றுக் கொள்வதற்கு அனுமதி வழங்கியுள்ளது.

இதன் விளைவாக, தமிழ்நாடு சட்டம் 7/1949 (தமிழ்நாடு சட்டம் 44/74 உடன் இணைந்து) உடனடியாக நடை முறைக்கு வந்திருக்கின்றது. இதன் விளைவு என்னவென்றால், குதிரைப் பந்தயங்களின் பேரில் பணயம் வைப்பதோ அல்லது பந்தயம் கட்டுவதோ, சட்டத்தின் கீழ்த் தண்டிக்கப்படத்தக்க ஒரு குற்றமாகும் என்பதாகும்.

மறைந்த நமது மதிப்பிற்குரிய பேரறிஞர் அண்ணா அவர்கள், ஏழை மக்களைப் பாதிக்கின்ற குதிரைப் பந்தயங்கள் ஒழிக்கப் பட வேண்டும் எனும் கொள்கையை மேற்கொண்டிருந்தார்கள். மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களின் அரசு, குதிரைப் பந்தயங்கள் ஒழிக்கப்பட வேண்டும் எனும் பேரறிஞர் அண்ணா அவர்களின் கொள்கையை நிறைவேற்ற உறுதி பூண்டிருக்கின்றது. அதன்படியே, இனிமேல் தமிழ் நாட்டில் குதிரைப் பந்தயங்களின் பேரில் எந்தவிதமான பணயம் வைத்தலையோ; பந்தயங் கட்டுதலையோ. இந்த அரசு அனுமதிக் காது; குதிரைப் பந்தயங்கள் ஒழிக்கப்படுகின்றன.

சென்னை குதிரைப் பந்தயச் சங்கத்தின் குதிரைப் பந்தய நிறுவனத்தின் உடைமைகளும் சொந்துக்களும், 1986 ஏப்ரல் 9 ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்து, 1986-ம் ஆண்டு சென்னை குதிரைப் பந்தயச் சங்கம் (நிறுவனத்தைக் கையகப்படுத்தல் மற்றும் உரிமை மாற்றஞ் செய்தல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 26/1986) வகைமுறைகளின்படி, ஏற்கெனவே அரசிடம் ஒப்படைக் கப்பட்டு மேவி நிற்கின்றன. மற்றவற்றிற்கிடையே நிலங்கள், கட்டிடங்கள் ஆகியவை உள்ளடங்கிய இந்த உடைமைகளும்



சொத்துக்களும், ஒரு பொதுக் காரியத்துக்குப் பயன்படுத்தப் படுவதை உறுதி செய்து கொள்ள எல்லாவகை நடவடிக்கைகளை யும இந்த அரசு மேற்கொள்ளும்.

**திரு. அ. ரகுமான்கான்** : மன்றத்தினுடைய தலைவர் அவர் களே, சுப்ரீம் கோர்ட்டிலே தமிழக அரசின சார்பாக வழக்காடுகிற வயக்கீல்களுக்கு நம்முடைய அரசாங்கம்தான் சம்பளம் கொடுக் கிறது. எனவே, அரசாங்கத்தின் கொள்கை எதுவோ, அதைத் தான் அவர்கள் வாதாட வேண்டும். இந்தக் குதிரைப் பந்தய வழக்கிலே, சாந்திபூஷன் அவர்கள் நம்முடைய அரசாங்கத்தின் சார்பாக சுப்ரீம் கோர்ட்டிலே வாதாடியிருக்கிறார்கள். இந்த வழக்கைப் போட்டவர்கள், இந்த வழக்கை வாபஸ் வாங்க வருகிற போது, அதை எதிர்த்து, அப்படி வாபஸ் வாங்குவது சட்ட விரோதம் என்று திரு. சாந்திபூஷன் அவர்கள் தமிழ்நாடு அரசாங்கத்தின் சார்பாக வாதாடி இருக்கிறார். அதோடு மட்டு மல்ல, அரசாங்கத்தினுடைய கொள்கை குதிரைப் பந்தயத்தை ஒழிப்பது அல்ல என்று வாதாடி இருக்கிறார், கோர்ட்டிலே ரெக் கார்ட் ஆகியிருக்கிறது. அவருக்கு நாம் சம்பளம் கொடுக் கிறோம், இது அரசாங்கத்திற்கு விரோதமான காரியம் அல்லவா என்று நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Acquisition and requisition of the Race Club மசோதாவைப் பொறுத்தவரையிலும் இந்த அவையிலே கொண்டு வரப்பட்டபொழுதே, அவையிலே அது தெளிவாக்கப்பட்டிருக் கிறது. பேரறிஞர் அண்ணாவினுடைய கொள்கை குதிரைப் பந்தயச் சூதாட்டத்தை ஒழிப்பதுதான். இந்த அரசினுடைய கொள்கையும் மாண்புமிகு புரட்சித் தலைவர் கொள்கையும் குதிரைப் பந்தயச் சூதாட்டத்தை ஒழிப்பது என்பது இந்த அவைக்குத் தெளிவாக்கப்பட்டிருக்கிறது. அந்தச் சட்டமுன் வடிவை அவையில் தாக்கல் செய்து விவாதித்தபொழுதே நான் தெளிவாக்கியிருக்கிறேன். அரசினுடைய கொள்கையை ஏற்கெனவே அவையிலே கூறிவிட்டபொழுது, தற்போது மீண்டும் அதை உறுதிப்படுத்துகிறபொழுது, வெளியில் என்ன பேசப்பட்டி ருக்கிறது என்பது அவைக்குப் பொருந்தாது.

**திரு. அ. ரகுமான்கான் :** தலைவர் அவர்களே, அரசாங்க வக்கீல் அரசாங்கத்திற்கு விரோதமாகச் சொல்லி சம்பளம் வாங்கலாமா, நாம் கொடுக்கலாமா ?

### 1. தகவல் கோரல் — (தொடர்ச்சி).

### (ஆ) உள்ளாட்சி மன்றத் தேர்தல்கள் குறித்து.

**திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்டோருக்கு 18 சதவிகிதம் எனவும், பெண்களுக்கு 15 சதவிகிதம் எனவும் தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களால் இட ஒதுக்கீடு செய்யப்பட்டது. அந்த இட ஒதுக்கீடு செய்யப்பட்டபடி தேர்தல் நடத்தப்படவேண்டும் என்ற முயற்சி எடுக்கும்போது உச்ச நீதி மன்றத்தில் தடை ஆணை வழங்கப்பட்டது. வித்ட்ரா செய்யப்பட்டு இருக்கிறது. எனவே இப்போது நடைபெற்றிருக்கின்ற ஊராட்சி, நகராட்சி தேர்தல் பழைய அடிப்படையில் நடைபெற்றிருக்கிறது. புதிய முறைப்படி வழங்கலாம், அது நியாயம் என்று உச்ச நீதிமன்றத்தில் உள்ள தடை ஆணை வாபஸ் பெற பெற்றதால் ஏற்கனவே நடைபெற்றிருக்கின்ற தேர்தல் செல்லுமா ? அதனுடைய விவரம் என்ன ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது ஒரு பெரிய சட்டப் பிரச்சனை.

### 2. அறிக்கைகள் அளித்தல் — தொடர்ச்சி).

### (ஆ) விதி 111-ன் கீழ் தம் வீட்டில் வருமான வரி அதிகாரிகள் அல்லது சி.பி.ஐ. சோதனை செய்தார்கள் என்ற செய்தியை மறுத்து சட்ட அமைச்சர் விடுத்த அறிக்கை.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே I present a statement under Rule 111 on a of public importance.

நாட்டுடைமையாக்கப்பட்ட ஒரு வங்கியில் வருமானவரி அதிகாரிகள் அல்லது சி.பி.ஐ. சோதனை நடத்தியபோது எனது பெயரிலோ அல்லது என் தொடர்பாகவோ 1½ கோடி ரூபாய்



அந்த வங்கியிலிருந்து கைப்பற்றப்பட்டதாக செய்தி சில ஏடுகளால வநதுளளதாகத் தொியவநதுள்ளது. சி.பி.ஐ. அல்லது வருமானவரி அதிகாரிகள் அலலது இரணடும் இணைநது நடத்திய சோதனையில் என் வீட்டிலிருநது ரூ 1½ கோடி கைப்பற்றப்பட்டதாகவும் சில மஞ்சள் ஏடுகளில் ஒரு செய்தி வந்துள்ளது. பொது முக்கியத்துவம் வாய்ந்த இது பற்றிய உண்மை நிலையினை இப்பேரவைக்குத் தெரிவிக்கிறேன்.

வருமானவரி அதிகாரிகளோ அல்லது சி.பி.ஐ. அதிகாரிகளோ அல்லது இருவரும் இணைந்தோ என்னுடைய இல்லத்திலோ அல்லது எனக்கு தொடர்புடைய வேறு எந்த இடத்திலோ இதுகாறும் எந்தவித சோதனையோ அல்லது விசாரணையோ எந்தக் காலத்திலும் நடத்தியது கிடையாது. அப்படி சோதனையோ அல்லது விசாரணையோ நடந்ததாக என்மீது அரசியல் காழ்ப்புணர்ச்சியுள்ள சில எதிர்க்கட்சி ஏடுகளில் வந்துள்ள செய்தி முழுக்க முழுக்க உண்மைக்கு மாறானதும், விஷமத்தனமானதும், அரசியல் காழ்ப்புணர்ச்சி உடையதும், வேண்டுமென்றே என்மீது களங்கம் ஏற்படுத்த வேண்டுமென்ற தீய உள்நோக்கோடும் வெளியிடப்பட்டதுமான செய்தியாகும். அப்படி ஒரு சோதனையோ அல்லது விசாரணையோ என்னிடமோ அல்லது என் தொடர்பாகவோ, சி.பி.ஐ.-யாலோ அல்லது வருமானவரி அதிகாரிகளாலோ அல்லது வேறு யாராலோ எந்தக் காலக்கட்டத்திலும் எங்கும் அறவே நடத்தப்படாதபோது, 1½ கோடி. . .

(கூச்சல்—குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அது கோர்ட்டிலே இல்லை. சும்மா எவனோ வேலையற்றவன் பண்ணிவிட்டான்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கும் விளக்கம் தருகிறேன். இப்பொழுது நாட்டிலே போர் டி கோர்ட்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பிழைப்பு இல்லாதவன், வேலையே இல்லாதவன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கான விளக்கத்தைச் சொல்கிறேன். 1½ கோடி ரூபாய் பணம் என் தொடர்பான சோதனையின் போது

[திரு. சி. பொன்னையன்] [1986 மே 7

கைப்பற்றப்பட்டது எனும் கூற்று முற்றிலும் கற்பனையானது; முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது; அணுவளவும் ஆதாரமற்றது; தீய அரசியல் உள்நோக்கோடு என்மீது களங்கத்தை ஏற்படுத்த வேண்டுமென்ற சதி நோக்கோடு எனது அரசியல் எதிரிகளால் புனையப்பட்டது.

இத்தகைய தீய அரசியல் உள்நோக்கோடு, எனக்கு எதிராக, முற்றிலும் உண்மையற்ற, விஷமத்தனமான இச்செய்தியினை வெளியிட்டவர்கள் மீதும், வெளியிடக் காரணமாக இருந்தவர்கள் மீதும் தக்க சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை இந்த அவையின் மூலமாக மக்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, This is not a matter which is sub judice, because the Writ Petition is not yet admitted. Only when he Writ Petition is admitted the matter becomes sub judice. Hon. Member Thiru Rahmankhan is an Advocate. Ke knows the position.

### 3. கவன ஈர்ப்பு.

**(அ) திருமங்கலம், உசிலம்பட்டி வட்டங்களில் வறட்சி நிலை.**

**திரு. இரா. முத்தையா :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை மாவட்டம், திருமங்கலம் மற்றும் உசிலம்பட்டி வட்டங்களில் இந்த ஆண்டு பருவ மழை பொய்த்து முழுமையாக விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளதால் அப்பகுதி மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள கவலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :



1986 மே 7] [டாக்டர் கா. காளிமுத்து]

**அறிக்கை.**

திருமங்கலம் வேளாண்மைக் கோட்டத்தின் கீழ் திருமங்கலம் மற்றும் உசிலம்பட்டி வட்டங்கள் அடங்கும். இவற்றில் பின்வரும் ஆறு வட்டாரங்கள் உள்ளன.

1. திருமங்கலம் வட்டம்.

(1) திருமங்கலம்,

(2) கள்ளிக்குடி,

(3) டி. கல்லுப்பட்டி.

2. உசிலம்பட்டி வட்டம்.

(1) உசிலம்பட்டி,

(2) செல்லம்பட்டி,

(3) சேடப்பட்டி.

பெரியார் வைகை ஆற்றினால் செல்லம்பட்டி வட்டாரமும், திருமங்கலம் வட்டாரத்தின் பகுதிகளும் ஆக மொத்தம் 5,336 எக்டேர் பாசன வசதி பெறுகிறது. ஏனைய வட்டங்கள் மழை நீரினால் நிரம்பும் குளங்களையும் மற்றும் கிணறுகளையும் சார்ந்துள்ளன.

1985-ஆம் ஆண்டில் நீர்த்தேக்கங்களில் போதிய அளவு தண்ணீரின்மையால், சாதாரணமாக தண்ணீர் திறந்து விடப்படும் நாளான 1—9—1985-க்கு பதில் 75 நாட்கள் தாமதமாக 15—11—85 அன்றுதான் திருமங்கலம் வாய்க்காலில் தண்ணீர் திறந்து விடப்பட்டது. இது இந்த கோட்டத்தின் சாகுபடி நடவடிக்கைகளை மிகவும் பாதித்தது.

வடகிழக்கு பருவமழைக் காலத்தில் (அக்டோபர் முதல் டிசம்பர் வரை) சாதாரணமாக பெய்யும் 409.0 மி.மீ. மழை அளவுக்குப் பதிலாக 216.6 மி.மீ. மழைதான் பெய்தது. 1985-ஆம் ஆண்டில் பெய்த குறைந்த அளவு மழையின் காரணமாக பயிரிடப்படும் பரப்பளவு பாதிக்கப்பட்டது. கிணறுகளிலிருந்து கிடைக்கும் தண்ணீரும் போதுமானதாக இல்லை. திட்டம் செயல்படுத்தப்படாத பகுதிகளில் ( (non-project areas) சாதாரணமாக நெல் சாகுபடி செய்யப்படும் பரப்பான 5336 எக்டேருக்குப் பதிலாக 2685 எக்டேரில்தான் நெல் சாகுபடி செய்யப்பட்டது. திட்டப் பகுதிகளில் (Project areas) 18,580

எக்டேருக்குப் பதிலாக 7,182 எக்டேரில்தான் நெல் சாகுபடி செய்யப்பட்டது. இவ்வாறு நெல் பயிரிடப்படும் பரப்பளவில் 14,949 எக்டேர் குறைவுபட்டது. தானிய வகைகள் சாகுபடி செய்யப்படும் பரப்பளவும் குறைவு பட்டது.

| பயிர் | சாதாரணமாக பயிரிடப்படும் பரப்பளவு. | 1985-ஆம் ஆண்டில் பயிரிடப்பட்ட பரப்பளவு. |
|---|---|---|
| 1. சோளம் (பாசனப்பகுதி) | 3,462 எக்டேர் | 1,989 எக்டேர். |
| 2. ராகி (பாசனப் பகுதி) | 801 எக்டேர் | 695 எக்டேர். |

அதுபோன்றே சாதாரணமாகப் பருத்தி சாகுபடி செய்யப்படும் பரப்பளவு 5,420 எக்டேரிலிருந்து 3,110 எக்டேராகக் குறைந்தது. கரும்பைப் பொருத்தமட்டிலும் கூட சாகுபடியாகும் பரப்பு பாதிக்கப்பட்டு சாதாரணமாக சாகுபடி செய்யப்படும் 750 எக்டேர் பரப்பளவுக்கு பதிலாக 662 எக்டேரில்தான் பயிரிடப்பட்டது.

அப்போது நிலவிய வறட்சியின் காரணமாக நெல்லைப் பொறுத்தவரை உற்பத்தித்திறனும் குறைவுபட்டது. இதில் 50 சதவிகிதம் பகுதியில் எக்டேர் ஒன்றுக்கு சராசரி நெல் மகசூல் 2,786 மெட்ரிக் டன் ஆகும். மீதமுள்ள 50 சதவிகிதம் பகுதி முழுவதும் காய்ந்து போனது. ஆயக்கட்டுப் பகுதியில் எக்டேர் ஒன்றுக்கு சராசரி நெல் மகசூல் 4.210 மெட்ரிக் டன் ஆகும்.

மானாவாரி பயிர்களில் பருத்தியைத் தவிர மற்றவற்றின் அறுவடை முடிந்தது. அதிலிருந்து சென்ற ஆண்டு மகசூலுடன் பொதுவாக ஒப்பிடும்போது 40 சதவிகிதம் மகசூல் குறைவு பட்டது. மானாவாரி பருத்தியின் மகசூலும் குறைய நேரலாம். கிடைக்கக்கூடிய தண்ணீரின் அளவு மிகவும் குறைவு பட்டதால், கோடை காலத்திற்கென திட்டமிடப்பட்ட பணிகள் முழுமையாக செயல்படுத்தப்பட இயலவில்லை.

வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நிலவரி வஜாவுக்கான செயற்குறிப்புகள் சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையரின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. இரா. முத்தையா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே கொடுத்துள்ள இவ்வறிக்கையில் மேற்போக்காக பார்க்கின்றபோது அந்த

இரண்டு தாலுக்காக்களில் எந்த அளவுக்கு கடுமையான வறட்சி நிலைமை இருக்கிறது என்று தெரிய வருகிறது. இந்த அறிக்கைபடி பார்த்தாலும்கூட மிகக் குறைந்த அளவு பயன்படுகின்ற வைகை பாசனப் பகுதியிலோ, கண்மாய் பாசனப் பகுதியிலோ, முழுவதுமாக நெல் சாகுபடி பாதிக்கப்பட்டிருக்கின்றது. மானாவாரி பகுதியைப் பொறுத்தமட்டிலும் 1, 2 தாலுக்காக்களில் மிகப் பெரிய அளவிற்கு பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. இந்த அறிக்கையிலே சொல்லியிருக்கின்ற மானாவாரி பயிர்களில் பருத்தியைத் தவிர மற்றவற்றின் அறுவடை முடிந்தது என்று சொல்லியிருப்பது ஏதோ வெள்ளாமையில் நாங்கள் அறுவடை செய்து விட்டோம் . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள்.

(முற்பகல் 9-20.)

**திரு. இரா. முத்தையா:** பேரவைத் தலைவர் அவர்களே, வெள்ளாமை அங்கே அறுவடை செய்யப்படவில்லை, சாவிதான் அறுவடை செய்யப்பட்டிருக்கிறது. மேலும் அந்தப் பகுதியில் சென்ற ஆண்டு 40 சதவீதமாக விளைச்சல் குறைந்திருக்கிறது. இப்படிச் சென்ற ஆண்டு 40 சதவீதம் என்ற அளவுக்கு விளைச்சல் குறைந்திருக்கிறது என்று சொல்கிறபோது உசிலம்பட்டி, திருமங்கலம் ஆகிய இரண்டு தாலுக்காக்களும் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதைப்பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. ஆகவே முழுவதும் வறட்சிப் பகுதியாக அறிவித்து நிவாரண நடவடிக்கை எடுக்கவேண்டும். இந்த நிலைமையில் நிலவரி வஜா செய்வதற்காக வருவாய்த் துறையின் ஆணையாளர் அவர்களின் பரிசீலனையில் இருப்பதாகத் தெரிகிறது. இப்படிப் பரிசீலனையில் உள்ள காலகட்டத்தில் அந்த இரண்டு தாலுக்காக்களிலும் நிலவரி வசூல் வேகமாகச் செய்துகொண்டிருக்கிறார்கள். எனவே உடனே நிலவரி வசூலைத் தடுத்து நிறுத்துவதற்கும் அந்தப் பகுதிக்கு நிலவரி வஜா செய்வதற்கும் உரிய உத்தரவு இடப்படுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல் அங்கே பாதிப்பு அதிகம் என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்த அளவுக்கு அது பாதிக்கப்பட்டிருக்கிறது. இந்த

நிலைமைகள் எல்லாம் வருவாய்த் துறையின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டிருக்கிறது. வருவாய்த்துறை இதைப் பரிசீலனை செய்து வருகிறது. விரைவில் உரிய நடவடிக்கை மேற்கொள்வார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. முத்தையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது இந்தப் பகுதியில் ஏற்பட்டுள்ள கடும் வறட்சியைக் கருத்தில் கொண்டு அந்தப் பகுதிகளில் உள்ள குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்குவதற்கு ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியப் பகுதிக்கும் நான்கு, நான்கு அடிக்குழாய்கள்தான் அனுமதிக்கப்பட்டிருக்கின்றன. இருக்கின்ற நிலைமையைக் கருத்தில் கொண்டு மேற்கொண்டு அதிகமான அளவில் அந்தப் பகுதிக்குக் குடிதண்ணீர்த் தேவையைப் பூர்த்தி செய்கிற வகையில் அடிக்குழாய்கள் சாங்ஷன் செய்யப்படுமா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: பேரவைத் தலைவர் அவர்களே, குடிநீர்க் குழாய்களை அமைப்பதற்காக ஒவ்வொரு பகுதிக்கும் 50,000 ரூபாய் அனுமதிக்கப்பட்டிருப்பதாக மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்திருக்கிறார். உசிலம்பட்டி ஒன்றியத்திற்கு 5, செல்லம்பட்டி ஒன்றியத்திற்கு 5, சேடப்பட்டி ஒன்றியத்திற்கு 4, திருமங்கலம் ஒன்றியத்திற்கு 3, கள்ளிக்குடி ஒன்றியத்திற்கு 5, கல்லுப்பட்டி ஒன்றியத்திற்கு 5 என்ற வகையில் ஆழ்துளைக் குழாய்களை அமைக்க ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருக்கின்ற கருத்துக்களை மனதில் கொண்டு தேவையான அளவுக்கு ஆழ்துளைக் குழாய் அமைக்க அரசு ஆவன செய்யும்.

### (ஆ) மேட்டுப்பாளையம் நகரில் குடிநீர்த் தட்டுப்பாடு.

திரு. மா. சின்னராசு: பேரவைத் தலைவர் அவர்களே, "மேட்டுப்பாளையம் நகருக்குக் குடிநீர் வழங்க பொருத்தப்பட்டுள்ள மின்சார மோட்டார் மிகப் பழையதாகி இழுவைத் திறனற்றுப் போய்விட்டதால் அந்நகரில் ஏற்பட்டுள்ள குடிநீர்த் தட்டுப்பாடு குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.



மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

### அறிக்கை.

மேட்டுப்பாளையம் நகராட்சியில் பவானி ஆற்று நீரை ஆதாரமாகக் கொண்டு "பழைய குடிநீர்த் திட்டமொன்றும்", "கூட்டுக் குடிநீர்த் திட்டமொன்றும்" செயல்பட்டு வருகின்றன. பாதுகாக்கப்பட்ட குடிநீர் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. நாளொன்றுக்கு குழாய்களின் வழியாக ஏற்றப்படும் 10.8 இலட்சம் காலன் குடிநீரில் 3.6 இலட்சம் காலன் குடிநீர் 25,000 மக்கட்தொகை கொண்ட நகரின் மேற்குப் பகுதிக்கும், கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் வழங்கப்படும் 7.2 இலட்சம் காலன் குடிநீரில் 5.7 இலட்சம் காலன் குடிநீர் 35,000 மக்கட்தொகை கொண்ட நகரின் கிழக்குப் பகுதிக்கும் விநியோகம் செய்யப்படுகிறது. எஞ்சிய 1.5 இலட்சம் காலன் குடிநீர் காரமடை பேரூராட்சிக்கும், பெரியநாயக்கன்பாளையத்திலுள்ள இந்திய அரசின் அச்சகத்திற்கும் வழங்கப்பட்டு வருகிறது.

நகரில் இக்குடிநீர் கிடைக்கப் பெறாத இடங்களுக்கு குடிநீர் வழங்கும்பொருட்டு 21 குழாய் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன.

122 தனி பொது விநியோகக் குழாய்களும், 16 இடங்களில் அமைந்துள்ள இரு குழாய் அமைப்புகளும் உபயோகத்தில் உள்ளன. 15-4-1986 வரை 3,485 வீடுகளுக்குக் குடிநீர் குழாய் இணைப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. வருடத்தில் அனைத்துப் பருவ காலங்களிலும் நாளொன்றுக்கு நபரொன்றுக்கு 70 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. பழைய குடிநீர்த் திட்டத்தின் மூலம் தினமும் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் இரு நாட்களுக்கொருமுறையும் குடிநீர் விநியோகம் நடைபெறுகிறது. தற்போதுள்ள மோட்டார்கள் நல்ல நிலையில் இயங்கி வருகின்றன. கூடுதலாக 3 மோட்டார்கள் எப்போதும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

இப்போதுள்ள மக்கள் தொகையைக் கணக்கில் கொண்டு மேட்டுப்பாளையம் நகருக்கு ரூ. 7.48 இலட்சம் செலவிலான ஒரு குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் 7-5-1983 நாளிட்ட அரசாணை

நிலை எண் 644-ல் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இந்த மேம்பாட்டுத் திட்டத்தில் இப்போதுள்ள மோட்டாரை மாற்றி அதிக இழுவைத் திறன் கொண்ட மோட்டாரைப் பொருத்துதலும் அடங்கியுள்ளது. இதற்கான விரிவான மதிப்பீடு தமிழ்நாடு குடிநீர் வாரியத்தின் ஆய்வில் உள்ளது.

இதற்கான செலவினம் ரூ. 7.48 இலட்சத்தை நகராட்சி ஏற்க இயலாது உள்ளதால் இது குறித்து அரசு ஆய்ந்து வருகிறது.

**திரு. மா. சின்னராசு:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களால் தரப்பட்டிருக்கின்ற விவர அறிக்கையில் மேட்டுப்பாளையம் நகரத்தில் குடிதண்ணீர் பிரச்சினை அவ்வளவாக இல்லை என்பதுபோல் கருத்து இருக்கிறது. ஆனால் உண்மை நிலைமையைப் பார்த்தால் பவானி ஆற்றங்கரையில் இருக்கின்ற மேட்டுப்பாளையம் நகரத்திற்கு ஒருநாள் விட்டு ஒருநாள்தான் பல பகுதிகளுக்குக் குடிதண்ணீர் கொடுக்கப்படுகிறது. அதுவும் கடந்த ஒரு வார காலமாக முழுவதுமாகத் தட்டுப்பாடாக ஆகி இருக்கிறது. இதற்கு முழுக் காரணம் அங்கே இருக்கிற குடிநீர்த் திட்டத்தைப் பொறுத்தவரையில் பல ஆண்டுகளுக்கு முன்னால் நிறைவேற்றப்பட்ட திட்டம் என்பதால் அங்கே இருக்கிற மின்சார மோட்டார் சரியாக இயங்கவில்லை என்பதோடு பதிக்கப்பட்ட குழாய்களும் பழுதுபட்டு குடிநீர் விநியோகத்திற்கு உகந்ததாக இல்லை என்பதுதான். அதனால் தான் இந்தத் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது. உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் மூலமாக இந்தக் கவன ஈர்ப்பு வந்திருந்தால் அவர்கள் முழு விவரத்தையும் அளித்திருப்பார்கள். இருந்தாலும் அங்கே குடிதண்ணீருக்குத் தட்டுப்பாடு இருப்பதால் விரைவிலே நடவடிக்கை எடுத்து அங்கேயுள்ள மோட்டாரை மாற்றுவதற்கும், தட்டுப்பாடு வராமல் குடிநீரைச் சீராக வழங்குவதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சம்பந்தப்பட்ட துறைக்கு அறிவுறுத்தி ஆவன செய்வார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டுப்பாளையம் நகரத்திற்குக் குடிநீர் போதுமான அளவுக்கு இல்லை என்பதைக் கருத்தில் கொண்டுதான் 7.48 இலட்சம் ரூபாய் செலவில் குடிநீர் மேம்பாட்டுத் திட்டத்தை





...ாம் நிறைவேற்றவேண்டுமென்ற வகையில் திட்டமிட்டு ...ருகிறோம். ஆனால் அந்தச் செலவை நகராட்சி ஏற்கவேண்டிய ...ழ்நிலை இருப்பதாகத் தெரிகிறது. ஆகவே அந்த வகையில் ...ரிய பரிசீலனையை மேற்கொண்டு அந்த நகராட்சிக்கு அந்த ...மம்பாட்டுத் திட்டத்தை எப்படிக் கொண்டுவர முடியுமோ அந்த ...கையில் கொண்டுவர அரசு ஆவன செய்யும் என்பதைத் ...தரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மா. சின்னராசு:** பேரவைத் தலைவர் அவர்களே, ...மட்டுப்பாளையம் நகராட்சி மேம்பாட்டுத் திட்டத்திற்காக ...-5-1983-ல் ரூ. 7.41 இலட்சத்திற்கு அரசாங்கம் அங்கீகாரம் ...ளித்திருக்கிறது. ஆனால் இதுவரையில் அது நடைமுறைப் ...டுத்தப்படவில்லை. அதற்கான நிதியை எல்.ஐ.சி.-யிடம் கேட்டு அது கிடைக்கப்பெறாமல் மீண்டும் அரசாங்கத்திலிடமிருந்து ...ரசாங்கத்தினுடைய கொடையாகவோ அல்லது கடனாகவோ ...கட்டு வந்த அக்கோப்புகள் பல காலமாக நிதித் துறைக்கும் ...ள்ளாட்சித் துறைக்கும் வந்துபோய்க் கொண்டிருக்கிறது. ஆகவே இந்த நிலைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்து ஏற்கனவே ...983-ல் அங்கீகரிக்கப்பட்ட அந்தத் திட்டத்தை முடிப்பதற்குரிய வழியை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்படுத்தித் தருவார்களா? நிதித் துறை இது குடிநீர் பிரச்னை என்பதால் அதிக அக்கறை செலுத்தி இதில் ஓரளவிற்குத் தாராளமாக இருக்க வேண்டும் என்று அமைச்சர் அவர்கள் கேட்டுக்கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** பேரவைத் தலைவர் அவர்களே, நிலைமைகளைக் கருத்தில் கொண்டு அரசு ஆய்ந்து முடிவு செய்யும்.

## 4. அரசினர் சட்ட முன்வடிவு.

### வேளாண் விளைபொருள் சந்தைகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1986.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1986-ம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் (திருத்த) சட்ட முன்வடிவு. மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**திரு. ப. பொன்னுரங்கம்:** பேரவைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அறிமுகப்படுத்தப்படுகிற நிலையில் என்ன பாயின்ட் ஆப் ஆர்டர் இருக்க முடியும். அறிமுகப்படுத்துகிற நிலையில் என்ன சொல்லப்போகிறீர்கள்? அவர்கள் படிக்கட்டும் . . . . . . (குறுக்கீடு) என்னிடம் முன் அனுமதி பெற்றால்தான் பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்ப முடியும். . . .

**திரு. ப. பொன்னுரங்கம்:** பாயின்ட் ஆப் ஆர்டருக்கு பெர்மிஷனா. . .

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** பாயின்ட் ஆப் ஆர்டருக்கு பெர்மிஷன் வாங்கவேண்டுமா என்று கேட்கிறார்கள். தங்களுடைய பெர்மிஷன் வாங்காமல் எப்படி பாயின்ட் ஆப் ஆர்டர் கிளப்பலாம் என்று புரியவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பில்லையொட்டி என்ன பாயின்ட் ஆப் ஆர்டர்?

**திரு. ப. பொன்னுரங்கம்:** இது ஆர்டராக இல்லை, அதனால் தான் நான் சொல்கிறேன். கடந்த ஆண்டு கூட மத்தியில் இருந்து வந்த ஒரு மாடல் பில்லை இன்கார்ப்பரேட் செய்வதற்கு காலம் கடத்தி நீட்டித்து வருகிறோம் என்று அமைச்சர் அவர்கள் சொல்லி பில் டிஸ்கஷனுக்கு வந்து. . .

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** இதெல்லாம் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளும் நேரத்தில் பேசவேண்டியது, இப்போது பேசினால்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அறிமுகம் செய்து ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளும்போது பேசுங்கள். தயவுசெய்து ஒரு முறையைப் பின்பற்றுங்கள். (குறுக்கீடுகள்) ஒவ்வொன்றுக்கும் விவாதம் செய்துகொண்டிருந்தால் எப்படி?

**திரு. ப. பொன்னுரங்கம்:** காப்பி ஏன் தரக்கூடாது? (குறுக்கீடுகள்)





**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் (திருத்த) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்".

Thiru P. PONNURANGAM: Mr. Speaker Sir, I oppose the introduction of this Bill.

Thiru V. P, CHINTHAN: Mr. Speaker Sir, I oppose the introduction of this Bill.

Mr. SPEAKER: Your objections are recorded. (குறுக்கீடு) இந்த பில்லை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளும்போது பார்த்துக் கொள்ளலாம். இன்று காவல் துறை மானியத்தின் மீது நடந்த விவாதத்திற்கு பதில் சொல்ல வேண்டும். பின்னர் லேபர் மானியம் வருகிறது. நல்ல நேரத்தை விடுகிறீர்கள். தயவு செய்து உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. பொன்னுரங்கம் சொல்வதை நன்றாக ரிக்கார்ட் செய்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி:

"1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் (திருத்த) சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** இச் சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

## 5. வரவு-செலவுத் திட்டம் 1986-87 வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண் 15—காவல் துறை.

(ஆ) கோரிக்கை எண் 16—தீயணைப்புப் பணிகள் — தொடர்ச்சி.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1986-87-ஆம் ஆண்டுக்கான காவல் துறை பற்றிய செலவினங்களுக்கு ரூ. 1,06,23,53,000-க்கு மேற்படாத தொகையும் தீயணைப்புப் பணிகள் பற்றிய செலவினங்களுக்கு ரூ. 8,34,06,000 க்கு மேற்படாத தொகையும் மானியமாக வழங்க இந்தப் பேரவை அனுமதிக்க வேண்டுமென்ற கோரிக்கைகளின் மீது நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய மாண்புமிகு உறுப்பினர் பெருமக்கள் காவல் துறை பற்றிய பல்வேறு நிறைபாடுகளையும் சிறப்பாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அது மட்டுமல்லாமல் காவல் துறையை எந்தெந்த வகையில் மேம்பாடுறச் செய்யலாம் என்ற வகையிலும் பல சீரிய கருத்துக்களை மாண்புமிகு உறுப்பினர்கள் வழங்கியிருக்கிறார்கள். அதோடு மட்டுமல்லாமல் இந்தக் காவல் துறையிலே நிகழ்ந்து வருகிற குறைபாடுகளையும் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். காவல் துறையினருடைய திறமைகளையும் அவர்கள் ஆற்றி வருகிற நல்ல பணிகளையும் அவற்றின் மூலமாக தமிழகத்தில் நிலவிவருகிற அமைதித்தன்மை மற்றவைகளையும் உளமாறப் பாராட்டிய மாண்புமிகு உறுப்பினர் பெருமக்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சார்பாக நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 9-30)

நியாய உணர்வோடு குற்றங் குறைகளை சுட்டிக்காட்டியவர்களுக்கு என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால், எதிர்ப்பு, உணர்வோடு, வெறுப்பு உணர்வோடு ஏதேனும் எதிர்ப்பு தெரிவிக்க வேண்டுமென்ற அடிப்படையிலே பல்வேறு கருத்துக்களை அறிந்த வகையிலும், இட்டுக்கட்டிய வகையிலும் எடுத்துச் சொல்லி, அதன் மூலமாக கருத்துக்களை வழங்கியிருக்கிறார்கள். அவற்றையெல்லாம் நடுநிலைமையிலே இருந்து, நல்ல தீர்ப்பு அளிப்பார்கள் என்ற நம்பிக்கையின் அடிப்படையிலே அவற்றையெல்லாம் அவர்களின் தீர்ப்புக்கே விட்டுவிடுகிறேன்.



ஒரு நாட்டினுடைய சுதந்திரத்தை, ஒரு நாட்டினுடைய எல்லையை, அதனுடைய ஆண்மைத் தன்மையைக் காப்பாற்றுவதற்காக எப்படி போர்ப் படை இன்றியமையாத ஒன்றாக அமைந்திருக்கிறதோ, அதேபோன்று ஒரு நாட்டினுடைய பொது மக்களாயினும் சரி, தனிப்பட்டவர்களாயினும் சரி, அவர்களுடைய உயிர், உடல், உடைமை, உரிமை ஆகியவற்றைக் காப்பாற்றுவதற்கு காவல் துறை மிக இன்றியமையாத உள்நாட்டுப் படையாக அமைந்து பணியாற்ற வேண்டிய பொறுப்பு அதற்கு இருந்து வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் நன்கு உணர்வார்கள். போர்ப் படைத் துறையைத் தனியாக வைத்து, அதைத் தனி நிலையிலே வைத்து எப்படி மத்திய அரசு அதைக் கண்காணித்து வருகின்றதோ, அதேபோன்றுதான் மாநில அரசைப் பொறுத்தவரையிலும், பல்வேறு துறைகளை சிறப்பாக மாநில அரசு நிர்வகித்து வந்தாலும்கூட, காவல் துறையை ஒரு தனி நிலையிலே வைத்து அதைத் தனித்தன்மையின் அடிப்படையிலே கண்காணித்து வருகின்ற தன்மை மாநில அரசுக்கு இருந்து வருகிறது என்பதை நான் முதலிலே சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் சுட்டிக்காட்டியதற்கிணங்க, காவல் துறையினர் மற்ற எந்தத் துறைகளைக் காட்டிலும் பொறுப்புகளையும், கடமைகளையும் மிக அதிகமாக ஏற்று, முழு நேர பணியை பணியாற்றும் கடப்பாடு உடையவர்களாக இருக்கிறார்கள். அதுபற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் பல கருத்துக்களை இங்கே தெரிவித்திருக்கிறார்கள். ஆக, காவல் துறையினுடைய பணிகள், கடமைகள் ஆகியவற்றை இங்கே பாராட்டியும் பேசியிருக்கிறார்கள்; அதனைப் பழித்தும் பேசியிருக்கிறார்கள். இருக்கிற குறைபாடுகளைச் சுட்டிக்காட்டியும் இருக்கிறார்கள். ஆக, குறைபாடுகளையும், குற்றங்களையும் சுட்டிக்காட்ட வேண்டியது மாண்புமிகு உறுப்பினர் பெருமக்களுடைய நீங்காக் கடமை என்பதை இந்த அரசு மறுக்கவில்லை. ஆனால், காவல் துறையினர் ஆற்றிவருகின்ற பணிகள், அவர்கள் செய்து வருகின்ற மகத்தான சேவைகள், மற்றவைகள் ஆகியவற்றை மறந்து விடுவதற்கில்லை என்பதை நாம் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். ஆனால், இங்கொன்றும் அங்கொன்றுமாக சில குற்றங் குறைகள் நிகழ்வது உண்மை. அதை

அரசு தரப்பிலே ஒப்புக்கொள்ளவும் செய்கிறோம். இங்கொன்றும், அங்கொன்றுமாக சிலபல இடங்களில் சில குற்றங்கள் நடைபெற்று இருக்கின்றன; குறைபாடுகள் நடைபெற்று இருக்கின்றன. அதையும் நாம் ஒப்புக் கொள்கிறோம். ஆனால், ஒட்டுமொத்தமாக காவல் துறையே செயலற்று விளங்குகிறது என்றும், காவல் துறை ஆற்ற வேண்டிய பணிகளை செய்யாமல் இருக்கிறது என்றும் சிலபல உறுப்பினர்கள் கூறிய கருத்துக்களிலே இருந்து அந்த முடிவுக்கு வந்துவிடக் கூடாது என்ற கருத்தின் அடிப்படையிலேதான், இங்கே கருத்துக்களை வழங்கிக் கொண்டு வருகிறோம். பேரறிஞர் அண்ணா அவர்கள் மிகச் சிறப்பாக ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் சிந்தன் அவர்கள், இந்த அரசைச் சார்ந்த காவல்துறை நிர்வாகத்திற்கு ஒரு கொள்கை உண்டா என்று வற்புறுத்திக் கேட்டார்கள். ஆனால் குறிப்பிட்ட சிலபல கொள்கைகளை வகுத்து கொண்டு இந்த அரசு நடைபெற்றுக் கொண்டு வருகிறது என்பதை தெளிவுபட, திட்பமாக சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒரு முறை சிறப்பாகச் சொன்னார்கள். 'நியாயங்களை எக்காரணம் கொண்டும் காயப்படுத்தக் கூடாது என்றும், காயங்களை எக்காரணம் கொண்டும் நியாயப்படுத்தக் கூடாது என்றும்' மிகச் சுருக்கமாக, ஆனால் தெளிவாக, விளக்கமாக அவர்கள் குறிப்பிட்டார்கள். 'Justice should not be wounded and wounds should not be justified.' என்று சுருக்கமாக திருக்குறள் மாதிரி கருத்துக்களை எடுத்துச் சொல்லி, அந்த அடிப்படையிலே பணிகளை காவல் துறையினர் நிறைவேற்ற வேண்டும் என்று காவல் துறையினருக்கு அறிவுரை கூறுகின்ற வகையில் மிகத் தெளிவாகச் சொன்னார்கள். இந்தக் கருத்தை, இப்போதும் தற்போது இருந்து வருகின்ற மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய சீரிய தலைமையின்கீழ் இயங்கி வருகின்ற இந்த அரசும் நிலைநாட்டுவதில் கண்ணும் கருத்துமாக இருந்து வருகிறது என்பதை நான் குறிப்பிட்டுக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். எங்கள் காவல் துறையினருடைய பணிகள், கடமைகள், பொறுப்புகள் எல்லாம் இன்றியமையாதனவாக விளங்குகின்றன என்றும், அவ்வளவு எளிதாக இன்றியமையாதவை இல்லை என்பதையும் உறுப்பினர்கள் மிகச்





சிறப்பாக அறிவார்கள். "மன்பதை காக்கும் செம்புலம் காவல், துன்பம் அல்லது தொழுதகை இல்" என்று சிலப்பதிகாரத்திலே இளங்கோவடிகளே சொல்லி முடித்து விட்டார்கள், 2 ஆயிரம் வருஷங்களுக்கு முன்னாலேயே. ஆகவே மக்களை காப்பாற்றுவது என்ற ஒரு காவல் பணி இருக்கிறதே அது எந்த நிலையிலேயும் துன்பம் தருகின்ற ஒன்றாகத்தான் இருக்கிறதே தவிர, பிறரால் பாராட்டத்தக்க அளவுக்கு அமைந்து விடாது என்பதை இளங்கோவடிகளே, "மன்பதை காக்கும் செம்புலம் காவல் துன்பம் அல்லது தொழுதகை இல்" என்று மிகமிகத் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

ஏனென்று சொன்னால் குற்றங்கள் ஏராளமாக தோன்றுகின்றன. எந்தக் குற்றங்களானாலும் நாளுக்கு நாள், ஆண்டுக்காண்டு வளர்ந்துக் கொண்டே வருகின்றன. அதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் எடுத்துச் சொல்லியிருக்கிறபோது, சிலபலவற்றிலே ஏற்படுகின்ற தன்மைகளும் சமுதாயத்திலே ஏற்படுகின்ற விளைவுகளும், மாற்றங்களும் பல குற்றங்களின் நிகழ்வுகளை புதிய முறையில், அறிவியல் முறையில், நவீன முறையில் நடத்துவதற்கான முயற்சிகளை செய்கிறபோது, அவைகளை கண்டுபிடிப்பதற்கான தன்மைகளும், கண்டு பிடித்து அவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுத்து தண்டனை கொடுப்பதற்கான முயற்சிகளும் இங்கே கடுமையாக ஆகின்றன என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்கள் மிக நன்றாக அறிய வேண்டும்.

வேறு பல துறைகளைப் போன்றல்லாது, இதிலே குற்றங்களைச் செய்கின்றவர்கள் எல்லாம் கூடுமானவரையில் அந்தக் குற்றங்கள் பிறருக்குத் தெரியாமல் இருக்க வேண்டும் என்றும், குறிப்பாக காவல் துறையினர் கண்டு பிடிக்காமல் இருக்க வேண்டும் என்றும், அக்கம்பக்கத்தில் இருப்பவர்கள்கூட அறிந்துக் கொள்ளாமல் இருக்க வேண்டும் என்றும், இன்னும் கூட சொல்லப்போனால் தன்னுடைய மனைவி மக்களே கூட தெரிந்துக் கொள்ளாமல் இருக்க வேண்டும் என்றும் அப்படி திட்டமிட்டு, திட்டமிட்டு தான் பல்வேறு குற்றங்களை, அது திருட்டுக் குற்றமாக இருந்தாலும் சரிதான், கொள்ளை அடிக்கின்ற குற்றமாக இருந்தாலும் சரிதான், கொலை செய்கின்ற குற்றமாக இருந்தாலும் சரிதான், கன்னம் வைக்கின்ற குற்றமாக இருந்தாலும்

சமிதான், அந்தக் குற்றம் செய்ய வேண்டும் என்ற தீர்மானத்தை வைத்திருப்பவர்கள் அதை செய்தபிறகு அது யாருக்கும் தெரியாத அளவுக்கு, சாட்சியங்கள் கிடைக்காத அளவுக்கு, அதற்கான இடம், காலம் மற்றவைகளையெல்லாம் கருதி, அதற்கேற்பத் தான் செய்கிறார்கள் என்பதையும், அவற்றையெல்லாம் மீறித் தான் அந்தக் குற்றங்களைக் கண்டு பிடிக்க வேண்டிய பொறுப்பிலே இந்தத் துறையினர் இருக்கிறார்கள் என்பதும்; அந்தக் குற்றங்களை கண்டு பிடித்ததற்குப் பிறகு, அவர்கள் மீது சாட்சியங்களை கொண்டு வரவும், சாட்சியங்களை ஏற்படுத்தவும், அந்த சாட்சியங்கள் அழிந்து விடாமல் காப்பாற்ற வேண்டிய சூழ்நிலைகள் ஏற்படுவதும், கிடைக்கக் கூடிய சாட்சியங்கள் அழிந்து விடுகின்ற அளவுக்கு சூழ்நிலைகள் ஏற்படுகின்றபோது கிடைக்க வேண்டிய சாட்சியங்கள் கிடைக்காமல் போவதும், இருக்கின்ற சாட்சியங்களை வைத்து வழக்குகள் தொடுப்பதும், உண்மையான சாட்சியங்கள் முதலிலே கிடைப்பதும், பிறகு அந்த சாட்சியங்கள் கூட மனம் மாறுகின்ற சூழ்நிலை அவரவர் வாழுகின்ற இடத்தைப் பொறுத்து அமைவதும், பிறகு வழக்கு மன்றங்களுக்கு செல்வதும், வழக்கு மன்றங்களுக்கு போன பிறகும் சாதாரணமாக கொலை செய்தவன் இன்னார் என ஊருக்கு தெரிந்திருந்தாலும் உலகத்திற்கு தெரிந்திருந்தாலும், திருடியவன் இன்னார்தான் என்று ஊருக்கு தெரிந்திருந்தாலும் உலகத்திற்கு தெரிந்திருந்தாலும், சட்ட திட்டங்களிலே இருக்கின்ற ஒரு கமாவிற்கு விளக்கங்கள் கண்டு, ஒரு செமிகோலனுக்கு விளக்கங்கள் கண்டு, ஒரு முற்றுப் புள்ளிக்கு விளக்கங்கள் கண்டு, அந்த விளக்கங்களைக் காட்டி வழக்குகளை தள்ளி விடுகின்ற சூழ்நிலைமைகள் ஏற்படுகிறபோது, அவற்றை எல்லாம் மீறி அவர்களுக்கு தண்டனை அளிக்கக் கூடிய நிலைமையிலேதான் அந்தத் துறை இருக்கிறது என்பதையும், மாண்புமிகு உறுப்பினர்கள் கருதி பார்க்க வேண்டும்.

ஆகவே இருக்கின்ற குறைபாடுகளை நாம் நன்றாக உணர்ந்திருக்கிறோம். காவல் துறையிலே நடைபெறுவதெல்லாம் 100-க்கு 100 அப்படியே சரியாக நடைபெறுகிறது என்று நான் கருதவில்லை. ஆங்காங்கு சிலபல குறைபாடுகள் இருக்கின்றன என்பதை இந்த அரசு ஒப்புக் கொண்டு அவைகள் மீது



134487
சென்னை-600 009.

நடவடிக்கை எடுத்திருப்பதையும் பின்னால் நான் குறிப்பிட விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் அவற்றை எல்லாம் சுட்டிக் காட்டக் கூடாது என்று நான் சொல்ல வரவில்லை. இங்கே அவர்கள் அதையெல்லாம் சுட்டிக் காட்டினால்தான் நல்லது என்பதையும் இந்த அரசு உணர்கிறது. ஆகவே இந்த நாட்டிலே நடைபெறுகின்ற அத்தனை குற்றங்களையும், 60 ஆயிரத்திற்கும் மேற்பட்ட காவலர்கள் காவல் நிலையங்களிலே பணியாற்றிக் கொண்டிருக்கிறபோது, 984-க்கு மேற்பட்ட காவல் நிலையங்களும், 187 புறக் காவல் நிலையங்களும் இருக்கின்ற அந்தப் பகுதிகளிலேயே நடைபெறுகின்ற நிலைமைகளையெல்லாம், சட்டத்திற்கு புறம்பான நிலைமைகளை எல்லாம், அத்துமீறி அதிகார துஷ்பிரயோகம் செய்கின்ற நிலைமைகளையெல்லாம், இந்த அரசோ, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோ, மற்ற மாண்புமிகு அமைச்சர்களோ அறிந்துக் கொள்ள முடியாது. கூடுமான அளவுக்கு மாண்புமிகு உறுப்பினர்கள் சில பேர்கள் நியாயத்தின் அடிப்படையில் சுட்டிக் காட்டியதை இந்த அரசு வரவேற்கத்தான் செய்கிறது. அப்படிச் சுட்டிக்காட்டியதன் மூலமாக கீழ் மட்டத்திலே இருப்பவர்கள், அடி மட்டத்திலே இருப்பவர்கள், அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டவர்கள் திருந்துவதற்கும், சமுதாயத்திலே அப்படிப்பட்ட தன்மைகள் தங்களுக்கும் வரக் கூடும் என்று பிறர் அஞ்சுவதற்குமான முறையிலே அது பயன்படும் என்ற முறையிலே மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துக் கூறுவது வரவேற்கத்தக்கது தான். ஆகவே அந்த உண்மைகள் அறிந்து எடுத்துச் சொல்லப்படுமானால் மிக மிக நல்லது என்பதை எடுத்துச் சொல்லி, கூடுமானவரையில் விசாரித்த அளவில், உண்மைகளை எடுத்துச் சொல்லத்தான் வேண்டும். விடுபட்டவைகளை செய்யத்தான் வேண்டும். அத்து மீறி அதிகாரத்தை பயன்படுத்துகிறார்களா என்றால், சிலபல இடங்களில் அப்படிப் பயன்படுத்துகிறார்கள். சிலபல இடங்களில் அத்துமீறி நடக்கின்றன. அதை நான் சிறுபிள்ளையாக இருந்த காலத்திலிருந்தே அறிந்து வருகிறேன். இப்போது அமைச்சராக இருக்கும் போதும் அறிகிறேன். ஆகவே இது அந்தக் காலத்திலிருந்து நடைபெறுகிற ஒன்றே. தவிர திடீரென்று வந்த ஒன்றில்லை. இப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கிற போது அவர்கள் எல்லாம் தண்டிக்கப்பட வேண்டும், அவர்கள்

எல்லாம் சீர்திருத்தப்பட வேண்டும், செம்மைப்படுத்தப்பட வேண்டும் என்பதிலே இந்த அரசு உறுதியாகத்தான் இருக்கிறது. அதற்கு மாண்புமிகு உறுப்பினர்கள் பேருதவி அளிக்கவேண்டுமென்ற வேண்டுகோளையும் குறிப்பிட விரும்புகிறேன்.

(முற்பகல் 9-40.)

தமிழகத்தில் வாழ்கிற 5½ கோடி மக்களை காப்பாற்ற வேண்டிய, பாதுகாக்க வேண்டிய முழுபொறுப்பை 60,723 காவல் துறையைச் சார்ந்த, பல்வேறு மட்டங்களைச் சார்ந்த அதிகாரிகளும், காவலர்களும், மற்றவர்களும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். நான் முதலில் குறிப்பிட்டதைப்போல 984 காவல் நிலையங்கள் மூலமாக, 187 புறக்காவல் நிலையங்கள் வாயிலாக இந்தப் பணிகளை எல்லாம் நிறைவேற்ற வேண்டிய கடப்பாடு உள்ளவர்களாக இருக்கிறார்கள். ஆய்வாளர் நிலையிலிருந்து காவலர் நிலை வரையில் நாம் கணக்கெடுத்து பார்ப்போமேயானால் ஒவ்வொருவரும் கிட்டத்தட்ட 900 பேர்களுக்கு பொறுப்பேற்க வேண்டிய நிலையில் தமிழகத்தினுடைய காவல் துறை அமைப்பிருக்கிறது. ஆகவே 900 பேர்களுக்கு ஒருவர் என்ற முறையில் அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டு சராசரியாக பணியாற்ற வேண்டிய கடப்பாடு உள்ளவர்களாக இருக்கிறார்கள். ஆகவே காவல் துறையினருக்கு கொடுக்கப்பட்டிருக்கிற கடமைகள், பொறுப்புகளை அவர்கள் நிறைவேற்ற வேண்டியவர்களாக தான் இருக்கிறார்கள். ஆகவே இன்றைக்கு, இதற்காக கொள்கை, மற்றவைகள் எல்லாம் வகுக்கப்பட்டிருக்கின்றன. அந்த கொள்கை அடிப்படையில் அவர்கள் கடமையாற்ற வேண்டும் என்பதை அரசு வற்புறுத்தி வருகிறது. பொறுப்புகளை ஏற்க வேண்டுமென்பதைச் சுட்டிக்காட்டி அதையும் அரசு வற்புறுத்தி வருகிறது. ஆகவே பொதுமக்களுடைய உயிருக்கும், உடைமைக்கும் எங்கே பாதகம் ஏற்பட்டாலும் அதைத் தடுத்து நிறுத்தி பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அவர்களிடத்தில் இருக்கிறது.

சட்ட நெறியை நிலைநாட்ட வேண்டிய பொறுப்பும் அவர்களிடத்தில் இருக்கிறது. ஒழுங்கு, அமைதி நிலைபெறச் செய்ய வேண்டிய பொறுப்பு, இடத்திற்கு இடம், ஊருக்கு ஊர், பட்டிக்குப் பட்டி அவர்களுக்கு அமைகின்றன. அதுமட்டுமல்லாமல்



மக்களாட்சி நெறிமுறைகளுக்கு துணை நிற்கவேண்டிய பொறுப்பு இப்போது இருக்கிற காவல் துறையினருக்கு இருக்கிறது.

மாண்புமிகு சிந்தன் அவர்கள் குறிப்பிட்டதைப் போன்று வெள்ளைக்காரர்கள் காலத்தில் இருந்த காவல் துறையின் அணுகு முறைக்கும், சுதந்திரத்திற்குப் பிறகு இப்போது மக்களாட்சியின் அடிப்படையில் காவல் துறை அணுகுகிற முறைக்கும் பல்வேறு வேறுபாடுகள் இருக்கின்றன என்பதை உணரலாம். ஆனால் அவர்களின் கடமைகள், பொறுப்புகள், ஆற்ற வேண்டிய தன்மைகள் ஆகியவை ஒரு நிலையில் இருந்தாலும், அணுகுகிற முறையில் மக்களாட்சி முறைகளுக்கு துணைநிற்க வேண்டுமென்ற கருத்தும் ஆங்காங்கு வலியுறுத்தப்பட்டு வருகிறது. சமத்துவ, சமதர்ம சமுதாயத்தை உருவாக்கும் சட்டதிட்டங்களுக்கு காவல் துறையினர் உறுதுணையாக இருந்து அவற்றை நிறைவேற்றுவதில் ஒத்துழைக்க வேண்டுமென்பது நம்முடைய அரசினுடைய முக்கியமான கொள்கையாகும்.

"கடிதோச்சி மெல்ல எறிக நெடிதாக்கம்
நீங்காமை வேண்டு பவர்"

என்று திருவள்ளுவர் எடுத்துச் சொன்னதற்கிணங்க, 'கடிதோச்சி மெல்ல எறிக' என்ற அணுகு முறையில் தான் சட்டத்தை நிலைநாட்ட வேண்டுமென்ற கொள்கையை இந்த அரசு கடைப்பிடித்து வருகிறது. சாதி, சமய, இனக்கலவரங்கள் ஏற்படாமல் சூழ்நிலையை கண்காணித்தல் வேண்டும். மீறி ஏற்பட்டுவிடும் இடங்களில் அவற்றை ஒடுக்க கடுமையான முறைகளை மேற்கொள்வதன் மூலம் ஒரு சமரச சுத்த சன்மார்க்கம் ஏற்படுத்த வேண்டுமென்ற கொள்கையை இந்த அரசு கடைப்பிடித்து வருகிறது.

சமூக விரோதிகளைக் கண்காணிக்க வேண்டும், அவர்களைக் களைய வேண்டுமென்ற கொள்கையை அரசு கடைப்பிடித்து வருகிறது. குற்றம் நிகழாவண்ணம் முன்னேற்பாடுகளில் கவனம் செலுத்தல் வேண்டும். குற்றங்கள் வந்ததற்குப் பிறகு, நிகழ்ந்ததற்குப் பிறகு, அதனால் பெரும் சேதங்களை அனுபவிக்க வேண்டிய அவசியத்திற்கு நாம் ஆளாகாமல், அந்தக்

குற்றங்கள் நிகழ்வதற்கு முன்னாலேயே, முன்கூட்டியே தடுத்து நிறுத்துவதற்கு என்னென்ன வழிமுறைகளை எடுக்க முயல வேண்டுமோ அவைகளைக் கடைப்பிடிக்கிற முயற்சியில் காவல் துறையினர் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றார்கள்.

குற்ற நிகழ்வுகளைக் கண்டுபிடித்தல், குற்றவாளிகளை கைது செய்தல், சட்டப்படி வழக்குப் போடுதல், குற்றவாளிகளுக்கு தண்டனை வாங்கித் தருதல் போன்ற பொறுப்புகளும் அவர்களிடத்தில் தொடர்ந்து இருந்து வருகின்றன. குற்றம், குழப்பம், கலவரம், வன்முறை தாக்கு, சண்டை, சச்சரவு, அமைதியின்மை, ஒழுகின்மை, கட்டுப்பாடின்மை போன்றவைகள் ஏற்படுகிற இடத்தில் தலையிடுகிற அவசியம் காவல்துறையினருக்கு ஏற்படுகிறது. ஆகவே ஒழுங்கின்மையை முன்கூட்டியே தடுத்து நிறுத்தி, வரும் முன் காக்கவேண்டிய நடவடிக்கைகளை அவர்கள் எடுக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்கள், வேலை நிறுத்தங்கள் போன்றவை சட்டமுறைப்படி நடக்கும் போதும் சரி, சட்டத்தை மீறி நடக்கும்போதும் சரி அங்கே ஒழுங்கை, அமைதி சூழ்நிலையை ஏற்படுத்த, நிலைமையைக் கட்டுக்கடங்கியதாக வைக்க வேண்டிய பொறுப்பும் அவர்களுக்கு இருக்கிறது. மாநாடுகள், பொதுக்கூட்டங்கள், பேரணிகள் போன்றவை நடைபெறுகிற போது, யார் நடத்தினாலும், எந்தப் பிரிவினர், எந்தக் கட்சியினர் நடத்தினாலும் அதற்கு முழு பாதுகாப்பு அளிக்க வேண்டிய பொறுப்பும் காவல்துறைக்கு இருந்து வருகிறது. பொதுத் தேர்தல் மற்றும் இடைத் தேர்தல் ஒழுங்குற, அமைதியாக முறைப்படி நடக்க உறுதுணையாக நிற்கவேண்டும். 1984 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தல் ஒரே நாளிலே மாநிலம் தழுவிய வகையிலே 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் தேர்தல் நடைபெற்றபோது ஒரே நாளில் நடைபெறவேண்டும் என்ற தன்மையில் இங்கப் பாதுகாப்பு ஏற்பாடுகள் மிகமிக தேவைப்படுகின்ற அத்தகைய நிலைமைகளில், தமிழகத்தைப் பொறுத்தவரையில், பாராட்டுகிற வகையில், பெரும் அசம்பாவிதங்கள் ஏற்படாத வகையில் சிறப்பாக நடைபெற்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் உணர்வார்கள்.





மேலும் வேறு சில பல மாநிலங்களில் ஓட்டுச் சாவடிகள் தாக்கப்பட்டும், ஓட்டுச் சாவடிகள் எரிக்கப்பட்டும், ஓட்டுப் பெட்டிகள் எல்லாம் களவாடப்பெற்றும், தூக்கிச் செல்லப்பட்டும், கொள்ளை அடிக்கப்பட்டும் போகின்ற சூழ்நிலைமைகள் எல்லாம் ஏற்படுகின்றன. ஆனால் தமிழகத்தைப் பொறுத்தவரையில் ஒரே நாளில் நடத்தினாலும், அதன் மூலமாக ஒரு அமைதியான சூழ்நிலை ஏற்பட்டது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள். அதேபோன்று அண்மையில் நடந்த உள்ளாட்சி மன்றத் தேர்தல்களிலும், பரவலாக நடைபெற்ற ஒரு தேர்தலிலும், ஒருசில சில்லறைச் சம்பவங்கள், சச்சரவுகள் ஆங்காங்கு இருக்கலாமே தவிர, ஒரு பெரும் அசம்பாவிதம் நடைபெற்று, மக்களின் உள்ளத்தை உறுத்துகின்ற அளவிற்கு நடைபெற்றன என்று சொல்ல முடியாத அளவிற்கு அமைதியாக நடந்த நிலைமைகளையும் மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள். எனவே இதுபோன்ற பல்வேறு பொறுப்புகளை, கடமைகளை காவல் துறையினர் ஏற்றுக்கொண்டு இருக்கிற அத்தகைய நிலைமையில், நாடு தழுவிய வகையில் பொறுப்புகளினுடைய தன்மைகளை உணரவேண்டும், கடமைகளை உணர்கின்ற வகையில், முழுவதும் நிறைவேற்ற முடியாத நிலைமையில், நிறைவேற்றுகின்றபோது முழு உண்மைகளைக் கண்டுபிடிக்க முடியாத நிலைமைகளும் வருகின்றன. ஆகவேதான், நல்லவர்களுக்கு காவல்துறை நல்ல நண்பனாக இருக்க வேண்டும் என்பதையும், தீயவர்களுக்கு காவல் துறையினர் கண்டிப்பானவர்களாக இருக்கவேண்டும் என்பதையும் அரசினுடைய முடிந்த கொள்கையாக கொண்டு பணியாற்றப்பட்டு வருகின்றது. சில இடங்களில் கண்டுபிடிக்க வேண்டிய குற்றங்களை கண்டுபிடிக்காமல் விடுகிறார்கள் என்றும், கண்டுபிடிக்கப்பட்டவர்கள் மீது வழக்கு தொடுக்காமல் விடுகிறார்கள் என்றும், தொடுக்கின்ற வழக்குகளை கடைசி வரையில் நடவடிக்கை எடுத்து, தண்டனை வாங்கித் தராமல் விட்டு விடுகிறார்கள் என்றும், அதற்கான சூழ்நிலைகளை சில பல நண்பர்கள் எல்லாம் சொன்னார்கள். அவைகள் அறவே இல்லை என்று நான் சொல்லவில்லை. ஆங்காங்கு வேலை செய்கின்றவர்களுடைய மனப்பான்மைக்கு ஏற்ப, மனப்பாங்குக்கு ஏற்ப, கொடுப்பவர்களுடைய தன்மைக்கு ஏற்ப, வாங்குகின்றவர்களுடைய தன்மைக்கு ஏற்ப, அவைகள்

எல்லாம் நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்களும் சொன்னார்கள், லஞ்ச ஊழல் இருக்கின்றது என்று. கொடுக்கிறவர்கள் இருக்கிற காரணத்தால் தான் வாங்குகின்றவர்களும் இருக்கிறார்கள். ஆகவே கொடுத்தே காரியத்தை சாதிக்கவேண்டும் என்று பல பேர்கள் எண்ணுகிறார்கள் என்பதை சமுதாயத்திலே நாம் மறந்துவிடுவதற்கு இல்லை. ஆக, கேட்டு வாங்குகின்றவர்களும் இருக்கிறார்கள், அதையும் நான் ஒத்துக்கொள்கிறேன். ஆனால் அவர்கள் கேட்காமலேயே கொடுத்து, காரியத்தை சாதிக்க வேண்டும் என்று இருப்பவர்களும் இருக்கிறார்கள். ஆகவே வாங்குகின்றவர்கள் எவ்வளவு கடுமையான குற்றங்களுக்கு உள்ளாக்க வேண்டியவர்களோ, அதைப்போல கொடுக்கின்றவர்களும் கடுமையான குற்றங்களுக்கு ஆளாக்கப்பட வேண்டியவர்கள், கொடுத்தே காரியத்தை சமாளிக்கவேண்டும் என்று இருப்பவர்களும் அப்படி ஆளாக்கப்பட வேண்டும் என்பதை நாம் உணர வேண்டும். இது சமுதாயப் பிரச்சினை. நாம் அத்தனை பேர்களும் சேர்ந்து இவைகளுக்கு இடம் தராத அளவிற்கு பார்த்துக் கொள்ளவேண்டும். ஆனால் இவைகள் எல்லாம் ஆங்காங்கே சில பல இடங்களில் நடைபெறுகின்றன. அப்படிப்பட்ட சம்பவங்கள் மேல் அதிகாரிகளுடைய கவனத்திற்கு, அரசின் கவனத்திற்கு வரும்போது, அவர்கள் மீது முறையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, துறையின் மூலமாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, லஞ்ச ஒழிப்புத் துறையின் மூலமாகவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவர்கள்மீது என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு இருக்கின்றன என்பதை வேண்டுமானால், நான் பின்னாலே விவரமாகச் சொல்கிறேன். ஆகவே இப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்படுகின்றபோது, இருக்கின்ற குற்றங்கள் கண்ணுக்குப் படாத அளவிற்கு, கண்டுபிடிக்க முடியாத அளவிற்கு நடைபெறுகின்ற நிலைமையில் ஏராளமாக நடைபெறுகின்றன என்பதை நாம் உணரவேண்டும். எனவே இதற்கிடையில் நாம் ஒப்பிட்டுப் பார்க்கின்றபோது, தமிழகத்திலே உள்ள காவல்துறையினர் சிறப்பான பணிகளை ஆற்றி வருகிறார்கள் என்று நான் சொல்லிக் கொள்கிறேன். குறைபாடுகளே இல்லை, குற்றங்களே இல்லை என்று நான் சொல்லவில்லை. ஆனால் ஒப்பிட்டுப் பார்க்கின்றபோது, 100க்கு



100 சரி என்றோ, அல்லது 100-க்கு 100 கேடு என்ற வகையிலோ நாம் இவைகளை வைக்க முடியாது. உதாரணமாகச் சொல்ல வேண்டும் என்றால், நிழலின் அருமை வெய்யிலுக்குப் போனால் தான் தெரியும் என்பதைப் போல, ஒப்பிட்டுப் பார்க்கின்ற நிலைமையிலே தான் இவைகள் தெரியும். அப்படிப்பட்ட தன்மையிலே தமிழகத்தினுடைய காவல்துறையினர் இயங்கி வந்தார்கள், இப்போது இயங்கி வருகிறார்கள், எப்போதும் இயங்கி வருவார்கள் என்பது தான் என்னுடைய கருத்து. ஆகவே வெள்ளைக்காரன் காலத்திலேயிருந்தும் சரி, அதற்குப் பிறகு ஏற்பட்ட அரசுகள் ஆண்டபோதும் சரி, இப்போதும் சரி, தமிழ்நாட்டு காவலர்களுக்கு ஒரு தனிப் பெயர் இருக்கிறது. ஆகவே அந்தப் பெயர் காப்பாற்றப்பட்டுத்தான் வருகிறதே தவிர, அது கேடுறவில்லை என்பதை நான் சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்கள் சொல்லியது மாதிரி தமிழ்நாட்டு மக்களின் நல்ல பண்பும் ஓரளவிற்கு காரணம் என்பதை நான் ஒத்துக் கொள்கிறேன். ஆகவே காவலர்களுடைய சாமர்த்தியத்தால்தான் முழுவதும் நடந்தது என்று நான் சொல்லவில்லை. தமிழக மக்களின் பண்பாடு நெறிமுறைகளும், தலைமுறை தலைமுறையாக கையாண்டு வருகின்ற பண்பாடும் பழக்க வழக்கங்களும் ஓரளவிற்கு இதற்கு உதவி இருக்கின்றன என்பதை நான் ஒத்துக் கொள்கிறேன்.

இருபத்தைந்து லட்சம் மக்கள் கொண்ட மதுரையிலே நடைபெற்ற ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டில், ஒரு வார காலமாக நடைபெற்ற அந்த விழாவில், இரவும் பகலுமாக, மதுரை மாநகர் முழுவதும் விழிப்புணர்வோடு இருந்து, அலைந்து, திரிந்தும் கூட அவ்வளவு பொதுமக்கள் வந்தபோதும், ஒரு சிறு அசம்பாவிதமும் நடைபெறாமல், ஒரு சிறு திருட்டுகூட நடைபெறாமல், ஒரு சிறு பகுதியினரும் கேடுறாமல், எந்த ஒரு காவல் நிலையத்திலும் எந்த ஒரு வழக்கும் பதிவு செய்யப்படாமல் நடந்து முடிந்தது என்பது, காவல்துறையினுடைய பாதுகாப்பு மட்டுமல்லாமல், தமிழகத்தினுடைய மக்களின் பண்பாட்டையும் அது சிறப்பாகக் காட்டுகிறது.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1986 மே 7]

(முற்பகல் 9-50)

அதேபோன்றுதான் போப் ஆண்டவர் வந்தபோதும் அவரே எடுத்துச் சொன்னார்கள். அதை ஏன் எடுத்துச் சொல்கிறேன் என்று சொன்னால், விழாக்களெல்லாம் முடிந்ததற்குப் பிறகு அவர்கள் சொன்ன கருத்திலும் சரி, அவர் சொல்லிவிட்டுச் சென்றதற்குப் பிறகு பாராட்டுக் கடிதம் ஒன்றையும் இந்த அரசுக்கு எழுதி இருக்கிறார்கள். விழா முடிந்ததற்குப் பிறகு அவர் சொன்னது, உலகத்தினுடைய பல நாடுகளுக்கு நான் சென்றிருக்கிறேன். ஐரோப்பா கண்டத்தினுடைய பல நாடுகளுக்குச் சென்றிருக்கிறேன். வேறு பல இடங்களுக்கும் நான் சென்றிருக்கிறேன். தமிழகத்திலேதான் ஒரு அழகான இடத்தில், ஒரு அழகான கடற்கரைப் பகுதியில், அழகான ஒரு வெண்மணல் பரப்பில், ஏராளமான மக்கள், நானும் எதிர்பார்க்காத வகையில் இந்துக்களே அதிகமாக நிறைந்திருக்கிற ஒரு நாட்டில், 100-க்கு 80-க்கு மேற்பட்ட மக்கள், இந்துக்களாக இருக்கின்ற ஒரு நாட்டில், வேறு ஒரு மதத்தைச் சார்ந்தவனாக, ஒரு சிறுபான்மை மதத்தைச் சார்ந்தவர்களுக்கு தலைவனாக இருக்கிற எனக்கு வரவேற்பு அளிக்கின்ற வகையில் பெரும் திரளாக கூடியிருந்தார்கள் என்பது மட்டுமல்லாமல் அவ்வளவு பெரும் திரளான கூட்டம் எவ்வளவு அமைதியாக நடைபெற்றது. அமைதியாக நடைபெறுகின்ற அளவுக்கு தமிழக மக்களிடத்திலே ஒரு பண்பாடு இருப்பதையும் நான் கண்டேன் என்பதை அவரே எடுத்துச் சொல்லி காவல்துறையுடைய போக்கையும் பாராட்டி, போற்றி, அவருக்கு கார் ஓட்டி வந்த காவலருக்குக்கூட சில பல கருத்துக்களையும் வழங்கிவிட்டு சென்றிருக்கிறார்கள்.

அண்மையில் 12 வருடங்களுக்கு ஒரு முறை நடைபெறுகின்ற கும்பமேளா, அந்த கும்பமேளாவிலே இவ்வளவு கூட்டம் வரும் என்று ஒவ்வொரு முறையும் தெரியும். தெரிந்தும்கூட இந்த ஆண்டு நடைபெற்ற கும்பமேளாவிலே கிட்டத்தட்ட 125 பேர் மிதிபட்டே செத்திருக்கிறார்கள். 125 பேர் சாகின்ற ஒரு சூழ்நிலை ஏற்பட்டது என்பதையும் பத்திரிகையிலே நீங்கள் அண்மையிலே கண்டிருக்கலாம். ஏன் இதை நான் சொல்ல வருகிறேன் என்றால், தங்களுடைய கடமை, தங்களுடைய அறிவுத்திறன், ஆற்றல்திறன் ஆகியவற்றை எந்த அளவுக்கு பயன்படுத்த



1986 மே 7] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

முடியுமோ, அந்த அளவுக்கு பயன்படுத்தி வருகிறார்கள். அதை
மீறியும், நடைபெறுகின்ற சூழ்நிலைகள் இருக்கிறது என்பதையும்
நான் மறக்கவில்லை. அவற்றையும் கட்டுப்படுத்தவேண்டும்
தான். அப்படிப்பட்ட வகையிலே பார்க்கின்றபோதுதான், தமிழ
கத்தைப் பொறுத்த வரையிலும்கூட பல்வேறு குற்றங்கள் நடை
பெறுகின்றன. அந்த நிலைமைகளுக்கு பின்னால் வருகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்களும் பல குற்றங்
களை எடுத்துச் சொன்னார்கள். 1985-வது ஆண்டு கிட்டத்தட்ட
1,10,299 குற்றங்கள் நடந்திருக்கின்றன. அவர்களே ஒருசில
குற்றங்களைத்தான் இங்கே பட்டியல் போட்டு காட்டினார்கள்.
தமிழகத்திலே நடைபெற்ற குற்றங்கள் அவ்வளவையும் பட்டியல்
போட்டு காட்டுவது என்று சொன்னால், முழுவதையும் சொல்
வதற்கு பல நாட்கள்கூட ஆகும். அதில் கண்டுபிடிக்கப்பட்டது
79,434 குற்றங்கள். நான் முதலில் சொன்னபடி இந்தக் குற்றம்
செய்தவர்கள், தங்களைக் கண்டுபிடிக்காமல் இருப்பதற்கு என்
னென்ன செய்யவேண்டுமோ அதைச் செய்துவிட்டுத்தான் குற்றங்
களைச் செய்கிறார்கள். ஆகவே பதிவு செய்யப்பட்டிருக்கின்ற
குற்றங்களுக்கும், கண்டுபிடிக்கப்பட்ட குற்றங்களுக்கும் இருக்கிற
விகிதாச்சாரத்தைப் பார்ப்போமானால் 71.9 சதவீத குற்றங்கள்
கண்டுபிடிக்கப்பட்டு அவர்கள் மீது வழக்கு தொடுக்கப்பட்டிருக்
கின்ற சூழ்நிலையில்தான் தமிழக காவல்துறையினர் இருந்து வரு
கின்றார்கள் என்பதையும் கிட்டத்தட்ட 81-வது ஆண்டிலிருந்து
கணக்கெடுத்துப் பார்த்தாலும் 68.5 சதவீதம் 81-வது ஆண்டில்
இருந்தது; 82-வது ஆண்டு 73.3 சதவீதமாக இருந்தது, 83-ல்
73.9 சதவீதம் கண்டுபிடிக்கப்பட்டிருந்தது. 84-லிலே 70.2 சத
வீதமாக இருந்தது, 85-லே 71.9 சதவீதமாக இருந்தது. இவை
களில், நாம் தனித்தனியாக எடுத்துப் பார்த்தாலும்கூட, சாதாரண
மாக கொலைக்குற்றம் செய்கின்றவர்கள் கூட திட்டமிட்டு செய்
கிறவர்கள், ஆத்திரம் வந்து என்ன ஆனாலும் சரிதான் என்று
சொல்லி கொலை செய்துவிட்டு கொலை செய்த தலையோடே
போலீஸ் ஸ்டேஷனுக்கு போய் நான்தான் கொலை செய்தேன்
என்று தைரியமாகச் சொல்கிறவர்கள் இருக்கிறார்கள். அவர்
களைப் பிடித்து கைது செய்து உள்ளே வைப்பது எளிதான
காரியம் அல்ல. பட்டப்பகலிலே என்ன ஆனாலும் சரி, நான்

பழிக்குப் பழி வாங்கிவிட்டேன் என்று தங்களுடைய ஆத்திரத்தையும், வீரத்தையும் காட்டுகிறவர்கள்கூட இருக்கிறார்கள். கொலை செய்துவிட்டு தப்புகிறவர்களும்கூட இருக்கிறார்கள்.

உதாரணத்திற்கு, கொலை செய்வதற்கு திட்டமிட்டுவிட்டு சென்னைக்கு வந்து ஒரு ஓட்டலிலே தங்கிவிட்டு, அந்த ஓட்டலிலே தங்களுடைய பெயரை பதிவு செய்துவிட்டு, 4, 5 நாட்களாக இங்கேயே இருப்பதாகச் சொல்லி, 4, 5 நாட்களுக்குப் பணமும் கட்டிவிட்டு, இடையிலே ஒருநாள் போய் கொலையை பண்ணிவிட்டு திரும்பி வந்து அந்த ஓட்டலிலே இருந்து வழக்கு தொடுக்கும்போது, அவர் ஓட்டல்காரரையே சாட்சிக்கு கூப்பிட்டு, இவர் 4 நாட்களாக இங்கே இருந்தாரா என்று கேட்க அவர் ஆமாம் என்று சொல்ல, நான்கு நாட்களுக்கு அவர் பணம் கட்டினாரா என்றால், ஆமாம் என்று சொல்ல, அவர் இருந்தாரா என்றால், இருந்தார் என்று சொல்ல, ஆக இந்த ஓட்டலிலே இருந்தவர் அங்கே எப்படி கொலை செய்து இருப்பார் என்று சொல்லி இப்படியெல்லாம்கூட, இதை வழக்கறிஞர்கள் பலபேர் சொல்லியும் கொடுக்கிறார்கள். நான் இங்கே இருக்கிற வழக்கறிஞர்கள் யாரையும் சொல்லவில்லை. இங்கே இருக்கிற வழக்கறிஞர்கள் எல்லாம் சிறப்பான முறையில் இருந்ததன் காரணமாகத்தான் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு சட்டமன்றத்திற்கே வந்திருக்கிறார்கள். ஆகவே இப்படி சொல்லிக் கொடுக்கின்ற காரணத்தாலே சில பேர் அப்படிப்பட்ட தன்மைகள் வரும்போது, இப்படிப்பட்ட வழக்குகளை எவ்வளவு சிறப்பாகக் கொண்டு போனாலும் கூட வழக்கு மன்றத்தில் அடிப்பட்டு போய் சிலபேர் வழக்குகள் எடுபடாமல் போய்விடுகின்றன. அந்த வகையில் காணும்போது கொலைபற்றி எடுத்துக்கொண்டால் 1985 ஆம் ஆண்டு 1430 கொலைகள் பதிவு செய்யப்பட்ட வகையில் 1150 கொலைகள் கண்டு பிடிக்கப்பட்டு அதற்கு ஆதாரம் தேடப்பட்டு அதற்கு காரணமானவர்கள் மீது வழக்குகள் தொடுக்கப்படுகின்ற நிலையைத் தான் தமிழக காவல் துறையினர் மேற்கொண்டிருக்கிறார்கள். இது 80.4 சதவீதம் ஆகும்.

மரணம் விளைவிக்க வேண்டும் என்ற எண்ணம் அல்ல. ஆனால் வன்முறையில் ஈடுபடுகிறபோது மரணம் விளைவிக்க வேண்டும் என்ற எண்ணம் அல்ல, ஆனால் முடிவு மரணமாக முடிந்து



விடுகிறது. அப்படிப்பட்ட தன்மையில் 22 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு அதில் 20 வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டு அது 90.9 சதவீதமாக அமைகிறது.

கற்பழிப்பு என்ற வழக்குகள் 222 பதிவு செய்த வகையில் 129 வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டு வழக்கு தொடுக்கப்பட்டது. 58.1 சதவீதமாக அது அமைகிறது. கூட்டுக் கொள்ளை 53 நடந்து இருக்கின்றன. அதிலும் 33 கூட்டுக் கொள்ளைகள் கண்டு பிடிக்கப்பட்டு வழக்கு தொடுக்கப்பட்டது. அது 62.3 சதவீதமாக அமைகிறது. கொள்ளை அடித்தல் 415 நடைபெற்றிருக்கிறது. அதில் 285 கண்டுபிடிக்கப்பட்டது. அது 68.7 சதவீதமாக அமைகிறது. திருட்டு 25,495 நடைபெற்று இருக்கின்றன. ஆக திருட்டை கண்டுபிடிப்பது என்பது அவ்வளவு எளிதான ஒன்று அல்ல. இருந்தாலும் அதிலும் 19,083 திருட்டுகளை அடையாளம் வைத்து தடயங்கள் வைத்து கண்டுபிடிக்கப்பட்டன. அது 74.8 சதவீதமாக அமைகிறது. கலவரங்கள் கூட 7632 சிறு சிறு கலவரங்கள் சிற்றூர் புறங்களிலும், நகர் புறங்களிலும், வேறு பல இடங்களிலும் நடைபெற்ற கலவரங்களில் 5,072 கண்டுபிடிக்கப்பட்டு வழக்கு தொடுக்கப்பட்டது. அது 66.5 சதவீதமாக அமைகிறது. இதிலே இந்திய தண்டனை குற்ற சட்டவியல்படி பார்த்தாலும், அது 75.15 சதவீதமாக அமைகிறது. இதை ஏன் சொல்ல வருகிறேன் என்றால் ஒப்பிட்டுப் பார்க்கும் சூழ்நிலை வருகிறபோதுதான் ஓரளவுக்கு திறமையாக பணிபுரிகிறார்கள் என்பது தெரியும். மற்ற மாநிலங்களை ஒப்பிட்டுப் பார்க்கும் போது நம்முடைய மாநிலத்ினுடைய போலீசார் இன்னும் திறமையாக இருக்கவேண்டும் என்று சொன்னார்கள். அதை ஒப்புக் கொள்கிறேன். இன்னும் மேம்பாடு பெறவேண்டும் என்று சொன்னார்கள், அதையும் ஒப்புக்கொள்கிறேன். இன்னும் பல வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டு, வழக்கு தொடுக்கப்பட்டு தண்டனை தர வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். அதுவும் ஒப்புக் கொள்ளப்படவேண்டியது தான். ஒப்புக்கொள்கிறேன். ஆனால் அந்த வகையில் பார்க்கும்போது மாநிலங்களின் தன்மைகளை ஒப்பிட்டுப் பார்க்கும்போது தமிழ்நாட்டைப் பொறுத்தவரையிலும் களவுபோன பொருட்களை மீட்டது என்ற வகையில் நாம் கணக்கெடுத்துப் பார்த்தால் அது

5 கோடியே 90 லட்சம் ரூபாய் மதிப்புக்கு களவு போய் இருக்கின்றது. அதில் 3 கோடியே 38 லட்சம் ரூபாய் மதிப்புள்ள பொருட்களை மீட்டு இருக்கிறார்கள். களவு போன பொருட்களை மீட்பது என்பது அவ்வளவு எளிதான செயல் அல்ல. அதிலும் மீட்டு இருக்கிறார்கள், தன்னுடைய திறமையைக் காட்டி — அதனுடைய தன்மையைப் பார்க்கும்போது அது 57.3 சதவீதமாக அமைகிறது. ஆந்திர பிரதேசத்தைப் பொறுத்தவரையில் கணக்கு எடுத்துப் பார்த்தால் இந்த களவு போன பொருட்களை மீட்டது என்ற வகையில் பார்த்தால் அது 39 சதவீதம் வருகிறது. கர்நாடகாவைப் பொறுத்தவரையில் அது 30 சதவீதமாகத் தான் வருகிறது. கேரளாவைப் பொறுத்தவரையில் அது 20.7 சதவீதமாகத் தான் வருகிறது. மகாராஷ்டிராவைப் பொறுத்தவரையில் அது 36.0 சதவீதம் தான் வருகிறது. உத்திரப் பிரதேசத்தைப் பொறுத்தவரையில், அது மிக மிகக் குறைவாக இருக்கிறது. ஆகவே களவு போன பொருட்களை குறைந்த அளவில் மீட்டு இருக்கிறார்கள். அதாவது 9 சதவீதம் தான் மீட்டு இருக்கிறார்கள். மேற்கு வங்கத்தைப் பொறுத்தவரையில் அது 27.2 சதவீதமாக அமைகிறது. ஆனால் தமிழ்நாடு, இந்த முக்கியமான மாநிலங்களை ஒப்பிட்டுப் பார்க்கும்போது அது 57.3 சதவீதமாக இருக்கிறது. ஏன் என்றால் திறமை அடியோடு குறைந்து விட்டது என்றோ, அடியோடு திறமை அற்று விளங்குகிறார்கள் என்றோ சொல்லுவதற்கு காரணம் ஆகாது. திறமை மேலும் வளர வேண்டும் என்ற கருத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன். மற்றவர்களை ஒப்பிட்டுப் பார்க்கும்போது திறமை அற்றவர்களாக விளங்குகிறார்கள் என்பதற்கோ, தமிழகம் சீர் கெட்டு இருக்கிறது என்பதற்கோ இது எடுத்துக்காட்டாக ஆகாது என்பதை நான் சொல்ல விரும்புகிறேன்.

கொலையைப் பொறுத்தவரையில் நான் முதலில் குறிப்பிட்டதைப் போல் 80.4 சதவீதம் பதிவு செய்யப்பட்ட கொலைகளிலிருந்து; கண்டுபிடிக்கப்பட்ட வழக்கு தொடுக்கப் பட்ட கொலைகள் இருக்கின்றன. ஆந்திர பிரதேசம் 68 சதவீதம் கர்நாடகம் 61.3 சதவீதம், ராஜஸ்தான் 71.7 சதவீதம் மகாராஷ்டிரம் 47 சதவீதம், மேற்கு வங்காளம் 48 சதவீதம்.





கூட்டுக்கொள்ளையை எடுத்துக் கொண்டால் தமிழகம் 62.3 சதவீதம் கண்டுபிடித்து இருக்கிறது. ஆந்திர பிரதேசம் 32.8 சதவீதம், கர்நாடகம் 25.7 சதவீதம், ராஜஸ்தான் 43.6 சதவீதம், மகாராஷ்டிரம் 49.8 சதவீதம், மேற்கு வங்காளம் 37.8 சதவீதம்.

(முற்பகல் 10-00)

வழிப்பறியை எடுத்துக்கொண்டால் தமிழகத்தில் 68.7 சதவிகிதம் கண்டுபிடிக்கப்பட்டு, வழக்கு தொடுக்கப்பட்டு இருக்கிறது. ஆந்திராவில் 52.6 சதவிகிதம், கர்நாடகாவில் 35 சதவிகிதம், ராஜஸ்தானில் 52.2 சதவிகிதம், மகாராஷ்டிராவில் 52.7 சதவிகிதம், மேற்கு வங்கத்தில் 53 சதவிகிதம் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

கன்னக் களவு கண்டுபிடிப்பதை எடுத்துக்கொண்டால், தமிழகம் 55.9 சதவிகிதம், ஆந்திரம் 47.5 சதவிகிதம், கர்நாடகம் 27.2 சதவிகிதம், ராஜஸ்தான் 30.8 சதவிகிதம், மகாராஷ்டிரம் 52 சதவிகிதம், மேற்கு வங்கம் 47 சதவிகிதம்.

திருட்டை கண்டுபிடிப்பதை எடுத்துக்கொள்வோமேயானால், தமிழகம் தான் முதல் இடத்தில் இருக்கிறது. தமிழகம் 74.8 சதவிகிதம், ஆந்திரம் 67.5 சதவிகிதம், கர்நாடகம் 31.4 சதவிகிதம், ராஜஸ்தான் 32.9 சதவிகிதம், மகாராஷ்டிரம் 54.0 சதவிகிதம், மேற்கு வங்கம் 55.0 சதவிகிதம். எதற்கு இவற்றையெல்லாம் நான் சொல்கிறேன் என்றால், நேற்று சில பல உறுப்பினர்கள் பேசிய காரணத்திற்காக, சில விவரங்களையெல்லாம் திரட்ட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. தமிழகத்திலுள்ள காவல் துறையினர் செயல்படுவதைப் பற்றி பத்திரிகையை யாராவது படிப்பார்களேயானால், தமிழகம் முழுவதும் சீர் கேடு அடைந்துவிட்டது, தமிழகக் காவல் துறை திறமையில்லாதவர்களை வைத்துக் கொண்டு நடந்து கொண்டிருக்கிறது என்று தான் பொதுமக்களும் பிறரும் நினைக்கத் தோன்றும். ஆக அதைப்போக்கத்தான் காவல் துறையினர் திறமையாகச் செயல்படுகிறார்கள் என்பதைத் தெரிவிப்பதற்காகத்தான் இந்தப் புள்ளிவிவரங்களைச் சொன்னேன்.

உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். அப்படிப்பட்ட சீர்கேடடைந்த நிலைமை நடக்காது, நடக்கவும் கூடாது, நடக்கவும் வேண்டாம். இந்த காவல் துறையினர் ஒரு வார காலத்திற்கு இந்தப் பணியில் ஈடுபட வேண்டாம் என்று சொல்லி விட்டால், தமிழகம் என்னவாகும் என்று நினைத்துப் பார்ப்போமேயானால், காவல் துறையினர் இருப்பதனால், என்னென்ன நன்மைகள் ஏற்படுகின்றன என்பது புரியும். எனவே அந்த வகையில் தான் நாம் யோசிக்க வேண்டும். ஆக இவர்கள் இருக்கும்பொழுது இப்படிப்பட்ட நிலைமைகள் நடக்கும்பொழுது, கொலைகளும், மற்றவைகளும் பரவலாக நடைபெறாமல் இருப்பதற்குக் காரணம், காவல் துறை இருக்கிறது, கண்டுபிடிப்பார்கள், தண்டனை வழங்குவார்கள், நமக்கு சிறைத் தண்டனை கிடைக்கும் என்கிற அச்ச உணர்வு இருப்பதால் தான்.

சிலபல உறுப்பினர்கள் பேசும்பொழுது குற்றவாளிகள் தப்பித்துக் கொண்டுவிடுகிறார்கள் என்று எல்லாம் சொன்னார்கள். குற்றவாளிகள் தப்பித்துக் கொள்வதற்கு பணத்தையும், மற்றவை களையும், தங்களுடைய இன்ஃப்ளுவன்சையும் பயன்படுத்திக் கொள்கிறார்கள் என்றெல்லாம் கூட எடுத்துச் சொன்னார்கள். அதுவும் உண்மை தான். நான் இல்லை என்று மறுக்கவில்லை. அதற்கு இடம் தரக் கூடாது என்பது தான் மாண்புமிகு முதலமைச்சருடைய கொள்கை. இந்த அரசினுடைய கொள்கை. ஒரு தனிப்பட்டவனைக் காப்பாற்றுவதற்காக ஒரு சமுதாயம் பாழ்படவே கூடாது. ஒரு தனிப்பட்டவனுக்கு சலுகை செய்ய ஒரு சொசைட்டி, ஒரு சமூகம், ஒரு ஊரிலே இருக்கின்ற வகுப்பினர் எக்காரணம் கொண்டும் பாதிக்கப்படக் கூடாது என்பது தான் முக்கிய நோக்கம்.

மேற்கொண்டும் துப்பாக்கிச் சூட்டைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் எடுத்துச் சொன்னார்கள். அதைச் சொல்லும் போது நண்பர்கள் எல்லாம் ஆர்வத்தின் காரணமாக, உயர்வு நவிர்ச்சி அணியிலே எடுத்துச் சொன்னார்கள். கவிஞர்களுக்கு மட்டும் தான் அந்த லைசன்ஸ் உண்டு, உயர்ந்த வகையிலே எடுத்துச்சொல்வதற்கு. ஆக சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் அந்த உயர்வு நவிர்ச்சி அணியைப் பயன்படுத்தி இருக்கிறார்கள்





மதுரை மாநகரத்தினுடைய வளம் எப்படியிருக்கிறது என்று கேட்டால், புலவர்கள் தான் சொல்வார்கள். அது புலவர்களின் உயர்வு நவிர்ச்சி அணி. மதுரை மாநகரினுடைய வளம் எப்படியிருக்கிறது என்று கேட்டால், அங்கே இருக்கின்ற வயல்களில் இருக்கின்ற வாளை மீன் துள்ளி, மேலே இருக்கின்ற தெங்கு, தென்னங்குலைகளை எல்லாம் தள்ளி, மேலே பறந்து மேலே இருக்கின்ற சந்திர மண்டலத்திற்குப் போய், அங்கே யிருக்கின்ற அமிர்த கலசத்தை உடைத்துவிட்டு, அங்கே யிருக்கின்ற அமிர்தத்தைக் கீழே சிந்திவிட்டு, அதற்கு மேலே பறந்து, மேலே இருக்கின்ற நட்சத்திரக் கூட்டத்தை ஒரு கலக்கு கலக்கி, அதற்கு மேலே வானமுகத்தைப் போய் இடித்து, அதற்குப் பிறகு மேலே போய் பெரும் தூரக் கடலில் இருக்கின்ற சுறா மீனோடு இந்த மீன் விளையாடும் என்று பாடியிருக்கிறார் என்று சொன்னால், அது உயர்வு நவிர்ச்சி அணி. வாளை மீன் என்று சொன்னால், அது 2 அடி, 3 அடி துள்ளுமே தவிர, பெரும் தூரக் கடலில் போய் விழுந்து சுறா மீனோடு விளையாடும் என்பது உயர்வு நவிர்ச்சி அணி என்று இலக்கணப் புலவர்கள் சொல்வார்கள். அதுபோல் நண்பர்களை இதற்காக நான் கோபித்துக் கொள்ள மாட்டேன். உயர்வு நவிர்ச்சி அணி என்று சொல்லி, உறுப்பினர்கள் பேசியதை நாம் தள்ளி விட வேண்டியவர்களாக இருக்கிறோம்.

ஆனால் அன்றாட நிகழ்ச்சிகளாக, துப்பாக்கிச் சூட்டை நடத்தித் தீரவேண்டுமென்ற அவசியம் இல்லை. துப்பாக்கிச் சூட்டினால், இந்த அரசுக்கோ, மற்றவர்களுக்கோ என்ன லாபம்? துப்பாக்கிச் சூட்டை நடத்துவதனால் அரசுக்குக் கொஞ்சம் தயக்கம் ஏற்படுகிறது. அரசுக்கு களங்கம் ஏற்படுகிறது என்பதை அரசு உணர்கிறது. ஆனால் கூடுமானவரையில், தங்களைக் காப்பாற்றுவதற்கோ, உடமைகளைக் காப்பாற்றுவதற்கோ, சமுதாயத்தைக் காப்பாற்றுவதற்கோ, மற்றவர்களைக் காப்பாற்ற வேண்டிய அவசியம் வருகின்றபோது, இந்தத் துப்பாக்கிச் சூடு நடைபெற வேண்டிய இன்றியமையாமை ஏற்படுகிறது. துப்பாக்கிச் சூடு நடைபெறாமல் எவ்வளவோ பெரும் குற்றங்கள், எவ்வளவோ பெரும் கலவரங்கள், எவ்வளவோ பெரும் நிலைமைகளை எல்லாம் சமாளித்து இருக்கிறார்கள். அவை

நூற்றுக்கணக்கில் இருக்கின்றன. அவற்றையெல்லாம்கூட, பட்டியல் போட்டு காட்டலாம். துப்பாக்கிச் சூடு வர வேண்டிய ஒன்று தடுக்கப்பட்டது. துப்பாக்கிச் சூடு வந்திருக்க வேண்டிய ஒன்று தவிர்க்கப்பட்டது. துப்பாக்கிச் சூடு வந்திருந்தால், இன்னது நடைபெற்றிருக்கும், அது தவிர்க்கப்பட்டது என்றெல்லாம் கூட நாம் கணக்குப் போடலாம். ஆனால் கடைசியில் 1985-வது ஆண்டு மொத்தம் 18 துப்பாக்கிச் சூடுகள் நடைபெற வேண்டிய இன்றியமையாத நிலை ஏற்பட்டது. ஆனால் எவ்வளவோ எச்சரிக்கைகள் செய்து தான் பார்க்கிறார்கள். அதற்கும் மீறி வருகின்றபோது சொல்லிப் பார்க்கிறார்கள். கலைய மறுக்கிறார்கள், வன்முறையில் ஈடுபடுகிறார்கள்—எந்த ஒரு சிறு நிலைமை வந்தாலும் கூட, மக்களுக்கு ஒரு எண்ணம் ஏற்பட்டிருக்கிறது—ஊரே திரண்டு போய் காவல் நிலையத்தைத் தாக்கலாம், ஊரே திரண்டு போய் காவல் நிலையத்தை எதிர்க்கலாம், என்கின்ற ஒரு உணர்வு வந்துவிட்டது. அது சர்வ சாதாரணமாக வந்ததன் காரணமாக, அதனுடைய பின் விளைவைத் தெரிந்துகொள்ளாமல் செய்கிறார்கள்.

ஒரு காவல்நிலையம் தாக்கப்படுகிற சூழ்நிலை ஏற்படுகிற போது, பின் விளைவுகளால் அந்த ஊர் எவ்வளவு கஷ்டப்படும், மக்கள் எவ்வளவு கஷ்டப்படுவார்கள்? பிறகு துப்பாக்கிப் பிரயோகம் வருகின்ற அளவுக்கு வரும்போது, 2, 3 பேர் கீழே விழுகின்ற சூழ்நிலைக்கு போகுமே! நாம் போய் காவல் நிலையத்தைத் தாக்குகிறோமே, காவல்நிலையத்தைத் தாக்குவது சரியா என்ற பண்பாடு உணராத காரணத்தினால் சில பல இடங்களில் ஆத்திரம் கொண்டவர்கள் உசுப்பிவிடுகிறார்கள். எதும் அறியாத மக்கள், விளைவுகளை புரிந்துகொள்ள முடியாத [illegible] அவர்கள் இழுத்த இழுப்புக்கு போய் விடுவதன் காரணமாக அதற்குப் பலியாகிறார்கள். காரணம், அதற்குக் காரணமாக இருக்கிற முக்கியமானவர்கள், அதிலே ஈடுபடுவதே இல்லை. நிரபராதிகள் தான் கடைசியில் இறக்கும்படியான சூழ்நிலை ஏற்படுகிறது. 1985-வது ஆண்டிலே 18 துப்பாக்கிச் சூடுகள் ஏற்பட்டன என்றால், வன்முறைக் கும்பலை நோக்கி சுட்டவை—12, வானத்தை நோக்கிச் சுட்டவை—3, உணவுப் பொருள் கடத்தலைத் தடுக்க வானத்தில் சுட்டவை—3, ஆக, இந்த



18 துப்பாக்கிச் சூடுகளின் மூலமாக மொத்தம் இறந்தவர்கள் 13 பேர். ஆகவே, துப்பாக்கிச் சூடு பதினெட்டே தவிர, 18 துப்பாக்கிச் சூடுகளில் ஏராளமானவர்கள் இறந்தார்கள் என்று அல்ல.

இதிலே வானத்தை நோக்கி சுட்டவைகளும், சுட்டதன் காரணமாக இறந்துபட்டவர்கள் என்று கணக்குக்கு வருவது 13 பேர் தான் வருகிறார்கள். 1984-வது ஆண்டிலே துப்பாக்கிச் சூட்டின் காரணமாக, மொத்தம் 24 சூடுகள் என்றாலும், இறந்து பட்டவர்கள் 4 பேர்தான். 1983-வது ஆண்டிலே மொத்தம் துப்பாக்கிச் சூடு 18. ஆனால் இறந்தவர் எண்ணிக்கை ஒருவர் தான்.

துப்பாக்கிச் சூடுகள் ஏற்படாமல் தவிர்க்கவேண்டும் என்ற ஒரு கொள்கை நல்ல கொள்கை. அதைக் கடைப்பிடிக்கவேண்டும் என்ற முறையில் நாம் சொன்னாலும் கூட, அது இன்றி யமையாத ஒன்று, வேறு வழியில்லாமல் நடைபெறுகிற ஒன்று. வேறு வகையே இல்லை என்பதற்காகத் தான் நான் இதைக் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

நான் ஒப்பிட்டுக் காட்டினால்தான் உங்களுக்குப் புரியும். அப்படிப்பட்ட கலவரங்கள், சூழ்நிலைகளைப் பொறுத்தவரையில் தமிழகத்தில் ஓரளவுக்குக் குறைந்திருக்கிறது என்பது மட்டு மல்லாமல், துப்பாக்கிப் பிரயோகம் செய்யவேண்டும் என்ற எண்ணம் கூட காவல்துறையினருக்கு அதிகமாக வரவில்லை. அதற்கான சூழ்நிலைகளும் அதிகமாக ஏற்படவில்லை என்பதைக் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

1984-வது ஆண்டு மட்டும் கணக்கிட்டுப் பார்த்தால், ஆந்திரப் பிரதேசத்தில் மட்டும் 89 துப்பாக்கிச் சூடுகள் நடைபெற்றிருக் கின்றன. குஜராத்தில் 57 துப்பாக்கிச் சூடுகள் நடைபெற்றிருக் கின்றன. மேற்கு வங்காளத்தில் 39 துப்பாக்கிச் சூடுகள், கர்நாடகத்தில் 30 துப்பாக்கிச் சூடுகள், தமிழ்நாட்டில் 24 துப்பாக்கிச் சூடுகள். அதற்காக நான் பெருமை பெறுகிறேன் என்று சொல்லவேண்டாம். அது இயற்கை இயல்பு. வேறு வழியே இல்லை என்பதற்காகத் தான் சொல்கிறேனே தவிர, அங்கே எல்லாம் அவ்வளவு நடந்தது தவறு என்று சொல்லமாட்டேன்.

அப்படிப்பட்ட சூழ்நிலைகள் ஏற்படுகின்றன. அப்படி ஏற்படுகிற போது அந்தந்த மாநிலங்களில் சமாளிக்கவேண்டிய கட்டம் வருகிறது. ஆகவே, தமிழக மாநிலமும், சமாளிக்கவேண்டிய கட்டம் வருகிறது.

இப்போது மட்டும் அல்ல. எந்த ஆட்சியிலும் நடைபெற்று வருகிறது. 1969-லிருந்து 1975 வரையிலும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி நடைபெற்றபோதும் கூட, அதிலே நானும் பங்கு பெற்றுத் தான் இருந்தேன். ஆனால் அப்போது இந்த நிலைமை இல்லாமல் இருந்ததா என்றால், இல்லை என்ற உணர்வோடு ரகுமான்கான் அவர்கள் பேசுவதுதான் வேடிக்கையாகவும், வியப்பாகவும் இருக்கிறதே தவிர, வேறு அல்ல. ஆனால் அது இன்றியமையாத ஒன்று. வேறு வழி இல்லை. அப்படிப்பட்ட கட்டங்கள் வருகிறபோது, அப்போது பார்த்தாலும்கூட, 1969-லிருந்து பார்த்தால், 1969-ல் 5 பேர் துப்பாக்கிச் சூட்டினால் இறந்து இருக்கிறார்கள். அப்போது அந்தச் சம்பவங்கள் நடந்தது 5. 1970-இலே 7, 1971-இலே 4, 1972-இலே 14 துப்பாக்கிச் சூடுகள். 1973-இலே 5, 1974-இலே 7, 1975-இலே 13. ஆக மொத்தம் 7 ஆண்டுகளில் 55 துப்பாக்கிச் சூடுகள். அதிலே இறந்துபட்டவர்கள், 1969-ல் 5 பேர், 1970-ல் 10 பேர், 1971-ல் 2 பேர், 1972-ல் 16 பேர், 1973-ல் ஒருவர், 1974-ல் இரண்டு பேர், 1975-ல் 8 பேர், மொத்தம் 44 பேர் இறந்து இருக்கிறார்கள். எதற்காகச் சொல்ல வருகிறேன் என்றால் இன்றியமையாத சூழ்நிலைகள் ஏற்படும்போது, சட்டம்—அமைதி, ஒழுங்கைக் காப்பாற்ற, ஒரு இலட்சம் பேரைக் காப்பாற்றவேண்டிய அவசியம் ஏற்படுகிறது என்றால், 50 ஆயிரம் பேரைக் காப்பாற்ற வேண்டிய அவசியம் ஏற்படுகிறது என்றால், பல கோடிக்கணக்கான சொத்துக்களைக் காப்பாற்ற வேண்டிய அவசியம் ஏற்படும்போது, துப்பாக்கிச் சூட்டில் ஒருவர், இருவர் இறக்கிறார்கள் என்றால், அதற்குக் காவு கொடுத்து அதைக் காப்பாற்றவேண்டிய அவசியம் ஏற்படுகிறது.

(முற்பகல் 10-10)

குடியரசுத் தலைவர் ஆட்சியிலாவது நிம்மதியாக இருந்தோமா என்றால் அதுவும் இல்லை. குடியரசுத் தலைவர் ஆட்சி நடைபெற்ற 1976-77-இல் அந்த ஒன்றரை ஆண்டுக் காலத்திலேகூட ஏழு துப்பாக்கிப் பிரயோகங்கள் நடைபெற்றிருக்கின்றன. ஐந்து பேர் அந்தக் காலத்திலேகூட இறந்துபட்டிருக்கிறார்கள்.



காவல்நிலையக் கொட்டடியில் மரணம் ஏற்பட்டதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் சொன்னார்கள். இந்த அவையிலே ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொண்டு வரும்பொழுது கூட இந்த அரசினுடைய கொள்கைகளை நாம் அடிக்கடி விளக்கிக்கொண்டு வந்திருக்கிறோம். காவல் நிலையங்களினுடைய கொட்டடிகளில் கைதிகளாக வைக்கப்பட்டு இருப்பவர்கள் மரணம் அடைகின்ற ஒரு சூழ்நிலைக்கே இடம் தரக்கூடாது என்பதை நாம் வற்புறுத்தி வருகிறோம். மாண்புமிகு முதல்வர் அவர்கள் அடிக்கடி இதற்குத் தாக்கீதுகளை அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். இந்த அரசு முக்கியமான அறிவுரைகளை அவர்களுக்கு வழங்கியிருக்கிறது. ஒன்று, ஜாமீனில் விடக்கூடிய குற்றங்களில் உடனடியாக ஜாமீனில் விடுத்து அனுப்புவது. ரிமாண்டுகளுக்கு அனுப்ப வேண்டியவர்களை பகலிலேயே உடனுக்குடன் தாமதம் இன்றி அனுப்புதல். இரவு நேரங்களில் கைதி அறைகளில் வைப்பதைக் கூடுமானவரையில் தவிர்த்தல், வழக்குப் பதிவு செய்யாமல் ஒருவரையும் காவல் நிலையத்தில் வைப்பதைத் தவிர்த்தல் போன்றவைகளை மாண்புமிகு முதலமைச்சரவர்களே எல்லா காவல் நிலையங்களுக்கும் அறிவுரையாகத் தந்திருக்கிறார்கள். இருப்பினும் இதை மீறி நடைபெறுகின்றன என்கின்ற சூழ்நிலை ஏற்படுகின்றபொழுது 1985-வது ஆண்டு காவலில்—காவல் நிலையங்களில் நடந்த மரணங்களினுடைய எண்ணிக்கை ஏழு மரணங்கள் நடைபெற்றிருக்கின்றன. அதிலே நியாயமானவை என்று கருதப்படுபவை இரண்டு. நியாயமற்றவை என்று கருதப்பட்டது. இயற்கையிலே அவர்கள் இறக்காமல் நியாயமற்ற முறையில் இறந்தவர்கள் என்று முடிவு செய்தவை மூன்று. ஆகவே, குற்ற மேல் நடவடிக்கை எடுத்த மூன்று வழக்குகள்மீது அதற்கு உரியவர்கள்மீது வழக்குகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. விசாரணையில் உள்ளது இரண்டு. ஆகவே, காவல் நிலையங்களில் நடைபெறுகின்ற மரணங்கள் அத்தனையும் நியாயமானவை என்று இந்த அரசு சாதிக்கவும் இல்லை. ஆகவே, இவைகளை ஆராய்ந்து அறிந்து விசாரணை செய்வதற்குப் பிறகு நியாயமானவை என்று இந்த 7-லே இரண்டு தான் வந்திருக்கிறது. மூன்று நியாயம் அற்றவை என்று வந்ததன் காரணமாக நியாயமற்ற முறையில் அவர்கள் நடந்திருக்கிறார்கள் என்று தெரிந்தவுடனே, அதற்கு உரியவர்கள் மீது உள்ளபடியே

வழக்குகள் தொடுக்கப்பட்டு அவர்கள் தண்டனைக்கு உள்ளாக்கப்படுகின்ற சூழ்நிலை இருக்கிறது. இன்னும் விசாரணையிலே இரண்டு தன்மைகள் இருந்து கொண்டு வருகின்-ன. இது எல்லா ஆட்சியிலேயும் கூட இருக்கிறது. இங்கே மட்டும் அல்ல. ஏற்கனவே கூட திராவிட முன்னேற்றக் கழகம் ஆண்டபொழுதும்கூட 1969-லே காவல் நிலையங்களிலே இறந்துபட்டவர்களுடைய மொத்த எண்ணிக்கை 18; 1970-லே 23; 1971-லே 8; 1972-லே 6; 1973-லே 11; 1974-லே 10; 1975-லே 19. ஆகவே, இப்படிப்பட்ட சூழ்நிலைகள் இப்பொழுது ஏதோ அதிசயமாக ஏற்பட்டதைப் போலவும், இப்பொழுதுதான் இந்தக் கொடுமைக்கு ஆளாவதைப் போலவும் சொல்கிறார்கள். கூடுமானவரையில் குறைக்க வேண்டுமென்ற எண்ணமும், அக்கறையோடு நடத்த வேண்டுமென்ற எண்ணமும் இருக்கிறது என்பதையும் குறிப்பிட்டுக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

குடியரசுத் தலைவர் ஆட்சிக் காலத்திலேயும்கூட, 1976-77-லே மட்டும் 15 பேர் காவல் நிலையத்திலே கொட்டடியிலே இறந்துபட்டிருக்கிறார்கள். அந்தக் கணக்கும் வந்திருக்கிறது. இதை ஒப்பிட்டுப் பார்ப்பதற்காகத்தான் நான் சொல்கிறேனே தவிர, இவைகளை நியாயப்படுத்துவதற்காக நான் சொல்லவில்லை. குறைக்கப்பட வேண்டுமென்ற கருத்தை நான் ஏற்றுக் கொள்கிறேன்.

காவலில் மரணம்—விசாரணைக்குப் பின் காவல் துறையினர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுத்தான் வருகிறது. யாரையும் நாம் விட்டு வைக்கவில்லை; யாரையும் காப்பாற்ற வேண்டுமென்ற எண்ணமும் இல்லை.

17—4—1981 அன்று, கன்னியாகுமரி மாவட்டம் கொளச்சல் காவல் நிலைய லாக்கப்பில் திரு. டேவிட் என்பவருக்கு ஏற்பட்ட மரணம் குறித்து, பத்மநாபபுரம் கூடுதல் மாவட்ட நீதிபதிமுன் வழக்கு நிலுவையில் உள்ளது. ஒரு ஆய்வாளர், ஒரு உதவி ஆய்வாளர், ஒரு தலைமைக் காவலர் மற்றும் இரண்டு காவலர்கள் மீது குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு, அந்த வழக்கு தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டு வருகிறது.

6—6—1981 அன்று தஞ்சை மேற்கு காவல் மாவட்டம் பூதலூர் காவல் நிலைய லாக்கப்பில் ஏற்பட்ட துரைராஜ் என்பவர் மரணம் குறித்து கோட்டாட்சியர் விசாரணைக்குப் பின் ஒரு ஆய்வாளர்,



ஒரு உதவி ஆய்வாளர், ஒரு தலைமைக் காவலர் மற்றும் இரு காவலர்கள்மீது தஞ்சாவூர் மேற்குப் பகுதி மாவட்ட நீதிபதிமுன் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

மதுரை மாநகர்—மாவட்டம் திருநகர் காவல் நிலையத்தில் 11—4—1982 அன்று காவல் நிலைய லாக்கப்பில் ஏற்பட்ட மணி என்ற கருப்பையாவின் மரணம் குறித்து மதுரை கோட்டாட்சியர் விசாரணைக்குப் பின் மதுரை கூடுதல் மாவட்ட நீதிபதி முன் ஒரு தலைமைக் காவலர் மற்றும் நான்கு காவலர்கள் மீது குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

தர்மபுரி மாவட்டம் ஊத்தங்கரை காவல் நிலையத்தில் 3—7—1982 அன்று ஏற்பட்ட சுப்பிரமணியம் என்பவர் மரணம் குறித்து, தர்மபுரி மாவட்ட உதவி ஆட்சியாளர் விசாரணை நடத்தி, ஒரு தலைமைக் காவலர், ஒரு காவலர் மீது குற்றப் பத்திரிகை மாவட்ட குற்றவியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது.

1983 ஆம் ஆண்டு காமராஜர் மாவட்டம், அருப்புக்கோட்டை காவல் நிலையத்தில் 12—3—1983 அன்று கணேசன் என்பவருக்கு ஏற்பட்ட மரணம் குறித்து கோட்டாட்சியர் விசாரணைக்குப் பின் இராமநாதபுரம் நீதிமன்றத்தில் ஒரு உதவி ஆய்வாளர், மூன்று காவலர்கள்மீது குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

தென்னாற்காடு மாவட்டத்தைச் சார்ந்த அரகண்டநல்லூர் என்பவர் 15—11—1983 காவல் நிலையத்தில் கோரகண்ணன் அன்று இறந்து விட்டார். திருக்கோவிலூர் கோட்டாட்சியர் விசாரணைக்குப் பின் ஒரு ஆய்வாளர், இரண்டு உதவி ஆய்வாளர்கள், ஒரு முதல்நிலைக் காவலர் மற்றும் இரு காவலர்கள் மீது மாவட்ட நீதிமன்றத்தில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. ஒரு உதவி ஆய்வாளர், ஒரு முதல்நிலைக் காவலர் மற்றும் இரு காவலர்களுக்குத் தலா மூன்று ஆண்டுகள் தண்டனை வழங்கப்பட்டது. ஆய்வாளர் மட்டும் விடுதலை செய்யப்பட்டார். எஞ்சியுள்ள ஒரு உதவி ஆய்வாளர் மீது மட்டும் வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1986 மே 7

இராமநாதபுரம் மாவட்டம், கீழக்கரை காவல் நிலையத்தில் முனியாண்டி என்பவருக்கு 3—4—1984 அன்று ஏற்பட்ட மரணம் குறித்து, இராமநாதபுரம் கோட்டாட்சியரின் விசாரணைக்குப் பின், இராமநாதபுரம் குற்றவியல் நீதிபதி முன் ஒரு உதவி ஆய்வாளர், இரு காவலர்கள் மீது குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. வழக்கு நிலுவையில் உள்ளது.

பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம், காரைக்குடி வடக்குக் காவல் நிலையத்தில் 28—3—1985 அன்று சோலை என்பவருக்கு ஏற்பட்ட மரணம் குறித்து, கோட்டாட்சியர் விசாரணைக்குப் பின் ஒரு ஆய்வாளர், ஒரு தலைமைக் காவலர் மற்றும் மூன்று காவலர்கள் மீது மாவட்ட ஆட்சியாளரால் விரைவில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட உள்ளது.

சேலம் மாவட்டம், மேட்டூர் அணை காவல் நிலையத்தில் திரு. ராஜு என்பவருக்கு 25—1—1985 அன்று ஏற்பட்ட மரணம் குறித்து, கோட்டாட்சியரின் விசாரணை முடிந்துவிட்டது.

ஒரு தலைமைக் காவலர், மற்றும் இரு காவலர்கள் மீது மாவட்ட ஆட்சியரால் விரைவில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட உள்ளது.

தென்னாற்காடு மாவட்டம், செஞ்சி காவல் நிலையத்தில் 1—9—1985 அன்று சிந்தாமணி என்ற ஆறுமுகத்திற்கு ஏற்பட்ட மரணம் குறித்து, கோட்டாட்சியரின் விசாரணை முடிந்துவிட்டது.

ஒரு உதவி ஆய்வாளர், ஒரு தலைமைக் காவலர் மற்றும் ஐந்து காவலர்கள் மீது நீதிமன்றத்தில் மாவட்ட ஆட்சியரால் விரைவில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட உள்ளது. ஏன் நான் இவற்றை எல்லாம் குறிப்பிடுகிறேன் என்றால், காவல் நிலையத்தில் மரணங்கள் ஏற்பட்டுவிட்டது என்ற காரணத்தாலே, இந்த அரசு அவற்றையெல்லாம் மூடி மறைக்க வேண்டுமென்ற எண்ணத்திலே இல்லை.

அதுமட்டுமல்லாமல், பொதுமக்களோ, மாண்புமிகு உறுப்பினர்களோ, மற்றவர்களோ, ஆங்காங்கே காவல் துறையினர் மீது புகார்கள் செய்து, பல்வேறு குற்றச்சாட்டுகள் சாட்டும்



1986 மே 7] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

போது, அவற்றையும் விசாரித்து, அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க இந்த அரசு தவறவில்லை. அந்த வகையிலே கூட கடந்த நான்கு ஆண்டுகளில் அவர்கள் மீது பல்வேறு வழக்குகள் தொடுக்கபபட்டு, பல்வேறு நிலைகளில் உள்ளவர்கள் மீதும் வழக்குகள் தொடுக்கப்பட்டு, அவர்களுக்குத் தண்டனைகளும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அந்த வகையில் காணும்போது, காவல் துறையில் பல்வேறு நிலையில் இருப்பவர்கள் மீது வழக்குகள் தொடுக்கப்பட்டு, பணியிலிருந்து தள்ளப்பட்டவர்கள் மட்டும் "Removed from Service" 1982-ல் 87; 1983-ல் 170; 1984-ல் 199; 1985-ல் 167 பேர்கள். பணி நீக்கம் செய்யப்பட்டவர்கள் 1982-ல் 42 பேர்கள்; 1983-ல் 60 பேர்கள்; 1984-ல் 65 பேர்கள்; 1985-ல் 73 பேர்கள். பதவி இறக்கம் செய்யப்பட்டவர்கள் 1982-ல் 197; 1983-ல் 78, 1984-ல் 90, 1985-ல் 41; தற்காலிகப் பணி நீக்கம் செய்யப் பட்டவர்கள் 1982-ல் 450, 1983-ல் 283, 1984-ல் 97, 1985-ல் 50; ஊதிய குறைப்பு செய்யப்பட்டு தண்டனை கொடுக்கப் பட்டவர்கள் 1982-ல் 156, 1983-ல் 456, 1984-ல் 433, 1985-ல் 514; ஊதிய உயர்வைத் தள்ளி வைக்கின்ற தண்டனை கொடுக்கப் பட்டவர்கள் 1982-ல் 89, 1983-ல் 155, 1984-ல் 126, 1985-ல் 311; சென்ஷர்ஸ் தண்டனை கொடுக்கப்பட்டவர்கள் 1982-ல் 243, 1983-ல் 304, 1984-ல் 183, 1985-ல் 403; ரெப்ரிமென்ட் செய்யப் பட்டவர்கள் 1982-ல் 111; 1983-ல் 110: 1984-ல் 178; 1985-ல் 392; கருப்புப் புள்ளி வைக்கப்பட்டவர்கள்—கருப்புப் புள்ளி வைக்கப் பட்டவர்கள் என்றால், அவர்களுக்குப் பின்னால் பதக்கமோ, வேறு பல விருதுகளோ, வெகுமதிகளோ, அளிக்கும் எந்த ஒரு வாய்ப்பும் தரப்பட மாட்டாது. அந்த வகையிலே வைக்கப் பட்டவர்கள் மட்டும், 1982-ல் 1,312; 1983-ல் குற்றங்கள் சுமத்தப் பட்டு, புகார்கள் தரப்பட்டு, அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதன் காரணமாக, கருப்புப் புள்ளி வைக்கப் பட்டவர்கள் 1983-ல் 1,788; 1984-ல் 2,012; 1985-லே 1,841 பேர்கள்

(முற்பகல் 10-20)

கட்டாய ஓய்வு கொடுத்து வீட்டிற்கு அனுப்பப்பட்டவர்கள் 1982-ல் 20, 1983-ல் 16, 1984-ல் 13, 1985-ல் 24 பேர்கள். ஆகக்கூடி எல்லா வகையிலும் தண்டனை பெற்றவர்கள் என்று கணக்கு எடுத்து பார்த்தால், 1982-ல் 3.068 காவல் துறையினர் மீதும், 1983-ல் 3,420 பேர்கள் மீதும், 1984-ல்

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1986 மே 7

3,396 பேர்கள் மீதும் 1985-ல் 3,816 பேர்கள் மீதும் நாம் நடவடிக்கை எடுத்திருக்கிறோம். யாரையும் விட்டுவிடவில்லை. சில பல இடங்களில் அவைகளை நிரூபிக்கப்பட முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. நிரூபிக்கப்பட முடியாத காரணத்தினால் மேல் கோர்ட்டுக்கு போய் விடுதலை வாங்கி வந்துவிடுகிறார்கள். கட்டாய ஓய்வு கொடுக்கப்பட்டவர்கள் சில பேர் ஹைகோர்ட்டுக்கு ரிட் போட்டு திரும்பி வந்து மறுபடியும் அவர்களை வேலையில் சேர்க்க வேண்டுமென்ற உத்தரவினை பெற்று வந்துவிடுகிறார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்பட்டுவிடுகின்றது. ஆனால் இவ்வளவு நிலைமைகள் ஏற்படும்போது கூட, காவலர்கள் தங்களுடைய தன்னிலை மறந்து கடமையாற்றுகின்ற உணர்வோடு, தன்னம்பிக்கையோடு செயலாற்றுகிறார்கள். எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். எல்லா நிலைமையில் இருப்பவர்கள் எல்லாவற்றையும் பொறுத்துக்கொள்ள வேண்டிய தன்மையில் இருக்கிறார்கள். பலயிடங்களில் ஏசுகிறார்கள், தூற்று கிறார்கள், இழித்து சொல்கிறார்கள், கேலி பண்ணுகிறார்கள், கிண்டல் பண்ணுகிறார்கள். ஒருவரைச் சுற்றி நூற்றுக் கணக்கானோர் சேர்ந்து கொண்டு சில கூட்டங்களில், சில ஆர்ப்பாட்டங்களில், ஊர்வலங்களில் கேலி செய்கிறார்கள். இவற்றையெல்லாம் தாங்கிக்கொள்ள வேண்டும். அவர்களும் மனிதர்கள்தான் என்பதை நாம் உணர வேண்டும். இருந்தாலும் கூட அவர்கள் தன்னடக்கமாக தங்கள் பணிகளை ஆற்ற வேண்டிய நிலையில் இருந்தாலும் கூட அந்த வகையில் அவர்கள் தங்கள் உயிரையும் துச்சமாக மதித்து பாடுபட வேண்டியவர்களாக இருக்கிறார்கள். அதிலும் பின்வாங்காத அளவுக்கு பல பணிகளை ஆற்றிக் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்த போராட்டங்களை பார்ப்போமானால் 1982, 1983, 1984, 1985 ஆகிய இந்த 4 ஆண்டுகளில் மட்டும் கணக்கு எடுத்தால், சார்பு ஆய்வாளர், உதவி ஆய்வாளர் மட்டும் 4 பேர்கள் இப்படிப்பட்ட கலவரங்களில், ஊர்வலங்களில் இறந்திருக்கிறார்கள். தலைமை காவலர் 2 பேர்கள். காவலர்கள் மட்டும் 22 பேர்கள் இறந்து இருக்கிறார்கள். ஆக இந்த 4 ஆண்டுகளில் மரணம் அடைந்தவர்கள் 28 பேர்கள். படுகாயம் உற்று சில பல நாட்கள் ஆஸ்பத்திரியில் வைக்க வேண்டிய அளவுக்கு வந்து அவர்கள் சிகிச்சை பெற்றதற்கு பிறகு வெளியே வரவேண்டியவர்கள்— சிறு காயம் உற்று வீட்டிற்கு போகும் அவுட் பேஷன்ட் அல்ல—



1986 மே 7] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

இன் பேஷன்ட்டாக அனுமதிக்கப்பட்டவர்கள் மட்டும்
கணக்கு எடுத்துப் பார்த்தால் இந்த 4 ஆண்டுகளில்
உயர் அதிகாரிகள், டி.எஸ்.பி., எஸ்.பி., அளவிலே இருக்கின்ற
அதிகாரிகள் சேர்த்து 16 பேர்கள் படுகாயம் உற்று இருக்கிறார்கள்.
35 ஆய்வாளர்கள் படுகாயம் உற்று இருக்கிறார்கள். சார்பு
ஆய்வாளர், உதவி ஆய்வாளர் 116 பேர்கள், தலைமை காவலர்கள்
116 பேர்கள், காவலர்கள் 704 பேர்கள் ஆக மொத்தம் 987 பேர்கள்
காயம் உற்றிருக்கிறார்கள். இதை எதற்கு சொல்கிறேன்
என்றால் பொது மக்கள் அடிபடுகிறார்கள், மற்றவர்கள் அடிபடு
கிறார்கள் என்பதல்ல. காவலர்களும் அப்படிபட்டவைகளுக்கு
ஆளாக வேண்டிய அவசியம் ஏற்படுகின்றது. அதையும் தாங்கிக்
கொண்டு இந்த பணிகளை ஆற்ற வேண்டியவர்களாக இருக்
கிறார்கள். இனக் கலவரங்களைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்
அப்துல் சமத் அவர்கள் பேசினார்கள். மற்ற உறுப்பினர்களும்
பேசினார்கள். தமிழகத்தை பொறுத்தவரையில் எந்த சமய
மானாலும் கூட, அவர்கள் அண்ணன்—தம்பி என்ற உறவோடும்,
மைத்துனர் உறவோடும், மாமன்—மருமகன் என்ற உணர்வோடும்
எல்லா இடங்களிலும் பழகிக்கொண்டு வருகிறார்கள். அந்த
முறைதான் நீண்ட நெடுங்காலமாக தமிழகத்தில் இருந்துவரு
கிறது. அது எல்லோராலும் பாராட்டப்பட்டு வருகின்ற ஒன்று.
அந்த நிலைமை நீடிக்கப்பட வேண்டும் என்பது தான் நம்முடைய
விருப்பம். சில பல இடங்களில் சமய கலவரங்கள் நடைபெற்றுக்
கொண்டிருக்கின்றன. சில பல இடங்களில் ஜாதிக் கலவரங்கள்
நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆகவே அவற்றை
தவிர்க்க வேண்டும் என்பது தான் இந்த அரசினுடைய நோக்கம்.
அதற்குக் காரணமானவர்களை கண்டுபிடித்து அவர்களை கடுமை
யாக தண்டிப்பதுதான் நம்முடைய நோக்கம். சில இடங்களில்
உசுப்பி விடுகிறார்கள். எய்தவன் இருக்க அம்பு என்ன செய்யும்
என்று கூறுவதற்கு இணங்க ஒவ்வொரு இடத்திலும் உசுப்பி
விட்டுவிட்டு தனியாக ஒளிந்துகொண்டு விடுகிறார்கள். ஆனால்
பாதிக்கப்படுகிறவர்கள் சாதாரண பொது மக்கள் தான். பெரிய
மனிதர் என்று கருதப்படுகிறவர்கள் மாச்சரியத்தின் அடிப்
படையில் தங்களுடைய ஆதிக்கத்தை நிலைநாட்ட வேறு ஒரு
சமுதாயம் அல்லது வேறு ஒரு சமயத்தினுடைய ஆதிக்கம் வரக்
கூடாது, தங்களுடைய ஆதிக்கத்தை நிலைநாட்ட தங்களுக்குள்ள

பண வலிமையும், ஆதிக்கத்தையும் வைத்து மற்றவர்களை உசுப்பி விட்டு அவர்கள் தப்பித்து விடுகிறார்கள். அதன் காரணமாக பல கலவரங்கள் ஏற்பட்டு பெரும் அளவு முற்றி வருகின்றன. ஆனால் அது தமிழகம் முழுவதும் நடைபெறுகிறது என்று சொல்ல முடியாது. கன்னியாகுமரி மாவட்டத்தில் சில இடங்களிலும், இராமநாதபுரம் மாவட்டத்தில் சில இடங்களிலும், திருநெல்வேலி மாவட்டத்தில் சில இடங்களிலும், தென்னாற்காடு மாவட்டத்தில் ஓரிரு இடங்களிலும் இப்படி நடைபெற்று வருகின்றன.

இவைகள் எல்லாம் இல்லாத அளவுக்கு ஆங்காங்கே இருக்கிற பொதுமக்களும், சமய வகுப்பினரும் கொண்ட சமரசக் குழு அமைத்துக் கொண்டு அவர்கள் அமைதி ஏற்படுத்தவேண்டும். அந்தந்த சமயத்தினர் அவரவர்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்லலாம். அவரவர்கள் தங்கள், தங்கள் சமய கருத்துக்களைக் கடைப்பிடிக்க இந்த நாட்டினுடைய அரசியல் அமைப்புச் சட்டம் இடம் தருகிறது. வழிபட, நம்பிக்கை வைக்க, அவரவர்கள் கருத்துக்கேற்ப வழிபட நியாயமான அடிப்படையில் கருத்துக்களைச் சொல்ல முழு உரிமையும் கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்படித் தங்கள் சமயக் கருத்துக்களை எடுத்துச் சொல்ல உரிமை அளிக்கப்பட்டிருக்கிறதே தவிர, வேறு ஒரு சமயத்தைத் தாக்கியோ, மற்றவற்றைச் செய்தோ அவற்றின் மூலமாகக் கலவரத்தைத் தூண்டுவதற்கு இடம் கொடுக்கக் கூடாது. இந்த கொள்கையைத்தான் நாம் வைத்திருக்கிறோம். அப்படி யாராவது தூண்டுகிற நிலைமை இருந்தாலும் கூட அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று காவல் துறையினருக்குக் கூட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள்.

தென்னிந்தியாவைப் பொறுத்தவரையில் குறிப்பாகத் தமிழகத்தைப் பொறுத்த வரையில் ஆயிரம், ஆயிரம் ஆண்டு காலமாகக் கலாச்சாரங்கள் கெடாமல் இருப்பதற்கும், சிலையோ, சிற்பமோ, கட்டடக் கலையோ பாதிக்கப்படாமல் சேதம் ஏற்படாமல் இருப்பதற்கும், உரிய நிலைமைகள் இருந்து வருகின்றன. பல்வேறு சமயக் கலவரங்கள் ஏற்பட்டபோதும் சரி, பல்வேறு நிலைமைகள் ஏற்பட்டபோதும் சரி, மாச்சரியங்கள் ஏற்படாததன் காரணத்தால்தான் இங்கே அழிவுகள்





ஏற்படாமல் இருக்கின்றன. வட பகுதியில் போய்ப் பார்த்தால் சமய மாச்சரியங்கள், மத மாச்சரியங்கள் ஏற்பட்டு, ஏற்பட்டு அழிவுபடுத்தப்பட்டு, அழிவுபடுத்தப்பட்டு அங்கே கட்டடக் கலைகள் எல்லாம் கூட அழிக்கப்பட்ட பாங்கைக் காணலாம். ஆனால் இங்கே இருக்கின்ற இந்த நல்ல சூழ்நிலை மேலும், மேலும் காப்பாற்றப்பட வேண்டும். பிரச்சினைகள் ஏற்படாமல் இருக்க காவல் துறையினரும் நடவடிக்கை எடுப்பார்கள் என்றாலும் பொதுமக்களும், பொதுமக்களுக்குப் பிரதிநிதியாக இருப்பவர்களும், ஆங்காங்கு இருக்கின்ற பெருமக்களும் உதவி செய்வார்களேயானால் சிறு, சிறு கலவரங்கள் ஏற்படாமல் முளையிலேயே அவற்றைத் தடுத்துவிடுவதற்கான வாய்ப்புக்கள் ஏற்படும்.

நான் ஒரு உதாரணத்தைச் சொல்ல விரும்புகிறேன். நேற்று கூட ஒரு பெரிய நிகழ்ச்சி சென்ட்ரல் பக்கத்திலே நடந்தது. போக்குவரத்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறபோது சிக்னலில் பச்சை விளக்கு எரிந்தால் வாகனங்கள் போகலாம். சிவப்பு விளக்கு எரிந்தால் போகக் கூடாது என்பது தான் நடைமுறை. சென்ட்ரல் ஸ்டேஷன் பக்கத்தில் எப்படிப் பட்ட சூழ்நிலை இருக்கிறது என்பதை நாம் எல்லாம் நன்கு அறிவோம். நாலாபக்கமும் இருந்து ஏராளமான வண்டிகளும், வாகனங்களும் வந்துகொண்டும், போய்க்கொண்டுமிருக்கும் இடம் அது. பச்சை விளக்கு வந்தால் நகரலாம், சிவப்பு விளக்கு வந்தால் நின்றுவிடவேண்டும். ஆனால் சிவப்பு விளக்கு காட்டப்பட்டதற்குப் பிறகும் ஒரு பஸ் நகர்ந்துவிட்டதாகவும், காவல் துறையினர் தடுத்ததாகவும் அதிலே வாக்குவாதம் வந்ததாகவும் பத்திரிகையில் வந்திருக்கிறது. பத்திரிகைச் செய்தியை வைத்து எது உண்மை என்பதைக் கண்டுபிடிக்க முடியவில்லை. காவலர் பஸ்ஸை நிறுத்தி டிரைவர் சட்டையைப் பிடித்து இழுத்ததாகவும் அதனால் கோபம் ஏற்பட்டு காவலர் கன்னத்தில் டிரைவர் அறைந்தார் என்றும் பின்னர் இருவரும் கட்டிப் புரண்டு அடிதடி போட்டார்கள் என்றும் இரண்டு பேருக்கும் காயம் ஏற்பட்டு, இரண்டு பேரையும் இரண்டு ஆஸ்பத்திரிகளில் சேர்க்க வேண்டும் என்ற நிலைமை ஏற்பட்டதாகவும் இரண்டு ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப் பட்டிருக்கிறார்கள். இது ஒரு நிலைமை, இப்படி ஒரு

இன்டிவிஜுவல் தகராறு ஏற்படும்போது என்ன நிலைமை ஏற்படுகிறது என்பதை நாம் உணர வேண்டும் என்பதற்காகத்தான் இதை நான் சொன்னேன். இதிலே எது சரி, எது நியாயமில்லை என்பதைப் பொறுத்தவரையில் அந்த பஸ்ஸிலே இருந்தவர்களை விசாரித்தால்தான் உண்மை நிலைமை எல்லாம் தெரிய வரும். யார் பிரச்சினையை ஆரம்பித்தார்கள், எப்படி இது வந்தது என்பதை அப்போதுதான் தெரிந்து கொள்ள முடியும்.

ஆகவே பொதுமக்களும் ஒத்துழைப்பு தரவேண்டும். தனிப் பட்டவர்களுக்கும், தனிப்பட்டவர்களுக்கும் பிரச்சினைகள் ஏற்படுகிறபோது அந்தப் பிரச்சினைகளை உரிய வகையில் தீர்த்துக்கொள்ள வேண்டும், தீர்த்துக் கொள்ளவும் முடியும். தீர்க்கப்பட்டுவிடும் என்ற நம்பிக்கை ஏற்படுகிற அளவுக்குச் சூழ்நிலை ஏற்பட்டால் இப்படிப்பட்ட கலவரங்கள் எல்லாம் வராது. அந்த பஸ் விவகாரத்தைப் பொறுத்தவரையில் அதன் பின்னர் என்ன ஆயிற்று என்றால் 12 மணி வரையிலும் யாரும் பஸ்ஸில் போக முடியாத அளவுக்கு எல்லா பஸ்களையும் எல்லா இடங்களிலும் நிறுத்திவிட்டார்கள். அப்படி நிறுத்த வேண்டும் என்றால் டெப்போவுக்குக் கொண்டு போய் நிறுத்தினாலாவது பரவாயில்லை. ஆங்காங்கே அப்படி, அப்படியே நிறுத்திவிட்டதன் காரணமாக தாய்மார்கள், குழந்தைகள், நீண்ட தொலைவு போக வேண்டியவர்கள் எல்லோரும் போக முடியாமல் கஷ்டப் பட்டார்கள். பல பேர் பஸ்ஸிலேயே தூங்கிவிட்டார்கள், காலையில் எழுந்து பார்த்துக்கொள்ளலாம் என்று. இதை நான் எதற் காகச் சொல்கிறேன் என்றால் ஒரு டிரைவர் சம்பந்தப்பட்ட பிரச்சினை ஏற்பட்டதால் எல்லா டிரைவர்களும் சேர்ந்து பஸ்களை நிறுத்தியிருக்கிறார்கள். காவலருக்கு இப்படிப்பட்ட ஒரு நிலைமை ஏற்படுகிறது என்று சொல்லி எல்லா காவல் நிலையத்தையும் நிறுத்திவிட்டால் நிலைமை என்ன ஆகும்? எல்லா காவலர்களும் நாங்கள் வேலை செய்யவில்லை என்று சொன்னால் நிலைமை என்ன ஆகும்? எனவே இப்படிப்பட்ட நிலைமைகள் வரக்கூடாது.

கட்டுப்பாடான ஒரு சமுதாயம் இருக்கவேண்டும். ஆகவே தான் அப்படிப்பட்ட நிலைமைகள் வரும்போது, அதாவது இன்டி விஜுவலுக்கும், இன்டிவிஜுவலுக்கும் தகராறு வருகிறபோது,





அதாவது மாணவர்களுக்கும் பஸ் கண்டக்டருக்கும் தகராறு வந்தாலும் சரி, மாணவர்களுக்கும் டிரைவருக்கும் தகராறு வந்தாலும் சரி எந்த அளவுக்கு அவற்றைத் தீர்த்து வைக்க வேண்டும் என்பதில் அனைவரும் ஒத்துழைக்க வேண்டுமே தவிர பொதுமக்கள் பாதிக்கப்படுகிற அளவுக்கு நிலைமை வரக்கூடாது. அப்படிப்பட்ட கலவரங்கள் ஏற்பட இடம் தரக்கூடாது. வேறு பல மாநிலங்களில் ஏற்படுகின்ற கலவரங்களை விட நம்முடைய மாநிலத்தில் மிகவும் குறைவாகத்தான் வருகின்றன. என்றாலும் அவற்றையும் கட்டுப்படுத்த வேண்டும்.

(முற்பகல் 10-30)

சமுதாயத்தில் தொடர்ந்து குற்றங்களைச் செய்து வருபவர்களை சமுதாயத்தில் விட்டு வைத்தால், அதாவது சில குண்டர்கள் சில ஊர்களில், சில பகுதிகளில் விட்டுவைக்கப் பட்டால், அவர்கள் செய்கின்ற காரியத்தின் மூலம், சில வருபவர்களை சமுதாயத்தில் விட்டு வைத்தால், அதாவது சில குண்டர்களை விட்டு வைத்திருப்பதன் காரணமாக கொத்தவால் சாவடிக்கே சிலபல நேரங்களில் தொடர்ந்து ஆபத்து ஏற்பட்டுள்ளது. சில பகுதிகளில் அப்படி தொடர்ந்து ஆபத்து உள்ளது. அப்படிப்பட்ட பகுதிகளில் இந்த அரசின் குண்டர்கள் சட்டத்தின் கீழே மட்டும் கைது செய்யப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்ட நிலைமையிலே சென்ற ஆண்டு மட்டும் அதாவது 1985-வது ஆண்டிலே, தமிழகம் முழுவதும் சமுதாயத்திற்குத் தொல்லை கொடுக்கக் கூடாது என்பதற்காகவும், கலவரங்கள் வந்துவிடக்கூடாது என்பதற்காகவும், சமுதாயத்திலே எதையும் செய்யலாம் என்ற அடிப்படையில் சில பேர்கள் செய்து வருவதைத் தடுப்பதற்காகவும் சமூக விரோதிகள் பல மறைமுக செயல்களைச் செய்து வருகிறார்கள் என்று அதைத் தடுப்பதற்காகவும் தமிழகம் முழுவதும் 460 பேர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

சென்னை மாநகரத்திலே மட்டும் கலவரங்களை உண்டாக்காமல் தடுப்பதற்காக 187 பேர்கள் குண்டர்கள் சட்டத்தின் கீழே கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அதைப் போல தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழே 20 பேர்கள் கைது செய்யப்பட்டு அடைக்கப்பட்டிருக்கிறார்கள்.

வரதட்சிணைக் கொடுமைகளைப் பற்றியெல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். அது இப்போது நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டு வருகிறது. அதைச் சமுதாயமே பார்த்துதான் தடுக்க வேண்டும். ஆனாலும் அதில் இப்போது நடவடிக்கை எடுத்தேயாக வேண்டும் என்று மைய அரசும், மாநில அரசும் முனைப்போடு இருப்பதன் காரணமாக யார் மீது புகார் வந்தாலும் உடனேயே அந்தப் புகாரை ஏற்று, அந்தப் புகாருக்குக் காரணமாக இருப்பவர்கள் மீது, அது கணவனாக இருந்தாலும், மாமியாராக, மாமனாராக இருந்தாலும், அல்லது மற்றவர்கள் வேறு யாராக இருந்தாலும் அவர்கள் மீது நடவடிக்கை எடுத்துக் கொள்ளும் வகையில் அரசு தக்க நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறது என்பதையும் இந்த நேரத்திலே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இப்படிப்பட்ட பல்வேறு சிறப்புமிக்க பணிகள் மற்றவைகள் பற்றி ஏராளமாக எடுத்துச் சொல்லலாம். பல்வேறு வழக்குகளில் தமிழகக் காவல் துறையின் விரிவான, விரைவான பணிகள் என்னென்ன என்பதையும் என்னால் கோடிட்டுக் காட்ட முடியும். ஆனால் நேரம் இல்லாத காரணத்தால் அவற்றை எல்லாம் விடுகிறேன். எவ்வளவு வழக்குகள் 24 மணி நேரத்திற்குள்ளாக கண்டுபிடிக்கப்பட்டன? எப்படிக் கண்டுபிடிக்கப்பட்டன? அதன் பேரில் கைது செய்யப்பட்டு பொருள்கள் மீட்கப்பட்டு நீதிமன்றத்தின் முன்னால் நிறுத்தி வைக்கப்பட்டிருப்பவர்கள் எத்தனை பேர்கள் என்பது குறித்து 9 நிகழ்வுகளை என்னால் விளக்கிக் காட்ட முடியும். நேரம் இல்லாததால் விளக்காமல் விட்டு விடுகிறேன்.

சாட்சியம் கிடைத்தால் கண்டு பிடிக்கக் கூடிய நிலையிலும் கண்டுபிடிக்கப்பட முடியாது இருந்து வந்த சில வழக்குகளுக்கு சாட்சியங்களைப் பெறுவதற்கான முயற்சிகளைச் செய்ததன் காரணமாக சாட்சியங்கள் கிடைத்திருக்கின்றன. அந்தக் குற்றங்களை யார் செய்தார்கள் என்பதையும் கண்டுபிடித்திருக்கிறார்கள். ஆனால் அவர்கள் தலைமறைவாகி விட்டிருக்கிறார்கள். விரைவாக அவர்களைப் பிடிப்பதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. அந்த வகையில் 5 வழக்குகளைப் பற்றி இங்கே முக்கியமாக எடுத்துச் சொல்ல முடியும். ஆனால் நேரம் இன்மை காரணமாக அதையும் விடுக்கிறேன்.





துப்புத் துலக்கப்படாமல் இருந்து, பல நாட்களாக துப்பு துலக்குவதற்கு முயற்சிகளைச் செய்து, அந்த வழக்குகள் எல்லாம் விடுபட்டு விடுமோ என்ற அளவுக்கு எண்ணத் தகுந்தவைகளைப் பற்றியும் பல நாட்களாக, பல ஆண்டுகளாகக் கண்டுபிடித்து, அவர்களைக் கைது செய்து வழக்குகளைத் தொடரக் கூடிய அளவுக்கு, 6 வழக்குகள் இருக்கின்றன. நேரம் குறைவின் காரணமாக அவற்றையும் குறிப்பிடாமல் நான் விடுகிறேன். தமிழகக் காவல் துறை பற்றிய பல்வேறு பாராட்டுகளையும் தன்மைகளையும் மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். காவலர்கள் பதவி நியமனம் பற்றியும் மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே கருத்துக்களை எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். அதில் அனைத்து மாவட்டங்களிலும் சென்னையிலும் நியமிக்கப்பட்டவர்கள் 3,944 பேர்கள். தமிழ்நாடு சிறப்புக் காவல் படையில் நியமிக்கப்பட்டவர்கள் 542 பேர்கள். 1984-லே நியமிக்கப்பட்டவர்கள் மொத்தம் 4,486 பேர்கள்.

1985 ஆம் ஆண்டில் மாவட்டங்களிலும் சென்னையிலும் நியமிக்கப்பட்டவர்கள் 5,917 பேர்கள், தமிழ்நாடு சிறப்புக் காவல் படையில் நியமிக்கப்பட்டவர்கள் 2,400 பேர்கள். 1985 ஆம் ஆண்டிலே மொத்தம் நியமிக்கப்பட்டவர்கள் 8,317 பேர்கள். ஆக மொத்தம் 12,803 பேர்கள். 1985 ஆம் ஆண்டிற்குள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவர்களுக்கு 6 மாத காலம் பயிற்சி தந்து, அவர்கள் முறைப்படி பணிகளில் ஈடுபடுத்தப்படுவார்கள்.

சப்-இன்ஸ்பெக்டர்கள், ரிசர்வ் சப்-இன்ஸ்பெக்டர்கள், மற்றும் தமிழ்நாடு சிறப்புக் காவல் படை சப்-இன்ஸ்பெக்டர் பதவிகளுக்கான தேர்வு பற்றியும் இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர் தெரிவித்திருக்கிறார்கள்.

அரசு ஆணையின்படி 1976, 1978 ஆண்டுகளில் இத்தேர்வுகள் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பட்டன. பிறகு இத்தேர்வுகளை காவல் துறையே நடத்த வேண்டுமென அரசு ஆணையிட்டது. 1981 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் சப்-இன்ஸ்பெக்டர் பதவிகளுக்கு நேரடித் தேர்வு

குறித்து விளம்பரம் செய்யப்பட்டது. அதே ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் உடல் திறன் தேர்வு போட்டிகள் நடத்தப்பட்டன. இதில் தேறிய நபர்களுக்கு 18—9—1981-ல் எழுத்துத் தேர்வு நடத்தப்படுவதாக இருந்தது. தேர்வு முறையில் சில மாற்றங்கள் செய்ய வேண்டுமென அரசு விரும்பியதால் இத்தேர்வு நிறுத்தி வைக்கப்பட்டது. அதற்குப் பிறகு, பல்வேறு மாற்றங்களுக்குப் பிறகு, கடைசி நிலைமையில் 5,200 பேர்கள் 40 சதவீதம் பல டெஸ்டுகளில் மார்க் பெற்றிருந்தவர்களுக்கு இறுதியாக தமிழகம் முழுவதும் தேர்வுகள் நடத்தப்பட்டு விட்டன. 7,914 பேர்கள் எழுத்துத் தேர்வில் கலந்து கொண்டனர். ஒரு நபருக்கு இரண்டு விடைத்தாள்கள் விதம் சுமார் 16 ஆயிரம் விடைத் தாள்கள் திருத்தப்பட வேண்டியிருந்தன. இந்த விடைத் தாள்களைத் திருத்தும் பணி காவல் துறை துணைத் தலைவரிடம் ஒப்படைக்கப்பட்டது. அன்றாடம் சட்டம், ஒழுங்கு, மற்றும் இதர அலுவல்களுக்கிடையே விடைத்தாள்களைத் திருத்தும் கூடுதல் வேலைகளை மேற்கொண்டதன் காரணமாக சிறிது காலத் தாழ்வு ஏற்பட்டிருக்கிறது. விடைத்தாள்களைத் திருத்தும் பணி முடிந்த பிறகு மதிப்பெண்கள் சரிபார்க்கப் பெற்றன. இந்த வேலைகள் இன்னும் இரண்டு மாத காலத்திற்குள் பூர்த்தியடைந்து விடும். 5,200 பேர்கள் 40 சதவீதத்திற்கு மேலே வாங்கியிருக்கிறார்கள். 750 பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். ஒரு இடத்திற்கு ஐந்து பேரை நேர்முகத் தேர்விற்கு அழைக்கலாம் என்ற அடிப்படையில் இந்தத் தேர்வுகள் விரைவில் இரண்டு மூன்று மாதத்திற்குள் நடத்தப்பட்டு இவர்கள் நியமிக்கப்படுவார்கள் என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

இங்கே பல்வேறு பிரச்னைகளை எல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் எழுப்பினார்கள். அவற்றில் சுருக்கமாக சிலவற்றை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் பேசுகிறபோது சேலம், கிச்சிப்பாளையம் காவல் நிலைய லாக்கப்பில் தெய்வமணி மரணம் பற்றி எடுத்துச் சொன்னார்கள். ஏற்கனவே இதுபற்றி எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. நீதி விசாரணையின் முடிவுகள் தெய்வமணி தூக்கு மாட்டிக்கொண்டு தற்கொலை செய்து கொண்டதாக தீர்மானிக்க





கற்பழிப்புக்கான அறிகுறிகளைத் தீர்மானிக்க இயலவில்லை.
காவல் துறையின் கவனக் குறைவின் காரணமாகத்தான் இது
நடந்துள்ளது. காவல் துறை பெரிய அதிகாரிகள் முழுமையாக
விசாரணை செய்ய வேண்டுமென்று அவர் பரிந்துரை
செய்துள்ளார். இந்தச் சம்பவத்தில் உண்மையைத் தெரிந்து
கொள்ள புலன் விசாரணை தமிழகக் குற்றப் புலன் ஆய்வுத்
துறையிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. காவல் துறை
கண்காணிப்பாளர் நேர்முக புலன் விசாரணை
மேற்கொண்டார்.

குற்றப் புலனாய்வுத் துறை உயர் அதிகாரியின் புலனாய்வின்
முடிவில், கூறப்பட்ட குற்றச்சாட்டுகள் யாவும் மிகைப்படுத்திக்
கூறப்பட்டுள்ளன. இச்சம்பவம் சந்தேகத்திற்கு இடமின்றி
தற்கொலைதான். காவல் துறையினரின் கவனக் குறைவு
உள்ளது என்று அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். கவனக்
குறைவாக இருந்ததற்குக் கீழ்க்கண்ட காவல் துறையினர்
11—3—1983-லிருந்து தற்காலிகப் பணி நீக்கத்தில் உள்ளனர்.
திரு. ரெங்கசாமி, உதவி ஆய்வாளர்; திரு. சந்திரன், உதவி
ஆய்வாளர்; காவலர் பெருமாள்; காவலர் மோகன்ராம்;
முதல்நிலைக் காவலர் சின்னசாமி. இதுகுறித்து அறிக்கை குற்றப்
புலனாய்வுத் துறையினரால் அரசிற்கு 2—1—1986 அன்று
அனுப்பப்பட்டுள்ளது. அவர்கள் மீது மேற்கொண்டு நடவடிக்கை
எடுப்பதற்கு அரசு தக்க பரிசீலனை செய்து வருகிறது.

பெரம்பலூர் மல்லிகா, காவலர் விவகாரம் பற்றி எடுத்துச்
சொன்னார்கள். திருமதி மல்லிகா திருமலைச் செட்டியார்
என்பவருடைய மனைவி. இருவரும் பெரம்பலூரில் வசிக்கிறார்கள்.
பெரம்பலூர் காவல் நிலையத்தைச் சார்ந்த காவலர்கள்
பெரியசாமி, அருணாசலம் இருவரும் 21—1—1986 அன்று
பெரம்பலூர் பேருந்து நிலையத்தில் இரவு ரோந்து அலுவலில்
இருந்தனர். பேருந்து நிலையத்தருகே திருமதி மல்லிகா தனியாக
நின்று கொண்டிருந்தார். காவலர்கள் விசாரிக்கின்றனர்.
கணவனுக்கும் மனைவிக்குமிடையே சண்டையெனவும், வெளியூர்
செல்ல பேருந்து நிலையத்தில் நிற்பதாகவும் திருமதி மல்லிகா
கூறியிருக்கிறார். அவரைக் கண்டித்து வீட்டிற்கு அனுப்பி
யிருக்கிறார்கள். அடுத்த நாள் திருமலைச் செட்டியார் காவலர்கள்

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1986 மே 7

தம் மனைவியிடம் முறைகேடாக நடக்க எத்தனித்ததாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார், மேலதிகாரிகளுக்கும் புகார்கள் அனுப்பியுள்ளார். திருமலைச் செட்டியார் மற்றும் சம்பந்தப்பட்ட அனைவரும் விசாரிக்கப்பட்டு, புகார்கள் உண்மைக்குப் புறம்பானவை எனத் தெரிய வருகிறது. மேல் நடவடிக்கை தேவையில்லை என திருமலைச் செட்டியார் எழுதிக் கொடுத்து விட்டு சென்றுவிட்டார். இருப்பினும் திருச்சி சரக காவல் துறை துணைத் தலைவர் இதுபற்றி நடவடிக்கை மேற்கொண்டுள்ளார். திருமலைச் செட்டியார் எழுதிக் கொடுத்த மனுவை திரும்பப் பெற்றுக் கொண்டிருக்கிறார். இருந்தாலும் உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதன் காரணமாக மேற்கொண்டு விசாரணை செய்து தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது.

சென்னை எழும்பூரில் பாலாஜி என்ற சிறுவன் மரணம் குறித்து மாண்புமிகு உறுப்பினர் திருமதி யசோதா அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். சென்னை எழும்பூரில் ஆல்பட் திரையரங்கத்திற்கு எதிரில் உள்ள நடைபாதையில் திரு. சாமந்தி, அவர் மனைவி மற்றும் நான்கு குழந்தைகள், மகன் பாலாஜி (3 வயது) ஆகியோருடன் 17—4—1986 அன்று இரவில் படுத்து உறங்கிக் கொண்டிருந்தார்கள். மறுநாள் 18—4—1986 அன்று அதிகாலை மனைவி கிருஷ்ணவேணி எழுந்து பார்த்தபோது, மகன் பாலாஜியைக் காணவில்லை. இதுகுறித்து எழும்பூர் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டது. வழக்குப் பதிவு செய்யப் பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. 20—4—1986 அன்று காலை சுமார் 7 மணியளவில் எழும்பூர் உயர்நிலைப் பள்ளி விளையாட்டு மைதானத்தில் ஒரு ஆண் குழந்தையின் உடல் புதைக்கப்பட்டு இருப்பதாக தகவல் கிடைத்தது. காணாமல் போன சிறுவன் பாலாஜியின் சடலம் எனத் தெரிய வந்தது. பிரேத பரிசோதனையில் கழுத்து நெறிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டதாகத் தெரிகிறது. கொலைக்கான காரணம் தெரிய விசாரணை தீவிரமாக்கப்பட்டுள்ளது. சில செய்தித்தாள்களில் இது நரபலி எனச் செய்தி வந்துள்ளது. இருந்தாலும் புலன் விசாரணை மூலமாக ஆள் கண்டுபிடிக்க முடியவில்லை. தொடர்ந்து விசாரணை நடந்து கொண்டிருக்கிறது.



1986 மே 7] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

இராமநாதபுரம் நீதிமன்றத்தில் எதிரிகள் கைது பற்றி சொல்லப்பட்டது. 11—4—1986 அன்று முற்பகல் 11-45 மணியளவில் மதுரை நகர் ஸ்காட்ச் ரோட்டில் சந்திரன் என்பவர், அவருடைய இறைச்சிக் கடை முன்பு மார்க்கர் மணி மற்றும் அவருடைய மகன்கள் ஜெயராமன், பாஸ்கரன், தங்கவேலு ஆகியோரால் கொலை செய்யப்பட்டார். இந்தச் சம்பவம் பற்றி

(முற்பகல் 10-40)

முருகாண்டி என்பவர் கொடுத்த தகவலின் பேரில் மதுரை, பி 4 காவல் நிலைய குற்ற எண் 961/86 இந்திய தண்டனைச் சட்டப் பிரிவு 341, 302-ன் கீழ் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டு உள்ளது. இந்த வழக்கில் பி-4 காவல் நிலைய ஆய்வாளர் விசாரணையை மேற்கொண்டார். குற்றவாளிகளைக் கண்டு பிடிக்க பி-4 காவல் நிலையத்தின் சட்டம் ஒழுங்குப் பிரிவு உதவி ஆய்வாளர் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது. இந்தச் சம்பவத்திற்குப் பின் குற்றவாளிகள் தலைமறைவாயினர். 14—4—1986 அன்று குற்றவாளிகளைப்பற்றி தகவல் அறிந்த பின், உதவி ஆய்வாளர் திரு. சி. தங்கராஜ் ஒரு தலைமைக் காவலர், மற்றும் 3 காவலர்களுடன் இராமநாதபுரத்திற்கு அருகில் உள்ள மதினா என்ற கிராமத்திற்குக் குற்றவாளிகளைத் தேடும் பொருட்டு சென்றார்கள். பின்னர் குற்றவாளிகள் இராமநாத புரத்தில் உள்ள நீதிமன்றத்தில் சரண் அடையச் செய்வதாகத் தகவல் அறிந்த, காவல் குழுவினர் இராமநாதபுரம் நீதிமன்றத் திற்குச் சென்று, வெளியிலே காத்து இருந்தனர். 15—4—1986 அன்று குற்றவாளிகள் ஜெயராமன், பாஸ்கரன், தங்கவேல் ஆகிய மூன்று பேர்களும் நீதிமன்றத்திற்கு வரும்போது, குற்றவாளி ஜெயராமன் காவல் குழுவினால், நீதிமன்றத்திற்கு மேற்குப் புறமுள்ள படிக்கட்டருகில் காலை 10-15 மணியளவில் கைது செய்யப்பட்டார். மீதமுள்ள இரு குற்றவாளிகள் நீதிமன்றத் திற்குள் தப்பியோடி விட்டதால் அவர்கள் கைது செய்யப்பட வில்லை. கைது செய்யப்பட்ட குற்றவாளி திரு. ஜெயராமன் மாலை 2-00 மணியளவில் மதுரைக்குக் கொண்டு வரப்பட்டு மதுரை இரண்டாம் நிலை குற்றவியல் நீதிமன்றத்தில் காவலில் வைக்கப்பட்டார். குற்றவாளி நீதிமன்றத்திற்கு வெளியே படிக் கட்டருகில்தான் கைது செய்யப்பட்டுள்ளார், நீதிமன்றத்திற்குள்

அல்ல. மேலும் குற்றவாளியும் இது குறித்து மதுரை நீதிமன்ற நடுவரிடம் எந்தவிதப் புகாரும் கூறவில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து கம்மாபட்டி ராமர் விவகாரம் பற்றி பேசினார்கள். காமராஜர் மாவட்டம், கம்மாபட்டியைச் சார்ந்த திரு. ராமர் என்பவர் மகாலிங்கம் என்பவரின் மனைவியோடு தகாத உறவு வைத்திருந்ததாக கிராம பஞ்சாயத்தில் ராமருக்கு அபராதம் விதிக்கப்பட்டது. கடந்த 17—2—1986 அன்று 4.30 மணியளவில் மகாலிங்கம், ராமரை முழங்கால் பகுதியில் வெட்டினார். இது குறித்து ராஜபாளையம் தெற்குக் காவல் நிலையத்தில் குற்ற எண் 110/86 இந்திய தண்டனைச் சட்டம் 324-ன் கீழ், வழக்கொன்று பதியப்பட்டு விசாரணையில் உள்ளது. ராமரின் உறவினர் ராமசாமி என்பவர் மங்காபுரத்தில் குடியிருக்கிறார். இவர் கம்மாபட்டியைச் சார்ந்தவர். 16—4—1986 அன்று மதியம் ஒரு மணிக்கு ராமனின் முன் விரோதம் காரணமாக மகாலிங்கம், சதுரகிரி, சுந்தரம் என்பவர்கள் ராமசாமியை வெட்டினார்கள். இது குறித்து ராஜபாளையம் (தெற்கு) காவல் நிலைய குற்ற எண். 239/86 இந்திய தண்டனைச் சட்டப் பிரிவு 324 மற்றும் 336-ன் கீழ் வழக்கு பதியப்பட்டு, மகாலிங்கம் கைது செய்யப் பட்டார். சதுரகிரி மற்றும் சுந்தரம் தலைமறைவாக உள்ளார்கள். வழக்கு விசாரணையில் உள்ளது. அவர்கள் தேடப்பட்டதற்குப் பிறகு அவர்கள் மீதும் வழக்கு தொடரப்பட்டு முறையான அளவில் விசாரிக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருச்சி பாலக்கரை துளசி மரணம் பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு நல்லமுத்து அவர்கள் குறிப்பிட்டார்கள். திருச்சி பாலக்கரை ஆட்டுக்காரத் தெருவில் செல்வராஜ் குடியிருக்கிறார். துளசி, அவருடைய மனைவி, வயது 23. 31—7—1985 அன்று மாலை 5.30 மணிக்கு துளசி தனது வீட்டில் தூக்கு மாட்டி தற்கொலை செய்து கொண்டார். துளசியை அவருடைய அக்காள் வீட்டுக்குச் சென்று வர கணவன் அனுமதிக்கவில்லை. அக்காள் கணவனுடன் துளசிக்குக் கள்ளத் தொடர்பு இருந்ததாகவும் தெரிகிறது. இந்த மரணம் குறித்து பாலக்கரை காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டு விசாரணையில்





உள்ளது. 5—8—1985 அன்று இறந்து போன துளசியின் சகோதரர் ராமசாமி, வரதட்சணைக் கொடுமையால் துளசி கொல்லப்பட்டார் என்று புகார் செய்தார். விசாரணையில் வரதட்சணைக் கொடுமைக்கு ஆதாரம் இல்லை என்று தெரிய வருகிறது. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர்கள் கூறிய புகாரை வைத்துக்கொண்டு, மேற்கொண்டு விசாரித்து வருகிறார்கள் என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து பக்தவச்சலம் காலனி தளபதி கொலையைப் பற்றி சொன்னார்கள். தளபதி என்பவர் 24—4—1986 அன்று இரவு மாதவரம் மூலக்கடையில் சினிமா பார்த்துவிட்டு அவரது நண்பன் செல்வம் என்பவருடன் வீட்டுக்குத் திரும்பி வந்து கொண்டிருந்த போது, கணேசன், அசோக், போஸ் ஆகிய மூவரும் வழிமறித்து தளபதியையும் செல்வத்தையும் கத்தியால் தாக்கினார்கள். காயமுற்ற தளபதி சம்பவம் நடந்த இடத்திலேயே இறந்து போனார். செல்வம் மாதவரம் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார். இந்த வழக்கு பின்னர் செம்பியம் காவல் நிலையத்திற்கு மாற்றப் பட்டது. குற்ற எண். 313/86 இந்திய தண்டனைச் சட்டப் பிரிவு 302-ல் பதிவு செய்யப்பட்டது. எதிரிகளில் கணேசன் 30—4—1986-லும், போஸ் 5—5—1986 அன்றும் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டு உள்ளனர். மூன்றாவது எதிரி அசோக் 29—4—1986 அன்று நீதிமன்றத்தில் சரணடைந்தார். இவ்வழக்கில் தொடர்புடைய நான்காம் எதிரி நீலா என்கிற நீலகண்டன் தலைமறைவாக உள்ளார். இறந்து போன தளபதிக்கும் எதிரி கணேசனுக்கும் கள்ளச் சாராய விற்பனை தொடர்பாக முன்விரோதம் இருந்தது என்று விசாரணையில் தெரிய வருகிறது. வழக்கு புலன் விசாரணையில் தொடர்ந்து இருந்து வருகிறது.

அதேபோன்று வியாசர்பாடி கட்டாரி கொலை வழக்கு. வழக்கு விசாரணையில் உள்ளது. இவர்களுக்கு இருந்த முன் விரோதம் இந்தக் கொலைக்குக் காரணமாக இருக்கிறது. 21—4—1986-ல் எல்லா எதிரிகளும் கைது செய்யப்பட்டு நீதி மன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளனர். எதிரிகள் தற்போது சிறையில் உள்ளனர்.

தஞ்சை மாவட்டம், சீர்காழி காவல் நிலையத்தில் மரணம் பற்றி எடுத்துச் சொன்னார்கள். இதுகுறித்து வழக்கு சீர்காழி காவல் நிலையக் குற்ற எண். 83, 87/86-ல் பதிவு செய்யப்பட்டு இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 302-க்கு மாற்றப்பட்டது. பால கிருஷ்ணன் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளார். விசாரணையில் கலியமூர்த்தியை பாலகிருஷ்ணன் அடித்ததால் தான் இறந்தார் என்று தெரிய வருகிறது. இதற்கு பாலகிருஷ்ண னிடமிருந்து கைப்பற்றப்பட்ட புகைப்படங்களும், டேப் ரெக்கார்டரில் பதிவு செய்யப்பட்ட வாக்கு மூலங்களும், மற்ற சாட்சிகளாகவும் சான்றுகளாகவும் உள்ளன. வழக்கு புலன் விசாரணையில் இருந்து வருகிறது.

சென்னை-வீரம்மாள் சாலை விபத்துபற்றி குறிப்பிட்டார்கள். சாலை விபத்துக்குக் காரணமான லாரி பற்றிய தடையம் கிடைத் துள்ளது. லாரி ஒன்று அவரைத் தாக்கி இறந்ததாகச் செய்தி வந்தது, தடையம் கிடைத்துள்ளது. புலன் விசாரிக்கப்பட்டு, தீவிரமாக்கப்பட்டு லாரியைக் கைப்பற்ற நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டு வருகிறது.

பரங்கிப்பேட்டை—வீரமணிமீது வழக்கு தொடுக்கப்பட்டது பற்றி குறிப்பிட்டார்கள். வீரமணியும் அவரது சகோதரரும் 26—3—1986 அன்று கைது செய்யப்பட்டுள்ளனர். 26—3—1986 அன்று தேவராஜ் நீதிமன்றத்திலே சரண் அடைந்தார். கைது ஆனவர்கள் அனைவரும் தற்போது ஜாமீனில் உள்ளனர். மேற்படி வழக்கு விசாரணை முடிந்து உள்ளது. குற்றப் பத்திரிகை விரைவில் தாக்கல் செய்யப்படவிருக்கிறது.

அமுதா—தங்கச் சங்கிலி பறிப்புபற்றி குறிப்பிட்டார்கள். இது குறித்து வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இதுபற்றி தீவிர விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தேனாம்பேட்டை—மோகன் தற்கொலையைப்பற்றி எடுத்துச் சொன்னார்கள். இறந்தவரின் தந்தை கொடுத்த புகாரின் பேரில், வழக்கு ஒன்று திருவான்மியூர் காவல் நிலைய குற்ற எண். 326/86-ன் கீழ் குற்ற விசாரணை சட்டம் 129-ன் கீழ் பதிவு செய்யப் பட்டது. மோகனின் மரணத்திற்கு தேனாம்பேட்டை காவல்





நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட வழக்குக்கும் சம்பந்தம் இல்லை என்று தெரிகிறது. ஆனால் இதுபற்றி விசாரணை நடைபெற்றுக்கொண்டு வருகிறது.

சூலூர் கோயில் சிலை திருட்டு பற்றி மாண்புமிகு உறுப்பினர் சுலைமான்கான் அவர்கள் குறிப்பிட்டார்கள். கோயம்புத்தூர் மாவட்டம், சூலூரிலுள்ள திருவேங்கடநாத பெருமாள் கோயிலில் திருட்டு நடந்துள்ளது. 1985 ஆம் ஆண்டு இந்தக் கோயிலில் 4 சிலைகள் களவாடப்பட்டன. இவற்றின் மதிப்பு சுமார் நான்கு லட்சம் ஆகும். இதுகுறித்து சூலூர் காவல் நிலையத்தில் 162/85-ன்கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு விசாரணை மேற் கொள்ளப்பட்டது. பழைய குற்றவாளி முருகையன் உட்பட மொத்தம் 6 நபர்கள் கைது செய்யப்பட்டு அவர்கள் கொடுத்த தகவலின் பேரில் காணாமல்போன சிலைகள் கைப்பற்றப்பட்டு விட்டன. வழக்கு விசாரணையில் உள்ளது.

அடுத்து, பூந்தமல்லி, சுப்பிரமணியசுவாமி கோவில் சிலை திருட்டு பற்றியும் குறிப்பிட்டார்கள். செங்கை மாவட்டம், பூந்தமல்லியை அடுத்த தென்னீர்குப்பத்தில் உள்ள சுப்பிரமணிய சுவாமி கோயிலில் 2—6—1985-க்கு முன்பு தெய்வயானை, சண்டிகேஸ்வரர், மாணிக்கவாசகர் சிலைகள் திருடுபோய்விட்டன. 3—6—1985 அன்று திரு. நாகராஜ குருக்கள் கொடுத்த புகாரின் மீது பூந்தமல்லி காவல் நிலையத்தில் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. சிலைகளின் மதிப்பு ரூபாய் 7,500. 6—6—1985 அன்று காடுவெட்டியைச் சார்ந்த குற்றவாளிகள். பாபு, ஜெயபால், மோகன் ஆகியோர் கைது செய்யப்பட்டு களவுபோன சிலைகளும் மீட்கப்பட்டுவிட்டன. 28—6—1985 அன்று நீதிமன்றத்தில், குற்றவாளிகள்மீது குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

பரமக்குடி கோயில் சிலை திருட்டு பற்றி குறிப்பிட்டார்கள். 1980 ஆம் ஆண்டு பரமக்குடி காவல் நிலையத்திற்குட்பட்ட சரகத்தில் உள்ள அங்காளபரமேஸ்வரி அம்மன் கோயிலில் 15—3—1980-ல் 3 சிலைகள், நடராஜர், சிவகாமி அம்மன், சௌந்தரநாயகி அம்மன் களவாடப்பட்டன. இதுகுறித்து பரமக்குடி காவல் நிலைய குற்ற எண் 131/80-ன்கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு குற்றவாளி

பொன்னுசாமி என்பவரைக் கைது செய்து சிலைகள் மீட்கப்பட்டுள்ளன. நீதிமன்றத்திலே வழக்கு தொடரப்பட்டுள்ளது. அதன்பேரில் விசாரணை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

உத்தமசேரி கொலையைப்பற்றியும் குறிப்பிட்டார்கள். திருச்சி மாவட்டம், சீரங்கம் காவல் நிலையத்தைச் சேர்ந்த உத்தமசேரி கிராமத்தில் செங்கமலைப்பெருமாள் கோயில் உள்ளது. 6—8—1985 அன்று கோயிலுக்குள் திருடர்கள் புகுந்து கோயில் குருக்கள் கிருஷ்ணமூர்த்தியை, 25 வயது உடையவர், அவரையும், கோயில் நிர்வாகி ராமர் என்பவரையும் கொலை செய்துவிட்டு சிலைகளைத் திருடிச் சென்றுவிட்டனர். சிலைகளின் மதிப்பு ரூபாய் 1 லட்சமாகும். சீரங்கம் காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டு, புலன் விசாரணையில் உள்ளது. இவ் வழக்கில் துப்புத் துலக்க தனியாக ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. திருடியவர்கள் தலைமறைவாக உள்ளனர்.

மதுரை மாவட்டம் வலையங்குளம் கொள்ளைபற்றி குறிப்பிட்டார்கள். வழக்கு 5—11—1985 அன்று நீதி மன்றத்தில் குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. இதன்மூலமாக வலையன்குளத்தைச் சார்ந்த வடிவேல், சக்கரை, குருவன் ஆகிய மூவரும் 29—4—1985 அன்று கைது செய்யப்பட்டு, குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கு நிலுவையில் உள்ளது.

(முற்பகல் 10-50)

21—3—1985 அன்று வலையன்குளத்தைச் சேர்ந்த வீரண்ணன் என்பவருடைய மனைவியின் தாலி, டார்ச் லைட், ரொக்கம் ரூபாய் 3,300 ஆகியவை கொள்ளையடிக்கப்பட்டன என்ற புகாரின் மீது வழக்கு பதியப்பட்டு, புலன் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இதற்காக ஒரு தனி குழு அமைக்கப்பட்டது. தீவிர புலன் விசாரணைக்குப் பின் 18—3—1986 அன்று பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்தைச் சேர்ந்த முனியாண்டி, குருசாமி, ஆதிராஜா பாக்கியம், மகாலிங்கம் ஆகியோர்கள் கைது செய்யப்பட்டு, கொள்ளையடிக்கப்பட்ட பொருட்கள் தாலியும், டார்ச் லைட்டும் கைப்பற்றப்பட்டன. வழக்கு புலன் விசாரணையில் உள்ளது.





பேரணாம்பட்டு ஏகாம்பரம் மரணம் பற்றியும் இங்கே சொல்லப்பட்டது. 5—4—1986 அன்று இந்த திருட்டு பற்றி ஏகாம்பரம் விசாரணைக்காக காவல் நிலையத்திற்கு கொண்டு வரப்பட்டார். விசாரணைக்குப் பின் அன்று இரவு அனுப்பப்பட்டார். மறு நாள் காலை 6—4—1986 அன்று திரு. கிருஷ்ணசாமி என்பவர், தமக்கு சொந்தமான வயலருகில் சாலையோரத்தில் உள்ள புளிய மரம் ஒன்றில் ஏகாம்பரம் தூக்கில் தொங்கிக் கொண்டிருப்பதாக காவல் நிலையத்தில் கூறினார். இது குறித்து வழக்கொன்று பதியப்பட்டது. காவல் துறையினர் அடித்துக் கொன்றதாக இறந்து போன ஏகாம்பரத்தின் தந்தையின் குற்றச்சாட்டு புகார் செய்துள்ளார். திருப்பத்தூர் வருவாய் கோட்ட ஆட்சியர் இச் சம்பவத்தில் விசாரணை மேற்கொண்டுள்ளார். விசாரணையின் முடிவு வந்த பிறகு தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மதுரை மாவட்டம் தேவாரம் காவல் நிலையம், திரு. தனுஷ்கோடி மரணம் பற்றி திரு. சித்தன் அவர்கள் குறிப்பிட்டார்கள். இது குறித்து பவுன்தாய் கொடுத்த புகாரின் பேரில் தேவாரம் காவல் நிலைய குற்ற எண் 253/85-ல் வழக்கு பதியப்பட்டது. விசாரணைக்காக தனுஸ்கோடி 13—9—1985 அன்று காவல் நிலையத்திற்கு கொண்டுவரப்பட்டு காவலில் வைக்கப்பட்டார். அவர் காவல் நிலையத்திலுள்ள கழிவறையில் தூக்குமாட்டி தற்கொலை செய்து கொண்டார். இது தொடர்பாக தேவாரம் காவல் நிலைய சார் ஆய்வாளர், முதல் நிலைக் காவலர் மற்றும் இரண்டு காவலர்கள் தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். இது குறித்து மதுரை மாவட்ட வருவாய் அதிகாரி புலன் விசாரணையை மேற்கொண்டுள்ளார். அவர் அறிக்கை வந்த பிறகு தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பொன்னேரி முன்சீப் கோர்ட் நீதிபதி தாக்கப்பட்டது பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் குறிப்பிட்டார்கள். திரு. ப்ரெட்ரிக் கனகராஜ், வயது 42. பொன்னேரி முன்சீப் கோர்ட்டில் நீதிபதி ஆவார். இவர் சென்னை கீழ்ப்பாக்கம் கார்டன் காலனியில் வசிக்கிறார். தினசரி சென்ட்ரலிலிருந்து ரயில் மூலம் பொன்னேரி நீதி மன்றத்திற்குச் சென்று,

ஆனால் அவர்கள் சொல்லிய உடனே விசாரிக்கப்பட்டது. அந்த சுவாமிமலைக் கோவிலிலே யானை காணாமல் போனதாக அங்கே இருக்கின்ற காவல் நிலையத்தில் இது பற்றி எந்தப் புகாரும் சொல்லப்படவில்லை. எதுவும் புகார் இல்லாத காரணத்தால் அதுபற்றி விசாரிக்கப்படவேண்டிய நிலைமை இல்லை. ஆகவே சில சமயங்களில் யானைப்பாகன் அதை ஓட்டிக்கொண்டு, வருமானத்திற்காக, வேறு ஊர்களுக்கு எடுத்துக் கொண்டு போய் விடுகிறார்கள். அப்படி இருக்கும்போது, இப்போது கூட, சில நாட்களுக்கு முன் பத்திரிகையில் ஒரு செய்தி வந்தது. வெளியூருக்குக் கொண்டு வந்த ஒரு யானை மிரண்டு அந்த ஊரையெல்லாம் ஒரு கலக்கு கலக்கி, கடைசியில் அந்த பாகன் வந்து, மரத்தின் மேலே ஏறி, யானை முதுகின் மேல் ஏறி உட்கார்ந்து அடக்க வேண்டிய நிலைமை வந்தது என்று சொல்லப்பட்டது. அப்படி புகார் பண்ணியிருந்தால், அது பற்றிய முழு விவரத்தையும் சேகரித்துத் தரமுடியும். (குறுக்கீடுகள்) ஆக யானையானாலும் சரி, பூனையானாலும் சரி, பானையானாலும் சரி, அதைக்கண்டுபிடிக்க கடமைப்பட்டிருக்கிறார்கள். அதுபற்றி புகார் இல்லை.

**திரு. அ. ரகுமான்கான்**: தலைவர் அவர்களே, சுவாமிமலைக் கோவிலுக்குச் சொந்தமான யானையைக் காணோம் என்ற புகாரைக் கொடுக்க காவல் நிலையத்திற்குப் போய், அதற்கு அனுமதி மறுக்கப்பட்ட காரணத்தினாலே சட்டமன்ற இந்திரா காங்கிரஸ் உறுப்பினர் இராசாராமன் அவர்களிடத்திலே அது சம்பந்தமான புகார் கொடுக்கப்பட்டு, அவரும் நீண்டகாலமாக அதை விசாரித்தும், இதுவரையில் யானையைக் காணோம். அது என்னவாயிற்று, ஒரு வேளை ஏலம் போட்டார்களா, அல்லது எடுத்துக்கொண்டுபோய் விட்டார்களா, டெண்டர் போட்டார்களா? என்ன தகவல்? ஆக யானையைக் காணோம், ஆகவே தான் கேள்வி.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்**: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இராசாராமன் ரகுமான்கானிடம் கொடுத்ததை என்னிடம் கொடுத்திருக்கலாம், அல்லது மாண்புமிகு முதலமைச்சரிடம் கொடுத்திருக்கலாம். கொடுத்தது தப்பு என்று சொல்லவில்லை இந்தத் தகவலை என்னிடம்



கொடுத்திருக்கலாம் அல்லவா? ஆகவே அங்கேயிருக்கின்ற காவல் நிலையத்தினர் அந்த வழக்கை எடுக்க மறுத்தார்கள் என்றால், மேலதிகாரிகளிடம் கொடுத்திருக்கலாம். ... மேலதிகாரிகளும் எடுக்க மறுத்தார் என்றால்—(குறுக்கீடுகள்) புகார் இருந்தால் தானே என்னவாயிற்று என்பதைக் கண்டுபிடிக்க முடியும். புகார் இல்லாதபோது என்னவாயிற்று என்பதை எப்படிக் கண்டு பிடிக்கமுடியும்? மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அக்கறையோடு தான் இருக்கிறார்கள். அக்கறையோடு தான் அது என்னவாயிற்று என்று கண்டுபிடிக்கத்தான் நான் கேட்டேன். அங்கேயிருக்கின்ற மாவட்டக் காவல்துறை அதிகாரி அதுபற்றி புகாரே எதுவும் வராததால், அதுபற்றி விசாரிக்கவில்லை என்று எடுத்துச் சொன்னார்கள். அவர்கள் சொன்னபடி, காவல் நிலைய அதிகாரி மறுத்துவிட்டால், மேலதிகாரிக்கு புகார் கொடுத்திருக்கலாம். மேலதிகாரியும் அதற்கு மறுத்துவிட்டால், அரசுக்கு அல்லது மற்றவர்களுக்கு எடுத்துச்சொன்னால் அதுபற்றி நடவடிக்கை எடுக்கலாம். இப்போதும் அவர்கள் புகார் கொடுப்பார்களேயானால் விசாரித்து அதுபற்றி நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறோம். காணவில்லை என்ற குறிப்போ புகாரோ இல்லாத நிலையில் அதுபற்றி நடவடிக்கை எடுக்க இயலவில்லை. ஆக இப்போது சொல்கிறார்கள் காணவில்லை என்று. அது புகாராக வருமேயானால், அதன் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைக் குறிக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. அ. ரகுமான்கான்**: மன்றத்தினுடைய தலைவர் அவர்களே, புகார் காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்டு எடுக்கப்படவில்லை, கொடுக்கப்பட்டால் விசாரிக்கப்படும் என்பது வேறு விவகாரம். அறநிலையத்துறை அமைச்சர் இங்கேயிருக்கிறார்கள். அந்தக் கோவிலுக்கு ஏற்கனவே யானை இருந்ததா? இப்போது யானையைக் காணோம். யானை உண்டா, இல்லையா என்பதை அறநிலையத்துறை அமைச்சரிடம் கேட்டே சொல்லலாம்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்**: தலைவர் அவர்களே, அந்த யானையைப் பற்றி அங்கேயிருக்கின்ற அறங்காவலர் கவலைப்பட்டிருக்கவேண்டும். அல்லது அந்த யானைப் பாகன் கவலைப்பட்டிருக்கவேண்டும். அவர்கள் சொல்லியிருக்க

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1986 மே 7

அலுவல் முடிந்து, மாலையில் திரும்புவது வழக்கம். வழக்கம் போல் 25—4—1986 அன்று காலை மின்சார ரெயிலில் பயணம் செய்து கொண்டு இருக்கும்போது பலராமன் என்பவரால் கத்தியால் தாக்கப்பட்டார். ஆனால் வணக்கம் செலுத்திவிட்டு தான் அவருக்கு எதிரில் உட்கார்ந்து இருக்கிறார். பிறகு பையிலிருந்து கத்தியை எடுத்து அவரைக் குத்தி இருக்கிறார். இது குறித்து வழக்கு ஒன்று பதியப்பட்டு புலன் விசாரணையில் உள்ளது. சிவில் வழக்கு ஒன்றில் பலராமனுக்குச் சாதகமாக நீதிபதி தீர்ப்பு கூறவில்லை என்பதே இச்சம்பவத்திற்கு அடிப்படைக் காரணம். அன்றே எதிரி கைது செய்யப்பட்டார். விரைவில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு, அதன் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சேலம் பூலாம்பட்டி காவல் நிலையத்தில் மாமியார் மருமகன் விவகாரம் பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் சொன்னார்கள். சேலம் மாவட்டம் பூலாம்பட்டி காவல் நிலையத்தின் எல்லைக்குட்பட்ட சித்தூர் கிராமத்திற்கு அருகில் காட்டுக் கொட்டகையில் விதவை குஞ்சம்மாள் தனித்து வசித்து வந்தாள். வட்டிக்குப் பணம் கொடுத்து வாங்கி, நகை அடகு பிடித்து, விவசாயம் செய்து, வசதியாக வாழ்ந்து வந்தாள். குஞ்சம்மாளுடைய இறந்த கணவனின் அக்காள் மாரியம்மாள். இவள் தன் கணவனுடன் பக்கத்து காட்டில் வசித்து வருகிறாள். விதவை குஞ்சம்மாள் குடியிருப்புக்கும் மாரியம்மாள் வீட்டிற்கும் இடைவெளி 300 அடி. 18—6—1985 அன்று இரவு குஞ்சம்மாள் கொலை செய்யப்பட்டு இரத்த காயங்களுடன் அவள் வீட்டில் கிடந்தாள். 19—6—1985 பூலாம்பட்டி காவல் நிலையக் குற்ற எண் 29/85-ல் வழக்கு பதிவு செய்து, விசாரணை மேற்கொள்ளப்பட்டது. ஆரம்பத்தில் இவ்வழக்கில் துப்பு ஏதும் கிடைக்காமல் இருந்தது. பின் விசாரணை தீவிரப்படுத்தப்பட்டது. [illegible] மாரியம்மாளுக்கு [illegible] [illegible] 1—7—1985 அன்று கைது செய்யப்பட்டனர். மாரியம்[illegible]



1986 மே 7] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

[illegible] மருமகன் பெயர் நஞ்சப்பன். நஞ்சப்பனுக்கும் இந்த
கொலைக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. ஆக அவர்கள்
இருவரும் முறைச்சாலையில் அடைக்கப்படவில்லை. ஆகவே
இதில ஆதாரம் இல்லை என்றும் எடுத்துச் சொல்கிறார்கள்.
வழக்கு முறைப்படி நடைபெறுகிறது.

சென்னை அபிராமபுரம் காவல் நிலையத்திலே மாண்புமிகு
உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் இரண்டு பெண்கள்
மொட்டை அடிக்கப்பட்டது பற்றி குறிப்பிட்டார்கள். அபிராம
புரம் (எ.4) காவல் நிலையத்தில் இரண்டு பெண்கள் மொட்டை
யடிக்கப்பட்டது சம்பந்தமாக, ஆய்வாளர் திரு. கணேசமூர்த்தி
அந்தக் காவல் நிலையத்தில் இருந்து மாற்றப்பட்டு உள்ளார்கள்.
அவர் மீது, தமிழ்நாடு காவல் துறை சார்பு அலுவலர் பணி
மற்றும் நடத்தை சட்டத்தின் பிரிவு 3(பி)-ன் படி துறை ஒழுங்கு
நடவடிக்கை எடுத்துள்ளது. இது சார்பாக விசாரணை
முடிவுற்றது. ஆணையாளரிடமிருந்து விளக்கம் பெற்ற பின்னர்,
அவரது குற்றம் குறித்து தண்டனை வழங்கப்படும். ஆகவே
காவல் நிலையத்திற்கு அழைத்து வந்த குற்றவாளிகளை
தண்டிக்க, எந்தக் காவல் அதிகாரிகளுக்கும் உரிமையில்லை. நீதி
மன்றந்தான் தண்டனை வழங்கவேண்டும். ஆக, தலையை
மொட்டை அடிப்பது என்பது அத்துமீறிய ஒரு செயல்தான்
என்பதையும், அவர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை
யும் குறிப்பிட்டுக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மற்றும் சில வழக்குகளைப் பற்றி எல்லாம் எடுத்துச் சொல்லி
இருக்கிறார்கள். அவற்றைச் சொல்வதற்கு நேரமில்லாத
காரணத்தினால் அவற்றையெல்லாம் விட்டுவிடுகிறேன்.
மற்றொன்று, மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான், சொல்
கின்றபோது, சுவாமிமலைக் கோவிலில் உள்ள யானையைக்
காணோம் என்று எடுத்துச் சொன்னார்கள். உள்ளபடியே
யானையே காணாமல் போய்விடுகிறது என்று எடுத்துச்சொன்
னார்கள். உள்ளபடியே யானை காணாமல் போனாலும், அதைக்
கண்டுபிடிக்க முடியும் என்று சொல்லமுடியாது. ஏனென்றால்
யானையை ஓட்டிச் செல்லும்போது, அது திருடிய யானையா
அல்லது ஓட்டிச் சென்ற யானையா, அது கோவிலுக்குப்
போகிறதா அல்லது விழாவிற்குப் போகிறதா என்று தெரியாது.

ஆனால் அவர்கள் சொல்லிய உடனே விசாரிக்கப்பட்டது அந்த சுவாமிமலைக் கோவிலில் யானை காணாமல் போன தாக அங்கே இருக்கின்ற காவல் நிலையத்தில் இது பற்றி எந்த புகாரும் சொல்லப்படவில்லை. எதுவும் புகார் இல்லாத காரணத்தால் அதுபற்றி விசாரிக்கப்படவேண்டிய நிலைமை இல்லை. ஆகவே சில சமயங்களில் யானைப்பாகன் அதை ஓட்டிக்கொண்டு, வருமானத்திற்காக, வேறு ஊர்களுக்கு எடுத்துக் கொண்டு போய் விடுகிறார்கள். அப்படி இருக்கும்போது, இப்போது கூட, சில நாட்களுக்கு முன் பத்திரிகையில் ஒரு செய்தி வந்தது. வெளியூருக்குக் கொண்டு வந்த ஒரு யானை மிரண்டு அந்த ஊரையெல்லாம் ஒரு கலக்கு கலக்கி, கடைசியில் அந்த பாகன் வந்து, மரத்தின் மேலே ஏறி, யானை முதுகின் மேல் ஏறி உட்கார்ந்து அடக்க வேண்டிய நிலைமை வந்தது என்று சொல்லப்பட்டது. அப்படி புகார் பண்ணியிருந்தால், அது பற்றிய முழு விவரத்தையும் சேகரித்துத் தரமுடியும். (குறுக்கீடுகள்) ஆக யானையானாலும் சரி, பூனையானாலும் சரி, பானையானாலும் சரி, அதைக்கண்டுபிடிக்க கடமைப்பட்டிருக்கிறார்கள். அதுபற்றி புகார் இல்லை.

**திரு. அ. ரகுமான்கான்** : தலைவர் அவர்களே, சுவாமிமலைக் கோவிலுக்குச் சொந்தமான யானையைக் காணோம் என்ற புகாரைக் கொடுக்க காவல் நிலையத்திற்குப் போய், அதற்கு அனுமதி மறுக்கப்பட்ட காரணத்தினாலே சட்டமன்ற இந்திரா காங்கிரஸ் உறுப்பினர் இராசாராமன் அவர்களிடத்திலே அது சம்பந்தமான புகார் கொடுக்கப்பட்டு, அவரும் நீண்டகாலமாக அதை விசாரித்தும், இதுவரையில் யானையைக் காணோம். அது என்னவாயிற்று, ஒரு வேளை ஏலம் போட்டார்களா, அல்லது எடுத்துக்கொண்டுபோய் விட்டார்களா, டெண்டர் போட்டார்களா? என்ன தகவல்? ஆக யானையைக் காணோம், ஆகவே தான் கேள்வி.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இராசாராமன் ரகுமான்கானிடம் கொடுத்ததை என்னிடம் கொடுத்திருக்கலாம், அல்லது மாண்புமிகு முதலமைச்சரிடம் கொடுத்திருக்கலாம். கொடுத்தது தப்பு என்று சொல்லவில்லை இந்தத் தகவலை என்னிடம்



கொடுத்திருக்கலாம் அல்லவா? ஆகவே அங்கேயிருக்கின்ற காவல் நிலையத்தினர் அந்த வழக்கை எடுக்க மறுத்தார்கள் என்றால், மேலதிகாரிகளிடம் கொடுத்திருக்கலாம். . . . மேலதிகாரிகளும் எடுக்க மறுத்தார் என்றால்—(குறுக்கீடுகள்) புகார் இருந்தால் தானே என்னவாயிற்று என்பதைக் கண்டுபிடிக்க முடியும். புகார் இல்லாதபோது என்னவாயிற்று என்பதை எப்படிக் கண்டு பிடிக்கமுடியும்? மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அக்கறை யோடு தான் இருக்கிறார்கள். அக்கறையோடு தான் அது என்ன வாயிற்று என்று கண்டுபிடிக்கத்தான் நான் கேட்டேன். அங்கே யிருக்கின்ற மாவட்டக் காவல்துறை அதிகாரி அதுபற்றி புகாரே எதுவும் வராததால், அதுபற்றி விசாரிக்கவில்லை என்று எடுத் துச்சொன்னார்கள். அவர்கள் சொன்னமாதிரி, காவல் நிலைய அதிகாரி மறுத்துவிட்டால், மேலதிகாரிக்கு புகார் கொடுத்திருக்க லாம். மேலதிகாரியும் அதற்கு மறுத்துவிட்டால், அரசுக்கு அல்லது மற்றவர்களுக்கு எடுத்துச்சொன்னால் அதுபற்றி நடவடிக்கை எடுக்கலாம். இப்போதும் அவர்கள் புகார் கொடுப் பார்களேயானால் விசாரித்து அதுபற்றி நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறோம். காணவில்லை என்ற குறிப்போ புகாரோ இல்லாத நிலையில் அதுபற்றி நடவடிக்கை எடுக்க இயலவில்லை. ஆக இப்போது சொல்கிறார்கள் காணவில்லை என்று. அது புகாராக வருமேயானால், அதன் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. அ. ரகுமான்கான்** : மன்றத்தினுடைய தலைவர் அவர் களே, புகார் காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்டு எடுக்கப்பட வில்லை, கொடுக்கப்பட்டால் விசாரிக்கப்படும் என்பது வேறு விவகாரம். அறநிலையத்துறை அமைச்சர் இங்கேயிருக் கிறார்கள். அந்தக் கோவிலுக்கு ஏற்கனவே யானை இருந்ததா? இப்போது யானையைக் காணோம். யானை உண்டா, இல்லையா என்பதை அறநிலையத்துறை அமைச்சரிடம் கேட்டே சொல்லலாம்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : தலைவர் அவர்களே, அந்த யானையைப் பற்றி அங்கேயிருக்கின்ற அறங் காவலர் கவலைப்பட்டிருக்கவேண்டும். அல்லது அந்த யானைப் பாகன் கவலைப்பட்டிருக்கவேண்டும். அவர்கள் சொல்லியிருக்க

வேண்டும். என்னவாயிற்று என்று தெரியாதிருக்கும்போது என்ன நடவடிக்கை எடுக்கமுடியும்? யானை இருக்கிறதா? யானை மேயப் போய் இருக்கிறதா? காட்டுக்குப் போய் இருக்கிறதா? யாராவது வாங்கிக் கொண்டு போய் விட்டார்களா, அல்லது வெளியூருக்குப் போய் இருக்கிறதா என்பது பற்றி விவரம் தெரிந்தால், அதுபற்றி நடவடிக்கை எடுக்கலாம்.

**திரு. அ. ரகுமான்கான்:** யானையை விற்றுவிட்டு பணத்தை எடுத்துக்கொண்டு போய்விட்டார்களா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** ஒருவேளை அப்படியும் இருக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** யானை இருந்தாலும் ஆயிரம் பொன், செத்தாலும் ஆயிரம் பொன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** ஆகவே ஒரு கோவிலுக்குச் சொந்தமான யானை காணாமல் போகும்போது கோவிலைச் சேர்ந்த அறங்காவலர் அல்லது உரியவர்கள் காவல் நிலையத்தில் புகார் செய்தால், அதுபற்றி நடவடிக்கை எடுக்கலாம்.

(முற்பகல் 11-00)

அதனுடைய அங்க அடையாளங்களை வைத்துக்கொண்டு நடவடிக்கை எடுக்கலாம். மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற மாதிரி விற்று இருந்தாலும் விற்று இருக்கலாம். ஒரு யானைப் பாகருக்குத் தான் அது கட்டுப்படுமே தவிர, எல்லோருக்கும் கட்டுப்படும் என்று சொல்வதற்கில்லை. அதுபற்றி புகார் வருமேயானால், விசாரித்து முடிவு எடுக்கலாம்.

நேரம் கடந்துவிட்டதன் காரணமாக, சில அறிவிப்புக்களை மட்டும் நான் சொல்லிவிட்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்ளலாம் என்று கருதுகிறேன். இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் பல்வேறு ஊர்களிலே அங்கிருக்கிற நிலைமைகளைக் கருதியும், சட்ட ஒழுங்கு நிலைநாட்டப்படவேண்டும் என்ற நிலைமையைக் கருதியும்—அங்கு காவல் நிலையங்கள் தொலைவான இடத்திலே அமைந்து இருப்பதன் காரணமாக, அங்கு



அமைதி நிலைநாட்டப்பட முடியவில்லை என்று கூறுவதன் காரணமாக, புதிய காவல் நிலையங்களை அமைக்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் இசைவு அளித்திருக்கிறார்கள். அந்த வகையில் எழுமதந்த இடங்களில், அதாவது இன்றியமையாத இடங்களில்—பல இடங்களில் மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்டிருந்தும் கூட, 1986-87 ஆம் ஆண்டினைப் பொறுத்தவரையில், இருக்கக்கூடிய நிலைகளைப் பொறுத்து, இன்றியமையாத தேவைப்படுகின்ற என்று கருதப்படுகின்ற இடத்திலே, உடனடியாக முன்னுரிமை தருகின்ற இடங்கள் என்று கருதிக் கணக்கிட்டு, கீழ்க்கண்ட இடங்களில் புதிய காவல் நிலையங்கள், புறக் காவல் நிலையங்கள் அமைக்க அரசு முடிவெடுத்திருக்கிறது என்பதை இந்த அவையில் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த வட்டாத்திக் கோட்டை, கோவை மாவட்டத்தைச் சேர்ந்த சிறுமுகை, மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த கூம்பூர், ஆகிய இடங்களில் காவல் நிலையங்கள்.

மதுரை மாவட்டம் சாமிநாதபுரத்தில் புறக் காவல் நிலையம்.

மதுரை மாவட்டம் ஓடைப்பட்டி, மதுரை மாவட்டம் பழனி ரெட்டிபட்டி, மதுரை மாவட்டம் கரைகனி, மதுரை மாவட்டம் அண்ணாநகர் பகுதி, மதுரை மாவட்டம் காடுப்பட்டி, மதுரை மாவட்டம் உசிலம்பட்டி, இராமநாதபுரம் ஆகிய இடங்களில் காவல் நிலையங்கள்.

வடாற்காடு மாவட்டம் ஆற்காடு சர்க்கிள் பகுதியில் ஒரு காவல் நிலையம். வடாற்காடு மாவட்டம் கலசப்பாக்கம் தொகுதியில் மங்கலம் கிராமத்திலும், வடாற்காடு மாவட்டம் குடியாத்தம் தாலுக்காவில் பணமடங்கி என்ற இடத்திலும், வடாற்காடு மாவட்டம் சாவலூர் கிராமத்திலும் காவல் நிலையங்கள். வடாற்காடு மாவட்டத்தில் அரக்கோணம் தாலுக்காவில் ஆவலூர் கிராமத்தில் புறக்காவல்நிலையம்.

தென்னாற்காடு மாவட்டம் மேல்மலையனூர் தொகுதி நல்லான் பிள்ளைபெற்றாள் கிராமத்தில் காவல்நிலையம். புதுக்கோட்டை மாவட்டத்தில் வடகாடு பகுதியில் காவல்நிலையம்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் சம்மடபு விடுதியில் புறக் காவல்நிலையம்.

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கியில் போக்குவரத்துக் காவல்நிலையம். காமராஜர் மாவட்டத்தில் விளாம்பட்டியில் மாரனேரி கிராமத்தில் காவல்நிலையம். காமராஜர் மாவட்டத் தில் திருச்சுளி வட்டம் வீரசோழன் கிர்ாமத்தில் காவல்நிலையம். பெரியார் மாவட்டத்தில் கோபிச்செட்டிப் பாளையத்தில் சிறுவ லூர் பகுதியில் ஒரு காவல்நிலையம். பெரியார் மாவட்டத்தில் மாவட்டத் தலைமை மருத்துவமனையில் புறக் காவல்நிலையம். பெரியார் மாவட்டத்தில் சத்தியமங்கலம் வட்டம் கோமாளம் அஞ்சல், ஜே.ஆர்.என். புரத்தில் ஒரு காவல்நிலையம். பெரியார் மாவட்டம் பவானி தாலுக்காவில் பர்கூர்காடு பகுதியில் காவல் நிலையம்.

திருநெல்வேலி மாவட்டத்தில் ஆழ்வார்குறிச்சியில் ஒரு காவல் நிலையம். திருநெல்வேலி மாவட்டத்தில் ஸ்ரீவைகுண்டம் வட்டத்தில் சாயர்புரத்தில் காவல் நிலையம். திருநெல்வேலி மாவட்டத்தில் ஏர்வாடியில் ஒரு காவல் நிலையம். செங்கல்பட்டு மாவட்டத்தில் கடம்பத்தூரில் ஒரு காவல்நிலையம். செங்கல் பட்டு மாவட்டம் பரங்கிமலை பீர்க்காங்காரணை கிராமத்தில் ஒரு காவல்நிலையம். செங்கல்பட்டு மாவட்டம் முத்தரப்புதுப் பட்டியில் காவல்நிலையம். செங்கல்பட்டு மாவட்டம் திருவள்ளூர் தாலுக்காவில் மணவாளநகரில் காவல்நிலையம். செங்கல்பட்டு மாவட்டத்தில் தாழம்பூர் கிராமத்தில் காவல்நிலையம். செங்கல் பட்டு மாவட்டத்தில் மடிப்பாக்கத்தில் காவல்நிலையம். செங்கல் பட்டு மாவட்டத்தில் ஸ்ரீபெரும்புதூர் வட்டத்தில் மாங்காடு கிரா மத்தில் காவல்நிலையம். இராமநாதபுரம் மாவட்டத்தில் ஏர்வாடி தர்க்கா காவல்நிலையம். இராமநாதபுரம் மாவட்டத் தில் திருவேகம்புத்தூரில் காவல் நிலையம். இராமநாதபுரம் மாவட்டத்தில் கமுதி ஒன்றியம் மண்டலமாணிக்கம் கிராமத்தில் காவல்நிலையம். செங்கல்பட்டு மாவட்டத்தில் போரூரில் ஒரு காவல்நிலையம். சைதாப்பேட்டை பள்ளிக்காரணையில் காவல் நிலையம். சென்னையில் ராமாபுரம் இராயல நகரில் புறக் காவல் நிலையம். கன்னியாகுமரி மாவட்டத்தில் களியக்காவிளையில்





காவல்நிலையம். தர்மபுரி மாவட்டம் ஓசூரிலுள்ள பகலூர் ஹட்கோவில் காவல்நிலையம். தர்மபுரி மாவட்டம் ஓசூரில் போக்குவரத்துக் காவல்நிலையம். திருச்சி மாவட்டம் வல்லம் கிராமத்தில் காவல்நிலையம். பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம் திருப்பத்தூர் வட்டம் கண்டவராயன்பட்டியில் காவல் நிலையம். செங்கல்பட்டு மாவட்டம், அறிஞர் அண்ணா பூங்கா, ஒட்டேரி பகுதியில் காவல்நிலையம், பசும்பொன் முத்துராம லிங்கம் மாவட்டம், மானாமதுரை வட்டத்தில் பழையனூரில் காவல்நிலையம், பசும்பொன்முத்து ராமலிங்கம் மாவட்டம், காரைக்குடி நாச்சியார்புரம் கிராமத்தில் காவல்நிலையம், சேலம் மாவட்டம் பனைமரத்துப் பட்டியில் புறக் காவல் நிலையம், செங்கற்பட்டு மாவட்டத்தில் கொடுங்கையூரில் காவல்நிலையம், செங்கற்பட்டு மாவட்டத்தில் மணலியில் காவல்நிலையம் ஆக 49 இடங்களில் காவல் நிலையங்களும் 4 இடங்களில் புறக்காவல் நிலையங்களும் இந்த ஆண்டு அமைப்பதற்கு செயற்குறிப்புகள் தீட்டப்பட்டிருக்கின்றன.

புறக்காவல் நிலையம் காவல் நிலையமாக மாற்றப் படுதல். பெரியார் மாவட்டத்திலுள்ள வரப்பாளையம் மற்றும் பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்திலுள்ள சிங்கம்புணரி ஆகிய இடங் களில் புறக்காவல் நிலையங்கள் காவல் நிலையங்களாக தரம் உயர்த்தப்படும். இதற்காகும் ஆண்டுச் செலவு 4 இலட்சத்து 23 ஆயிரம் ரூபாய் ஆகும். 49 காவல் நிலையங்களை உருவாக்க திட்டத்தட்ட ஒரு கோடி செலவாகும்.

புதிய உட்கோட்டம் அமைத்து காவல்துறையினுடைய பணி களை சீர்படுத்தி, செம்மைப்படுத்துவதற்காக, ஈரோடு வாரகத் திற்கு புதிய காவல் உட்கோட்டம் ஒன்று ஏற்படுத்தப்படும். புதுக்கோட்டை மாவட்டத்தில் பொன்னமராவதி, கீரனூர் ஆகிய இடங்களுக்கு உட்கோட்டம் ஒன்று ஏற்படுத்தப்படும். புதுக் கோட்டை மாவட்டத்தில் இலுப்பூரில் ஒரு புதிய வட்டம் தொடங் கப்படும். மைலாடுதுறை காவல் வட்டம் இரண்டாகப் பிரிக்கப் படும். மைலாடுதுறையில் ஒரு புதிய போக்குவரத்து வட்டம்

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1986 மே 7

ஏற்படுத்தப்படும். கழுகிலும் முதுகளத்தூரிலும் குற்றப் பாலமாக புதிய வட்டங்கள் ஏற்படுத்தப்படும். இவற்றிற்காக ஆண்டொன்றிற்கு 7 இலட்சத்து 78 ஆயிரம் ரூபாய் செலவாகும்.

புதிதாக 60 ஜீப் கார்கள் வாங்கித் தருவதற்கு செயல் திட்டம் போடப்பட்டிருக்கிறது. அரசு வாகன வசதி இல்லாத 30 காவல் நிலையங்களுக்கு 30 ஜீப் வண்டிகள் வழங்கவும், மற்றும் காவல் துணை கண்காணிப்பாளர்கள், காவல் உதவி கண்காணிப்பாளர்கள் ஆகியோர்கள் உபயோகத்திற்காக 30 ஜீப் வண்டிகளும் வாங்க அரசு அனுமதி அளித்துள்ளது. இந்த 60 ஜீப் வண்டிகளுக்கும் கிட்டத்தட்ட 63 இலட்சத்து 32 ஆயிரம் ரூபாய் செலவு ஏற்படும்.

புதிய சேமப்படைப் பிரிவு. சட்டம் மற்றும் ஒழுங்கினை மேலும் திறம்பட பேணிக்காக்க காவல் துறையினை வலுப்படுத்துவது மிகவும் அவசியமாகிறது. இதனைக் கருத்தில் கொண்டு மதுரை (புற நகர்) மாவட்டம் மற்றும் மதுரை ஊரகம் மாவட்டத்தில் சேமப்படையில் ஒவ்வொன்றிலும் ஒரு புதிய பிரிவு ஏற்படுத்தப்படும்.

இதற்காகும் தொடரினச் செலவு ஆண்டொன்றிற்கு ரூபாய் 14.34 இலட்சமும், தொடரா இனச் செலவு ரூபாய் 13.46 இலட்சமும் ஆகும்.

புதுக்கோட்டை, காமராஜர், இராமநாதபுரம், பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டங்களில் ஒவ்வொன்றுக்கும் ஒரு சேமப்படைப் பிரிவு ஏற்படுத்தப்படும்.

மேலும் கோயம்புத்தூர் ஊரகம் மற்றும் புறநகர் மாவட்டங்கள் ஒவ்வொன்றுக்கும் இரண்டு சேமப்படை பிரிவுகள் ஏற்படுத்தப்படும்.

இவற்றிற்காக ஆண்டொன்றுக்கு மொத்தச் செலவு 1 கோடியே 39 இலட்சம் ரூபாய் ஆகும்.

புதிய ஆம்புலன்ஸ் வண்டிகள். சட்டம் மற்றும் ஒழுங்கு பணியினை காவலர்கள் மேற்கொள்ளும்பொழுது காயம் அடைந்தவர்களை உடனடியாக மருத்துவ மனைக்கு கொண்டு



1986 மே 7] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

செல்வதற்கும் மற்றும் சாலை விபத்துக்களில் காயம் அடைபவர்
களை மருத்துவ மனையில் சேர்ப்பதற்கும் ஆம்புலன்ஸ் வண்டிகள்
காவல் துறைக்கு மிகவும் தேவைப்படுகின்றன.

இதனைக் கருத்தில் கொண்டு அரசு நடப்பு ஆண்டில் முதல்
கட்டமாக 5 காவல் மாவட்டங்களுக்குத் தேவையான 5 ஆம்பு
லன்ஸ் வண்டிகளை வாங்குவதற்கு அனுமதி அளிக்கிறது.
இதற்காக மொத்தம் 12 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் செலவு
ஆகும்.

மாவட்டங்களில் சீர்பெருமக்கள் வருகையின்போது அவர்
களுக்கு பாதுகாப்பு அளிக்கும் பணியாளர்கள் உபயோகிப்பதற்
காகவும் மற்றும் அப்பெருமக்கள் செல்லும் வழிகளில் அவர்
களுக்கு உடன் பாதுகாப்பாக செல்வதற்காகவும் வாகனங்கள்
தேவைப்படுகின்றன. இதற்காக முதல் கட்டமாக 6 மாவட்டங்
களுக்குத் தேவையான ஆறு வண்டிகள் வாங்கப்படும்.
இதற்காகும் செலவு 13 இலட்சத்து 32 ஆயிரம் ரூபாய் ஆகும்.

ஆறு மாவட்டங்களில் கூடுதலாக நாய்ப் படைகள் அமைக்க
முடிவெடுக்கப்பட்டிருக்கிறது. குற்றங்களைத் துப்பு துலக்கு
வதற்கு காவல் அதிகாரிகளுக்கு உதவுவதில் தமிழக காவல்
துறையில் உள்ள துப்பறியும் நாய்ப் படை சிறப்பான பணியை
ஆற்றி வருகிறது. இதனை எல்லா மாவட்டங்களிலும் விரிவு
படுத்த வேண்டும் என்ற நோக்கத்துடன் முதல் கட்டமாக 6
காவல் மாவட்டங்களில் நாய்ப் படை பிரிவு விரிவுபடுத்தப்படும்.

இதற்காக ஆண்டொன்றிற்கு ஆகும் செலவு ரூபாய் 6.00
இலட்சம் ஆக இருக்கும்.

தூத்துக்குடியில் வானொலி கட்டுப்பாடு அறை ஒன்றை
ஏற்படுத்த முடிவு செய்யப்பட்டிருக்கிறது. இதற்கு மொத்தச்
செலவு தொகை 19 இலட்சத்து 23 ஆயிரம் ஆகும்.

காவல் துறையின் பணிகளும் பொறுப்புகளும் நாளுக்கு நாள்
வளர்ந்து கொண்டே போகின்றன. அவற்றை மேற்கொண்டு
திறமையாகச் செயல்பட காவல் துறையில் பணியாற்றும் அதிகாரி
கள், அலுவலர்கள் ஆகியோருடைய எண்ணிக்கையை கூட்ட
[illegible]

கூடுதல் காவலர்கள் மற்றும் அதிகாரிகளுடைய எண்ணிக்கையை நிர்ணயித்து அரசு படிப்படியாகப் புதிய பதவிகளை உருவாக்கும்.

சட்டம் ஒழுங்கு பணிகளுக்காக முதல் கட்டமாக மேற்கொண்டு 3,000 காவலர்கள் நியமிக்கப்படுவார்கள். இதற்காக, ஆண்டொன்றிற்கு ஆகும் செலவு. ரூ. 3 கோடி ஆகும்.

(முற்பகல் 11-10)

போக்குவரத்தை ஒழுங்கு படுத்துவதிலும், கட்டுப்படுத்துவதிலும் காவல் துறைக்கு முக்கிய பொறுப்பு உண்டு. தமிழகத்தில் கடந்த ஐந்து ஆண்டுகளில் வாகனங்களின் எண்ணிக்கை இரண்டு மடங்காக உயர்ந்து விட்டது. ஆனால், போக்குவரத்துக் காவல் பிரிவில் எண்ணிக்கை கூடுதலாகவில்லை. எனவே, சாலை விதிகளை மீறுபவர்கள் மீது விரைவாகவும் கடுமையாகவும் நடவடிக்கை எடுக்கவும் பாதிக்கப்பட்டவர்களுக்கு வசதிகளைச் செய்து தரவும் காவல் போக்குவரத்துப் பிரிவினை விரிவடையச் செய்வது அவசியமாகிறது. இதனைக் கருத்தில் கொண்டு, போக்குவரத்துக் காவல் துறைக்குக் கூடுதலாக 8 துணைக் காவல் கண்காணிப்பாளர்கள், 23 சேமப் படை காவல் ஆய்வாளர்கள், 74 சேமப்படை காவல் உதவி ஆய்வாளர்கள், 113 தலைமைக் காவலர்கள் மற்றும் 1,695 காவலர்கள் நியமிக்கப்படுவார்கள்.

சேம்ப்படைப் பிரிவின் உபயோகத்திற்காக 22 ஜீப்புகள், 48 மோட்டார் சைக்கிள்கள் மற்றும் ஒரு பிணவறை ஊர்தி வசதி செய்து தரப்படும். இதற்காகும் தொடரினச் செலவு ரூ. 168 இலட்சமும் தொடரா இனச் செலவு ரூ. 30.84 இலட்சமும் ஆகும்.

மது அருந்துவதைக் கண்டுபிடிக்கக் கருவிகள். மது அருந்தி விட்டு வண்டி ஓட்டிச் செல்பவர்களை அவ்வப்போது நிறுத்தி அவர்கள் மது அருந்தியிருக்கிறார்களா என்று பரிசோதனை செய்ய வசதிகள் இல்லை. எனவே, வண்டி ஓட்டிச் செல்பவர்கள் மது அருந்தி போதையில் இருக்கிறார்களா என்பதைக் கண்டறிவதற்கான கருவிகள் தேவையான அளவுக்கு வாங்கப்பட்டு காவல் துறைக்கு வழங்கப்படும்.

போக்குவரத்துத் துறையில் கம்ப்யூட்டர் அமைப்பு. சாலை விபத்துக்களைப் பொறுத்தவரை இப்பொழுதுள்ள அமைப்பில் தேவைப்படும் விபரங்கள் முழுமையாகக் கிடைப்பதில்லை.





த்துக்களில் தண்டிக்கப்படும் ஓட்டுநர்களின் உரிமங்கள் ரத்து செய்யப்பட்ட போதும் புதிய உரிமங்களைத் தவறான விபரங்களைத் தந்து மீண்டும் பெற்றுக் கொள்ள வாய்ப்பு உள்ளது. மாநிலத்தில் நடைபெறும் எல்லா விபத்துக்கள் பற்றியும் ஓட்டுநர்கள் பற்றியும் விவரங்களைப் பதிவு செய்வதன் மூலமாகத் தேவைக்கேற்ப அந்த விவரங்களைப் பயன்படுத்திக் கொள்ள முடியும். இதனைச் செயல்படுத்துவதற்காக போக்குவரத்துப் பிரிவில் கம்ப்யூட்டர் உதவியினால் இயங்கும் ஒரு அமைப்பினை ஏற்படுத்த அனுமதியளிக்கப்படுகிறது. இதற்காகும் மொத்தச் செலவு ரூ. 12 இலட்சம் ஆகும்.

போக்குவரத்துக் காவல் பிரிவினருக்கு 100 வாக்கி டாக்கி கருவிகள் புதிதாக அளிக்க அரசு முடிவெடுத்திருக்கிறது. இதற்காகும் தொடரா இனச் செலவு ரூ. 10 இலட்சமாகும்.

போக்குவரத்துக் கழகங்களின் மூலம் ஆம்புலன்ஸ் வண்டிகள்— போக்குவரத்து மானியக் கோரிக்கையின்பொழுதே இது தெரிவிக்கப்பட்டிருக்கிறது — எல்லா போக்குவரத்துக் கழகங்களும் தங்களிடம் உள்ள பழைய வண்டிகளில் ஒன்றினை ஆம்புலன்ஸ் வண்டியாக மாற்றி வைத்துக் கொள்ளவும் அதற்கான செலவினை அக்கழகங்களே தங்கள் நிதியிலிருந்து எடுத்துக் கொள்ளவும் அரசு அனுமதி அளித்துள்ளது.

சென்னையில் மேலும் ஒரு இயங்கும் நீதிமன்றம், சென்னை நகரின் வடக்கு, தெற்கு மற்றும் மத்தியப் பகுதிகள் ஆகியவற்றிற்கு இரண்டு நடமாடும் நீதிமன்றங்கள் உள்ளன. மேலும் சாலைப் போக்குவரத்து விதிகளை மீறுபவர்களை அவ்விடத்திலேயே விசாரித்து வழக்குகளை முடிவு செய்வதற்கு வசதியாக சென்னையில் மேலும் ஒரு நடமாடும் நீதிமன்றம் ஏற்படுத்தப்படும். இதற்காகும் செலவு ரூ. 3.02 இலட்சம் ஆகும்.

புகைப்படம் எடுக்கும் பணியாளர்கள் அடங்கிய குழு ஒன்று சாலைகளில் நடைபெறும் விபத்துக்களின்போது சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று அங்குள்ள நிலையை உடனே புகைப்படம் எடுத்து அதனைப் பதிவு செய்வதன் மூலமாக குற்றவாளிகளின் மீது தகுந்த பிரிவுகளின்கீழ் வழக்குகளைப் பதிவு செய்து நடவடிக்கை எடுக்க ஏதுவாகிறது. இதனைக் கருத்தில்கொண்டு

சென்னை நகருக்கு 3 புகைப்படம் எடுக்கும் பணியாளர்கள் அடங்கிய குழு, மற்றும் கருவிகள் வாங்க அனுமதி அளிக்கப்படுகிறது. இதற்கு ஆண்டொன்றிற்காகும் தொடரினச் செலவு ரூ. 0.62 இலட்சமும், தொடரா இனச் செலவு ரூ. 4.50 இலட்சமும் ஆகும்.

திருச்சி குதிரைப் படை. தற்போது காவல் துறையில் சென்னை, மதுரை நகரங்களில் குதிரைப் படைகள் திறமையாக இயங்கி வருகின்றன. கோவையில் குதிரைப் படை அமைக்க முன்பே அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. மேலும் 1986-87-ல் திருச்சியில் புதியதாக ஒரு குதிரைப்படைப் பிரிவு ஏற்படுத்தப்படும். இதற்காக ஆண்டொன்றுக்கு ஆகும் தொடரினச் செலவு ரூ. 1.13 இலட்சம் ஆகும். தொடரா இனச் செலவு ரூ. 1.91 இலட்சம் ஆகும்.

புதிய 200 அமைச்சுப் பணியாளர்கள் நியமனம். அமைச்சுப் பணியாளர்களுடைய பணி அதிகமாக இருப்பதன் காரணமாக ஏற்கெனவே ஆண்டு ஒன்றுக்கு 200 வீதம், இதுவரையில், 1981ஆம் ஆண்டு முதல் 1985 ஆம் ஆண்டு வரை சுமார் 720 அமைச்சுப் பணியாளர் பணி இடங்களை ஏற்படுத்த அரசு அனுமதி அளித்துள்ளது. அது போல், இந்த ஆண்டு ரூ. 15 இலட்சம் செலவில் 200 அமைச்சுப் பணியாளர் பதவியிடங்களை ஏற்படுத்த அரசு முடிவு செய்துள்ளது.

ரிட் மனுக்களைக் கவனிக்க புதிய சட்ட ஆலோசகர் நியமனம். காவல் துறை இயக்குநர் அலுவலகத்தில் ரிட் மனுக்கள் மற்றும் நீதிமன்ற விவகாரங்களைக் கவனிப்பதற்காகத் தேவையான துணைப் பணியாளர்களுடன் சட்ட ஆலோசகர் பதவி ஒன்று ஏற்படுத்தப்படுகிறது. இதற்காகும் மொத்தச் செலவு ஆண்டொன்றிற்கு ரூ. 0.72 இலட்சம் ஆகும்.

குற்றப் புலனாய்வுத் துறை தணிக்கைப் பிரிவு—கூடுதல் பணியாளர்கள் நியமனம். சென்னை குற்றப் புலனாய்வுத் துறை நுண்ணறிவுப் பிரிவில் உள்ள தணிக்கைப் பிரிவுக்குக் கூடுதல் பணியாளர்களை நியமனம் செய்ய அனுமதி அளிக்கப்படுகிறது. இதற்காகும் மொத்தச் செலவு ஆண்டொன்றுக்கு ரூ. 1.62 இலட்சம் ஆகும்.





புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள மாவட்டக் காவல் துறை அலுவலகத்திற்குக் கட்டடம் புதியதாக கட்ட அரசு ஒப்புதல் அளித்திருக்கிறது. புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள மாவட்டக் காவல்துறை அலுவலகத்திற்கு சுமார் ரூபாய் 31.00 இலட்சம் செலவில் புதிய கட்டடங்கள் கட்டப்படும்.

காவல்துறை ஆய்வாளர் இல்லங்களுக்கு தொலைபேசி வசதி. காவல் துறையில் பணிகளைச் செவ்வனே நிறைவேற்ற தொலைபேசித் தொடர்பு வசதிகள் இன்றியமையாதனவாக உள்ளன. காவல் துறையில் பணியாற்றும் காவல் ஆய்வாளர் இல்லங்களுக்கு முழுமையாக ஐந்து ஆண்டுகளுக்கு சுமார் ரூ.150 இலட்சத்தில் தொலைபேசித் தொடர்பு வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும். இதற்காக இவ்வாண்டு ரூபாய் 29 இலட்சம் செலவிடப்படும்.

சட்டம் ஒழுங்கினை நிலைநாட்டும் பணியில் ஈடுபட்டுள்ள காவலர்களுக்கும் அதிகாரிகளுக்கும் குடியிருப்பு வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்டார்கள்.

புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள ஆயுதப் படையினருக்கு அரசு குடியிருப்பு வசதி செய்து கொடுக்கும். இதற்காக ஆகும் தொடரினச் செலவு ரூ. 10.00 இலட்சம் ஆகும். புதுக்கோட்டை காவல்துறைக்கு கண்காணிப்பாளருக்குப் புதிய குடியிருப்புக் கட்டிக் கொடுக்கப்படும். இராமநாதபுரம், காமராஜர், பசும்பொன் முத்துராமலிங்கம், அண்ணா, செங்கல்பட்டு மாவட்டங்களில் உள்ள ஆயுதப்படையினருக்கு குடியிருப்புகள் கட்டப்படும்.

மாநிலத்தில் 25 துணைக் காவல் கண்காணிப்பாளர்களுக்குக் குடியிருப்புகள் கட்டிக்கொடுக்கப்படும். இவற்றிற்கான தொடரச் செலவு சுமார் ரூ. 850 இலட்சம் ஆகும். பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்தில் காவல்துறை கண்காணிப்பாளருக்கு ரூபாய் 3.50 இலட்சம் அளவில் குடியிருப்புக் கட்டித் தரப்படும். சென்னை நகரில் பணிபுரியும் காவல் துறை அதிகாரிகளுக்கு குடியிருப்புகள் கட்டித்தருவது அத்தியாவசியமாகிறது. இதுவரை அவர்களுக்கு அரசு வீட்டு வசதி ஏதும் செய்து தரப்படவில்லை. சுமார் 50-க்கு மேற்பட்ட காவல் கண்காணிப்பாளர்

பதவித் தரத்தில் உள்ள அதிகாரிகளுக்கு வீடுகள் கட்டித்தரப் படும். முதற் கட்டமாக 1986-87 ஆம் ஆண்டில் இதற்காக ரூ. 50 இலட்சம் செலவிடப்படும். இந்த வீடுகள் கட்டி முடிக்கப்படும் வரையில் தற்காலிகமாக தமிழ்நாடு வீட்டு வசதி வாரியக் குடியிருப்புகளில் உள்ள பொது ஒதுக்கீட்டிலிருந்து 10 வாடகை வீடுகள் சென்னையில் பணிபுரியும் காவல் துறை அதிகாரிகளுக்கு ஒதுக்கித்தரப்படும்.

காவல் துறையிலுள்ள காவலர்களுடைய உபயோகத்திற்காக மதுரையிலும், கன்னியாகுமரியிலும் ரூ. 14.00 இலட்சம் செலவில் தங்கும் விடுதிகள் கட்டித்தரப்படும். மதுரை மாவட்டத்தில் நகர சேமப்படைப் பிரிவு குடியிருப்புகளில் குடிநீர் வசதிகளை மேம்பாடு செய்யும் பொருட்டு ரூ. 10.00 இலட்சம் செலவில். ஒரு மேல்நிலை குடிநீர்த் தொட்டி கட்டித்தரப்படும்.

தூத்துக்குடி, சென்னை, புதுக்கோட்டை, கோயம்புத்தூர் காவலர் பயிற்சிப் பள்ளி, மேல்பட்டு ஒலிபரப்பு நிலையம், திருச்சி இரயில்வே காவலர் குடியிருப்பு போன்ற இடங்களில் கட்டிட மேம்பாட்டுப் பணிகள் ரூ. 9.00 இலட்சம் செலவில் மேற்கொள்ளப் படும்.

மதுரை நகரில் சேமப்படைப் பிரிவுக் குடியிருப்பில் கழிப்பிட வசதிகளை மேம்பாடு செய்தல், கட்டடங்கள் பழுது பார்த்தல் போன்றவை ரூ. 5.00 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்படும்.

கோவை காவல் மருத்துவ மனை ரூ. 5.21 இலட்சம் செலவில் விரிவுபடுத்தப்படும். மதுரையில் உள்ள காவல் மருத்துவ மனைக்கு ஒரு பெரிய குளிர் சாதன பெட்டி ஒன்று வழங்கப்படும் இதற்காக ரூ. 35 ஆயிரம் செலவிடப்படும். மதுரையில் உள்ள குதிரைப்படை வீரர்களுக்கு, குடியிருப்புகள் கட்டித்தருவதற்கு செயற் குறிப்புகள் போடப்பட்டிருக்கிறது. இதற்கு ரூ. 10 இலட்சம் செலவிடப்படும். காவல் துறை பற்றிய திட்டங்கள், சாதனங்கள் இவற்றையெல்லாம் ஆய்வு செய்வதற்காக குழு ஒன்று அமைக்க அரசு முடிவு செய்துள்ளது. ஆக இந்தக்குழுவில் காவல் துறை இன்ஸ்பெக்டர் ஜெனரல், காவல் துறை இன்ஸ்பெக்டர் ஜெனரல் (குற்றமும் புலனாய்வும்), அரசுத்துறை பற்றற்ற ஒரு கல்லூரிப் பேராசிரியர் மற்றும் ஒரு பயிற்சி நிபுணர் ஆகியவர்கள் கொண்ட ஒரு குழுவினை அரசு நியமிக்கும்.



காவல் நிலையங்களில் மக்கள் உட்கார வசதி செய்து தரப் படும். தற்போதுள்ள காவல் நிலையங்களில் போதிய அளவு பார்வையாளர்கள் அமரும் நாற்காலிகள் இல்லை. இதனை அடிப்படையாகக்கொண்டு சென்ற ஆண்டு ரூ. 88,000 செலவில் காவல் நிலையங்களுக்குத் தேவையான நாற்காலி போன்ற மரச் சாமான்கள் வாங்குவதற்கு அரசு அனுமதி அளித்தது. இதே போல் இந்த ஆண்டும் காவல் நிலையங்களில், நாடிவரும் பொது மக்கள் உட்காருவதற்கு வசதியாக பார்வையாளர் நாற்காலி, பெஞ்ச் வாங்குவதற்கு ரூ. 2.00 இலட்சம் அனுமதிக்கப்படுகிறது.

சென்னையில் காவல் துறையினருக்கு தனி உணவகம் ஏற்படுத் தல். சென்னையில் காவல் துறையினருக்கு தனி உணவகம் என்று இதுவரையில் இல்லாத காரணத்தாலும், இவ்வாறு ஏற்படுத்தப்படும் உணவகங்கள் அத்துறையில் பணிபுரியும் அலுவ லர்களின் ஒழுங்குணர்வை உயர்த்தும் என்று காவல்துறை இயக்குநர் அவர்களும் தெரிவித்திருப்பதாலும், இதனை ஏற்று சென்னை மாநகர ஆணையர் அலுவலகத்தில் ஒரு காவல் உண வகம் ஏற்படுத்தி கட்டிடம் கட்டித்தர அரசு முடிவு செய்துள்ளது. இதற்காக 1986-87 ஆம் ஆண்டில் ரூ. 25.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

(முற்பகல் 11-20)

1986-87 ஆம் ஆண்டில் காவல் துறை கூடுதல் பணிகளுக்காக வும், முயற்சிகளுக்காகவும் இதுவரையில் சொல்லப்பட்ட வகையில் கிட்டத்தட்ட 18 கோடி ரூபாய் செலவு ஏற்பட இருக்கின்றது. இவற்றை எல்லாம் செய்து முடிப்போம் என்பதை எடுத்துத் தெரிவித்துக்கொள்கிறேன்.

புதிய தீயணைப்பு நிலையங்கள் வேண்டுமென்ற நிலைமையில் தென்னார்க்காடு மாவட்டத்தில் சங்கராபுரத்தில் ஒரு தீயணைப்பு நிலையமும், தஞ்சை மாவட்டத்தில் குடவாசலில் ஒரு தீயணைப்பு நிலையமும், செங்கற்பட்டு மாவட்டத்தில் பொன்னேரியில் ஒரு தீயணைப்பு நிலையமும், செங்கற்பட்டு மாவட்டத்தில் உத்திர மேரூரிலே ஒரு தீயணைப்பு நிலையமும், தர்மபுரி மாவட்டத்தில் பென்னகரத்தில் ஒரு தீயணைப்பு நிலையமும், திருநெல்வேலி மாவட்டத்தில் வாசுதேவநல்லூரில் ஒரு தீயணைப்பு நிலையமும்,

திருச்சி மாவட்டத்தில் புள்ளம்பாடியில் ஒரு தீயணைப்பு நிலையமும், மதுரை மாவட்டத்தில் கொட்டாம்பட்டியில் ஒரு தீயணைப்பு நிலையமும், இப்படிப் புதிய தீயணைப்பு நிலையங்கள் அமைக்கப்படும். இதற்காகக் கிட்டத்தட்ட 25 இலட்சம் ரூபாய் செலவாகும்.

தமிழ்நாடு தீயணைப்புத் துறை தீயணைப்பு நிலையங்களுக்கு வான் தந்தித் தொடர்பு வசதியை வலுப்படுத்தவும், நவீனப்படுத்தவும் அரசு ஒப்புதல் அளித்து இருக்கிறது. இதற்காக அரசுக்கு ஏற்படும் செலவு 4,25,000 ரூபாய் ஆகும்.

வடார்க்காடு மாவட்டத்தில் தண்டராம்பட்டில் ஒரு புதிய தீயணைப்பு நிலையம் நிறுவப்படும். இதற்காக 2½ இலட்சம் ரூபாய் தொடரினச் செலவும் 5 இலட்சத்து 18 ஆயிரம் ரூபாய் தொடரா இனச் செலவும் ஆகும்.

திருநெல்வேலி, கன்னியாகுமரி கோட்டத்தை இரண்டாகப் பிரித்தல். தமிழ்நாட்டின் தீயணைப்புத் துறையின் நிர்வாகத் திறனை அதிகரிக்கும் நோக்கத்தோடு தற்போது திருநெல்வேலி, கன்னியாகுமரி கோட்டத்தை இரண்டாகப் பிரிக்க அரசு ஒப்புதல் அளித்து இருக்கிறது. இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதால் அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு 1,35,000 ரூபாய் கூடுதல் செலவு ஏற்படும்.

தமிழ்நாட்டில் தேர்ந்தெடுத்த 10 தீயணைப்பு நிலையங்களுக்கு கட்டுப்பாட்டு அறையை நிர்வகிப்பதற்கு 10 முன்னணித் தீயணைப்போர் பதவிகளை ஏற்படுத்த அரசு ஒப்புதல் அளிக்கிறது. இதற்காக அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு ஒரு இலட்சம் ரூபாய் கூடுதலாகச் செலவாகும். தீயணைப்புத் துறையின் தலைமையகத்தில் 3-வது தணிக்கைக் குழு அமைக்க அரசு ஒப்புதல் அளிக்கிறது. இதற்காக ஆண்டு ஒன்றுக்கு 32,000 ரூபாய் கூடுதலாகச் செலவாகும்.

தமிழ்நாடு தீயணைப்புத் துறையில் ஆண்டுதோறும் கோட்ட விளையாட்டுப் போட்டி நடத்துவதற்காக ஆகும் செலவினை 750 ரூபாயிலிருந்து ஆயிரம் ரூபாயாக உயர்த்தவேண்டுமென்று





கேட்டுக்கொண்டார்கள். அது ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்படும். இதனால் ஆண்டு ஒன்றுக்கு 4,750 ரூபாய் இந்த வகையில் செலவாகும். வீட்டு மானியத்தொகையை முழு மானியமாக ஆக்கவேண்டுமென்று அவர்கள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். இந்த வகையில் தீயணைப்புத் துறையில் கிட்டத்தட்ட 40 இலட்சம் ரூபாய்க்கு மேற்பட்டு செலவுகள் மேற்கொள்ளப்படும் என்பதை எடுத்துச் சொல்லிக் கொள்கிறேன்.

பல்வேறு கருத்துக்களை மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். எனவே இன்னும் பல இருக்கின்றன. அவையெல்லாம் அவ்வப்போது சொல்லப்படும் என்பதால் அவர்கள் சொன்ன கருத்துக்களை எல்லாம் காவல் துறையினர் கவனத்தில்கொண்டு இதனை மேம்படுத்த, செம்மைப்படுத்த உறுதுணையாக எடுத்துக்கொண்டு பயன்படுத்துவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் துறை சிறப்பாக, செம்மையாக நடக்க உறுதுணையாக இருந்த உள்துறைச் செயலாளருக்கும், காவல்துறை, உள்துறை அதிகாரிகளுக்கும், காவல் துறையைச் சார்ந்த ஏனைய அலுவலாளர்களுக்கும் அரசின் சார்பாக நன்றியைத் தெரிவித்து அமர்கிறேன். வணக்கம்.

* **திரு. வி. பி. சிந்தன்** : பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் நான் பேசிக்கொண்டிருக்கும்போது ஒரு அமைச்சர் அவர்கள் குறுக்கிட்டு கைது செய்யப்படுகிறவர்களை பூமாலை போட்டுப் புலனாய்வு செய்ய வேண்டுமா என்று கேட்டார்கள். அவருக்குப் பதில் சொல்ல வேண்டும் என்பதற்காக நான் சொல்லவில்லை. ஆனால் இதனுடைய பொருள் சித்திரவதை செய்துதான் புலனாய்வு செய்யவேண்டுமென்று தொனிக்கிற வகையில் சொல்லியிருந்தார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : நேற்றைய பிரச்சினையை இப்போது சொல்லவேண்டியதில்லை. அமருங்கள்.

**திரு. வி. பி. சிந்தன்** : பேரவைத் தலைவர் அவர்களே, முதல்வர் அவர்கள் சார்பில் பேசுகிற மாண்புமிகு அமைச்சர் அவர்கள், கைது செய்யப்படுகிறவர்களைப் புலனாய்வு செய்யும்போது

சித்திரவதை செய்யக்கூடாது. அதாவது third degree methods கையாளப்படக்கூடாது என்று கட்டாயமாக எல்லா போலீஸ் நிலையங்களுக்கும் ஒரு உத்தரவு பிறப்பிக்கப்படும் என்று சொல்ல முடியுமா என்பதைத்தான் நான் அறிய விரும்புகிறேன்.

மேலும் போலீஸ் சங்கத்திற்கு அங்கீகாரம் வழங்குவதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பகிரங்கமாகச் சொல்லியிருந்தார்கள். அதன்பிறகு ஹைகோர்ட்டிலே ஒரு ரிட் போடப்பட்டது. நான் அந்த விளக்கத்திற்கு உள்ளே போக விரும்பவில்லை. ஒரு ரிட் மனு தாக்கல் செய்யப்பட்டு அதிலே ஸ்டே வாங்கப்பட்டது. அந்த இன்ஸ்பெக்டர் டி.எஸ்.பி. யாக மாறினார். அது infructiuous ஆகிவிடும். அந்த ஸ்டேயை எதிர்த்து அதாவது அந்த ஸ்டே இருக்கக்கூடாது என்ற வகையில் அதை வெக்கேட் செய்வதற்குத் தமிழக அரசு முயற்சி செய்யுமா? நான் இதைக் குறிப்பிடுவதற்குக் காரணம் மாவட்ட போலீஸ் சங்கத்தினுடைய செயலாளரும் தலைவர்களும் திரு. பிரிட்டோ விலேயிருந்து பலர் வேலையிலிருந்து நீக்கப்பட்டு இருக்கின்ற நிலைமையில் அவர்கள் வழக்கு மன்றத்திற்குச் செல்லவேண்டிய நிலைமை ஏற்படுகிறது. ஆகவே அந்தச் சங்கத்திற்கு அங்கீகாரம் அளிக்கப்படுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலேயே பேசிக் கொண்டு வரும்போதே குறிப்பிட்டேன். தண்டிக்க வேண்டியது நீதிமன்றமே தவிர, காவல் துறை அல்ல என்று சொன்னேன். யாரும் கொடுமைப்படுத்தப்படக்கூடாது, சித்திரவதை செய்யப் படக் கூடாது என்று தான் சொன்னேன். அதை யாருமே ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். எங்கேயும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். ஒருவேளை சில இடங்களில் அவர்களுக்குள் உள்ள வாக்குவாதத்தின் காரணமாக அடித்துப் புரண்டு இப்படிப் பட்ட நிலைமைகளை ஏற்படுத்திவிடுகிறார்களே தவிர, அதை அனுமதிப்பதே இல்லை. சட்டபடியும் அனுமதிப்பதில்லை. அப்படிப்பட்ட கொடுமைகளைச் செய்கிறவர்கள்மீது நடவடிக்கை எடுத்திருக்கிறோம், எடுப்போம் என்றும் தெரிவித்துக் [illegible]றேன். அவர்களுக்கு பன்னீர் தெளிக்கவும் வேண்டாம்





பழி வாங்கவும் வேண்டாம். அவர்களை புலன் விசாரணை செய்து, குற்றங்களைக் கண்டுபிடித்து கோர்ட்டிலே கொண்டு போய் நிறுத்த வேண்டியதுதான் போலீசாருடைய கடமை. கோர்ட் அவர்களுக்கு தக்க தண்டனை கொடுக்கும். ஆகவே அப்படிச் செய்ய வேண்டும் என்றுதான் சொல்லுகிறோம்.

அடுத்து சங்கத்தைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். சங்கத்தைப் பற்றிச் சொல்லுகிறபோது உயர்நீதிமன்றத்திலே அது குறித்து வழக்கு இருக்கிறது. அப்பொழுதே அந்தத் தடையை வெக்கேட் பண்ண வேண்டும் என்றுதான் அரசு தீர்மானித்தது. இப் போதும் அந்த வழக்கு நிறுத்தப்படுமேயானால், ஏற்கெனவே அரசு எடுத்த கொள்கைகளின்படி, சில நிபந்தனைகளின் அடிப் படையிலே அந்தச் சங்கங்கள் சிலபல வரம்பிற்கு உட்பட்டு, கட்டுப்பாட்டிற்கு உட்பட்டு தங்களுடைய கருத்துக்களை, சில உரிமைகளைக் கேட்பதற்கு நியமிக்கப்பட வேண்டும் என்பது தான், அதற்கு இடம் தர வேண்டும் என்பதும்தான் அரசினுடைய நோக்கம். இடம் தரும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

* **திரு. கி. ராமன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலில் ராஜபாளையம் தெற்கு காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட வழக்குகள் பற்றி பல விவரங்களைச் சொன்னார்கள். மிக்க நன்றி. கலவரம் செய்தவர்கள்மீது, அல்லது யார்மீது புகார் பதிவு செய்யப்பட்டிருக்கிறதோ அவர்களைப் பொறுத்த வரையில் சட்டப்படி என்ன தண்டனை கொடுக்க வேண்டுமோ அதைக் கொடுக்கலாம். அதைப்பற்றி எனக்கு ஆட்சேபணை கிடையாது. ஆனால் அந்த போலீஸ் நிலையத்தைப் பொறுத்தவரையில் கடந்த 6 மாத காலமாகவேயும், சமீபத்திலேயும் ஆதிதிராவிட மக்களைப்பற்றி சாதி பெயரைச் சொல்லி அவதூறாகப் பேசு கிறார்கள் என்றும் குறிப்பாக அங்குள்ள சப்-இன்ஸ்பெக்டரைப் பற்றியும் எனக்குத் தந்தி வந்தது அதை அமைச்சர் அவர்களுக்கு அனுப்பிவிட்டேன். ஆகவே ராசிடக்கில் பணிபுரி பவர்கள் எங்கே ஆதிதிராவிட மக்களுக்குக் கொடுமைகளை இழைக்கின்றார்களோ, அல்லது கொடுமைகளைப் புரிகின்றார் களோ அப்படிப்பட்ட அதிகாரிகளுக்கு சரியான அறிவுரையை

[திரு. கி. ராமன்] [1986 மே 7

அரசு கொடுக்குமா அல்லது அப்படித் தவறு செய்தார்கள் என்று நிரூபிக்கப்பட்டால் அவர்களுக்கும் தண்டனை வழங்கப்படுமா என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிக்க வேண்டுகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, யார் ஒருவரையும் எந்தக் காவல் துறை அதிகாரியும் அவதூறாகப் பேசக் கூடாது. கண்ட கண்டபடி பேசக்கூடாது என்பதுதான். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவையிலேயே குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே அதைப் பற்றி விசாரித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் சொல்லியிருக்கிறோம். அதைப்பற்றி காவல்துறை மேலதிகாரிகளும், உள்துறை செயலாளரும் குறித்துக்கொண்டு, அதுபற்றி விசாரித்துத் தக்க நடவடிக்கை எடுப்பார்கள். ஆகவே யாரையும், குறிப்பாக ஆதித்திராவிட மக்களோ அல்லது பிற்படுத்தப்பட்ட மக்களோ, தாழ்த்தப்பட்ட மக்களோ, அல்லது மற்றவர்களோ அவர்களின் இனம் காரணமாகவோ, தாழ்ந்த நிலை காரணமாகவோ எந்த ஒரு அதிகாரியும், எந்த ஒரு நிலையிலும் ஏசக் கூடாது என்பதுதான் கொள்கை. அப்படி ஏசுகின்ற நிலைமை இருந்தால் நடவடிக்கை எடுக்கலாம். அப்படி அதற்கு உரிய நடவடிக்கைகளை முறையாக எடுப்பார்கள் என்பதையும் கூறிக் கொள்கிறேன்.

**திரு. அ. ரகுமான்கான்:** பேரவைத் தலைவர் அவர்களே, அவசர நிலைப் பிரகடனம் அமலில் இருந்தபோது 1976 ஆம் ஆண்டு 102 காவல் துறை எழுத்தர்கள், தலைமைக் காவலர்கள் ஆகியோர் கம்பல்சரி ரிடையர்மெண்ட் என்று கட்டாயமாக வேலையிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறார்கள் அதை எதிர்த்து அவர்கள் உயர்நீதிமன்றத்திற்கு ரிட் அப்பீல் செய்த நேரத்திலே ஜஸ்டிஸ் பத்மநாபன் அவர்கள் அந்தச் சட்டம் அமலில் இல்லை, ஆகவே அதன்படி போலீஸ்காரர்களை கம்பல்சரியாக ரிடையர்மெண்ட் செய்தது சட்ட விரோதம் என்று தீர்ப்பு அளித்து விட்டார்கள். பாதிக்கப்பட்டவர்கள் அரசாங்கத்திற்கு மறுபடியும் மனு செய்தார்கள். அந்தத் தீர்ப்பைக் காட்டி மறுபடியும் வேலையில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டார்கள். ஆனால் கருணை மனம் கொண்ட இந்த அரசாங்கம்



1986 மே 7] [திரு. அ. ரகுமான்கான்]

எல்லோரையும் விட்டுவிட்டு இரண்டே இரண்டு பேர்களுக்கு மட்டும் உத்தரவு போட்டிருக்கிறது. மற்றவர்கள் கொடுத்த கருணை மனுக்கள் எல்லாம் பரிசீலனை செய்யப்படாமல் கவனிக்கப்படாமல் இருக்கின்றன. இரண்டு மனுக்களை மட்டும் அனுமதித்ததன் மர்மம் என்ன? மற்றவர்களை கவனிக்காமல் விட்டதன் நியாயம் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர்நீதிமன்றம் ஒரு தீர்ப்பு வழங்கியிருந்தால் அந்தத் தீர்ப்பை ஏற்று நடத்த வேண்டும் என்பதுதான் அரசினுடைய நோக்கமே தவிர, கருணைக்கு எந்த இடமும் இல்லை. உயர்நீதிமன்றமே பார்த்து உங்கள் கருணைபடி நடந்து கொள்ளுங்கள் என்று சொல்லுவார்களேயானால் அப்போது கருணை காட்டியும் நடத்தலாம், கருணை இல்லாமலும் நடத்தலாம். ஆனால் தீர்ப்பு என்று வந்து விட்டால் அந்த தீர்ப்பின்படிதான் நடக்க வேண்டும். அப்படிப்பட்ட தீர்ப்பு இருக்குமானால், அதன்படி நடவடிக்கைகள் எடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும். ஏன் நடக்கவில்லை என்பதற்கு வேண்டுமானால் விசாரிப்பதற்கு கேட்கலாம்.

(முற்பகல் 11-30)

**திரு. அ. ரகுமான்கான்:** தலைவர் அவர்களே, என்னுடைய கேள்வி அதுவல்ல. நான் திரும்பவும் ஒரு நிமிடத்தில் சொல்லி விடுகிறேன். கம்பல்சரி ரிடையர்மெண்ட் ஆனவர்கள், போலீஸ் கான்ஸ்டேபிள்ஸ் மற்றும் எழுத்தர்கள் என்று சொல்லப்படுகிற 102 பேர்களை கம்பல்சரியாக வீட்டுக்கு அனுப்பிவிட்டார்கள். அந்த 102 பேர்கள் ஹைகோர்ட் தீர்ப்பைக் காட்டி அரசாங்கம் மறுபடியும் பணிக்கு எடுத்துக் கொள்ளுமா என்று கேட்டபோது, அந்த 102 பேர்களில் இரண்டு பேர்களின் மனுக்களை மட்டும் பரிசீலித்து அவர்களுக்கு வேலை கொடுத்து விட்டார்கள். பாக்கி காவலர்களுக்கு வேலை கொடுக்கப்படவில்லை என்பதுதான் என்னுடைய கேள்வி.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, உயர்நீதி மன்றத் தீர்ப்பை அரசு கடைப்பிடிக்க வேண்டும். கடைபிடிக்கவில்லை என்றால் அவர்கள் திரும்ப கோர்ட்டிற்கு

போய் ஸ்ட்ரிக்சர்ஸ்கூட வழங்குகிற உரிமை இருக்கிறது. ஆகவே கொடுத்தே தீரவேண்டும் என்கிறபோது கொடுக்கவில்லையென் றால்—சட்டப்படி கொடுக்க வேண்டியிருக்கிறது—மறுபடியும் உயர்நீதிமன்றத்திற்குப் போக அவர்களுக்கு உரிமை இருக்கிறது. அதுபற்றி உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறதால் அதை கவனிக் கலாம். அதேநேரத்தில் அவர்கள் திரும்ப கோர்ட்டிற்கு போகிற உரிமையும் இருக்கிறது.

* **திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தந்திருக்கிற பதிலுரையில் வழக்குகளைப் பொறுத்தவரையில் 70 சதவீதம், 75 சதவீதம் போட்டிருப்பதாகச் சொன்னார்கள். ஆந்திரா, கர்நாடகம், மேற்கு வங்கம் போன்ற மாநிலங்களில் இந்த சதவீதம் குறைவாக இருக்கிறதென்றும் சொன்னார்கள். போடப்பட்ட வழக்குகளில் எத்தனை வழக்குகள் உண்மையென்று கண்டுபிடிக்கப்பட்டு தண்டனை வழங்கப்பட்டிருக்கிறது? நான் சொல்லிக் கொள்ள விரும்புவதெல்லாம் குற்றவாளிகளை விட்டுவிட்டு நிரபராதிகளைப் பிடித்து, பொய்யான சாட்சிகளை ஜோடித்து, அந்த வழக்கு களைப் போட்டு விடுகிறார்கள் என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டு. எத்தனை வழக்குகளில் தண்டனை வழங்கப் பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதையெல்லாம் உறுப்பினர் அவர்கள் சட்டத் துறை மானியத்தில் கேட்டிருக்க வேண்டும்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர் களே, வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டதில் மட்டுமல்ல, தண்டிக்கப் பட்டதிலும் தமிழகம்தான் முதல் இடத்தில் இருக்கிறது. அடுத்த ஆண்டில் அந்தக் கணக்கைச் சொல்கிறேன்.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** தலைவர் அவர்களே, நேற்றைய தினம் இந்த மானியத்தில் நான் பேசியபோது சேலம் மாவட்டம் பூலாம்பட்டி காவல் நிலையத்தில் நடந்த கொடுமைபற்றி, மாமியார், மருமகன் இருவரும் கொடுமைப்படுத்தப்பட்டதுபற்றிச் சொன்னேன். நம்முடைய அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிற போது மருமகன் அந்த குற்றவாளிப் பட்டியலில் இடம் பெற வில்லையென்றும், அத்தகைய சம்பவம் நடக்கவில்லையென் றும் சொன்னார்கள். நான் உங்கள் மூலமாகக் கேட்க விரும்பு





வது, அந்தத் தொகுதியின் உறுப்பினர் திரு. கோவிந்தசாமி அந்த நிகழ்ச்சிபற்றி இன்னமும் உறுதியாகச் சொல்கிறார். நிகழ்ச்சி நடந்தது உண்மையென்று வலியுறுத்துகிறார். ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு வந்த தகவல் சரியான தகவ லாக இருக்காதோ என்று ஐயுறுகிற காரணத்தால், இதுபோன்று காவல் துறையில் கொடுமை நடைபெறாமல் தடுக்கவும், சம்பந்தப் பட்டவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுப்பதற்கும் உறுதுணையாக இன்னும் நல்ல முறையில், மேல்மட்ட நிலையில் இதுபற்றி விசாரிப்பதற்கு முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர் களே, அவருக்குத் தெரிந்த தகவலை அவர் சொன்னார். எனக்குக் கிடைத்த தகவலை நான் சொன்னேன். அப்படி மீறியிருப்பார் களானால் மேலதிகாரிகளுக்குச் சொல்லி மறுபடியும் விசாரிக்க வேண்டும். மறுபடியும் உண்மையா, இல்லையா என்று விசாரிக்க வேண்டும். உண்மையாக இருக்குமானால் அவர்மீது நடவடிக்கை எடுக்கப்படும். அந்த முறையில் செய்ய லாம். எது உண்மையென்று இப்போது சொல்வதற்கில்லை. ஆகவே விசாரிக்கலாம். குறிப்பிட்ட அதிகாரி ஏற்றுக்கொள்ளா விட்டாலும் மேலதிகாரிகளுக்குச் சொல்லலாம். மேலதிகாரிகள் விசாரித்து நடவடிக்கையெடுக்கலாம். (குறுக்கீடு) இவ்வளவு பேச்சு வந்ததற்குப் பிறகு, நானும் பதில் சொன்னதற்குப் பிறகு மேலதிகாரிகள், ஐ.ஜி. மட்டத்தில் இதுபற்றி விசாரணை நடத்து வார்கள்.

**திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்:** தலைவர் அவர்களே, போலீஸ் இன்ஸ்பெக்டர்களுக்கான தேர்வு நடந்து ஆண்டிற்கு மேலாகிறது. அவர்களுக்கு வேலை வாய்ப்பு உத்தரவு விரைவில் கொடுக்கப் படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர் களே, அதுபற்றி முதலிலேயே சொன்னேன். எல்லாம் முடிந்து விட்டது. நேர்முகத் தேர்வுதான் நடைபெற வேண்டும். இன்னும் 2, 3 மாதங்களுக்குள் நியமிக்கப்படுவார்கள் என்று சொன்னேன்.

[1986 மே 7

**திரு. குமரி அனந்தன் :** தலைவர் அவர்களே, சமுதாய விரோதிகள் என்ற பெயரில் குண்டர்கள் என்று போலீஸ் அதிகாரிகள் சிலரை கைது செய்து குண்டாஸ் ஆக்ட்டின்கீழ் சிறையில் தள்ளிவிடுகிறார்கள். நீதிமன்றத்திற்குப் போகிறபோது, நீதிமன்றத்திற்குப் போகிறவர்களில் பெரும் பகுதிபேர்கள் விடுதலை பெற்று விடுகிறார்கள். இதைப் பார்க்கிறபோது அந்த போலீஸ் அதிகாரிகள் எடுத்துக்கொள்கிற நடவடிக்கைகள் சில இடங்களில் காழ்ப்புணர்ச்சியின் அடிப்படையில் இருக்குமோ என்ற ஐயப்பாடு இருப்பதால், அப்படிப்பட்ட நிரபராதிகளை அப்படிப்பட்ட சட்டத்தின்கீழ் உள்ளே தள்ளாமல் இருப்பதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை மேற்கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, குண்டர்கள் சட்டத்தின்கீழ் இவர்கள் வெளியே இருக்க வேண்டாம் உள்ளே தள்ளலாம் என்ற அளவிற்கு மாவட்டத்திலிருந்து மாவட்ட ஆட்சித் தலைவர்தான் சிபார்சு செய்கிறார். அதற்குப் பிறகு நடவடிக்கையெடுக்க, அவர்களை குண்டர்கள் சட்டத்தின்கீழ் உள்ளே தள்ளலாமா என்று தனியாக ஒரு குழு ஆராய்ந்து வருகிறது—15 நாளோ, 30 நாளோ என்று ஒரு கணக்கு இருக்கிறது—அவர்கள் ஆராய்ந்து, வைக்கலாம் என்பதற்குப் பிறகு தான் வைக்கிறார்கள். அதற்குப் பிறகு அவர்கள் செல்லுகின்ற நிலைமை வருகிறது. சிலபல வகைகளிலே சில சட்ட நுணுக்கங்கள், டெக்னிக்கல் பாயின்ட்டுகள், இவைகளை வைத்துக் கொண்டு, உயர்நீதிமன்றத்திலே வழக்குகளைத் தள்ளுபடி செய்து விடுகிறார்கள். விடுதலையும் செய்துவிடுகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதுபோன்று, காழ்ப்புணர்ச்சியின் அடிப்படையில், யாரையும் குண்டர்களாக, மாச்சரியங்கள் அல்லது பகைமை அல்லது விரோதம் ஆகியவற்றினுடைய அடிப்படையில் யாரையும் குண்டர்களாகச் சேர்க்கக்கூடாது என்ற கருத்தை அரசு எற்றுக்கொள்கிறது. அதைத் தான் காவல் துறையினர் கடைப்பிடிக்க வேண்டும் என்று நானும் தெரிவித்துக் கொள்கிறேன்



1986 மே 7]

**திரு. கு. சுப்பராயன் :** * *

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இவை எல்லாம் நீக்கப் படுகின்றன.

விவாதம் முடிவுற்றது ; இப்போது வாக்கெடுப்பு.

### கோரிக்கை எண் 15—காவல் துறை.

திருவாளர்கள் எஸ். இராசாராமன், எஸ். என். இராமசாமி ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால், அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றனவாகக் கருதப்பெற்றன.

திரு. சு. பாலன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி :

"மானியக் கோரிக்கை எண் 15—காவல் துறை என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,06,23,53,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

### கோரிக்கை எண் 16—தீயணைப்புப் பணிகள்.

டாக்டர் ந. மாசிலாமணி மற்றும் திரு. எஸ். என். இராமசாமி ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால், அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றனவாகக் கருதப்பெற்றன.

---

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திரு. சு. பாலன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி :

"மானியக் கோரிக்கை எண் 16—தீயணைப்புப் பணிகள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 8,34,06,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

**(இ) கோரிக்கை எண் 29—தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும்.**

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண் 29—தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 14,50,07,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்".

**திரு. அ. ரகுமான்கான் :** பாயின்ட் ஆப் ஆர்டர். மன்றத்தினுடைய தலைவர் அவர்களே, 1986-87 ஆம் ஆண்டுக்கான இந்த தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் என்ற மானியக் கோரிக்கையின் கொள்கை விளக்கக் குறிப்பில், 'திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி, தொழிலாளர் நல அமைச்சர்' என்று போடப்பட்டு இருக்கிறது. அவர் இப்போது அமைச்சராக இல்லை. வெறும் சட்டமன்ற உறுப்பினராகத்தான் இருக்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்தப் புத்தகம் ஒரு மாதத்திற்கு முன்பு வழங்கப்பட்ட புத்தகம். எப்ரல் மாதம் 5 ஆம் தேதி அனுப்பப்பட்ட புத்தகம். ஒரு மாதத்திற்கு முன்பு அனுப்



பட்டது. மறுபடியும் இவைகளை அச்சடிக்கவேண்டும் என்றால், காலமும் நேரமும் ஆகும். இவைகளை எல்லாம் பெரிய விஷயமாகச் சொல்லவேண்டாம்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எப்ரல் 9 ஆம் தேதி தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் என்ற மானியக் கோரிக்கையை எடுத்துக் கொள்வதாக இருந்தது. அவர்கள் இரண்டாம் தேதி அமைச்சர் பதவியில் இருந்து விலக வேண்டிய நிலை ஏற்பட்டது. அதற்கு முன்னாலே கொடுக்கப்பட்டது. ஆகவே அவர்களுடைய பெயர் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் சட்டப்படி இருக்க வேண்டும் என்கிறார். ஆகவே, 'திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி' என்ற பெயருக்குப் பதிலாக 'இரா. நெடுஞ்செழியன்' என்ற பெயரைப் போட்டுக்கொள்ளும் படியாக நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கு. சுப்பராயன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கைபற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண் 29 — தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 14,50,07,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்".

**திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் :** பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கைபற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண் 29 — தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 14,50,07,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்".

**திரு. சு. பாலன் :** பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர்கள் தங்களது காப்பீட்டுக் கழகம், ஈ.எஸ்.ஐ. மூலம் தற்போது பெறும் உதவித் தொகையை மேலும் உயர்த்தி தர வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண் 29 — தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 14,50,07,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்".

**திரு. மு. இராசாங்கம்:** பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம் கும்பகோணம் வட்டம் திருநாகேஸ்வரம் மாடர்ன் ரைஸ் மில்லில் பணிபுரியும் மூடை தூக்கும் தொழிலாளர்களுக்கு, கூலியை உயர்த்தி நிர்ணயம் செய்ய வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 29 — தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 14,50,07,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கையும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின்முன் விவாதத்திற்கு வைக்கப் பெறுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

(முற்பகல் 11-40)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் பற்றிய விளக்கக் குறிப்புகள் @ அவையின் முன் வைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றை நான் படித்ததாக குறிப்பேட்டில் ஏற்றிக்கொள்ளும்படியாகக் கேட்டுக்கொண்டு மாண்புமிகு உறுப்பினர்கள் கருத்துக்கள் வழங்கியதற்குப் பிறகு இறுதியிலே என் பதிலை வழங்குகிறேன் என்று கூறி அமர்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

* **திரு. எஸ். பி. மணவாளன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 'தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும்' பற்றிய மானியக் கோரிக்கை எண். 29-ன்மீது என்னுடைய சில கருத்துக்களை தங்கள் மூலமாக அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

நிர்வாக வசதிக்காகவும், மக்களின் நலனுக்காகவும், துரித நடவடிக்கை மேற்கொள்ளவும், பல மாவட்டங்களை 2 அல்லது 3 மாவட்டங்களாகவும் கல்வித்துறை, சுகாதாரத்துறை, வேளாண்மைத்துறை, போக்குவரத்துத்துறை போன்ற பெரிய துறைகளை பல சிறிய துறைகளாகவும் அரசு பிரித்து நல்ல முறையில் நிர்வாகம் செயல்பட்டு வருகிறது.

---

@ 427—528 பக்கங்களில் இணைப்புகள் I மற்றும் I ஆக அச்சிடப் பெற்றுள்ளன.



ஆனால் தொழிலாளர் துறையில் ஒவ்வொன்றுக்கும் சம்பந்தமில்லாத இரு பிரிவுகள் முறையே, தொழிற்சாலைகள் ஆய்வுப் பிரிவு, தொழிலாளர் பிரிவு ஆகியவை இயங்கி வருகின்றன. தொழிற்சாலைகள் ஆய்வுப் பிரிவில் உள்ள அலுவலர்களின் குறைந்தபட்ச கல்வித் தகுதி தொழில் நுட்ப பட்டமாகும். அதனால் இருபிரிவிலும் உள்ள அலுவலர்கள் ஒரு பிரிவிலிருந்து மற்ற பிரிவிற்கு மாற்றப்பட்டோ அல்லது பதவி உயர்வு பெற்றோ செல்வது இல்லை. நிர்வாகத்திலும் இரு பிரிவுகளுக்குமிடையே எவ்வித சம்பந்தமும் இல்லை. மேலும் தொழிலாளர் ஆய்வாளர்கள் கடை மற்றும் நிறுவனச் சட்டம், உணவகங்கள் சட்டம், எடைகள் மற்றும் அளவைகள் சட்டம் போன்ற சட்டங்களை அமல்படுத்துகிறார்கள். தொழிற்சாலைகள் ஆய்வாளர்கள், தொழிற்சாலைகள் சட்டம் மற்றும் அதனைச் சார்ந்த சட்டங்களையும் அமல்படுத்துகிறார்கள். இச்சட்டங்களை அமல்படுத்துவதிலும், நிர்வாகத்திலும் இரு பிரிவினருக்கும் சம்பந்தமில்லை என்பதை இதன் மூலம் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மேலும் தொழிலாளர்கள்—அரசு ஈட்டுறுதிச் சட்டம் (இ.எஸ்.ஐ. சட்டம்), தொழிலாளர் பொது வைப்பு நிதிச் சட்டம் (இ.பி.எஃப். சட்டம்), சுரங்கப் பாதுகாப்புச் சட்டம் போன்ற பல தொழிலாளர் நலச் சட்டங்களைத் தொழிலாளர்துறை அல்லாத பல தனித்தனி துறைகள் அமல்படுத்துகின்றன. இதனால் தொழிலாளர்களுக்கும் கிடைக்க வேண்டிய பயன்கள் எதுவும் தடைபடவில்லை. மாறாக இவற்றினால் தொழிலாளர்களுக்கு நல்ல பயன் தான் கிடைத்துள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மேலும் மற்ற மாநிலங்களில் தொழிற்சாலைகள் ஆய்வுப் பிரிவு தனித் துறையாக இயங்கிவருகிறது. இதனால் மற்ற மாநிலங்களில் தொழிலாளர்களுக்கு நல்ல பயன்தான் கிடைத்து வருகிறது என்பதைக் கூற விரும்புகிறேன். எந்தப் பிரச்சனையும் கிடையாது.

அதைப்போலவே, சமரசப் பேச்சுவார்த்தை நடத்துவதும், ஒன்றுக்கொன்று தொடர்பில் சட்டத்தை அமல்படுத்துவதும் சமரசமாமல் தனித்தனியாக இயங்க வேண்டுமென்பதும் பேச்சுக்கு உடன்பட்டவர்கள் தாமாகவே பேச்சுவார்த்தைக்கு வரவேண்டுமென்பதும், பேச்சுவார்த்தைக்கு உட்பட்டவர்களை

சட்டம், அமல்படுத்தும் பிரிவினரைக்காட்டி., பேச்சுவார்த்தைக்கு வரவழைக்கக் கூடாது என்பதும், பன்னாட்டு நிறுவனத்தின் (ஐ.எல்.ஓ.) கொள்கையாகும்.

கடந்த இருபதாண்டுகளாக பல மூத்த நிர்வாக அதிகாரிகளும், ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., போன்றவர்கள் கடந்த ஆண்டு அரசுக்கு சமர்ப்பித்த நான்காவது ஊதியக்குழு அறிக்கையிலே தொழிற் சாலைகள் ஆய்வுப் பிரிவு தொழிலாளர் துறையிலிருந்து பிரித்துத் தனித்தனியாக ஆக்க வேண்டுமென்று மிகவும் வலியுறுத்தி யுள்ளனர்.

மேலும் தொழிற்சாலைகள் ஆய்வுப் பிரிவைத் தனித்துறையாக பிரிப்பதால் அரசுக்கு எவ்விதப் பொருளாதாரச் செலவும் ஏற்படாது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். எனவே மேற் கூறிய காரணங்களால் தொழிற்சாலைகள் பிரிவிலிருந்து பிரித்து தனித்தனியாக செயல்பட அரசு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதனால் தொழிலாளர்களுக்கு நல்ல முறையில் பாதுகாப்பும், பயனும் உடனடியாகக் கிடைக்குமே தவிர எவ்விதப் பாதிப்பும் ஏற்படாது என்பதை இதன்மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல 20 ஆயிரம் தொழிலாளர்களுக்கு மேற்பட்டு இருக் கின்ற வட ஆற்காடு மாவட்டத்தில் இராணிப்பேட்டை 'சிப்காட்' தொழிலாளர்களுக்கு அவர்கள் கட்டுகின்ற சேமநல நிதியிலிருந்து அவர்களுக்காக ஒரு தொழிலாளர் நல விடுதியும், தொழிலாளர் கூட்டுறவுச் சங்கமும், தொழிலாளர் திருமணக் கூடமும், அவர் களுக்கென விளையாட்டுத் திடலும் அமைத்துக்கொடுக்க அரசு முன்வரவேண்டுமென்று இந்த நல்ல நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

இது தவிர, இராணிப்பேட்டையிலுள்ள பாரி நிர்வாகம் 'கம்பல்சரி ரிடையர்மெண்ட்' என்ற பெயரால் தற்சமயம் 300 தொழிலாளர்களுக்கு மேலாக அவர்கள் 15 ஆண்டுகளுக்கு மேலாக பணியில் இருந்தும், மேற்கொண்டு அவர்கள் பணிபுரிய இருக்கின்ற காலம் 15 ஆண்டுகள் இருந்தும் அவர்களை வேலை நீக்கம் செய்துள்ளார்கள். இந்தத் தகவல் அரசுக்குத் தெரியுமா? தொழிலாளர் ஆணையாளர் அவர்கள் அறிவார்களா? இதற்கு என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.



அதேபோல் ராணிப்பேட்டையில் உள்ள சிப்காட்டில் உள்ள
தொழிற்சாலைகள் UPPER INDIA BEARINGS LIMITED,
SOLVENT CHEMICALS KAPPOMA AUTOMOBILES. இதுதவிர
மேலும் மூன்று தொழிற்சாலைகள் மூடப்பட்டு இருக்கின்றன.
இதிலே பாதிக்கப்பட்ட சுமார் ஆயிரம் தொழிலாளர்கள் நிதி
வசதி இல்லாமல் குடும்பத்தை நடத்துவதற்கு மிகவும் அல்லல்
படுகிறார்கள். அந்தத் தொழிற்சாலைகளைத் திறக்கவும்,
அல்லது மாற்று ஏற்பாடுகள் செய்யவும் இந்த அரசு உடனடியாக
நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

அதேபோல் வட ஆற்காடு மாவட்டத்திலே தோல் பதனிடும்
தொழிற்சாலைகள், தோல் காலணிகள் செய்யும் தொழிற்
சாலைகள் ஏராளமாக இருக்கின்றன. அதிலே பெண்கள் ஏராள
மாகப் பணி புரிகிறார்கள். ஆனால் அந்தப் பெண்களை கொத்தடி
மைகளைப்போல் வைத்து மாதம் ஊதியமாக 100 ரூபாய், 150
ரூபாய் மட்டுமே கொடுத்து அவர்களிடமிருந்து 10 மணி நேரம்,
12 மணி நேரம் வேலை வாங்குகிறார்கள். அதுதவிர அந்தப்
பெண்களுக்கு காப்பக வசதியும் இல்லை. எல்லாத் தொழிற்
சாலையில் பணிபுரியும் பெண்களுக்கும் காப்பக வசதி ஏற்படுத்தித்
தரவேண்டும். ஆகவே அவர்களுக்கும் அதை ஏற்படுத்தித்
தர அரசு முயலுமா என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள
விரும்புகிறேன். அதேபோல் அங்கே தோல் தொழிலில் இருந்து
அன்னிய செலாவணி பல நூறு கோடி ரூபாய் நமக்குக் கிடைக்
கிறது. ஆனால் அந்தத் தொழில் செய்யும் பெண்களுக்கு 100
ரூபாய், 150 ரூபாய்தான் கொடுக்கிறார்கள். மிகவும் அதிகமாக
வேலையை வாங்கிக்கொண்டு குறைந்த ஊதியத்தைக் கொடுக்
கிறார்கள். அவர்கள் ஊதியத்தை உயர்த்திக் கொடுக்க வேண்டும்
என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

பீடித் தொழில்பற்றி சில வார்த்தைகளைச் சொல்ல விரும்பு
கிறேன். இந்தியாவிலேயே பீடித் தொழில் அதிகமாக உள்ள
மாநிலம் தமிழகம்தான். பீடித் தொழில் குடிசைத் தொழிலாக
வும், சிறுவர்களும், பெண்களும் வருவாய் ஈட்டுகின்ற வகையிலும்
இந்த தொழில் அமைகிறது. இந்தத் தொழிலாளர்களுக்கு வருங்
கால வைப்பு நிதி வழங்கப்படவேண்டும் என்று 1977 ஆம் ஆண்டு

மத்திய அரசு ஒரு உத்திரவு போட்டு அந்த உத்தரவின் அடிப் படையில் 23—12—1985-ல் தமிழகத்தில் தொழிலாளர் நலத்துறை தனி ஆணையர் அவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தி 1—1—1986 முதல் அந்தத் திட்டம் அமல்படுத்தப்பட வேண்டும் என்ற ஒரு ஏற்பாட்டைச் செய்தார்கள். அந்தத் திட்டத்திலே 6 ¼ சதவீதம் பிடித்தம் செய்கிறார்கள். அந்த பிடித்தம் செய்கிற தொகைக்கு எந்தவிதமான ஆதாரமும், ரசீதும் இன்று வரை வழங்கப்படவில்லை.

அதேபோல் ஒவ்வொரு தொழிலாளர்க்கும் புகைப்படத்துடன் கூடிய சர்வீஸ் கார்டு வழங்கவேண்டும் என்று அந்த உடன் பாட்டில் ஏற்பாடு செய்யப்பெற்றது. ஆனால் இன்று வரை அந்த புகைப்படத்துடன் கூடிய சர்வீஸ் கார்டு வழங்கப்பட வில்லை என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இது தவிர பிராவிடெண்டு பண்டு சலுகைகள் எல்லாத் தொழி லாளர்களுக்கும் கொடுக்கப்படவில்லை. குறிப்பாக இந்த கொள்கை விளக்கக் குறிப்பில் 1,313 தொழில் வளாகங்கள் இருக் கின்றன என்றும், சுமார் 10,800 பீடித் தொழிலாளர்கள் பணி யாற்றுகிறார்கள் என்றும் சொல்லியிருக்கிறார்கள். அது தவிர வீட்டில் தங்கித் தொழில் புரியும் தொழிலாளர்கள் எண்ணிக்கை 2 லட்சம் தொழிலாளர்கள் இந்த வசதிகள் பெறக்கூடிய வாய்ப்பு இல்லாமல் இருக்கிறார்கள். இதற்குக் காரணம் பீடி முதலாளிகள் பிராஞ்சு என்ற முறையிலும், காண்டிராக்ட் என்ற முறையிலும் இதை அமல் செய்யாமல் நேரடியாகத் தொழிலாளர் களுக்குக் கிடைக்க வேண்டிய சலுகைகளைத் தடுத்து வருகி றார்கள். இதற்கு இந்தத் துறையைச் சேர்ந்த அலுவலர்களும் உடன்படுகிறார்களோ என்ற ஒரு ஐயம் தொழிலாளர்கள் இடத்தில் இருக்கிறது. இந்த ஐயப்பாட்டைப் போக்குகின்ற வகையில் வீட்டில் தங்கித் தொழில் செய்யும் பீடித் தொழிலாளர்கள் அனைவருக்கும் இந்த பிராவிடென்ட்டு பண்டு நிதி மற்றும் மற்ற சலுகைகளையும் கொடுக்க வேண்டும் என்று இந்த நல்ல நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.





அதேபோல் சென்ற மாதம் மத்திய தொழிலாளர் நல துணை அமைச்சர் மாண்புமிகு திரு. பி. ஏ. சங்குமா அவர்கள் அண்மையில் முதன் முறையாக சிவகாசியில் தேசிய குழந்தைத் தொழிலா ளர்கள் மேம்பாடுத் திட்டத்தை ஆரம்பித்தார்கள். இந்தத் திட்டத்தைப் போலவே பீடித் தொழிலில் ஈடுபட்டுள்ள சிறுவர் களுக்கும் அமல் செய்யவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். பீடித் தொழிலாளர்கள் பணியில் இருக்கும்போது இறந்துவிட்டால், அவர்களுக்கு ரூ. 10,000 வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதே நேரத்தில், அவர்களுடைய ஈமச் சடங்கிற்காக ரூ. 2,000 வழங்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-50)

தவிர பீடித் தொழிற்சங்கங்களை அழைத்துப் பேசுகின்ற நேரத்தில், ஒரு சில சங்கங்களை மட்டும் அழைத்துப் பேசுகின்ற குறை இருக்கிறது. பேச்சுவார்த்தைகளை நடத்துகின்ற நேரத் தில், அனைத்துத் தொழிற்சங்கத் தலைவர்களையும் அழைத்துப் பேசவேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று வடார்க்காடு மாவட்டத்திலே திருப்பத்தூர், ஜோலார்ப்பேட்டை, ராணிப்பேட்டை போன்ற நகரங்களில் 30,000-க்கும் மேற்பட்ட பீடித் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்குக் காச நோய் வரக் கூடிய அபாயம் இருக்கிறது. அதைத் தடுத்து நிறுத்துகின்ற வகையில், திருப்பத்தூரில் 50 படுக்கைகளைக் கொண்ட ஒரு மருத்துவமனையை பீடித் தொழி லாளர்களுக்காக ஏற்படுத்திக் கொடுக்கவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோன்று சர்க்கரை ஆலைத் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில், ஓய்வு காலப் பணித்திட்டத்தை சர்க்கரை ஆலைகளில் அமல்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பல ஆண்டுகளாகக் குறைந்த கூலியை தினக் கூலியாகப் பெற்றுக் கொண்டிருக்கிற தொழிலாளர்களை நிரந்தரம் செய்யவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

சர்க்கரை ஆலைத் தொழிலாளர்களுக்கு போனஸ் வழங்கும் சமயத்தில் உற்பத்தி குறியீட்டு எண் அடிப்படையில் கணக்கிடும் போது, ஆலை பகுதி கரும்பு என்றும், மாற்று ஆலை கரும்பு என்றும் பாகுபாடில்லாமல் அரவை செய்த மொத்தக் கரும்பிற்கு போனஸ் கணக்கிட்டு வழங்க வேண்டுமெனக் கேட்டுக்கொள் கிறேன். தற்போது அமலில் உள்ள குரூப் இன்ஷூரன்ஸ் போல் குரூப் கிராசுவிடி திட்டம் அமல்படுத்த கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று போக்குவரத்துத் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில், அவர்களுக்கு நவீன வசதிகளுடன் கூடிய மருத்துவ மனை ஒன்றை சென்னையில் அமைக்கவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். அவர்களுக்குக் கல்யாணக் கடனாக அதிகபட்ச ரூ. 1,500 கொடுக்கப்படுவதை அதிகமாக உயர்த்தித்தரவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள் கிறேன்.

அரசுப் போக்குவரத்து அதிகாரிகளுக்கும், ஊழியர்களுக்கும், விடுப்பு வழங்கப்படுவதில் வேற்றுமைகள் இருக்கின்றன. அதை அகற்றி, அதிகாரிகளுக்கு வழங்குவதைப்போல் ஊழியர்களுக்கும் வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து மின்சார வாரியத்தில் தற்காலிகப் பணியாளர்கள் பல ஆயிரக்கணக்கான அளவில் வேலை செய்து வருகிறார்கள். அவர்கள் பல ஆண்டுக்காலமாக வேலை செய்து வந்தும், அவர்கள் இன்னும் நிரந்தரமாக்கப்படாமல் இருக்கிறார்கள். அவர்களை நிரந்தரமாக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, தொழிலாளர் நலன்பற்றிய மானியக் கோரிக்கையின்மூலம் பேசு வதற்கு வாய்ப்பு அளித்தமைக்காக என் நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன்.

**திரு. எம். அண்ணாதாசன்:** மாண்புமிகு மன்றத்தின் துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் தொழிலாளர் நலன் என்ற மானியக் கோரிக்கையின்மீது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், என்னுடைய கருத்துக்களை இங்கே பேசுவதற்கு வாய்ப்புத் தந்தமைக்காக முதற்கண் நன்றி யைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



நமது மாநிலத்தைப் பொறுத்தவரையில், தொழிலாளர்களின் மேல் மிகுந்த அக்கறை காட்டவேண்டுமென்ற நல்லெண்ணத் தோடு, தமிழகத்தினுடைய முதல்வர், நமது இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள், 1977-க்குப் பின்னர் அதிகமாக அக்கறை கொண்டார் என்பதற்கு எத்தனையோ சான்றுகளை இங்கே அடுக்கடுக்காக எடுத்துச் சொல்லமுடியும். இருந்தாலும் கால அவகாசங்கள் இடம் தராத காரணத்தினால், நான் அனைத் தையும் கோடிட்டுக் காண்பிக்க முடியவில்லை. இருந்தாலும் ஒரு சில கருத்துக்களை மட்டும் இங்கே கோடிட்டுக் காண்பிக்க ஆசைப்படுகிறேன்.

ஒரு மாநிலம் முன்னேறவேண்டுமென்றால், தொழில் வளர்ச்சி அதிகமாக வளரவேண்டுமென்பது நாம் அறிந்த ஒன்றாகும். அந்த நல்ல நோக்கத்தின் அடிப்படையில்தான் நமது தமிழ கத்தைப் பொறுத்தவரையில், தமிழக அரசு, அதுவும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு பொறுப்பேற்றுக்கொண்ட தற்குப் பின்னர், பல்வேறு திட்டங்களில் இந்தத் தமிழகத்திலே, தொழிற்கூடங்கள் உருவாக்கப்படவேண்டுமென்ற நல்லெண்ணத் தோடு, ஒவ்வொரு ஆண்டிலும் தொழிற்சாலைகளை உருவாக்கி நல்ல பல திட்டங்கள் வந்துகொண்டிருக்கின்றன என்பதை நிச்சயமாக நாம் மறந்துவிடமுடியாது.

அப்படி ஏற்பட்டதனுடைய விளைவாகத்தான் இன்றைக்குப் பல மாவட்டங்களிலேயும் சென்னை, கோயம்புத்தூர், திருச்சி, மதுரை போன்ற பெருநகரங்களிலேயும், தொழிற்கூடங்கள் பெருகி இருக்கின்றன என்பதை இந்தக் கொள்கை விளக்கத்திலே மட்டுமல்லாது, ஆங்காங்கு இருக்கின்ற, இந்த மன்றத்திலே இருக் கின்ற சட்டமன்ற மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் நன்றாகவே தெரிந்து கொண்டிருக்கிறார்கள்.

ஒருபுறத்திலே தொழிற்கூடங்கள் வளரவேண்டும். மாநிலம் முன்னேறுவதற்குத் தொழிற்சாலைகளைப் பெறவேண்டும். அதற்கு உரிமைக் குரல் கொடுக்கவேண்டும் என்ற ஆணித்தரமான கோரிக்கையை இந்தச் சட்டமன்றத்திலே வைக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்களாகிய நாம் எப்படியோ நூற்றுக்கு இருபதாவது, பத்தாவது மத்திய அரசு நமக்குத் தந்து கொண்டிருக்கிற அந்தத் தொழில் அனுமதிகளை தமிழ்நாட்டிலே பெற்று அமைத்து, அதை

நன்கு செயல்படுத்துவதற்கு நாம் உரிமைக் குரல் கொடுக்கிற நேரத்தில், அந்த உரிமையைப் பாதுகாக்க முதலிலே நாம் ஒத்துழைப்பு நல்கவேண்டும் என்பதை நான் உங்களில் ஒருவராக இருக்கிற காரணத்தில் பணிவன்போடு கேட்டுக்கொள்ள ஆசைப் படுகிறேன்.

அதே நேரத்தில், தொழிற்சாலைகள் அமைத்துவிட்டு, தொழிற் கூடங்களிலே முதலாளிகளே அமர்ந்துவிட்டார்கள் என்றால், அந்தத் தொழில் உரிமையாளர்கள் எதையும் செய்யலாம் என்றும், அவர்கள் இஷ்டத்திற்கு நடக்கவேண்டும் என்றும் நிச்சயமாக இந்த அண்ணாதாசன் ஒருநாளும் சொல்ல முன்வரமாட்டான். இந்த அரசும் அதை என்றைக்கும் ஏற்றுக்கொண்டதாகச் சரித்திர வரலாறு கிடையாது. ஆக, இந்த நாடு முன்னேறவேண்டும், தமிழ்நாடு முன்னேறவேண்டும் என்ற நோக்கத்தை வரவேற்கின்ற இந்த அரசு, அதே நேரத்தில் அந்தத் தொழிற்கூடங்களுக்குப் பாதுகாப்பு அளிக்கக்கூடிய ஒரு நல்ல அறிவுரையையும் எதிர்க் கட்சியிலே இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்கள், தொழிற் சங்கத்திலே அதிக அக்கறை காட்டிக் கொண்டிருக்கிற உறுப் பினர்கள் அதற்கு ஒத்துழைப்பு நல்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நான் தொழிற்கூடங்கள் அதிகமாக இருக்கின்ற திருச்சி, திருவெறும்பூர் தொகுதியிலிருந்து சட்டமன்ற உறுப்பின ராக இந்த அவையிலே இருக்கிறேன் என்பதோடு மட்டுமல்லாமல், நானும் ஒரு தொழிலாளியாக இருந்து, தொழிற்சங்கத்திற்குத் தலைவனாக இருந்து, நீதி, நேர்மை தேவை என்று கோரிக்கை வைத்து, நான் குற்றவாளியாக்கப்பட்டு, குற்றவாளியாக்கப்பட்ட தனால், நீதி கேட்டு நின்ற எனக்கு நீதி கிடைக்காமல் வீதியிலே தூக்கி எறியப்பட்டு அதற்குப் பிறகு புரட்சித் தலைவர் இதய தெய்வம் அண்ணன் எம்.ஜி.ஆர்., தூக்கி எறியப்பட்ட இந்தத் தொண்டனை, இந்தத் தொழிற்சங்கத் தலைவனாக இருந்த என்னை, இந்த மாமன்றத்திலே இரண்டு முறை உட்கார வைத்து அழகு பார்த்து, தொழிலாளிகளுக்கு மதிப்புக் கொடுத்துக் கொண்டிருக்கிறாரே, அந்த அடிப்படையில் உரிமையோடு, பணி வோடு உங்கள் மத்தியிலே நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படு கிறேன். அதற்காகத் தான் அந்தக் கருத்தை முதலிலேயே சொன்னேன்.





குறிப்பாக, மாண்புமிகு புரட்சித் தலைவரவர்கள் தொழிலா ளர்கள் மீது அக்கறை கொண்டிருக்கிறார்கள் என்பதற்கு எத்த னையோ சான்றுகள் இருக்கின்றன, செயல்திட்டங்கள் இருக் கின்றன. இருந்தாலும், நான் மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப் பினர்களுக்கு ஒன்றைச் சொல்லிக் கொள்வேன். புரட்சித் தலைவர் அவர்கள் கடந்த கால வரலாற்றில், மிகப் பெரிய மாடி வீட்டுக்குச் சொந்தக்காரராக இருந்து, பெரிய கோடீஸ்வரராக இருந்து இந்த நாட்டிலே திடீரென்று முதலமைச்சராக வரவில்லை. அவர் ஒரு தொழிலாளியாக உழைத்து, அதன் பின்னாலே அவருடைய திறமையால் வளர்ந்து, இன்றைக்கு முதலமைச்சர் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறார்.

(நண்பகல் 12-00)

அப்பேற்பட்ட அந்த முதலமைச்சர் பொறுப்பிலே இருக்கிற அவர், தொழிலாளர்களுக்கு நல்ல திட்டங்களை மற்றவர்கள் சொல்லித்தான் தெரியவேண்டும் என்பதில்லை. உதாரணமாகச் சொல்கிறேன். அவர் ஏற்றுக்கொண்டிருக்கிற துறையிலே குறிப் பிட்ட ஒரு சிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன். திரைப்பட உலகிலே அவர் ஆற்றிய தொண்டு, அவர் ஆற்றிய தொழில், அரச கட்டளை என்ற படத்திலேயிருந்து ஆரம்பிக்கிறேன். அரசிளங் குமரி, அன்னமிட்ட கை, அலிபாபாவும் நாற்பது திருடர்களும், அடிமைப்பெண், ஆயிரத்தில் ஒருவன், இன்றுபோல் என்றும் வாழ்க, இதய வீணை, இதயக் கனி, உழைக்கும் கரங்கள், உலகம் சுற்றும் வாலிபன், உரிமைக்குரல், ஊருக்கு உழைப்பவன், எங்கள் வீட்டுப் பிள்ளை, என் அண்ணன், ஒருதாய் மக்கள், நாடோடி மன்னன், மன்னாதி மன்னன், குலேபகாவலி, தாயைக் காத்த தனயன், நீதிக்குப் பின் பாசம், கன்னித்தாய், நீரும் நெருப்பும், தாய்ச்சொல்லைத் தட்டாதே, தாய்க்குப் பின் தாரம், தர்மம் தலை காக்கும், மதுரை வீரன், மதுரையை மீட்ட சுந்தரபாண்டியன், மலைக்கள்ளன், பணக்காரக் குடும்பம், மீனவ நண்பன், மாட்டுக் கார வேலன், நினைத்ததை முடிப்பவன், விவசாயி, தொழிலாளி, ரகசியப் போலீஸ், படகோட்டி, சர்வாதிகாரி, சந்திரோதயம், நல்லவன் வாழ்வான், காஞ்சித் தலைவன், சங்கே முழங்கு, குமரிக் கோட்டம், ரிக்ஷாக்காரன், நேற்று இன்று நாளை, நான் ஏன்

[திரு. எம். அண்ணாதாசன்] [1986 மே 7

மறந்தேன், கூண்டுக்கிளி, ஒளி விளக்கு, திருடாதே, சிரித்து வாழ வேண்டும் என்று இத்தனை படங்களையும் அவர் தொழிலாகக் கொண்டு, அவரும் ஒரு தொழிலாளியாக இந்த நாட்டிலே உழைத்து முன்னேறி இன்றைக்கு முதலமைச்சராக வந்திருக்கிறார். ஆக, இதை நான் ஏன் குறிப்பிடுகிறேன் என்றால் மாண்புமிகு எதிர்க்கட்சியிலே இருக்கின்ற உறுப்பினர்களுக்கு நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன், இது எங்களுடைய உரிமை, சொல்வதற்கு எனக்கு உரிமை இருக்கிறது, சொல்கிறேன். அதற்காக அங்கலாய்ப்பது நியாயம் அல்ல.

இத்தனைக்கும் சொந்தக்காரர்தான் இந்த நாட்டிலே, மக்கள் மத்தியிலே, மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிறகு, இந்த நாட்டினுடைய முதலமைச்சராக ஒரு முறை அல்ல, இரண்டு முறை அல்ல மூன்று முறை—மூன்றாவது முறையும் மக்களாலே முதலமைச்சராக இங்கே உருவாக்கப்பட்டு இந்த மாமன்றத்திலே இருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். அப்படிப்பட்ட அந்தத் தலைவரு டைய காலத்தில் தொழிலாளர் நண்பர்களுக்கு எத்தனையோ நல்ல காரியங்களையெல்லாம் செய்து இருக்கிறார்கள்.

பிணைத் தொழில் வகையில், ஊதிய உயர்வு, அகவிலைப்படி முதலிய பொதுவான கோரிக்கைகள் இந்தத் தமிழகத்திலே உள்ள தொழிலாளர்களுக்கு 16—7—1985 முதற்கொண்டு வேலை நிறுத்தம் செய்வதாக நிர்வாகிகளுக்கு அறிவிப்பு கொடுத்தார்கள், 85—86 ஆம் ஆண்டு. அதிலே இந்த அரசு உடனே தலையிட்டு, அந்த அரசு அலுவலர்களை உடனடியாக அதற்குத் தீர்வு காண பதற்கு, தீர்வுகாண வைத்து ஒரு நல்ல முடிவைத் தந்தது என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து 1984—85 ஆம் ஆண்டுக்குத் தொழிலாளர் ஊதியத் தொகை என்ற வகைக்கு, போனஸ் என்ற வகைக்கு அவர்கள் நடத்திய போராட்டம் என்ற சூழ்நிலைகளையெல்லாம் மனதிலே கருதி, தொழிலாளர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க அவர் களுடைய கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு இந்த அரசு, அரசு அதிகாரிகளை உடனடியாகப் பேச்சுவார்த்தைக்கு ஈடுபடுத்தி ... நிலையை உருவாக்கி அவர்களுடைய எண்ணங்களை நிறைவேற்றித் தந்தது.



1986 மே 7] [திரு. எம். அண்ணாதாசன்]

அடுத்து, தமிழ்நாடு பிணைத்தொழில் நிறுவனம், கிருஷ்ணா புரம் விசைத்தறி ஆலை; மதுரை, அங்கே ஏற்பட்ட சூழ்நிலைகள், தொழிற்சங்கத் தலைவர்களாக இருப்பவர்களுக்கு எல்லாம் நன்றாகத் தெரியும். நானும் கடந்த ஐந்தாண்டுக் காலமாக இந்த அவையிலே உறுப்பினராக இருந்தேன். இங்கே நிறைய பேர் பேசினார்கள். அதை இந்த அரசு அணுகி உடனடியாக அது சம்பந்தப்பட்ட ஆணையர் அவர்களையும், துணை ஆணையாளர் அவர்களையும் அனுப்பி அதற்கு நல்ல முடிவை ஏற்படுத்த வேண்டும் என்று—சம்பளமே கொடுக்க முடியாமல் போய் விட்டார்கள் ஆலை அதிபர்கள். அதையெல்லாம் கண்டு அவர் களுக்கு நல்லமுறையில் உதவி செய்ய வேண்டுமென்று—இந்த அரசு அதிலே ஒரு இணக்கமான பேச்சுவார்த்தை நடத்தி முடித்து அவர்கள் வாழ்வு வளம்பெற 4—11—1985-இல் அவர்கள் வேலைக்குச் செல்லக்கூடிய நல்லதொரு வாய்ப்பை உருவாக்கித் தந்திருந்தது.

அடுத்து, 1985 மார்ச், ஏப்ரல் மாதங்களுக்குரிய மாதச் சம்பளம் தொழிலாளர்களுக்கு வழங்கப்படவில்லை. 1985 முதல் வேலை செயல்படவில்லை. அங்கே புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் அளவிலே—இலட்சுமி, சண்முகா நூற்பாலை—என்து மாவட்டத்திற்கு அடுத்த மாவட்டம்—ரமணசமுத்திரம், புதுக் கோட்டையைச் சேர்ந்தது—சம்பளம் கொடுக்க முடியாமல் அவர்கள் லாக் பண்ணிச் சென்று விட்டார்கள். ஆகவே, நிலை மைகள் மோசமாக இருந்ததை அவர்களுக்குத் தெரிவித்து, தொழிற்சங்கத் தலைவர்களெல்லாம் சொன்னார்கள். இந்த அரசு உடனடியாகத் தலையிட்டு, அவர்களுக்கு நல்ல வாய்ப் பினை உருவாக்கித் தந்திருப்பதை யாரும் மறுக்க முடியாது. இந்த அரசு தொழிலாளர்களின் மேல் அக்கறை காட்டியிருக் கிறது என்பதற்காக நான் இந்தப் புள்ளிவிவரங்களைச் சொல் கிறேன்.

அடுத்து, பொறியியல் துறையிலே, அசோக் லீலண்ட் நிறுவனம் ஓசூரிலே இருக்கிறது. அந்த நிறுவனத்திலே உற்பத்தித் திறன் குறைவின் காரணமாக, தொழிற்சாலை நிறுவனத்தினர் அதை மூடிவிட்டனர். உற்பத்தி அதிகமாக்கப்படவில்லை. அதனாலே அவர்களுக்கு நஷ்டம் ஏற்படுகிறது என்று சொல்லி, தொழிற் சாலையை மூடிவிட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் திரு.

ஹேமச்சந்திரன் போன்றவர்கள், மாண்புமிகு அண்ணன் ரமணி
போன்றவர்கள், திரு. உமாநாத் போன்றவர்கள் இன்னும் தி.மு.க.
வைச் சேர்ந்தவர்கள் எல்லாம் சொன்னார்கள். அந்த நிலையிலே,
புரட்சித் தலைவர் அரசு உடனுக்குடன் தொழிலாளர் நலத் துறை
அமைச்சர் அவர்களை அனுப்பி, பேச்சுவார்த்தை நடத்தச்
சொல்லி, பேச்சுவார்த்தையின் முடிவில் 12 (3) செட்டில்மென்ட்
முடிந்துவிட்டால் ஓரளவுக்குத் திருப்தியாக இருக்கும் என்ற அள
விற்கு 12 (3) செட்டில்மென்ட் போட்டு, கிட்டத்தட்ட 1,400 தொழி
லாளர்கள், ஒவ்வொருவரும் ரூ. 1,000 வருமானம் பெற வழிவகை
செய்யப்பட்டது. அதையும் இந்தப் புரட்சித் தலைவர் அரசு
தான் செய்து காட்டியிருக்கிறது என்பதை நான் இங்கே சுட்டிக்
காட்ட விரும்புகிறேன்.

தமிழ்நாட்டிலே கூட்டுறவு தனியார், சர்க்கரை ஆலைகள்
எல்லாம் 19—3—1982 ஆம் ஆண்டு உடன்பாடு காணாமல்
இருந்தன. அதற்கு முன்னால் செய்யப்பட்ட ஒப்பந்தம்
காலாவதி ஆகிவிட்டதால் தொழில் தகராறு ஏற்பட்டது. இடை
யிலே, மூன்றாவது ஊதியக் குழு அமைக்கப்படுவதாக மத்திய
அரசு அறிவித்தது. இடைக்கால நிவாரணம் கோரினர் தொழி
லாளர். அதிலே அரசு தலையிட்டு அதையும் தீர்த்து வைத்தது.
இப்படி பல தொழிற் சங்கங்களினுடைய தகராறுகளைத் தொழில்
கூட்டுத் தகராறுகளை, உடனுக்குடன் தீர்த்து வைத்த பெருமை
தமிழ்நாடு அரசுக்கு, புரட்சித் தலைவர் அரசுக்குச் சேரும்.
அதற்கு எத்தனையோ ஆதாரங்கள் என்னிடத்திலே இருக்
கின்றன. ஆனால், நேரம் போதவில்லை. பட்டியல் போட்டுச்
சொல்ல முடியும். அந்த அளவுக்கு இருக்கிறது. புரட்சித்
தலைவர் அரசு, தொழிலாளர்கள் மத்தியிலே அதிகப்படியான
அக்கறை காட்டி, அவர்கள் கேட்ட கோரிக்கைகளை எல்லாம்
நிறைவேற்றி வந்திருக்கிறார்கள். பஸ் தொழிலாளர்களாக இருந்
தாலும் சரி, எந்தத் தொழிலாளர்களாக இருந்தாலும் சரி, எல்லோ
ருக்கும் பாதுகாப்புக் கொடுத்திருக்கிற அரசு இந்த அரசு
என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னொன்று, என்னுடைய தொகுதி மிக முக்கியமான
தொகுதி. தமிழ்நாட்டின் மையப் பகுதியிலே அமைந்திருக்கிற
தொகுதியாகும். இங்கே நான் அடிக்கடிச் சொல்லியிருக்கிறேன்,





இந்தியாவிற்கே ஒரு பெருமை சேர்த்துக் கொண்டிருக்கிற மிகப்
பெரிய தொழிற்கூடமாக பாய்லர் தொழிற்கூடம் இருக்கிறது.
அங்கே கடந்த ஒரு மாத காலமாக, பொன்மலை நகராட்சியைச்
சேர்ந்த பகுதிகளில்—ஸ்டீல் ரோலிங் மில்லில் உள்ளிருப்பு வேலை
நிறுத்தம் செய்து கொண்டிருந்தார்கள். அதற்குப் பிறகு, அங்கே
இருக்கிற நிர்வாகத்தினர் பேச்சுவார்த்தை நடத்தி, தீர்த்துக்
கொள்ளலாம் என்று 30 ஆம் தேதி பேசுவது, 3 ஆம் தேதி பேசுவது
என்றெல்லாம் பாதி நாள் அந்தத் தொழிலாளர்களைக் காலம்
கடத்தி வந்து, அது முடியாத காரணத்தினால், இன்றைக்கு
அங்கே அவர்களுக்கு ஆதரவாக காவேரி இண்டஸ்ட்ரீஸ் பக்கத்
திலே இருக்கிற இன்னும் பல தொழிற்சாலைகளின் தொழிலா
ளர்கள் உதவிகரமாக இருந்து, அவர்கள் கோரிக்கைகளை நிறை
வேற்றித் தரவேண்டுமென்று போராட்டம் நடத்திக் கொண்டிருக்
கிறார்கள். இந்த நிலையில், நான் சட்டமன்ற உறுப்பினர் என்ற
முறையினால், எனக்கு முழு உரிமை இருக்கிறது என்ற முறையி
னால், இந்த மாமன்றத்தின் மூலமாக, அரசுக்குத் தெரிவித்து,
அங்கேயிருக்கிற அந்தத் தொழிலாளர்களுடைய கோரிக்கையை,
அரசுத் தரப்பிலேயிருந்து யாரையாவது அனுப்பி, அவர்கள் மத்தி
யிலும், தொழிலாளர்கள் மத்தியிலும் வைத்து, நிர்வாகத்தோடு
பேச்சு வார்த்தை நடத்தினால், அது சுலபமாகத் தீர்ந்து விடும்.

(பிற்பகல் 12-10)

காரணம் அந்த நிர்வாகத்திலே பணியாற்றக்கூடியவர்கள் ரிடையர்
ஆனவர்கள். ரிடையர் ஆனவர்கள் அத்தனை பேரும் டி.எஸ்.பி.
யாக இருந்தவர்கள், எஸ்.பி.யாக இருந்தவர்கள். அந்தத் தொழி
லாளர்கள் தவறு செய்யவில்லை என்று சொல்வதற்கில்லை. அவர்
களும் சில தவறுகளைச் செய்யலாம். ஆனால் ஒரு சிறு தவறு
செய்தால் அங்குள்ள அந்த அதிகாரிகள் இதற்கு மாறாக பலவித
கோணங்களில் குற்றங்களைச் சொல்லி அதை திசை திருப்பி,
முதலாளிகளிடத்தில் அதைத் தீர்வு காண விடாமல் பயமுறுத்து
கிறார்கள் என்பது எனக்கு நன்றாகவே தெரியும். நானே பல
முறை தொலைபேசி மூலமாகச் சொன்னேன். இது நல்லதல்ல.
உடனே செய்து தீர்த்து விடுங்கள். இது வளர வேண்டாம் என்று
சொன்னேன். ஏனோ தெரியவில்லை. சட்டமன்ற உறுப்பி
னர்கள் சொல்வது அவர்கள் காதுகளுக்கு ஏறவில்லையோ

என்னவோ தெரியவில்லை. இன்றைக்கு அது மிகப் பெரியதாக வளர்ந்து தஞ்சை நெடுஞ்சாலையிலே பை-பாஸ் ரோடிலே தினம் தினம் போராட்டம் நடத்துகின்ற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அதனால் அங்கே உள்ள தொழிலாளர் வர்க்கத்தின் தாய்மார்கள் பட்டினியாகக் கிடக்கிறார்கள். இந்த நிலையை மாற்றுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். தொழிற்சங்கத்தின் தலைவர்களாக இருக்கக் கூடியவர்கள் அவர்கள் காரியத்தை சாதித்துக்கொள்வதற்காக இருக்கலாம். எனவே அரசு தலையிட்டு உடனடியாக தீர்த்து வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போலவே காவேரி என்ஜினியரிங் ஸ்ட்ரக்சரல்ஸ். அது ஒரு பெரிய நிறுவனம். அந்த நிறுவனத் தொழிலாளர்கள் 1980-க்கு முன்னாலே அவர்களுடைய உரிமையைக் கேட்டு போராட்டம் நடத்தினார்கள். நான் சொல்வதெல்லாம் ப்ரைவேட் இன்ஸ்டிட்யூட்ஸ், அதாவது தனியார் நிறுவனங்கள், கேட்கின்ற உரிமைகளை தட்டிப்பறிப்பதோடு மட்டுமல்லாமல், வேலை நீக்கமும் செய்கிறார்கள். இங்கே வந்திருக்கின்ற உயர் அதிகாரிகளுக்கும் இது நன்கு தெரியும். இந்த நேரத்திலே நான் இதிலே தலையிடுவதற்கு காரணம் அது என்னுடைய தொகுதி. தொகுதி மக்கள் கண்ணீர் விட்டுக் கொண்டிருக்கிறார்கள். தொழிலாளர்கள் குடும்பங்களும் அங்கே செத்துக் கொண்டிருக்கின்றன. அங்கே ஆபத்தான நிலை உருவாக்கப்பட்டுவிடுமோ என்ற அச்சம் ஏற்படுகின்றது. அங்கே அப்படிப்பட்ட ஒரு நிலைமை ஏற்படுமானால் அதற்கு நானும் பொறுப்பாளியாக என்னையும் சேர்க்கின்ற ஒரு நிலைமை ஏற்பட்டுவிடும் என்பதனால் அதை நீங்கள் உடனடியாக கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஸ்டீல் ரோலிங் மில்ஸ், காவேரி ஸ்ட்ரக்சுரல்ஸ் அந்தத் தொழிற்கூடத்தில் நீண்ட காலமாக கோர்ட்டிலே தொழிலாளர்களுக்குச் சாதகமாக நீதி வழங்கப்பட்டும் முதலாளி அதற்கும் தலைவணங்குவதாக இல்லை. ஆகவே நியாயத்திற்கு முரணாக செல்லுகின்ற எவ்வளவு பெரிய தொழில் அதிபராக இருந்தாலும் அவர்களை விட்டு வைக்கக்கூடாது இந்த ஆட்சி என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்கிறேன்.



அடுத்து என்னுடைய தொகுதியில் தோல் பதனிடும் தொழிற்கூடங்கள் அதிகமாக இருக்கின்றன. அந்தத் தொழிலாளர்கள் எல்லாம் மிகவும் தாழ்த்தப்பட்ட தொழிலாளர்கள். அந்தத் தொழிலாளர்கள் படுகின்ற கஷ்டம் எங்களால் சகிக்க முடியவில்லை. எல்லாம் தனியார் கையில் இருக்கின்றன. எந்த வசதியும் இல்லை. சுகாதாரவசதி கிடையாது. குடியிருப்பதற்கு வீடு கிடையாது. லைட் கிடையாது. அந்த இடங்கள் எல்லாம் சர்க்கார் புறம்போக்காக இருந்த இடம். அவர்கள் எல்லாம் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார்கள். அங்கே குடியிருக்கின்ற தோல் பதனிடும் தொழிலாளர்களுக்கு அதை உரிமையாக்கி, அரசு நிதி வழங்கி வீடு கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சுகாதார வசதியும் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்ட்ரீஸ்ஸில் வேலை செய்தவர்கள் வேலை இல்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். பாய்லர் தொழிற்சாலையிலிருந்து வேலைகளை ராணிப்பேட்டைக்கு மாற்றிவிட்டார்கள். இதனால் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை இழந்திருக்கிறார்கள். அவர்களுக்குப் பாதுகாப்புத் தரவேண்டுமென்று இந்த மன்றத்தின் மூலமாக அந்தத் தொழிற்சாலை நிர்வாகத்தினருக்கும் இங்கே இருக்கின்ற அதிகாரிகளுக்கும் தெரிவித்து ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டு வாய்ப்பு தந்தமைக்காக நன்றி கூறி முடிக்கிறேன்.

* திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் நல மானியத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக என்னுடைய கருத்துக்களை நான் எடுத்து வைக்கிறேன்.

இந்த மானியத்தில் 14½ கோடி ரூபாய் மட்டுமே ஒதுக்கப்பட்டிருக்கிறது. 3,275 கோடி ரூபாய் வரவு-செலவு செய்கிற இந்த அரசு உழைக்கிற மக்களுடைய உரிமையைப் பாதுகாப்பதற்கும், அவர்களுக்குத் தரவேண்டிய சலுகைகளுக்காகவும் 14½ கோடி ரூபாய் மாத்திரமே ஒதுக்கியிருப்பது என்பது வருத்தப்படக் கூடிய காரியம்.

தொழிலாளர்களைப் பற்றி எனக்கு முன்னாலே பேசிய ஆளும் கட்சி சட்டமன்ற உறுப்பினர் மிகவும் தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். அவர்களுடைய தொகுதியில் இருக்கக்கூடிய பரிதாபகரமான நிலையைப் பற்றியும், தொகுதி மக்களுடைய கண்ணீர், தொழிலாளர்கள் செத்துக்கொண்டிருக்கின்ற நிலைமை ஆகியவற்றைப் பற்றியும் தெளிவாக எடுத்துச் சொன்ன காரணத்தால் அதிலே நான் அதிகமாகப் போக வேண்டிய அவசியம் இல்லை.

திராவிட முன்னேற்றக் கழகம் உட்பட எதிர்க்கட்சிகள், தொழிலாளர்கள் உரிமைகளைக் காப்பாற்ற எடுத்துக்கொள்கிற முயற்சியில் ஆளுகிற அரசாங்கம் செய்கிற தவறான, காரியங்களைச் சுட்டிக் காட்டும்போது, தொழிலாளர்களைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு தொழிலாளர் நல அமைச்சருக்கு இருக்கிறது. ஆனால் நம்முடைய தமிழ்நாட்டில் இருக்கிற துர்ப்பாக்கியம் என்னவென்றால் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தன்னையே காப்பாற்றிக்கொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டு விட்டதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பதவியிலே இருந்த ஒன்றரை ஆண்டுக்காலமாக தொழிலாளர்களுக்காகச் செய்யவேண்டிய காரியங்களைச் செய்யத் தவறி, திறக்கவேண்டிய பஞ்சாலைகளைத் திறக்க அவரால் முடியாமல் போய்விட்டது. கடைசியில் மீனம்பாக்கத்தில் இருக்கிற பின்னி இன்ஜினியரிங் தொழிற்சாலை நிர்வாகம் அரசின் கட்டளையை மீறி கதவு அடைப்பு செய்தது. அந்தப் பிரச்சினையை மத்தியஸ்தத்திற்கு விட்டு அரசு உத்தரவிட்ட நிலைமையில் நிர்வாகம் கதவடைப்பு செய்துள்ளது. ஆனால் அந்த முதலாளிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை. ஆனால் கதவடைப்பு செய்யக்கூடாது என்று சொன்ன அமைச்சர் மீது இன்றையதினம் நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது. அவருடைய பதவிக் காலத்தில் அவர் செய்த ஒரே துணிச்சலான காரியம் அதுதான்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. நடராசன் அவர்கள் தொடர்ந்து தொழிலாளர் நலத்துறை அமைச்சராக இருந்த திரு. கே. ஏ. கே. அவர்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். இது தொழிலாளர் நலத்துறை மானியம் தானே





தவிர, தொழிலாளர் நலத்துறை அமைச்சராக இருந்தவர் பற்றிய மானியக் கோரிக்கை அல்ல. இதனை அவர்களுக்கு நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

**திரு. ஆ. நடராசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் தொழிலாளர் நலத்துறை அமைச்சரைப் பற்றி நான் பேசிக்கொண்டிருப்பதாகக் குறிப்பிட்டார்கள். இந்த ஒன்றரை ஆண்டுக்காலம் அவர்தான் தொழிலாளர்களுக்கு நலம் செய்வதற்கான அமைச்சராக இருந்தவர் என்பதை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கேயிருந்து போனால் அவர்களைப் பாராட்டுவது என்ற முறையை மேற்கொண்டிருக்கிறீர்கள்போல் தெரிகிறது. ஆனால் இது மானியக் கோரிக்கைக்குச் சம்பந்தம் இல்லை என்பதைத்தான் நான் குறிப்பிட்டேன்.

**திரு. ஆ. நடராசன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த நிலைமைகளை எடுத்துக்காட்டி இந்த அரசினுடைய தவறான போக்குகளை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 100-வது மே தின விழா நடைபெறுகிற இந்தச் சந்தர்ப்பத்தில் தொழிலாளர்களுடைய உரிமை பாதுகாக்கப்பட வேண்டும். ஆனால் ஆலை முதலாளிகள் கதவடைப்பு செய்கிற காட்சியைப் பார்க்கிறோம். உள்ளிருப்பு வேலை நிறுத்தத்தைப் போலீசாரை வைத்துக்கொண்டு தகர்க்கிற முறைகளையும் நாம் அன்றாடம் பார்த்துக்கொண்டிருக்கிறோம். நிரந்தரத் தொழிலாளர்களுக்கு லே ஆஃப் கொடுத்துவிட்டு டிரெயினீஸ் என்ற பயிற்சியாளர்களையும், ஐ.டி.ஐ. பயிற்சியாளர்களையும் வேலைக்கு வைத்துக்கொண்டு இருக்கிற நிலைமையைப் பார்க்கிறோம். ஆட்குறைப்பு செய்துவிட்டு வாரக்கூலி, தினக்கூலி, என்ற வகையில் ஆட்களை வைத்துக்கொள்கிற நிலைமை இருக்கிறது, பார்க்கிறோம். எங்களுடைய மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இதுபற்றி பல சந்தர்ப்பங்களிலே இங்கே நாங்கள் குறிப்பிட்டிருக்கிறோம். அங்கே 8 ஆலைகள் மூடப்பட்டிருக்கின்றன. குறிப்பாக என்னுடைய தொகுதியில் உள்ள பவானி மில் கடந்த 7 மாத காலமாக

[திரு. ஆ. நடராசன்] [1986 மே 7

மூடப்பட்டு இருக்கிறது. அங்கே 700 தொழிலாளர்கள் பணி யாற்றுகிறார்கள். இங்கே கவன ஈர்ப்புத் தீர்மானம் வந்தபோது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள் அங்கே ஆலை மூடப்படவில்லை, கதவடைப்புதான் செய்யப்பட்டிருக்கிறது என்று. கதவடைப்பு செய்தாலும், மூடப்பட்டாலும் 700 குடும்பங்கள் இன்றையதினம் நடு வீதியில் நிற்கிற பரிதாபகரமான நிலைமை ஏற்பட்டு இருக்கிறது. அங்கே இலங்கை அகதிகள் 100 பேர் பணியாற்றுகிறார்கள். இலங்கை அகதிகளைப் பொறுத்த வரையில் ஒரு தொழிலாளிக்கு 25 ஆயிரம் ரூபாய் என்ற வகையில் 25 இலட்சம் ரூபாய் பணத்தை அரசாங்கத்திலிருந்து பெற்று இன்றையதினம் அந்த இலங்கைத் தமிழர்கள் இலங்கையில் பட்ட துன்பம் போதாது என்று சொல்லி இங்கேயும் துன்பப்படுகிற நிலைமையை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அவர்களுக்காகக் கொடுக்கப்பட்ட தொகையைக் கொள்ளை அடித்துக்கொண்டு அவர்கள் 7 மாத காலமாக பஞ்சத்தோடும் பசியோடும், இருந்து வருகிற நிலைமையை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அந்தத் தொழிலாளர்களுக்கு பி.எஃப் கடன் வேண்டும் என்று சொன்னால் அரசாங்கம் அந்தத் தொழிற்சாலை மூடப்படவில்லை என்று சொல்லுகின்றது. ஆனால் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியிலே இருந்தபோது மூடப்பட்டிருந்த 13 பஞ்சாலைகளை தமிழ்நாடு டெக்ஸ்டைல் கார்ப்பொரேஷன் என்ற அமைப்பை ஏற்படுத்தி உடனடியாகத் திறந்தது. ஆனால் இன்றையதினம் என்ன நிலைமை? ஒவ்வொரு ஆண்டும் நாங்கள் தொழி லாளர் மானியத்திலே பேசுகிறபோது, பல பிரச்னைகளை எடுத்துச் சொல்கிறபோது, மூடப்பட்டிருக்கிற ஆலைகள், ஆண்டுக்கணக்காகத் திறக்கப்படாமல் மூடப்பட்ட நிலைமையி லேயே இருந்து வருகின்றன என்பதைச் சொல்லியிருக்கிறோம்.

(பிற்பகல் 12-20)

கோவை மாவட்டத்திலே ராமகிருஷ்ணா இண்டஸ்ட்ரீஸ் மூடப் பட்டு 1 வருடம் 7 மாத காலமாகிவிட்டது. அங்கே 11 தொழி லாளர்கள் கூட இறந்து விட்டார்கள். ஈ.எஸ்.ஐ. மருத்துவ வசதி கூட அங்கே தரப்படவில்லை. ஈ.எஸ்.ஐ.-க்காக தொழிலாளர் களின் ஊதியத்திலிருந்து வசூல் செய்யப்படுகின்ற தொகையை



1986 மே 7] [திரு. ஆ. நடராசன்]

அந்த நிறுவனத்தினர் கட்டாத காரணத்தால், மருத்துவ வசதி கூட பெற முடியவில்லை. அதைப்போல நம்முடைய முன்னாள் தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் 12—3—1986-லே அங்கே இருக்கின்ற 400 தொழிலாளர்களுக்கும் ரூ. 200 உதவித் தொகையை நாங்கள் வழங்குகிறோம் என்று சொன்னார்கள். ஆனால் இது வரை எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை, அங்கே பணமும் தரப்படவில்லை, என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

என்னுடைய தொகுதியிலே இருக்கிற எவரஸ்ட் தொழிற் சாலையில் ஏறக்குறைய ஆயிரம் தொழிலாளர்கள் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். கடந்த 3 மாத காலமாக அங்கே சம்பளம் தரப்படவில்லை. வங்கிகளிலே சில கட்டுப்பாடுகளை வைத்திருக்கிற காரணத்தால், தொழிற்சாலையையே நடத்த முடியவில்லை என்று நிர்வாகிகள் சொல்லுகிறார்கள். மூன்று மாத காலமாக ஒரு தொழிற்சாலையில் சம்பளம் தரப் படாமல் இருக்கிறது. தொழிற்சங்கங்கள் நடவடிக்கைகள் எடுக்கின்றன. ஆனால் எந்தவிதமான பயனும் ஏற்படாத நிலையில் இருந்து வருகிறது. எனவே உடனடியாக அந்தக் கம்பெனியை சிக் இண்டஸ்ட்ரீஸ் என்று அறிவித்து அதனை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதைப்போலவே கோவையிலே ஸ்ரீஹரி மில்ஸ் கடந்த 2 வருடம் 1 மாத காலமாக மூடப்பட்டிருக்கிறது.

1,500 தொழிலாளர்களுக்கு மேல் பணியாற்றக்கூடிய வசந்தா மில்ஸ் என்னும் நிறுவனம் கடந்த 1½ ஆண்டுக் காலமாக மூடப் பட்டிருக்கிறது. ஜனார்த்தனா மில்ஸ் கடந்த 2¾ ஆண்டுக் காலமாக மூடப்பட்டிருக்கிறது. அந்த ஆலைகளை எல்லாம் திறப்பதாக அரசாங்கம் அறிவித்தது. ஆனால் என்ன நிலைமை? கடந்த ஒருமாத காலமாகவே ரிப்போர்ட் தயாரிக்கப்படுகிறது, தயார் செய்து கொண்டிருக்கிறோம் என்று சொல்லி வருகி றார்கள். நான் பேரவைத் துணைத் தலைவர் மூலமாக அரசாங் கத்தைக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். கடந்த 2½ ஆண்டுக் காலமாக ஆலைகள் மூடப்பட்டிருக்கிற நிலைமையில் நீங்கள் வேறு என்ன காரியங்களை முக்கியமாக செய்து கொண்டிருக் கிறீர்கள் என்பதுதான் எனக்குப் புரியாத புதிராக இருக்கிறது.

[திரு. ஆ. நடராசன்] [1986 மே 7

அதைப்போலவே மேட்டூர் டெக்ஸ்டைல்ஸ் 2,500 தொழிலாளர்கள் பணியாற்றக் கூடிய ஒரு மில், கடந்த 10 மாத காலமாக பேச்சுவார்த்தை இன்றி, மூடப்பட்டு, அங்கேயிருக்கின்ற 2,500 தொழிலாளர்களும் துன்பத்திலே இருந்து வருகிறார்கள். திருப்பூரிலே 5 ஆண்டுக் காலமாக தமிழ்நாடு ஸ்பின்னிங் மில்ஸ் மூடப்பட்டிருக்கிறது. உண்மையிலேயே உழைக்கும் கரம், உரிமைக் குரல் என்றெல்லாம் பட்டியல் போட்டு காட்டுகிறார்களே, இந்த ஆட்சியிலே 5 ஆண்டுக் காலமாக ஒரு ஆலையைக்கூட திறக்க முடியாத நிலை மிகவும் கேவலமாக இருந்து வருகிறது.

ஸ்ரீ பத்மா மில்ஸ் காளப்பட்டியிலே இருக்கக்கூடிய மில். 5 ஆண்டு 8 மாத காலமாக பூட்டு திறக்கவேபடாமல் இருக்கிறது. சமீபத்திலே அஷயா டெக்ஸ்டைல்ஸ் என்கிற மில்லில் ஏறக்குறைய 560 தொழிலாளர்கள் பணிபுரிகிறார்கள். அந்தத் தொழிலாளர்கள் பொது வேலை நிறுத்தத்தின்போது வேலைநிறுத்தம் செய்தார்கள். வேலைநிறுத்தம் முடிந்தபோது நிர்வாகம் அந்த ஆலையில் 200 தொழிலாளர்களைக் குறைக்க வேண்டும் என்பதற்காக எந்தவிதமான அனுமதியும் இல்லாமல் அந்த ஆலை மூடப்பட்டிருக்கிற நிலைமை இருக்கிறது. அதையெல்லாம் அரசாங்கம் கவனிக்க வேண்டும். அங்கே பணியாற்றுகின்ற தொழிலாளர்கள் கூட்டுறவு பண்டக சாலைக்காக 10 லட்சம் ரூபாயை ஊதியத்தில் பிடித்தம் செய்து, அந்த பத்து லட்சம் ரூபாயை அந்த நிர்வாகம், கூட்டுறவு பண்டக சாலைக்குச் செலுத்தாமல் இருக்கிற நிலைமையைப் பார்க்கிறோம்.

திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியிலே இருந்தபோது பஞ்சாலை தொழிலாளர்கள் போனஸுக்காகப் போராடினார்கள். அந்த நேரத்திலே எங்களுடைய தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தார். அந்தத் தொழிலாளர்களின் பிரச்னையை ஒரே ஒரு நாள் பேச்சுவார்த்தையிலேயே முடித்துத் தந்த காட்சியைப் பார்த்தோம். ஆனால் இன்றையதினம் போனஸ் பிரச்னை என்றாலே அரசாங்கம் பேசி முடிக்க இயலாது என்று சொல்லி கோர்ட்டிற்கு விடுகிற காட்சியைத்தான் பார்க்கிறோம். அந்த நிலைமைகளை மாற்றித் தர வேண்டும் என்று கேட்டுக்



1986 மே 7] [திரு. ஆ. நடராசன்]

மாதவரம் சதர்ன் அலாய் பவுண்டரீஸ்லே பணி ஆற்றிய 270 தொழிலாளர்கள் அந்த நிறுவனம் மூடப்பட்டிருப்பதால் மிகவும் சிரமப்படுகிறார்கள். தொழிலாளர்களைப் பழி வாங்கும் நோக்கத் சங்கம் காரணத்தினை சரியாக நிரூபிக்கவில்லை என்று துடன் அது மூடப்பட்டிருக்கிறது. பேச்சு வார்த்தையின்போது சொல்லி வழக்கு மன்றத்திற்கு அனுப்பவில்லை. அந்த நிர்வாகம் வேறு ஒரு நிர்வாகத்திடம் ஒப்படைக்கப்பட்டது. அங்கே எங்கள் சங்கத்தினுடைய பொதுச் செயலாளராக இருக்கிற திரு. சண்முகம் அவர்களைப் பழி வாங்கும் நிலைமை இருக்கிறது. அதனைக் கோர்ட்டிற்கு விடக்கூட அரசாங்கம் தயாராக இல்லை என்று சொல்லிவிட்டார்கள். இந்த நிலைமைகளை மாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சிம்சன் தொழிலாளர் போராட்டத்தில் மத்திய சங்கங்கள் 15 வேலையிழந்த தொழிலாளர்களைத் திரும்பவும் வேலைக்கு எடுக்கிற முடிவை முதலமைச்சரிடம் விட்டார்கள். ஆனால் 3 ஆண்டுக் காலம் ஆகிவிட்டது. முதலமைச்சர் முடிவை அறிவிக்க வில்லை. இதே சிம்சன் பிரச்னையில் எங்களுடைய தலைவர் கலைஞர் முதலமைச்சராக இருந்தபோது சாட்டூர் கோபால் அவர்கள் சங்கத்தின் தலைவர் பொறுப்பிலிருந்து விலகவேண்டுமென்று எதிர்க் கட்சிகள் சொன்னபோது, அதையும் ஏற்றுக் கொண்டு, கொலை வழக்கிலே சம்பந்தப்பட்டவர்கள் உட்பட 400 பேர்கள் சஸ்பெண்ட் செய்யப்பட்ட நிலைமைகளை மாற்றி, அவர்களையெல்லாம் வேலைக்கு எடுத்த சம்பவத்தை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

மாதவரம் பால் பண்ணைத் தொழிலாளர்கள் ஒரே ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தம் செய்தார்கள். அதற்கு இன்றைய தினம் அவர்களுடைய குடும்பம் நடுத்தெருவில் நிற்கிற நிலைமை இருக்கிறது. அரசாங்கம் தலையிட்டு அந்தத் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பைத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பல்லடத்தில் விசைத்தறி தொழிலாளர்கள் போராடினார்கள். கலெக்டர் ஆதிமூலம் அவர்கள் ஒரு உடன்பாடு ஏற்படுத்தி கடந்த இரண்டு ஆண்டுகாலமாக 200 தொழிலாளர்கள் மீது வழக்கு

போடப்பட்டு, வாய்தாவிற்குச் சென்று கொண்டிருக்கிற நிலைமையைப் பார்க்கிறோம். அந்த உடன்பாட்டிலே வழக்குகளைத் திரும்பப் பெற வேண்டுமென்று சரத்து இருக்கிறது. ஆனாலும் அதனை நிறைவேற்றாத நிலைமையை பார்க்கிறோம். 480 நாட்கள் பணியாற்றிய தொழிலாளர்களை நிரந்தரம் செய்கிறோம். அரசாங்கத்தின் புரட்சிகரமான திட்டமென்று மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் சொல்லிக் கொண்டிருந்தார். என்ன நிலைமை? மாடல் எம்ப்ளாயர் என்று இருக்கவேண்டிய அரசாங்கத்தில் இன்றையதினம் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் நிரந்தரமற்ற நிலையில் இருக்கிறார்கள். 480 நாட்கள் அல்ல, 10 ஆண்டுகள், 15 ஆண்டுகள் பணியாற்றியவர்கள் பல்வேறு துறைகளில் இன்றையதினம் நிரந்தரம் செய்யப்படாமல் இருக்கிறார்கள். அதனால் 480 நாட்கள் பணியாற்றிய தொழிலாளர்களை நிரந்தரப்படுத்துங்கள் என்று தனிப்பட்ட கம்பெனிகளை நிர்ப்பந்தப்படுத்துகிற தகுதியை இழந்திருக்கிறீர்கள். அரசாங்கத்தின் அத்தனை துறைகளிலும் 5 ஆண்டுகள், 10 ஆண்டுகள், 15 ஆண்டுகள் என்று பணியாற்றி இருக்கிற தொழிலாளர்களை நிரந்தரப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். போடுகிற சட்டத்தை நிறைவேற்றக்கூடிய நிலைமை இல்லை. ஆயிரக்கணக்கான சத்துணவு அமைப்பாளர்கள் 30 ரூபாய், 60 ரூபாய், 175 ரூபாய் என்கிற சம்பள விகிதத்தில் இன்றையதினம் நாடு முழுவதும் இருக்கிறார்கள். அவர்கள் சென்னை கோட்டையை நோக்கி ஊர்வலம் வந்தபோது அவர்களின் மனுக்களை பெறுகிற நிலைமையில் கூட அமைச்சர்கள் இல்லையென்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதேபோல தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம். 1,100 கிராம நியாயவிலைக் கடைகளை உடனடியாக ஒரே உத்தரவு போட்டு கடந்த ஜூலை மாதத்தில், அவர்களையெல்லாம் கொண்டு போய் கிராமக் கூட்டுறவு விவசாய சங்கங்களில் ஒப்படைத்து இருக்கிறார்கள். அவர்கள் கடந்த எட்டு ஆண்டுக்காலமாக பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். பயிற்சி எழுத்தர் என்ற பெயரில் எட்டு ஆண்டுக்காலமாக பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அந்தத் துறையில் பயிற்சி பெற்றிருக்கிறார்கள். அவர்களைக் கொண்டுபோய் 150 ரூபாய் சம்பளத்தில் கிராம





விவசாயக் கூட்டுறவுச் சங்கங்களில் வைத்திருக்கிறீர்கள். நான் உங்களைப் பார்த்து கேட்கிறேன். குறைந்தபட்ச கூலி 210 ரூபாய் என்று நிர்ணயம் செய்துவிட்டு, 150 ரூபாய்க்கு அந்த ஏழைத் தொழிலாளர்களுக்குப் பயிற்சி என்று சொல்லி எட்டு ஆண்டுக்காலம் அவர்கள் உழைப்பை உறிஞ்சிவிட்டு இன்றைய தினம் கிராம விவசாய கூட்டுறவுச் சங்கங்களில் நிரந்தரமற்ற தொழிலாளர்களாக வைத்திருக்கிறீர்கள். ராக்கெட்டில் செல்ல ராகேஷ் சர்மா கூட ஒரு ஆண்டுக்காலம்தான் பயிற்சி பெற்றார். ஆனால் இந்தத் தொழிலாளர்கள் எட்டு ஆண்டுக் காலத்திற்கு மேல் பயிற்சி பெற்றிருக்கிறார்கள். இரண்டு ஆண்டுகளில் நிரந்தரம் செய்கிறோம் என்று சொன்னீர்கள். அந்த நிலைமை இல்லாததை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்தத் துறையில் பணியாற்றிய இரண்டு தொழிலாளர்கள். தஞ்சைக்கு மாற்றப்பட்ட பில் கிளார்க் கனகசபாபதி என்பவர் 1979-ம் ஆண்டு முதல் காணவில்லை. அதைப்போல தென்னாற்காடு மாவட்டத்தில் நியாயவிலைக் கடைகளை கண்காணிக்கச் சென்ற கோவிந்தசாமி என்பவர் 5—7—1984 முதல் காணவில்லை. அவர்களைக் கண்டுபிடித்து கொடுத்து அவர்களுடைய குடும்பத்தை காப்பாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வீட்டு வாடகைப்படிக்காக நீண்டகாலமாக சட்டம் கொண்டு வர வேண்டும் என்று சொல்லப்பட்டது. கொண்டு வருகிறோம் என்று கொள்கைக் குறிப்பில் சொல்லப் பட்டிருக்கிறது. உடனடியாக அதனைக் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-30)

கோவை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் தொழிலாளர் நலத்துறையின் பல அலுவலகங்கள் இன்றையதினம் மூலை முடுக்குகளில் இருக்கின்றன. சங்கங்களிலிருந்து சென்று எளிதாக பேசுகிற நிலைமை இல்லாமல் இருக்கிறது. அவற்றை எல்லாம் ஒரே இடத்திற்கு கொண்டு வர வேண்டும். இப்போது இணை ஆணையர் அலுவலகம் துவங்கப்பட்டு இருக்கிறது. எனவே புதியதாக சொந்தக் கட்டிடத்தைக் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஈ.எஸ்.ஐ. மருத்துவமனையைத் துவங்குவதற்கு மதுக்கரையிலேயும், ஒத்தைக்கால் மண்டபத்திலேயும்,

குனியமுத்தூரிலேயும், சுந்தராபுரத்திலேயும், 1980 ஆம் ஆண்டிலே இருந்து இடத்தைப் பார்த்துக் கொண்டு இருக்கிற நிலைமை இருக்கிறதே தவிர, அவை இன்னும் துவங்கப்படவில்லை. எனவே அதையும் உடனடியாக துவங்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

லேபர் வெல்பேர் போர்டிலே, கட்சி, சங்கம் வேறுபாடு பார்த்து, இன்றையதினம் அதற்குப் பிரதிநிதித்துவம் தரப்படுகிறது. தமிழகத்திலே இருக்கிற தொழிற்சங்க இயக்கத்திலே பெரும் பங்கு வகிக்கின்ற தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவைக்கு இந்தக் குழுவிலே அங்கம் அளிக்கிற வகையிலே, அதற்குப் பிரதிநிதித்துவம் அளிக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அதைப்போல பல குழுக்களிலே இன்னும் உறுப்பினர்களை நியமிக்காத நிலைமை இருக்கிறது. அதற்கும் நீங்கள் உடனடியாக உறுப்பினர்களை நியமித்து தொழிலாளர்களுடைய நலத்தைக் காக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

தென் ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள ஆனூர் ஊராட்சி ஒன்றியத்திலே இருக்கக்கூடிய ஆரோ ஃபுட் தொழிற்சாலையில் இன்றைக்கு 1,250 தொழிலாளர்கள் உள்ளிருப்பு வேலை நிறுத்தப் போராட்டத்தை நடத்திக் கொண்டு இருக்கிறார்கள். அந்த நிர்வாகம் அங்கே உள்ள காவல் துறையைச் சார்ந்தவர்களை வைத்து, அந்தப் போராட்டத்தை உடைக்க முற்படுகிறது. இது அவ்வளவு நியாயமான காரியம் இல்லை. அரசாங்கம் இதற்கு ஆதரவாக இருக்கக்கூடாது. அந்தச் சங்கத்தினுடைய பொதுச் செயலாளராக இருக்கிற எஸ். அண்ணாதுரை என்பவரை போலீசை வைத்து கொலை மிரட்டல் செய்யக்கூடிய நிலைமை இருக்கிறது. இதைத் தவிர்க்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து கோயம்புத்தூரிலே உள்ள பெரியநாய்க்கன் பாளையத்திலே உள்ள லட்சுமி டெக்ஸ்டைல்ஸ் என்ஜினியரிங் கம்பெனியிலே பணியாற்றக்கூடிய 600 தொழிலாளர்கள் படிப்படியாக ரிட்ரென்ச்மென்ட் செய்யக்கூடிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதேபோன்று மதராஸ் போர்ஜிங் கம்பெனியிலும், 350 தொழிலா



ளர்கள் பணியாற்றுகிறார்கள். அங்கேயும் இந்த ஆண்டு 50 பேர்களை ரிட்ரென்ச்மென்ட் செய்யக்கூடிய நிலைமை இருந்து வருகிறது. எனவே இந்த நிலைமைகளை எல்லாம் அரசாங்கம் உன்னிப்பாக கவனித்து, காரியமாற்றவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மலைத் தோட்டத்திலே பணியாற்றக்கூடிய தொழிலாளர்களுக்குக் கட்டப்படுகிற 4 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள வீடுகளை அவர்களுக்கே உரிமையாக்கித் தரவேண்டும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்கிறேன். வால்பாறையிலும், நீலகிரியிலும் பணியாற்றுகிற தேயிலை மற்றும் காப்பி தொழிலாளர்களுக்கு மருத்துவ வசதியையும், வீட்டு வசதியையும் செய்து தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

சின்கோனா தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் கொய்னா பேக்டரி 6 மாத காலமாக மூடப்பட்டு இருக்கிறது. தொழிலாளர்களுக்குச் சம்பளம் இல்லை. ஆனால் அதே நேரத்தில் 40 அதிகாரிகளுக்கு வேலையில்லாமல் சம்பளம் கொடுக்கப்பட்டு வருகிறது. சின்கோனா துறைக்கு உள்ள 10 ஆயிரம் ஏக்கரிலே 3,500 ஏக்கர்தான் பயிரிடப்படுகிறது. எனவே இந்த நிலைமையை மாற்றி, 6,500 ஏக்கர் நிலத்திலே தேயிலை மற்றும் காப்பி போன்ற பயிர்களை நடவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

20 ஆண்டுகளுக்கு முன்னாலே, அங்கே 5 ஆயிரம் பேர்கள் நிரந்தரத் தொழிலாளர்களாக இருந்தார்கள். ஆனால் இன்றைய தினம் 1,500 பேர்கள்தான் தொழிலாளர்களாக இருக்கக்கூடிய நிலைமை இருக்கிறது.

அடுத்து ஐ.டி.ஐ. தொழிற் பயிற்சி படிப்பதைப் பொறுத்தவரையில் 700 பேர்களுக்கு மட்டுமே பயிற்சி அளிக்கக்கூடிய அளவிற்கு உள்ள அலுவலர்களை வைத்துக்கொண்டு, 2 ஆயிரம் பேர்களுக்கு பயிற்சி அளிக்கின்ற நிலைமை இருக்கிறது. இதையும் மாற்ற வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் தஞ்சையிலே இருக்கின்ற டான்சி தொழிற்சாலையிலே உள்ள 71 தொழிலாளர்களிலே 47 பேர்களை வேலையிலேயிருந்து விலகிக் கொள்ளவும், மீதி இருக்கிற தொழிலாளர்கள்

விலகிக் கொள்வதற்குக் கூட அனுமதி தர முடியாத ஒரு அரசாங்கமாக இந்த அரசாங்கம் இருந்து வருகிறது என்பதைத் தெரிவித்து, அந்தத் தொழிலாளர்களுக்கும் அரசு உதவ வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். (மணி அடிக்கப்பெற்றது).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இந்த மானியக் கோரிக்கையில் கூடுதலான அளவில் மாண்புமிகு உறுப்பினர்கள் விவாதத்தில் கலந்து கொள்ள தங்களுடைய பெயர்களைக் கொடுத்திருப்பதால், இன்று பேரவை 4 மணிக்கு கூடும்.

**திரு. ஏ. தங்கராசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்களால் கொண்டு வரப்பட்டு இருக்கின்ற மானியக் கோரிக்கை எண் 29—தொழிலாளர் நலனும், தொழிற்சாலைகளும் என்ற மானியக் கோரிக்கையை வரவேற்று, என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் ஆட்சிப் பொறுப்பேற்றதற்குப் பிறகு தொழிலாளர்களுடைய நலத்தில் அக்கறை எடுத்துக்கொண்டு, தொழிலாளர்களுடைய வாழ்க்கைத்தரம் உயரவேண்டும் என்ற அடிப்படையில் பல்வேறு சட்டங்களைக் கொண்டு வந்து இருக்கிறார்கள் என்பதை நான் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். தொழிலாளர்களுடைய மத்தியில், தோட்டத் தொழிலாளர்களாக இருந்தாலும் அல்லது விவசாய தொழிலாளர்களாக இருந்தாலும் அல்லது கைத்தறி நெசவாளத் தொழிலாளர்களாக இருந்தாலும், கட்டடத் தொழிலாளர்களாக இருந்தாலும் அல்லது தேயிலைத் தொழிலாளர்களாக இருந்தாலும் இப்படி பல்வேறு தொழிலாளர்களுக்கு இந்த அரசாங்கம் பல்வேறு திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறது என்பதை நான் பெருமையோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே அடிப்படையில்தான் மோட்டார் தொழிலாளர்கள் சட்டம் என்றும், தோட்டத் தொழிலாளர்கள் சட்டம் என்றும், ஒப்பந்தத் தொழிலாளர்களை முறைப்படுத்தும் சட்டம் என்றும், தொழில் நிறுவனங்களின் நிலை ஆணைகள் சட்டம் என்றும், அந்தஸ்து வழங்கக்கூடிய சட்டம் என்றும், வீட்டு வாடகைப்படி



வழங்கும் புதிய சட்டம் என்றும், தொழிலாளர்கள் வாழ்க்கைப் படி சட்டங்கள் என்றும் பல்வேறு சட்டங்களை இந்த அரசாங்கம் கொண்டு வந்திருக்கிறது என்பதை நான் பெருமையோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே அடிப்படையில்தான், தமிழகத்தில் 1—1—1985 க்குள் பதிவு செய்யப்பட்ட தொழிற்சங்கங்களுடைய எண்ணிக்கை 4,104 ஆகும். சென்ற ஆண்டு மட்டும் 1,032 புதிய சங்கங்களைப் பதிவு செய்து இருக்கிறார்கள். ஆக, மொத்தத்திலே பார்க்கிறபோது, தமிழகத்திலுள்ள சங்கங்களின் எண்ணிக்கை 4,329. இச்சங்கங்கள் தொழிலாளர்களுக்கு இருக்கக்கூடிய சங்கடங்களைப் போக்குவதற்கும், வாதாடுவதற்கும் அமைக்கப்பட்டிருக்கின்றன என்பதை நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். அதற்குப் பின்னாலே, தொழிற்சங்கத் தலைவர்களுக்கு, இந்த அரசாங்கம் வந்த பிறகு தான், தொழிற் சங்கத் தலைவர்கள் சென்னையிலே தங்கி தொழிலாளர்களுக்காக வாதாடுவதற்கும் இந்த அரசாங்கம் 10 லட்சம் ரூபாய் செலவில் தொழிற் சங்கத் தலைவர்களுக்கு ஓய்வு இல்லங்களை அமைத்து அந்த வாய்ப்பினை ஏற்படுத்தித்தந்த பெருமை புரட்சித் தலைவருடைய அரசாங்கத்திற்கு உண்டு என்பதையும் நான் எடுத்துச்சொல்ல விரும்புகிறேன்.

அதற்குப் பின்னாலே இந்த ஆண்டு தொழிற்சங்கத் தகராறுகள் ஏற்பட்டதில், 9,369 தொழிற் தகராறுகளில் 7,404 தொழிற் தகராறுகள் தீர்த்து வைக்கப்பட்டிருக்கின்றன என்பதை இங்கே கோடிட்டு காட்டியிருக்கிறார்கள். ஆகவே, அதற்குப் பின்னாலே, சென்ற ஆண்டு மட்டும் வேலை நிறுத்தங்களும், 212 கதவடைப்புகளும் ஏற்பட்டிருக்கின்றன என்பதையும் இங்கே கொள்கைக் குறிப்பில் கோடிட்டு காட்டியிருக்கிறார்கள். ஆகவே, இதிலிருந்து இந்த அரசாங்கம் தொழிற்சங்கத் தொழிலாளர்கள் மத்தியில் எவ்வளவு பொறுப்போடும் அக்கறையோடும் பணியாற்றிக்கொண்டிருக்கிறது என்பதையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். சென்ற ஆண்டு மாத்திரம் 212 கதவடைப்புகள் நடைபெற்றிருக்கின்றன என்பதையும் இங்கே கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். ஆனால் 212 என்று இருந்தாலும் தொழிலாளர்களும்

[திரு. ஏ. தங்கராசு] [1986 மே 7

தொழில் அதிபர்களும் பேசித் தீர்த்துக்கொண்ட தகராறுகளின் எண்ணிக்கை 141 என்றும் ஆக தாங்களாகவே முன்வந்து தீர்த்தது போக நிலுவையில் இருக்கின்ற தகராறுகள் 20 தான் என்றும் இங்கே கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். ஆகவே இதிலிருந்து தொழிற்சங்கங்களுடைய நிலைமையை எப்படிக் கண்காணித்து வருகிறது என்பதை நான் பெருமையோடு சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய முதல்வருடைய நிவாரண நிதியிலிருந்து பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு அரை சம்பளமும், வேலை இழந்தவர்களுக்கு முழு சம்பளமும் வழங்க வேண்டுமென்று ஒரு ஆணையைப் பிறப்பித்த அரசாங்கம், நம்முடைய புரட்சித் தலைவருடைய, தமிழக முதல்வருடைய அரசாங்கம்தான் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த அடிப்படையில் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு கோயம்புத்தூராக இருந்தாலும், சென்னையாக இருந்தாலும், பல்வேறு பகுதிகளில், திருச்சியாக இருந்தாலும் 2,978 தொழிலாளர்களுக்கு இடைக்கால ஊதியம் முதலமைச்சருடைய நிவாரண நிதியிலிருந்து வழங்கப்பட்டிருக்கிறது என்பதைப் பார்க்கிறபோது இந்த அரசாங்கம் தொழிலாளர்கள் மத்தியில் எவ்வளவு அன்பைக் காட்டுகிறது என்பதை நான் சொல்ல விரும்புகிறேன்.

இந்த அரசாங்கம் பீடி தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி ஏற்படுத்தவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். சென்ற ஆண்டு 150 வீடுகளைக் கட்டியிருக்கிறார்கள். அதற்குப் பின்னால், இந்த ஆண்டு ஈரோட்டில் 150 வீடுகளைக் கட்டுவதற்கு திட்டம் போட்டிருக்கிறார்கள். ஆகவே கொஞ்சம் கொஞ்சமாக இந்தத் திட்டத்தைத் தொழிலாளர்கள் பகுதிகளில் விரிவுபடுத்த வேண்டுமென்பதை என்னுடைய கருத்தாகச் சொல்லவிரும்புகிறேன். தொழிலாளர்களுக்கு வீட்டு வசதியை, உடனடியாக பல்வேறு பகுதிகளில், தொழில் நிறுவனங்கள் அமைந்திருக்கின்ற பகுதிகளில் செய்துதர வேண்டுமென்பதை இங்கே நான் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.



1986 மே 7] [திரு. ஏ. தங்கராசு]

அதற்குப் பின்னால் சுகாதார நிலையம். 50 படுக்கைகள் கொண்டு சுகாதார நிலையம் ஏற்படுத்துவதற்கு ஏற்பாடு செய்து இருக்கிறார்கள். ஆகவே இந்த 50 படுக்கைகள் கொண்ட சுகாதார நிலையத்தை உடனடியாக விரிவு செய்து இன்னும் மற்ற பகுதிகளுக்கும் கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-40)

அதற்குப் பின்னர் என்னுடைய தொகுதிக்கு வருகிறேன். வடலூரில் உள்ள சேசசாயி தொழிற்சாலை, நெய்வேலியில் உள்ள செராமிக்ஸ் தொழிற்சாலைகளில் உள்ள தொழிலாளர்களுக்கு என்று அங்கே இ.எஸ்.ஐ. மருத்துவ மனை ஒரு தனியார் கட்டிடத்தில் இருப்பதால் அதை உடனடியாக காலி செய்யவேண்டும் என்று அடிக்கடி வற்புறுத்தி வருகிறார்கள். நம்முடைய அரசு பல்வேறு நேரங்களிலே அந்தத் தொழிலாளர்களுக்குப் புதிய இ.எஸ்.ஐ. மருத்துவ மனை கட்டுவதற்கு ஏற்பாடு செய்து இருக்கிறார்கள். ஆனால் அது இப்போது எந்த நிலையில் இருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ள முடியவில்லை. ஆகவே வருகின்ற இந்த ஆண்டிலாவது உடனயாக வடலூர் சேசசாயி தொழிற்சாலையில் உள்ள தொழிலாள்ர்களுக்கும், நெய்வேலி தொழிற்சாலையில் உள்ள தொழிலாளர்களுக்கும், அதன் அருகில் உள்ள கங்கப்பா பேப்பர் மில் தொழிலாளர்களுக்கும் வடலூரில் உடனடியாக இ.எஸ்.ஐ. மருத்துவ மனையைப் புதிதாக அமைத்துத் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதற்குப் பின்னால் என்னுடைய நெய்வேலி பகுதியில் மத்திய அரசால் நிறுவப்பட்ட ஒரு பொது நிறுவனம் இருக்கிறது. அதில் சுமார் 18 ஆயிரம் தொழிலாளர்கள் பணியாற்றுகிறார்கள். ஆனால், என்ன நிலைமை என்றால், 18 ஆயிரம் தொழிலாளர்கள் நிரந்தர தொழிலாளர்களாக பணியாற்றுகிறார்கள். 18 ஆயிரம் தொழிலாளர்கள் நிரந்தரம் இல்லாத தொழிலாளர்களாக பணியாற்றுகிறார்கள். ஆகவே இந்த அரசு வந்த பிறகுதான் நம்முடைய அரசு 450 நாட்கள் வேலை செய்தால் அந்தத் தொழிலாளர்களை நிரந்தரம் செய்ய வேண்டும் என்ற ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தோம். அந்தச் சட்டத்தின் அடிப்படையில், நெய்வே

லியில் உள்ள பொது நிறுவனத்தில் உள்ள தொழிலாளர்கள் 5 ஆண்டுக்கு மேல் 12 ஆண்டுகள் வரை ஒவ்வொரு பகுதியிலும் பணியாற்றிக்கொண்டு இருக்கிறார்கள். உர ஆலைப் பகுதியில் சுமார் 500 பேர், அனல் மின் நிலையத்தில் 500 பேர், சுரங்கப் பகுதியில் 1,500 பேர், கரிக்கட்டி ஆலையில் 250 பேர், இதர பகுதியில் 250 பேர் என்று சுமார் 3 ஆயிரம் பேர் 5 ஆண்டுக்கு மேல் நிரந்தரம் இல்லாமல் வேலை செய்கிறார்கள். அப்படி வேலை செய்தாலும் அவர்கள் பாண்டட் லேபர் என்ற அடிப்படையில் வேலை செய்கிறார்கள். ஒப்பந்தத் தொழிலாளர்களுக்கு 20 ரூபாய், 18 ரூபாய் கொடுக்கிறார்கள். ஆனால் அந்த தொழிலாளர்கள் வாங்குகிற சம்பளம் எவ்வளவு தெரியுமா? 8 ரூபாய், 9 ரூபாய், 10 ரூபாய் தான். இந்த நிலைமையில் 3 ஆயிரம் தொழிலாளர்களுக்கு அந்த அநீதி ஏற்படுகிறது. ஒரு பொது நிறுவனத்தில் இந்த நிலைமை ஏற்பட்டு இருக்கிறது என்பதைப் பார்க்கும் போது நான் வருத்தப்படுகிறேன். ஆகவே இந்த நிலையைப் போக்கவேண்டும் என்ற அடிப்படையில்தான் நம்முடைய அரசு உடனடியாக அதில் தலையிட்டு நெய்வேலியில் உள்ள ஒவ்வொரு பகுதியையும் விசாரணை செய்து அந்த நிரந்தரம் இல்லாத தொழிலாளர்களை விசாரணை செய்து அத்தனை தொழிலாளர்களையும் நிரந்தரம் செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த கொள்கைக் குறிப்பில் ஒரு விஷயம் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது

the grievances redressed and the employers have the freedom to plan and work for the development of the industry'

அதாவது முதலாளிகளுடைய சர்வ சுதந்திரமான அந்த எண்ணங்களுக்கு உட்பட்டுத்தான் தொழிலாளர்களுடைய உரிமை பாதுகாக்கப்படும். தொழிலாளர்களுக்கு Legitimate right கொடுக்கப்படும் என்று சொன்னால் நாட்டிலே இயற்றப்பட்டு இருக்கக்கூடிய சட்டப்படி என்ன உரிமை உண்டோ அது உண்டு. அந்த முதலாளிகளுக்கு தொழில்

1986 மே 7] [திரு. ஜே. ஹேமச்சந்திரன்]

...த்துவதற்குள்ள சர்வ சுதந்திரமான அந்த ஏற்பாட்டுக்கு உட்பட்டு தான் அந்த பின்னணியில் தான் இந்த அரசினுடைய தொழிலாளர் கொள்கையை நாம் பார்க்கிறோம். ஆனால் நான் ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்தியாவில் ஜனாதிபதியாக இருந்த வி. வி. கிரி அவர்கள் கூட அவர்கள் எழுதிய மிகப் பெரிய நூலான "Collective Bargaining" -இல் என்ன வலியுறுத்தி இருக்கிறார் என்றால் "collective bargaining" என்பது இந்தத் துறையில் அதிகமாக வளர்க்கப்பட வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்.

இந்த பாலிசி நோட்டில் "Textile Mills Workers" வேலைநிறுத்தம் பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. நான் அதன் விபரங்களுக்குள் போகவில்லை. அதில் ஒன்றை மட்டும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். Collective Bargaining" என்ற அந்த கொள்கைக்கு முற்றிலும் மாறுபட்ட முறையில் அரசு நடந்து கொண்டது என்பது தான் எங்களுடைய கருத்து. Textile Worker's Strike அன்று ...ந்து கொண்டு இருந்தது. அந்த 'Militant Struggle' ஐ பயன்படுத்தி அந்த பஞ்சாலைத் தொழிலில் இருந்த அந்த 'Collective Bargaining' என்று அங்கே இருந்த வழக்கத்திற்கு மாறுபட்ட முறையில் அரசு நடந்து கொண்டது. அந்த தொழிலாளர்களுடைய அந்த (Militory Struggle) ஐ பயன்படுத்தி 'Labour Minister, Bonus Act படி அந்த தொழிலாளர்களுடைய உரிமைகளை பாதுகாத்து கொள்வதற்கு நடவடிக்கைகளை எடுப்பதற்கு பதிலாக, 10-பி உத்தரவு போட்டு நீதிமன்றத்திற்கு அனுப்பி, இன்றைக்கு நீதிமன்றத்தில் அந்தப் பிரச்சினை சீர்குலைந்து கொண்டிருக்கிறது என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதே நேரத்தில் நான் அரசை குறை சொல்வதற்காக வேண்டி சொல்லவில்லை. அரசு பின்னாலே குறிப்பிட்டிருக்கின்ற 1984 ஆம் வருடத்திலே உள்ள போனஸ் விஷயத்தில் அரசு நல்ல நடவடிக்கை எடுத்தார்கள். அங்கு அந்த முதலாளிகளை லேபர் மினிஸ்டர் கூப்பிட்டு வைத்து, இந்தத் தொழிலாளர்களுக்கு அதிகமாக போனஸ் — அரசே என்று சாவில்லை — அரசினுடைய பல நிறுவனங்களில் கொடுத்துக்கொண்டிருக்கின்ற நேரத்தில்

[திரு. ஜே. ஹேமச்சந்திரன்] [1986 மே 7

நீங்கள் கொடுப்பதற்கு மறுப்பது சரியல்ல, நீங்கள் கொடுக்க வேண்டுமென்று அவர்கள் நிர்ப்பந்திக்கப்பட்டதன் விளைவாக, அன்றைக்கு அந்த போனஸ் கிடைக்கப் பெற்றது.

அதே நோக்கில் இந்தப் பிரச்சினையைக் கூட சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அரசே 32 சதவீதம் — பஞ்சாலைத் தொழிலாளர்கள் போராடிப் பெற்ற உரிமையை — முதன் முதலாக தமிழக வரலாற்றிலே எந்தத் தொழில் தகராறை 10-பி உத்தரவு போட்டு, நீதிமன்றத்திற்குவிட்டது என்றால், இந்தத் தொழிலாளிகளுடைய போனஸ் தகராறு. நீதிமன்றம் என்ன தீர்ப்பைக் கொடுத்திருக்கிறது? தொழிலாளர்களுக்கு சட்டப்பூர்வமான போனசிற்கு உரிமையுண்டு. ஆகவே எதற்காக நான் இதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன் என்று சொன்னால், அரசே தொழிலாளர்களோடு இந்தக் கலெக்டிவ் பார்கெயினிங் ஸ்ட்ரெங்த்தைப் பயன்படுத்தி, அந்தத் தொழிலாளர்களுக்கு நன்மை செய்து கொடுப்பதற்கு முடியும். ஆனால் பல நேரங்களில் அரசு அந்த நடவடிக்கைக்குச் செல்லவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்னொன்றைச் சொல்ல விரும்புகிறேன். பனியன் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில், ஒரு டி.எ. முதன் முதலாக இன்ட்ரொட்டியூஸ் செய்யப்பட்டதை நான் வரவேற்கிறேன். அது அரசினுடைய நடவடிக்கை. ஆனால் நீதிமன்றத்திற்கு விடப்பட்டு, அதற்குப் பிறகு இரண்டு ஆண்டு காலம் ஆனதற்குப் பிறகும் கூட, இன்றைக்கு எந்தவிதமான பிரயோசனமும் அந்தத் தொழிலாளர்களுக்குக் கிடைக்கப் பெறாத நிலைமை இருந்துகொண்டிருக்கிறது. இந்தப் பிரச்சினையைச் சொல்கின்ற நேரத்தில், ஒரு அரசினுடைய தொழிலாளர் கொள்கையை எதிலிருந்து பார்க்க வேண்டுமென்றால், அரசினுடைய நிறுவனங்களிலே எப்படி இன்றைக்குத் தொழிலாளர்கள் நடத்தப்படுகிறார்கள் என்பதில் தான். தொழிலாளர் நலச் சட்டங்கள் அமல்படுத்தப்படுகின்ற முறையைப் பார்க்கக் கூடிய நேரத்தில், அடிப்படை தொழிற்சங்க ஜனநாயக உரிமையைக் கூட இன்றைக்கு அரசு முதலாளிகளாக இருக்கக் கூடிய நிறுவனங்களில் மறுக்கக் கொண்டிருக்கிறது [illegible] சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.



1986 மே 7] [திரு. ஜே. ஹேமச்சந்திரன்]

குறிப்பாக மின்சார இலாக்காவில், ஆல் இந்தியா மின்சாரத் தொழிலாளர்கள் ஃபெடரேஷனின் ஒரு வேண்டுகோளுக்கிணங்க ஒரு நாள் சத்தியாக்கிரகம் இருந்ததற்கு அந்தத் தொழிலாளர்களுடைய இன்கிரிமென்ட் கட் பண்ணப்பட்டிருக்கிறது. பல பேர்களுக்கு பனிஷ்மெண்ட் கொடுக்கப்பட்டிருக்கிறது.

அதேபோன்று அவர்களுடைய மாநாட்டையொட்டி ஒரு சோவினீர் பப்ளிஷ் பண்ணியதற்கு இன்றைக்கு 63 தொழிலாளர்கள் டிஸ்மிஸ் பண்ணப்பட்டிருக்கிறார்கள். நான் இதை எதற்காகச் சுட்டிக்காட்டுகிறேன் என்றால், இன்றைக்கு மே தின விழா அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு சமூக மாற்றத்தை ஏற்படுத்த வேண்டுமென்பதற்காக தொழிலாளர்கள் முன்வர வேண்டுமென்று சொன்னார்கள்.

ஆனால் இன்று அவர்களுடைய தலைமையில் உள்ள ஒரு தொழிற்சங்கம் அவர்களுடைய ஆண்டு விழாவின்போது, ஒரு சோவினீரை வெளியிட்டு—தொழிலாளர்கள் இப்படிப்பட்ட பிரச்சினையை இதன் மூலம் தான் பரிசீலிக்க முடியும். இப்படிப்பட்ட கட்டுரைகளை எழுதி அதன் மூலம் வெளியிடமுடியும்—அதன் காரணமாக அதை வெளியிட்டவர்கள்மீது எலக்ட்ரிசிடி போர்டு நிர்வாகம் அப்படிப்பட்ட நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது.

அந்த எலக்ட்ரிசிடி போர்டு சேர்மனைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு வேண்டிய சங்கங்களை மட்டும் கூப்பிட்டுப் பேசுகிறார்கள். மற்ற சங்கங்களை கூப்பிட்டுப் பேசுவதற்கு மறுக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு விருந்து வைக்கக் கூடிய சங்கங்களுக்கு மட்டும் ஒரு சில சலுகைகளைச் செய்கிறார்கள். இது அரசினுடைய கொள்கையாக இருக்கக்கூடாது என்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அடுத்து TWAD -யைப் பொறுத்தவரையில் அங்கேகூட தொழிற் சங்கத்தை அமைக்க வேண்டுமென்ற அந்த உரிமையை நிலைநாட்டுவதற்குக் கூட, தொழிலாளி உயர்நீதிமன்றம் சென்று, அந்த உயர்நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில்தான் இன்றைக்கு

[திரு. ஜே. ஹேமச்சந்திரன்] [1986 மே 7]

அந்தச் சங்கம் இருந்துகொண்டிருக்கிறது. அந்தச் சங்கத்தில் கூட, பேசுவதற்கோ, அல்லது நடவடிக்கை எடுப்பதற்கோ, அந்த நிர்வாகம் தகராறு பண்ணுகிறது, மறுத்துக்கொண்டிருக்கிறது.

அடுத்து போக்குவரத்துத் துறை என்ன வேலைசெய்கிறது? திருவள்ளுவர் டிரான்ஸ்போர்ட் கார்ப்பொரேஷன் போட்டிருக்கக் கூடிய ஆணை Memo. No. 16429/TTC/1985, dated 24th February 1985.

அதிலே என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்று சொன்னால், The persons whose names are indicated in the annexure to this order were initially engaged for one year as apprentice conductors. It has since been decided to extend their training by three more years from the date following the date of their completing the first year of training. நான் ஏன் இதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன் என்று சொன்னால், அந்தச் சட்டத்தின் அடிப்படையில் இந்தப் போக்குவரத்துக்கழகம் இப்படிப்பட்ட ஒரு உத்தரவைப் போட்டிருக்கிறது.

இன்று ஒரு Apprentice Act ஆனாலும் சரி, அல்லது Conferment of Permanency Act ஆனாலும் சரி, இரண்டு வருடத்திற்கு மேலே ஒரு தொழிலாளியை அப்ரான்டிசாக வைத்துக்கொள்ள முடியாது. ஆனால் என்னதான் நிலைமை என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை.

(பிற்பகல் 12-50)

இன்னொரு விஷயத்தையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். "கவர்ன்மெண்ட் ரப்பர் பிளேன்டேஷன்" என்று சொல்லி நமக்கு ஒரு கழகம் இருக்கிறது. அங்கே மானேஜிங் டைரக்டர் அவர்கள் பிப்ரவரி மாதம் 2 ஆம் தேதி தொழிற்சங்கங்களுக்கு ஒரு உத்தரவு கடிதம் அனுப்பியிருக்கிறார். அதில் என்ன சொல்லியிருக்கிறார் என்றால்,

"In accordance with Section 9-A of the Industrial Disputes Act. 1947 we hereby give notice to all concerned that it is our intention to effect the changes specified in the annexure with effect from 1986 in the conditions of service applicable to workmen".



1986 மே 7] [திரு. ஜே. ஹேமச்சந்திரன்]

அதாவது தனியார் முதலாளி என்ற பிரச்சினை இன்றைக்கு நீதிமன்றத்திற்கு விடப்பட்டிருக்கிறது. அந்த முதலாளிகளுக்கு ஆதரவாக ஓர்க்-லோடை இன்கிரீஸ் பண்ணி ஒருதலைப் பட்சமாக இன்றைக்கு உத்தரவை அமல்படுத்துவதற்கு முயற்சிக்கிறார் என்பது மட்டும் அல்ல. அதைத் தொழிலாளிகள் ஏற்றுக் கொள்ளவில்லை என்ற காரணத்தினால் மார்ச் மாதம் 15 ஆம் தேதி ஆரம்பிக்க வேண்டிய அந்த வேலையை இன்னும் ஆரம்பிக்காமல் இருந்து கொண்டிருக்கிற நிலை இருக்கிறது. இப்படிப்பட்ட நடவடிக்கைகள் நிச்சயமாக அரசினுடைய தொழிலாளர் கொள்கையாக அமையக்கூடாது என்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இன்னொரு விஷயத்தை நான் சொல்ல விரும்புவது இன்றைக்கு பல தொழில் நிறுவனங்களிலே, அரசு முதலாளியாக இருக்கக் கூடிய நிறுவனங்களிலே என்ன பார்க்கிறோம் என்றால், இன்று அங்கே சட்டங்களை அமல்படுத்தாத நிலையைக் காண்கிறோம். 'பிளான்டேஷன் லேபர் ஆக்ட்', 'ஃபேக்டரி ஆக்ட்' போன்ற பல சட்டங்கள் இன்றைக்கு இம்பிளிமென்ட் செய்யப்படவில்லை. ஆகவே, இந்த நிலை நிச்சயமாக மாற்றப்படவேண்டும்.

இன்னொன்று, இந்த அவையில் நிறைவேற்றப்பட்ட ஒரு சட்டம். அதாவது, தொழிலாளிக்கு நேரடியாக நீதிமன்றத்திற்குப் போவதற்கான உரிமை வழங்கும் சட்டம். அது இன்றைக்கு மத்திய அரசிடம் சிக்கி அங்கே படுத்துக்கொண்டிருக்கிறது. அந்தச் சட்டத்தை இன்றைக்கு நிறைவேற்ற, அரசு 'கன்சன்ட்' கொடுக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது? அதற்குப் பதிலாக, இன்றைக்கு 'ரெபரன்ஸ்' வாங்கவேண்டும் என்றால் கூட, என்ன நிலைமை என்றால், நீதிமன்றத்திற்கு சென்றுதான் அதை வாங்கமுடியும் என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது.

டி.வி.எஸ். தொழிலாளிகள் ரிட் அப்பீல் நம்பர் 3144/1985 என்ற அந்த கேஸிலே இந்தியாவின் உச்ச நீதிமன்றத்தினுடைய சீஃப் ஜஸ்டிஸ் என்ன குறிப்பிட்டிருக்கிறார் என்றால் That is, if such a ground.... அதாவது, அவர்களுக்கு 'ரெஃபரன்ஸ்' மறுக்கப்படுகிறது. அதில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது

[திரு. ஜே. ஹேமச்சந்திரன்] [1986 மே 7.

என்றால், The Management has conducted a fair domestic enquiry அதற்குத் தான் சீஃப் ஜஸ்டிஸ் என்ன சொல்கிறார் என்றால்,

'The management has simply to show that it has held a proper enquiry after complying with the requisite procedure and that would be enough to defeat the workers' claim for adjudication.."

தலைமை நீதிபதி மீண்டும் சொல்கிறார்,

In fact the State Government by refusing to make reference on such ground would be appropriating to itself the function of the industrial tribunal or the labour court because when an industrial dispute arises, it is really for the industrial tribunal or the labour court to decide whether a proper enquiry in accordance with the principles of natural justice was held by the management and whether the punishment imposed by the management on the workmen was disproportionate or not.."

ஆனால், துரதிர்ஷ்டவசமாக, என்ன பார்க்கிறோம் என்றால், சிம்பிளாக, 'டொமஸ்டிக் என்குயரி' கன்டக்ட் செய்யப்பட்டிருக்கிறது என்ற காரணத்தைச் சொல்லி 'ரெஃபரன்ஸ்' இன்றைக்கு மறுக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.

அதுமட்டுமல்ல, மாதவரம் பால் பண்ணைத் தொழிலாளிகள் கூட, 'ரெஃபரன்ஸ்' வாங்குவதற்கு உயர்நீதிமன்றத்திற்குப் போய்த் தான் அவர்கள் அதை வாங்கவேண்டிய நிலைமை ஏற்பட்டது. தொழிலாளிகளுடைய உரிமைகளைப் பற்றிப் பேசுவதற்குக் கூட, இன்றைக்கு பல நிறுவனங்கள் தயாராக இல்லை. அங்கீகாரம் பெற்ற சங்கங்கள் என்று சொல்லி, அவர்களுக்கு வேண்டிய சங்கங்களோடு பேசுகிறார்கள். 'சீக்ரட் பேலட்' (Secret Ballot) படி நீங்கள் சங்கங்களை நிர்ணயிக்க வேண்டும் என்று வலியுறுத்தினால் அது இன்றைக்கு அமல்படுத்தப்படவில்லை.

அதே போல், 'மினிமம் வேஜஸ்' பற்றி குறிப்பிடப்பட்டிருக்கிறது. இன்றைக்கு என்ன பார்க்கிறோம் என்றால், பல தொழில்களிலே மினிமம் வேஜஸ் இன்றைக்கு ரிவைஸ் செய்யப்படவில்லை. பல இடங்களிலே ரிவைஸ் செய்யப்பட்டது இன்றைக்குக் கொடுக்கப்படாமல் உள்ளது.



1986 மே 7] ]திரு. ஜே. ஹேமச்சந்திரன்]

1984-லே, 'பிரைவேட் மோட்டார் டிரான்ஸ்போர்ட் இன்டஸ்டிரி' சம்பந்தமாக 'மினிமம் வேஜஸ்' ரிவைஸ் பண்ண வேண்டியது, 84 ஆம் வருடம் போய் 2 வருடம் ஆகியும் கூட, இன்னும் ரிவைஸ் செய்யப்படவில்லை. அதுமட்டுமல்ல. equal wages for equal work என்ற பிரின்ஸிபிளை நாம் ஏற்றுக் கொண்டிருக்கிறோம். அதுகூட, இன்றைக்கு மோட்டார் தொழிலிலே, மற்றும் உள்ள பல தொழில்களிலே இம்பிளிமென்ட் பண்ணப்படவில்லை. இந்தக் கொள்கைக் குறிப்பிலே விவசாயத் தொழிலாளர்களுடைய குறைந்தபட்சக் கூலியைப் பற்றிப் பேசுகிறோம். ஆனால் என்ன பார்க்கிறோம் என்றால், இங்கே விவசாயத் தொழிலாளிகளுக்கு அந்தக் கூலி இன்றைக்கு சரியாகக் கொடுக்கப்படவில்லை. இன்றைக்குப் பல போராட்டங்கள்—என்.ஜி.ஓ.க்களோ அல்லது தொழிலாளர்களோ போராடக்கூடிய நேரத்தில் அரசு என்ன சொல்கிறது இன்று? விவசாயத் தொழிலாளர்களினுடைய நலன்களை பாதுகாத்துக் கொள்வதற்கு போராடினால் அவர்களையெல்லாம் தொழிலாளர்களுக்கு அதிகமாகக் கொடுக்க முடியாது என்று சொல்கிறது. ஆகவே நடைமுறை விவகாரம் என்னவென்றால், அங்கே அதை மறுக்கின்ற நேரத்தில், காவல் துறை, மறுப்பவர்களுக்கு ஆதரவாகச் செல்கிறது.

இன்னொரு விஷயத்தையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த அவையிலே சொன்னார்கள். சப்சிஸ்டன்ஸ் அலவன்ஸ் கிடைப்பதற்கான அந்த வேஜ் லிமிட் உயர்த்தப்படும் என்று. அதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

அதைப்போன்று கிராஜுவிட்டி ஆக்ட்டைப் பொறுத்தவரையில் இன்றைக்கு அந்த கிராஜுவிட்டி கிடைப்பதற்கு, டிஸ்ப்யூட் வந்தால் அதை செட்டில்மெண்ட் பண்ணுவதற்கு அதிகமாகக் கால தாமதம் ஏற்படுகிறது.

காண்ட்ராக்ட் லேபரைப் பொறுத்தவரையில் நான் ஒரு விஷயத்தைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மின்சார வாரியத்திலேகூட 15,000-க்கும் அதிகமான தொழிலாளர்கள் இன்றைக்கு அந்த முறையில் வைக்கப்பட்டிருக்கிறார்கள். டிரான்ஸ்போர்ட்டிலே வைக்கப்பட்டிருக்கிறது. இந்த [illegible]

நான் என்ன சுட்டிக்காட்ட விரும்புகிறேன் என்றால், சமீபத்திலே சுப்ரீம் கோர்ட் ஒரு தீர்ப்பைக் கொடுத்தார்கள். அதாவது, சென்ட்ரல் கவர்ன்மெண்ட் இன்ஸ்டிடியூஷன்களைப் பொறுத்தவரையில்கூட காண்ட்ராக்ட் லேபர் ஆக்டை இம்ப்ளிமெண்ட் பண்ணுவதற்கு மாநில அரசுக்கு உரிமை உண்டு என்று. அது வந்தவுடனே சென்ட்ரல் கவர்ன்மெண்ட் அதைத் திருத்தி, மாநில அரசுக்கு உள்ள உரிமை பறிக்கப்பட்டிருக்கிறது. தாதிருஷ்டவசமாக தமிழக அரசு அது சம்பந்தமாக என்ன கருத்து சொல்லியது என்பது தெரியவில்லை. எனக்குத் தெரிந்த வரையில் தமிழக அரசு சென்ட்ரல் கவர்ன்மெண்ட் மாநில அரசுகளினுடைய அதிகாரத்தைப் பறித்ததை இன்றைக்குத் தடுக்கவில்லை என்பதைச் சொல்லிக் கொள்ள லேபரைப் பொறுத்தவரையில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.
கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போன்று, பான்டெட் லேபரைப் பொறுத்தவரையில் உறுதியான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இன்னும் ஒரு விஷயத்தைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். என்னவென்றால், இன்றைக்கு லேபர் இலாக்காவைப் பொறுத்தவரையில் தொழில்கள் வளர்ந்திருக்கின்றன, அதற்குத் தகுந்தாற்போல டிபார்ட்மெண்டிலுள்ள அதிகாரிகளின் எண்ணிக்கை உயர்த்தப்பட வேண்டும். இதிலே கூட வேகன்சீஸ் இன்றைக்கு ஏற்பட்டிருக்கின்றன. இன்றைக்கு லேபர் கோர்ட் டிரைப்யூனல் கோர்ட்டிலே ஒரு வருஷ காலத்திற்கு ஜட்ஜ் இல்லாத நிலை ஏற்பட்டது. நாம் நீதிமன்றத்திற்குக் கேஸ்களைக் கொண்டு விட்டுவிட்டால், அங்கே நீதிபதிகள் இல்லை என்றால் என்ன ஆவது? நமது சென்னை உயர்நீதிமன்றத்தினுடைய சீப் ஜஸ்டிஸ் அவர்கள் சமீபத்திலே சுட்டிக் காட்டியதைப்போல, இப்படி லேபர் கோர்ட்டில் இந்த நீதிபதிகளைப் போடாமல் இருப்பது தொழிலாளர்களுக்கு நீதியை மறுப்பதற்குச் சமம் ஆகும்.



அதைப்போன்று கமிட்டிகளைப் பொறுத்தவரையில், டிரைபார்டைட் கமிட்டியைப் பொறுத்தவரையில் பல கமிட்டிகள் இன்றைக்கு பங்க்ஷன் செய்யவில்லை. உதாரணமாக, இம்ப்ளிமெண்டேஷன் கமிட்டி. எவால்யூவேஷன் கமிட்டி, ஈக்குவல் ரெம்யூனரேஷன் கமிட்டி என்று இருக்கின்றன.

அதைப்போன்று இன்றைக்கு சட்டத்திலே லெதர் சம்பந்தமாக போடப்பட்டிருக்கின்ற கமிட்டியில் சில சிபாரிசுகள் செய்யப்பட்டிருக்கின்றன. அதை இம்ப்ளிமெண்ட் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

லெதர் பேக்டரிகளையெல்லாம் இன்றைக்கு பேக்டரி ஆக்டிலே ரெஜிஸ்தர் பண்ணுவதில்லை. அதை ரெஜிஸ்தர் பண்ண வைக்க வேண்டும். தொழிற் சங்கங்களை இம்ப்ளிமெண்ட் பண்ண வைக்க வேண்டும். அதுபோன்று போனசைப் பொறுத்த அளவிலே இன்றைக்கு மேனுபேக்சரிங் யூனிட்டிலே கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அடுத்து, அன்டர் பேமெண்ட். இராணிப்பேட்டையில் உள்ள முஸ்லீம் பெண்களுக்கு 4 ரூபாய், 5 ரூபாய் என்று ஊதியம் கொடுத்து வேலை வாங்கிக்கொண்டிருக்கிறார்கள்.

அதைப்போன்று எக்ஸ்போர்ட்டைப் பொறுத்தவரையில் லெதரை, ரா லெதராக எக்ஸ்போர்ட் செய்வதற்குப் பதிலாக, பினிஷ்ட் குட்ஸாக அனுப்ப வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இன்னுமொரு கருத்தைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். சமீபத்தில் பின்னி இன்ஜினியரிங் தொழிற்சாலை சம்பந்தமாக ஒரு அறிவிப்பு கொடுக்கப்பட்டது. ஆனால் அமல் படுத்தப்படவில்லை. பத்து நாட்களுக்குப் பிறகு அதைத் தொடர்ந்து நடத்தப்படவும் இல்லை. அவர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய ஊதியம் கொடுக்கப்படவில்லை. அந்தப் பிரச்சினையிலே தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள்கூட இன்றைக்கு விலக வேண்டிய துரதிருஷ்டமான நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.

[திரு. ஜே. ஹேமச்சந்திரன்] [1986 மே 7

என்றால் இந்த நாட்டினுடைய தொழிலாளர் கொள்கை எங்கே செல்கிறது என்பதைப்பற்றி நமக்கு ஆச்சரியமாக இருக்கிறது, வேதனை தரக்கூடியதாக இருக்கிறது.

நான் ஒரு விஷயத்தைச் சொல்லி முடித்துவிடுகிறேன். அதாவது, எம்ப்ளாய்மெண்ட் அண்ட் டிரெய்னிங் என்று ஒரு துறை இதோடு சேர்க்கப்பட்டிருக்கிறது. அந்த எம்ப்ளாய்மெண்ட் அண்ட் டிரெயினிங் சம்பந்தமாக சென்ட்ரல் கவர்ன்மெண்ட் ஐந்து முதல் பத்து ஐ.டி.ஐ. இன்றைக்கு ஒவ்வொரு மாவட்டத்திலேயும் ஆரம்பிக்கப்பட வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் நம்முடைய அரசு என்ஜினியரிங் கல்லூரிகளைப் பெருக்கிக்கொண்டு போகிறதே தவிர, இதைச் செய்யவில்லை.

உதாரணமாக, சென்னை நகரத்திலே, டி. நகர் பகுதியிலே, மாணவிகளுக்கு இருக்கக்கூடிய ஒரேயொரு ஐ.டி.ஐ. 1943-லே ஏற்படுத்தப்பட்ட ஐ.டி.ஐ. தான் அந்த ஐ.டி.ஐ. இப்பொழுது அங்கிருந்து செங்கல்பட்டு மாவட்டத்திலே எங்கோ மாற்றப்படுகிறது. அதன் காரணமாக சென்னையிலே உள்ள மாணவிகளுக்குப் படிப்பதற்கான வாய்ப்பு கெட்டுப் போகிறது. அதிலே அந்த இடத்தைப் பொறுத்தவரையில் அக்குயர் செய்து ஐ.டி.ஐ. கன்டினியூ பண்ணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். ஆனால், ஆளுங்கட்சிக்கு வேண்டியவர்கள் யாரிடமோ அந்த நிலம் சம்பந்தமான பிரச்சினை இருப்பதாகக் கேள்விப்படுகிறேன். அது சரியல்ல. சென்னை நகரத்திலே ஒரு ஐ.டி.ஐ. ஏற்படுத்தவேண்டும்.

(பிற்பகல் 1-00)

கோவையைப் பொறுத்தவரையிலே, இன்றைக்கு எவ்வளவு பெரிய வளர்ந்த தொழில் நகரம். அங்கே ஒரு ஐ.டி.ஐ. தான் இருக்கிறது. அதிகமான ஐ.டி.ஐ.-க்கள் ஏற்படுத்த வேண்டும். நாகர்கோவிலைப் பொறுத்தவரையிலும், பிஷர்மென் மெக்கானிக்கல் டிரெயினிங் கொடுக்க ஒரு ஐ.டி.ஐ. ஏற்படுத்த வேண்டும் அதேபோன்று அங்கே பாதிக்கப்பட்டிருக்கிற தொழிலாளர்களுடைய கோரிக்கைகளைப் பொறுத்தவரையிலும். அமைச்சர் அவர்களே அதிலே நேரிலே தலையிட்டு, அதற்கு முடிவு ஏற்படுத்துவதற்கு முயற்சி எடுக்க வேண்டும்.



1986 மே 7] [திரு. ஜே. ஹேமச்சந்திரன்]

இன்றைக்குக் கல்வித் துறையில் இருப்பதைப் போல், ஐ.டி.ஐ. ஆசிரியர்களுக்கும் நல்லாசிரியர் விருது கொடுக்கப்பட வேண்டும். ஆசிரியர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். அதே போன்று, உடற்பயிற்சி ஆசிரியர்களுக்கு, கல்வித் துறையில் கொடுப்பதைப் போல், ஒரே ஊதியம் கொடுக்கவேண்டும். நாஷனல் டிரெயினிங் எடுத்தவர்களுக்கு, நாஷனல் லெவல் பே கொடுக்கப்பட வேண்டும். அதே போன்று, ஸ்டூடன்ஸ் டீச்சர் ரேஷியோ பிக்ஸ் பண்ணப்பட வேண்டும்.

ப்ரொவிஷனல் சர்டிபிகேட் இருந்தால் இன்றைக்கு அப்ரென்டிசுக்கு அனுப்ப முடியாது என்று எம்ப்ளாய்மென்ட் எக்சேஞ்ச் ஆட்கள் தகராறு பண்ணுகிறார்கள். சில நேரங்களில் ஒரிஜினல் சர்ட்டிபிகேட் கிடைப்பதற்குக் காலதாமதம் ஏற்பட்டால்கூட, ப்ரொவிஷனல் சர்ட்டிபிகேட் வைத்துக் கொண்டு, அவர்கள் அப்ரன்டிஸ் தேர்வுக்கு அப்பியர் ஆக வாய்ப்பு எற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டு, வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி, விடை பெறுகிறேன்.

**திரு. த. பழனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தொழிலாளர் நலனும், தொழிற்சாலைகளும் குறித்து மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற மானியக் கோரிக்கையின்மீது பேசுகின்ற அரிய வாய்ப்பை எனக்குத் தந்த மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவருக்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

இங்கே, 1947 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட தொழில் தகராறுகள் சட்டம் குறித்து கடந்த ஆண்டு ஏறக்குறைய 9,369 தீர்க்கப்பட வேண்டிய இனங்கள் வந்தன. அதிலே, ஏறக்குறைய 7,404 தொழில் தாவாக்கள் தீர்த்து வைக்கப்பட்டிருக்கின்றன. 1985 ஆம் ஆண்டு ஏற்பட்ட 212 வேலை நிறுத்தங்கள், கதவடைப்புகள் ஆகியவற்றின் காரணமாக, வீணான உழைப்பு நாட்கள் 35,05,226 ஆகும் என்ற புள்ளி விவரங்களை, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இங்கே தந்திருக்கிறார்கள். தொழிலாளர்கள் பத்தியிலே பிரச்சனைகளுக்கு நிரந்தரமான தீர்வுகாண வேண்டுமென்

பதற்காக, அந்தத் தொழிலாளர் துறையைப் பொறுத்து இருக்கிற தொழிலாளர் ஆய்வாளர்களைத் தனித் துறையின்கீழ் கொண்டு வருகின்ற நிலையை உருவாக்கித் தந்திட வேண்டுமென்று இங்கே நான் கேட்டுக் கொள்கிறேன். இங்கே தமிழ்நாட்டில் ஏறக் குறைய 50,000 சிறிய தொழிற்சாலைகள் இருக்கின்றன. அந்தச் சிறிய தொழிற்சாலைகளில் இருக்கின்ற தொழிலாளர்களைப் பாதுகாக்கின்ற சூழ்நிலை அங்கே இல்லாமல், இருக்கிற வாய்ப்புகள் நிறையவே இருக்கின்றன என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அங்கேயிருக்கிற தொழிலாளர் தோழர்கள் அனாதைகளாக இருக்கிறார்கள். அனாதைகள் என்று சொன்னால், அங்கே தொழில் தகராறுகள் ஏற்பட்டால், முதலாளிகள் தலையிட்டு அந்தத் தொழிற் சங்கங்களைக் கலைக்கின்ற அரிய பெரிய சூழ்நிலை பல்வேறு நிறுவனங்களிலே இருக்கின்றது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட வேண்டும். நான் இங்கே சொல்வதற்கான அடிப்படையான காரணம் அந்தத் தொழிலாளர் களுக்கு உண்மையான உரிமைகள் கிடைக்கவில்லை. மற்றைய தொழிற்சாலைகளிலே இருக்கிறவர்கள் எல்லாம் அனுபவிக்கின்ற விடுப்பு நாட்கள் இவர்களுக்கும் வழங்குகின்ற நிலைமையை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அரசு ஏற்படுத்தித் தந்திட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பண்டிகை நாட்கள் விடுமுறை நாட்களாக்கப்படவேண்டுமென்ற கோரிக்கையினை வைக்க ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அரசு பதவியேற்றுக் கொண்டவுடன் என்னென்ன பணிகளை தொழிலாளர் களுக்காக நியாயமான முறையில் நடத்திக் கொண்டிருக்கிறது என்பதைப் பார்க்கிறோம். 1985 ஆம் ஆண்டு ஏற்பட்ட தொழில் தகராறுகள் இன்று வரை தீர்க்கப்படாமல், தொழிலாளர் களுக்கு நியாயம் வழங்கப்படாத நிலை இருக்கிறது என்பதையும், ஜஸ்டிஸ் டிலேய்ட் இஸ் ஜஸ்டிஸ் டினைய்ட் என்று சொல்வார்களே. அது போல், 20 ஆண்டுகளுக்கு மேலாக இருக்கிற தொழில் தகராறுகள் தீர்க்கப்படாமல் இருப்பதால், தொழிலாளர்களுக்கும் அரசுக்கும் இருக்கிற சுமுக உறவுகள் பாதிக்கப்படுமோ என்ற சூழ்நிலையில், அதனைத் தீர்க்க, ஐயப்பாடுகள் ஏற்படக்கூடிய





சூழ்நிலையைப் போக்கி, அவர்கள் வாழ்வில் வளம் ஏற்படுத்த வேண்டுமென்று மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அரசைக் கேட்டுக்கொள்கிறேன். அதுபோன்று இங்கே படிப் படியாக தொழிலாளர்களின் வேலைப் பளுவைக் குறைக்கவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். எங்கள் மாவட்டத்தைப் பொறுத் தவரை 1985-ம் ஆண்டு ஏறத்தாழ 849 விபத்துக்கள் இருந்தன. அந்த விபத்துக்கள் இல்லாமலேயே தொழிற்சாலைகள் நடந்திட வேண்டும் என்பதற்காக என்னென்ன பணிகளை நாம் உருவாக் கித்தந்திட முடியுமோ அந்தப் பணிகளை புரட்சித் தலைவர் அரசு உருவாக்கிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அந்த 849 விபத்துக்களில் ஏறக்குறைய 399 விபத்துக்கள் மத்திய அரசின் சதர்ன் இரயில்வே என்ஜினியரிங் வொர்க்ஷாப்பிலே ஏற்பட்ட விபத்துக்கள் ஆகும். இப்படிப்பட்ட விபத்தே இல்லாமல் மிகச் சிறந்த துறையாக நமது துறை விளங்கிடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுபோன்று இங்குள்ள தொழிற் சாலைகள் வாயிலாக மணலியிலே ஏற்பட்ட குளோரின் வாயு கசிவு, டில்லியிலே ஏற்பட்ட ஓலியம் கசிவு இவைகள் எல்லாம் நமக்கு எழுப்பப்பட்டிருக்கின்ற சவால்கள் ஆகும். எங்கள் பகுதி டி.சி.சி. நிறுவனம் தமிழ்நாடு குரோமிக் கெமிக்கல்ஸ் நிறு வனம் கசிவு நச்சுத் தன்மைகள் பாலாற்றிலே கலக்கின்ற சூழ் நிலை இருக்கிறது. அந்த தொழிற்சாலையிலிருந்து வரக்கூடிய கழிவு நீர்கள் பாலாற்றிலே கலக்கின்றதால் அங்குள்ள பொதுமக் களுக்கும் தொழிலாளர்களுக்கும் பாதுகாப்பு இல்லாமல் இருப் பதை அரசு உணர்ந்தாக வேண்டும். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அங்குள்ள அந்தப் பகுதி மக்களுக்கு வாழ்வு அளிக்க வேண்டும். அங்கிருந்து வரக்கூடிய கழிவு நீர்கள் அந்த டி.சி.சி.யின் கழிவு நீர்கள் பாலாற்றில் கலப்பதால் ஏழை எளிய மக்கள் குடிக்கின்ற நீரில் கலப்பதால் அவர்கள் பாதிக் கிறார்கள். பயிரிடுகின்ற விளை நிலங்களும் பாதிக்கப்படு கின்றன.

அதுபோன்று மாவட்டங்களைத் தனித்தனியாகப் பிரிப்பதன் வாயிலாக இங்கே ஏற்பட்டிருக்கின்ற பல்வேறு நன்மைகளை நான் சுட்டிக்காட்டியாக வேண்டும். அப்படிப் பிரிப்பதன் வாயி லாக அந்தப் பகுதிகளில் என்ன என்ன பணிகளை அரசு ஆற்றி யிருக்கிறது என்பதை நாம் கடந்த காலங்களோடு ஒப்பிட்டுப்

[திரு. த. பழனி] [1986 மே 7

பார்க்க வேண்டும். மக்களுடைய நன்மையைக் கருதித்தான் புரட்சித் தலைவர் அவர்கள் மாவட்டங்களைப் பிரித்திருக்கிறார்கள். அதுபோன்று இலாக்காக்களைப் பிரிப்பதன் வாயிலாக பல நன்மைகள் ஏற்படும். இங்குள்ள தொழிலாளர் நல இலாக்காவைத் தனியாகப் பிரிப்பதன் வாயிலாக பல நன்மைகளை புரட்சித் தலைவர் அவர்கள் கொண்டுவர முடியும். பல்வேறு நலத் திட்டங்களை தொழிற்சாலைகள் நன்றாக இயங்குவதற்குண்டான ஆய்வு செய்யக்கூடிய பிரிவுகளை உருவாக்கித் தருவதன் மூலமாக நல்ல நிலையை தமிழகத்தில் ஏற்படுத்த முடியும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

காலத்திற்கேற்றாற்போல் தமிழ்நாட்டிலே தற்போதைய பதிவு பெற்ற தொழிற்சாலைகளின் எண்ணிக்கை 13,100, பதிவு பெறாத சிறிய தொழிற்சாலைகளின் எண்ணிக்கை 50,000. ஆக மொத்தம் ஆய்வாளர் எண்ணிக்கை 115. தொழிற்சாலைகள் ஆய்வுப் பிரிவின் மூலமாக அரசுக்கு ஆண்டு வருமானம் 1.1 கோடி. ஆண்டொன்றுக்கு புதியதாக பதிவு செய்யப்படும் தொழிற்சாலை எண்ணிக்கை 1,200. வரப்போகின்ற இந்த நிதியாண்டிலே வருமானம் 1.25 கோடியாக இருக்கும் என்று இங்கே எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

தமிழகத்தின் புரட்சித் தலைவர் அவர்கள் அரசு கொண்டு வந்திருக்கின்ற தொழிற்சாலையினுடைய ஆய்வுப் பிரிவு என்ற நிலையிலே பொறியியல் பட்டதாரிகள் அரசுப் பணியிலே சேர்ந்து 20 ஆண்டுகள் கழித்து பதவி உயர்வு கேட்கின்ற சூழ்நிலை இருக்கிறது. பொறியியல் பட்டப்படிப்பு தகுதிபெற்ற தொழிற்சாலை ஆய்வாளர்கள் தங்களுக்கு கீழுள்ள குமாஸ்தாக்களாக வேலை பார்த்தவர்கள் பதவி உயர்வு பெற்ற பின்புகூட அங்கே ஆய்வாளர்களாக பதவி உயர்வு பெற்ற அவர்களுக்கு கீழே பணியாற்ற வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. என்வே அரசு உடனே இலாக்காவைப் பிரித்து அதற்குரிய தலைவர் பொறுப்பை அந்த சம்பந்தப்பட்ட இலாக்காவினுடைய பொறியாளர்களுக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தொழிற்சாலைகள் நல்ல முறையிலே நடந்திட வேண்டும். தொழிலாளர்களுக்கு நல்ல பாதுகாப்புக்களை ஏற்படுத்த வேண்டும், நல்ல சட்ட திட்டங்களைக் கொண்டுவந்து தொழிற்சாலைகளில் இருக்கின்ற



1986 மே 7] [திரு. த. பழனி]

தாவாக்களைத் தீர்க்க வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு இந்த மன்றத்தின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

(பிற்பகல் 1-10)

1969 ஆம் ஆண்டு அந்த இலாக்காவைப் பிரிக்கவேண்டுமென்று வல்லுநர்கள் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். 1981 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் திரு. கந்தசாமி, ஐ.ஏ.எஸ். அவர்கள் ஒரு கருத்துச் சொல்லியிருக்கிறார்கள். அரசின் மூன்றாவது ஊதியக் குழு மற்றும் திரு. பி. வி. ஆர். பணிக்கர் தலைமையில் ஏற்படுத்தப் பட்ட குழு ஆகியவை எல்லாம் இதற்கு ஒப்புதல் அளித்திருக் கின்றன. இப்படி படிப்படியாக அந்தத் துறையைப் பிரிக்க வேண்டும் என்பதற்காகப் பல்வேறு காலகட்டங்களில் ஏற் படுத்தப்பட்ட குழுக்கள் எல்லாம் பரிந்துரை அளித்திருக் கின்றன.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

பல்வேறு சீரமைப்புக்களை எல்லாம் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித்தலைவர் அவர்கள் அறிவித்திருக் கிறார்கள். அவருடைய காலத்தில்தான் புதிய மாவட்டங்கள் தோன்றி இருக்கின்றன. புதிய விவசாயத் துறை தோன்றி இருக்கிறது. மோட்டார் வாகன பராமரிப்புத்துறை தோன்றி இருக்கிறது. எண்ணெய் வித்துக்கள் துறை இயக்ககம் தோன்றி இருக்கிறது. விதைச் சான்றளிப்புத்துறை தோன்றி இருக்கிறது. நெடுஞ்சாலை இயக்ககம் தோன்றி இருக்கிறது. மின் ஆய்வுத் துறை தோன்றி இருக்கிறது. கொதிகலன் ஆய்வுத் துறை தோன்றி இருக்கிறது. ஆரம்பக்கல்வித் துறை தோன்றி இருக்கிறது. இப்படி பல்வேறு துறைகளைப் பிரித்ததன் வாயிலாக நிர்வாகம் செம்மைப்படுத்தப்பட்டு பல்வேறு நிலைமைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இப்படி மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவர் அவர்கள் பல இலாக்காக்களைப் பிரிப்பதன் வாயிலாக செம்மைப்படுத்துவதன் வாயிலாக நீண்ட பாரம்பரியத்தை உருவாக்கி இருக்கிறார்கள் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். சீபோர்த் பே கமிஷன் ரிப்போர்ட்டிலே சொல்லப்பட்டிருக்கும் ஒன்றை இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன்

[திரு. த. பழனி] [1986 மே 7

FOURTH PAY COMMISSION REPORT—LABOUR INCLUDING FACTORIES WING AND INSTITUTE OF LABOUR STUDIES.

The staff of the Factories wing have represented for the bifurcation of the two wings, Labour and Factories designating the Chief of the two wings, Labour and Factories designating the Chief Inspector of Factories as independent Head of the Department of Factories. It is seen that at present the two wings function independent of each other at all levels. The lines of command are separate. It is also seen that the Junior Inspector of Factories recruited directly from among Graduate Engineers have to spend longer years compared to those on the Labour wing leading to delicate situation of persons with longer service and educationally better qualified in the factories wing functioning under less qualified Juniors in the Labour Wing.

The need for bifurcating this Department has been considered at various times. It is seen that in a special report (1969) of Thiru N. S. Mani, I.C.S. the re-organisation of the Labour Department, separation of the Factories Wing from non-technical side had been recommended to ensure efficient administration of the Technical Department. It has been considered that the present arrangement is conducive neither to the organisational efficiency of the Labour Department on the non-technical side under the Commissioner of Labour, nor to the overall efficiency of the Factories Inspectorate. On the other hand, it is noticed that over the years, there has been a steady deterioration in the morale of the officers of the Factories Wing. It is also seen that in many States this wing has been made into an independent department. Taking all these factors into consideration, we feel that this sound recommendation made at various levels should be accepted for implementation without any further delay. Therefore we recommend that the Chief Inspector of Factories may be made an independent Head of the Department of Factories Wing with the scale in Grade I. The Joint Chief Inspector of Factories may be placed in Grade III on par with Superintending Engineer.

The ministerial association of the Labour Department has represented against the bifurcation of the two wings apprehensive perhaps of the deterioration of promotional avenues. While recently creating independent department like Horticulture, Oil Seeds, etc., out of the Agricultural Department, Government have allowed the ministerial category to remain as a single unit. This practice could also be

adopted in the present case also so that the bifurcation of the Depart-
ment does not adversely affect the ministerial category
என்று நான்காவது
ஊதியக்குழுவின் தலைவர் ஜஸ்டிஸ் என். எஸ் ராமசாமி, திருமதி
அஞ்சனிதயானந்த், ஐ.ஏ.எஸ்., மெம்பர் மற்றும் திரு. கௌரி
சங்கர், ஐ.ஏ.எஸ்., மெம்பர் செக்கரட்டரி ஆகியோர் அந்த
அறிக்கையின் 138 மற்றும் 141-வது பக்கங்களில் அதாவது
வால்யூம் ஒன்று, பிரிவு 5-ல் கருத்துக்களை வழங்கியிருக்கிறார்கள்.
கோரிக்கையை வைத்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.
பிரித்து செயலாக்கவேண்டுமென்று நான் என்னுடைய
தொழிலாளர்களின் நலனைக் காக்கின்ற வகையில் அதைப்
இருக்கிற தொழிற்சாலைகளை சரியாகச் சீர் செய்கிற வகையில்
எனவே மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர்
அவர்கள் இந்தத் துறையை சீர்செய்கின்ற வகையில், இங்கே

**திரு. வி. பி. சிந்தன் :** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆங்கிலத்திலே படித்தது தமிழிலும் டைப் செய்யப்பட்டு இந்த மன்றத்திலே பலருக்கு வினியோகம் செய்யப்பட்டிருக்கிறது

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் என்ன குறிப்பிடுகிறீர்கள் என்று புரியவில்லை. யார் கொடுத்தார்கள் ?

**திரு. வி. பி. சிந்தன்:** இப்போது பேசிய மாண்புமிகு உறுப்பினர் ஆங்கிலத்திலே ஆற்றிய பகுதிகள், தமிழிலும் ஆங்கிலத்திலும் டைப் செய்யப்பட்டு அனைவருக்கும் வினியோகம் செய்யப்பட்டிருக்கிறது. உறுப்பினர்கள் அனைவரும் படிக்க வேண்டும் என்று அதை அந்த பேக்டரி இன்ஸ்பெக்டரேட் இலாகாவேதான் செய்துள்ளது என்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் வெளியிலே யாரிடமிருந்தாவது வாங்கிக் கொண்டு வந்திருந்தால் அதற்கு நான் பொறுப்பில்லை. ஆனால் இந்த அவைக்குள் என் அனுமதி இல்லாமல் எந்த பேப்பரும் நுழைய முடியாது, விநியோகிக்கப்பட முடியாது.

* **திரு. கு. சுப்பராயன்:** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் தொழிலாளர்கள் நிலைமை என்பது பற்றிய கொள்கைக் குறிப்பின் மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நான் ஒரு சில கருத்துக்களை முன் வைக்கிறேன்.

ஆளும் கட்சியைச் சார்ந்த நண்பர் முதல்வர் அவர்கள் நடித்த பல்வேறு படங்களைப் பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். நான் தமிழ்நாட்டில், தமிழக அரசு நடத்தி வருகின்ற தொழிலாளர் நலக் கொள்கையிலே ஏற்பட்டிருக்கிற பலவீனங்கள் குறைபாடுகளையெல்லாம் பாடங்கள் என்ற வகையில் குறிப்பிட விரும்புகிறேன். இங்கே எனக்கு முன்னால் பேசிய ஆளும் கட்சி நண்பர்களும் சரி, எதிர்க்கட்சி நண்பர்களும் சரி, பல்வேறு குறைபாடுகளை அவரவர்களின் நிலைமையிலே இருந்து எடுத்துச் சொன்னார்கள். நான் இங்கே நேரிடையாக விஷயத்திற்கு வருவது பொருத்தம் என்று கருதுகிறேன். இந்த மாநில அரசாங்கம் தொழிற் தகராறுகளில் சட்டரீதியாக தீர்வு காணுவதற்கு சட்ட ரீதியான முயற்சிகளை மேற்கொள்ளுவது தவறு என்பது போல, தொழிலாளர்களுக்கு பாடம் கற்பித்துக் கொண்டிருக்கிறது என்பதைத்தான் என்னால் உணர முடிகிறது.

அப்படிப்பட்ட நூற்றுக்கணக்கான வழக்குகளை நூற்றுக் கணக்கான பிரச்னைகளைப் பற்றி பட்டியல் போட்டு சொல்ல முடியும். அதற்குரிய கால வாய்ப்பு எனக்கு இல்லை. உதாரணத்திற்கு குறிப்பிட வேண்டும் என்றால் மாதவரம் பால் பண்ணையைப் பற்றிச் சொல்லலாம். எனக்கு முன்னால் பேசிய பல நண்பர்களும் குறிப்பிட்டார்கள். ஒரே ஒரு நாள் வேலை நிறுத்தம் செய்த காரணத்தால் 1,500 தொழிலாளர்கள் கடந்த 6 வருட காலமாக தெருவிலே நின்று கொண்டிருக்கிறார்கள். 56 பேர்கள் இதுவரை மரணமடைந்துள்ளனர். 3 பேர்கள் தற்கொலை கூட புரிந்து கொண்டார்கள். கல்நெஞ்சு படைத்தவர்களின் மனம் கூட இளக ஆரம்பித்து விடும். ஆனால், இந்த மாநில அரசாங்கம் ஏனோ இளகியதாகத் தெரியவில்லை. என்ன காரணம் என்று கேட்க விரும்புகிறேன்.

தமிழகத்தில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி ஏற்பட்டிருக்கிறது என்ற காரணத்தினால் ஒரு தொழிலாளி ஒரு நாள் வேலை நிறுத்தம் செய்யக்கூடாதா? வேலை நிறுத்தம் செய்த அந்தத் தொழிலாளர்கள் எந்தவித சட்டப்பூர்வமான முகாந்திரமும் இல்லாமல் டிஸ்மிஸ் செய்யப்பட்டிருக்கிறார்கள் என்றால் அது நியாயம் தானா? இதன் மீது பல்முறை முறையீட்டு மனுக்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஏன் இதுவரையில் பரிசீலிக்கப்படவில்லை. இதிலே கொடுமையிலும் கொடு





என்னவென்று சொன்னால், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்துடைய முதல்வர் என்று அவர்கள் அவர்கள் கூட குறிப்பிட்டிருக்கிறார்கள். தொழிலாளர்கள் தங்களுடைய உரிமையைப் பெறுவதற்காக வேண்டி போராட்டத்திற்குப் போகக் கூடிய உரிமையைப் பறிக்கிற அதிகாரம் அரசுக்கு இல்லை என்று சொன்னார்கள். ஏனென்றால் ஒருபோதும் தமிழக அரசை நீதிபதியாக்கிவிட முடியாது. நியாயம் பெறுவதற்காக நீதிமன்றத்திற்குச் செல்லும் உரிமையைத் தடுக்க இந்த அரசாங்கத்திற்கு என்ன உரிமை இருக்கிறது என்று கேட்கிறேன்? உரிமை இல்லை. ஆனால் நடைமுறையில் நீங்கள் அதைப் பறிக்கிறீர்கள் என்கிற குற்றச்சாட்டை நான் குறிப்பிட விரும்புகிறேன். பொறுப்பு உள்ள ஒரு மாநில அரசாக நீங்கள் இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மாதவரம் பால் பண்ணை வழக்கு நடந்து, பேக் வேஜஸ்ஸோடு, அந்த 1,500 தொழிலாளர்களுக்கும் வேலை வாய்ப்புத் தர வேண்டும் என்று நீதிமன்றத்தில் தீர்ப்பு சொன்னால் மாதவரம் பால் பண்ணையை விற்றுத்தான் பேக் வேஜஸ் கொடுக்க வேண்டிய அவசியம் நேரும்.

ஆகவே தயவுசெய்து நிலைமையைக் காலத்தில் உணர்ந்து தொழிற்சங்கத் தலைவர்களோடு பேச்சு வார்த்தை நடத்தி சுமுகமான தீர்வு காண்பதற்கு இந்த அரசு முன் வரவேண்டும் என்று வலியுறுத்த விரும்புகிறேன். அதுபற்றிய மகஜர் கூட என்னிடம் இருக்கிறது. பின்னர் வேண்டுமானால் கூட தொழிலாளர் நல அமைச்சருக்கு கொடுக்கத் தயாராக இருக்கிறேன்.

அடுத்து, இந்தியா போர்ஜ் நிறுவனம். ஆளும் கட்சி நண்பர்கள் கூட சில நேரங்களிலே தங்களைப் பற்றி தங்களைத் தாங்களே புகழ்ந்து கொள்கிறார்கள். அரசு நடைமுறைகளைப் பற்றி புகழ்ந்து பேசுகிறார்கள். ஆனால் இந்தியா போர்ஜ் என்ற நிறுவனம் மூடப்பட்டு எத்தனை நாட்கள் ஆயின? 28 மாதங்களுக்கு மேலாக அது மூடப்பட்டிருக்கிறது. 10 தொழிலாளர்கள் இதுவரை மடிந்திருக்கிறார்கள். மூடப்படுவதற்கு யார் காரணம்? தொழிலாளர்கள் காரணமா? தொழிலாளர்களுடைய வேலைநிறுத்தம் காரணமா? இல்லை. முதலாளிகள் தாண்டித்த மூப்பாக இந்த சமுதாயத்திலேயிருந்து கொள்ளை அடித்த பணத்தை பங்கு போட்டுக் கொள்வதிலே, எப்படி பங்கு போட்டுக் கொள்வது என்பதிலே முதலாளிகளுக்கு இடையே ஏற்பட்ட தகராறுகளின் காரணமாக தொழிற்சாலை மூடப்பட்டு விட்டது.

[திரு. கு. சுப்பராயன்] [1986 மே 7

(பிற்பகல் 1-20)

இன்றைக்கு அந்தத் தொழிலாளர்கள் நிர்கதியாக தெருவில் நிறுத்தப்பட்டிருக்கிறார்கள். அதற்கு என்ன நடவடிக்கை? மூலத் தொழிற்சாலையை மூடிவிட்டு ஆங்காங்கு கிளைகளைத் திறந்து வருடத்திற்கு 5 கோடி ரூபாய்க்கு வியாபாரம் செய்கிறார்கள். தொழிலாளர்கள் பட்டினி கிடக்கிறார்கள். முதலாளிகள் பாதுகாப்போடு வியாபாரம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே இந்த மாநில அரசு உடனடியாக இந்தியா போர்ஜ் கம்பெனியை மேற்கொள்ள வேண்டுமென்று வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

அதேபோல கடந்த 29-ம் தேதி மாதவரம் பால் பண்ணையிலும், அம்பத்தூரிலும் உள்ள தொழிலாளர்கள் அரை நிர்வாண ஆர்ப்பாட்டத்தை, போராட்டத்தை நடத்தியிருக்கிறார்கள். எதற்குத் தெரியுமா? தங்களுக்கு சீருடை வழங்க வேண்டுமென்றும், தங்களை நிரந்தரமாக்க வேண்டுமென்றும் கேட்டுத் தான். அதற்கு சட்டம் இருக்கிறது. இதே மாநில அரசு சட்டம் போட்டிருக்கிறது. நான் கேட்கிறேன், இந்த மாநில அரசு ஒரு வேளை பாவனை செய்கிறதா? அரசு தான் போடுகிற சட்டங்களை கவுரவிக்கவேண்டுமென்று உண்மையில் விரும்புகிறதா? ஒரு அரசு போடுகிற சட்டத்தை மக்கள் கவுரவிக்க கடமைப் பட்டிருக்கிறார்கள். ஆனால் எந்த அரசு மக்களை கவுரவிக்க வேண்டுமென்று சட்டம் போடுகிறதோ அந்த அந்த அரசாங்கமே நிறைவேற்றவில்லை என்றால் அது நியாயம் தானா? தொழிலாளர்கள் 480 நாட்கள் வேலை செய்தால் நிரந்தரமாக்க வேண்டுமென்று, ஊருக்கு உத்திரவிட்டு விட்டு, அரசாங்கம் தன்னுடைய துறையில் 480 நாட்கள் வேலை செய்த தொழிலாளர்களை நிரந்தரமாக்காமல் இருக்கிறார்களே, அவர்களை நிரந்தரமாக்கத் தயாரா? இதனை சவால் விட்டுக் கேட்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இறுதியில் பதில் அளிக்கிற போது நாங்கள் போட்ட சட்டத்தை நாங்கள் கவுரவிக்கத் தயார் 480 நாட்கள் வேலை செய்த அரசுத் துறைத் தொழிலாளர்களை நிரந்தரமாக்குவோம் என்ற வாக்குறுதியை அந்தரங்க சுத்தியோடு தரத் தயாரா என்பதை அவருடைய சிந்தனைக்கே விட்டு விடுகிறேன்.

அதுமட்டுமல்ல இத்தகைய போராட்டங்கள் நடக்கிறபோது நீங்கள் போடுகிற சட்டங்களை நீங்கள் நிறைவேற்ற மாட்டீர்கள் என்றால், ஏன் அதை நிறைவேற்றவில்லை என்று கேட்பதற்குள்ள



1986 மே 7] [திரு. கு. சுப்பராயன்]

தார்மீக உரிமை மக்களுக்கு உண்டா? இல்லை. ஆகவே முதலில் அதை நிறைவேற்றக் கறுக்கொள்ளுங்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல தனியார் பஸ் கம்பெனிகளில் நடக்கிற அட்டூழியங்கள் போல வேறு எந்தத் துறையிலும் இல்லை யென்றே சொல்லலாம். தனியார் பஸ் கம்பெனித் தொழிலாளர்கள் என்ன கொத்தடிமைகளா? அந்தத் தொழிலாளர்களுக்கு உரிமைகளை அனுபவிக்கிற வாய்ப்பு இல்லையா? மோட்டார் தொழிலாளர்கள் சட்டம் இருக்கிறது. தொழிலாளர் நல அதிகாரிகளைக் கேட்டால் சொல்வார்கள். சட்டம் இயற்றப் பட்டு அழகாக அலமாரிகளில் அடுக்கி வைக்கப் பட்டிருக்கின்றன. அந்தச் சட்டம் தொழிலாளர் வாழ்க்கையில் பயன்படக் கூடாதா? தொழிலாளர் தங்கள் வாழ்க்கையில் அதன் பலன்களை உணர, நுகர பயன்படுகிறதா? இல்லை. நீங்கள் போடுகிற சட்டங்கள் நிறைவேறுகிறதா என்று கண்காணிக்க கண்காணிப்பு அதிகாரிகள் இருக்கிறார்கள். அதிகாரிகளைக் கண்காணிக்க அரசு இருக்கிறது. அரசும் தூங்குகிறது, அதிகார துறையும் தூங்குகிறது? ஆகவே எங்கேயும் இது நிறைவேற்றப் படவில்லை. கொடுமையிலும் கொடுமை. அத்துக்கூலிகளாக தொழிலாளர்கள் நடத்தப்படுகிறார்கள். அதுபற்றிய நூற்றுக் கணக்கான புகார்கள் என்னிடத்திலே இருக்கின்றன. தனியார் பஸ் கம்பெனிகளைப் பொறுத்தவரையிலும். எப்போது அவர் களுக்கு சம்பளம் நிர்ணயிக்கப்பட்டது? 1979 ஆம் ஆண்டு. இப் போது 1986 ஆம் ஆண்டு நடக்கிறது. ஆறு ஆண்டுக்காலமாக சம்பளம் நிர்ணயிக்கப்படவில்லை. அந்த தொழிலாளர்கள் எப்படித்தான் வாழ்வார்கள்? அடிவயிறு பற்றி பசியால் காய்ந் தால் ஈரத் துணியைப் போட்டு குப்புறப் படுத்துக்கொள்வதா? பசிக்கிற வயிற்றுக்கு உணவு ஊட்டுவதற்கு வேலை செய்கிற இடத்தில் கூலி கேட்க தொழிலாளர்களுக்கு உரிமை உண்டா, இல்லையா? உழைப்பை அவன் விற்கிறான். அப்படி விற்கிற தன்னுடைய உழைப்பால் குடும்பத்தை நடத்த ஊதியத்தைப் பெறுகிற பண்டமெண்டல் ரைட் அவனுக்கு உண்டா, இல்லையா? வாழும் உரிமையை அவர்களுக்குக் கொடுக்கப் போகிறீர்களா, இல்லையா? கொடுக்க வேண்டும். அப்படியானல் நீங்கள் போட்ட சட்டத்தை நிறைவேற்றாத அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுங்கள். அல்லது நிறைவேற்றக் கூடாது என்பதற்காக சட்டம் போட்டிருக்கிறீர்களா என்பதை தெரிவியுங்கள்.

[திரு. கு. சுப்பராயன்] [1986 மே 7

அதிலே ஒன்று, உச்ச நீதிமன்றத் தீர்ப்பு இருக்கிறது. சட்டப்படி ஒரே தொழிலுக்கு ஊதியத்தில் எந்தவிதமான வேறுபாடும் இருக்கக்கூடாது. அரசு கழகங்களில் பணியாற்றுகிற தொழிலாளர்கள் செய்கிற தொழிலைத்தான் தனியார் துறையில் இருக்கிற கண்டக்டர், டிரைவர்களும் செய்கிறார்கள். அரசாங்கத் துறையில் இருக்கும் பணியாளர்கள் பெறுகிற ஊதியத்தை இவர்களும் பெற வேண்டும். இல்லாவிட்டால் அவர்கள் தொழில் நடத்த வேண்டிய அவசியம் இல்லையென்று உத்தரவு போட வேண்டாமா? தொழிலாளர்களுக்கு ஊதியம் கொடுக்காமல் தொழில் நடத்துவது அவசியம்தானா? தொழிலாளர்களை பட்டினி போட்டு விட்டு தொழில் நடத்துவது அவசியம்தானா? கூடாது. அரசுக் கழகங்களில் வழங்குகிற ஊதியத்தை, ஓர்க்கிங் கண்டிஷனை தனியார் துறையிலும் அமல் நடத்த வேண்டும். அமல் நடத்தவில்லையென்றால் அவர்களுடைய உரிமம் ரத்து செய்யப்படும் என்று சொல்லி அவர்கள் மீது நிர்பந்த நடவடிக்கை எடுக்க வேண்டும். அதுபற்றி பல்வேறு நிகழ்ச்சிகள் நடந்திருக்கின்றன. இந்த அரசு எப்படி நீதி வழங்குகிறது? உரிமைகளைப் புத்தகத்தில் அழகாக எழுதி, அச்சிட்டுவிட்டுத் தொழிலாளர்கள் பட்டினியால் தற்கொலை செய்ய நிர்ப்பந்தித்துள்ளது என்பதற்கு தான் அடையாளங்கள் இருக்கின்றன. தவிர நீங்கள் நீதி வழங்கியதற்கு அடையாளங்கள் கிடையாது. அதற்குரிய அடிப்படை கிடையாது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

1979 ஆம் ஆண்டு அவர்களுக்கு அறிவிக்கப்பட்ட குறைந்த பட்ச ஊதியம் சரியல்ல. அது போதாது. ஆகவே நியாயமான சம்பள உயர்வையும், விலைவாசிக்கேற்ப ஏறிவருகிற வேரியபிள் டி.ஏ. யையும் நிர்ணயிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அந்தத் தொழிலாளர்கள் படுகிற வேதனையில் இன்னொன்று. கம்பெனியின் நேம் டிரான்ஸ்பர் செய்யப்படுகிறபோது, தொழிலாளர்கள் சர்வீஸ் பிரேக் செய்யப்படும். அவன் தெருவுக்குப் போய்விடுவான். அந்த முதலாளிகள் தொழில் நடத்திக் கொண்டு இருப்பார்கள். நேம் டிரான்ஸ்பர் ஆகிவிடும். அந்தத் தொழிலாளி திடீரென்று அந்தக் கம்பெனியிலிருந்து இந்தக் கம்பெனிக்கு வர முடியாது. இப்படிப்பட்ட நிலைமைகளுக்கு மாற்று வழி கண்டு பிடிக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.



1986 மே 7] [திரு. கு. சுப்பராயன்]

அடுத்தது திருவொற்றியூரில் உள்ள ஈஸ்வரன் ஜெனரல் இன்ஜினியரிங் ஓர்க்ஸ். அங்கே 8 மாத காலமாக சம்பளம் கொடுக்கப்படவில்லை. சம்பளப் பட்டுவாடா சட்டம் இருப்பதாக இந்தப் புத்தகத்திலே சொல்லப்பட்டு இருக்கிறது. இந்தச் சட்டத்தை நிர்வகிப்பதற்கு என்று துறை ஒன்று இருப்பதாகவும் சொல்லப்படுகிறது. ஆனாலும் 8 மாத காலமாக அந்தத் தொழிலாளர்களுக்கு சம்பளம் கொடுக்கப்படவில்லை. நான் கேட்டுக் கொள்கிறேன். அந்த ஈஸ்வரன் இன்ஜினியரிங் ஓர்க்ஸ் லாக் அவுட்டா? குளோசரா? ஸ்ட்ரைக்கா? என்ன நடக்கிறது அங்கே இந்த அரசு அதுபற்றி ஏதாவது கவலை கொண்டு இருக்கிறதா? இல்லை. முதலாளிகளின் குடுமிபிடிச் சண்டையால் லாபகரமான மார்க்கட் வாய்ப்புள்ள தொழில் மூடப்பட்டு இருக்கிறது. எனவே இதில் அரசு தலையிடவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து மதுரையில் உள்ள விசாலாட்சி மில்ஸ், 10 தொழிலாளர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டார்கள். அந்த 10 தொழிலாளர்களை வேலைக்கு எடுத்துக் கொள்ளவேண்டும் என்று சொன்ன அந்த ஸ்பெசல் டி.சி.எல். தண்டிக்கப்படுகிற முறையில் டிரான்ஸ்பெர் செய்யப்பட்டார். எவ்வளவு அற்புதமான முறையில் விரைவாக நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் பாருங்கள். நிறுத்தப்பட்ட தொழிலாளர்களை வேலைக்கு சேர்த்துக்கொள்ள முதலாளியிடம் சொல்ல, இந்த ஸ்பெசல் டி.சி.எல். யார்? என்று கேட்டு அவர்கள் தண்டிக்கப்பட்டார்கள். ஆகவே இந்த மாநிலத்தை ஆளுவது முதலாளிகளுக்கு சாதகமாக உள்ள ஆட்சியா? அல்லது தொழிலாளர்கள் வர்க்கத்தின்மீது கனிவைப் பொழிகிற ஆட்சியா என்பதை நான் கேட்கிறேன். இதுதான் உங்கள் மாடல் கனிவா?

அதைப்போல ஜே.கே.கே. மில். 700 தொழிலாளர்கள் தெருவிலே நிறுத்தப்பட்டார்கள். அந்த பவானி கரையில் உள்ள அந்த கந்தசாமி ஸ்பின்னிங் மில்ஸ், இன்றைக்கு வரையிலும் ரெபான்ஸ் உண்டா? உங்களிடம் நீதி பெறவேண்டும் என்றால், ஒன்று அண்ணா தி.மு.க. சங்கம் திறக்க வேண்டும். அல்லது ஹைகோர்ட்டிலே போய் ரிட் போடவேண்டும். இது நியாயம் தானா? ரிட் போடாமல் உங்களிடமிருந்து நிச்சயமாக நியாயத்தைப் பெற

முடியாது என்பதைத் தான் இதிலே காண முடிகிறது. ஆகவே தொழிலாளர் துறை என்கிற நவாப் நாற்காலியில் புதிதாக அமர்ந்து உள்ள நம்முடைய நிதியமைச்சர் அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன். தயவுசெய்து நீங்கள் கந்தசாபி மில்ஸ் பற்றிய ரெபான்ஸ் கிடைக்க உறுதி அளிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தது டூரிசம். இந்த டூரிசத்திலே ஒரே ஒரு யூனியன்தான் இருக்கிறது. 'Evaluation and Implementation Committee' பரிந்துரை செய்தது என்ன தெரியுமா? இந்தத் துறையில் உள்ள யூனியனை ரெகக்னைஸ் பண்ணவேண்டும். ஆனால் இன்றைக்கு வரையிலும் ரெகக்னைஸ் செய்திருக்கிறார்களா என்றால் இல்லை. அரசாங்கத்தின் துறை டூரிசம். இந்த டூரிசத்தில் உள்ள தொழிற் சங்கத்தை அங்கீகரிக்க வேண்டும் என்று அரசால் நியமிக்கப்பட்ட 'Evaluation and Implementation Committee' ரெக்கமன்ட் செய்தும் கூட நீங்கள் இன்றைக்கு வரையிலும் ஏன் அவற்றை அங்கீகரிக்கவில்லை என்பதை நான் கேட்க விரும்புகிறேன்.

**திரு. எம். அண்ணாதாசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அண்ணா தி.மு.க. யூனியன் இருந்தால்தான் அரசு அதற்குள்ள சலுகைகளை அளிக்கும் நடவடிக்கைகளை எடுக்கும் என்ற குற்றச்சாட்டைச் சொன்னார்கள். நான் ஒன்றை அவர்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். திருச்சி காவிரி என்ஜினியரிங் ஸ்ட்ரக்சுரல்ஸ் என்ற அந்த தொழிலகத்தில் அண்ணா தி.மு.க. யூனியன் கிடையாது. ஆனால் அந்தத் தொழிலாளர்களுடைய கோரிக்கையை அரசு முறையாகப் பேச்சுவார்த்தை நடத்தி, நிர்வாகம் ஒத்துக் கொள்ளாதபோது, அதை நீதிமன்றத்திற்கு அனுப்பித்து, அவர்களுக்கு உள்ள உதவிகளை, — இங்கே குறிப்பிட்டு இருக்கிறதே தொழிலாளர்களுக்கு உதவி அளிப்பது என்பது — அதையும் செய்து கொடுத்து இருக்கிறது.

அதுமட்டுமல்ல. இப்போது நடந்து கொண்டு இருக்கிற, நான் குறிப்பிட்டேனே அந்த ஸ்டீல் ரோலிங் மில்ஸ், அங்கே அண்ணா தி.மு.க. யூனியன் இல்லை. அதற்கும் நியாயம் பெறவேண்டும் என்று அரசும் கட்சியிலே உள்ள நான் தான் கேட்டேன் என்பதையும் நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.





**திரு. கு. சுப்பராயன்:** தலைவர் அவர்களே, எல்லோருக்கும் போலவே அவர் சொன்னது என்ன என்று எனக்கும் புரியவில்லை. அடுத்து ஹோசூரைப் பொறுத்தவரையில்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** தலைவர் அவர்களே, புரிந்து கொள்ளாதது போல் நடிப்பது சரியல்ல. அண்ணா தி.மு.க. தொழிற்சங்கம் தொடங்கினால்தான் அதற்கு ஆதரவு கிடைக்கிறது. அரசு கவனிக்கிறது என்று சொன்னதற்கு, மாண்புமிகு உறுப்பினர் அண்ணாதாசன் அவர்கள் விளக்கம் சொன்னார்கள். அண்ணா தி.மு.க. தொழிற்சங்கம் இல்லாத அமைப்பிலேகூட நாங்கள் உரிய கோரிக்கைகளை நிறைவேற்றி இருக்கிறோம் என்று சொல்கிறார்கள். நான் தெரிவிக்க விரும்புவது, அண்ணா தி.மு.க. தொழிற்சங்கம் அமைப்பது பஞ்சமா பாதகங்களில் ஒன்றைப் போலப் பேசுகிறார்களே, அந்த தொழிற்சங்கத்தில் இருப்பவர்கள் தொழிலாளர்கள் இல்லையா? அவர்கள் எல்லாம் முதலாளிகளா?

**திரு. கு. சுப்பராயன்:** தலைவர் அவர்களே, வருகிறேன், அதற்குரிய பட்டியல்களும் இருக்கின்றன. அவசரப்படாதீர்கள். அதற்குரிய பட்டியல்களும் இருக்கின்றன. அவசரப்படாதீர்கள். நான் இங்கே அடுத்து குறிப்பிட விரும்புவது, ஹோசூர் பிரச்சனைதான். அண்ணா தி.மு.க. வினுடைய நேர்மையை முழுமையாக சந்தேகிப்பது அல்ல. எங்களுடைய பணி தொழிலாளர் வர்க்கம் போராட்டங்களில் ஈடுபடுகிறபோது, அதை உடைப்பதற்கு அண்ணா தி.மு.க. தொழிற்சங்கம் எப்படி கருவியாகப் பயன்படுகிறது என்பதைத்தான் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

(பிற்பகல் 1-30)

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்):** பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு குறிப்பிட்ட தொழிற்சங்கத்திற்கு சலுகைகள் கொடுக்கப் பட்டிருக்கின்றன என்பதைப் போன்று மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் குறிப்பிடுகிறார்கள். வறுமையெல்லாம் முழுமையாக இந்த மாநிலத்திலே போக்க வேண்டுமென்றுதான் முதலமைச்சர் அவர்கள் ஒரு கொள்கையைச் சொன்னார்கள். எந்தத் தொழிற் சங்கமாக இருந்தாலும், 12(3) அக்ரிமென்ட் போடுவதாக இருந்தாலும் அந்தத் தொழிற்சாலையினுடைய 60 சதவீத தொழிலாளர்கள் ஆதரவு தரவேண்டுமென்று சொன்னார்கள்.

அதுபற்றி இரண்டு கம்யூனிஸ்டு கட்சிகளினுடைய நிலை என்ன? அதை ஆதரிக்கிறார்களா? பெரும்பான்மையான தொழிலாளர்களுடைய கருத்தை ஆதரிக்கிறீர்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் அனுமதியுடன் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது. உங்களுக்கும் சேர்த்துத்தான்.

**திரு. கு. சுப்பராயன்:** தலைவர் அவர்களுக்கு நன்றி. தலைவர் அவர்களே, துணைத் தலைவர் அவர்கள் ஒரு வினாவைத் தொடுத்தார்கள். அதற்கு நான் ஒரு வினாவைத் தொடுக்கிறேன். 12(3) ஒப்பந்தம் போடுவதற்குரிய 'ரைட்' ஒரு தொழிற்சங்கத்திற்கு இருக்கிறது. நான் கேட்கவிரும்புவது ஒரு தொழிற்சங்கத்தை அங்கீகரிப்பதற்கு 'சீக்ரெட் பேலட்' நடத்த வேண்டுமென்பதை ஏ.ஐ.டி.யூ.சி. வலியுறுத்துகிறது. இந்திய கம்யூனிஸ்டு கட்சி வலியுறுத்துகிறது. அதை ஒப்புக் கொண்டு தமிழ்நாட்டில் அனைத்து இடங்களிலேயும், 'சீக்ரெட் பேலட்' வைத்து ஒப்பந்தம் போடுகிற 'ரைட்' உள்ள தொழிற்சங்கத்தை தேர்வு செய்துகொள்ள தொழிலாளர்களுக்கு உரிமைதர அண்ணா தி.மு.க. தயாரா என்பதை அமைச்சர் அவர்கள் மூலம் அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்:** (பேரவைத்துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு ஆயிரம் தொழிலாளர்கள் இருக்கிறார்கள் என்றால், 200 தொழிலாளர்கள் ஒரு தொழிற்சங்கத்தை அங்கீகரித்திருந்தால் அவர்கள் போராடலாம். அவர்கள் பார்த்து 12 (3) அக்ரிமெண்டை, 800 தொழிலாளர்களுக்கு விரோதமாகப் போடலாம் என்கிற நிலையில் நீங்கள் இருக்கிறீர்கள். நீங்கள் சொல்கிற கருத்து அதுதான். ஒரு தொழிற்சங்கம், ஆயிரம் பேர் பணியாற்றுகின்ற தொழிற்சாலையில் 200 பேர் இருக்கின்ற தொழிற்சங்கத்தில் அந்தத் தொழிற்சாலை நடைபெறுகின்றபோது, நீங்களாக 12(3) அக்ரிமெண்டை போடலாம் என்கிறீர்கள். ஆனால் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அசல் தொழிலாளர்களுக்கு அநீதி வழங்குவது என்றார். அந்தத் தொழிற்சாலையிலே பணியாற்றுகிற ஒட்டுமொத்த தொழிலாளர்களில் 60 சதவீதம்பேர் ஒத்துக்கொண்டால்தான் 12(3) அக்ரிமெண்ட்





போடவேண்டுமென்று, ஒரு தொழிலாளருக்காக, உண்மையான சமூக நீதிக்காக ஒரு தத்துவத்தைச் சொல்கிறார்கள். பலமுறை இந்த மன்றத்திலே சொல்லியும்கூட 2 கம்யூனிஸ்ட் கட்சியும் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆதரிக்கவில்லை. இனிமேலாவது அந்த நியாயத்தை ஏற்றுக்கொள்வார்களா என்பதைத்தான் நான் கேட்க விரும்புகிறேன்.

**திரு. வி. பி. சிந்தன்:** தலைவர் அவர்களே, துணைச் சபாநாயகர் அவர்கள் இந்தக் கேள்வியை எழுப்பியதற்கு நன்றி. அவை முன்னவர் பதில் சொல்லும்போது இந்தக் கேள்வியையும் சேர்த்து பதில் சொல்ல வேண்டுமென்பது என்னுடைய வேண்டுகோள். ஒரு தொழிற்சாலையிலே வேலை செய்யக்கூடிய தொழிலாளிகள், பெரும்பான்மையான தொழிலாளிகள் 'சீக்ரெட் பேலட்' மூலமாக தேர்ந்தெடுக்கக்கூடிய சங்கத்திற்குத்தான் அங்கீகாரம் வழங்க வேண்டுமென்ற நிலையை அது 60 சதவீதம் இல்லாவிட்டாலும் 59 ஆனாலும், அல்லது 51 ஆனாலும் நான் ஒத்துக்கொள்கிறேன். அந்தச் சங்கத்திற்கு அங்கீகாரம் வழங்குகிற ஒரு நிலையை தமிழக அரசு எடுக்குமா என்று நான் சவாலாகச் சொல்ல வில்லை: ஆனால் அரசு இதுவரை எடுக்கவில்லை; எடுக்க வேண்டுமென்பதுதான் என்னுடைய வேண்டுகோள். எடுப்பீர்களா என்பதை முன்னவர் அவர்கள் குறிப்பிட வேண்டுமென்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கு. சுப்பராயன்:** தலைவர் அவர்களே, ஓசூரில் எக்ஸெல் பவுண்டரியில் சட்டபூர்வமாக நடைபெற்ற வேலை நிறுத்தத்தை சட்டவிரோதமான நிலையில் உடைத்து இருக்கிறார்கள். அது இப்போது ஜே.சி.எல். முன்னால் பெண்டிங்காக இருக்கிறது. வழக்கு பெண்டிங்காக இருக்கிற அதே நேரத்தில் சீஃப் இன்ஸ்பெக்டர் ஆஃப் பேக்டரீஸ், சேலம், அங்கே கான்ட்ராக்ட் ஒழிப்பு சட்டத்தின்கீழ் புதிய லைசென்ஸ் கொடுத்து சட்ட பூர்வமாக நடைபெற்றிருக்கிற வேலை நிறுத்தத்தை உடைத்து சட்ட விரோதமாக வேலையை நடத்த அனுமதித்து இருக்கிறார். இன்னும் ஒரு கொடுமை என்ன தெரியுமா? இது சர்வதேச ஐ.எல்.ஓ. வினுடைய மரபுகளுக்கே விரோதமானது. ஒரு வேலை நிறுத்தம் நடைபெறுகிற இடத்தில், அந்த வேலை நிறுத்தத்தை உடைப்பதற்காக, இன்னொரு கருங்காலி சங்கத்திற்கு அனுமதி கொடுத்து, அவர்களை வேலை செய்ய அனுமதித்து இருக்கிற ஒரு கொடுமை தமிழ்நாட்டில் நடை

பெற்றிருக்கிறது. இதிலே போலீசாரும், தொழிலாளர்கள் துறை அதிகாரிகளும்கூட முகம் சுளிக்கின்ற அளவுக்கு அதிகார துஷ்பிரயோகம் அங்கே கொடி கட்டிப் பறந்திருக்கிறது என்பதைக் குற்றச்சாட்டாக வைக்க விரும்புகிறேன். அங்கே 40 தொழிலாளர்கள் பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள். அவர் களுக்கு இன்றைக்கு வரையிலும் நியாயம் கிடைக்கவில்லை என்பதை இங்கே நான் குறிப்பிட்டு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, அம்பத்தூரிலே 'சிப்காட்' தொழிற்பேட்டையிலே வில்சன் கம்பெனி. அங்கே கடந்த 29 ஆம் தேதியிலிருந்து 'லாக் அவுட்'. எந்தவிதமான முன் அனுமதியும் பெறாமல் 'லாக் அவுட்' செய்து விட்டார்கள். இந்த அரசாங்கம் கண்டு கொண்டதா? அல்லது கண்டும் காணாமல் இருந்து கொண்டிருக்கிறதா என்பது நமக்குப் புரியவில்லை.

அடுத்து, தேனி—தேனிக்கு அருகிலே ரேணுகா டெக்ஸ்டைலில் ஒரு ஸ்டிரைக் 10 நாட்களாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அந்தத் தொழிலாளர்கள் என்ன கேட்கிறார்கள் தெரியுமா? அத்துக் கூலிகளாக இருப்பவர்களுக்கு மற்ற தொழிலாளிக்கு இருப்பதுபோன்று 'ஓர்க்கிங் கண்டிஷனும்' சம்பளமும் வேண்டு மென்ற ஒரே கோரிக்கையை வைத்ததற்காக அந்தத் தொழி லாளிகள் தெருவிலே நிறுத்தப்பட்டிருக்கிறார்கள். அங்கே அதை எதிர்த்து வேலை நிறுத்தம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அதுபற்றிய ரேணுகா டெக்ஸ்டைல்ஸ் பற்றியும் இந்த அரசு கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இறுதியாக, திரைப்படத் தொழிலாளிகள் பற்றிக் குறிப்பிடு கிறேன். பல திரைப்படங்களைப் பட்டியல்போட்டுச் சொன் னார்கள், நன்றி. கேட்க மகிழ்ச்சியாக இருந்தது இவ்வளவு தூரம் பட்டியல் போட்டதற்கு. ஆளும்தரப்பில் பலரும் திரைப்படத்தைப்பற்றியே அதிகம் சொன்னார்கள். நான் சொல்லவிரும்புவது, திரைப்படங்களின் பட்டியலைப் பற்றி அல்ல. திரைப்படங்களின் பட்டியலைக் காட்டிலும் திரைப்படங்களை இயக்குகின்ற, அந்தத் துறையில் பணியாற்றுகின்ற தொழிலாளி களைப்பற்றிக் கவலைப்பட்டு சொல்ல விரும்புகிறேன். அந்தத் தொழிலாளர்களுக்கு ஏதாவது சட்டப் பாதுகாப்பு உண்டா? அந்தத் தொழிலாளர்கள் ஊருக்கு வெளிச்சம் போட்டுவிட்டு இருட்டிலே வாழ்ந்துகொண்டு இருக்கிறார்கள். அந்தத் தொழி





லாளர்களுக்கு வெளிச்சம் போடுவதற்கு சட்டம் போட வேண்டாமா? அதுபற்றி ஏதாவது முத்தரப்பு கமிட்டி அமைக்க இந்த மாநில அரசு கருதுகிறதா? கட்டாயமாக திரைப்படத் தொழிலாளர்களுக்கு ஒரு உத்திரவாதமான சம்பளம் மற்றும் வேலைப் பாதுகாப்பை ஏற்படுத்துவதற்கு உரிய நடவடிக்கை களை இந்த மாநில அரசு செய்ய வேண்டும் என்று இங்கே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, ஒரு விஷயத்தை இங்கே நம்முடைய மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் பலரும் சொன்னார்கள். ஏதோ குறை சொல்லு வதற்கு என்று மறுபடியும் குறிப்பிட விரும்பவில்லை. தொழி லாளர்கள் சட்டங்கள் நடைமுறையில் அமுலில் இல்லை என்பது தெளிவாகத் தெரிகிறது. லேபர் ஆபிசரிடம் விசாரணைக்கு பெரிதும் முதலாளிகள் போவதே இல்லை. லேபர் ஆபிசர்களைக் கண்டால் அவர்கள் ஏதோ வாட்ச்மேன் மாதிரி நினைத்துக் கொண்டு இருக்கிறார்கள். ஆகவே தொழிலாளர் நலத்துறை அதிகாரிகளை நிர்வாகத்தினர் மதிக்கவில்லை. அவர்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும். அதிகபட்சமான அதிகாரத்தைக் கொடுக்க வேண்டும். அவர்களை சம்மன் ஆஜர் செய்ய நடவடிக்கை எடுக்க அதிகாரம் தரவேண்டும். கோர்ட்டுக்கு உரிய பவரை அவர்களுக்கு வழங்க வேண்டும். இல்லை என்றால் திருநாளைப்போவார் நாயனார் புராணம் மாதிரி நீதி நிச்சயம் கிடைக்காது. நீதி கிடைக்க வேண்டுமானால் இவர்களைத் தண்டிப்பதற்கு உரிய திருத்தம் செய்ய வேண்டும்.

அதேபோல் பேக்டரி ஆக்டை அமுல்படுத்தாவிட்டால் 10 ரூபாய் 20 ரூபாய் தான் பைன் போடுகிறார்கள். இது நியாயமா? பேக்டரிஸ் ஆக்ட்டை நடத்தாதவர்களை கையில் விலங்கு போட்டு சிறையில் போட்டு தண்டிக்கிற முறையில் சட்டத் திருத்தம் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று சொல்ல விரும்புகிறேன்.

இறுதியாக ஒன்று, என்னுடைய தொகுதியைப் பொறுத்த வரையில் 1983 ஆம் ஆண்டு அன்றைக்கு ஒரு தொழில் பயிற்சிப் பள்ளி தொடங்குவதற்கு actual proposals அப்போது ஆண்களுக்கு உரிய தொழில் பயிற்சி தொடங்குவதற்குத்தான். ஆனால் 1985ல் அது என்ன ஆனது என்றால் அது பெண்களுக்கு உரிய ஐ.டி.ஐ. யாக திருத்தப்பட்டு, சுருக்கப்பட்டு விட்டது.

ஆண்களுக்கு உரிய ஐ.டி.ஐ. என்று போட்டுவிட்டு அது பின்னால் மாற்றப்பட்டது. அதற்கு என்ன காரணமோ நமக்குத் தெரியாது. சொன்னால் அதற்கு ஒரு ஆதாயம் கற்பிப்பார்கள். அதுதான் நிலைமை. அங்கே இன்றைக்கும் வாடகைக் கட்டிடத்தில் தான் அது இருந்து கொண்டிருக்கிறது. அதற்குக் கூட வாடகை கொடுப்பது இல்லை. சொந்தக் கட்டிடம் இல்லை. இந்த நிலைமை ஏதோ மாற்றுக் கட்சி ஜெயித்து விட்டதால் தண்டிக்கப்படுவது போன்ற ஒரு தவறான கருத்து வந்து விடக்கூடாது என்பதற்காக உரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும். ஆண்களுக்கு உரிய தொழிற் பயிற்சிப் பள்ளியாக மாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கோவைக்கு மேலும் சில தொழில் பயிற்சிப் பள்ளிகளைக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மத்திய அரசு 10 தொழில் பயிற்சிப் பள்ளிகளைத் திறக்க வேண்டும் என்று சொல்லியும் கூட தமிழ்நாடு தொடங்காமல் இருப்பது சரி இல்லை என்று சொல்லி முடிக்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் காலை அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, மாலை 4-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

*பின்னர் பேரவை பிற்பகல் 1-38 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.*

*பிற்பகல் 4-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.*

**5. வரவு-செலவுத் திட்டம், 1986-87 வாக்கெடுப்பு—தொடர்ச்சி.**

**கோரிக்கை எண் 29—தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் (தொடர்ச்சி).**

**திரு. வி. தங்கவேலு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று இங்கு தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் என்ற மானியக் கோரிக்கையின் மீது பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி சார்பாக



தங்கள் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். இன்றைக்கு தொழிலாளர்கள் துறை என்று சொல்கிற போது தொழிற்சாலைகளில் நடக்கக்கூடிய அவல நிலைமைகளைப் பற்றி இங்கே சில கருத்துக்களை எடுத்துச் சொல்ல நான் முன்வந்திருக்கிறேன்.

முதலாவதாக பாக்டரி இன்ஸ்பெக்டர் என்று சொல்லக்கூடிய இந்த முக்கியமான அதிகாரிபற்றி சில கருத்துக்களை எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன். நிர்வாக வசதிக்காகவும், மக்களின் நலனுக்காகவும் துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் பல மாவட்டங்கள் இரண்டு அல்லது மூன்று மாவட்டங்களாக அவற்றின் பராமரிப்பு வசதிக்காக பிரிக்கப்பட்டு நல்லமுறையில் நிர்வாகம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஆனால் தொழிலாளர் துறையில் ஒவ்வொன்றுக்கும் சம்பந்தமில்லாத இரு பிரிவுகள் முறையே, தொழிற்சாலைகள் ஆய்வுப் பிரிவு, தொழிலாளர் பிரிவு என்று இயங்கி வருகின்றன. தொழிற்சாலைகள் ஆய்வுப் பிரிவில் குறைந்தபட்ச கல்வித் தகுதி தொழில் நுட்பப் பட்டமாகும். அதனால் இரு பிரிவிலும் உள்ள அலுவலர்கள் ஒரு பிரிவிலிருந்து மற்ற பிரிவிற்கு மாற்றப்பட்டோ அல்லது பதவி உயர்வு பெற்றோ செல்வது இல்லை, நிர்வாகத்திலும் இரு பிரிவுக்குமிடையே எவ்வித சம்பந்தமும் இல்லாமலிருக்கிறது.

மேலும் தொழிலாளர் ஆய்வாளர்கள் நிறுவனச் சட்டம், உணவகங்கள் சட்டம், எடைகள் மற்றும் அளவைகள் சட்டம் போன்றவைகளை அமல்படுத்துகிறார்கள். தொழிற்சாலைகள் ஆய்வாளர்கள் தொழிற்சாலைகள் சட்டம் மற்றும் அதனைச் சார்ந்த சட்டங்களையும் அமல்படுத்துகிறார்கள். இச்சட்டங்களை அமல்படுத்துவதிலும், நிர்வாகத்திலும் இரு பிரிவினருக்கும் சம்பந்தமில்லை.

மேலும் தொழிலாளர்கள் அரசு கட்டுறுதிச் சட்டம், தொழிலாளர் பொது வைப்பு நிதிச் சட்டம் போன்ற பல தொழிலாளர் நலச் சட்டங்களை தொழிலாளர் துறை அல்லாத பல தனித்தனித் துறைகள் அமல்படுத்துகின்றன. இதனால் தொழிலாளர்களுக்குக் கிடைக்க வேண்டிய பயன்கள் எதுவும் தடைப்படவில்லை. மாறாக இவற்றினால் தொழிலாளர்களுக்கு நல்ல பயன்தான் கிடைத்துள்ளது.

மற்ற மாநிலங்களில் இருக்கக்கூடிய தொழிற்சாலைகளைப் பற்றிப் பேசுகிறபோது அங்கே தொழிற்சாலைகள் ஆய்வுப் பிரிவு தனியாக இயங்கி வருகிறது. அது மட்டுமல்லாமல் அது சிறப்பான முறையில் நன்கு இயங்கிக் கொண்டும் வருகின்றது. அதனால் மற்ற மாநிலங்களில் எந்தப் பிரச்னையும் எழாமல் இருக்கின்றது. தொழிலாளர்களுக்கு நல்ல பயன்தான் கிடைத்துள்ளது.

மேலும் சமரசப் பேச்சுவார்த்தை நடத்துவதும், சட்டம் அமல்படுத்துவதும் ஒன்றுக்கொன்று தொடர்பில்லாமல் தனித்தனியாக இயங்க வேண்டும் என்றும் சமரசப் பேச்சுவார்த்தைக்கு உடன்பட்டவர்கள் தாமாகவே பேச்சுவார்த்தைக்கு வரவேண்டுமென்பதும், பேச்சுவார்த்தைக்கு உட்பட்டவர்களை சட்டம் அமல்படுத்தும் பிரிவினைக்காட்டி பேச்சுவார்த்தைக்கு வரவழைக்கக் கூடாது என்பதும், பன்னாட்டு தொழிலாளர் நிறுவனத்தின் கொள்கையாகும்.

கடந்த இருபதாண்டுகளாக பல மூத்த நிர்வாக அதிகாரிகளும் (ஐ.எ.எஸ்., ஐ.பி.எஸ். அதிகாரிகள்) சொல்லி கடந்த ஆண்டு அரசுக்கு சமர்ப்பித்த நான்காவது ஊதியக் குழு அறிக்கை தொழிற்சாலைகள் ஆய்வுப் பிரிவு தொழிலாளர் துறையிலிருந்து பிரிக்கப்பட்டுத் தனியாக ஆக்கப்படவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளது. தொழிற்சாலைகள் ஆய்வுப் பிரிவை தனித்துறையாகப் பிரிப்பதால் அரசுக்கு எவ்வித பொருளாதாரச் செலவும் ஏற்பட வாய்ப்பில்லை. மேற்கூறிய காரணங்களினால் தொழிற்சாலைகள் பிரிவிலிருந்து பிரித்து தனித் துறையாக செயல்பட அரசு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதனால் தொழிலாளர்களுக்கு நல்ல முறையில் பாதுகாப்பும், பயன்பாடும் உடனடியாகக் கிடைக்கும் என்பதையும் மெத்த பணிவன்போடு சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். இன்றைய சூழ்நிலையிலே தொழிற்சாலைகள் என்று சொல்லுகிறபோது, தமிழகத்திலே இருக்கக்கூடிய முக்கியமாக இராணிப்பேட்டையிலே இருக்கக்கூடிய 'பெல்' நிறுவனத்தைப் பற்றியும், திருச்சியிலே உள்ள 'பெல்' நிறுவனத்தைப் பற்றியும், அங்குத் தொழிற்சாலைகளிலே இன்றைக்கு தொடர்ந்து பணியாற்றிக் கொண்டிருக்கும் துப்புரவுத் தொழிலாளர்களின் அவல நிலையைப் பற்றியும் அதிலே எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் பற்றியும் எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன்.



காண்ட்ராக்ட் லேபரர்ஸ் என்று சொல்லி, இன்றைக்கு வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கக்கூடிய இந்த துப்புரவுத் தொழிலாளர்களின் நிலை எப்படி இருக்கிறது என்பதைப் பார்க்கிறபோது, நான் பல மாநிலங்களுக்குச் சென்று பார்த்தபோது, 'அபாலிஷன் ஆப் காண்ட்ராக்ட் மெதட்' என்று சொல்லி, காண்ட்ராக்ட் ஒர்க்கர்கள் contract workers belong to Scheduled Caste and Scheduled Tribes என்று சொல்லி, டெல்லியிலே உள்ள தொழிற்சாலைகளிலும், ஹைதராபாத்தில் இருக்கக்கூடிய 'பெல்' நிறுவனத்திலும், மற்றும் இந்துஸ்தான் மெஷின் டூல்ஸ் தொழிற்சாலையிலுள்ள தொழிலாளர்கள் எல்லாம் காண்ட்ராக்ட் லேபரர்ஸ் என்று சொல்லி, வறுமைக்கோட்டிற்குக் கீழே இருக்கக்கூடிய அவல நிலையைக் காண்கிறோம். மத்திய அரசானாலும், மாநில அரசானாலும் இன்றைக்கு, 'அபாலிஷன் ஆப் பிரைவேட் காண்ட்ராக்ட் மெதட்' என்று சொல்லி, தனியார்கள் இந்த துப்புரவுத் தொழிலாளர்களை காண்ட்ராக்ட், முறையில், ஒப்பந்த அடிப்படையில் தொழிலாளர்களை வைத்திருக்கும் திட்டத்தை நீக்க வேண்டுமென்று பல சட்டங்களைப் போட்டிருக்கிறார்கள். ஆனால், திருச்சியிலுள்ள 'பெல்' நிறுவனம் போன்ற பெரிய நிறுவனங்கள், இராணிப்பேட்டையிலே இருக்கக்கூடிய பெல் நிறுவனம் இன்றைக்கு பல கோடிக்கணக்கான ரூபாய்களை இலாபமாகத் தரக்கூடியதாக இருந்தாலும்கூட, அடி மட்டத்திலே இருக்கக்கூடிய துப்புரவுத் தொழிலாளர்களுடைய நிலைமை எப்படியிருக்கிறது, அவர்களுடைய வாழ்க்கை வரலாறு எப்படி இருக்கிறது என்பதைப் பார்க்கிறபோது, துப்புரவுத் தொழிலாளர்களுக்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ரூபாய் ஆறு தினக் கூலி என்றிருந்ததை நான் 11 நாட்கள் உண்ணாவிரதம் இருந்து, பின்னர் தினக் கூலி 6 ரூபாய் என்று இருந்தது 11 ரூபாயாக ஆக்கப்பட்டு, இன்றைக்கு திருச்சியிலுள்ள 'பெல்' நிறுவனத்திலும், இராணிப்பேட்டையிலுள்ள 'பெல்' நிறுவனத்திலும் தினக் கூலி ரூ. 15 என்ற அளவில் பெறக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இந்தச் சம்பளம் போதாது. மற்ற மாநிலங்களில் 'அபாலிஷன் ஆப் பிரைவேட் காண்ட்ராக்ட் மெதட்' என்ற அடிப்படையில் தொழிலாளர்களை ஒப்பந்த அடிப்படையில் எடுப்பதை அகற்றுவதற்கு அங்குள்ள அதிகாரிகள் நிர்வாகத்துடன் பேசி

நீங்குவதிலே ஈடுபட்டதுபோல், இன்றைக்கு ஆறு மாதங்களுக்கு முன்பு தமிழகத்திலே முதலமைச்சர் அவர்கள் வரலாற்றில் பொறிக்கக்கூடிய அளவிற்கு உத்தரவிட்டிருக்கிறார்கள்.

இங்கே எம்.ஆர்.எல். என்று சொல்லக்கூடிய மதராஸ் ரிபைனரீஸ் லிமிடெட் என்று சொல்லக்கூடிய நிறுவனம் அதற்கு தலைமைப் பொறுப்பேற்றிருக்கக்கூடிய உயர் அதிகாரி தீனதயாளு அவர்கள் 'அபாலிஷன் ஆப் கான்ட்ராக்ட மெதட்' என்பதை ஏற்று இதை மாற்றியமைத்து, துப்புரவுத் தொழிலாளர்களுக்கென ஒரு சொசைடி அமைத்து, அதன் மூலமாக அவர்கள் சம்பளம் பெறுவதற்கும், அதே சமயத்தில் நிரந்தரமான ஊதியத்தைப் பெறுவதற்கும், நல்ல சட்டங்களை இயற்றி, நிரந்தரமான ஈட்டுறுதியைப் பெறுவதற்கும். நிரந்தரமாக அரசிடமிருந்து கடன் வசதிகளைப் பெறுவதற்கும் அந்த மதராஸ் ரிபைனரீஸ் நிறுவனம் இந்தியாவிற்கு ஒரு எடுத்துக்காட்டாக இருக்கக்கூடிய ஒரு சூழ்நிலையைப் பெற்றிருக்கிறது.

மதராஸ் ரிபைனரீஸ் லிமிடெட் என்ற அந்த நிறுவனம் செய்திருக்கக்கூடிய நல்ல ஏற்பாட்டை இங்கிருக்கக் கூடிய பப்ளிக் அன்டர்டேக்கிங்ஸ்களிலும், பிரைவேட் அன்டர்டேக்கிங்ஸ்களிலும், மாநில அரசின் கீழ் இருக்கக் கூடிய தமிழ்நாடு மின்சார வாரியத்திலும் செய்து துப்புரவுத் தொழிலாளர்கள் நல்ல நிலைமையிலே இருக்க இந்த அரசு அந்த முறைகளை அமுல்படுத்த வேண்டுமென்று தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். இன்றைக்கு தமிழகத்தில் இருக்கக்கூடிய

(மாலை 4-10)

தமிழ்நாடு மின் வாரியத்தைப் பற்றிச் சொல்கிறபோது இன்றைக்கு நம்முடைய அரசு கிட்டத்தட்ட ரூ. 400 கோடியை ஒதுக்கீடு செய்திருக்கிறது. இன்றைக்கு அந்தத் தொழிலாளர்களுக்கு நிரந்தரமான வேலைவாய்ப்பும், வாழ்க்கைத் தரமும் உயர்ந்திருக்கிறதா என்று பார்க்கின்ற நேரத்தில், என்னுடைய தொகுதியில், உலகத்திலே ஆசியாக் கண்டத்திலே, பிரம்மாண்டமான ஒரு மின் நிலையம். ஹைட்ரோ எலக்ட்ரிக் பவர் ஸ்டேஷன் காடம்பாறையில் கிட்டத்தட்ட ரூ. 300 கோடியிலே அந்தத் திட்டத்தை அரசு செயல்படுத்தி வருகிற அதே நேரத்திலே, அங்கே இருக்கின்ற 61 துப்புரவுத் தொழிலாளர்களின் நிலைமை





எப்படி இருக்கிறது என்று பார்த்தால், ஒட்டிய வயிறும், உலர்ந்த கண்களுமாக வாடிக் கொண்டிருக்கின்ற மனிதத் தேரைகளாகத்தான் இருக்கிறார்கள். அப்படி வாடிக் கொண்டிருக்கின்ற அந்த 61 துப்புரவுத் தொழிலாளர்கள், தமிழக மின்சார வாரியத்தில் ஒப்பந்த அடிப்படையிலே இடைத் தரகர்களாக உள்ளவர்களுக்கு உழைக்கக் கூடியவர்களாகத்தான் இருக்கிறார்களே தவிர, "Abolition of Private Contract Method" என்று சொல்லி, "society contract method" என்று சொல்லி, அந்தப் புதிய திட்டத்தை நம்முடைய அரசு அமல்படுத்துகிறதா என்று எண்ணிப் பார்க்கிறபோது, அப்படி இல்லாத ஒரு சூழ்நிலைதான் இன்றைக்கு உருவாகியிருக்கிறது.

அடுத்து, ஹைதராபாத்தில் இருக்கக்கூடிய 'பெல்' நிறுவனத்தில் ரூ. 18 ஆக சம்பளத்தை ஏற்றித் தந்து அவர்களுக்கு நிரந்தரமான ஒரு வாழ்க்கையைத் தருவதற்கான ஒரு உத்தர வாதத்தைத் தந்திருக்கிறார்கள்.

ஹைதராபாத்திலுள்ள ஹெச்.எம்.டி. நிறுவனம் அந்தத் துப்புரவுத் தொழிலாளர்களுக்கு நிரந்தரமான வாழ்க்கையைத் தந்திருக்கிறது. ஆனால் இங்கே இருக்கக்கூடிய துப்புரவுத் தொழிலாளர்களுக்கு அப்படிப்பட்ட ஒரு நல்ல வாழ்க்கைத் தரத்தை ஏற்படுத்தித் தருவதற்கு இங்கே இருக்கக்கூடிய தொழில் துறையும், இங்கே இருக்கின்ற துறை அலுவலர்களும் அந்த அளவிற்குச் செயல்படுகிறார்களா என்று எண்ணிப் பார்க்கிறபோது அந்த அளவிற்கு துரிதமாகச் செயல்படாத ஒரு சூழ்நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது.

துப்புரவுத் தொழிலாளர்கள் நிலை இன்றைக்கு இப்படிப்பட்ட ஒரு அவல நிலையில் இருக்கிற காரணத்தால், அதைப் போக்க, நிரந்தரமான வாழ்க்கையைத் தருவதற்கும் தினக் கூலியாக ரூ. 30 தந்து, கிட்டத்தட்ட மாதம் ஒன்றுக்கு ரூ. 900 சம்பளத்தைத் தந்து, நிரந்தர வாழ்க்கையைத் தருவதற்கு இந்த அரசு ஆவன செய்யும் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது. பாபா சாகேப் அம்பேத்கார், அரசியல் சட்டத்தின் தந்தை என்று கூறப்படும் அவர் கூறியிருக்கிறார். "Why is he unclean? He is unclean because he cleans others" என் துப்புரவுத் தொழிலாளர்கள் அசுத்தமாக இருக்கிறார்கள் என்றால், அவர்கள்

[திரு. வி. தங்கவேலு] [1986 மே 7

இருக்கிறவர்களாக இருப்பதால், தொழிலாளர்கள் தொழிலாளர்களாகத் தான் இருக்க வேண்டும் என்று சொல்லக்கூடிய வாதங்களை மாற்றிக் கொண்டு, தொழிலாளர்கள் முதலாளிகளாக மாற வேண்டும். தொழிலாளர்கள் இன்றைக்கு நாட்டுக்குத் தேவையா, முதலாளிகள் இந்த நாட்டுக்குத் தேவையா என்ற கேள்வியை டாக்டர் அம்பேத்கார் அவர்களிடம் கேட்கிறபோது, 'நான் என்றைக்கும் தொழிலாளர்கள் பக்கம் தான் நிற்பேன்' என்று அம்பேத்கார் அன்றைக்குச் சொன்னார். அப்படிப்பட்ட சூழ்நிலையிலே, தொழிலாளர்களை முதலாளிகள் ஆக்க அப்படி மாற்ற, இந்த அரசு பல திட்டங்கள் போட்டாலும், இந்த அரசின் லேபர் டிபார்ட்மெண்ட் என்று சொல்லக்கூடிய நிருவாகமானது எந்தப் போக்கிலே செயல்பட்டுக்கொண்டிருக்கிறது என்று அண்டை மாநிலமான கேரளத்தோடு ஒப்பிட்டுப் பார்த்தால் கேரளாவிலே உள்ள மூணாறு தேயிலைத் தோட்டத் தொழிற் சங்கத் தலைவனாக இருக்கிற முறையிலேயும், பக்கத்திலே உள்ள வழுக்குப்பாறை தேயிலைத் தோட்டத் தொழிற்சங்கத் தலைவனாக இருக்கிற முறையிலேயும், தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் பிரச்சினைகளை எழுதினால், லேபர் செகரட்டரி, அங்கே இருக்கக்கூடிய கமிஷனர் ஆஃப் லேபர், டெபுடி கமிஷனர் ஆஃப் லேபர் என்று சொல்லக்கூடியவர்கள் அலறி அடித்துக் கொண்டு, தங்கவேலு கேட்டு இருக்கக்கூடிய கேள்விகளுக்கு பதில்கள் உடனுக்குடன் தரக்கூடிய கேரள மந்திரிசபையும், லேபர் டிபார்ட்மெண்டும் அங்கே இருக்கிறபோது, தமிழகத்திலே இருக்கக்கூடிய இந்த டிபார்ட்மெண்ட் பற்றியும், தொழிற்துறை மந்திரிகளைப் பற்றியும் பேசுகிறபோது, கேட்கக்கூடிய கேள்விகளுக்கு என்றாவது இதுவரையில் பதில் வந்து இருக்கிறதா என்று பார்க்கிறபோது, பதிலே தராத ஒரு சூழ்நிலையில் இன்றைக்கு இங்கே இருக்கக்கூடிய லேபர் டிபார்ட்மெண்ட் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

தேயிலைத் தோட்டம் மட்டும் அல்ல. அங்கே இருக்கக்கூடிய தொழிற்சாலைகள், தோல் பதனிடும் தொழிற்சாலையிலிருந்து, ராணிப்பேட்டையிலே உள்ள பீடித் தொழிற்சாலைத் தொழிலாளர்கள் வரை எந்த ஒரு கேள்விக்கோ, எந்த ஒரு கடிதம் எழுதினாலே, எந்த ஒரு பதிலும் வராத சூழ்நிலை இருக்கிற காரணத்தினால், எழுதுவதைக் கூட நிறுத்தக்கூடிய



1986 மே 7] [திரு. வி. தங்கவேலு]

அளவுக்கு நாங்கள் எல்லாம் ஆளாக்கப்பட்டிருக்கிறோம். தொழிற்சங்கத் தலைவர்கள் என்ற முறையில் நாங்கள் மிகுந்த வேதனையோடு சொல்லிக் கொண்டிருக்கிறோம். தொழிலாளர்களுடைய பிரச்சினைகளை எடுத்துச் சொல்கிற போது, இது கிடைக்குமா, கிடைக்காதா, ஆகுமா, ஆகாதா, உண்டா, இல்லையா என்ற பதிலைக் கொடுத்தால் போதும். அப்படிப்பட்ட சூழ்நிலையில் கிளி ஜோசியம் போல், கிளியிடம் காசைப் போட்டுவிட்டு, எதை எடுக்குமோ என்று ஏங்கித் தவிப்பதைப் போல, கிளி ஜோசியக்காரர்களைப் போல் தொழிற்சங்கத் தலைவர்களாகிய நாங்கள் பதில் கிடைக்காத வகையில் தவித்துக் கொண்டிருக்கிற காரணத்தினால், புதுக் கோட்டையில் ஆலைகள் மூடிக் கிடக்கின்றன. புதுக்கோட்டை நூற்பாலையிலே இருக்கக்கூடிய ஒரு கோடி ரூபாய் பணம் முடங்கிக் கிடக்கிறது.

தேயிலைக் காடுகளைப் பற்றிச் சொல்கிறபோது, டார்ஜிலிங்கிலிருந்து, திருநெல்வேலி வரையுள்ள தேயிலைக் காடுகளைப் பற்றிச் சொல்கிறபோது, தேயிலைக் காடுகள் நாட்டிலே தேசியமயமாக்கப்பட வேண்டிய ஒரு புதிய சட்டத் திருத்தத்தை அரசு கொண்டு வரவேண்டும் என்று மெத்தப் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு இருக்கக்கூடிய சேமிப்பு, இராஜகட்டி பணம், அவர்கள் கையிலே இருக்கக்கூடிய சேமிப்பு, அந்தத் தோட்டத்திலே அவர்கள் உழைத்து, உழைத்து, உருக்குலைந்து போய்க் கொண்டிருக்கிற வறுமைக் கோட்டுக்குக் கீழே இருக்கிற மக்களின் பணம் அனைத்தும் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் உழைத்து, உழைத்துக் கொடுத்து, தொழிலாளிகள் முதலாளி வர்க்கத்தை மேலும் மேலும் பணக்காரர்கள் ஆக்கிக் கொண்டிருக்கிறார்களே தவிர, தொழிலாளி முதலாளியாக கற்பனையிலே கூட கனா காண முடியாத அளவுக்கு சட்டங்கள் இன்றைக்கு மாற்றப்பட்டிருக்கிற காரணத்தால், நான் மெத்தப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுடைய பிரச்சினைகளைக் கூர்ந்து, ஆராய்ந்து பார்த்து, தேயிலைக் காடுகளை, இன்றைக்கு எப்படி வங்கிகளை தேசியமயமாக்கி இருக்கிறீர்களோ, அதேபோல் தேசியமயமாக்கிட அரசு முன்வருமா என்று கேட்டுக் கொண்டு வாய்ப்புக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

[1986 மே 7

(மாலை 4-20)

**திரு. ஆர். செங்காளியப்பன்:** மாண்புமிகு பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் தொழிலாளர் நல மானியக் கோரிக்கையின்மீது என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்குத் தொழிலாளர்களுடைய மானியக் கோரிக்கையின்மீது எனக்கு முன்னாலே பேசிய பல மாண்புமிகு அங்கத்தினர்கள் பல குறைபாடுகளையும் சுட்டிக்காட்டினார்கள். சட்டங்கள் சரியான முறையிலே அமல் நடத்தப்படுவதில்லை என்றும் சுட்டிக்காட்டினார்கள். அதே நேரத்தில் பல தொழிற்சாலைகள் மூடப்பட்டிருப்பதையும் சொன்னார்கள்.

நான் நம்முடைய தமிழக அரசுக்குச் சொல்லிக்கொள்வது, இன்று பலஇடங்களில், பொதுவாகவே தமிழகத்திலே பலப்பல சிறிய சிறிய தொழிற்சாலைகள் அந்த ஆலை அதிபர்களாலே நல்ல முறையிலே நடத்தப்படாமல் அவர்கள் ஆலைகளை மூடி வைத்திருக்கிறார்கள். அதேபோல கோவையிலேயும் பஞ்சாலை முதலாளிகளுடைய தவறுகளின் காரணமாகத்தான் இவ்வளவு ஆலைகளும் மூடப்பட்டிருக்கின்றன. சென்ற காலத்திலே மூடப்பட்ட ஆலைகளை எல்லாம் அரசாங்கம் எடுத்துக்கொண்டு அந்த ஆலைகள் இன்றைக்கு இலாபகரமாக ஓடிக்கொண்டிருக்கின்றன. தனியார்கள் சென்ற காலத்தில் செய்த தவறை நிரூபிக்கக் கூடிய அளவிற்கு மத்திய அரசும், நம்முடைய மாநில அரசும் ஆலைகளை எடுத்து நடத்திக் கொண்டிருக்கிறது.

ஆனால் அந்த ஆலைகளிலெல்லாம் இன்று நல்ல முறையிலே இலாபம் வராவிட்டாலும்கூட, நஷ்டம் ஏற்படவில்லை என்பது கண்கூடாக நம் அனைவருக்கும் நன்றாகத் தெரியும். ஆகவே, ஆலை முதலாளிகள் எப்பொழுதெல்லாம் இப்படிப்பட்ட தவறுகளைச் செய்கிறார்களோ, அப்படித் தவறுகளைச் செய்கின்ற நேரத்திலே அந்த ஆலைகளை சரியான முறையிலே இயங்கச் செய்யாமல், லே ஆப் கொடுக்கக்கூடிய நேரத்திலே அல்லது ஆலைகள் சில நாட்களுக்கு ஓடாமல் இருக்கக்கூடிய காலத்திலேயே நம்முடைய அரசாங்கத்திலேயிருந்து அதற்கென்று தனியாக ஒரு குழுவை அமைத்து, ஏன் அந்த ஆலைகள் சரியாக இயங்கவில்லை, ஏன் லே ஆப் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள், ஏன் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கவில்லை என்பதைப்



1986 மே 7] [திரு. ஆர். செங்காளியப்பன்]

நாம் முன்கூட்டியே கமிட்டியைப்போட்டு பரிசீலனை செய்வோமேயானால் அப்படிப்பட்ட மோசமான, அப்படிப்பட்ட தவறான மேனேஜ்மெண்டிடமிருந்து முன்கூட்டியே அந்த ஆலைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கையை அரசாங்கம் எடுக்குமேயானால் மற்ற ஆலை முதலாளிகளெல்லாம் ஒழுங்காக ஆலைகளை நடத்துவார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

ஆனால், இன்று நம்முடைய தமிழக அரசைப் பொறுத்த மட்டிலும் தொழிலாளர்கள் சார்பாக செயலாற்றுகிறது என்பது தான் நீண்ட நாட்கள்—45 ஆண்டுக் கால தொழிற்சங்கத் தலைவன் என்ற முறையிலேயும், அனுபவ ரீதியாகவும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். நம்முடைய தொழிற்துறையானது சிறப்பாகச் செயலாற்றுகிறது. அதில் குறையே சொல்ல முடியாது. இருந்தாலும் நம்முடைய தொழிற்சாலை ஆய்வாளர்கள் திருத்தப்பட்டாக வேண்டும். சரியான முறையிலே தொழிலாளர் ஆய்வாளர்கள் செயல்படுவது இல்லை. அதற்கு, அரசாங்கத்திலே இருந்து இன்னும் தொழிலாளர் ஆணையாளருக்கு, அதிக அதிகாரிகளைக் கொடுத்து, அவர்கள் மூலமாக இந்தத் தொழிற்சாலை ஆய்வாளர்கள் நல்ல முறையிலே தொழிற்சாலைகளைக் கவனிக்கக்கூடிய அளவிற்கு, எங்கெல்லாம் நம்முடைய சட்ட ரீதியான உரிமைகள் தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்படவில்லையோ, பேக்டரி ஆக்ட் பிரகாரம் எந்த எந்தத் தொழிற்சாலைகளிலேயெல்லாம் நடத்தப்படவில்லையோ, அவற்றிற்கெல்லாம் தக்க நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நம்முடைய தொழிலாளர் துறை ஆணையாளர் அவர்களுக்கு, அந்த டிபார்ட்மெண்டுக்கு அதிகப்படியான அதிகாரங்களை வழங்க வேண்டுமென்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இதை நான் அனுபவ ரீதியாகச் சொல்கிறேன். நான் 14 வயதிலே பஞ்சாலைத் தொழிலாளியாக வேலைக்குச் சேர்ந்து இதுவரையிலேயும் அந்தத் துறையிலே பணிபுரிந்து கொண்டிருக்கின்ற காரணத்தினால், எனது அனுபவ ரீதியாகச் சொல்ல விரும்புகிறேன். ஏதோ அந்த நிர்வாகத்தில் தனியாக எடுத்து அவர்களுக்கு தனி அதிகாரிகளைக் கொடுத்து நடத்துவதாக நான் 2, 3 நாட்களுக்கு முன்னாலே கேள்விப்பட்டேன். ஆனால் நம்முடைய தொழிலாளர் துறையின் கீழ் பணிபுரிகின்ற நேரத்திலேயே நிறையத் தவறுகள் நடை-

பெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆகவே, நாம் அந்த அளவிற்குத் தனியாக ஒரு நிர்வாகத்தைப் பிரித்து விடுவோமேயானால் நிச்சயமாக இன்னும் அதிகப்படியான தவறுகள் ஏற்படும். தொழிலாளர்களுக்கு நன்மைகள் கிட்டாது என்பதை நான் அமைச்சரவர்களுக்கு இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆகையினாலே, நம்முடைய தொழிலாளர் நலத் துறை அந்த எண்ணத்தோடு இந்தத் தொழிற்சாலை ஆய்வாளர்களை உடன்பாட்டில் வைத்திருக்க வேண்டும், அத்துறையின் கீழ்தான் அவர்களை வைத்திருக்க வேண்டும், அவர்களுக்கு நல்ல அதிகாரங்கள் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அது மாத்திரமல்ல, நம்முடைய தொழிலாளர் துறைக்குச் சரியான அதிகாரங்கள் இல்லை. இன்று ஆலை நிர்வாகத்தினர் சில நாட்கள் கன்சிலியேஷனுக்கு வருவதே இல்லை. நோட்டீஸ் அனுப்புகிறார்கள், ஆனால் அவர்கள் வருவதில்லை. அவர்கள் கட்டாயமாக வருவதற்குண்டான அதிகாரத்தை நம்முடைய அரசு அவர்களுக்குக் கொடுக்க வேண்டும். கன்சிலியேஷனுக்கு வரவில்லையென்றால், அவர்கள் மேல் நடவடிக்கை எடுக்கக்கூடிய அதிகாரம் அந்தத் துறைக்கு இருக்க வேண்டுமென்று தான் நான் உங்களையெல்லாம் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

இன்று நிறைய இடங்களில் சட்டங்கள் அமல்படுத்தப் படாமல் இருக்கின்றன என்றால், அதற்கு அரசாங்கத்தைச் சொல்லி பிரயோஜனம் இல்லை. என்னைப் பொறுத்தமட்டில், அமைச்சர்கள் சின்ன, சின்ன தொழிற்சாலைகளைக் கண்காணிக்க முடியாது என்பது என்னுடைய அபிப்பிராயம். ஆனால், ஆங்காங்கே இருக்கக்கூடிய அதிகாரிகள் நல்லமுறையிலே செயல்பட்டால், அரசுக்கு கெட்ட பெயர் வராது என்பதுதான் என்னுடைய கருத்து. அந்த முறையில், ஆங்காங்கே இருக்கிற பாக்டரி இன்ஸ்பெக்ஷன் சரியான முறையிலே செயல்பட தொழிலாளர் துறையோடு இணைத்து, அவர்களுக்கு நல்ல பெயர் எடுக்கக்கூடிய அதிகாரங்களைக் கொடுத்து, அவர்களை நல்ல முறையிலே செயல்படுத்தினால், அப்படிப்பட்ட பிரச்னைகள் ஓரளவுக்குத் தடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.





தொழிலாளர் துறையைப் பொறுத்தவரையிலே, சில இடங்களிலே குறைபாடுகள் இருக்கும். அப்படியிருக்கும்போது, தொழிலாளர் துணை ஆய்வாளர் இடத்திலே சொல்லும்போது, ஏதோ, அங்கங்கே குறைகள் இருந்தாலுங்கூட, நிவர்த்தி செய் வார்கள். பிரச்சனைகளை அவர்களே தீர்த்து வைப்பார்கள். அந்த முறையிலேதான் தொழிலாளர் நிர்வாகம் நல்ல முறையிலே நடந்து கொண்டிருக்கிறது. இருந்தாலும் நிறைய ஆலைகள் மூடப்பட்டிருக்கின்றன. அதனால், தொழிலாளர்கள் வேலை யின்றி, பசியோடு, பட்டினியோடு இருப்பது மாத்திரம் அல்ல, அரசுக்கு இழப்பு ஏற்படுகிறது. அந்த ஆலைகள் உற்பத்தி செய்யாமல் இருக்கிற காரணத்தாலே, அரசாங்கத்திற்கு வருமான இழப்பு ஏற்படுகிறது. அங்கே உற்பத்தி வந்து, அவை விற்பனை ஆகுமானால், நம்முடைய அரசாங்கத்திற்கு வருமானம் உண்டு ; மத்திய சென்ட்ரல் எக்சைஸ் டியூட்டியிலிருந்து வருமானம் வரும். ஆகவே, ஆலை மூடப்படுவதால் தொழிலாளர்கள் மட்டும் கட்டுப்படுத்தப்படவில்லை, அரசுக்கும வருமானம் குறைகிறது. ஆகவே, அப்படிப்பட்ட நிலையை ஏற்படுத்தாமலிருக்க, அரசாங்கம் அவற்றை மேற்கொள்வதன் மூலம் நிச்சயமாக இலாபம் வரும். கோயம்புத்தூரைப் பொறுத்தவரையில் ஒரு ஆலையில் கூட நட்டம் ஏற்படவில்லை. காவேரியிலே நட்டம் ஏற்பட்டது என்று எனக்கு முன்னாலே பேசிய உறுப்பினர்கள் சொன்னார்கள். நான் கூட தனியாக அவர்களைக் கேட்டேன், ஏன் நட்டம் வருகிறது? என்ன நடைபெறுகிறது? அந்த ஆலையிலே வரக்கூடிய வருமானத்தைத் தனியாக வெளியே எடுத்துக் கொண்டு போய், தனிப்பட்ட முறையிலே சொத்துக் களைச் சேகரித்துக் கொள்கிறார்கள். அதன் காரணமாக, ஆலை சுரண்டப்படுகிறது, நட்டம் ஏற்படுகிறது. ஆகவே, காவேரி ஆலை ஏன் நட்டத்தில் ஓடுகிறது என்பதற்கு சரியான காரணம் சொல்ல முடியவில்லை. எங்கள் ஊரிலே என்.டி.சி. ஆலைகளும் இருக்கின்றன, நம்முடைய ஹாண்ட்லூம் துறை எடுத்து நடத்துகிற ஆலைகளும் இருக்கின்றன. அங்கே இலாபம் வர வாய்ப்பில்லையென்றாலும், நட்டம் ஏற்படவில்லை. நாங்கள் ஒவ்வொரு நாளும் அந்த ஆலைகளுக்குச் சென்று கவனித்துக் கொண்டிருக்கிறோம், பேச்சு வார்த்தைகள் நடத்திக் கொண்டிருக் கிறோம். இப்பொழுது பஞ்சாலைகளுக்கு நெருக்கடியான நிலை. சரியான விலை நூலுக்குக் கிடைக்கவில்லை, பஞ்சு கிடைப்ப

தில்லை. இலாபம் ஏற்படாவிட்டாலும், நட்டம் ஏற்பட நியாயமும் இல்லை. தனிப்பட்ட முதலாளிகள், எங்கள் ஆலைகளில் நட்டம் ஏற்படுகிறது, ஆலைகளை ஓட்ட முடியவில்லை, கஷ்டமாக இருக்கிறது, சம்பளத்தைக் குறைத்துக் கொண்டிருக்கிறோம் என்றெல்லாம் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். நம்முடைய தமிழக சர்க்கார் நடத்தும் ஆலைகள் எதுவுமே நட்டத்தில் இயங்கி வில்லை. ஜெயலட்சுமி மில்ஸ், ஜோதி மில்ஸ் ஆகியவற்றில் நட்டம் ஏற்படவில்லை. ஒரு சின்ன தவறுகூட செய்யாத நிலைமையிலே, அதிகாரிகள் நடந்து கொள்கிறார்கள். பஞ்சு, மற்றும் சாமான்கள் எல்லாம் வாங்குகிறார்கள். அதிலே தவறே ஏற்படவில்லை. ஆகவே, இந்த ஆலைகளையும் நாம் எடுத்துக்கொள்ள வேண்டும். அதைத்தான் நான் உங்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்பு கிறேன். நீங்கள் இந்த மூடப்பட்ட ஆலைகளை உடனடியாக எடுத்து நடத்த வேண்டும். நிச்சயமாக நாங்கள் ஒத்துழைப் பதற்கு தயாராக இருக்கிறோம். அதற்கான உத்திரவாதம் அளிக் கிறோம் என்பதைச் சொல்லிக்கொண்டு நீங்கள் இந்த ஆலைகளை

(மாலை 4-30)

உடனடியாக எடுப்பதற்குண்டான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காரணம் நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் நீண்டநெடுங்காலமாக எங்களையும் சம்பந்தப்பட்ட செக்கரேட்டரியையும் அழைத்துப்பேசி நம்பிக் கையான ஒரு உத்திரவாதத்தை, அந்த ஆலைகளை எடுத்துக் கொள்கின்றோம் என்ற உத்திரவாதத்தை நம்பி, நிச்சயமாக நடைபெறும் என்று நம்புகிறோம். டிபார்ட்மெண்டில் அதற்கான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். என்னென்ன சட்டங்களி இயற்றவேண்டுமோ அவற்றையெல்லாம் இரண்டு மாதத்திற் குள்ளாக ஏற்படுத்தி அந்தத் தொழிலாளர்களுக்கு வாழ்வு அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு வேண்டும் என்று நாங்கள் எல்லாம் ஒரு போராட்டத்தை நடத்தி னோம். அரசாங்கமும் சட்டத்தைப்போட்டு ஸ்பெஷல் கோர்ட்டிலே ஸ்பெஷல் டிரிபுயூனல் நடந்துகொண்டிருக்கிறது. கோவையிலே ஆலை முதலாளி சங்கத்திற்கும் எங்களுக்கும் ஒப்பந்தம் ஏற்பட்டு அமல்நடத்துவதற்கு நடவடிக்கை எடுத்து கொண்டிருக்கிறோம்.





அவார்ட் வராவிட்டாலும் கோயம்புத்தூர் ஒப்பந்தத்தினால் தொழிலாளர் வர்க்கத்திற்கு ரூ. 123 சம்பளமாகக் கிடைக்க இருக் கிறது, இந்த மே 1-ந் தேதியிலிருந்து. அதே போன்று பரவலாக தமிழகம் முழுவதும் அதே மாதிரி ஒரு அவார்டு வந்தால் அமுல் நடத்த முடியும் என்ற சூழ்நிலை இருப்பதால் கோர்ட்டிலே அவார்டு கொடுப்பதாக நீதிபதி சொல்லியிருக்கிறார். இங்கு 14 மில்கள் நம்முடைய அரசாங்கத்திலிருந்து ரெஃபரன்ஸ் கொடுக் காமல் இருக்கிறது. இதில் சென்னையில் உள்ள பி & சி மில்லும் ஒன்று. இந்த 14 மில்களுக்கு ரெஃபரன்ஸ் கொடுக்க வேண்டு மென்று, அமைச்சர், லேபர் டிபார்ட்மெண்ட் கமிஷனர், செக்ரட்டரி போன்றவர்களை எல்லாம் வைத்துக் கேட்டபோது அதைக் கொடுப்பதாகச் சொன்னார்கள். ஆனால் முதலில் ஒரு மில்லுக்குக் கொடுத்தார்கள். 13 மில்களுக்கு கொடுக்கவில்லை. ஆனால் நேற்றையதினம் கோர்ட்டிலே கேஸ் நடந்தது. சக்தி அவர்களைக் கேட்டபோது மறுபடியும் 3 மில்களுக்கு ரெஃப்ரான்ஸ் கொடுப்பார்கள் போல் தெரிகிறது என்று சொன்னார்கள். நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வது, நூற்றுக்கணக்கான ஆலைகளுக்கு அரசாங்க ரெஃப்ரன்ஸ் கொடுத்துவிட்டு இந்த 10 மில் களுக்கு மாத்திரம் ஏன் கொடுக்காமல் இருக்க வேண்டும். இந்த கோர்டிலே அந்த தொழிலாளர்களும் சேர்க்கப்பட்டால்தானே அவர்களுக்கும் சம்பள உயர்வு கிடைக்கும். இந்த 14 மில்களும் என்ன காரணத்திற்காக நிறுத்தி வைக்கப்பட்டதோ? ரெஃபரன்ஸ் கொடுக்கப்பட்டுவிட்டது. இன்னும் இரண்டு மில்களுக்கு ரெஃபரன்ஸ் வரப்போகிறது என்று சொன்னார்கள். அப்படியிருக்க பாக்கி மில்களுக்கும் ரெஃபரன்ஸ் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த மில்களுக்கு கொடுத்துவிடுவீர்களானால் கோர்ட்டிலே கேஸிலே சேர்க்கப் பட்டு அவர்களுக்கு ஒரு அவார்டு கிடைக்குமானால் தொழிலாளர் களுக்கு சம்பளம் கிடைக்கும் என்று நிதியமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய அரசாங்கத்திலிருந்து இரண்டு ஆண்டுகளில் 480 நாட்கள் வேலை பார்த்தால் அவர்கள் எல்லாம் நிரந்தர மாக்கப்பட வேண்டும் என்று சட்டத்தை நாம் ஏற்படுத்தியிருக் கிறோம். அந்த சட்டத்தை பெருவாரியான ஆலைகள் அமுல்நடத்தவில்லை. தனிப்பட்டவர்களும். அரசாங்கத்திலே

[திரு. ஆர். செங்காளியப்பன்] [1986 மே 7

நடத்தக்கூடிய சில பஸ் கம்பெனிகளும் அமுல்படுத்துவதில்லை. அதையும் நீங்கள் கண்காணித்து அந்தத் தொழிலாளர்கள் சட்டப்பிரகாரம் நிரந்தரமாக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அரசாங்கத்திலே பஸ் தொழிலாளர்களுக்கு பல சலுகைகள் கொடுக்கிறோம். பிரைவேட் மேனேஜ்மென்ட் ரூ. 6 கூலியாகக் கொடுக்கிறார்கள். பேட்டா 5 ரூ. 6 ரூ. கொடுக்கிறார்கள். வேறு எந்தவிதமான சலுகையும் கிடையாது. மேனேஜ்மென்டுக்கு 1500க்கு கம்மியில்லாமல் ஒரு நாளைக்கு லாபம் வருகிறது. ஆனால் தொழிலாளர்களுக்கு எந்தவித சலுகையும் கொடுப்பதில்லை. அரசாங்கத்தில் தொழிலாளர்களுக்குக் கொடுக்கக்கூடிய சலுகைகளை அந்தத் தனியார் பஸ் கம்பெனி தொழிலாளர்களுக்கும் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆலை முதலாளிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் தகராறு வரும்போது ஏதோ காரணத்தினாலே அந்தத் தொழிலாளி தொழிற்சங்க லீடராக இருப்பதாலோ அல்லது முதலாளிக்கு பிடிக்கவில்லை என்றாலோ அந்தத் தொழிலாளியை டிஸ்மிஸ் செய்துவிடுகிறார்கள்.

அவர்களை டிஸ்மிஸ் செய்ததற்குப் பிறகு லேபர் டிப்பார்ட்மென்டிலே கன்சிலியேஷனுக்குப் போடப்பட்டிருப்பதாகச் சொல்லி ரிப்போர்ட் எழுதுகிறார்கள். அதை வைத்துக்கொண்டு அவர்கள் சொல்கிறார்கள். இது நியாயம் இல்லை. வேலைக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று அவர்களே சொன்னாலும் கூட இந்த ஆலை முதலாளிகள் அவர்களை எடுத்துக்கொள்வதில்லை. எடுத்துக்கொள்ள மறுக்கிறார்கள். அந்த ரிப்போர்ட் சர்க்காருக்கு வந்த பிறகு அதிலே லேபர் டிபார்ட்மென்ட் அதிகாரியின் ரிப்போர்ட் என்ன என்பதை வைத்துக்கொண்டு நம்முடைய அரசாங்கத்திலே அவர்கள் கோர்ட்டுக்கு அனுமதிக்கப்படுவதில்லை. கோர்ட்டுக்கும் அனுமதி கிடைக்காத காரணத்தால் அந்தத் தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்காமல் போகிறது. அந்த நிலைமையில் அந்தத் தொழிலாளியின் குடும்பம் கஷ்டப்பட விட்டுவிட முடியாது. அதனால் எங்களுக்கு இருக்கிற கஷ்டம் என்னவென்றால் அந்த ரிப்போர்ட்டை எடுத்துக்கொண்டுபோய் கோர்ட்டிலே ரிட் போட்டு அதற்காக 5,000 ரூபாய், 10,000 ரூபாய் வரையில் செலவழித்து



1986 மே 7] [திரு. ஆர். செங்காளியப்பன்]

அதற்குப் பிறகுதான் செட்ரென்ச்மென்ட் செய்யப்பட்ட தொழிலாளி திரும்ப வேலைக்குப் போக முடிகிறது. இப்படிப் பட்ட கஷ்டங்களைப் போக்க வேண்டுமென்றால் அரசாங்கத்திலே இருந்து தொழிலாளர்கள் செய்வது தவறா அல்லது முதலாளிகள் செய்வது தவறா என்பதைப்பற்றி நீதிமன்றம் விசாரிக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

எனவே அரசாங்கத்திற்கு வரக்கூடிய கேஸ்களைப் பொறுத்த வரையில் ரெஃபரன்ஸ் கொடுத்தால் போதும். வேலைக்கு எடுத்துக் கொள்ளவேண்டும் என்று கூடச் சொல்ல வேண்டாம். ரெஃபரன்ஸ் கொடுத்தாலே அதை வைத்துக்கொண்டு நீதிமன்றத்தின் மூலமாக தொழிலாளர்களுக்கு நியாயம் கிடைக்க ஏதுவாக இருக்கும்.

அதேபோல் தூத்துக்குடியிலே மதுரா கோட்ஸ்-லே இருக்கக் கூடிய எங்களுடைய தொழிலாளியை அரசியல் காரணத்தால் இரவு நேரத்தில் வரும்போது ஆள் வைத்து அடித்துவிட்டார்கள். அடிதடி கேஸ் என்பதால் கிரிமினல் கேஸ் வந்து அதனால் போலீசார் அவரை உள்ளே வைத்தார்கள். அந்த கேஸிலே பிறகு ஒன்றும் இல்லை என்று முடிவாகிவிட்டது. பின்னர் அவர் வேலைக்குப் போகும்போது அந்த ஆலை முதலாளி அவரை அனுமதிக்க முடியாது என்று சொல்லிவிட்டார். கன்சிலியேஷன் நடந்தது. ரிப்போர்ட் வந்தது. ஆனால் ரெஃபரன்ஸ் கிடைக்கவில்லை. எனவே இப்போது ரிட் போடப் பட்டிருக்கிறது கேஸ் நடத்தித்தான் அந்தத் தொழிலாளிக்கு நியாயம் வாங்கிக்கொடுக்க வேண்டிய நிலைமையில் நாங்கள் இருக்கிறோம். ஆகவே அப்படிப்பட்ட சாதாரண ஏழைத் தொழிலாளிகளுக்கு நியாயம் கிடைக்க வேண்டும் என்றால் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும்.

தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களைப் பொறுத்த வரையில் சட்டம் அமல் நடத்தப்படவில்லை. ஐந்தாண்டுக்காலம், 6 ஆண்டுக்காலம், 10 ஆண்டுக்காலம் இருந்தாலும் கூட அந்தத் தொழிலாளர்கள் பெர்மனன்ட் செய்யப்படவில்லை.

[திரு. ஆர். செங்காளியப்பன்] [1986 மே 7

முன்பெல்லாம் தேயிலைத் தோட்டத்தைப் பொறுத்த வரையில் ஒரு ஏக்கருக்கு ஒரு ஆள் என்ற நிலைமை இருந்தது. ஆனால் ஒரு ஏக்கருக்கு அரை ஆள் என்ற அளவில் கூட பெர்மனன்டாக வைக்கப்படவில்லை. மொத்தத்தில் பெர்மனன்ட் தொழிலாளர்கள் 100 பேர்கள் என்றால் 200 பேர்கள் டெம்பரரி தொழிலாளர்கள் இருக்கிறார்கள். ஆகவே உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். உரிய நடவடிக்கை எடுத்து அவர்களை பெர்மனன்ட் செய்வதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

கோயம்புத்தூரைப் பொறுத்தவரையில் பல இலட்சக் கணக்கான பஞ்சாலைத் தொழிலாளர்கள் இருக்கக்கூடிய ஊராகும். அங்கே இருக்கக் கூடிய லேபர் டிப்பார்ட்மென்டின் கட்டிடங்கள் எல்லாம் வாடகைக் கட்டிடங்களாக இருக்கின்றன. எங்கோ ஒரு இடத்தில் கொண்டுபோய் அதாவது நெருக் கடியான இடத்தில் கொண்டுபோய் அதை வைத்திருக்கிறார்கள். அப்படி இருப்பதன் காரணத்தால் எங்களுக்கெல்லாம் மிகுந்த சிரமமாக இருக்கிறது. கன்சிலியேஷனுக்குச் செல்ல முடிய வில்லை. எனவே அங்கே ஒரு இடத்தை வாங்கி ஒரே காம்பவுண்டுக்குள் தொழிலாளர் சம்பந்தப்பட்ட அனைத்து அலுவலகங்களும் இருக்கின்ற வகையில் கட்டிக்கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அந்த வகையில் எங்களுக்கு உதவி புரிய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள் கிறேன்.

இந்தப் பிரச்சினை இன்றைக்கு மாத்திரமல்ல, இங்கே தொழிலாளர் நலத்துறை அமைச்சராக இருந்த திரு. கே. ஏ. கே. அவர்களிடத்திலும், இந்தச் சட்டமன்றத்திலும் கோரிக்கையாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அவர்களும் செய்யலாம் என்று சொன்னார்கள். ஆகவே அந்த சாத்தியக்கூறுகளை நீங்கள் செய்து கொடுக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த மானியக் கோரிக்கையிலே பல பிரச்சினைகள், குறைகள் இருந்தாலும் கூட அதை எல்லாம் அமைச்சர் அவர்கள் செய்து கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கூறிக்கொண்டு வாய்ப்பளித்தமைக்கு நன்றி சொல்லி முடித்துக் கொள்கிறேன்.



1986 மே 7]

(மாலை 4-40)

**திரு. மா. சின்னராசு:** மாண்புமிகு பேரவையின் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்களால் முன் மொழியப்பெற்று இருக்கிற தொழிலாளர் நலன் என்னும் மானியக் கோரிக்கையை வரவேற்று ஒரு சில கருத்துக்களை முன் வைக்க விரும்புகிறேன்.

தொழிலாளர் நலச் சட்டங்கள் தொழிலாளர்களுடைய நன்மைக்காகவும், தொழில் அமைதிக்காகவும், தொழில் வளர்ச்சிக்காகவும் இருக்க வேண்டும் என்பது புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களுடைய அரசின் நோக்கம் ஆகும் என்பதை முதலிலேயே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இங்கே எனக்கு முன்னால்பேசிய தொழிற் சங்கத் தலைவர் திரு. செங்காளியப்பன் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னதைப் போல நம்முடைய தமிழக அரசு தொடர்ந்து எடுத்து வருகிற, தொழில் துறை மூலம் எடுத்து வருகின்ற நல்ல நடவடிக்கைகள் தான் தமிழகத்தில் தொழில் அமைதிக்கு முழு முதற் காரணமாக இருந் [illegible]க்கிறது என்பதே இங்கே நான் சுட்டிக் காட்டுகின்ற உணர்வு. ஆனால் நம்முடைய அரசின் மீது குறை கூற வேண்டும் என்பதற்காகவே குறை கூறிப் பேசியவர்கள் உண்மையிலேயே உள்ளபடியே, அந்த நலச் சட்டங்கள் தொழிலாளர்களின் நலனுக்கு என்று இல்லாமல் தொழிற் சங்கத் தலைவருடைய நலனுக்காகவும், தொழிற்சங்கத்தின் நலனுக்காகவும் இருக்க வேண்டும் என்ற எண்ணம் உடையவர்கள் என்பதை என்னால் சொல்லாமல் இருக்க முடியாது.

ஆக தொழிலாளர் நலன் நன்றாக இருக்க வேண்டும் என்றால் தொழில் அமைதி இருக்க வேண்டும். இன்று மேற்கு வங்காளத்திலே எந்தத் தொழில் முனைவரும் புதியதாகத் தொழில் துவங்குவதற்குத் தயாராக இல்லை. அரசுகூட தன் வசம் இருக்கின்ற தொழில்களை—பல தொழிற்சாலைகளையும் தேசிய மயமாக்க வேண்டும் என பொதுவுடமை பேசுகின்ற அந்தக் கட்சிக்காரர்கள் ஆளுகின்ற அந்த மாநிலத்தில், அரசாங்கத்தின் தொழில்களைக் கூட — தனியார்களுக்கு விட்டுவிட வேண்டிய கட்டாயம் வந்திருக்கிறது.

[திரு. மா. சின்னராசு] [1986 மே 7

அது மட்டும் அல்லாமல் டிரான்ஸ்போர்ட் போன்றவைகளை எல்லாம் கூட தேசிய மயமாக்க வேண்டும் என்ற கொள்கையில் நம்முடைய ஆட்சியும், மற்றும் இங்கே இருக்கிற பல தலைவர் களும் பேசிவருகிற நேரத்தில் அங்கே பஸ்களை தேசியமயமாக்கு வது என்பது நம்முடைய கொள்கை அல்ல என்று கூட சொல்லிக் கொண்டு வருகிறார்கள். ஆக அங்கே புதியதாக தொழில் துவங்க முன் வர யாரும் தயாராக இல்லாமல் இருப்பதன் காரணமாக, மாநிலம் தொழில் வளர்ச்சி அடையாமல் இருக்கிறது. அதேபோன்று கேரளத்திலும் தொழில் வளர்ச்சி இல்லை. காரணம் அங்கேயும் தொழில் அமைதி இல்லை என்பதும் இந்த Unfair Trade Unionism என்பதும் தான் காரணம் என்பதை மறந்து விடக் கூடாது. ஆகவே தொழிலாளர் நலச் சட்டங்கள் என்பது மாநிலத்தின் தொழில் வளர்ச்சிக்காகவும், தொழிலாளர் நலனுக்காகவும், தொழில்கள் பெருகி வளர்ச்சியுற்று அதன் மூலம் கோடிக்கணக்கான இளைஞர்கள் வேலை வாய்ப்பைப் பெறவேண்டும் என்பதற் காகவும், தொழிற்சாலைகளைக் காப்பதற்காகவும் இருக்க வேண்டுமே தவிர, தொழில்களை நசுக்கிவிட்டு, தொழில் நடத்த முன் வரும் தொழில் முனைவர்களை அச்சுறுத்தி விட்டு, அங்கே ஒரு தொழில் வளர முடியும், தொழிலாளர் நலன் காக்கப்பட முடியும் என்று எண்ணுகிறவர்கள் நாட்டில் இருக்கிற வரை தொழில் வளர்ச்சிக்கும், தொழில் சங்க வளர்ச்சிக்கும், தொழிலாளர் நலனுக்கும் என்றுமே குறைபாடு இருக்கும் என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

ஆக அந்த அடிப்படையில்தான் இன்று நம்முடைய நாட்டிலே தொழிற் தகராறுகளின் காரணமாக ஆண்டுதோறும் 100-க்கு 82 விழுக்காடு மூடப்பட்டிருக்கிற தொழிற்சாலைகளில், லாக்கவுட்டின் காரணமாக மேற்கு வங்கத்திலேதான் அதிகமாக மூடப்பட்டிருப்பதாக நமக்கு புள்ளி விவரங்கள் எடுத்துச் சொல்லிக் கொண்டிருக்கின்றன. ஆக ஸ்டிரைக் என்ற நிலைமையிலே தொழிற்சாலைகள் மூடப்படுவதை விட நாட்டிலே மேற்கு வங்கத்திலே மட்டும் தான் லாக்-அவுட் என்ற வகையிலே தொழிலாளர்கள் வேலை இழந்திருக்கிறார்கள். மேன் டேஸ் லாஸ் எவ்வளவு என்று கணக்குப் போட்டுத்தான் மாநிலத்திலே தொழில் அமைதி எப்படி இருக்கிறது என்று கணக்குப் போடுவார்கள். அப்படிப் பார்த்தால் லாக்-அவுட்டின்



1986 மே 7] [திரு. மா. சின்னராசு]

காரணமாக, தொழிற்சாலைகள் மூடப்பட்டதன் காரணமாக வேலை இழந்திருப்பவர்கள் மேற்கு வங்கத்திலேதான் இன்றைக்கு அதிகம் என்று விவரங்கள் சொல்லுகின்றன. அதற்குக் காரணம் அங்கே தொழில் அமைதிக்கான கொள்கை என்ன என்பதையே அரசு கடைப் பிடிக்க வில்லை என்பதும் அதன் காரணமாக லாக்-அவுட்டுகளும், அதனால் முதலாளிகள் வேறு வழியில்லாமல் மூடிவிட்டுச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதையும் கூறி அதற்காகத்தான் அந்த நிலைமைகளையெல்லாம் உணர்ந்து தமிழகத்தில் புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியில் தொடர்ந்து தொழில் அமைதி காக்கப்பட்டு வருகிறது.

ஆயிரக்கணக்கான தொழில்கள் நடைபெறுகின்ற தமிழகத்தில் ஒரு சில ஆலைகளில் மட்டும் இருக்கின்ற ஒரு சில பிரச்னைகளைத்தான், பெரும்பாலும் தொழிற்சங்கத் தலைவர்கள் இங்கே சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். அதுவே தமிழகத்தில் இருக்கிற மற்ற தொழில்கள் எல்லாம் அமைதியாக நடந்து கொண்டிருக்கின்றன என்பதை விளக்குகிறது. காரணத்திற்குச் சொல்ல வேண்டும் என்றால் கோவையில் 250-க்கும் மேற்பட்ட பஞ்சாலைகள் நூற்பு ஆலைகள் இருக் கின்றன. அதிலே பிரச்னைக்கு உட்பட்டு 7 நூற்பு ஆலைகள் தான் மூடப்பட்டிருக்கின்றன. அவைகளிலும் கூட பல்வேறு காரணங்களுக்காக, பெருமதிப்பிற்குரிய தொழிற்சங்கத் தலைவர் செங்காளியப்பன் சொன்னதைப் போல, நிர்வாகத்தின் முறைகேடுகள் காரணமாக, மிஸ்மேனேஜ்மெண்டின் காரண மாக, அதற்கென்று இருக்கின்ற முதல்பணத்தை வேறு தொழில்களுக்குத் திருப்பியதன் காரணமாக, மற்றும் பல்வேறு காரணங்களால் மூடப்பட்டிருக்கின்ற அந்த ஆலைகளும் திறக்கப்பட வேண்டும்' என்பதில், அந்தப் பிரச்னைகள் தீர்க்கப்பட வேண்டும் என்று தமிழக அரசும், தொழில் துறையும், தொழிலாளர் நலத்துறையும் மிகவும் உன்னிப்பாக இருந்து கொண்டிருக்கிறது என்பதை டாக்டர் நாவலர் அவர்கள் ஏற்கெனவே தொழிற் சங்கத் தலைவர்களோடு நடத்திய பேச்சு வார்த்தை குறித்த ஒரு விஷயத்தை சில தினங்களுக்கு முன் கவன ஈர்ப்புத் தீர்மானத்திலே பதில் சொல்லும்போது சொன்னார்கள். அந்த நாள் நிச்சயமாக வெகுவிரைவில் இருக்கும் என்று நம்பிக்கையோடு எதிர்பார்க்கப்படுகிறது.

ஆகவே அது நூற்பாலைகளை எடுத்துக்கொள்வதன் மூலம் தீர்க்கப்பட்டாலும், அல்லது வேறு நிர்வாக மாற்றங்கள் மூலமாக எடுக்கப் பெற்றாலும், அந்த ஆலைகள் வெகு விரைவில் எடுக்கப் பட்டு, ஏற்கனவே எடுக்கப்பட்டு அரசாங்கத்தால் நடத்தப்படுகிற ஆலைகளைப்போல. அதுவும் நடத்தப்படுகிற சூழ்நிலை தான் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பைத் தருமென்ற நிலையிருந்தால் அதையும் செய்வதற்கு அரசு தயார் என்று அறிவித்திருக்கிறார்கள். ஆகவே அந்தவகையில் புரட்சித் தலைவர் அரசின் இந்த நல்ல கொள்கையை இந்த நேரத்தில் தொழிலாளர்கள் சார்பிலே வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னும் ஒன்று. இங்கே வேலை நிறுத்தம் என்று சொல்கிற போது வேலை நிறுத்தம் பல நேரங்களில் தொழிலாளர்களின் மீது திணிக்கப்படுகிறது என்பது என்னுடைய தாழ்மையான கருத்து. ஒரு தொழிற்சங்கத்தில் அங்கத்தினராக இருக்கிற வர்கள் சில தொழிற் சங்கத் தலைவர்களின் போக்கின் காரணமாக அவர்கள் தொழிற் சங்கத்தில் கொத்தடிமைகளைப் போல நடத்தப்படுகிறார்கள். ஸ்ட்ரைக் செய்வதற்கு முன்னால் அவர்களுடைய கருத்து கேட்கப்படுவதில்லை. தொழிற்சங்கத் தலைவர் முதலாளியிடம் போகிறார். அவரிடம் பேசுகிறார். முதலாளி அவரிடத்தில் கவுரவக் குறைவாக நடந்து விட்டதாக அவர் நினைத்தால் கூட அல்லது முதலாளி தொழிற்சங்கத் தலைவருக்குக் கொடுக்கவேண்டிய மரியாதையைக் கொடுக்க வில்லை யென்று கருதினாலும் கூட, அதையே பிரச்னையாக்கி உடனடியாக ஸ்ட்ரைக் செய்ய வேண்டுமென்று வீராவேசமாக தொழிலாளர்கள் மத்தியில் பேசி, அவருடைய உத்தரவிற்கு அந்தத் தொழிலாளர்கள் கட்டுப்பட வேண்டிய நிலையில் இருப்பதால், என்ன காரணம் என்று கூடத் தெரியாமல் ஸ்ட்ரைக்கிலே ஈடுபட வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறார்கள். அதைத்தான் 'அன்பேர் ட்ரேட் யூனியனிசம்' என்று சொன்னேன். ஆகவே அந்தவகையில் இருக்கிற நிலைமைகளைத் தவிர்க்க வேண்டும்.

அதேநேரத்தில் தொழிற்சங்கத்தில் உறுப்பினராக இருக்கிறோம் என்ற ஒரே காரணத்திற்காக தங்களுடைய மனச் சாட்சியை மீறி அவர்கள் ஸ்ட்ரைக்கில், வேலை நிறுத்தத்தில் ஈடுபடுகிறதால் தான் இன்றைக்கு பல தொழிற்சாலைகளை மூடுகின்ற நிலைமை இருக்கிறது.



இன்றைக்கு 10 (பி) பற்றி பல தொழிற் சங்கத் தலைவர்கள் பேசுகிறபோது அதை ஏதோ நினைக்க முடியாத அளவிற்கு தொழிலாளர்களுக்கு அநீதி விளைவிக்கிற சட்டப்பிரிவு என்று சொன்னார்கள். உள்ளபடியே நான் வருத்தப்படுகிறேன். தொழிற்சங்கத் தலைவர்கள் எந்த ஆதாரத்தில், 10(பி) யை 'இன்வோக்' செய்வது, நடுவர் நீதிமன்றத்திற்கு ஒரு பிரச்சினையை அனுப்புவது, தொழிலாளர்களுக்கு விரோதமான கொள்கை என்று நினைக்கிறார்கள் என்பது தெரியவில்லை. இது கம்யூனிஸ்ட் நாடும் இல்லை. முழு அளவிற்கு முதலாளிகளை நீக்கிவிட்டு சோஷலிசக் கொள்கைகளை இந்த நாட்டிலே நிறைவேற்றி விடலாம் என்று நாம் நினைக்கவில்லை. முதலாளிகள் தொழில் துவங்குகிறார்கள். தமிழகத்தில் தொழில் வளர்ச்சி ஏற்பட வேண்டுமென்கிற போது அவர்களை வைத்துத் தான் தொழில்களைத் துவங்க வேண்டும். அவர்களுக்கும் தொழிலாளர்களுக்குமிடையே பிரச்னை வருகிறது என்றால் முதலில் டி.சி.எல். பேசுகிறார். ஏ.சி.எல். இருந்து பேசுகிறார். அதற்குப் பிறகு கமிஷனர் பேசுகிறார். அரசும் பேசுகிறது. அப்படியிருந்தும், அரசு தலையிட்டதற்குப் பின்னாலும் தொழில் பிரச்னை முடியவில்லை என்கிறபோது அதை ஒரு நடுவர் நீதிமன்றத்தின் தீர்ப்பிற்கு 10 (பி) மூலம் அனுப்புவது எப்படி அநீதியாகும் என்று என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. ஆகவே அரசை நம்புகிறபோது, அமைச்சரை நம்புகிற போது, நம்முடைய அரசால், அமைச்சரால் நியமிக்கப்படுகிற, நாம் எல்லோரும் ஏற்றுக் கொள்ள வேண்டிய ஒரு நீதிபதியை ஏன் நம்பக் கூடாது என்று இந்த நேரத்தில் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஆகவே அந்த நோக்கமும் தொழில் அமைதியை ஏற்படுத்துவதற்குத் தான். 10 (பி) 'இன்வோக்' செய்துவிட்டு நல்ல ஒரு தீர்ப்பு வருகிற வரையில் தொழிற்சாலை நடந்து கொண்டு இருக்கட்டும். தொழிலாளர்கள் பெறுகிற ஊதியத்தைப் பெற்றுக்கொண்டு நிம்மதியாக வாழ்க்கை நடத்தட்டும். தொழில் உற்பத்தி குறையக் கூடாது என்று எண்ணுவது எந்த விதத்தில் சமுதாயத்திற்கு அநீதி இழைத்து விட்டதாகக் கொள்கிறீர்கள் என்று கேட்கிறேன். ஆகவே 10(பி) என்பது புரட்சித் தலைவர் அவர்களின் ஒரு நல்ல கொள்கை. அது ஒரு எடுத்துக்காட்டாக இருக்கிறது. இப்போது 10 (பி)-ஐ எடுத்துக் கையாண்டு இதனால் எந்தத்

தொழிற்சாலையிலும் தொழிலாளிக்கு அநீதி வழங்கியதாக யாரும் சொல்லவில்லை. 10 (பி)-ஐ இன்வோக் பண்ணியதால், தொழிலாளர்களுக்கு வருகிற நியாயம் கிடைக்காமல் போனது என்று எந்த உதாரணத்தையும் எந்தத் தொழிற் சங்கத் தலைவரும் முன்வைக்கவில்லை. ஆனால் 10 (பி) என்பது தீண்டத்தகாத ஒன்று, அநியாயமான ஒன்று என்று காரணமற்ற விமர்சனங்களை, தொழிற்சங்கத் தலைவராக இருக்கிறோம் என்பதற்காக, அரசாங்கம் கொண்டு வருகிற ஒரு முடிவை எதிர்க்க வேண்டுமென்பதற்காக எதிர்த்து இருக்கிறார்கள். இதிலே வேறு எந்தக் காரணமும் இல்லையென்பதை இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

ஆகவே அந்த வகையில் தொழில் அமைதி மட்டுமல்லாமல் தொழிலாளர் நலத்திற்காக எவ்வளவு சட்டங்களை, எவ்வளவு சட்டத் திருத்தங்களைக் கொண்டு வருகிறோம். மாண்புமிகு உமாநாத் அவர்கள் இங்கே உறுப்பினராக இருந்த போது அவரே பலவற்றை வரவேற்றுப் பேசியிருக்கிறார். ஒவ்வொரு முறையும் தொழில் சட்டத்தில் எங்கேயாவது பிரச்னை வருமானால், உடனடியாக அதற்காக அமென்ட்மென்ட் கொண்டு வந்து, அந்த நேரத்தில் தொழிற்சங்கத் தலைவர்களைக் கலந்து கொண்டு, அவர்கள் சொல்கிற திருத்தங்களை ஏற்றுக்கொண்டு பல சட்ட முன்வடிவுகளை நாம் நிறைவேற்றி இருக்கிறோம். அதிலே ஒன்று கைத்தறி நெசவாளர் பாதுகாப்பிற்காகக் கொண்டு வந்த சட்டம். அந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தபோது பலரும் வரவேற்றனர். எதிர்க்கட்சியில் இருந்தவர்கள் எல்லாம் வரவேற்றனர். ஆனால் உயர்நீதிமன்றத்தில் அது தடைசெய்யப்பட்டு நடைமுறைப்படுத்த முடியாமல் இருக்கிறது. எதிர்க் கட்சியில் இருக்கிற உறுப்பினர்கள் ஒத்துழைப்பு தருகிற சட்டங்களைக் கூட கொண்டு வருகிற போது பல நேரங்களில் உயர்நீதிமன்றத்தில், உச்ச நீதிமன்றத்தில் தடைப்படுத்தப் படுகிறது. ஜனநாயக நாட்டில் நீதிமன்றத் தீர்ப்புகளுக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டியவர்களாக நாம் இருக்கிறோம்.

(மாலை 4-50)

உயர்நீதிமன்றத்தினுடைய தீர்ப்பு — நம்மை, நம்முடைய தொழிற் கொள்கையை அதற்கேற்றவாறு நாம் மாற்றிக் கொள்ளவேண்டிய அவசியத்தில் இருக்கிறோம் என்பதை யாரும் மறந்துவிட





முடியாது. எனவே அந்த வகையில் இந்தத் தொழில் நலத்தை, அந்தத் தீர்ப்புக்குக் கட்டுப்பட்டு, முற்போக்கான சட்டங்களை எவ்வளவு கொண்டு வர முடியுமோ, அவ்வளவு கொண்டு வந்து இருக்கிறோம் என்பதை நான் பல உதாரணங்களின் மூலமாகச் சொல்ல முடியும். ஆகவே சிறிய பிரச்சனையாக இருந்தாலும், இன்று Payment of Wages Act -ன்படி சம்பளத்தைப் பிடித்துக் கொடுப்பதிலே மேஜிஸ்ட்ரேட்டிடம் போகும்போது புதிதாக ஒரு தீர்ப்பை வழங்குகிறார்கள். ஆகவே அந்தப் பணத்தை வாங்கிக் கொடுக்கவேண்டியவர்கள், ஒரு தீர்ப்பை வழங்குவதற்கான அதிகாரம் இல்லை என்று சொன்னவுடன், அந்தப் பணத்தை வசூல் செய்கிற அதிகாரத்தை நம்முடைய தொழில் துறை அதிகாரிகளுக்கு வழங்கி அண்மையில் ஒரு சட்டம் நிறைவேற்றப்பட்டு இருக்கிறது. உதாரணமாக நான் இதைச் சொல்கிறேன். அப்படி ஒரு சிறிய பிரச்சனையாக இருந்தாலும் கூட நம்முடைய தொழிலாளர்கள் நலனில் அக்கறை கொண்ட புரட்சித் தலைவர் அரசு செயல்பட்டுக் கொண்டு இருக்கிறது என்பதை பல உதாரணங்கள் மூலமாகச் சொல்ல முடியும்.

அதேபோன்று Minimum Wages Act. இந்த Minimum Wages Act பல தொழிற்சாலைகளுக்கும், பல தொழில் களுக்கும் கொண்டுவரப்பட்டு இருக்கிறது. எவ்வளவு தூரம் நடைமுறைப்படுத்தப்பட்டு இருக்கிறது என்பதைப் பார்த்தாலும் கூட உள்ளபடியே மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கிற போது, தமிழகத்தில் அது நிறைவாக செயல்பட்டுக் கொண்டு இருக்கிறது என்பதை நாம் இங்கே தெளிவாகச் சொல்ல முடியும். ஆகவே அந்த அளவிற்கு பல்வேறு தொழில்களில் குறைந்தபட்சக் கூலி, இன்னும் சொல்லப்போனால் விவசாயிகளுக்கு நிர்ணயிக்கப் பட்டு இருக்கிற கூலி எங்கள் பகுதியில் நிர்ணயிக்கப்பட்ட கூலியைவிட அதிகமாகத்தான் கொடுக்கிறார்களே ஒழிய, குறைந்த அளவிற்கு இல்லை. ஆகவே அந்த அளவிற்கு தொழிலாளர் நலன் பாதுகாக்கப்பட்டு இருக்கிறது. இன்னும் சொல்லப்போனால், கோவையிலே இருக்கிற நூற்பாலைகளில் நிறைய சங்கங்கள் இருக்கின்றன. இன்று பம்பாயைவிட அதிகமான சம்பளத்தைப் பெறுகிறார்கள் என்பதை மனச்சாட்சி உள்ள தொழிற்சங்கத் தலைவர்கள் ஒத்துக் கொள்கிறார்கள்.

[திரு. மா. சின்னராசு] [1986 மே 7

பம்பாயைவிட கோவையிலே ஊதியம் கூடுதல். அதனால்தான் கூடுதலாக தொழிற்சாலைகளை, நூற்பாலைகளை கொண்டு வருவதற்குக் கூட தயங்குகிறார்கள் என்று கூட சொல்கிறார்கள். இருந்தாலும் கூட இந்த வேஸ்ட் காட்டன் மில்களில் மிகக் குறைந்த கூலி கொடுக்கப்படுகிறது. ஏதோ பண்ணை ஆட்களைப் போல சிலரை வைத்துக்கொண்டு, அந்தப் பஞ்சாலைத் தொழிலிலே ஈடுபட்டு உள்ளவர்களுக்கு குறைந்த கூலியைக் கொடுக்கிறார்கள். குழந்தைகளைக்கூட அதிலே பயன் படுத்துகிறார்கள். எனவே இந்த நிலைமையைப் போக்குவதற்கு நம்முடைய அரசு Minimum Wages Act -ன்கீழ் வேஸ்ட் காட்டன் மில்களைக் கொண்டு வரவேண்டும் என்கிற வகையில் பரிசீலனையில் இருப்பதாக கொள்கைக் குறிப்பிலே ஒரு கருத்து இருப்பதை நாம் பார்க்கிறோம். ஆகவே இப்படி தொழிலாளர் களுடைய நலிவு எங்கிருந்தாலும் அதைப் போக்குகிற முயற்சி யிலே தொடர்ந்து ஈடுபட்டு வந்திருக்கிறார்கள் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதேபோல் தொழிற்சாலைகளில் வேலை செய்யக்கூடிய நம்முடைய குழந்தைகள் பலரும் காக்கப்படவேண்டும். அவர்களை ஃபோர்ஸ்டு லேபர் என்று சொல்லக்கூடிய அளவிற்கு எந்தக் காரணத்தைக் கொண்டும் பயன்படுத்தக்கூடாது என்று நம்முடைய அரசியல் சட்டமே நமக்கு சொல்லி இருந்தாலும் கூட, தவிர்க்க முடியாத காரணத்தால், வறுமையின் காரணமாக பல இடங்களில் இன்று குழந்தைகளை தொழிற்சாலைகளில், பல தொழில்களில், வணிகமையங்களில் வேலைக்கு அமர்த்திக் கொள்வதை நாம் பார்க்கிறோம். ஆகவே அதிலே கூட முழுமை யான அளவு குறைக்கவில்லை என்றாலும், ஒழித்துவிடவில்லை என்றாலும், நம்முடைய அரசு அதை நெறிப்படுத்தி, அதை முறைப்படுத்தி குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்துக்கொண்டு இருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்தப் பிரச்சனையைப் பொறுத்தவரையில், குழந்தைகளை தொழிற்சாலைகளில் பயன்படுத்தி அவர்களை கடுமையான பணிகளுக்கு அமர்த்துகிற ஒரு பொருளைப் பொறுத்தவரையில்,



1986 மே 7] [திரு. மா. சின்னராசு]

நாம் மனிதாபிமானத்தோடு பார்க்கவேண்டும் என்று பல கால மாக வற்புறுத்திக் கொண்டு வருகிறோம். நம்முடைய மத்திய அரசாங்கத்தில் உள்ள லேபர் டிபார்ட்மென்ட்டில் இருந்து வந்தவர்கள் செய்த சர்வேயிலும் கிட்டத்தட்ட 44 மில்லியன் குழந்தைகள் இந்தியாவில் பல்வேறு இடங்களில் தொழிலாளர் களாக வேலைக்கு அமர்த்தப்பட்டு இருக்கிறார்கள் என்ற புள்ளி விவரத்தைத் தந்திருக்கிறார்கள். அவர்கள் நடத்திய ஆய்வுக்குப் பின்னால், இவைகளை ஒரேயடியாக நாம் நிறுத்தி விட முடியாது. மனிதாபிமானத்தினுடைய அடிப்படையில் அதைப் பல்வேறு முறைகளிலே நாம் களையவேண்டும் என்ற கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அப்படி சொல்லப்பட்ட கருத்து "A remedy to mitigate the children from being employed is by conducting an elaborate extensive survey" என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே வேறு வழி மூலம் இந்தப் பிரச்சனையைத் தீர்க்கலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் சொன்னதிலே ஒன்று, "Labour Ministry should lunch a plan, whereby the parents of working children would be given help and guidance to bring up the children without driving them to work" என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே வேலை வாங்குகிற குழந்தைகளுடைய ஊதியத்தை நம்பி இருக்கிற பெற்றோர் களுக்கு நல்ல நிலையை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம் அவர் களுக்கு நல்ல படிப்பினையை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம், உள்ளபடியே இந்தப் பிரச்சனையைத் தீர்க்க முடியும், ஒழித்துவிட முடியும், என்றாலும்கூட மனிதாபிமானத்தோடு இந்தப் பிரச்சனைகளுக்கு ஒரு தீர்வைக் காணவேண்டும். அரசியல் சட்டத்திலே நாம் குழந்தைகளிடத்திலே வேலைப் பளுவை குறைக்கவேண்டும் அல்லது ஒழிக்கவேண்டும் என்ற உறுதிப்பாட்டை கொடுத்த பின்னால், அதை நடைமுறைப் படுத்தாமல் இருப்பது நிச்சயமாக மனிதாபிமான உணர்விற்கு அப்பாற்பட்டது என்ற வகையில் நம்முடைய அரசு எடுத்துக் கொண்டு இருக்கிற கவனத்தை நான் இங்கே பாராட்டி, தொடர்ந்து இந்த முயற்சியிலே அரசு ஈடுபடவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

குழந்தைகளைப் பயன்படுத்துகின்ற அந்தத் தொழிற்சாலைகள் மட்டுமல்ல, பெரும்பாலும் பெரிய ஊர்களிலும் நகரங்களிலும், பேரூராட்சிகளிலும் இருக்கிற ஓட்டல்களில் நாம் பார்க்கிறோம். 5 வயதிலிருந்து 15 வயது வரை உள்ள சிறுவர்கள் வேலை செய்கிறார்கள். பல வீடுகளிலேயிருந்து இன்றைக்கு பெண்கள்—குழந்தைகள், 5 வயதிலிருந்து 15, 16 வயதுவரையில் உள்ளவர்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் சட்டப் பாதுகாப்பு கிடையாது. இவர்களுக்கென்று தொழிற்சங்க அமைப்பும் கிடையாது. ஆக, அந்தக் குழந்தைகள் எந்த அடிப்படையில் தங்களுக்காக நீதியைக் கேட்கமுடியும். இந்தக் குழந்தைகள் மிகவும் சொற்பமான கூலிக்கு வேலை வாங்கப் படுகிறார்கள். ஒரு வேளை உணவு அல்லது 2 ரூபாய் கூலி கொடுக்கப்படுகிறது. இந்த அளவுக்குத்தான் அவர்களுக்கு வழங்கப்படுகிறது. இவ்வாறு பல்லாயிரக்கணக்கான குழந்தைகள் வறுமையின் காரணமாக வீட்டிலிருந்து விரட்டப்பட்டும், அல்லது வீட்டிற்கு வருமானத்தைத் தேடித் தருவதற்காகவும், வேலைச் சுமையைத் தாங்கி வருகிறார்கள் என்பதையும், ஆக அவர்களுக் கெல்லாம் நீதி வழங்குகின்ற முறையிலே, ஜனநாயக நாட்டிலே இது ஒழிக்கப்படவேண்டும் என்கின்ற முறையிலும் மிக தீவிரமான கவனம் செலுத்தவேண்டுமென்பதையும் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

தொழிலாளர்களுக்கு ஈ.எஸ்.ஐ. விடுப்பு—நலக்காப்பு சட்டுறு தியின் கீழ் விடுமுறை வழங்கப்படுகிறது. Man days lost-ன் கீழ் நாம் இந்த விடுமுறையைக் குறைக்கவேண்டுமென்று சொல் கிறோம். ஆக, விடுமுறை பெறுவது என்பது ஒரு பார்மாலிட்டி யாக, விடுமுறை பெறுவதற்கென்று டாக்டர்களிடம் போய் நிர்பந் தப்படுத்திக்கூட டாக்டர் சர்டிபிகேட் வாங்கி, பல ஆயிரக்கணக் கான நாட்கள் இன்று வீணாக்கப்படுகின்றன. ஆக, இது எல்லோருக்கும் தெரிந்தே இந்த ஈ.எஸ்.ஐ. லீவ் என்பது ஒரு சாக்காக, ஒரு சம்பிரதாயத்திற்காக வைத்துக்கொண்டு, இதை முறையில்லாமல் பயன்படுத்துவதைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். இதிலே தொழிலாளர்களுக்கு மனக்கசப்பு ஏற்பட்டாலுங்கூட, 'உற்பத்திப்பெருக்கம் நமது நாட்டின் நலம்' என்கின்ற முறையிலே இதைத் தவிர்ப்பதற்கான முறைகளை நாம் கையாளவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.



Shops and Establishments Act இன்று நமமுடைய புள்ளி
விவரத்தில் கொடுத்திருப்பதில், நிறுவனங்கள் 2 லட்சத்து 77
ஆயிரத்து 370 என்று இருக்கின்றது. ஆனால் பணியாளர்க
ளுடைய எண்ணிக்கை 2 லட்சத்து 74 ஆயிரம் என்று கொடுக்கப்
பட்டிருக்கிறது. இது சரியாக இருக்காது என்பதை நான்
சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நிறுவனங்கள் 2 லட்சத்து 77
ஆயிரத்து 370 என்று இருக்கும்போது, நிச்சயமாக 2 பேர் வேலை
செய்தாலும்கூட அங்கு இருக்கிற பணியாளர்கள் 4 லட்சமாக
இருக்கவேண்டும். ஆக, முழு அளவுக்கு இவர்கள் சட்டத்தி
னுடைய பாதுகாப்பில் கொண்டுவரப்படவில்லை. இன்னும்கூட
நமது தொழிற்துறையில் அதிகக் கவனம் செலுத்த வேண்டும்.
பல்வேறு தொழில் கூடங்களில் இருக்கக்கூடியவர்கள்
இந்தப் பாதுகாப்பை முழு அளவுக்கு பெறுவதற்கு வாய்ப்பு
ஏற்படுத்தித்தரவேண்டுமென்று சொல்லி, Abolition of Contract
Labour Act கொண்டுவரப்பட்டிருக்கிறது. சில நிரந்தரத் தொழிலா
ளர்கள் அதிகமாக ஊதியம் கேட்கிறார்கள். அவர்களுடைய பிரச்
னையை சந்திக்க முடியவில்லை என்று அஞ்சுகிற முதலாளிகள்
பல்வேறு முறையிலே Contract Labour என்று வைத்துக்
கொள்கிறார்கள். அதற்காகவே, பக்கத்திலேயே 5 கிலோ
மீட்டர் 10 கிலோ மீட்டரிலே பெரிய ஆலையை வைத்துக்கொள்
கிறார்கள். அங்கே ஒரு ஜாப் காண்டிராக்ட் கொடுத்து வேலை
வாங்குகிறார்கள். இருக்கிற தொழிற்சாலையிலே ஒரு குறிப்
பிட்ட வேலைக்காக காண்டிராக்ட்டரிடம் ஒப்படைத்துவிட்டு, பல
நூற்றுக்கணக்கான தொழிற்சாலைகள், நூற்றுக்கணக்கான
தொழிலாளர்கள் பணியாற்றுகின்ற தொழிற்சாலைகளிலேகூட
காண்ட்ராக்ட் முறை இருக்கிறது. இது தவிர்க்கப்படவேண்டு
மென்றும், இதில் அதிக கவனம் செலுத்தவேண்டுமென்றும்
சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதிகாரிகள் கணக்கு எடுக்
கின்றபோது, அந்தத் தொழிலாளர்களுடைய எண்ணிக்கை
அவர்கள் வைத்திருக்கிற வவுச்சரோ அல்லது பே ஸ்லிப்பையோ
வைத்து, அவர்கள் எவ்வளவுகாலம் பணியாற்றி இருக்கிறார்கள்
என்பதைக் கணக்கில் எடுத்துக்கொண்டு, இந்த காண்ட்ராக்ட்
முறையில் கடுமையான நடவடிக்கை எடுத்து அவர்களை முழு
அளவில் நிரந்தரமாக்குவதற்கு வழிவகை செய்யவேண்டுமென்று

[திரு. மா. சின்னராசு] [1986 மே 7

கேட்டுக்கொண்டு, இறுதியாக இந்த 'Workmen's Compensation Act'- லேயும் மற்ற சட்டத்திலேயும் நாம் தொழிலாளர் களுக்கான பணத்தை திருப்பி வாங்குகிறபோது அந்த ரெவின்யூ ரிகவரி-லே 'Revenue recovery Act'- பிரகாரம் அதை வசூலித்துக்கொள்ளலாம் என்று வைத்திருக்கிறோம். ஆனால் தொழிலாளிகள் ஒரு தாசில்தாரிடம் போய், ஒரு ரெவின்யூ இன்ஸ்பெக்டரிடம்போய் அந்தப் பணத்தை திருப்பிப் பெறுவதற்கு, முதலாளியிடம் படுவதைவிட பெரிய கஷ்டத்திற்கு உள்ளாகிறார்கள். ஆக, தயவுசெய்து அந்த முறையை மாற்றி அவர்கள் சிவில் கோர்ட்டிலேயே மற்ற தாவாக்களைப்போல, தாவாச் செய்து அதற்கும் சிவில் கோர்ட் 'டிக்கிரி' அளிக்க, உரிய தீர்ப்பாக அதனை ஆக்கிக் கொடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இன்று இருக்கிற நிலையிலே வசூலிப்பது என்பது மிகக் கடுமையான ஒன்றாக இருக்கிறது.

இறுதியாக, கோவையிலிருந்து வந்திருக்கிற 4, 5 எதிர்க் கட்சியினர் பேசி இருக்கிறார்கள். தொழில் நகரம் என்றாலே கோவைதான். அங்குதான் தொழிலாளர்கள் நிறைந்து இருக்கிறார்கள். என்னுடைய விருப்பமெல்லாம் கோவை மாவட்டத்தைப்போல தமிழகத்திலே இருக்கிற எல்லா மாவட்டங்களிலும் தொழில் பெருகி எல்லா இடங்களிலும் நிரந்தரமாக தொழிலாளிகள் வேலைவாய்ப்பைப் பெற்று நாடு முன்னேறுவதற்கான வழி காணவேண்டும். அதற்கு நல்ல தொழில் கொள்கை இருப்பதோடு, நல்ல தொழிற் சங்கமும் வேண்டும், நல்ல தொழிற்சங்கத் தலைவர்களும் வேண்டுமென்பதுதான் என்னுடைய விருப்பமாகும்.

அந்தவகையிலே பத்திரிக்கையாளர்களுக்கு மத்திய அரசாங்கம், அவர்களுடைய ' Wage Award ' வருகிறவரை, Wage Board -ல் நியமிக்கப்பட்ட தீர்ப்பு வருகிறவரை, '7.5 சதவிதம் இன்டிரிம்-ரிலீஃப் கொடுக்கவேண்டுமென்ற முடிவு எடுக்கப்பட்டு அது மத்திய அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. அதை நம்முடைய அரசின் மூலம் விரைவாகப் பெற்றுத் தருவதற்கு முயலவேண்டும். தொழிற்சங்கத் தலைவர்களும், அது சம்பந்தப்



1986 மே 7] [திரு. மா. சின்னராசு]

பட்டவர்களும், அதற்காக மத்திய அரசாங்கத்தை வற்புறுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே பணிவன்போடு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

(மாலை 5-00)

இறுதியாக, கன்ஸிலியேஷன் ஆபீசர் நியமிக்கிறபோது Industrial Dispute -லே ஒரு முக்கியமான விஷயம் மேனேஜ்மென்ட்தான். அந்த கன்ஸிலியேஷன் ஆபீசர்களை, என்கொயரி ஆபீசர்களை நியமிக்கிறார்கள். பெரும்பாலும் அவர்களுக்கு வேண்டிய வக்கீல்கள் அல்லது அதிகாரிகளை நியமித்து விடுகிறார்கள். எது மேனேஜ்மெண்டு தீர்ப்போ அது தான் அந்த என்கொயரி ஆபீசர் உடைய தீர்ப்பாக இருக்கும். அதை அடிப்படையாகக் கொண்டு டிரிபியூனலும் தீர்ப்பை வழங்குகிறது. இதனால் பெரும்பாலும் தொழிலாளர்களுக்கு அநீதி வழங்கப்பட்டு விடுகிறது. மேனேஜ்மென்டு என்ன நினைக்கிறதோ அதைத்தான் அந்த என்கொயரி ஆபீசர் தீர்ப்பாக வழங்குகிறார். அதையும் முடிவாக டிரிபியூனல் ஏற்றுக்கொள்கிறது. அதை மாற்றுவதற்குக்கூட வழி இல்லை. ஆகவே நிரந்தரமாக மாற்ற வேண்டும். மாவட்ட நீதிபதி தரத்தில் என்கொயரி ஆபீசரை நியமிக்க வேண்டும். பார் அசோசியேஷனில் இருக்கிற வழக்கறிஞர்கள் பட்டியலில் இருந்து மாவட்ட நீதிபதி தொழிற்சாலை நிர்வாகத்திற்கு ஒரு விண்ணப்பத்தைக் கொடுத்து—அவர் ஒருவரைத் தேர்ந்தெடுத்து இந்த கன்சிலியேஷனுக்கும், ஆர்பிட்ரேஷனுக்கும், என்கொயரிக்கும் அதிகாரிகளை நியமிக்கிற முறையை ஏற்படுத்தவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டு வாய்ப்பு அளித்த மாண்புமிகு துணைத் தலைவருக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

திரு. ஜே. ஹேமசந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சின்னராசு அவர்கள் பேசும்போது, 'ஹெண்ட்லூம் ரிசர்வ்' சம்பந்தமாக கொண்டு வந்த குறைந்தபட்ச கூலி சட்டத்தை இங்கே பல மாண்புமிகு உறுப்பினர்கள் வரவேற்றார்கள் என்றும் அது நீதிமன்றத்திற்குப் போய் தடை செய்யப்பட்டது என்றும் சொன்னார்கள். இப்போது நீதிமன்றத்தில் எந்த கேசும் இல்லை,

தடையும் இல்லை. ஆனாலும் அந்த மினிமம் வேஜஸ் இன்றைக்கு ஹேண்ட்லூம் வீவர்சைப் பொறுத்தவரையில் அமல் செய்யாத நிலை இருக்கிறது என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியுமா?

**திரு. குமரி அனந்தன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாலை நேரத்திலே குறைந்த நேரத்தை எடுத்துக் கொண்டு என்னுடைய கருத்துக்களைச் சொல்லி முடிக்க விரும்புகிறேன். பலயிடங்களில் தொழிற்சாலைகள் மூடியிருப்பதைப்பற்றி ஏற்கனவே எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொல்லிவிட்டார்கள். மூடிக் கிடக்கின்ற தொழிற்சாலைகளைத் தவிர Dharangadhara Chemicals போன்றவைகளில் அடிக்கடி லே ஆப் கொடுக்கிறார்கள். ஒரு மாதத்திற்கு 10 நாட்கள்தான் அவர்களுக்கு வேலை கிடைக்கிறது. Mettur Textile Industries Limited, Salem Camp என்று சொல்லுகின்ற இடத்தில் இருப்பதை நடத்துகின்ற உரிமையாளர் ஏழு கோடியை தேசிய மைய வங்கியிலிருந்து கடன் வாங்கிக்கொண்டு, பிரதி மாதம் 10 ஆம் தேதி ஒவ்வொரு தடவையும் சம்பளம் கொடுக்க வேண்டியதையும் கூட கொடுக்காமல் ஏறத்தாழ 2,500 தொழிலாளர்கள் பாதிக்கப் படுகின்ற அளவுக்கு அங்கே செயல்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இப்படி எல்லாம் பலயிடங்களில் லே ஆப் என்றும், சரியாக நிர்வாகம் இல்லை என்றும் மூடிக் கிடக்கின்றன என்றும் வருகிற செய்திகளைப் பார்க்கிற போது பல ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் தங்களுடைய குடும்பத்தை நடத்த முடியாமல் திண்டாடுகிறார்கள். அதேநேரத்தில் அவர்கள் அங்கே கடன் பெறவேண்டும் என்று சொன்னால் முன்பு எல்லாம் சட்டப் பூர்வமாக வட்டிக் கடைகள் பலயிடங்களில் இருந்தன. வட்டிக் கடைகள் ஒரு சமுதாயத்தை சீரான வகையில் நாம் நடத்திச் செல்ல முடியவில்லை என்பதைக் காட்டுகிற அடையாளமாக இருந்தாலும் கூட உற்றுழி உதவுகின்ற சில அமைப்புகளாக அந்த வட்டிக் கடைகள் இருந்தன. பலயிடங்களில் அவர்கள் தங்களுடைய தொழில்களைச் செய்துகொண்டு இருந்தார்கள். குறைந்த தொகையை யாராவது வட்டிக்கு வாங்கினால் அதைத் திரும்பி கொடுக்கக்கூடாது என்ற விதிமுறை வந்ததற்குப் பிறகு



சட்டப்பூர்வமாக வட்டிக் கடைகள் நடத்திக்கொண்டு இருந்தவர்கள் பலர் மூடிவிட்டுப் போய்விட்டார்கள். சட்ட விரோதமாக வட்டிக் கடைகளை இப்போது நடத்துகிறார்கள். அது கிராமங்களிலும் பெருகி விட்டது. சிறு செம்புகளிலிருந்து பழைய சேலைகள் வரை அவர்கள் வாங்கிக்கொண்டு பணம் கொடுத்தாலும் கூட அது அடகுக் கடைகள் என்ற பெயரிலே வழங்கப்பட்டாலும் கூட 100 ரூபாய் 200 ரூபாய் என்று தொழிலாளர்களுக்குக் கடன் கொடுத்து விட்டு எப்படியாவது வசூலித்துக் கொள்ளலாம் என்று முரட்டு ஆட்களை வைத்துக் கொண்டு தொழில் நடத்துகிறவர்கள் இப்போது பெருகியிருக்கிறார்கள். ஆக சட்டத்திற்கு உட்பட்டு நடத்துகிறவர்களை நாம் ஒதுக்கி விட்டு இப்போது சட்டத்திற்குப் புறம்பாக தொழில் நடத்துகின்றவர்களை எல்லாம் கொண்டு வந்து தொழிலாளர்களைக் கசக்கிப் பிழிகின்ற ஒரு காரியம் கிராமங்களிலும் இப்போது நடந்து கொண்டிருக்கிறது என்பதை இந்த தொழிலாளர் நலத்தைப் பேண வேண்டிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பார்வைக்கு நான் கொண்டு வர விரும்புகிறேன்.

திருநெல்வேலியிலிருந்து வந்து இருக்கிற ஒரு செய்தி. கூட்டுறவு பால் விநியோகச் சங்கங்களை மாற்றி அமைத்தார்கள். அதிலே பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கமாக அதனை கொண்டு வந்து இருக்கிறார்கள். ஆக பால் விநியோக சங்கத்திடமிருந்து அந்த பால் விநியோகிக்கின்ற பொறுப்பு இனிமேல் தனியார் ஏஜென்சிகளுக்குக் கொடுக்கப்படும் என்ற செய்தி அவர்களுக்கு அதிர்ச்சியைக் கொடுக்கிறது. அதன் மூலம் 500 பேர் வேலை இழக்கக் கூடும் என்ற செய்தியை திருநெல்வேலியிலிருந்து அந்த தொழிற்சங்கத் தொழிலாளர்கள் நமக்கு அனுப்பியிருக்கிறார்கள்.

அதைப்போல நேரடியாக இதற்குத் தொடர்பு இல்லை என்று சொன்னாலும் கூட தொழிலாளர் நலனாக இருக்கிற காரணத்தால் அதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தில் சோப்பு செய்கின்ற தொழிலாளர்கள் 20 ஆண்டுகளாக இருந்தாலும் கூட ஊதிய நிர்ணயமோ

பணி நிரந்தரமோ ஆக்கப்படவில்லை என்று சொல்லுகிற ஒரு மனுவை இங்கே அனுப்பி இருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் பார்வைக்காக இங்கே வைக்க வேண்டும் என்பதற்காக. அதைப்போலவே பரமக்குடி, எமனேஸ்வரம் போன்ற பகுதிகளிலே 45 நெசவாளர்கள் சங்கங்கள் இருக்கின்றன. அதிலே பணிபுரிகின்றவர்களுக்கு மாதம் ரூ. 100 தான் கொடுக்கிறார்கள். குறைந்த பட்சக் கூலியாக ரூ. 150-ஐ கடையிலே இருக்கின்றவர்களுக்கும் கொடுக்கவேண்டுமென்று தமிழக அரசு உத்தரவிட்டிருக்கின்ற நிலையில் வெறும் ரூ. 100 மட்டும்தான் கொடுக்கிறார்கள்.

இப்போது நிலவுடமை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பணி புரியக் கூடிய தொழிலாளர்கள், இளநிலைப் பட்டதாரிகளாகவும் முதுநிலைப் பட்டதாரிகளாகவும் இருக்கிறார்கள். ஏறத்தாழ 2,000 பேர்கள் வேலை செய்கிறார்கள். அவர்களுக்கு தினக் கூலியாக ரூ. 8 மட்டும் தான் கொடுக்கப்படுகிறது. வெகுதூரத்திலுள்ள தங்கள் வீடுகளிலிருந்து இந்தப் பணியிடங்களுக்குச் செல்வதற்கு, சில நேரங்களில் போக்குவரத்துச் செலவிற்கு மட்டுமே ரூ. 6, ரூ. 7 என்று ஆகிவிடுகிறது. அவர்களுக்கு வெறும் ரூ. 8 மட்டுமே கொடுக்கப்படுகிறது என்பதை அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

அதைப்போலவே எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியதை நானும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

தனியார் பஸ் போக்குவரத்தில் வேலை செய்கின்றவர்களுக்கு நாள்தோறும் மிகக் குறைந்த ஊதியத்தைக் கொடுக்கிறார்கள் என்பதோடு, அவர்கள் அந்த நாள் ஊதியத்தைக் கொடுக்கின்ற நேரத்தில், ஒன்றை எழுதியும் வாங்கிக்கொள்கிறார்கள். எப்படி எழுதி வாங்கிக்கொள்கிறார்கள் என்றால், 'உயர்திரு கனம் முதலாளி அவர்கள் சமூகத்திற்கு தங்கள் கம்பெனியில் வேலை செய்யும் இன்னார் எழுதிக்கொடுக்கும் சம்பள ரசீது. 'நான் வேலைபார்க்கும் தினசரிச் சம்பளத்தைப் பெற்றுக்கொண்டேன்.' என்று எழுதிக் கொடுக்கிறார்கள். அந்த இடத்திலே புள்ளி போட்டிருக்கிறார்கள். எவ்வளவு சம்பளத் தொகை என்று போடவில்லை. பெற்றுக்கொண்டேன் என்று தான் இருக்கிறது.





'எனக்கும் இந்தக் கம்பெனிக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்பதை இதன்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்' என்று அச்சிடப்பட்ட பாரங்களிலே அவர்கள் கையெழுத்து வாங்கிக் கொள்கிறார்கள். அதனை மாண்புமிகு அமைச்சரவர்கள் பேசியதற்குப் பிறகு கொடுக்கயிருக்கிறேன் என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அவர்கள் சில கோரிக்கைகளை இங்கே எழுப்பியிருக்கிறார்கள். 5 தொழிலாளர்கள் வேலை செய்கின்ற நிறுவனங்களில்கூட ப்ராவிடண்ட் பண்ட் என்று சொல்கின்ற வைப்பு நிதி வழங்கப்படவேண்டும். 3 பஸ்களுக்கு 7 டிரைவர்கள், 7 கண்டக்டர்கள் என்று வைக்கவேண்டும். இரவு நேரங்களில் வெளியூரில் தங்கும் தொழிலாளர்களுக்கு தங்கல்படி ரூ. 5 கொடுக்கவேண்டுமென்று கேட்கிறார்கள். அதுமிகக் குறைவுதான். அதுபோல சலவைக் கூலி ரூ. 10 கொடுக்கவேண்டும். பண்டிகை விடுமுறை நிர்ணயம் செய்து வழங்கவேண்டும். ஒவ்வொரு தொழிலாளிக்கும் சுதந்திர ஊதிய உயர்வு இன்கிரிமெண்ட் ரூ. 10 வேண்டும். அனுமதிக்கப்பட்ட பயணிகளுக்கு மேல் அதிகப் பயணிகளை ஏற்றக்கூடாது. ஆக அரசாங்கம் எவ்வளவு அனுமதிக்கின்றதோ, அதற்கு மேலே முதலாளிகள் வற்புறுத்தினால் கூட, ஏற்றுவதற்கு அரசாங்கம் அனுமதிக்கக் கூடாது. எங்களுக்குத் துணை புரிங்கள் என்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஓவர்—டைம் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு இரட்டிப்பு சம்பளம் கொடுக்க வேண்டும். எல்லாத் தொழிலாளர்களுக்கும் ஈ.எஸ்.ஐ. சலுகைகள் வழங்கவேண்டும். இரவில் கம்பெனிகளில் தங்கும் தொழிலாளர்களுக்குத் தகுந்த பாதுகாப்போடு கூடிய ஓய்வு விடுதிகள் வேண்டும் என்று எல்லாம் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். இது அரசாங்கத்தினுடைய பார்வைக்கு வரவேண்டுமென்பதற்காகத்தான் நான் சொல்கிறேன்.

அடுத்து உதவி பெறும் ஆசிரியை பயிற்சிப் பள்ளிகளில் வேலை செய்கின்ற சுற்றேவலர்கள் என்பவர்கள் ஒரு மனுவை அரசாங்கத்தினுடைய பார்வைக்கும் என்னுடைய கவனத்திற்கும் அனுப்பியிருக்கிறார்கள். உதவி பெறும் ஆசிரியைப் பயிற்சிப் பள்ளிகளில் வேலை செய்கின்ற பெண்கள் ஏறத்தாழ 250 பேர்கள்தான் தமிழகம் முழுவதும் இருக்கிறார்கள். அவர்கள் ஒரு நாளைக்குப்

பெறுகின்ற ஊதியம் எவ்வளவு என்று சொன்னால் 57 பைசா. நான் மீண்டும் நினைவுபடுத்துகிறேன். இந்த உதவிபெறும் பயிற்சிப் பள்ளிகளில் குற்றேவலர்களாகப் பணி புரிகிறவர்கள் ஒரு நாளைக்கு பெறுகின்ற ஊதியம் வெறும் 57 பைசா. ரூ. 18 தான் ஒரு மாதத்திற்குப் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். அதே நேரத்திலே உயர்நிலைப் பள்ளிகளிலும், மேல்நிலைப் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் அதே பணிகள் செய்கின்ற குற்றேவலர்கள் ரூ. 450-ஐப் பெறுகிறார்கள். நான்காவது ஊதியக் குழு இந்த ஊதியத்தை நிர்ணயித்துக் கொடுத்திருக்கிறது. இந் நான்காவது ஊதியக் குழு இதே பணியைச் செய்கின்ற, உயர்நிலைப் பள்ளிகளிலும், மேல்நிலைப்பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் வேலை செய்கின்றவர்களுக்கு மாதம் ரூ. 450 கொடுக்க, உதவிபெறும் ஆசிரியைப் பயிற்சிப் பள்ளிகளிலே வேலை செய்கின்றவர்கள் வெறும் ரூ. 18 தான் மாதத்திற்குப் பெறுகிறார்கள். அவர்கள் மொத்தமாக 250 பேர்கள் தான் இருக்கிறார்கள். எனவே இந்த 250 பேர்களுக்கு நாம் ரூ. 450 வீதம் கொடுப்பதால், அதிகப் பணம் செலவாகாது என்ற காரணத்தினால், இதை அரசாங்கத்தினுடைய பார்வைக்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அதேபோல் தூத்துக்குடி ஸ்பின்னிங் மில்சிலே 10 ஆண்டுகளாக வேலை செய்து கூலி பெறும் தொழிலாளர்கள், நிரந்தரம் செய்யப் படாமல், தினக் கூலி ரூ. 4, ரூ. 5 என்ற அளவில் ரூ. 8-க்கு மிகைப் படாமல் அவர்கள் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

அதேபோன்று உப்பளங்களில் வேலை செய்கின்றவர்களுக்கு எல்லாம் கருப்புக் கண்ணாடியும், கால் செருப்பும் கொடுக்க வேண்டிய விதிமுறை இருந்தபோதிலும்கூட, இதைக் கொடுக்காத காரணத்தினால், சூரிய ஒளியிலிருந்து இந்தப் படிகங்கள் என்ற கிரிஸ்டல்கள் உப்பளங்களிலிருந்து சிதறி வருகின்ற இந்த ஒளி அவர்களுடைய கண்களிலே பட்டு, உப்பிலிருந்து வேதியல் பொருள்கள் அவர்களுடைய கண்களில் பாய்ந்து 40 வயதுக்குள்ளே அவர்களுக்கு கண் பார்வை மங்கி விடுகிறது. எனவே கருப்புக் கண்ணாடி, கால் செருப்பு போன்ற பொருள்களை அந்த உப்பள தொழிலாளிகள் வாங்குகிறார்களா என்று அரசாங்கம் பார்க்கவேண்டும்.



அதேபோன்று மேட்டுப்பாளையத்தில் உள்ள விஸ்கோஸ் தொழிற்சாலையில் கட்டை உடைக்கும் தொழிலில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்கள், குறிப்பாக இலங்கையிலிருந்து வரும் அகதிகள் போன்றவர்கள் கொத்தடிமைகளாக நடத்தப்பட்டு வருகிறார்கள் என்பதுஅன்றாட பத்திரிகையில் வந்திருக்கிற செய்தி மட்டுமல்ல. உண்மையில் நடைபெறுகின்ற செய்தியாகும். கொத்தடிமை முறையை நீக்குகின்ற ஒரு பெரிய திட்டம் அரசாங்கத்தினுடைய கையில் இருக்கின்ற காரணத்தினால் உடனடியாக அரசாங்கம் பார்வையிட்டு, கொத்தடிமை முறையை ஒழிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

(மாலை 5-10)

இப்போது நமது பார்வையிலே படவேண்டிய இன்னொரு தொழிலாளி, கல் உடைக்கும் தொழிலாளியாக இருந்து கொண்டிருக்கிறான். கட்டிடப் பணிகள் எங்கெங்கோ எல்லா இடங்களிலும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. சாலைகள் போட வேண்டும் என்று நாம் விரும்புகிறோம். அதற்கு எல்லாம் தேவைப்படுகின்ற கல்லை உடைக்கின்றவன்; மேலே இருந்து சூரியக் கதிர்கள் அவனுடைய தலையிலே கொளுத்த, கீழே இருக்கின்ற பாறையிலே இருக்கின்ற சூடு அவனுடைய காலைப் பெயர்த்து எடுக்க, காலிலே செருப்புகூட இல்லாமல் நின்று கொண்டிருக்கின்ற அந்தக் கொடுமையான காட்சியை பலரும் பார்த்து இருப்பார்கள். உடலிலே துணியும், இல்லாமல், உடலிலே உழைப்பதற்குரிய சக்தியும் இல்லாமல், அந்தக் கல் உடைக்கும் தொழிலாளி, கணப்பொழுது அயர்ந்தால் கூட, அந்தத் தொழில் செய்து கொண்டிருக்கிறவர்களுடைய காலோ, கையோ போகின்ற அளவுக்கு ஆபத்தான பணியைச் செய்து கொண்டிருக்கிறவர்களுக்கு அரசாங்கம் நல்வாழ்வு கொடுக்கிற திட்டம் ஒன்றை தனியாகவே போட்டு, கல் உடைக்கும் தொழிலாளி நல்வாழ்வுத் திட்டம் ஒன்றை ஏற்படுத்தித் தரவேண்டும் என்று நான் இந்த அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, திரைப்படக் கொட்டகையிலே வந்து பார்க்க வருகிறவர்கள், பொழுது போக்கிற்காக பார்க்க வருகிறார்கள் திரைப்படத்தை எடுக்கிறவர்கள் பண வசதி பெறவேண்டும் என்பதற்காகவோ, மற்றவர்களுக்கு நல்ல அறிவுரை கூறவேண்டும்

என்பதற்காகவோ எடுக்கிறார்கள். ஆனால் அந்தத் திலாப் படக் கொட்டகையிலே பணி புரிந்து கொண்டிருப்பவர்கள் ஏறத் தாழ 100 ரூபாய் மட்டும் தான் சம்பளமாகப் பெற்றுக் கொண்டி ருக்கிறார்கள் என்பதனை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

வேலை வாய்ப்பகங்களிலே அதிகமாக இப்போது ஆட்கள் இருக்கிறார்கள். வேலை தேடி அவர்கள் தங்களைப் பதிவு செய்துகொள்கிறார்கள் என்பதை எல்லாம் பார்க்கிறோம். ஆனால் அவர்கள் வேலை செய்து கொண்டிருக்கிற இடங்களைச் சிந்தித்துப் பார்த்தால், 'ஆக்குபேஷனல் ஹசார்ட்ஸ்' என்று சொல்கின்ற அவர்கள் எந்தெந்தத் தொழில்களை செய்து கொண்டி ருக்கிறார்களோ, அந்தத் தொழிலின் மூலம் பரவுகின்ற நோய் எல்லா இடங்களிலும் இருக்கிறது. தோல் பதனிடும் தொழிலில் இருக்கின்றவர்களுக்கு உடம்பெல்லாம் அரிக்கின்ற தோல் வியாதிகள் வந்து கொண்டு இருப்பதையும், பஞ்சாலை, நெசவுத் தொழிலில் ஈடுபட்டு இருக்கிறவர்களுக்கு நெஞ்சை அடைக்கின்ற பஞ்சுத் துகள்கள் போய் அவர்களுக்கு பல்வேறு உபாதைகளை அளித்துக் கொண்டிருக்கின்றது என்பதையும் நாம் பார்க்கிறோம்.

கைத்தறி நெசவாளர்கள் பகுதியிலே அவர்களுக்கு நோய் இருக்கிறதா என்று பார்ப்பதற்கு நடமாடும் மருந்தகங்களாக சில மருந்தகங்கள் இருந்தன. அவைகள் இப்போது பல இடங் களுக்குச் செல்லவில்லை என்று நெசவாளச் சகோதரர்கள் சொல்கிறார்கள். அதையும் பார்க்கவேண்டும். 90 டெசிபெல்ஸ் என்று சொல்கிற ஒரு ஒலி அளவை வைத்து 90-க்கு மேலே சத்தம் வரும் என்றால், தொழிற்சாலையிலே, காது கேட்காமல் போய் விடும் என்று டாக்டர் காமேஸ்வரன் போன்றவர்கள் எல்லாம் இப்போது நமக்கு அறிவுரை தந்து இருக்கிறார்கள். நமது தொழிற்சாலைகளை எடுத்துக் கொண்டால், தமிழகத்திலே இருக்கின்ற எந்தத் தொழிற்சாலையிலும் 90 டெசிபெல்ஸ்-க்கு குறைந்த சத்தத்தோடு இல்லை என்று கணக்கிட்டு இருக்கிறார்கள். 90 டெசிபெல்ஸ் என்று சொல்கிறபோது, 8 மணிக்கு மேலே 10 நிமிஷம் வேலை செய்தால் கூட அது காதை பாதிப் படுத்தி விடும்.





ஒரு நாளைக்கு 8 மணி நேரம் தான் தாக்குப் பிடிக்கின்ற அளவுக்கு சக்தி உடலிலே, காதுகளுடைய ஜவ்வுகளுக்கு இருக்கின்றன. ஆனால் 8 மணிக்கு மேலே எங்கேயாவது வேலை செய்தார்கள் என்றால், நிச்சயமாக அவர்களுடைய காதுகள் பாதிக்கப்படுகின்றன என்று சொல்கிறார்கள். 90 என்பது குறைந்த அளவு தான். மற்ற இடங்களில் 100 வரை சத்தத்தின் ஒலி அளவு இருக்கிறது என்று சொல்கிறார்கள். எனவே, விஞ்ஞான ரீதியில் அதற்கு மேல் சத்தம் வருகிற தொழிற்சாலை களிலே அந்தச் சத்தத்தைக் குறைக்க வழி என்ன என்று அரசாங்கம் பார்க்கவேண்டும்.

வறுமையைப் போக்குவதற்குரிய முயற்சியிலே ஈடுபட்டிருக்கிற நாம் வளமையை வளர்ப்பது எப்படி, வளமையைப் பெருக்குவது எப்படி என்று ஆலோசனை கூறுவதற்கும் முயலவேண்டும். இங்கே தொழிற்சங்கங்களைப் பற்றிப் பேசினார்கள். தொழிற் சங்கங்கள் தேவைப்படுகின்றன. ஏனென்றால், தொழிலாளர்களை பாரதி போன்றவர்கள் பிரம்மாக்கள் என்று சொன்னார்கள். புதுமைப்பித்தன் சொன்னார்; ஒன்றை உண்டாக்குகிறவன் பிரம்மா, தொழிலாளியும் ஒன்றை உருவாக்குகிறானே அவனை இரண்டாவது பிரம்மா என்றாவது அழைத்தால் என்ன என்று கேட்டார். அந்த இரண்டாவது பிரம்மாக்களாக இருக்கிறவர்கள் பெறவேண்டிய ஊதியத்தைப் பெறுவதற்கும் அந்தத் தொழிற்சங்கங்கள் நிச்சயமாக வேண்டும். தங்கம் செய்யாததைச் சங்கம் செய்யும் என்ற காரணத்தினால், அப்படிப்பட்ட தொழிற் சங்கங்கள் நிச்சயமாகத் தேவைப்படு கின்றன. ஆனால் இன்னொன்றையும் மறந்துவிடக்கூடாது.

அந்தத் தொழிற்சங்கங்கள் ஊதியத்தைப் பெற்றுக் கொடுக் கின்ற நேரத்திலே, பெறுகின்ற ஊதியத்தை நல்ல காரியத்திற்கு தொழிலாளர்கள் பயன்படுத்துகிறார்களா என்று பார்க்கிற பணி யையும் அந்தத் தொழிற் சங்கங்கள்தான் செய்யவேண்டும். ஆகவே, வறுமையைப் போக்குவதற்கு பணத்தை வாங்கிக் கொடுப்பவர்கள், வளமையைப் பெருக்குவதற்கு அவர்களுக்கு வழியைச் சொல்லிக் கொடுக்கவேண்டும்.

பெரிய, பெரிய ஆலையை நடத்திக் கொண்டிருக்கிறவர்கள் கூட, பட்டப்படிப்பு, வெளிநாட்டுப் படிப்பு படித்து நடத்திக் கொண்டிருக்கிறவர்கள் கூட, தங்களுக்கு என்று, 'பைனான்சியல் அட்வைசர்ஸ்' என்று வைத்துக்கொள்கிறார்கள். தங்களுடைய

பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு என்ன வழி என்று பார்ப்பதற்கு பெரிய, பெரிய மூளைகளை அங்கே அமர்த்திக் கொள்கிறார்கள். ஆனால் ஏழைத் தொழிலாளி தன்னுடைய வாழ்க்கையை வளப்படுத்துவதற்கு என்னென்ன வழிவகை காணவேண்டும், என்னென்ன செய்யவேண்டும் என்பதை எல்லாம் சொல்லிக் கொடுக்கின்ற பணியையும் தொழிற்சங்கங்கள் இனி மேல் மேற்கொள்ளவேண்டும். இப்போதே நல்ல பல தலைவர்கள் மேற்கொண்டிருக்கிறார்கள். அமைப்பு ரீதியாகக் கூட, அதைக் கட்டாய மரபாகக் கூட வைத்து செய்தால் தான் தொழிலாளர் குடும்பங்கள், உயர்ந்து, உயர்ந்து தொழிலாளி என்ற நிலையிலே இருந்து, மாறி, அவர்களும் சிறு, சிறு முதலாளிகள் என்று சொல்கிற அளவுக்கு உற்பத்தியைப் பெருக்குகின்ற ஒரு பணியிலே தங்களை ஈடுபடுத்திக் கொள்வார்கள் என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அதைப் போல், தொழிலாளி பணி முடித்து வெளியே போகிறபோது, ஆயுள் நாள் பூராவும் தன்னுடைய உழைப்பைப் பூராவும் ஒரு இடத்திற்குக் கொடுத்து, உற்பத்தியைப் பெருக்கி விட்டு, இறுதியிலே வேலை இல்லாமல் நிற்கின்ற நேரத்திலே அப்போது பெறுகின்ற வைப்புநிதி இன்னும் கொடுக்கின்ற பணங்கள் ஆகியவற்றை அவர் என்ன செய்யப் போகிறார் என்பதைத் தொழிற்சங்கத் தலைவர்களாவது கூடி நின்று ஆலோசனை செய்ய வேண்டும். அந்தப் பணத்தை எடுத்து உடனே டாம்பீகமாக கல்யாணம் செய்யப் போகிறார்களா, அந்தப் பணத்தை எடுத்து தேவை இல்லாத அளவுக்கு, இருக்கின்ற வீட்டை 'பெரிதுபடுத்தி, பெரிதுபடுத்தி, பிறகு நாளைக்கு கூட்டிப் பெருக்குவதற்குக் கூட வழி இல்லாமல் குப்பை கூளமாகப் போடப் போகிறார்களா? சிறு வீடாக இருந்தாலும் தொழில் போன்றவைகளிலே தங்களுடைய பணத்தை முடக்கப் போகிறார்களா? தங்கள் பிள்ளைகளுடைய வருங்காலத்தைப் பார்க்கப் போகிறார்களா? இல்லையெனில் நகை, நட்டுக்களைப் போட்டு அலங்கார பவனி வரச் செய்யப் போகிறார்களா என்பதைப் பற்றி எல்லாம் அந்தத் தொழிலாளர்கள் வெளியே போகிறபோது அவர்கள் கையிலே இருக்கின்ற பணத்தை எப்படிச் செலவழிப்பது என்பதற்குக் கூட அந்தத் தொழிற்சங்கங்கள் ஆலோசனை சொல்வதற்கும் முயற்சி செய்ய வேண்டும் என்று வலியுறுத்தலை அரசாங்கம் செய்யக் கேட்டுக்கொள்கிறேன். அப்படிப்பட்ட நல்ல பணிகளையும் இங்கே செய்ய வேண்டும்.





இங்கே ஊனமுற்றவர்கள் கூட ஏறத்தாழ 20 ஆயிரம் பேர் வேலைவாய்ப்பு பதிவகத்திலே தங்களைப் பதிவு செய்து கொண்டு இருக்கிறார்கள். நான் ஊனமுற்றவர்கள் கூட என்று சொல்வதற்குக் காரணம், மற்றவர்களாவது, ஒழுங்கான, நிரந்தரமான, முறையான வேலை கிடைக்கவில்லை என்று சொன்னால், ஒன்றைத் தூக்கி இன்னொரு இடத்திலே வைத்து விட்டு, அதற்காகவாவது கூலியைப் பெற்று தங்களுடைய வாழ்க்கையை நடத்திக் கொள்வார்கள். ஆனால் கண் இழந்தவர், காது இழந்தவர், கை, கால் இழந்தவர்கள் அப்படிப்பட்ட பணிகளைச் செய்ய முடியாது. வயிறு அவர்களுக்கும் இருக்கும். பசி அவர்களுக்கும் இருக்கும். ஆனால், பசித்த நேரத்தில், செய்வதறியாது, திகைத்து, திண்டாடி, திக்கற்றவர்களாகக் கண் கலங்கி நிற்பவர்களை அரசாங்கம் பார்க்க வேண்டும்.

20 ஆயிரம் பேர்கள் என்று சொன்னால் அவர்களுக்கென்று வருகின்றபோது, வேலையைக் கொடுக்கிறோம் என்பது இல்லாமல் 20 ஆயிரம் பேருக்கும் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள்ளாவது நிச்சயம் வேலை கிடைக்கும் என்ற சூழ்நிலையினை உருவாக்கித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

20 இலட்சம் பேர் இன்று கூட உயிர்ப் பதிவேட்டிலே வேலை இல்லாதவர்களாக இருந்து கொண்டு இருக்கிறார்கள். 20 லட்சம் பேர் உயிர்ப் பதிவேட்டில் இருக்கிறார்கள் என்றால், எழுதிக் கொடுத்தவர்கள் 20 இலட்சம் பேர். எழுதிக் கொடுக்காமல் இருப்பவர்கள் எத்தனை லட்சம் பேரோ. நமக்குத் தெரியாது.

அந்த 20 இலட்சம் பேரிலே கூட, வரிசைப்படி பதிவு செய்தவர்கள் தங்களுக்கு வேலை கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு இல்லை. அங்கே போய், யாருடைய சிபாரிசோ இருந்தால்தான் அவர்களுக்கு வேலை கிடைக்கும் என்ற நிலை போய், பதிவு செய்து கொண்டாயிற்று, மற்றவை எல்லாம் பதிவு செய்கின்ற அலுவலகத்தைப் பொறுத்தது, எனக்கு முறைப்படி வரும் என்ற நம்பிக்கையோடு அவர்கள் இருக்கின்ற அளவுக்கு அவைகளைக் கண்காணிக்க வேண்டும் என்று அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டு அமர்கிறேன். நன்றி.

[1986 மே 7

*** திரு. ஆர். ரெங்கசாமி :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தொழிலாளர் நலமானியக் கோரிக்கையில் நான் சார்ந்துள்ள காங்கிரஸ் கட்சியின் சார்பில் ஒரு சில வார்த்தைகளைக் கூற விரும்புகிறேன். நான் அரசாங்கத்தை எதிர்க்க வேண்டும் என்பதற்காகப் பேசவில்லை. குறை கூறவேண்டும் என்பதற்காகப் பேசவில்லை. ஆளும்கட்சியோடு கூட்டணிக் கட்சி என்ற முறையில் ஒருசில வார்த்தைகள் பேசவிரும்புகிறேன்.

இன்றைக்கு பலர் பேசும்போது ஒரு காண்ட்ரோவர்சியல் பாயின்ட் வந்தது. லேபர் டிபார்ட்மென்ட்டிலிருந்து, ஃபேக்டரி விங்கை பிரிக்கலாமா, வேண்டாமா என்பதைப் பற்றிப் பேசினார்கள். தொழிற் சங்கத் தலைவன் என்ற முறையில் நான் மட்டும் அல்ல, சி.ஐ.டி.யூ., எ.ஐ.டி.யூ.சி, மற்றும் மற்ற தொழிற் சங்கங்கள் எல்லாம் சேர்ந்து சொல்ல விரும்புகிறோம். இப்போதுள்ள நிலைமையே நீடித்தால் நல்லது என்று சொல்ல விரும்புகிறோம். தனியாகப் பிரிக்கவேண்டிய அவசியம் இல்லை. அதற்கு அவசியமே இல்லை.

இன்றைக்கு அந்த டிபார்ட்மெண்ட்காரர்கள் தவறு செய்தால் மேற்கொண்டு ரிப்போர்ட் செய்வதற்கு ஆள் கிடையாது. எனவே, லேபர் கமிஷனர் மூலமாகத் தான் ரிப்போர்ட் நாங்கள் செய்ய வேண்டும். எனவே, கேட்டுக்கொள்ள விரும்புவது, இப்போது தயவுசெய்து பிரிக்க வேண்டாம். சில காலம் கழித்து பிரிக்கட்டும் என்று சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, நம்முடைய கொள்கை விளக்கக் குறிப்பிலே, சென்ற ஆண்டு, 35 இலட்சத்து, 5 ஆயிரத்து 226 நாட்கள் 'மேன் டேஸ் லாஸ்' என்று கூறி இருக்கிறார்கள். இந்த 'லாஸ்' ரொம்ப ஜாஸ்தியாகும். ஒரு நண்பர் குறிப்பிட்டார். ஒரு நாட்டில் அமைதி உண்டா, இல்லையா என்பதைப்பற்றி ஆராய, இந்த 'மேன் டேஸ்' தான் கணக்கிட்டுப் பார்க்க உதவும் என்று குறிப்பிட்டார்கள். அந்த வகையில் பார்க்கும்போது, இது மிகவும் அதிகம்.

இந்தியாவிலேயே 'வெஸ்ட் பெங்காலுக்கு' அடுத்தபடியாக நம் மாநிலத்தில் தான் அதிகமாகும். இது எதைக் காட்டுகிறது என்றால், ஸ்டிரைக்கைப் பற்றி நமக்குக் கவலை இல்லை என்று காட்டுகிறது.



1986 மே 7] [திரு. ஆர். ரெங்கசாமி]

நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன், தமிழக அரசு தொழிலாளர்களுக்கு நிறைய காரியம் பண்ணலாம். ஆனால் ஒரு கொள்கை வகுத்து வைத்துக் கொள்ள வேண்டும். அந்தக் கொள்கை என்ன என்பது அவர்களுக்கே தெரியாது. அப்போதைக்கப்போது 'அட்ஜஸ்ட்' பண்ணுகிறார்கள். அவ்வளவுதான். திட்டவட்டமான கொள்கை ஒன்று வகுக்க வேண்டும்.

நான் சொல்லிக் கொள்ள விரும்புவது, ஐ.என்.டி.யூ.சி. காரர்கள் நாங்கள். நாங்கள் காந்தியவாதிகள். நேரடியாகப் பேசும்போது பேச்சுவார்த்தை முடியவில்லை என்றால் லேபர் ஆபீசுக்கு ரிப்போர்ட் பண்ணுகிறோம். ஆக்ஷன் எடுக்க மாட்டேன் என்கிறார்கள். ஆனால், ஸ்டிரைக் பண்ணுகிறார்களா, உடனே கூப்பிடுகிறார்கள் என்றால் என்ன கொள்கை? லேபர் டிபார்ட்மெண்டிலிருந்து, அரசாங்கத்திலிருந்து ஸ்டிரைக் பண்ணியவர்களைக் கூப்பிட்டு, கலாட்டா, வம்பு பண்ணியவர்களைக் கூப்பிட்டு பேசுகிறார்கள் என்றால், நியாயமாக இருக்கக்கூடியவர்களுக்கு அது இல்லையா? நியாயமான முறையில் வந்து கேட்டால் கேட்டுக் கொடுப்பது கிடையாது. இது முறையான கொள்கையா? நியாயமாகப் போகிறவர்களைத்தான் முதலிலே கூப்பிடவேண்டும். எனவே, எந்தத் தொழிற்சங்கம், நியாயமாக, முறையாக முறையிடுகிறதோ, அதை முதலில் கூப்பிட வேண்டும். செட்டில் பண்ண வேண்டும். கலாட்டா பண்ணுகிறவர்களைக் கூப்பிட்டுப் பேசினால் மேலும் கலாட்டாதான் பண்ணுவார்கள். எனவே, இந்த ஸ்டிரைக்கிற்குக் காரணமே, ஸ்டிரைக் வருகிறவரை நாம் காத்து இருக்கிறோம்.

(மாலை 5-20)

அநேகமாகிரி ஸ்டிரைக்குக்கு முன்னாலே அந்த விஷயத்தை நாம் கவனித்தால் அந்த ஸ்டிரைக்கே வராது. ஸ்டிரைக் வரும் வரைக்கும் ஏன் பொறுத்திருக்க வேண்டும். அநேகமாக எல்லா ஸ்டிரைக்குக்கும் நம்முடைய டிலேதான் காரணம். எனவே, அரசாங்கம் ஒரு கொள்கையை வகுக்க தெளிவாக வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இன்டியா ஆக்சிஜன் கம்பெனி என்று ஒரு கம்பெனி சென்னையில் இருக்கிறது. அதில் 350 பேர் வேலை செய்கிறார்கள். அங்கே மூன்று சங்கங்கள் இருக்கின்றன. ஸ்டாப் யூனியன் ஐ.என்.டி.யூ.சி. ஒர்க்கார்ஸ்

யூனியன், ஐ.என்.டி.யூ.சி., மற்றும் இன்னொரு யூனியன் வைத்திருக்கிறார்கள். ஐ.என்.டி.யூ.சி.யைச் சேர்ந்த இரண்டு சங்கங்களும் சேர்ந்து செட்டில் பண்ணி விட்டார்கள். 350 பேரிலே 300 பேர் செட்டில் பண்ணி சம்பளம் வாங்கியாகிவிட்டது. 50 பேர் வாங்கவில்லை. அந்த ஒப்பந்தம் மூலமாக 9 ஆயிரம் ரூபாய் அரியர்ஸ் வாங்கியிருக்கிறார்கள். by way of arrears they have got Rs. 9,000 சம்பள உயர்வு மாதம் ஒன்றுக்கு 350 ரூபாய் வாங்கியிருக்கிறார்கள். சொல்லப்போனால் அங்குள்ள ஸ்வீப்பர் சம்பளம் 3,000 ரூபாய். A sweeper gets a salary of Rs. 3,000. அந்தக் கம்பெனியிலே 50 பேருக்காக வேண்டி ஐ.என்.டி.யூ.சி. சங்கத்திற்கு விரோதமாக ரெஃபரன்ஸ் கொடுத்திருக்கிறார்கள். இது என்ன நியாயம்? இதுதான் கொள்கையா? என்று கேட்க விரும்புகிறேன். சம்பளம் ஜாஸ்தி. 3,000 ரூபாய் சம்பளம் வாங்குகிறார்கள். ஒரு ஸ்வீப்பர் 3,000 ரூபாய் வாங்குகிறார் இதுசம்பந்தமாக கோர்ட்டுக்கு விடுவதற்கு என்ன காரணம்? வேறு காரணங்கள் நிறைய இருக்கின்றன. பர்சனல் ரீசன்ஸ், ப்ரெண்ட்ஷிப் ரீசன்ஸ் எல்லாம் நிறைய இருக்கின்றன. ஒரு கொள்கை கிடையாது. இம்மாதிரியான பெரியதொரு கம்பெனியிலே சம்பளம் ஜாஸ்தி வாங்கும்பொழுது, செட்டில்மெண்ட் இருக்கும்பொழுது. ஒரு ஒப்பந்தம் இருக்கும்பொழுது அதை மீறி இவ்வாறு விடுவது நியாயமா என்று கேட்க விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, முன்பு சிம்கோ மீட்டர் என்று ஒரு கம்பெனி திருச்சியிலே இருந்தது. அங்கே 12(3) போட்டிருந்தோம். அன்றைக்கு முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள் அதில் தலையிட்டார்கள். நாங்கள் சொன்னோம். 12(3) செட்டில்மெண்ட் என்பது legally binding' on all parties. தலையிடக் கூடாது என்று கேட்டோம். ஆனால் அதை மீறி தலையிட்டார்கள். என்ன ஆயிற்று இன்றைக்கு? அந்தக் கம்பெனியும் போச்சு: அந்த முதலாளியும் போய்விட்டார். தொழிலாளியும் போய்விட்டான். ரிசல்ட் அதுதான். எனவே, அரசாங்கமானது ஒரு ஒப்பந்தம் இருக்கும்பொழுது அந்த ஒப்பந்தம் எப்படி பண்ணப்பட்டது. என் பண்ணப்பட்டது, என்று முறையாகப் பார்க்காமல் அரசியல் காரணங்களுக்காக, பர்சனல் ரீசன்ஸ்க்காக கோர்ட்டுக்கு விடுவது நல்ல முறை அல்ல. அதேமாதிரிதான் W.S. Insulators கம்பெனியில் 1,200 பேர் வேலை செய்கிறார்கள்





திரு. குமரி அனந்தன்: மாற்றுத் தலைவரவர்களே, இங்கே போதுமான அளவு உறுப்பினர்களுடைய எண்ணிக்கை இருக்கிறதா, தொடர்ந்து சபையை நடத்துவதற்கு என்று மாற்று சபாநாயகர் அவர்களைப் பார்க்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. செம்மலை): இருக்கிறது.

திரு. ஆர். ரெங்கசாமி: W.S. Insulators 1,200 பேர் வேலை பார்க்கிறார்கள். ஐ.என்.டி.யூ.சி. சங்கம் இருக்கிறது. அங்கே பெருவாரியாக அங்கத்தினர்களைக் கொண்ட சங்கம், ஐ.என்.டி.யூ.சி. சங்கம்தான். ஆனால் அங்குள்ள மைனாரிட்டி யூனியன், ஏ.டி.எம்.கே. யூனியன் செட்டில்மெண்ட் போட்டிருக்கிறார்கள். ஆகவே அதை மாற்ற வேண்டும். மாற்றி நியாயம் வழங்க வேண்டுமென்று நாங்கள் லேபர் டிபார்ட்மெண்டுக்குப் போய் இருக்கிறோம். இன்னும் கோர்ட்டுக்குக் கொடுக்கவில்லை. ஒரு நிலைமையிலே அரசாங்கம் 10(2) அக்ரிமெண்ட் பண்ணியிருந்தும்கூட கோர்ட்டுக்குக் கொடுக்கிறார்கள். வேறு யாருக்கும் கொடுக்கவில்லை. ஐ.என்.டி.யூ.சி. சங்கம் எங்கெல்லாம் ஒப்பந்தம் பண்ணியிருக்கிறார்களோ அங்கே கோர்ட்டுக்குக் கொடுத்திருக்கிறார்கள். அதை நாங்கள் இப்பொழுது கேட்கிறோம், மெஜாரிட்டி யூனியன். ஒப்பந்தம் செய்வது மைனாரிட்டி யூனியன். வேண்டுமென்றால் வோட்டு வைத்துக்கொள்ளலாம்.

If the A. I. A. D. M. K. Union proves it is having majority. நாங்களெல்லாம் சங்கத்தைக் கலைத்துவிட்டுப் போய்விடுகிறோம். ஆகவே, அந்தக் கம்பெனியைப் பொறுத்தமட்டிலும் அரசாங்கம் கோர்ட்டுக்குக் கொடுக்க முன்வருமா என்று கேட்க பிரியப்படுகிறேன். ஏனென்று சொன்னால் இதே 10 (2) அக்ரிமெண்ட் போட்டயிடத்திலே மெஜாரிட்டி யூனியன் அங்கீகாரம் பெற்ற இடத்திலேயெல்லாம் அரசாங்கம் கோர்ட்டுக்கு கொடுத்திருக்கிறார்கள். அதேமாதிரி இங்கேயும் கோர்ட்டுக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப் பிரியப்படுகிறேன்.

[திரு ஆர். ரெங்கசாமி] [1986 மே 7

இன்னொன்றையும் கூற விரும்புகிறேன். அதே W.S. இன்க
ஜெட்டரிலே Check off System வேண்டாமென்று 750 ஒர்க்கர்ஸ்
மேலே கையெழுத்துப் போட்டு Chief Inspector of Factories Office
அனுப்பியிருக்கிறார்கள். Chief Inspector of Factories office என்ன
பண்ண வேண்டும்? உடனே நிர்வாகத்திற்கு எழுதி, கூடாது
என்று அறிக்கை விடவேண்டும். அதுதான் அவர்களுடைய
முன்றம். ஆனால் என்ன பண்ணினார்கள்? He has sent a small man.
I do not know who is he. அந்த நபர் தொழிற்சாலைக்குச்
சென்று மேனேஜ்மென்டைப் பார்த்து வந்துவிட்டார்.
Check off system இன்னும் கேன்சல் செய்யப்படவில்லை. ஏன்?
தொழிலாளர்கள் செக் ஆப் பிடிக்கக் கூடாது என்று
கையெழுத்துப் போட்டு, நிர்வாகத்திடம் கொடுத்தால்
மிரட்டுவார்கள் என்றுதான் சிப் இன்ஸ்பெக்டரிடம் கொடுத்
தார்கள். கொடுத்தது என்னவாயிற்று? இன்னும் ஏன் நடவடிக்கை
எடுக்கவில்லை? அதற்கு என்ன காரணம். ஆகவே, நியாயமான
கோரிக்கையான செக் ஆப் பிடிக்க வேண்டாம் என்று 750
பேர்கள் மனு கொடுத்திருக்கிறார்கள். ஒன்றும் ஆக்ஷன்
எடுக்கவில்லை. ஏன் எடுக்கவில்லையென்று அறிய விரும்பு
கிறேன்.

அடுத்தபடியாக, திருநெல்வேலி ஜில்லாவிலே தாழையூத்திலே
இந்தியா சிமெண்ட்ஸ் கம்பெனி இருக்கிறது. அந்த கம்பெனி
நிர்வாகம் அநியாயமாக 350 பேர்களை வேலையை விட்டு
நீக்கிவிட்டார்கள் எந்தவிதக் காரணமும் கிடையாது, நோட்டீஸ்
கிடையாது. விசாரணை கிடையாது. திடீரென்று நிறுத்தி
விட்டார்கள். காரணம் என்ன? அந்தத் தொழிலாளர்கள்
அவார்டைக் கேட்டார்கள், சம்பளம் கேட்டார்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அந்தக் காரணத்திற்காக நிர்வாகத்தினர் நிறுத்தினார்கள்.
வேலை கிடையாது என்று சொல்லிவிட்டார்கள். நாங்கள்
வேலையிருக்கிறது என்று சொன்னோம். லேபர் டிபார்ட்
மென்ட்டார் டெப்புட்டி சீப் இன்ஸ்பெக்டர் ஆப் பாக்டரியை
அனுப்பினார்கள். He has been sent to the factory
to verify the records
அவர் பாக்டரிக்குச் சென்று, வெரிபை பண்ணி ரிப்போர்ட் அனுப்
பினார். ரிப்போர்ட்டில் அந்த நிர்வாகம் பழைய ஆட்களை



1986 மே 7] [திரு ஆர். ரெங்கசாமி]

எடுத்துவிட்டு புதிய ஆட்களை வைத்திருக்கிறார்கள் என்று
ரிப்போர்ட் கொடுத்திருக்கிறார். ரிப்போர்ட் கொடுத்துங்கூட
இன்னும் அந்த நிர்வாகத்தை வற்புறுத்தி அவர்களை வேலையில்
வைக்க முடியவில்லை. தொழிலாளர்கள் அங்கே மறியல் செய்த
தற்காகக் கைது செய்யப்பட்டார்கள். அது சுலபம். அரசுக்குக்
கைது செய்வது சுலபம். நிர்வாகத்தை ஏன் நிறுத்தினாய்,
எதற்காக நிறுத்தினாய் என்று கேட்பதற்குத் தைரியம்
கிடையாது. நிர்வாகத்தினர் தங்கள் இஷ்டம் என்று சொல்கி
றார்கள். ஆகவே, தொழிலாளர்களைக் கைது செய்த அரசாங்க
மானது, நிர்வாகத்தினரைக் கேட்கலாம் அல்லவா? அதே
எஸ்.பி.-யை, டி.எஸ்.பி.-யை, கலெக்டரைக் கூப்பிட்டுக்
கேட்டார்களா? கேட்கவே இல்லை. அட்லீஸ்ட் ஒரு பாயிண்ட் ஆப்
இன்பர்மேஷனுக்காவது கேட்கலாம் அல்லவா? கேட்கவில்லை.
நிர்வாகத்தினர் அநேகமாக 350 பேர்களை நீக்கியிருக்கிறார்கள்.
அதற்குப் பதிலாக புதிய நபர்களை வேலைக்கு வைத்திருக்
கிறார்கள். அவர்கள் "We have employed 240 people"
என்று ரிப்போர்ட் செய்கிறார்கள். இருந்துங்கூட அரசாங்கம்
ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை? 350 பேர்கள் நீக்கப்பட்டு
எத்தனை நாளாயிற்று? இந்த அரசானது குவிக் ஆக்ஷன் எடுக்க
வில்லை; ஏன் பயமா? நம்மிடம் போலீஸ் இருக்கிறது. அதிகாரம்
இருக்கிறது. ஆப்டர் ஆல் இந்தியா சிமெண்ட் நிர்வாகம்தானே?
ஆகவே, அரசாங்கம் உடனடியாக, இந்தியா சிமெண்ட் நிர்வாகத்
தினர் மீது குவிக் ஆக்ஷன் எடுக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்
கிறேன்.

அடுத்தபடியாக ஒரு பெரிய குறை. ஐ.என்.டி.யு.சி. சார்பிலே,
நாங்கள் கோரிக்கைகளைக் கொடுக்கிறோம். நம்முடைய
கே.எ.கே. முன்னாலே இருந்தார்கள். பலமுறை அவரிடம்
சென்று சொல்லியிருக்கிறேன். மதுராந்தகம் சர்க்கரை ஆலை
தொழிலாளர் பிரச்னை, வால்பாறை தொழிலாளர் பிரச்னை,
இதுமாதிரி பல
கோயம்புத்தூரிலே உள்ள பிரச்னைகள்.
ஐ.என்.டி.யு.சி. சங்கம் சார்பிலே நான் போய் நேராகச் சொல்லி
யிருக்கிறேன். ரெப்ரசென்டேஷன் கொடுத்திருக்கிறேன். ஒரு
கேஸ் கூட கோர்ட்டுக்குக் கொடுக்கவில்லை. அரசாங்கம் வேண்டு
மென்றே ஐ.என்.டி.யு.சி.-க்குக் கொடுக்கக் கூடாது என்று சொல்லி

[திரு. ஆர். ரெங்கசாமி] [1986 மே 7]

யிருக்கிறது. நாங்கள் ஐ.என்.டி.யூ.சி. என்ன, கவர்மென்டுக்கு அகெய்ன்ஸ்டாக இருக்கிறோமா? நாங்கள் சப்போர்ட் செய்கிறோம். We are the only people supporting the Government நாங்கள் ஸ்டிரைக் செய்வதில்லை, சுமுகமாக வேலை செய்யச் சொல்கிறோம, உற்பத்தியைப் பெருக்கச் சொல்கிறோம். அரசாங்கம் ஏன் கவனிப்பதில்லை. நானே, not only as a M.L.A. ஐ.என்.டி.யூ.சி. சார்பாக, பெர்சனலாகச் சொல்லியிருக்கிறேன். சென்ற ஆண்டு, ஐ.என்.டி.யூ.சி. யின் எந்தக் கேசும் கோர்ட்டுக்குக் கொடுக்கவில்லை. அந்த மாதிரி செய்வதற்கு என்ன காரணம்? நாங்கள் என்ன வெறுப்பாகப் போய் விட்டோமா? அது நல்லதல்ல. அரசாங்கமானது நியாயமான தொழிற்சங்கத்தைச் சப்போர்ட் செய்வதுதான் நல்லது என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன் குறைந்த பட்சம் கமிட்டி போடுவதற்கு ஒரு வருடம் ஆகிறது. கமிட்டி வந்து பரிசீலனை

(மாலை 5-30)

பண்ணி முடிவு எடுப்பதற்கு 2 வருடங்கள் ஆகிறது. கவர்ன்மெண்ட் அவற்றைப் பரிசீலனை பண்ணி முடிவு சொல்வதற்கு ஒரு வருடம் ஆகிறது. இது அவசியமா? கமிட்டி அமைக்க மூன்று மாதம் கமிட்டி என்கொயரி 3 மாதங்களில் முடித்துவிடலாம். கவர்ன்மெண்ட் ரிப்போர்ட் 3 மாதங்களில் முடித்துவிடலாம். எல்லாம் சேர்த்து ஓராண்டிற்குள் முடிக்கவேண்டிய வேலைக்கு 4 வருடங்கள் எடுக்கிறார்கள். எனவே கமிட்டி அமைக்கும்போது அதனுடைய முடிவு ஓராண்டிற்குள் வரவேண்டும் என்பதை ஒரு கொள்கையாக வைத்துக்கொள்ள வேண்டும்.

அடுத்தபடியாக பிளாண்டேஷன்: இதைப் பொறுத்த வரையில் ஒன் மேன் கமிட்டி என்று கவர்ன்மெண்டிலே ஒரு கமிட்டி போட்டார்கள். ரிப்போர்ட் என்னவென்று தெரியவில்லை. ஒரு எஸ்டேட்டில் எவ்வளவு ஏக்கர் இருக்கிறது? ஏக்கருக்கு எவ்வளவு ஆள் வைக்க வேண்டுமென்று ரிப்போர்ட் கொடுக்க கமிட்டி அமைக்கப்பட்டது. அதனுடைய ரிபோர்ட் என்னவாயிற்று? கவர்ன்மெண்ட் என்ன பண்ணினார்கள் என்று தெரியவில்லை. தயவுசெய்து அந்த கமிட்டி ரிப்போர்ட்டை வெளியிடுங்கள், பரிசீலனை பண்ணுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.



1986 மே 7] [திரு. ஆர். ரெங்கசாமி]

எஸ்டேட்டையெல்லாம் frafmentation of the Estates என்ற முறையில் கூறுகூறாகப் பிரித்துவிடுகிறார்கள். எனவே அரசாங்கம் இதில் உடனடியாகத் தலையிட்டு இதைத் தவிர்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எஸ்டேட்டுகளைப் பிரித்தால் அது துண்டாகி உருப்படி இல்லாமல் போய்விடும்.

அடுத்து ஷுகர் இண்டஸ்ட்ரீஸ் பொறுத்தமட்டில் இடைக்கால நிவாரணம் கொடுத்திருக்கிறார்கள். மூன்றாவது வேஜ் போர்ட் போட்டிருக்கிறார்கள். போர்ட் முடிவு பண்ணுவதற்கு நாளாகும். அதுவரை காத்திராமல் நம்முடைய தமிழக அரசும் லேபர் டிபார்ட்மெண்டும் மேனேஜ்மெண்ட் எல்லாம் கூடிப் பேசி முடிவு பண்ண வேண்டும். அதுமாதிரி நாம் ஏற்கனவே செய்திருக்கிறோம். அதே மாதிரி மேற்கொண்டு காலதாமதம் இல்லாமல் உடனடியாகப் பேசி ஒரு முடிவு காணவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். என்ஜினியரிங் பொறுத்த மட்டில், பேக்டரிக்கு பேக்டரி, ஊருக்கு ஊர், இடத்திற்கு இடம் சம்பளம் மாறுதல் இருக்கிறது. இதில் நிறைய போட்டியிருக்கிறது. வெஸ்ட் பெங்கல் மாதிரி அதை நான்காகப் பிரிக்கலாம்.

(1) If the workers employed are 50.

(2) If the workers employed are 50 to 250.

(3) If the workers employed are 250 to 1000

(4) If the workers employed are 1000 and above.

அதேமாதிரி தமிழ்நாட்டிலே சம்பளம் நிர்ணயம் பண்ணும்படி கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து தமிழ்நாட்டிலே அகில இந்திய புள்ளிவிவரப்படி மத்திய அரசாங்கம் வெளியிட்ட ஒரு அறிக்கைப்படி I.N.T.U.C. மெஜாரிட்டி யூனியன் கமிட்டி அமைக்கும்போது டி.&டி.யு.சி. இ.எல்.ஐ.-யும் இடம்பெறவில்லை. இடம்பெறவில்லை. மத்திய தொழிற்சங்கங்களான சி.ஐ.டி.யு.சி., ஐ.என்.டி.யு.சி. மற்றும் எச்.எம்.எஸ். போன்றவைகள் கண்டிப்பாக இருக்க வேண்டும். அப்பொழுதுதான் கமிட்டி உருப்படியாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுபோன்று டெம்பரரி வொர்க்கர்ஸ் பிரச்சனை பற்றியும் கான்ட்ராக்ட் வொர்க்கர்ஸ் பிரச்சனை பற்றியும் உறுப்பினர்கள் எல்லாம் பேசினார்கள். அதை மீண்டும் நான் சொல்ல விரும்பவில்லை. அது பெரிய பிரச்சனையாக இருக்கிறது. It forms 40 per cent of the total labour force. ஆகவே அரசாங்கம் இதிலே ஒரு பெரிய நடவடிக்கை எடுத்து இந்த டெம்பரரி வொர்க்கர்ஸ் பிரச்சனை விஷயமாக ஒரு முடிவு எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக லேபர் கோர்ட் டேபிளிலேயே டிலே ஆகிறது. அரசாங்கத்திலே இருந்து ட்ரிபியூனலுக்கு ஜட்ஜ் போடப்படவில்லை. ஏன் போடப்படவில்லை? ஒரு சின்ன மேட்டர். 5 நிமிடத்தில் உங்களால் முடித்துவிட முடியும். இந்த 5 நிமிஷ வேலைக்கு இவ்வளவு நாட்கள் தேவையில்லை. ஏன் அவ்வாறு போடப்படாமல் இருக்கிறது? இந்த மாதிரி சிறிய காரியங்களில் எல்லாம் அரசாங்கம் கவலை இல்லாமல் இருக்கக்கூடாது.

லேபர் கோர்ட்டைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு ஜில்லாவிற்கும் ஒரு கோர்ட் போட வேண்டும், ஏனென்றால் பல கேஸ்களைப் பொறுத்த வரையில் ரொம்ப டிலே ஆகிறது. 2 வருஷங்களுக்கு மேல் கோர்ட்டிலே இருந்து அதற்குப் பிறகு ஆர்டர் வாங்கிக்கொண்டு வந்து பணம் வாங்க வேண்டும் என்றால் ரொம்ப டிலே ஆகிவிடுகிறது. 2 வருஷம் 3 வருஷம் ஆகியும் பணம் கொடுக்கப்படவில்லை என்ற நிலைமை இருப்பதால் ஒர்க்கர்ஸ் கஷ்டப்படுகிறார்கள். அதனை கலெக்டருக்கு அனுப்புகிறார்கள். அவர்களுக்கு ஆயிரத்தி எட்டு வேலை இருக்கின்ற நிலைமையில் இதையும் எப்படி உடனடியாக அவர்களால் செய்ய முடியும்? இப்படி தாசில்தார் பார்த்து, ரெவின்யூ இன்ஸ்பெக்டர் பார்த்து அதன்பிறகு அந்தப் பணத்தை வசூல் செய்து கொடுக்க வேண்டும் என்றால் நிறைய சிக்கல்கள் இருக்கின்றன. எனவே லேபர் கோர்ட்டிலே தீர்ப்பு அளிக்கும்போதே பணத்தையும் வாங்குவதற்கான அதிகாரத்தைக் கொடுக்கவேண்டும். அவர்களே அந்தப் பணத்தை வசூல் பண்ணக் கூடிய அளவுக்கு அதிகாரத்தைக் கொடுக்கவேண்டும். அவர்கள் வசூல் பண்ணி அந்தப் பணத்தைத் தரலாம். அப்போதுதான் ஒர்க்கர்ஸ்க்கு உடனுக்



குடன் பணம் கிடைக்க உதவியாக இருக்கும். அதற்கு ஆவன செய்யவேண்டும், அதிலே டிலே இருக்கக்கூடாது என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து பணத்தைப் போய்க் கேட்டால் முதலாளிகள் கொடுக்கவில்லை என்று தொழிலாளர்களுக்கு சொல்லக்கூடிய நிலைமை இருக்கிறது. இதுபற்றிக் கவனிக்க தனியாக அதாரிட்டி போடவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். ரொம்ப டிலே ஆகிறது. உதாரணம் ஜீவன்லால் கம்பெனி. தீர்ப்பளிக்கப்பட்ட 6 மாதத்திற்குள்ளாக பணம் கிடைக்கின்ற வகையில் ஏற்பாடு செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ஸ்ட்ரைக், கோர்ட் என்றெல்லாம் செல்வதை விட பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள மத்தியஸ்தம் தான் நல்லது. காந்தியடிகள் அதைத்தான் சொல்லியிருக்கிறார். நிர்வாகத்தினருக்கும், தொழிலாளர்களுக்கும் தகராறு வருகிறபோது அவர்கள் நேரடியாகப் பேசுகிறார்கள். அது முடியாது போனால் மத்தியஸ்தத்திற்கு ஏற்பாடு செய்யப்படவேண்டும். ஆர்பிட்ரேஷன் போடவேண்டும். தமிழ்நாட்டில் முன்பு Arbitration Board என்று ஒன்று இருந்தது. இப்போது அது இல்லாமல் போய்விட்டது. ஆகவே இந்த கோர்ட்டுக்குப் போவது, ஸ்ட்ரைக் செய்வது போன்றவற்றை எல்லாம் தவிர்க்கின்ற வகையில் மத்தியஸ்தத்திற்கு ஏற்பாடு செய்வது நல்லது. எனவே இந்த மத்தியஸ்த முறையை ப்ரமோட் பண்ணுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து கோயம்புத்தூரில் 8 மில்கள் மூடப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். இன்றைக்கு 10 மில்கள் மூடப்பட்டிருக்கின்றன. காவிரி ஸ்பின்னிங் மில், லட்சுமி மில், ஆகியவற்றை எல்லாம் மூடிவிட்டார்கள். அரசாங்கம் ஒரு கொள்கை வைத்துக்கொள்ள வேண்டும். லேபர் டிஸ்ப்யூட்டாக இருந்தால் அதை 6 மாதத்திற்குள்ளாக முடிக்க வேண்டும்.
If it concerns with labour matter, it should be settled within six months. வேறுமாதிரியான நிலைமைகள் எல்லாம் இருந்தால், அது பற்றிப் பரிசீலனை பண்ணலாம். மற்றவற்றைப் பொறுத்தவரையில் எவ்வளவு சீக்கிரம் முடிக்க முடியுமோ அவ்வளவு

[திரு. ஆர். ரெங்கசாமி] [1986 மே 7

சீக்கிரம் முடிக்கவேண்டும். அரசாங்கம் எடுத்துக்கொள்வது என்றால் அதுபற்றி விரைவில் முடிவெடுக்க வேண்டும். ஒரு வருஷம், 2 வருஷம், 3 வருஷம் என்று போடுவது நியாயம் இல்லை. ஆறு மாதத்திற்குள்ளாக அரசாங்கம் தலையிட்டு, மூடப்பட்ட மில்களைத் திறப்பதற்கான ஏற்பாட்டைச் செய்யவேண்டும்.

தமிழ்நாடு சிமெண்ட்ஸ் கார்ப்பரேஷனின் ஹெட் ஆபீஸ் இங்கே இருக்கிறது. அங்கே உள்ள ஓர்க்கர்ஸ்-ஐ பொறுத்தவரையில் வேஜ் போர்ட் ரெக்கமண்டேஷன்படி இன்னும் ஊதியம் கொடுக்கப்பட வில்லை. வேஜ் போர்ட் ரெக்கமண்டேஷனை இம்ப்ளிமெண்ட் பண்ணவேண்டும் என்ற நிலைமையில் ஹெட் ஆபீசிலே கூட அது இன்னும் கொடுக்கப்படவில்லை. அது கவர்ன்மெண்டிலே இன்டஸ்ட்ரீஸ் டிப்பார்ட்மெண்டிலே பெண்டிங் ஆக இருக்கிறது என்று சொல்கிறார்கள். அது லா மினிஸ்டர், ஃபைனான்ஸ்

(மாலை 5-40)

மினிஸ்டர், சீஃப் மினிஸ்டர் என்ற அளவிலே இப்போது இருப்ப தாகச் சொல்கிறார்கள். உடனடியாகக் கொடுப்பதற்கான ஏற்பாட்டைச் செய்தாகவேண்டும். அமைதியான முறையிலே கேட்டால் மாட்டேன் என்கிறது என்று தொழிலாளர்கள் சொல்லக்கூடிய நிலைமை இருக்கிறது. எனவே அங்கே உடனடி யாக வேஜ் போர்ட் ரெக்கமெண்டேஷனை அமல் நடத்தவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதே மாதிரி ஸ்லம் கிளிய ரன்ஸ் போர்டு, ஹவுசிங் போர்டு, மெட்ரோ வாட்டர் போன்ற அரசு நிறுவனங்களுக்கெல்லாம் போனஸ் தரப்படவில்லை. வாட்டர் போர்டுகாரர்கள் ஹைகோர்ட்டிற்கு போய் கேஸ் போட்டு வாங்கி விட்டார்கள். கவர்ன்மெண்டின் கொள்கையைப் பாருங்கள். கலாட்டா பண்ணினால் தருகிறார்கள் அல்லது கேஸ் போட்டால் தருகிறார்கள். போய்க் கேட்டால் கொடுக்க மாட்டேன் என்கிறார்கள். வாட்டர் போர்டுகாரர்கள் மட்டும் கேஸ் போட்டு வாங்கிவிட்டார்கள். ஆனால், இவர்கள் எல்லாம் கோர்ட்டிற்குப் போகவில்லை. யார் யார் என்றால் ஸ்லம் கிளியரன்ஸ், மெட்ரோ வாட்டர், ஹவுசிங் போர்டுக்காரர்கள் எல்லாம் கோர்ட்டிற்குப் போகவில்லை. கேட்டுக் கொண்டே தான் இருக்கிறார்கள். ஆனால் அரசாங்கம் ஒன்றும் செய்யவில்லை



1986 மே 7] [திரு. ஆர். ரெங்கசாமி]

ஒரு போர்டுக்கு கொடுத்த உடனேயே மற்றவைகளுக்கும் கொடுக்க வேண்டாமா?

It is a policy matter. We should not give to a particular Board and deny the same to other Boards employees. Why can't you give it to other Board workers also?

கொள்கை தானே அது. வாட்டர் போர்டுக்கு மட்டும் கொடுத்து விட்டு, மற்றவர்களுக்கு ஏன் போனஸ் இல்லை என்று சொல்ல வேண்டும். அவர்களுக்கும் கொடுக்க வேண்டாமா, அல்லது அவர் களும் கோர்ட்டிற்கு போய்த்தான் வாங்க வேண்டுமா? ஆகவே அந்த ஸ்லம் கிளியரன்ஸ் போர்டு, ஹவுசிங் போர்டு, மெட்ரோ வாட்டர் போன்றவைகளுக்கு எல்லாம் கண்டிப்பாக போனஸ் வழங்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக சிமெண்ட் தொழிற்சாலைகளுக்கு பெரிய ஆபத்து வந்துவிட்டது. லைம் ஸ்டோன் குவாரிகளுக்கு லைசன்ஸ் வழங்குவதில் சரியாக இம்பிளிமெண்ட் பண்ணுவ தில்லை. லைசன்சுகள் சரியாக வழங்கப்படுவதில்லை. லைசன் சுகள் சரியாக வழங்கப்படுவதில்லை, என்றால் தொழிற்சாலைகள் பாதிக்கப்படுகின்றன. மற்ற மாநிலங்கள் மைய அரசு போன்றவை எல்லாம் 20 வருஷம் 25 வருஷம் என்று சேர்த்து லைசன்சுகள் கொடுக்கிறார்கள். ஆனால் நம்முடைய மாநிலத் திலே மட்டும் 2 வருஷம் 3 வருஷம் என்றுதான் லைசன்சுகள் தரப் படுகின்றன. லைம் ஸ்டோன் கிடைக்காததனால் சிமெண்ட் பேக்டரியை மூடுகின்ற நிலைமை கூட சில இடங்களில் ஏற்பட்டிருக்கிறது. எப்படியும் லைசன்சுகள் கொடுத்தாக வேண்டும். சிமெண்ட் பேக்டரி எல்லாமே பெர்மெனன்ட். அப்புறம் ஏன் 1 வருஷம் 2 வருஷம் என்று கொடுப்பது? ஆகவே அந்த லைசன்சுகளை ஒரு வருஷம், 2 வருஷம் என்று மாற்றி மாற்றி கொடுப்பதைக் காட்டிலும், ஒரேயடியாக 20 வருஷம், 25 வருஷம் என்று கொடுத்துவிட்டால் நல்லது. ஆகவே அதை அரசாங்கம் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக குரோம் லெதர் கம்பெனி என்று ஒரு கம்பெனி இருக்கிறது, சென்னையிலே. அந்தக் கம்பெனிக்கு சொந்தமாக லேண்ட் இருக்கிறது. அந்த லேண்டை அங்கே வேலை செய் கின்ற தொழிலாளர்களுக்கே விற்பனைக்குக் கொடுத்து, ஏடு

கட்டிக் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டால், அது அர்பன் சீலிங்கில் வருகிறது, இதற்காக கொடுக்க முடியாது என்று சொல்லுகிறார்கள். பொதுவாக அந்த லேண்ட் அந்த கம்பெனிக்காரர்களுக்கு அவசியம் இல்லை.

" For the expansion of the company, they are keeping surplus lands " ஆக அப்படி சர்பிளஸ் லேண்ட் என்று இருப்பதிலே ஒரு பகுதியை எடுத்து தொழிலாளர்களுக்குக் கொடுக்க வேண்டும். அவர்கள் வீடு கட்டிக் கொள்வதற்காக என்று சொன்னால், கவர்ன்மெண்ட்டிலே அதற்கு அனுமதி கொடுக்க முடியாது என்று சொல்வது நியாயமாகுமா? அவர்கள் வெளியாருக்கு விற்கப் போவதில்லை. அங்கே வேலை செய்யும் தொழிலாளர்களுக்கே கொடுத்து அவர்கள் வீடு கட்டிக் கொள்ள அனுமதிப்பது நியாய மான கோரிக்கை தான். அதை அரசாங்கம் கவனிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அடுத்தபடியாக, சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனிலே நம்முடைய அரசு ஒரு கொள்கை எடுத்திருப்பதாகத் தெரிகிறது. இப்போது இருக்கின்ற சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் கடைகளை எல்லாம் மூடிவிட்டு, அவைகளை கோவாப்பரேட்டிவ் சொசைட்டியின் மூலமாக நடத்தப்படும் கடைகளாக அமைக்க வேண்டும் என்று கவர்ன்மெண்ட் கொள்கை வைத்திருப்பதாகத் தெரிகிறது. அதனால் 5 ஆயிரம் பேர்களுக்கு வேலை போகும். அவர்கள் 5 வருஷம் 10 வருஷம் சர்வீஸ் போட்டு வேலை செய்தாகிவிட்டது. இப்போது திடீரென்று கடையை மூடினால் அவர்கள் எங்கே போவார்கள். நீங்கள் சொல்லலாம். " They will be paid compensation. எனவே மேற்கொண்டு கடைகளை புதியதாகத் திறப்பதாக இருந்தால்—நிறையக் கடைகள் எப்படியும் வேண்டும் நமக்கு. ஆகவே நான் சொல்ல விரும்புவது என்னவென்றால், புதியதாகக் கடைகளை ஓபன் பண்ணினால்—அப்போது அவற்றை கோவாப்பிரேட்டிவ் சொசைட்டிகளாகத் திறக்கும்படி வைத்துக் கொள்ளலாம். எப்படியும் நம்முடைய நீண்டகாலத் திட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டும் என்று சொன்னால், அரசாங்கமே கொள்முதல் பண்ணக்கூடிய ஒரு முறை ஒருநாள் வந்துதான் தீரும். அதை மாற்ற முடியாது,





நிச்சயமாக வரும். எனவே இருக்கின்ற சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் கடைகளை மூடுவதைவிட, அவற்றை அப்படியே வைத்துக் கொண்டு, புதியதாகத் திறக்கப்பட வேண்டிய கடைகளை கோவாப்பிரேட்டிவ் சொசைட்டிக்குக் கொடுத்து விடுங்கள். அப்படிச் செய்தால் அவர்களுக்கும் வேலை போகாது. 5 ஆயிரம் பேர்களுக்கு வேலை இல்லாமல் போனால் எவ்வளவு நஷ்டம், என்ன கொடுமை என்பதை நினைத்துப் பாருங்கள். இப்போது சுப்ரீம் கோர்ட்டிலே கேஸ் பெண்டிங்காக இருக்கின்றது. இருந்தாலும் அரசாங்கம் அவர்களை எல்லாம் அழைத்துப் பேசி ஒரு நல்ல முடிவிற்கு வரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக கிராமத் தொழிலாளர்கள். இப்போது டவுன் களில் நாம் தொழிலாளர்களை ஆர்கனைஸ் பண்ணுகிறோம். நிறையக் கூலி வாங்குகிறார்கள். கிராமப்புறங்களில் உள்ள கைவினைஞர்கள் விவசாயிகள் எல்லாம் குறைந்த கூலியைப் பெறுகிறார்கள். ஆகவே கிராமத் தொழிலாளர்களுக்கு தொழிற் சங்கம் அமைத்து அவர்களுக்குப் பாதுகாப்பு கொடுப்பதற்கு அரசாங்கம் முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து தொழிலாளர் நல மானியத்தைப் பொறுத்தவரையில் வரக்கூடிய காலத்திலாவது புதிய கொள்கையை அமைச்சர் அவர்கள் வகுக்க வேண்டும். எப்படி போனஸ் கொடுப்பது, எப்படி ஸ்ட்ரைக்கை தடுப்பது, எப்படி தொழில் அமைதியை உருவாக்குவது என்ற வகையில் கொள்கையை உருவாக்க வேண்டு மென்று கேட்டு, அப்படி உருவாக்குவது தான் நல்லது என்று தெரிவித்து என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, தொழிலாளர் நலம், தொழிற்சாலைகள் பற்றிய மானியக் கோரிக்கை மீது மாண்புமிகு உறுப்பினர்கள் காலையிலிருந்து தங்களுடைய கருத்துக்களை வழங்கியிருக் கிறார்கள். குறிப்பாக பல்வேறு தொழிற்சங்கங்களில் நீண்ட நாட்கள் அனுபவம் பெற்ற தொழிற்சங்கத் தலைவர்கள் இந்த அவையில் இடம் பெற்று, அவர்கள் இந்த விவாதத்தில் கலந்து கொண்டு கருத்துக்களை வழங்கி இருப்பது மிக மிகப் பாராட்டு

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1986 மே 7

தலுக்குரிய ஒன்றாகும். ஆகவே தொழிற்சங்கங்களில் எல்லாம் பல ஆண்டுக்காலமாக ஈடுபட்டு வந்தவர்கள் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களாக இடம்பெறுகிற நல்ல வாய்ப்பைப் பெற்று, அந்த அனுபவத்தின் அடிப்படையில் இங்கே பல்வேறு சிறிய கருத்துக்களை மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் இங்கே எடுத்து வைத்திருக்கிறார்கள். கர்மத்திற்கு பாத்தியப்பட்டவர்கள் தான் கடைசிவரையில் இருப்பவர்கள் என்று பழமொழி உண்டு. அந்தவகையில் தொழிலாளர் நலத்தில் அக்கறை கொண்டு, அந்த கர்மத்திற்கு பாத்தியப்பட்டவர்கள் கடைசிவரையில் இருந்தாவது இந்த விவாதத்தை முடிக்கலாமென்று பெருந்தன்மையோடு வருகை தந்ததற்கு உறுப்பினர்கள் அத்தனைபேருக்கும் என்னுடைய நன்றியை தனியாகத் தெரிவித்துக்கொள்வதில் தனிப்பூரிப்பும், பெருமையும் கொள்கிறேன்.

ஆகவே தொழிலாளர் நலம், தொழிற்சாலை கண்காணிப்பு பற்றிய பல்வேறு கருத்துக்களை மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். இந்த அரசைப் பொறுத்தவரையிலும் தொழிலாளர்களுடைய நலன்கள் பல வகையிலும் காக்கப்பட வேண்டுமென்ற நோக்கத்தின் அடிப்படையில் பல்வேறு முயற்சிகளை அடுத்தடுத்து எடுத்து அவைகள் நிறைவேற்றப் பெறுவதில் தனி அக்கறை, ஆர்வம் காட்டி வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் நன்றாக அறிவார்கள். இந்தத் தொழிலாளர் நலத் துறை ஆற்றி வருகிற பணிகளை மாண்புமிகு உறுப்பினர்கள் சிறப்பாகப் பாராட்டி இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் செங்காளியப்பன் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் ரெங்கசாமி அவர்களும் பொறுப்புணர்ச்சியுடன் எந்தவிதமான காழ்ப்புணர்ச்சிக்கும் இடம் இல்லாமல் எந்தவிதமான கசப்புணர்ச்சிக்கும் இடமில்லாமல் தொழிற்சங்கங்களின் தொழிலாளர்களின் நலன்களைப் பற்றி கருத்துக்களை எடுத்துத் தெரிவித்து இந்தத் துறையின் மூலமாக மேலும் ஆற்ற வேண்டிய பல்வேறு பணிகளைப் பற்றியும் சிறப்பாக எடுத்துச் சொன்னார்கள். மற்றவர்கள் தங்கள் தங்களுடைய கருத்துக்களுக்கேற்ப, நோக்கத்திற்கிணங்க கருத்துக்களை வழங்கி இருக்கிறார்கள்.



1986 மே 7] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

ஆகவே தொழிற்சாலைகள் வளர வேண்டும், தொழிற்சாலைகளுக்கு ஊக்கம் தரவேண்டும். அவற்றின் மூலமாக பொருளாதார வளர்ச்சியைப் பெருக்க வேண்டும். அதன்மூலம் பொருளாதார ஏற்றம் பெற்று வாழ்க்கைத் தரம் உயர்த்தப்பட வேண்டுமென்ற கருத்துக்களின் அடிப்படையில் தான் நாம் தொழிற்சாலைகளுக்கு ஊக்கம் தருவதற்கு, தொழில் துறையை சிறப்பானதாகச் செய்து, சிறுதொழில், நடுத்தரத் தொழில், பெரும் தொழில் ஆகியவைகளுக்கு ஊக்கம் தருவதற்கென்று தனித் துறையாக நடத்திக் கொண்டு வருகிறோம். ஆகவே தொழிலாளர்கள் மீது அக்கறை கொண்டு இருப்பதன் காரணமாகத்தான், தொழிலாளர்கள் நலனை தனியாகக் கவனிக்க வேண்டுமென்று கருதி, தொழிலாளர் நலனைப் பற்றி கவனிக்க இந்தத் தனித் துறை அமைந்திருக்கிறது. ஆகவே இதிலேதான் நாம் அதிக நாட்டம் செலுத்தி வருகிறோம் என்பதையும் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

(மாலை 5-50)

சாதாரணமாக இந்தச் சொற்களைப் பார்த்தாலே மிகத் தெளிவாகத் தெரிந்து கொள்ளலாம். தொழிலை ஆளுபவன்தான் தொழிலாளி, முதலை ஆளுபவன்தான் முதலாளி, எழுத்தை ஆளுபவன் எழுத்தாளன். பேச்சை ஆளுபவன் பேச்சாளன். ஆகவே எழுத்தை எவன் ஒருவன் ஆளுகிறானோ அவன்தான் எழுத்தாளன் ஆவான். ஆகவே எழுதுகிறவர்கள் எல்லாம் எழுத்தாளர்களாக ஆகமாட்டார்கள். எழுதுகிறவர்கள் எல்லாம் எழுத்தர்கள் என்று தான் பெயர் பெறுவார்களே தவிர, எழுத்தாளர்கள் என்ற பெயரைப் பெறமாட்டார்கள். ஆள வேண்டும். அந்த வகையிலே இங்கே பேசுகிறவர்கள் எல்லாம் பேச்சர்கள் என்றுதான் பெயர் பெறுவார்களே தவிர, பேச்சாளர்கள் என்று பெயர் பெறமாட்டார்கள். அந்த மாதிரி தொழிலை ஆளுகின்றவர்களாக இருப்பதன் காரணமாகத்தான் அவர்கள் தொழிலாளி என்றும், முதலை ஆளுகின்ற பொறுப்பு இருப்பதன் காரணமாகத்தான் முதலாளி என்றும் நாம் கூறுகிறோம்.

எனவே தொழிலாளர்களுடைய நலன் குறித்துத்தான் இந்தத் துறை இருக்கிறது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்கள் மிக நன்றாக உணர வேண்டும். அரசினுடைய கொள்கை, அணுகுமுறை மற்றவற்றினுடைய அடிப்படையிலே காணுகிறபோது, சாதாரணமாக தொழிற்சாலைகள் காப்பாற்றப்பட வேண்டும் என்ற நோக்கத்தையும், தொழிலாளர்களுடைய நலன்கள் பேணப்பட வேண்டும் என்ற நோக்கத்தையும் அந்த அடிப்படையிலே இயற்றப்பட்ட சட்டங்கள் எல்லாம் முறைப்படி நிறைவேற்றப்பட வேண்டும், அதன் மூலமாக ஏற்படக்கூடிய நன்மைகள், தொழிலாளர்களுக்குக் கிட்ட வேண்டும் என்ற தன்மையைக் கொண்டுதான் நாம் பணியாற்றி வருகிறோம். அந்த வகையிலே நாம் பல்வேறு தன்மைகளில் இருக்கிறோம். தொழிற்சாலைகள் காப்பாற்றப்படவேண்டும் என்று பல்வேறு நடைமுறைகளை நாம் எடுத்துக் கொண்டு வருகிறோம். அந்த அடிப்படையிலேதான் மாண்புமிகு உறுப்பினர் ரங்கசாமி அவர்கள் சில கருத்துக்களைச் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் செங்காளியப்பன் அவர்கள் பல கருத்துக்களைச் சொன்னார்கள். நாம் முதலாளிகளை ஆதரிக்கவேண்டிய அவசியம் இல்லை, தேவையும் இல்லை. தொழிலாளர்களை ஆதரிப்பதுதான் அரசாங்கத்தினுடைய நோக்கம். ஆதரிக்கப்படவேண்டியவர்கள் இவர்கள்தான். ஆதரிக்கப்பட வேண்டிய நிலையில் இருப்பவர்களும் இவர்கள்தான். ஆதரிக்கவேண்டிய கட்டாயத்திற்கு ஆளாகின்றவர்களும் இவர்கள்தான். ஆகவே எந்த ஒரு முதலாளியையும் ஆதரிக்கவேண்டிய அவசியத்திலே நாம் இல்லை. யாரையும் காப்பாற்றவேண்டிய அவசியத்திலே நாம் இல்லை. எந்த ஒரு முதலாளியும் தனியாக விடப்பட்டாலும் கூட, 7 தலைமுறைக்கு தங்களைப் பார்த்துக் கொள்கிற அளவிற்குத்தான் ஒவ்வொரு முதலாளியும் இருக்கிறார்களே தவிர, அவர்களை தனிப்பட்ட முறையில் காப்பாற்ற வேண்டிய அவசியமோ, பாதுகாக்க வேண்டிய அவசியமோ அரசுக்கும் மற்றவர்களுக்கும் இல்லை.

ஆனால் தொழிலாளர்கள் காப்பாற்றப்படவேண்டும் என்ற நோக்கத்தை அடிப்படையாக வைத்துக்கொண்டுவருகிறபோது, உடைமைக்கு அதிகமாக மதிப்பு அளிக்கிறோமா, உழைப்புக்கு அதிகமாக மதிப்பு அளிக்கிறோமா அல்லது என்று வருகிறபோது, நாம் உடைமையை விட உழைப்புக்கு அதிகமாக

மதிப்பைத் தருகிறோம். உடைமை சேர்கின்ற ஒன்று. உழைப்பு ஒவ்வொரு மனிதனும் தருகின்ற ஒன்று என்று வருகின்றபோது, அந்த உழைப்பைத் தருகின்ற தொழிலாளர்களுக்கு அதிகமான மதிப்பு தந்து அவர்களுடைய நலன் பேணப்படவேண்டும் என்ற முறையில் நாம் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறோம். அந்த வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் எடுத்துத் தெரிவித்ததற்கு இணங்க, தொழிற்சாலைகளைக் காப்பாற்றினால்தான் தொழிலாளர்களுடைய வாழ்வு நிலைக்கும் என்ற காரணத்தால், தொழிலாளர்களுடைய வாழ்வு, தொழிற்சாலைகளில் நிலைத்து நிற்பதையும், தொழிற்சாலைகள் இயங்குவதையும் பொறுத்து இருக்கிறது. தொழிற்சாலைகள் நடைபெறாத சூழ்நிலை ஏற்பட்டால்—அது வேலை நிறுத்தத்தின் மூலமாக ஏற்பட்டாலும் சரி, அல்லது கதவடைப்பின் மூலமாக ஏற்பட்டாலும் சரி—தொழிற்சாலைகள் இயங்காத ஒரு நிலைமை ஏற்பட்டால், அதிலே நேரடியாகப் பாதிக்கப்படுபவர்கள், மிகக் கடுமையாகப் பாதிக்கப்படுபவர்கள் தொழிலாளர்களாகத்தான் இருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால் சில பல ஆலைகளோ, அல்லது தொழிற்சாலைகளோ, மற்றவைகளோ மூடப்படுகிற சூழ்நிலை ஏற்படுகிறபோது, முதலாளிகளுக்கு லாபமாகத்தான் அந்த மூடப்படுகின்ற தன்மைகள் அமைகின்ற இந்த நிலைமைகளை நாம் கோவை போன்ற இடங்களில் இருப்பதைப் பார்க்கிறோம். நீண்ட பெரும் காலமாக தங்களிடத்திலே இருக்கின்ற, தேங்கி இருக்கின்ற சரக்குகள் எல்லாம் விற்பனை ஆவதற்கு அந்த இடைக்காலம் பயன்படும் என்று சில பல இடங்களிலே அவர்கள் நினைப்பதற்குங்கூடக் காரணமாக அமைந்து விடுகிறது. மாண்புமிகு உறுப்பினர் ரங்கசாமி அவர்கள் எடுத்துச் சொல்லியதைப் போல, வேலை நிறுத்தம் செய்கின்றபோது கூட, அதிலே நியாயத் தன்மையுடைய அடிப்படையிலே செய்கின்ற ஒரு நிலைமை ஏற்படுமானால், அதன் மூலமாக நல்ல விளைவுகள் ஏற்படக்கூடும்.

ஆகவே கூடுமானவரையில், நிதானத்தோடு சிந்தித்து, இறுதிக்கட்டமாக வேறு வழி இல்லாத நிலைமை வருகிறபோது அதைச் செய்கின்ற ஒரு தன்மை ஏற்படுமானால், அதனால் அதிகமான இழப்புகளும், அதனால் கஷ்டநஷ்டங்களும் வந்து,

தாக்கப்படுகின்ற சூழ்நிலை ஏற்படுகிற அளவிற்கு அதைத் தவிர்ப்பதற்கு வழிவகை ஏற்படக் கூடும். அவர்கள் சொன்னது மாதிரி மாச்சரியத்தின் காரணமாகவோ, தனிப்பட்ட மாச்சரிய உணர்வின் காரணமாகவோ, அல்லது தங்களுடைய ஆதிக்கத்தை நிலைநாட்டவேண்டும் என்ற எண்ணத்தினுடைய காரண மாகவோ, அல்லது ஏதோ ஒரு காரணத்திற்காக ஒரு தவறு செய்வதன் காரணமாகவோ ஒருசிலரை நீக்கிவிட்டார்கள் என்பதற்காக, அவர்களுக்குப் பரிந்து பேசி, அந்தத் தொழிற்சாலைகளில் இருக்கின்ற அத்தனை பேர்களையும் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுத்துவதன் மூலமாக, பலருடைய வாழ்வைப் பாழ்படுத்துகிற சூழ்நிலை ஏற்பட்டு விடுகிறது. இதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் ரங்கசாமி அவர்களும் குறிப்பிட்டார்கள். ஆகவே ஒரு நியாயத்தினுடைய அடிப்படையிலே வேலைநிறுத்தம் அமைவது என்பதை சட்டமே ஒப்புக்கொண்டு இருக்கிறது. அந்த வகையிலே கூடுமான வரையில் அமையவேண்டும் என்பதை நாம் உள்ளபடியே அறிவித்துக் கொண்டு வருகிறோம். அந்தவகையிலேதான் அவர்களே சுட்டிக் காட்டியமாதிரி 1985-ஆவது ஆண்டு 35 லட்சத்து 5 ஆயிரத்து 220 நாட்கள் இங்கே மனித உழைப்பு நாட்கள் வீணாகி இருக்கின்றன என்கிற உண்மையை அவர்கள் சொன்னார்கள். அதற்கு முக்கியமான காரணமாக இருக்கின்ற அளவிலே அமைந்து இருப்பது சம்பள உயர்வு கோரி சென்ற ஆண்டு, 1985-ஆவது ஆண்டு ஜூலை திங்கள் 16 ஆம் நாளிலிருந்து 1985-ஆவது ஆண்டு ஜூலைத் திங்கள் 25-ஆவது நாள் வரை சம்பள உயர்வு கோரியும் பிறகு போனஸ் கோரி 1985-ஆவது ஆண்டு நவம்பர் மாதம் 9-ஆம் நாள் முதல் 1985-ஆவது ஆண்டு டிசம்பர் 14-ஆம் நாள் வரையிலும், ஆக இருமுறை நடந்த பஞ்சாலைத் தொழிலாளர்களின் வேலைநிறுத்தம் காரணமாக 19 லட்சம் மனித உழைப்பு நாட்கள் இந்த இரண்டு காரணங் களினாலே வீணாகி இருக்கின்றன. இதை நீக்கிவிட்டுப் பார்ப்போமானால் 1985 ஆம் ஆண்டு 16 லட்சம் மனித உழைப்பு நாட்களை இழந்து இருக்கிறோம். அவர்கள் சொல்லியதுமாதிரி அப்படிப்பட்ட இழப்புகூட ஏற்படாத அளவுக்கு ஒரு சூழ்நிலை உருவாகவேண்டும். உருவாக்குகிற அளவுக்கு அத்தனை





பேருடைய ஒத்துழைப்பும் வேண்டும்மென்பதுதான் மிக முக்கியம். ஆக, தமிழகத்தைப் பொறுத்தவரையில 1985-ஆவது ஆண்டு பணிபுரிபவர்களுடைய எண்ணிக்கை 9 லட்சத்து 64 ஆயிரத்து 200 என்கின்ற நிலையில் அவர்களுடைய வேலைவாய்ப்பு நாட்கள் 29 கோடியே 31 லட்சத்து 39 ஆயிரத்து 560 ஆக இருக்கின்றது. ஆக, இழப்பு நாட்களைக் கணக்கிட்டுப் பார்ப்போமேயானால், பர்சென்டேஜ் என்று கணக்கிடுவோமேயானால் 1.1 சதவிகிதம் வருகிறது என்றாலும் கூட, அதையே தனியாக நாட்கள் என்று கணக்கிடும்போது அதனால் ஏற்பட்ட இழப்புகள் மற்றவைகளைக கருதுகின்றபோது அது அதிகமாகத்தான் இருக்கிறது.

மற்றொரு கருத்தையும் இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள பலரும் எடுத்துத் தெரிவித்ததற்கு இணங்க இங்கே இந்தத் தொழிலாளர் நலத் துறை பல்வேறு சிறப்புக்குரிய சூழ்நிலைகளை உருவாக்க வேண்டுமென்ற நோக்கத்தோடுதான் இயங்கிக் கொண்டு வருகிறது. இது ஒரு நிர்வாகத்துறையாகத்தான் அமைந்து இருக்கிறது. ஆகவே தொழிலாளர்களிடத்திலே ஒரு நலமான சூழ்நிலையையும், அமைதிச் சூழ்நிலையையும் ஏற்படுத்த வேண்டுமென்ற நோக்கம்தான். ஆக, தொழிலாளர்கள் சட்டப்படி உரிமைகளைப் பெறச்செய்ய வேண்டுமென்பதும், பெறச் செய்வதற்கான வழிமுறைகளைக் காணவேண்டுமென்பதும் இந்தத் தொழிலாளர் நலத்துறையினுடைய நோக்கமாகும். தொழி லாளர்கள் தங்களுடைய கடமைகளை செவ்வனே செய்வதற்கான சூழ்நிலைகளை உருவாக்கித் தருவதும் இந்தத் துறையினுடைய மிக முக்கியமான நோக்கமாகும். தொழிலாளர்கள் தொழில் உரிமையாளர்களிடையே நல்ல உறவை நிலவச் செய்யவேண்டும். நல்லுறவு நிலவச் செய்யக்கூடிய நிலைமைகள் நீடிக்குமேயானால், கூடுதலாகத் தொழில்கள் நடத்தவேண்டுமென்ற ஆர்வம் பலருக்கு ஏற்பட்டு புதிய புதிய தொழில்கள் வருவதற்கான வாய்ப்பு வசதிகள் ஏற்படும். புதிய புதிய தொழில்கள் வருவதற் கான வாய்ப்புகள் ஏற்படுகின்ற சூழ்நிலையிலே வேலை வாய்ப்புகள் ஏற்படுவதற்கான தன்மைகள் ஏற்படக்கூடும். அப்படிப்பட்ட ஒரு 'அட்மாஸ்பியர்', சுகாதாரச் சூழ்நிலை தமிழகத்தைப் பொறுத்தவரை ஏற்படவேண்டும் என்றால், அந்த வகையிலே தொழிலாளர்களுக்கும், அரசுக்கும். தொழில்களை

நடத்துகின்றவர்களுக்கும் ஒரு இணக்கமான ஒரு நல்லுறவான சூழ்நிலை ஏற்படவேண்டும். அந்தச் சூழ்நிலையை சிறப்பாக, செம்மையாக அமைக்க வேண்டுமென்பதுதான் இந்த அரசினுடைய முக்கியமான நோக்கமாகும். வேலைநிறுத்தம், கதவடைப்பு ஏற்படாமல் தவிர்ப்பதற்கான சூழ்நிலைகளை உருவாக்கவேண்டுமென்பதுதான் இந்த அரசினுடைய முக்கிய நோக்கமாகும். ஊதியம், படி, வேலைப்பளு, வேலை உயர்வு, வேலை நேரம், போனஸ், ஊக்கத்தொகை போன்றவைகளை நிர்ணயிப்பதில் உறுதுணையாக இருப்பதும், இருக்கவேண்டியதும் இந்தத் துறையினுடைய முக்கியக் கடமையாக இருக்கின்றது.

தொழிற்தகராறுகளை பேச்சுவார்த்தைகள் மூலம் முறைப்படி தீர்த்துவைக்கவேண்டுமென்று இந்தத் துறை எண்ணிவருகிறது. தொழிற்சட்டங்களை நடைமுறைப்படுத்துவதும் மீறுவோர்மீது நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்பதும் இந்தத் துறையின் மூலம் செய்யவேண்டுமென்று இந்த அரசு எண்ணுகிறது. தொழிலாளர் நலன் பேணப்படவேண்டும். தொழிலாளர்களுடைய பணி நிலைமைகளையெல்லாம் ஒழுங்குபடுத்தவும் வேண்டும். தொழில் உலகில் அமைதி நிலவச் செய்ய தொழிலாளர்கள்-உரிமையாளர்களிடையே நல்லுறவு நீடிக்கச்செய்ய, தொழில் வளர்ச்சிக்கான சூழ்நிலைகளை ஏற்படுத்தி உற்பத்தித் திறனைப் பெருக்க தூண்டுதலாகவும் இருக்கவேண்டும். ஆக, அந்தவகையில் இதுபோன்ற பணிகளை நிறைவேற்றவே இந்தத் தொழிலாளர் நலத்துறை பாடுபட்டுவருகிறது. ஆகவே, தொழிற்தகராறுகளை கூடுமானவரையில் சமரச உடன்பாட்டில் தீர்க்கவேண்டும் என்ற கொள்கையைத்தான் நாம் அதிகமாக வற்புறுத்தி வருகின்றோம். அவை சட்டப்படி நீதிமன்றம், அல்லது தீர்ப்பு ஆயத்தின் மூலம் தீர்க்கப்படவேண்டும் என்பதைவிட சமரசத்தின்மூலமாக ஒரு முடிவுக்கு, உடன்பாட்டுக்கு வருவது மிக எளிதாகவும் விரைவாகவும், காலத் தாழ்வுக்கு இடம் இல்லாத வகையிலேயும், ஏங்கித் தவிக்க வேண்டிய நிலை ஏற்படாமலும் இருக்கும். கூடுமானவரையில் அப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்பட வேண்டும். இரண்டு வகையிலேதான் நாம் பிரச்சனைகளைத் தீர்க்க முடியும்.



(மாலை 6-00)

ஒன்று சமரச பேச்சுவார்த்தையின் மூலமாக உடன்பாடு காண முடியும். மற்றொன்று நீதி மன்றத்தின் மூலமாக தீர்ப்பு ஆயத்தின் மூலமாக வருகின்ற தீர்ப்பின் மூலமாகத்தான் தீர்க்கவேண்டும். நீதிமன்றம், அல்லது தீர்ப்பு ஆயம் என்று போகின்றபோது காலத்தாழ்வு ஏற்படுவதற்கும், அதன் காரணமாக பல்வேறு கேடுகள் ஏற்படுவதற்கும் காரணமாகிவிடுகின்றன. கூடுமானவரையில் சமரசத்தின் மூலமாகவும், பேச்சுவார்த்தைகளின் மூலமாகவும் தீர்க்கப்படவேண்டுமென்ற கொள்கையைத்தான் இந்த அரசு வற்புறுத்தி வருகிறது. இந்த நிலையைத் தான் மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் எடுத்துச் சொன்னார்கள். முக்கியமாக மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் செங்காளியப்பனும், ரெங்கசாமியும் எடுத்துச் சொன்னார்கள். அந்த எண்ணம் எனக்கும் இந்தத் தொழிலாளர் நலத் துறையை ஏற்றுக்கொண்டதிலிருந்து இருக்கிறது. தொழிலாளர் நலமும், இந்தத் தொழிற்சாலைகளைக் கண்காணிக்கின்ற தன்மையும் ஒரே துறையின் கீழ் இருந்து வருகிறது. ஒரு ஆணையருடைய கண்காணிப்பின் கீழ் இருந்து வருகிறது. ஆகவே சிலபேர் இரண்டையும் தனித்தனியாகப் பிரிக்கவேண்டும் என்ற கோரிக்கையினைச் சொன்னார்கள். தொழிலாளர் நலத்தைத் தனியாகவும், அதைக் கண்காணிப்பதைத் தனியாகவும் இரண்டு விங்காக, 2 பிரிவுகளாகப் பிரிக்கவேண்டும் என்று சொன்னார்கள். இப்போது ஒரு ஆணையர் தலைமையில் அது இயங்கி வருகிறது. தனித்தனியாகப் பிரிக்கவேண்டும் என்ற கருத்தை மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லியது போல் உள்ளபடியே அதைப் பிரிப்பதால் அதிகப் பலன் ஏற்படாது என்பதுதான் என்னுடைய எண்ணம் ஆகும். ஏன் என்று சொன்னால், தொழிற்சாலைகளை ஊக்குவிக்க, தொழிற்சாலைகளை உருவாக்க அதற்கு ஆக்கம் பயக்கத்தான் தொழில் துறை பயன்படும். அதற்குக் கடன் வாங்கித் தர, ஊக்கம் தர, லைசன்ஸ் வாங்கித்தர, இண்டண்டு வாங்கித்தர, அதற்கு உதவி செய்வதோடு நின்று விடும்.

ஆனால் தொழிற்சாலை எப்படி இயங்குகின்றது, சட்டப்படி இயங்குகின்றதா என்பதை எல்லாம் கண்காணிக்கின்ற அந்தக் கையப் பொறுப்பு முழுவதும் இந்த கண்காணிக்கின்ற

குழுவுக்கு வருகிறது. அதைக் கண்காணிக்கின்றவர்கள் இடத்திலே தான் அந்தத் தொழிலாளர்கள் நலம் பற்றி இருக்குமானால் அப்போது தான் அந்தத் தொழிற்சாலைகளை நடத்துகிறவர்கள் அஞ்சுவார்களே தவிர அதைத் தனித்தனியாகப் பிரித்து விடுவோமானால் இப்போதே மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் எடுத்துச் சொல்லியது போல் இப்போதே தொழிற்சாலையை நடத்துகின்ற முதலாளிகள் ஆணையரையோ, தொழில் துறையினுடைய அதிகாரிகளையோ, தொழிற்சங்கத் தலைவர்களையோ மதிக்கவில்லை என்றும், ஆணை இட்டால் கேட்க மறுக்கிறார்கள் என்றும், அவர்கள் வாதாட கூப்பிட்டாலும் வர மறுக்கிறார்கள் என்றும் பேச்சுவார்த்தைக்கு வந்தாலும் அலட்சியப்படுத்துகிறார்கள் என்றும் சொல்லுகிற போது தனித்தனியாகப் பிரித்து விடுவோமானால், இப்போது இருக்கின்ற மதிப்பு இல்லாமல், இப்போது இருக்கின்ற சூழ்நிலை ஏற்படாமல் போய்விடும். ஆகவே, இந்தக் காரணங்கள் கொண்டு பிரிக்கக் கூடாது என்பது தான். இரண்டும் ஒன்றாக இருந்தால் தான் நல்லது. இல்லை விட்டால் தொழிற்சாலையைக் கண்காணிக்கின்றவர்கள் போய் அது சரியாக இருக்கின்றதா? வாளி சரியாக இருக்கின்றதா? தீ சட்டிகளை தனியாக சரியாக வைத்து இருக்கிறார்களா? சரியாக இருக்கிறதா? இது சரியாக இருக்கிறதா என்று பார்த்து விட்டு வந்து விடுவார்கள். ஆனால் தொழிலாளர் நலத்தைப் பற்றி தனியாகக் கவனிக்கும் போது—இரண்டையும் ஒன்றாக ஆக்கும் போது தான் பொறுப்பு அதிகமாக வரும். இரண்டும் ஒன்றாக இருக்கவேண்டும், இப்போது இருக்கிற நிலையே நீடிக்க வேண்டும் என்பது தான் என்னைப் பொறுத்தவரையில் கருத்து இருக்கிறது. அந்தக் கருத்து தான் நடைமுறைப்படுத்தப்படும் என்பதையும், அரசினுடைய நோக்கம் அதுதான் என்பதையும் திட்டவட்டமாக தெளிவாக எடுத்துக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

4-வது ஊதியக் குழு அப்படி ஒரு கருத்தைச் சொன்னாலும் கூட நடைமுறைக்கு அந்தக் கருத்து சரியாக வராது. சிலபல மாநிலங்களில் அதைச் செயல்படுத்திப் பார்த்தார்கள். அந்த மாநிலங்களின் அனுபவத்தை வைத்துப் பார்க்கும்போது,





அங்கிருந்து வருகிற அதிகாரிகளைக் கேட்கும்போது ஏற்கனவே இருந்த அளவில் கூட இப்போது தங்களுடைய ஆணையை நிறை வேற்ற முடியவில்லை என்றும், முதலாளிகள் கேட்க மறுக்கி றார்கள் என்றும், முன்பு இருந்த மரியாதை கூட இப்போது கிடையாது என்றும் சொல்லுகிறார்கள். அத்தகைய நிலையைப் பார்க்கும்போது நாம் முன்னெச்சரிக்கையாக இருந்து அதைப் பிரிக்கவேண்டிய அவசியம் இல்லை என்பதை நாம் நன்றாக உணர்கிறோம்.

மற்றும் ஒரு கருத்தை மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். ஆக இந்த ஆணை யருக்கும், இந்த அதிகாரிகளுக்கும் இப்போது இருக்கின்ற அதிகாரத்தை விடக் கூடுதலான அதிகாரத்தைத் தந்து இவர்கள் மதிக்கத் தக்க அளவுக்கு அது தொழிற்சங்கம் ஆனாலும் சரி, தொழிலாளர்கள் ஆனாலும் சரி, முதலாளிகள் ஆனாலும் சரி, மதிக்கத்தக்க அளவுக்கு கூடுதலான அதிகாரத்தைத் தந்தால் தான் பணிகள் நிறைவேறும் என்று எடுத்துச் சொன்னார்கள். அந்தக் கருத்தை அமைச்சர் என்ற முறையில் நான் ஏற்றுக்கொள் கிறேன். அதற்கு எந்த எந்த வகையில் அந்த அதிகாரத்தை அதிகமாக ஆக்குவதன் மூலமாக இந்தப் பணிகளை, சட்டத்தை நிறைவேற்றவும், நடைமுறைப்படுத்தவும் வாய்ப்பு வசதிகள் ஏற்படுத்தித் தர இயலுமோ அதை ஏற்படுத்தித் தருவதற்கு இந்தத் துறை முயலும் என்பதையும் இந்த வாய்ப்பில் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இந்தத் துறை சீராகவும், செம்மையாகவும் நடைபெற வேண்டுமென்ற முறையிலே தான் பல்வேறு சட்டங்களை நாம் முறைப்படி அவ்வப்போது நிறை வேற்றிக் கொண்டு வருகிறோம். அந்த முறையிலே தான் 1981 ஆம் ஆண்டு தொழிலாளர்களுக்கு நிலையான தகுதியை அளிக்கின்ற சட்டத்தை இங்கே நிறைவேற்றினோம். இந்தச் சட்டம் தொழிலாளர்களுக்கு ஒரு நிலையான தகுதியை அளிக்க உறுதி செய்கிறது.

1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு உரைப்பு ஊதியச் சட்டத்தை நாம் நிறைவேற்றினோம். தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்ட தொழிலாளர்கள் அந்த உரைப்பு ஊதியத்தைப் பெறுவதற்கு இந்தச் சட்டம் வழிவகை செய்கிறது.

தரப்பினரிடையே பேச்சுவார்த்தை வருகின்றபோது கூட ... எந்தப் பகுதியிலும் இல்லாமல் உட்கார்ந்து ஒரு சமரச மு... வந்து, தொழிற்சாலைகள் எப்படி இயங்க வேண்டும், அதன்மூல் வேலைவாய்ப்பு இழப்பவர்கள், வேலை வாய்ப்பை இழப்பதற்கு இடமில்லாத வகையில் வேலையைப் பெற வேண்டுமென்ற நோக்கத்தை வைத்து, இருக்கின்ற சூழ்நிலையை இரு சாராரும் உணர்ந்து அதற்கான வகைகளில் ஈடுபடுவார்களேயானால், அதற்கான சூழ்நிலை ஏற்படும். அப்படிப்பட்ட சூழ்நிலை இருக்கின்ற மேற்கு வங்கத்தைப் பொறுத்தவரையில், அங்கே கணக்கை எடுத்துப்பார்ப்போமேயானால், அங்கே அனுபவத்தின் அடிப்படையில், பல ஆண்டுகளாக முதலமைச்சராக இருக்கின்ற மாண்புமிகு ஜோதிபாசு அவர்கள், பிரச்சினைகளையெல்லாம் அறிந்து, இப்போது எப்படிப்பட்ட நிலைமைக்கு வந்திருக்கிறார்கள் என்பதை 4—3—1986 அன்று ஒரு செய்தி, ஹிந்து இதழில் வந்திருக்கிறது. 3—3—1986 அன்று மேற்கு வங்கத்தில் ராய்கஞ்ச் என்கின்ற ஒரு ஊரில் ரூ. 10 கோடி மதிப்பீட்டுச் செலவில் அரசுக்குச் சொந்தமான ஒரு நூற்பாலையைத் திறந்து வைக்கின்ற விழாவில் பேசுகின்றபோது, ஜோதி பாசு அவர்கள் தெளிவாகப் பேசியிருக்கிறார்கள். அவர்கள் அனுபவத்தின் அடிப்படையில் இந்த நிலைக்கு வந்திருக்கிறார்கள் என்பதை அவர் பேச்சு தெளிவாக்குகிறது. 4—3—1986 ஹிந்து இதழில் இது வெளிவந்திருக்கிறது.

(மாலை 6-10)

The West Bengal Chief Minister, Mr. Jyothi Basu has warned tha irresponsible trade unionism affecting the growth of the industry wi not be tolerated and said workers should take equal interest with th Government in the development of the respective units and areas'.

என்று அவர்கள் அனுபவத்தின் அடிப்படையில் எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். டிரேட் யூனியன்கள் இருக்... வேண்டும். தொழிற்சங்கங்கள் இருக்கவேண்டும். ஆனால் அவை பொறுப்பற்ற முறையில் அரசாங்கத்தோடு ஒத்துழைக்காது நெருக்கடி ஏற்படுத்துகிறபோது தொழில்கள் பாதிக்கப்படும். தொழிற்சாலைகள் பாதிக்கப்பட்டால் அதனால் மாநிலத்தின் வளர்ச்சியும் பாதிக்கப்படுகிறது

". Basu said workers may have demands and difficulties and these could be solved through meaningful discussions and in a disciplined manner. Rash action has no place in trade union movement".

என்று திரு. ஜோதிபாசு அவர்கள் அனுபவத்தின் அடிப்படையில் நுட்பமானவராக எடுத்துச்சொல்லியிருக்கிறார்கள். தொழிலாளர் களுக்குப் பல்வேறு கோரிக்கைகள் இருக்கக்கூடும். பல்வேறு இடையூறுகள் இருக்கக்கூடும். ஆனால், அவற்றையெல்லாம் ஆர்வமுள்ள ஒரு விவாதத்தின் மூலமாக, பேச்சு வார்த்தையின் மூலமாகத் தீர்த்துக்கொள்ள வேண்டும்.

Rash action has no place in Trade Union Movement".

அவசரப்பட்டு, அத்துமீறக்கூடிய செயல்களுக்கு தொழிற்சங்கங்களில் இனிமேல் இடம் இல்லையென்று அவர் அறிவுரை கூறத்தக்க அளவிற்கு அங்கே அவர்கள் உணர்ந்து இருக்கிறார்கள். தொழிலாளர்களுக்கு தொழிற்சங்கங்கள் இருக்கவேண்டும்; அவ்வப்போது வழக்கறிஞர்களைப்போல் விவரங்களைப் பேசி, புரிய வைத்து, அவர்களின் உணர்வுகளை முதலாளிகளுக்கு உணர வைத்து, புரிய வைத்து, அறிய வைத்து, தொழிலாளர்களுக்கு வேண்டியவற்றை வாங்கிக்கொடுக்கக் கூடிய அளவில் தொழிற் சங்கத்தலைவர்கள், மற்றவர்கள் இருக்க வேண்டும். அந்த ரீதியில் செயல்படாமல் தொழிற்சாலைகளுக்குப் பங்கம் ஏற்படுகிற அளவிற்கு, வேறு பல சூழ்நிலைகள் ஏற்படுகிற அளவிற்கு இருந்தால் மாநிலத்தினுடைய வளர்ச்சி குன்றும் என்றுதான் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள் திரு. ஜோதிபாசு அவர்கள். அந்த வகையில் நாம் செயல்பட்டுத்தான் பல்வேறு பேச்சு வார்த்தைகளில் இணக்கம் ஏற்பட்டு, 1985-ம் ஆண்டு பல முக்கியமான முடிவுகளை நம் அரசு எடுக்க முடிந்தது. இருதரப்புப் பேச்சு வார்த்தையிலே உடன்பாடு ஏற்பட்டதன் காரணமாக சிலபல நல்ல முடிவுகள் எடுக்கப்பட்டு செயல்பட முடிந்தது.

பஞ்சாலைத்தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தாலும் கடைசியிலே உட்கார்ந்து பேசியதன் விளைவாக, இரு தரப்பினரும் ஒப்புக்கொண்டதற்குப் பிற்பாடு ஒரு முடிவிற்கு வர முடிந்தது ஒரு நல்ல சூழ்நிலைதான். அல்லாமல் வேலை நிறுத்தம் நீடித்துக் கொண்டு போய் இருக்குமானால் வேலை

இழப்பு நாட்கள் அதிகமாகிப் போய் இருக்கும். அந்த வகை
நிலையான தொழிலாளர்களுக்கு ரூ. 300 கூடுதல் தொகை
வேண்டும் என்றும், இதர தொழிலாளர்களுக்கு ரூ. 200 கூ
தொகை தரவேண்டும் என்றும் முடிவிற்கு வந்ததற்குப் பிற
25—11—1985-ல் இருந்து படிப்படியாக வேலை நிறுத்தம
கைவிடப்பட்டது. 28—11—1985-ல் எல்லா பஞ்சா
தொழிலாளர்களும் வேலை நிறுத்தத்தை அறவே கைவிட்டனர்.
என்.டி.சி. ஆலையைப் பொறுத்தவரை இருதரப்பினரும்
நேரடிப் பேச்சு வார்த்தை நடத்தி வேலை நிறுத்தத்தை முடிவுக்
குக் கொண்டு வந்தனர். வேலை நிறுத்தம் முடிவிற்குக் கொண்டு
வரப்பட்டதால் 7—12—1985 முதல் அனைத்துத் தொழிலாளர்
களும் வேலைக்குத் திரும்பினர் என்பது முற்றிலும் மகிழ்ச்சிக்
குரிய ஒன்று.

டெக்ஸ்டைல் இன்டஸ்ட்ரியைப் பொறுத்தவரையில் 16—7—1985
முதல் அவர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். அரசு வெளி
யிட்ட தொழில் தகராறு சட்டப்பிரிவு 10(பி) தொழிலாளர்களுக்கு
இடைக்கால நிவாரணத்தொகை வழங்க வகை செய்கிறது.
ஆனால் தொழிலாளர்களுக்கு அது சரியாக அறிவிக்கப்பட
வில்லை. மாண்புமிகு முன்னாள் தொழிலாளர் நல அமைச்சர்
தலையிட்டு 25—7—1985-ல் அத்தொழிற்சாலை இயல்பான நிலைக்
குத் திரும்பியது.

கழிவுப் பஞ்சாலைகளில் உள்ள தொழிலாளர்களின் புதுக்
கோரிக்கைகள் பற்றிய தொழில் தகராறுகளையும் நடுவர்
தீர்ப்புக்கு விட அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது.

சர்க்கரை ஆலைத் தொழிலாளர்களின் பிரச்சனையைப்
பொறுத்த வரையில், அவர்களின் ஊதிய உயர்வு தொடர்பான
ஒப்பந்தம் 31—3—1985 உடன் முடிவடைந்து விட்டது. தொழிற்
சங்கங்களின் கூட்டுக்குழு 25—11—1985 முதல் வேலை நிறுத்தம்
செய்யப்போவதாக அறிவிப்புக் கொடுத்தனர். தொழிலாளர்
துறை ஆணையர் தலையிட்டு சமரசப் பேச்சுவார்த்தை நடத்
தினார். தொழிற் தகராறு சட்டப் பிரிவு 12(3)-ன் கீழ்
30—11—1985-ல் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது. அதன்படி
சர்க்கரை ஆலைத் தொழிலாளர்கள் 20 ஆயிரம் பேர் அந்த உடன்
பாட்டின் மூலமாகப் பயன் பெற்றனர்.





பீடித் தொழிலாளர்கள் பிரச்சினையைப் பொறுத்து, 1985 ஏப்ரல் திங்களில் தொழிற் தகராறு எழுப்பினர், தொழிலாளர் துறை, தனித்துணை ஆணையர் பேச்சுவார்த்தை நடத்தினார். 3—7—1985 அன்று தொழிற் தகராறு சட்டப் பிரிவு 12(3)-ன் கீழ் வடஆற்காடு, சென்னை, செங்கல்பட்டு, திருச்சி வட்டாரங்களைப் பொறுத்து, ஒப்பந்தங்கள் ஏற்பட்டன.

தோல் பதனிடும் தொழிலாளர் பிரச்சினையைப் பொறுத்து, சம்பளம், பஞ்சப்படி மாற்றம் மற்றும் இதர கோரிக்கைகள் குறித்து தகராறு எழுப்பினார்கள். தொழிலாளர் நலத்துறை இலாக்கா இணை ஆணையர் பேச்சுவார்த்தை நடத்தினார். 6—2—1986 அன்று தொழிற் தகராறு சட்டப்பிரிவு 12(3)-ன் கீழ் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது. அதன் மூலம் ஒவ்வொரு தொழிலாளருக்கும் மாதம் ஊதிய உயர்வு 100 ரூபாய் 80 காசு கிடைக்கும். சுமார் 40 ஆயிரம் தொழிலாளர்கள் பயன் அடைந்தனர். சம்பள விகிதம், பஞ்சப்படி நிர்ணயம், தொழிலாளர் கிரேடு ஆகியவற்றைப் பற்றிப் பரிந்துரைக்க முத்தரப்புக் குழுவை நியமிக்க இரு தரப்புக்கும் வகை செய்தது.

தமிழ்நாடு சிறு தொழில் கார்ப்பரேஷன், டான்சி, சென்னையைப் பொறுத்தவரையில், தொழிலாளர் சம்பள உயர்வு, பஞ்சப்படி, வீட்டு வாடகைப்படி உள்ளிட்ட பல கோரிக்கைகளை வைத்து தகராறு எழுப்பினார்கள். முன்னாள் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் பேச்சுவார்த்தை நடத்தி சுமுகமான சூழ்நிலையை உருவாக்கினார். தொழிலாளர் துறை இணை ஆணையர் (நிர்வாகம்) பேச்சுவார்த்தை நடத்தினார். 10—6—1985 அன்று தொழிற் தகராறு சட்டப்பிரிவு 12(3)-ன் கீழ் ஒரு ஒப்பந்தம் ஏற்படுத்தினார். 56 நிறுவனங்களைச் சேர்ந்த 4 ஆயிரம் தொழிலாளர்களுக்கு மாதச் சம்பளம் ரூபாய் 85-இலிருந்து 100 வரை பணப் பயன் கிடைக்க வழி ஏற்பட்டது. மேலும், குடும்பப் பாதுகாப்பு நிதி 10 ஆயிரத்திலிருந்து 20 ஆயிரம் ஆகவும் உயர்ந்தது.

தமிழ்நாடு மின்சார வாரியத் தொழிலாளர் பிரச்சினையைப் பொறுத்தவரையில், 1985 இல் ஊதிய உயர்வு, கிராக்கிப்படி, வீட்டு வாடகைப்படி முதலிய கோரிக்கைகளை வைத்து ஒரு தொழில்

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1986 மே 7

தகராறினை எழுப்பினர். தொழிலாளர் நலத்துறை அதிகாரிகள் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தினார்கள். 21—10—1985 அன்று தொழிலாளர் துறை ஆணையர் முன்பு, தொழிற் தகராறு சட்டம் பிரிவு 12(3)-ன் கீழ் தனியாக ஒப்பந்தம் ஏற்பட்டது. இந்த ஒப்பந்தம் ஏற்பட்டதால் 82,000 தொழிலாளர்கள் பயன் அடைந்தனர்.

நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷன் தொழிலாளர் பிரச்சினையைப் பொறுத்தவரையில், உறுப்பினர்கள் பேசினார்கள். 1984-85 ஆம் ஆண்டிற்கான போனஸ் பிரச்சினை குறித்து தொழிலாளர்கள் தகராறு எழுப்பினர். தொழிலாளர் துறை இணை ஆணையர் (நிருவாகம்) முன்னர் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. 1—11—1985 இல் தொழிற் தகராறு சட்டப்பிரிவு 12(3)-ன் கீழ் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது. அதன் பயனாக, 20 சதவிகிதம் போனஸ் மற்றும் ரூபாய் 260 வெகுமதி உதவித் தொகையாக வழங்கப்பட்டது. இந்த ஒப்பந்தத்தால் 12 ஆயிரம் தொழிலாளர்கள் பயன் அடைந்தனர்.

சேஷசாயி பேப்பர் அண்டு போர்ட்ஸ் லிமிடெட், ஈரோடு தொழிலாளர்கள் பிரச்சினையைப் பொறுத்து, போனஸ் கோரிக்கையை வைத்துத் தகராறு எழுப்பினர். பல தொழிற்சங்கங்கள் நிருவாகம் ஆகியவற்றிடையே தொழிலாளர் துறை ஆணையர் பேச்சு வார்த்தைகள் நடத்தினார். 28—12—1985 அன்று தொழிற் தகராறு சட்டப் பிரிவு 12(3)-ன் கீழ் இரண்டு ஒப்பந்தங்கள் ஏற்பட்டன. இவ்வொப்பந்தங்கள் 1983—84, 1984—85, 1985—86, 1986—87, 1987—88 ஆகிய ஆண்டுகளுக்கான போனஸ் பிரச்சினையை உள்ளடக்கியதாகும்படி அமைந்தது. இந்த ஒப்பந்தத்தினால் 2,000 தொழிலாளர்கள் பயன் அடைந்தனர்.

விம்கோ லிமிடெட் தீப்பெட்டித் தொழிற்சாலை, திருவொற்றியூர், தொழிலாளர் பிரச்சினையைப் பொறுத்து, ஊதிய விகித மாற்றம், அகவிலைப்படி மற்றும் பணிநிலை போன்ற கோரிக்கைகள் வைத்து தகராறு எழுப்பினர். இது தொடர்பாக, சென்னை, தனித் துணை ஆணையர் இரு தரப்பினரிடையே பல்வேறு நாட்களில் சமரசப் பேச்சுவார்த்தை நடத்தினார். 14—10—1985 அன்று தொழிற் தகராறு சட்டப்பிரிவு 12(3)-ன் கீழ்



1986 மே 7] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

சிறப்பு துணை ஆணையர் முன்னிலையில் ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டது. இதனால் 720 தொழிலாளர்கள் பயன் அடைந்தனர். ஒவ்வொரு நிரந்தரத் தொழிலாளிக்கும் மாதம் ஒன்றுக்கு ரூ. 160 அதிகப்படியாகப் பணப் பயன் ஏற்பட்டது. ஒட்டுமொத்தத் தொகையாக ரூ. 1,100-ம் வழங்கப்பட்டது. தொழிலாளர்களின் வாரிசுதாரர்களான 37 பேர்கள் நிரந்தரம் செய்யப்படவும் வகை செய்யப்பட்டது.

தாரங்கதரா கெமிக்கல் ஒர்க்ஸ் லிமிடெட், சாயபுரம், ஆறுமுகநேரி, நெல்லை மாவட்டம்—இதைப் பொறுத்து, சம்பளம் அகவிலைப்படி மற்றும் பணி நிலையை உள்ளடக்கிய ஒரு உடன்பாடு 31—1—1985 அன்று ஏற்பட்டது. சம்பளம்—படி முதலியவற்றைத் திருத்தி அமைக்கக் கோரி, நான்கு தொழிற் சங்கங்கள் 15—6—1985 இல் கோரிக்கை மனு வைத்தனர். இரு தரப்பினரிடையேயும் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன பல நாட்களில். சென்னை தனி துணை ஆணையர் முன்பு 12—10—1985 அன்று தொழிற் தகராறு சட்டம் பிரிவு 12 (3)-ன் கீழ் ஓர் உடன்பாடு ஏற்பட்டது. இதனால் சுமார் 800 தொழிலாளர்கள் பயன் அடைந்தனர்.

(மாலை 6-20)

லட்சுமி சண்முகா ஸ்பின்னிங் மில்ஸ், நமனசமுத்திரம் நிதிப் பற்றாக்குறையின் காரணமாக இந்த மில் 17—5—1985 முதல் இயங்காமல் இருந்தது. பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டன. திருச்சி தொழிலாளர் துறை துணை ஆணையர் முன்பு 3—7—1985 இல் ஒரு உடன்பாடு ஏற்பட்டது. இதன் விளைவாக தொழிலாளர்கள் 4—7—1985 இல் வேலைக்குத் திரும்பினார்கள். மறுபடியும் இதிலே தகராறுகள் இருப்பதாகத் தெரிய வருகிறது. அதை மறுபடியும் பேச்சுவார்த்தைகள் மூலமாகத் தீர்த்து வைக்க முயற்சிகள் எடுக்கும்படியாக இந்தத் துறையினுடைய அதிகாரிகள் கேட்டுக்கொள்ளப்பட்டு இருக்கிறார்கள்.

இப்படிப் பல்வேறு பிரச்சினைகளையும் பேசித் தீர்க்க வேண்டுமென்பதுதான் நம் எண்ணம். நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் பிற மாநிலங்களோடு ஒப்பிடும்பொழுது இந்தப் பேச்சுவார்த்தைகளின் மூலமாக உடன்பாட்டினுடைய

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1986 மே 7

அடிப்படையிலே ஏற்படுகிற ஊதிய உயர்வு ஓரளவுக்கு மற்றைய மாநிலங்களை ஒப்பிட்டுப் பார்க்கின்றபொழுது ஆலைத் தொழிலாளர்களுடைய குறைந்தபட்ச மாத வருமானம்—26 நாட்களுக்கு என்று கணக்கிட்டோமேயானால் அதிகமாகத்தான் இருக்கிறது, குறைந்துவிடவில்லை. இந்தூரை எடுத்துக் கொள்வோமேயானால் அங்கே 710 ரூபாய் 56 காசு; பவநகர் 767 ரூபாய் 24 காசு; டெல்லி 768 ரூபாய் 37 காசு; கான்பூர் 781 ரூபாய் 76 காசு; மேற்குவங்கம் 811 ரூபாய் 81 காசு; அகமதாபாத் 823 ரூபாய் 35 காசு; பம்பாய் 891 ரூபாய் 84 காசு; ஆனால் தமிழ்நாட்டிலே 928 ரூபாய் 84 காசு; அதுவும் 1—7—1985 முதல் 1,025 ரூபாய் 8 காசாக உயர்த்தப்பட்டிருக்கிறது. வளம் கொழிக்கின்ற, பணம் படைத்த பம்பாயைவிட இங்கு அதிகமாகத்தான் வந்திருக்கிறது. அதுவும் ஓரளவு இந்த உடன்பாட்டினுடைய அடிப்படையிலேயும், இரு தரப்பு பேச்சு வார்த்தைகளின் அடிப்படையிலேயும் இப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்பட்டது மகிழ்ச்சிக்குரிய ஒன்றுதான். இந்த நிலை மேலும் நீடிக்க வேண்டுமென்பதுதான் இந்த அரசினுடைய கோரிக்கை.

மற்றும் மூடப்பட்டிருக்கும் ஆலைகளைத் திறப்பதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர்களும் சொன்னார்கள்; மாண்புமிகு உறுப்பினர் செங்காளியப்பன் சொல்லியது போல நான் ஏற்கனவே 8—4—1986 அன்றே எல்லாத் தொழிற்சங்கத் தலைவர்களையும் அழைத்து வைத்துப் பிரச்சினையை அவர்களிடத்திலே கேட்டறிந்தேன். பிறகு 11 ஆம் நாளன்று அதிகாரிகள் எல்லோரையும் வைத்துக்கொண்டு ஒரு முடிவுக்கு வருவோம் என்று சொல்லி எல்லாத் தொழிற்சங்கத் தலைவர்களும் அந்தக் கூட்டத்திற்கு வருகை தந்தார்கள். இதனோடு தொடர்புடைய எல்லாத் துறைகளினுடைய அதிகாரிகளும் அங்கே வந்தார்கள். அவர்களோடு பேச்சுவார்த்தை நடத்தியதற்குப் பிறகு மூன்று தரப்பினரும் சேர்ந்து ஏதாவது ஒரு முடிவுக்கு வந்தால்தான் இந்த ஆலைகளிலே ஒரு தீர்வு காண முடியும். அந்த வகையிலே, ஆலைகள் மூடப்பட்டிருப்பதற்கான காரணங்களைப் புரிந்து கொள்ள வேண்டும்; அந்தக் காரணங்களை எப்படி நீக்க முடியும் என்பதை நாம் புரிந்து கொள்ளவும் வேண்டும். தொழிற்சாலைகள் [illegible] இருக்கின்றன. ஏற்கனவே



1986 மே 7] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

காலமாகத் தொழிற்சாலைகள் நடைபெற்றுக் கொண்டும் வந்திருக்கின்றன. அந்தத் தொழிற்சாலைகள் இயங்க முடியாமல் போனதற்குக் காரணம், மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் கூறியதைப் போன்றும், மாண்புமிகு உறுப்பினர் செங்காளியப்பன் அவர்கள் கூறியதைப் போன்றும், ஏற்கனவே இருக்கின்ற நிர்வாகத்தினர் அந்தத் தொழிற்சாலைகளை இயங்க வைப்பதிலே, அவர்கள் நடந்து கொண்டிருக்கின்ற முறைகளும், அவர்களுடைய செலவுக் கணக்கு எழுதியிருக்கின்ற வகையிலேயும், வேறு வகைகளிலேயும் அதை இயங்க முடியாத அளவிற்குச் செய்திருக்கிறார்கள் என்பதைத்தான் நாம் நன்றாகக் காண்கிறோம். அதையும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றபொழுது சிலபல ஆலைகளின் நிர்வாகத்தைப் பொறுத்த மட்டும் அரசினுடைய நிர்வாக அதிகாரிகளினுடைய கைகளிலே கொண்டு வந்ததற்குப் பிறகு, கட்டுக்கடங்கியதற்குப் பிறகு, நடத்த முடியாது என்று கருதப்பட்ட சில ஆலைகள் நடத்தப்பட்டிருக்கின்றன. நடத்த முடியும் என்கின்ற தைரியமும் நமக்கு ஏற்பட்டிருக்கின்றது. அந்த அடிப்படையிலே காணுகின்றபொழுது சில ஆலைகள் அவர்கள் கையிலே விடப்படுமேயானால் தொழிலாளர்களுக்கும் அவர்களுக்கும் இருக்கின்ற மாச்சரிய உணர்வு தொடர்ந்து அந்தத் தொழிற்சாலையை இயங்கவிடாது என்கின்ற காரணத்தினால், அரசே நிர்வாகத்தை ஏற்றுக் கொள்கிற சூழ்நிலை ஏற்படுமேயானால் ஒரு சுமுக சூழ்நிலையினுடைய அடிப்படையிலே தொழிலாளர்கள் ஒத்துழைப்பார்கள். அவர்களுடைய உதவியும் கிடைக்கும். அதே நேரத்திலே அந்த ஆலைகளின் உரிமையாளர்களுடைய முழு ஒத்துழைப்பையும், ஆதரவையும் நாம் பெற முடியும். ஒரு கட்டுப்பாடான வகையிலே அந்த நிர்வாகத்தை நடத்திச் செல்ல முடியும் என்கின்ற காரணத்தினுடைய அடிப்படையிலேதான் நாம் நான்கைந்து மில்களைப் பொறுத்தவரையிலும் அதனுடைய நிர்வாகத்தை எடுத்துக் கொள்ளலாம் என்றும், அதற்கான வகைகூறுபாடுகளையெல்லாம் ஆராயும்படியாக கைத்தறித் துறையினரையும் இந்தக் கைத்தறி நூற்பாலைத் துறையினரையும் நாம் கேட்டுக்கொண்டு இருக்கிறோம். அவர்கள் எடுத்துச் சொன்னதுபோல அது விரைவுபடுத்தப்பட வேண்டுமென்ற கருத்தினுடைய அடிப்படையிலேயே நானும் வலியுறுத்துகிறேன். ஆகவே, அதிகாரிகள் இந்த

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1986 மே 7

விரைவுபடுத்துகின்ற முயற்சியை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லி, எடுத்துக்கொள்வார்கள் என்பதையும் இந்த வாய்ப்பிலே நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

ஒரு நாள் கடந்தக் கடந்த, ஒவ்வொருநாளும் கடத்தக்கடத்த இதிலே இழப்பு ஏற்படுகிறது என்பதையும் பார்க்கலாம். சாதாரணமாக நிலத்தை ஒருவருக்கு பட்டா செய்து கொடுப்பதிலே சிலபல மாதங்கள் ஆனாலும்கூட பரவாயில்லை. வேறு பல காரியங்கள் சிலபல காலங்கள் கடந்தாலும்கூட பரவாயில்லை. சில தொழிற்சாலைகளுக்கு லைசென்ஸ் கொடுப்பதிலே சில காலம் கடந்தாலும்கூட பரவாயில்லை. ஆனால், அப்படிப்பட்ட தொழிற்சாலைகள் மூடிக்கிடக்கிற அளவுக்கான காலத் தாழ்வு ஏற்படக் கூடாது என்ற காரணத்தாலேதான் அந்தக் கூட்டத்திலே எடுத்த முடிவுகளை விரைவுபடுத்துவதற்கான முயற்சிகளில் அந்த அந்தத் துறைகளுடைய அதிகாரிகள் முடுக்கி விடப்படுவார்கள். அவர்கள் சொல்லிய மாதிரி ஒரு மாதத்திற்குள்ளாக, இரண்டு மாதத்திற்குள்ளாக முடிவெடுத்து, அந்த ஆலைகள் எல்லாம் மீண்டும் இயங்குகின்றன, அதனுடைய பொறுப்பை நான் ஏற்றுக் கொண்டேன் என்ற வகையிலே ஓரளவுக்காவது, அந்தத் தொழிற்சாலைகளை நடத்துகின்ற உரிமையாளர்கள் இறங்கி வா வேண்டும்; தொழிற்சங்கத் தலைவர்களும் தங்களுடைய முழு ஒத்துழைப்பைத் தருவதாக, அந்தக் கூட்டத்திலே முழு உறுதியும் தந்திருக்கிறார்கள். அவர்கள் ஓரளவுக்குத் தங்களுடைய சம்பளம் போன்றவைகளை டெபர்ட் பேமெண்ட்டாகக் கூட வைத்துக்கொள்ளவேண்டிய அவசியம் ஏற்பட்டால், இப்பொழுது குறைத்துக்கொண்டு பிறகு வசதி ஏற்பட்டு, லாபம் சம்பாதிக்கிற காலத்தில் அதைத் திருப்பிப் பெற்றுக்கொள்கிற அளவுக்கு வழிவகைகளை நாங்கள் செய்ய முடியும் என்றுகூட எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். உடனடியாக, அதிகச் செலவை வைத்தால் அந்தத் தொழிற்சாலை இயங்காது என்ற சூழ்நிலை ஏற்படுமானால், அப்படிப்பட்ட சூழ்நிலையில் தொழிற்சங்கத் தலைவர்கள் தங்களுடைய முழு ஒத்துழைப்பையும் தருவதாக வாக்களித்திருக்கிறார்கள். அந்த அளவுக்கு அவர்களும் வேலைப் பளுவைப் பொறுத்து ஒரு மணி நேரம் கூடுதலாக வேலை செய்தால், தாழ்ந்துபட்ட அந்தத் தொழிற்சாலையைத் தூக்கி நிறுத்த



1986 மே 7] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

யும், மறுபடியும் உயிரோடு இயங்கவைக்க முடியும் என்ற சூழ்நிலை ஏற்படுமானால், அதற்கும் ஒத்துழைப்பு தருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அந்த ஒத்துழைப்பை அவர்களும் தந்து, ஆலை அல்லது தொழிற்சாலைகளுடைய உரிமையாளர்களும் ஒத்துழைப்பு தருகின்ற நிலைமையில் அரசும் தன்னுடைய உதவியைச் செய்யும் என்று நான் சொல்லியிருக்கிறேன். ஐந்து ஆண்டுக் காலத்திற்கு அந்த ஆலை செலுத்தவேண்டிய விற்பனை வரியை வட்டியில்லாத கடனாகத் தந்து ஐந்து ஆண்டுக்காலம் கழித்து பெற்றுக்கொள்கிற அளவுக்குக் கூட அந்த உதவியைச் செய்ய முடியும்.

அந்த நிறுவனத்திற்கு மின்சார வெட்டு இருப்பதன் காரணமாக, அந்தத் தொழிற்சாலை இயங்க முடியாத ஒரு சூழ்நிலை ஏற்படுமானால், மின்சார வெட்டிலிருந்து தளர்த்தி, அதற்கு வசதி ஏற்படுகின்ற வகையிலும் அரசாங்கம் தன்னுடைய உதவியைச் செய்யும் என்று சொல்லியிருக்கிறோம். இந்த 3 தரப்பினரும் சேர்ந்து, தங்கள் தங்கள் அளவிற்கு உதவி செய்கின்ற சூழ்நிலை ஏற்படுமானால், அந்த ஆலைகளில் சிலவற்றை நாம் திறப்பதற்கான ஒரு நிலைமையை உருவாக்க முடியும் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது.

பி. அன்ட் சி. மில் பிரச்சனையைப் பற்றியும், பின்னி இன்ஜினியரிங் டிவிஷனைப் பற்றியும் மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். அந்த நிர்வாகத்தினரை நான் அழைத்துப் பேசினேன். தொழிற்சங்கத் தலைவரிடத்திலே பேசியிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. சிந்தன் அவர்களிடத்திலே நான் பேசியிருக்கிறேன். ஆணையாளர் அவர்களைக் கண்டு முதற்கட்டமாக பேச்சு வார்த்தை நடத்த வேண்டுமென்றும் இந்தத் தன்மையினுடைய அடிப்படையிலே இயங்கவேண்டும். இரண்டு தொழிற்சாலைகளும் சுமுகமாக இயங்கவேண்டும். எக்காரணம் கொண்டும் மூடப்படக் கூடாது. மூடப்படுகின்ற சூழ்நிலை ஏற்படக் கூடாது, இயங்கவேண்டும், இயங்குவதற்கு இந்த அளவுக்கு உதவி செய்ய முடியும்; அரசினால் இந்த, இந்த வகையிலே உதவி செய்ய முடியும் என்று பேச்சுவார்த்தையின் மூலமாகப் பேசும்பொழுது சொல்லியிருக்கிறேன். தனித்தனியாக, அந்த பி. அன்ட் சி., பின்னி

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1986 மே 7,

கம்பெனிகளுடைய உரிமையாளர்களிடத்தில் ஆணையாளர் பேச்சு வார்த்தை நடத்தி, தொழிற்சங்கத் தலைவரிடம் நடத்தி, இணக்கம் ஏற்படுமானால், இரு தரப்பினரை வைத்து உடன்பாடு காணுங்கள்; அப்படி முடியாவிட்டால் மூன்றாவதாக அமைச்சர் மட்டத்தில் கொண்டுவந்து 3 பேர்களும் உட்கார்ந்து பேசுவோம், அரசு எந்த அளவுக்கு உதவி செய்ய முடியும் என்பதையும் நான் சொல்லியிருக்கிறேன். அதுபற்றி பேச்சுவார்த்தைகள் நடை பெற்றுக்கொண்டிருக்கின்றன. விரைவில் அது முடிவு பெற்றுவிடு மானால், திறப்பதற்கான சூழ்நிலை ஏற்படும் என்பதையும் இங்கே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தொழிற்சட்டங்களுடைய அடிப்படையில் மேற்பார்வை, ஆய்வு, வழக்கு தொடுத்தல், தண்டனை பெற்றுத் தருதல் போன்ற வைகளில் எல்லாம் நாம் அதிக கவனம் செலுத்திக் கொண்டு வருகிறோம். தமிழ்நாட்டைப் பொறுத்தவரையிலும், 1985 ஆவது ஆண்டு மேற்பார்வையிட்ட வகையிலே, 1,82,336 மேற்பார்வை ஆய்வு செய்யப்பட்டிருக்கிறது. வழக்கு தொடுத்தல், பிராசிகி யூஷன்ஸ் லான்ச் மட்டும் 12,726—வழக்கு தொடுக்கப்பட்டிரு கிறது. தண்டனை பெற்றுத் தருதல் என்கிற வகையிலே 9,993. இது அகில இந்திய அளவிலே கணக்கிட்டுப் பார்க்கும்போது, ஓரளவுக்குத் திருப்தி அளிக்கக்கூடிய வகையில்தான் அந்த நட வடிக்கைகள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர்கள் கூறுவது போன்று அது இன்னும் கடுமையாக ஆக்கப்பட்டு, யாரும் சட்டத் திலேயிருந்து மீறி, நாம் சட்டத்தை இயற்றி விட்டோம், அந்தச் சட்டத்தைப் புறக்கணிக்கலாம் அல்லது அலட்சியப்படுத்தலாம் என்ற நிலைமைக்கு இடம் கொடுக்காத அளவுக்கு, அதை நடை முறைப்படுத்துகிற அளவுக்கு என்ன, என்ன நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமோ, அதை மேற்கொள்வதற்கு அரசு முயலும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

(மாலை 6-30)

1985 ஜூன் முதல் 1985 டிசம்பர் வரையிலும், மற்றும் 1—1—1986 முதல் 31—3—1986 வரையிலான காலத்தில் தொடரப் பட்ட வழக்குகளின் விவரங்கள். வாசுதேவன் புளூ மெட்டல்ஸ், சென்னை, 12(3) பிரிவின் கீழான ஒப்பந்தத்தை அமுல்படுத்தாத தினால் 8—2—1986 அன்று அவர்கள் மீது வழக்கு தொடரப் பட்டது. சி. எம். கணேசன் அண்டு கம்பெனி, சென்னை. ஆர். மகேந்திரன் என்ற தொழிலாளரின் வழக்கில் தொழில் நீதிமன்ற உத்தரவை அமுல்படுத்தாமையினால் 18—2—1986 அன்று வழக்கு தொடர்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. பி. வெங்கடாசலம் கான்டினன்ட் சென்னை, 12(3) பிரிவின் கீழான ஒப்பந்தத்தை அமுல்படுத்தாமையினால் 4—3—1986 அன்று ஆணையிடப்பட்டு வழக்கு தொடரப்பட்டிருக்கிறது. கென்ட் செராமிக் டைல்ஸ் அண்டு கம்பெனி (பி) லிமிடெட், சென்னை, சில கோரிக்கைகளின் மீது தொழில் நீதிமன்றத்தின் உத்திரவை அமுல்படுத்தாமையினால் 14—3—1986-ல் அதற்கான ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. ஸ்வீட் புட்ஸ் (பி) லிமி டெட், சென்னை, 12(3) பிரிவின் கீழான ஒப்பந்தத்தை அமுல்படுத் தாமையினால் 21—3—1986-ல் ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. ரங்கராஜ் இன்ஜினியரிங் ஒர்க்ஸ், சிதம்பரம் தொழில் நீதிமன்றத் தின் உத்தரவை அமுல்படுத்தாமையினால் 18—12—1985-ல் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. இப்படி தொழில் நீதி மன்றத்தின் உத்தரவை அமுல்படுத்தாமல் இருந் தாலோ, ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்தாமல் இருந்தாலோ அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு அரசு தக்க முயற்சி களை மேற்கொண்டு வருகிறது. தொழில் நீதி மன்றங்களுடைய அமைப்பைப்பற்றியும் அது தேங்கியிருப்பதைப் பற்றியும், விரைவுபடுத்தப்படவில்லை என்பது பற்றியும் மாண்புமிகு உறுப் பினர்கள் சிலர் குறிப்பிட்டார்கள். இப்பொழுது முதன்மை தொழிலாளர் நீதிமன்றம், சென்னையிலும், முதல் கூடுதல் தொழி லாளர் நீதிமன்றம், மதுரையிலும்; கூடுதல் தொழிலாளர் நீதி தொழிலாளர் நீதிமன்றம், சென்னையிலும், மூன்றாவது கூடுதல் தொழிலாளர் நீதிமன்றம், சென்னையிலும், முதன்மை தொழி லாளர் நீதிமன்றம், மதுரையிலும்; கூடுதல் தொழிலாளர் நீதி மன்றம், மதுரையிலும்; தொழிலாளர் நீதிமன்றம், கோயம்புத் தூரிலும் இருந்து வருகிறது. இப்பொழுது மாண்புமிகு உறுப் பினர்கள் கூறியது மாதிரி அதைப் பரவலாக ஆக்க அந்தந்த மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் ஒழுங்காகப் போய், இந்த நீதி மன்றத்தின் மூலமாக தீர்ப்பைப் பெறுவதற்கான வழிவகை செய்ய வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில், இந்தத்துறை



1986 மே 7] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

யோடு கலந்து ஒரு ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது. அதை விரைவிலே நடைமுறைப்படுத்துவதற்கும் திட்டமிடப்பட்டிருக்கிறது. இந்த 7 தொழிலாளர் நீதி மன்றங்களோடு மேற்கொண்டு இரண்டு தொழிலாளர் நீதி மன்றங்களை புதியதாக உருவாக்கி 9 தொழிலாளர் நீதிமன்றங்களை நடைமுறைப்படுத்துகின்ற அளவுக்கு நாம் மேற்கொண்டும் உருவாக்கி, பிரின்சிபல் தொழில் நீதிமன்றம், கூடுதல் நீதிமன்றம் என்ற இரண்டையும், சென்னையிலே அதிகமான அளவுக்கு தொழில் வழக்குகள் மற்றவைகள் இருப்பதனால், சென்னையிலே வைத்துவிட்டு கடலூரிலே ஒரு தொழில் நீதி மன்றம் நிறுவி, தஞ்சை, தென்னாற்காடு மாவட்டங்களை அந்தத் தொழில் நீதிமன்றம் கவனித்துக்கொள்ளும். வேலூரில் ஒரு தொழில் நீதிமன்றம் நிறுவப்பட்டு, வட ஆற்காடு, தர்மபுரி மாவட்டங்கள் அந்த நீதிமன்றத்திற்குள் அடங்கும். சேலத்தில் ஒரு தொழில் நீதிமன்றம் நிறுவப்பட்டு, சேலம், பெரியார் மாவட்டங்கள் அதற்குள் அடங்கும். அதுபோன்று கோவையில் ஒரு தொழில் நீதிமன்றம் அமைக்கப்பட்டு, கோவை, நீலகிரி மாவட்டங்கள் அதில் அடங்கும். திருச்சியில் ஒரு தொழில் நீதிமன்றம் அமைக்கப்பட்டு, திருச்சி, புதுக்கோட்டை, பசும்பொன் முத்துராமலிங்கம் ஆகிய மாவட்டங்கள் அதற்குள் அடங்கும். மதுரையில் ஒரு தொழில் நீதிமன்றம் அமைக்கப்பட்டு மதுரை, இராமநாதபுரம், காமராஜர், அண்ணா ஆகிய மாவட்டங்கள் அதற்குள் அடங்கும். திருநெல்வேலியில் ஒரு தொழில் நீதிமன்றம் அமைக்கப்பட்டு திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்கள் அதற்குள் அடங்கும். இந்த வகையிலே நாம் பார்த்தால் வட்டாரவாரியாக வைப்போமானால் அந்தந்தப் பகுதியில் இருப்பவர்கள், தொழில் நீதிமன்றங்களை அணுகவும், பிரச்சனைகளைத் தீர்த்துக்கொள்வதற்கும் வாய்ப்பு அளிப்பதற்காக இந்தப் புதிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன என்பதையும் குறிப்பிட்டுக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்தத் தொழிற் தகராறுகள் திருத்த மசோதா, 1981 சமரச அலுவலர்கள் முன்பு நடைபெறும் பேச்சு வார்த்தைகளில் சுமுகமான ஒப்பந்தம் ஏற்படாத நிலையில், ஒரு தொழிலாளி நேரடியாக தொழில் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்வதற்கும்,





சமரச அலுவலர்களுக்கு அழைப்பாணை அனுப்பும் (சம்மன்) அதிகாரம் அளிக்கவும் வழி வகை செய்ய தொழிற் தகராறு சட்டத்தில் திருத்தம் கொண்டுவரப்பட்டது. இத்திருத்த மசோதா, மாநில சட்டப் பேரவையில் 1981 மே மாதம் நிறைவேற்றப்பட்டது. இச்சட்ட முன்வடிவிற்கு குடியரசுத் தலைவரின் ஒப்புதல் இன்னும் எதிர்பார்க்கப்படுகிறது. விரைவிலே அது வந்தால் அது பலன் அளிக்கக்கூடியதாக அமையும்.

தமிழ்நாடு கட்டிடத் தொழிலாளர்கள் மசோதா, 1984, குடியரசுத் தலைவருடைய ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.

சம்பள பட்டுவாடாச் சட்டம் 1986. சம்பளப் பட்டுவாடாச் சட்ட அதிகாரியால் உத்தரவிடப்பட்ட தொகையை செலுத்தாதவர்களிடமிருந்து இதுவரை தொழில் நீதிமன்ற நடுவர்கள் மூலமாக வசூல் செய்யப்படும் முறையை மாற்றி, வருவாய் அதிகாரிகள் மூலம் நில வருவாய் நிலுவைத் தொகையை வசூல் செய்வதைப் போல இத்தொகையையும் வசூல் செய்யும் வகையில், இச்சட்டத்திற்கு திருத்தம் கொண்டுவரப்பட்டது.

இந்தச் சட்டமுன்வடிவிற்குக் குடியரசுத் தலைவரின் அனுமதி எதிர்பார்க்கப்படுகிறது. இவைகள் எல்லாம் வந்தால் நடைமுறைப்படுத்துவதில் மிகச் சிறப்பான சூழ்நிலை ஏற்படும் என்று குறிப்பிட்டுக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து தமிழ்நாட்டிலுள்ள தொழில் நிறுவனங்களின் உரிமையாளர்கள், தங்கள் தொழிலாளர்களுக்கு, அவர்கள் வாங்கும் ஊதியத்தில் 5 சதவிகிதம் அல்லது ரூ. 20 இவற்றில் எது அதிகமோ, அதனை வீட்டு வாடகைப் படியாக அளிக்க வகை செய்யும்படி ஒரு புதிய சட்டம் கொண்டு வரும் செயற்குறிப்பு அரசாங்கத்திடத்தில் இருக்கிறது. விரைவில் நிச்சயமாக அந்த முயற்சிகளில் அரசு ஈடுபடும் என்பதையும் இந்த வாய்ப்பிலே நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து திரைப்படத் தொழிலாளர்கள் பற்றிய குறிப்புகளை எல்லாம் எடுத்துச் சொன்னார்கள். மாநில தீர்ப்பாயங்களையே திரைப்பட தீர்ப்பாயங்களாகவும் அறிவிக்க மத்திய அரசு ஆலோசித்து வருவதாகத் தெரிகிறது. அந்த ஆணை கிடைத்த பிறகு அதன்மீது நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து இங்கே செயல்பட்டு வரும் குறைந்தபட்ச ஊதிய ஆலோசனைக் குழுக்கள்: உப்பளத்தொழில், ஆட்டொமொபைல் பணிமனைகள், ஜவ்வரிசித் தொழில், சந்தை மற்றும் அங்காடிகளில் பாரம் ஏற்றி இறக்கும் தொழில், எண்ணெய் ஆலைகள், பொது இன்ஜினியரிங் மற்றும் கட்டடமைப்புத் தொழில்—குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்ட தொழில்கள்; பாத்திரங்கள் தயாரிப்புத் தொழில், ஆட்டோ ரிக்ஷா மற்றும் டாக்சித் தொழில்.

குறைந்தபட்ச ஊதியம் மறு நிர்ணயம் செய்யப்பட்ட தொழில்கள்: அரிசி, மாவு மற்றும் பருப்பு ஆலைத் தொழில், மூக்குப்பொடி தயாரிப்புத் தொழில், தோட்ட நிறுவனத் தொழில், தோல் பதனிடும் மற்றும் தோல் தயாரிப்புத் தொழில், கயிறு தயாரிப்புத் தொழில், செங்கல் மற்றும் ஓடு தயாரிப்புத் தொழில், லாண்டரி மற்றும் துணி வெளுக்கும் தொழில், அச்சகத் தொழில், பீடி சுற்றும் தொழிலாளர்களுக்கு பால்பேக் வேஜஸ்.

சட்ட அட்டவணையில் சேர்க்கப்பட்ட தொழில்கள்; கள் மற்றும் பதநீர் இறக்கும் தொழில்.

பின்வரும் தொழில்களுக்குக் குறைந்தபட்ச ஊதியம் மறு நிர்ணயம் அரசின் பரிசீலனையில் உள்ளது. பொது போக்குவரத்துத் தொழில், விலைக்கு வாங்கும் நேயிலைத் தொழிற்சாலைகள், பீடி சுருட்டும் தொழில் ஆகியவை பரிசீலனையில் இருக்கிறது. விரைவில் முடிவு கட்டி நடவடிக்கை எடுக்கப்படும்.

அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹேமச்சந்திரன் அவர்கள், பேசுகிறபோது சென்னை தியாகராய நகரிலுள்ள மகளிருக்கான தொழிற் பயிற்சி நிலையத்தை செங்கற்பட்டு மாவட்டத்திற்கு மாற்றுவதற்கு ஏற்பாடு உள்ளதாகத் தெரிய வருகிறது என்று குறிப்பிட்டார்கள். இந்தப் பயிற்சி நிலையத்தை சென்னையிலேயே தொடர்ந்து நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

தொழில் வளம் நிறைந்த கோவையில் மற்றொரு தொழிற் பயிற்சி நிலையம் நிறுவ வேண்டுமென்ற கருத்து தெரிவிக்கப்பட்டது. கோவை மாவட்டம் திருப்பூரில் புதியதாக ஒரு





தொழிற்பயிற்சி நிலையத்தை நிறுவ திட்டமிடப்பட்ட 60 இலட்சம் ரூபாய் செலவாகிறது. இந்தப் பயிற்சி நிலையங்கள் மிகவும் பிற்பட்ட, வசதி குறைவானவர்களுக்காக உள்ளதால் 40 நிலையங்கள் தமிழ்நாட்டின் எல்லா மாவட்டங்களிலும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. நிதிநிலையைக் கருத்தில் கொண்டு உறுப்பினரின் கோரிக்கை பின்வரும் ஆண்டுகளில் பரிசீலிக்கப்படும். 40 ஐ.டி.ஐ தொழிற்பயிற்சி நிறுவனங்கள் இருக்கின்றன. 7-வது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 8 நிலையங்கள் திறக்கப்படலாம் என்ற கருத்து தெரிவித்து இருக்கிறார்கள். 1985—86-ல் இரண்டு பயிற்சி நிலையங்கள் துவக்கப்படுவதற்கு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. 1986—87-ல் அதாவது இந்த ஆண்டில் இரண்டு திறக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இங்கே உறுப்பினர்கள் எல்லாம் சொன்னது மாதிரி இன்ஜினியரிங் காலேஜில் இருந்து வெளிவருகிறவர்களைவிட ஐ.டி.ஐ.-இல் படித்துவிட்டு வெளி வருகிறவர்களைப் பொறுத்தவரையில் கிட்டத்தட்ட 100க்கு 90 பேர், 95 பேர் வேலையில் அமர்த்தப்படக்கூடிய நிலைமை இருக்கிறது. எனவே ஐ.டி.ஐ.-க்களை கூடுதலாகத் தொடங்க வழிவகை செய்யலாம் என்பது என்னுடைய கருத்து. அதை ஆயும்படி சொல்லியிருக்கிறேன். இந்த ஆண்டு இரண்டு துவக்கப்படுகிறது என்றாலும் கூட எதிர் காலத்தில் இதைக் கூடுதலாக ஆக்க அரசு முயற்சியை மேற்கொள்ளும் என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

நாகர்கோவிலிலுள்ள தொழிற்பயிற்சி நிலையத்தில் தொழில் பிரிவு மாற்றுத் திட்டத்தின் கீழ் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். இந்தத் தொழிற்பயிற்சி நிலையத்தில் வாழ்க்கைக்குத் தேவையான, பயிற்சியாளர்களால் விரும்பப்படும் தொழிற்பிரிவுகள் உள்ளன. இதில் (கம்மியர், மோட்டார் வண்டி) மோட்டார் மெக்கானிக் பயிற்சி, பிட்டர் பயிற்சி, வெல்டர் பயிற்சி, ஒயர்மென் பயிற்சி போன்ற பிரிவுகள் உள்ளன.

அடுத்து ஐ.டி.ஐ. ஆசிரியர்களுக்கு நல்லாசிரியர் விருதுகள் வழங்க வேண்டும் என்று கருத்துத் தெரிவித்தார்கள். அதுபற்றிய கருத்துரு அரசின் பரிசீலனையில் இருக்கிறது. பயிற்சியாளர்

களின் எண்ணிக்கைக்கேற்ப ஆசிரியர் நியமனம் செய்தல் வேண்டு மென்று சொன்னார்கள். என்.சி.வி.டி. அமைப்பின் பரிந்துரை களின்படி இந்த விகிதாச்சாரம் அனுசரிக்கப்படுகிறது. வேலை வாய்ப்பகங்களில் அப்ரண்டிஸ் தேர்வு பெற்றவர்கள் பதிவு செய்ய என்.ஏ.சி. சான்றிதழ்கள் வேண்டுமென்று வற்புறுத்தினார்கள். தாமதத்தை தவிர்க்க தற்காலிக சான்றிதழ்கள் அடிப்படையில் மனுதாரர்கள் வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து கொள்ளவேண்டும் என்று கருத்து தெரிவிக்கப்பட்டது. தற்போது அந்த நெறிமுறைகளின்படி தற்காலிக சான்றிதழ்களை வைத்துக் கொண்டு, வேலை வாய்ப்பு அலுவலகங்களில், அப்பரண்டிஸ் தேர்வு பெற்றவர்கள் பதிவு செய்து கொள்ள தடை ஒன்றும் இல்லை என்று இருக்கிறது. அந்த வகைகளிலே அதை நிறை வேற்றலாம்.

(மாலை 6-40)

அதிகப்படியான தொழில்வளர்ச்சி நிலையங்களைப் பற்றி நான் குறிப்பிட்டேன். சிவகாசியைப் பொறுத்தவரையிலும் தேசிய குழந்தைத் தொழிலாளர் நலச் சட்டம் ஒன்று மத்திய அரசின் உதவியோடு அண்மையில் ஆரம்பிக்கப்பட்டது. சென்ற திங்கள் 20 ஆம் நாள் மத்திய தொழிலாளர் நல அமைச்சர் மாண்புமிகு சங்மா அவர்கள் வந்து அந்தத் திட்டத்தைத் துவக்கி வைத்தார்கள். அந்தத் திட்டம் 13 கோடியே 89 லட்சம் ரூபாய்க் கான திட்டம். அது ஒரு நல்ல திட்டம். அந்த வகையில் 2 திட்டங்கள் தான் இந்தியாவிலேயே நிறைவேற்றப்படுகின்றன. ஒன்று உத்திரப்பிரதேசத்திலேயும் மற்றொன்று தமிழகத்திலேயும் என்று தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். தமிழகத்திலே சிவகாசியை அதற்காகத் தேர்ந்து எடுத்திருக்கிறார்கள். அந்தத் திட்டம் 3 ஆண்டுகளிலே நிறைவேற்றப்படும். 13 கோடியே 89 லட்சம் ரூபாய் அந்தத் திட்டத்தின் மதிப்பீடு.

அந்தத் திட்டத்தில் வருவாய் மற்றும் வேலை வாய்ப்பு பெருக்கத் திட்டம் (ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் போன்ற திட்டங்கள் மூலம் குழந்தைத் தொழிலாளர் குடும்பங் களின் வருமானத்தைப் பெருக்குதல்) என்ற வகையில் 9 கோடியே 10 லட்சம் ரூபாய் செலவழிக்கப்படும். முறைசாராக் கல்வி,



முதியோர் கல்வி மற்றும் ஆரம்பக் கல்வி போன்றவைகளுக்கு 29 லட்சத்து 25 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்படும். குடும்பநலம் மற்றும் மருத்துவத்திற்கு ரூ. 7 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்படும். குழந்தைத் தொழிலாளர்களுக்கு ஒரு நாளைக்கு ஒரு வேளைக்கு சத்துணவு அளிப்பது போன்றவைகளுக்கு 4 கோடியே 80 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்படும். அந்த வகையில் மொத்தம் 13 கோடியே 89 லட்சம் ரூபாய் திட்டம் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட இருக்கிறது.

தற்போது நடைமுறையில் இருக்கும் முறைசாராக் கல்விக் கான அமைப்பினை ஓரளவு வலுபபடுத்துவது மாநில அரசின் பங்காக அமையும். மருத்துவம் மற்றும் குடும்பநலத்திற்கான செலவினத்தை மாநில தொழிலாளர் ஈட்டுறுதிக் கழகம் ஏற்கும்.

இத்திட்டத்தில் அடங்கியுள்ள சிறார்களுக்கு சத்துணவு வழங்குவதற்கான செயற்குறிப்பு மாண்புமிகு முதலமைச்சரின் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தின் கீழ் வராது. முதலில் இதற்கான செலவை மைய அரசு ஏற்கும். தொழிற்சாலை நிர்வாகிகளிடமிருந்து தீர்வை (செஸ்) மூலமாகவும், மற்றும் மைய அரசின் கூடுதல் நிதி ஒதுக்கீட்டின் மூலமாகவும் இதற்கான நிதி ஏற்பாடு செய்யப்பட்டால் தான், இச் செயற்குறிப்பை தொடர்ந்து எடுத்துக்கொள்ள இயலும். தீர்வை வசூலிப்பது பற்றிய செயற்குறிப்பு மைய அரசின் பரிசீலனையில் இருக்கிறது. இது ஒரு மிக நல்ல திட்டம். இது தற்போது மூன்று ஆண்டு களுக்குள்ளாகவே நடந்து முடிந்துவிட்டாலும் தொடர்ந்து நடை பெறுவதற்கான வழி வகைகள் செய்யப்பட வேண்டும் என்பது இந்த அரசினுடைய நோக்கம். அதற்கான வழி வகைகளிலே ஈடுபடும்.

மற்றொரு சிறப்புக்குரிய திட்டத்தை நான் அறிவிக்க விரும்பு கிறேன். அண்மையிலே நேஷனல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனியி னுடைய நிர்வாகிகளோடு பேசிக் கொண்டிருக்கும்போது அவர்கள் ஒரு சிறப்பான திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு ஒப்புதல் அளித்தார்கள். அந்த வகையில் குறிப்பாக தீப்பெட்டி, பட்டாசு தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு

தனி நபர் தொகுதி ஈட்டுறுதித் திட்டம் என்று பெயர் வைக்கப்பட்டு, குறிப்பாக சென்னையிலும் கூட பேக்டரி போன்ற வேறு பல தொழிற்சாலைகளுக்கும் கூட விரிவுபடுத்த முடியும்.

இதன் முக்கிய நோக்கம் என்னவென்று கேட்டால் இந்தத் திட்டத்தில் 14 வயதிலிருந்து 60 வயது வரை உள்ள அனைத்துத் தொழிலாளர்களும் சேரலாம். இந்தத் திட்டம் தன்னிச்சையான வாலண்டரி திட்டம் ஆகும். இந்தத் திட்டத்தில் சேருகின்ற தொழிலாளர்கள், ஆண்டு ஒன்றுக்கு நபர் ஒருவர் 10 ரூபாய் செலுத்த வேண்டும். தொழிலாளர்கள் ஆண்டு ஒன்றுக்கே 10 ரூபாய் செலுத்தினால் போதும். அவ்வளவுதான். அவர்கள் ஒரு ஆண்டுக்கு 10 ரூபாய் மட்டும் செலுத்திவிடுவார்களேயானால், அந்தத் திட்டத்தில் சேர்ந்த உறுப்பினர்கள் பணியில் ஈடுபட்டு இருக்கும்போதோ அல்லது பணியில் ஈடுபடாத நேரத்திலோ விபத்து ஏற்பட்டால் விபத்தின் தன்மைகளுக்கு ஏற்ப கீழ்க் கண்டவாறு விபத்து உதவித் தொகை வழங்கப்படும்.

வேலையில் ஈடுபட்டிருக்கும்போது விபத்தினால் மரணம் சம்பவித்தால் அவர்களுக்கு அந்தக் கம்பெனி 16 ஆயிரம் ரூபாய் தரும். ஆண்டுக்கு 10 ரூபாய் செலுத்தினால் போதும். ஆனால் அவர்களுக்கு விபத்து ஏற்பட்டாலோ, விபத்து பேக்டரியிலேதான் ஏற்பட வேண்டும் என்றுகூட அல்ல, வெளியிலே விபத்து ஏற்பட்டாலோ கூட அந்த வகையிலே எல்லாம் அவர்களுக்கு 16 ஆயிரம் ரூபாய் தரப்படும்.

வேலையில் ஈடுபட்டுள்ளபோது விபத்தினால் இரண்டு அங்கங்களை இழந்தாலோ அல்லது இரண்டு கண்களை இழந்தாலோ அல்லது ஒரு கண், ஒரு அங்கத்தை இழந்தாலோ அல்லது முற்றிலும் செயலற்றுப் போனாலோ அதற்கும் 16 ஆயிரம் ரூபாய் உதவித் தொகையை இந்தத் திட்டம் தரும். வேலையில் ஈடுபட்டுள்ளபோது ஒரு அங்கத்தை, ஒரு கண்ணை இழந்தால் அல்லது முற்றிலும் செயலிழந்தால், ஒரு கண், ஒரு அங்கம் இழந்தால் 8 ஆயிரம் ரூபாய் இந்தத் திட்டத்தின் கீழ் கிடைக்கும். [illegible] சொன்னவைகளைத் தவிர்த்து விபத்தில் நிலையாக ஊனம் ஏற்பட்டால் 16 ஆயிரம் ரூபாய் தரும். ஆண்டு ஒன்றுக்கு மொத்தத்தில் 10 ரூபாய் செலுத்த வேண்டும். மாதம் ஒன்றுக்கு ஒரு



ரூபாய் கூட வாராது. இந்த வகையில் மற்றத் தொழிலாளர்களையும் ஈடுபடுத்தலாம் என்று எண்ணிக் கொண்டிருக்கிறோம். சாதாரணமாக தீப்பெட்டி, பட்டாசு தொழிற்சாலைகளில்தான் விபத்துகள் அதிகமாக ஏற்படுவதன் காரணமாக இதிலே ஈடுபட்டுவிடுவார்களானால் அவர்களுடைய குடும்பப் பிழைப்பதற்கு வேறு பல திட்டங்களை நாம் வைத்திருந்தாலும் இந்தத் திட்டம் நல்ல திட்டம். இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்தலாம் என்று ஊக்கம் தந்திருக்கிறோம். இந்தக் கம்பெனியினர் விரைவில் இதை நடைமுறைப்படுத்துவதற்கு முயற்சி செய்வார்கள் என்றும் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

வேறு பல பிரச்சனைகளைப்பற்றியெல்லாம் உறுப்பினர்கள் பலரும் எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். அவற்றிற்கெல்லாம் ஒவ்வொன்றாக விடையளிக்க இயலும் என்றாலும், நேரம் இல்லாத காரணத்தால், அவற்றை ஒவ்வொன்றாகக் குறிப்பிட விரும்பவில்லை. குழந்தைகள் காப்பகம் அமைப்பதில் முப்பது பெண்கள் பணியாற்றினால் அந்தத் தொழிற்சாலையில் ஒரு குழந்தைகள் காப்பகம் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று சட்டம் இருந்து வருகிறது. 13,150 தொழிற்சாலைகளில் 30-க்கு மேல் பெண்கள் பணியாற்றும் தொழிற்சாலைகள் 800-க்கு மேல் இருக்கின்றன. இதிலே 450 தொழிற்சாலைகளில் குழந்தைகள் காப்பகங்கள் இருக்கின்றன. இன்னும் 350 இடங்களில் காப்பகங்கள் அமைக்கப்பட வேண்டும். அவற்றை அமைப்பதற்கான முயற்சியை நாம் மேற்கொண்டு வருகிறோம்.

பவானி மில்லைப் பற்றி குறிப்பிட்டார்கள். 17—9—1985 முதல் வேலை நிறுத்தம். நிர்வாகம் 2—10—1985 முதல் கதவடைப்பைச் செய்துள்ளது. தொழிலாளர் தகராறு என்பதால் கோவை துணை ஆணையர் முன்பு நான் சொன்னதைப் போல பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருக்கிறது. ஒரு சுமுகமான சூழ்நிலை ஏற்பட்டால் அந்த அடிப்படையில் இதற்கு ஒரு தீர்வு காண முடியும் என்று கருதுகிறேன்.

அடுத்து தொழிலாளர்கள் 480 நாட்களுக்கு மேல் தொடர்ந்து பணியாற்றினால் நிரந்தரமாக்க வேண்டுமென்ற சட்டத்தின் கீழ் 1982-லிருந்து 22 ஆயிரம் பேர்கள் நிரந்தரமாக்கப்பட்டிருக்கி-

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1986 மே 7

றார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் கூறுவதைப் போன்று வேறு சில தொழிற்சாலைகளில், மற்ற இடங்களில் 480 நாட்களுக்கு மேல் பணியாற்றிய பிறகும் நிரந்தரமாக்கப்படாமல் இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அதன் மீது தக்க நடவடிக்கையெடுக்கப்படும். அவர்களை நிரந்தரமாக்குவதற்கான முயற்சியை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதைக் கூறிக் கொள்கிறேன்.

அரசு எப்போது சட்டத்தை நிறைவேற்றி விட்டதோ, அதை நடைமுறைப்படுத்த வேண்டுமென்று சொல்லி விட்டோமோ, அதை நடைமுறைப்படுத்துவதுதான் அரசினுடைய நோக்கம். அதிலே பின்வாங்க வேண்டிய அவசியமில்லை என்று இந்த வாய்ப்பிலே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

ஒப்பந்தத் தொழிலாளர்கள் சட்டம், 1975 ஆம் ஆண்டில் அமலாக்கப்பட்ட மத்திய சட்டத்தின் கீழ், 1977 ஆம் ஆண்டு முதல் நம்முடைய மாநிலத்தில் ஆலோசனைக் குழு செயல்பட்டு வருகிறது. அதன் அடிப்படையில் 1—5—1981 முதல் சிமெண்ட் தொழிற்சாலையில் கோணிப் பைகளில் அச்சடித்தல், பேக்கிங் செய்யும் இடத்தில் பைகளில் சிமெண்ட் நிரப்புதல் ஆகிய பகுதிகளில் எல்லாம் ஒப்பந்தத் தொழிலாளர் முறை நீக்கப்பட்டுள்ளது. காகிதத் தொழிற்சாலை, இரசாயனத் தொழிற்சாலை ஆகிய இரண்டிலும் ஒப்பந்தத் தொழிலாளர் முறையை நீக்கும் அறிக்கை பரிசீலனையில் இருந்து வருகிறது. அதேபோல பொறியியல் துறை, மற்றும் தெர்மல் பவர் ஸ்டேஷனில் ஒப்பந்தத் தொழிலாளர்கள் முறையை நீக்கும் கருத்துருக்களும் இந்தக் குழுவின் பரிசீலனையில் உள்ளன. விரைவில் அதுபற்றி நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

தோட்டங்களில் ஆட்களை வேலைக்கு எடுப்பதைப்பற்றி ஒரு நபர் கமிட்டி 1978 ஆம் ஆண்டில் நியமனம் செய்யப்பட்டு அது அறிக்கை தந்திருக்கிறது. அந்த அறிக்கையின் அடிப்படையில் Conferment of Permanent Status Act 1981-ன் கீழ் இந்தப் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ளலாம் என்ற முடிவை அரசு எடுத்திருக்கிறது. சில பஞ்சாலைகளில் ஊதிய உயர்வு பிரச்சனையை பிரிவு 10-ல் தீர்ப்பாயத்திற்கு விடவேண்டுமென்ற



1986 மே 7] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

கோரிக்கையை மாண்புமிகு உறுப்பினர் செங்காளியப்பன் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆகவே தொழிலாளர் துறையினுடைய ஆணையர் விசாரித்து அரசாங்கத்திற்கு அறிக்கை சமர்ப்பித்து உள்ளார். அந்த அறிக்கை அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது. விரைவில் அதுபற்றி நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(மாலை 6-50)

வேறு பல பிரச்சினைகளைப் பற்றியெல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள் என்றாலும் தோல் பதனிடும் தொழிலாளர்கள் பற்றியும், டெக்ஸ்டைல் இண்டஸ்ட்ரீஸ் தொழிலாளர்கள் பற்றியும், தோட்டத் தொழிலாளர்கள் பிரச்னைகள்பற்றியும் வேறு பல பிரச்னைகளையும் இங்கே குறிப்பிட்டு இருக்கிறார்கள். அவைகள் எல்லாம் அரசினுடைய கவனத்தில் வைக்கப்பட்டு இந்தத் தொழிலாளர் நலத் துறையில் தக்க நடவடிக்கை மேற்கொள்வார்கள் என்பதை எடுத்துச் சொல்லி, அதைப் போல வேலை வாய்ப்புத் துறையிலும் பல்வேறு முயற்சிகளை நாமும் மேற்கொண்டு வருகிறோம் என்பதற்காக பல்வேறு குறிப்புகள் இங்கே தரப்பட்டுள்ளன. அந்த அடிப்படையில் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதை மாண்புமிகு உறுப்பினர்கள் அந்தக் குறிப்புகளிலிருந்து மிக நன்றாக அறிவார்கள். கூடுமானவரையில் பதிவு செய்யப்பட்டு இருக்கிறார்கள் என்றாலும் கூட 31—3—1986 ஆம் நாளன்று உள்ள கணக்குப்படி பார்த்தால், 21,45,637 பேர்கள் பதிவு செய்யப்பட்டு இருக்கிறார்கள். வேலையில் அமர்த்தப்பட்டவர்கள் சென்ற ஆண்டு, 52,390 பேர்கள். 1986 ஆம் ஆண்டு, இந்த மூன்று திங்களில் 12,809 பேர்களை வைத்திருக்கிறார்கள் என்றாலும் கூட, பதிவு செய்யப்பட்டு இருப்பவர்கள் அத்தனை பேர்களுமே வேலை இல்லாமல் இருக்கிறார்கள் என்று நாம் கொள்ள இயலாது. அதிலே கிட்டத்தட்ட பாதிப் பேர்கள், அல்லது மூன்றிலே ஒரு பங்கினர் ஏதோ ஒரு வேலையிலே அமர்ந்து கொண்டுதான் இருப்பார்கள். இருந்தாலும் இதிலும் இருக்கட்டுமே, நல்ல வேலை வந்தால் பார்க்கலாமே என்ற அளவிற்குத்தான் இருப்பார்கள். இருந்தாலும் அதிலே வைக்கப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகிறார்கள். அந்த

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1986 மே 7

வகையில் பார்க்கும்போது, பல்வேறு பிரிவினர் இருக்கிறார்கள் அவர்களுக்கு வேலைவாய்ப்பு தருகின்ற முயற்சியிலே கூட நம்மு டைய மாநிலத்திலே கூடுமான வரையிலும் நல்ல ஒரு நிலைமை தான் வருகிறது. பதிவு செய்யப்பட்டவர்களுக்கு வேலை வாய்ப்புத் தருகின்ற வகையிலே கூட, நாம் சென்ற ஆண்டு கணக்கை எடுத்துப் பார்த்தாலும், 9.81 சதவிகிதத்தினரை நாம் வேலைக்கு அமர்த்தி இருக்கிறோம். மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்த்தாலும் இது ஓரளவிற்கு நிறைவு தருகின்ற அளவிற்கு இருக்கிறது. முழு நிறைவு தராவிட்டாலும் கூட நிறைவு தரு கிறது. இன்னும் கொஞ்சம் அதிகமாக வேலைவாய்ப்பு ஏற்பட் டால் நல்லது. அதற்கு பல்வேறு வகைகளிலே நாம் செய் கிறோம். தேர்வாணைக் குழுவின் மூலமாகவும், வேலை வாய்ப்புத் தரப்படுகின்றது. வேலை வாய்ப்பு அலுவலகத்தின் மூலமாகவும் வேலைவாய்ப்பு ஏற்படுத்தித் தரப்படுகிறது. ஆகவே இந்த வேலைவாய்ப்பகத்தின் மூலமாகத்தான் வேலைவாய்ப்பு களைத் தரவேண்டும் என்ற கண்டிப்பான உத்தரவை மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் இட்டிருக்கிறார்கள். ஆகவே ஆங் காங்கு அவரவர் இஷ்டப்படி வேலைவாய்ப்பு தரக்கூடாது என்றும், அரசாங்கத்தின் சார்பாக நடைபெறுகின்ற பொது நிறுவனங்களில் வேலைக்கு ஆட்கள் எடுக்க வேண்டும் என்றால், இந்த வேலைவாய்ப்பகத்தின் மூலமாகத்தான் எடுக்க வேண்டும் என்றும் சொல்லியிருக்கிறோம். ஆகவே கூடுமான வரையில் தனியார் துறையைச் சேர்ந்தவர்கள் இந்த வேலை வாய்ப்பகத்தைப் பயன்படுத்த முன்வருவார்களானால், அதன் மூலமாக நாட்டுக்கு நல்ல பல விளைவுகள் ஏற்படக்கூடும்.

ஆந்திரப் பிரதேசத்தை எடுத்துக்கொண்டால், 5.95 சதவிகிதமும் பீகாரில் 2.41 சதவிகிதமும், கர்நாடகாவில் 7.15 சதவிகிதமும், கேரளா விலே 3.85 சதவிகிதமும், மகாராஷ்டிரத்திலே 6.94 சதவிகிதமும் உத்திரப்பிரதேசத்திலே 3.45 சதவிகிதமும், மேற்கு வங்காளத்திலே 3.66 சதவிகிதமும், ஆக இப்படி இருக்கிற நிலைமையில், தமிழ கத்தில் 9.81 சதவிகிதம் என்று இருப்பது ஓரளவிற்கு நம்முடைய முயற்சியினுடைய தன்மையைக் காட்டுகிறது. அதிலே நல்ல பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்பதையும் எடுத்துச் சொல்லி, மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் எடுத்துச்



1986 மே 7] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

சொன்ன மற்ற பல கருத்துக்களை விடுபட்ட கருத்துக்களாகக் கருத வேண்டிய அவசியம் இல்லை, அவற்றின் மீது தக்க நடவடிக்கைகளை அந்தத் துறையினர் மேற்கொள்வார்கள் என்பதை எடுத்துச் சொல்லி, இந்தத் துறை சிறப்பாகவும் செம்மையாகவும், நடந்து வருவதற்கு, பணியாற்றி வருகின்ற செயலாளர் மற்றும் ஆணையாளர், இந்தத் துறையைச் சேர்ந்த அதிகாரிகள், அலுவலாளர்கள், மற்றும் அதைப்போன்று வேலை வாய்ப்புத் துறையைச் சேர்ந்த அதிகாரிகள் மற்றும் அலுவலாளர்கள் ஆகிய அத்தனை பேர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் சிறந்த சீரிய கருத்துக்களைச் சொல்லி அரசுக்கு உதவியாக இருக்கும்படியாக கேட்டுக் கொண்டு, தொடர்ந்து இருக்கும்படியாக கேட்டுக்கொண்டு மாச்சரியங்கள் ஒரு பக்கம் இருந்தாலும் கூட, உதவி யாக இருந்து, நல்லவைகள் நடக்கட்டும், நல்லவைகளாகவே இருக்கட்டும், நடந்தவைகள் நடந்தவைகளாக இருக்கட்டும், ப்பவைகள் நல்லவைகளாக இருக்கட்டும் என்று கூறி அமை கிறேன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் மேற்கு வங்கத்திலே மாண்புமிகு முதலமைச்சர் ஜோதிபாசு அவர்கள் தொழிற் தகராறுகளைப் பொறுத்து பேசி முடிவு ஏற்படுத்திக் கொள்ளவேண்டும் என்று அவர்கள் அறிவித்த அந்தக் கருத்தை எடுத்துச் சொன்னார்கள். ஆனால் அதே முதலமைச்சருடைய அரசு, அங்கே பேசி, ஒரு முடிவு ஏற்படுத்துவதற்கு குறுக்கே நிற்கக்கூடிய நிர்வாகங்களுக்கு எதிராக, அங்கே தொழிலாளர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்திலே ஈடுபடக்கூடிய நேரத்தில், காவல்துறையை முதலாளிகளுக்கு ஆதரவாக அனுப்புவதில்லை. ஆனாலும் இங்கே பின்னி இன்ஜினியரிங் தொழிற்சாலையைப் பொறுத்தவரையில், இங்கே அறிவிக்கப்பட்ட அந்தக் கருத்தை அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. அதற்குப் பிறகும், அவர்கள் லையைத் திறக்கவில்லை. அப்படி இருந்தும், காவல்துறையி னுடைய ஆதரவு அங்கே இருக்கின்ற பொருட்களை எடுத்துச் செல்வதற்கு கொடுக்கப்பட்டு இருக்கிறது. ஆகவே அப்படிப்

பட்ட கொள்கையை அல்லது நடைமுறைகளை மாற்றி, மேற்கு வங்காளத்திலே இருக்கின்ற முதலமைச்சர் ஜோதிபாசு அவர்கள் எடுத்துக்கொண்டு இருக்கக்கூடிய அந்தக் கொள்கை, வேலை நிறுத்தத்தைப் பொறுத்தவரையில்—முதலாளிகள் ஒரு நியாய மான முடிவுக்கு வர—இங்கே கடைப்பிடிக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, மேற்கு வங்க மாநிலத்தைப் பற்றியோ, அல்லது முதலமைச்சரைப் பற்றியோ விமர்சிக்க நான் விரும்பவில்லை. ஆனால் மேற்கு வங்க மாநில முதலமைச்சர் சொன்ன கருத்துக்கு ஆக்கம் தருகின்ற வகையில், ஊக்கம் அளிக்கின்ற வகையில் அவர்கள் சொன்னதை ஏற்று, நான் இங்கே எடுத்துச் சொன்னேன். ஆகவே மேற்கு வங்க சூழ்நிலைகளைப் பற்றிச் சொல்ல மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விரும்புவார்களானால், வேறு வகையிலே அது அமையும். ஆகவே அவர்கள் கடைப்பிடித்து இருக்கக்கூடிய கொள்கைகள் வெற்றி பெறவில்லை என்பது என்னுடைய எண்ணம். ஆக, மேற்கு வங்கத்திலே புதியதாக தொழிற்சாலையைக் கொண்டுபோய் வைக்க அஞ்சுகிறார்கள் என்பது என்னுடைய கருத்து. ஆக, அப்படிப்பட்ட சூழ்நிலைகள் இங்கே ஏற்படக்கூடாது. முதலாளிகளுக்கு ஆதரவாக நாம் காவல்துறையினரை அனுப்புவதே இல்லை. நான் இப்போதும் சொல்கிறேன், எந்த முதலாளியையும் காப்பாற்ற வேண்டிய அவசியம் இல்லை. எந்த முதலாளியும் காப்பாற்ற வேண்டிய நிலையிலேயும் இல்லை. ஒவ்வொரு முதலாளியும் எட்டு தலைமுறையைக் காப்பாற்றக்கூடிய அளவுக்கு வசதி படைத்தவர்களாகத்தான் இருக்கிறார்கள். தொழிற்சாலைகளைக் காப்பாற்ற வேண்டிய அவசியம் இருக்கிறது. ஆக, தொழிற்சாலைகளிலே இருக்கிற இயந்திரங்களையும், மற்றவைகளையும் காப்பாற்றித்தான் தீரவேண்டும்.

ஜப்பானுக்கு நான் போய் இருந்தபோது பார்த்தேன். அங்கே வேலைநிறுத்தம் என்று சொன்னால் கருப்பு பேட்ஜ் அணிகிறார்கள். அப்படியும் வேலைநிறுத்தம் என்று சொன்னால் முதல்நாள் முழுவதும் அந்த இயந்திரங்களுக்கு எல்லாம் எண்ணெய் ஊற்றி, துடைத்து சரியாக வைத்துவிட்டு மறுபடியும்





வந்து தாங்கள் அந்த இயந்திரங்களிலே வேலைசெய்ய வேண்டி வரும் என்று ரெஸ்பான்சிபிலிட்டியோடு செய்துவிட்டுத்தான் வெளியே போகிறார்கள். ஆக, அப்படிப்பட்ட உணர்வு அங்கே இருக்கிறது. ஆக, அந்த முறையிலேதான் தொழிற்சாலையைக் காப்பாற்றவேண்டுமென்று கருதுகிறோமே தவிர முதலாளிகளைக் காப்பாற்ற வேண்டிய அத்தகைய தன்மை இல்லை. முதலாளிகளெல்லாம் மிக சொகுசாக முதல் மாடியிலும், இரண்டாவது மாடியிலும், அரண்மனையிலும் வாழ்ந்துகொண்டு இருக்கிறார்கள். அவர்களைக் காப்பாற்றவேண்டிய அவசியம் இல்லை. ஆனால் ஒத்துழைக்கவேண்டுமென்று நான் சொல்வதற்குக் காரணமே, ஒத்துழைத்தால் எல்லாவகையிலும் நன்றாக இருக்கும். இன்று என்றால் கடைசியில் பாதிக்கப்படுபவர்கள் தொழிலாளிகளாகத்தான் இருக்கிறார்கள். தொழிற்சாலை மூடப்பட்டால், முதலாளிகளுக்கு கஷ்டம் இல்லை. ஒரு ஐந்து கோடி செலவழித்து ஒரு தொழிற்சாலையை ஆரம்பிப்பதைவிட ஐந்து கோடியை ஃபிக்ஸட் டெபாஸிட்டிலே, இண்டியன் பேங்க்-லே போட்டுவிடுவார்களே [illegible]னால், 12 சதவிகிதம் பிக்ஸட் டிபாசிட்டிலே வந்தால் அந்த வட்டியை வைத்துக்கொண்டே அவர்களுடைய குடும்பங்கள் பல தலைமுறைகளுக்குக்கூட வாழ்ந்துவிட முடியும். ஆகவே, அவர்களைப்பற்றிய கவலை நமக்கு இல்லை. தொழிலாளர்களைப் பற்றித்தான் நமது கவலையெல்லாம். ஆகவேதான் நான் எடுத்துச் சொன்னதற்குக் காரணம், அவர்கள் சொன்ன கருத்து, நல்ல கருத்து, அவர்களே அந்த முடிவுக்கு வந்திருக்கிறார்கள் என்பதற்காக ஒரு நல்ல எண்ணத்தில் நான் சொன்னேனே தவிர ஒரு தீய நோக்கத்தினுடைய அடிப்படையில் அல்ல.

திரு. ஆர். செங்காளியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள், நான் சொன்னதற்கு பதில் சொல்லும்போது இங்கே அந்த 14 ஆலைகளுக்கு நீதிமன்றத்திற்கு ரெப்பான்ஸ், நம் சர்க்காரிடமிருந்து கொடுக்கப்படவில்லை. அதற்குப்பின்னாலே சென்ற மாதம் 11 ஆம் தேதியன்று திரு [illegible]மைச்சர் அவர்கள், அதிகாரிகள் இருந்த நேரத்தில் சொன்ன போது அதை அனுப்பிவிடலாம் என்று ஒப்புதல் அளித்தார்கள். ஆனால் ஒன்றுக்கு மாத்திரம் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

[திரு. ஆர். செங்காளியப்பன்] [1986 மே 7

நேற்றையதினம், நீதிமன்றம் நடைபெற்றுக்கொண்டிருந்தபோது என்னை நீதிபதி அவர்கள் கேட்டார்கள். மற்ற 13 மில்லும் என்ன ஆயிற்று? வருமா? நான் 'அவார்ட்' சீக்கிரத்தில் கொடுக்க வேண்டும்; வேலையை முடிக்கவேண்டும் என்று அவர்கள் கேட்டார்கள். ஆகையினாலே இந்த ஒப்புதலை சீக்கிரம் அளித்து அவைகளை அனுப்பினால், பஞ்சாலைத் தொழிலாளர்களுடைய சம்பளப் பிரச்சனையாவது முடிவுறும் என்பதைத் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றி முழு விவரங்கள் எனக்கு தெளிவாக அளிக்கப்படவில்லை. அதுபற்றி அதிகாரிகளை ஆராய்ந்து, அந்த நிலைமைகளைத் தெரிந்து தக்க முடிவு எடுக்கலாம். தேவைப்பட்டால் மாண்புமிகு உறுப்பினர் செங்காளியப்பன் அவர்களையும் கலந்துகொண்டு இருக்கிற சூழ்நிலையை அறிந்து என்ன நடவடிக்கை எடுக்கலாம் என்பதைப்பற்றி நான் முடிவு செய்கிறேன்.

**திரு. மா. சின்னராசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கொள்கைக் குறிப்பில் மத்திய அரசாங்கம் தொழிலாளர்களுக்காக வீடு கட்டிக்கொடுப்பதற்கு கொடுத்துவந்த நிதி உதவியை நிறுத்திவிட்டார்கள் என்று குறிப்பிட்டு, மாநில அரசாங்கமே தொழிலாளர்களுக்கு வீடு கட்டுவதற்கான திட்டத்தை பரிசீலித்து வருகிறது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அது எந்தவகையில் நடைமுறைப்படுத்தப் படும். விரைவிலே அது நடைமுறைக்கு வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது பரிசீலனையில் இருக்கிறது என்று சொல்கிற காரணத்தால் இருக்கிற சூழ்நிலையை நாம் ஆராய வேண்டும். மேலும் மத்திய அரசை வற்புறுத்தி இந்தத் திட்டத்திற்கு உதவி செய்யவேண்டுமென்றும் அரசு கோரும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** விவாதம் முடிவுற்றது; இப்போது வாக்கெடுப்பு.



1986 மே 7]

திருவாளர்கள் கு. சுப்பராயன், எ. எஸ். ஏ. ஆறுமுகம், சு. பாலன் மற்றும் மு. இராசாங்கம் ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுதீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றனவாகக் கருதப் பெற்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி:

"மானியக் கோரிக்கை எண் 29—'தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும்' என்ற தலைப்பின்கீழ் ரூ. 14,50,07,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (8—5—1986) காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை இரவு 6-59 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 6. பேரவை முன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

### (அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

80. 1969 ஆம் ஆண்டு கூடலூர் ஜன்மம் எஸ்டேட்ஸ் (ஒழித்தல் மற்றும் ரயத்வாரி முறையில் மாற்றுதல்) சட்டத்தில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வணிக வரிகள்-சமய அறக் கட்டளைகள் துறையின் 2—1—1986 ஆம் நாளிட்ட 1 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1969 ஆம் ஆண்டு கூடலூர் ஜன்மம் எஸ்டேட்ஸ் (ஒழித்தல் மற்றும் ரயத்வாரி முறையில் மாற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 24/1969) 60 (5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

81. மேல்மருவத்தூரில் உள்ள ஆதிபராசக்தி சமய, மருத்துவம், கல்வி மற்றும பணபாட்டு அறககட்டளைக்கு (மகளிர் பிரிவு) சொந்தமான சில மோட்டார் வண்டிகளுக்கு செலுத்தக் கூடிய வரியில் சலுகை அளிப்பது குறித்து உள் (போ. 1) துறையின் 6—1—1986 ஆம் நாளிட்ட 26 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

82. சென்னை, கால்நடை நல வாரியத்திற்குச் சொந்தமான ஜி.டி.எஃப். 2933 எண்ணுள்ள ஆம்புலன்ஸ் வண்டிக்கு செலுத்தக் கூடிய வரியில் சலுகை அளிப்பது குறித்து உள் (போ. 1) துறையின் 8—1—1986 ஆம் நாளிட்ட 41 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

83. சென்னை நில அளவை மற்றும் நிலத்தீர்வை இயக்குநருக்கு அதிகார ஒப்படைப்பு தருவது குறித்து வணிக வரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 27—9—1985 ஆம் நாளிட்ட 864 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1923 ஆம் ஆண்டு நில அளவை மற்றும் எல்லைச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1923) 26 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

### (ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள் ஏனைய தாள்கள்.

172. கோரிக்கை எண் 29—தமிழ்நாட்டில் தொழிலாளர்கள் நிலைமை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு 1986-87 (தமிழ், ஆங்கிலம்).

173. வேலை வாய்ப்பு-பயிற்சி பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு 1986-87 (கோரிக்கை எண் 29-ன் துணைக் கோரிக்கை).





## இணைப்பு 1.

(96-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

## தமிழ்நாட்டில் தொழிலாளர் நலன்.

### அத்தியாயம் 1.

### பொது.

நமது மாநிலத்தின் தொழிலாளர் நலத் துறையின் தலையாய பொறுப்பு, இங்கு தொழில் அமைதி நிலவும் சூழ்நிலையை நிலை பெறச் செய்வதாகும். இத்தகைய தொழில் அமைதிச் சூழ் நிலையில் தொழிலாளர்களுக்குரிய சட்டப் பூர்வ உரிமைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டு, அவர்கள் முறையிடுகின்ற குறைகள் களையப் பெறும், மேலும், அத்தகைய அமைதிச் சூழ்நிலையில் தான் தொழில் அதிபர்கள் அல்லது வேலை அளிப்பவர்கள் பொதுவாக சமுதாய நலனில் அக்கறை கொண்டு, தொழில் வளர்ச்சிக் கென எவ்விதக் கட்டுப்பாடும் இன்றி சுதந்திரமாகத் திட்டமிட்டு உழைக்க இயலும். அதே சமயத்தில் சமுதாயத்தின் பொது நலனில் அக்கறை காட்டுகின்ற அதே அளவிற்கு, அவர் கள் தொழிலாளர் நலனிலும் அக்கறையும் ஆர்வமும் எடுத்துக் கொள்ளவேண்டும். சமுதாயத்தின் ஒட்டு மொத்தமான பொது நன்மையைக் கருதி, தொழிலாளர்களுக்கும் தொழிலதிபர் களுக்கும் இடையே சுமுகமான நல்லுறவு நிலை நிறுத்தப் பாடு படுவதையே துறை தனது நடவடிக்கைகளிலும் பணிகளிலும் வழி காட்டும் அடிப்படை நெறியாக மேற் கொண்டிருந்தது. ஒரு புறம் பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்கள் செயற் படுத்தப்பட்டன. இந்த தொழிலாளர் நலச் சட்டங்கள் தொழி லக வாழ்வின் இன்றியமையாத கூறுகளைக் குறித்து இயற்றப் பட்டவையாகும். அவையாவன:—வேலை, நிபந்தனைகள், வழங்கப்படவேண்டிய ஊதியம், தொழிலாளர்கள் வேலையின் போது ஏற்படுகின்ற விபத்துகளினின்று அவர்களுக்கு உடலுக் கும் உயிருக்கும் ஊறு நேராமல் பாதுகாப்பளித்தல், அன்றியும், அவர் வேலையை விட்டு வீடு திரும்பிய நிலையில், அவருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் சமுதாய வகையிலும் பொருளா தார வகையிலும் நெருக்கடிகள் சுமத்தப்படாமல் பாதுகாப் பளித்தல் ஆகியவை ஆகும். இன்னொரு புறம், இத்துறை முன் உணர்வோடு பல நல நடவடிக்கைகள் எடுத்தும் செயற் படுத்துகிறது. இத் துறை இவ்விருவகை நடவடிக்கைகளாலும் (சட்டப்படி எடுக்கும் நல நடவடிக்கைகள், தானாக, முன்னு ணர்ந்து எடுக்கும் நல நடவடிக்கைகள்) நாட்டில் ஒரு சுமுக மான நல்லிணக்கச் சூழ் நிலையை உருவாக்க முயன்று வருகிறது. இந்த நல்லிணக்கச் சூழ்நிலையில், தொழிலாளர்களும் சரி தொழிலதிபர்களும் சரி நாட்டின் பொதுவான நலனைக் கருத் திக் கொண்டு அவர்கள் ஒருவருக்கொருவர் ஆற்ற வேண்டிய கடப்பாடுகளை அவர்கள் தாமே அறிந்து செயல்படத் தூண்டப் படுகின்றனர்.

[1986 மே 7

இந்த அரசு ஏற்றுக்கொண்டுள்ள, செயற்படுத்த உறுதி பூண்டுள்ள தொழிலாளர் நலக் கொள்கை பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களையும் செயற்படுத்துவது. அவற்றை மீறத் தலைப்படுவோரை தடுத்து அவர் மீது நடவடிக்கை எடுப்பது என்பதுடன் நின்று விடவில்லை. மாறாக இவ்வாறு நலச் சட்டங்களைச் செயற்படுத்தி அவற்றை மீறுபவர் மீது நடவடிக்கை எடுக்கின்ற அதே சமயத்தில், வேறு பல ஆக்கப் பூர்வமான நடவடிக்கைகளிலும் நிலையான ஆர்வத்தை உருவாக்கி வளர்ப்பதும், இவ்வரசின் தொழிலாளர் நலக் கொள்கைகளில் ஒன்றாகும். இவ்வாறு துறை குன்றாத உருவாக்கி வளர்க்க விரும்புகின்ற ஆக்கப் பூர்வமான நடவடிக்கைகள் பின்வருவன:—ஒரு தொழிலகத்தைத் திறமையுடன் நிருவகிப்பது; தொழிலாளர்களை நிர்வாகத்தில் பங்கேற்கச் செய்தல்; பல்வேறு பயிற்சித் திட்டங்கள் மூலமாகத் தொழிலாளர்களுக்கு பயிற்சி அளித்தல்; தொழிற்சாலை சுகாதாரம் பாதுகாப்பு வழி முறைகளில் ஆழ்ந்த ஆராய்ச்சிகளை மேற் கொள்ளுதல்; தொழிற் சங்கங்களில் தரக்குறைவான போட்டி, பகைமை நிலவுவதை ஒழித்தல் ஆகியன; சுருங்கக் கூறின், இந்த அரசு எப்போதுமே தொழிலாளர் நலன் காக்கும், தொழிலாளர் மீது கனிவு காட்டும் கொள்கையை எப்போதும் பின்பற்றி வந்துள்ளது. இத்தகைய தொழிலாளர் நலன் காக்கும் கொள்கையின் மூலம், தொழிலாளர்களும், தொழிலதிபர்களும் தாங்கள் ஆற்றல் வாய்ந்த இரு பெரும் அணிகள் என்பதைப் புரிந்து கொண்டுள்ளதோடு, இந்த இரு அணிகளும் ஒருவருக்கொருவர் பகைமை கொண்டு எதிர்த்து செயல்படுவதால், அவர்களுக்கு எந்த நன்மையும் கிட்டாது என்பதையும் புரிந்து கொண்டுள்ளனர். அத்துடன், அவர்கள் ஒன்றுபட்டு நின்றால் அவர்கள் ஒரு மாபெரும் சக்தியாக உருவாக முடியும்; உற்பத்தி உற்பத்தித் திறன் ஆகியவற்றை உயர்த்தி, அதனால் கிட்டும் விளைவுகளையும், வெற்றிக்கனிகளையும் பகிர்ந்து உண்ண முடியும்; இச்சமுதாயத்திற்குப் பொது வகையில் நன்மையைப் பெற்றுத் தரமுடியும் என்பதையும் அறிந்து வைத்துள்ளனர்.

இத்தகைய ஆக்க பூர்வமான நெறியில் இந்த அரசு தொழிலாளர் நலனுக்காகப் பல்வேறு நல நடவடிக்கைகளை எடுத்து வந்துள்ளது. இந்த நல நடவடிக்கைகள் பற்றி, இந்த அறிக்கையில் வருகிற அத்தியாயங்களில் சுருக்கமாக விளக்கிக் கூறப்பட்டு உள்ளது.

பஞ்சாலைத் தொழிலிலும், பொறியியல் தொழிலிலும் ஒரு சில வேலை நிறுத்தங்கள் நடைபெற்றுள்ளன. அவை தவிர, ஆண்டு முழுவதும் போற்றத்தக்க வகையில் சுமுகமாக தொழில் உறவு நிலவி வந்துள்ளது. மேற் குறிப்பிட்ட ஒரு சில தகராறுகளிலுங் கூட, தொழிலதிபர்களுக்கும், தொழிலாளர்களுக்கும் இடையேயான வேறுபாடுகளை இனங் கண்டறிந்து அவ்விருவரும் தொழிலகத்தின் இரு கண்கள், இரு கூறுகள்; (ஒன்று



1986 மே 7]

இல்லையேல் மற்றொன்றில்லை) என்கின்ற உண்மையை உணர்த்தி, தொழிலாளர் நலத்துறை அவர்களைஒன்றுசேர்த்து தொழிலாளர் நலன் கருதியும், பொதுவாக சமுதாய நலன் கருதியும் விரைவான முறையில் அவர்களை உடன்படிக்கைகளில் கையெழுத்திடச் செய்ய முடிந்தது. பொதுவாகக் கூறின், இந்த ஆய்வாண்டில் தொழிலுறவு மிக அமைதியான நல்லிணக்கமுள்ள வகையில் அமைந்திருந்தது. இதற்குக் காரணம், தொழிலதிபர்கள், தொழிலாளர்கள் அவர்களுடைய தொழிற்சங்க அமைப்புகள் ஆகியவை, இந்த வகையில் அளித்த தடையற்ற, தயக்கமற்ற ஒத்துழைப்பே ஆகும்.

அரசு தொழில் அமைதி பேணி வந்து கண்காணித்தது. மேலும், அமைப்பின் கீழ் வராத துறையில் உள்ள தொழிலாளர்களின் நலனைக் காப்பதில் மிகுந்த அக்கறை காட்டி வருகிறது. இதன் பொருட்டு, சில நலச் சட்டங்களை இயற்றி அவற்றைச் செயற்படுத்தி வருகிறது. குறித்த காலத்திற்கொருமுறை, அட்டவணையிடப்பட்ட வேலைகளில், அளிக்கப்பட வேண்டிய குறைந்த அளவு ஊதியங்களை வரையறுக்கவும் திருத்தியமைக்கவும் செய்து வருகிறது. குறைந்த அளவு சட்டத்தின் கீழ்

தொழிலாளர் நலத்துறையின் அலுவல்கள் பின்வரும்தலைப்பின் கீழ் ஆராயப்படுகின்றன:—

1. அமைப்பு முறை.
2. தொழில் உறவுகள்.
3. தொழிற்சாலைகள் நிருவாகம்.
4. தொழிலாளர் நிருவாகம்.
5. ஊதியங்கள் சட்டம்.
6. சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைகள்.
7. தொழிலாளர் நலப் பாதுகாப்பு நடவடிக்கைகள்.
8. பயிற்சி.
9. எடைகள், அளவைகள்.

## அத்தியாயம் 2.

### தொழிலாளர் நலத் துறையின் நிருவாக அமைப்பு முறை.

தொழிலாளர் நலத் துறை, அரசு அளவில் தொழிலாளர் நலத் துறையின் அரசு ஆணையாளர்-செயலாளர் பொறுப்பின் கீழும் தொழிலாளர் நல ஆணையாளரைத் துறைத் தலைவராகக் கொண்டும் செயல்படுகிறது.

தொழில் நிறுவனங்களில், நிருவாகத்திற்கும் தொழிலாளர்
களுக்கும் இடையே ஏற்படும் தொழில் தகராறுகளை, உரிய
நேரத்தில் தலையிட்டு தீர்த்து வைப்பதன் மூலம், தொழில்
அமைதியைப் பேணுவதே தொழிலாளர் நலத்துறை அதிகாரி
களின் முக்கியப் பணியாகும். இது தவிர, தொழிலாளர்களுக்குப்
பணிப் பாதுகாப்பு அளித்தல், சிறந்த பணி நிலைகளையும், நல
னையும் உறுதி செய்தல், சமூகப் பாதுகாப்பு நடவடிக்கை
களை மேம்படுத்தல் ஆகியவற்றிற்காக அரசு அவ்வப்போது
இயற்றியுள்ள பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களைச் செயற்
படுத்துவதும் இவர்களின் பொறுப்பாகும்.

தொழிலாளர் நல ஆணையாளரின் கீழ் இயங்கும் தொழி
லாளர் நலத் துறையில், தொழிலாளர் நலன், தொழிற்சாலை
கள், எடைகள்- அளவைகள் பிரிவுகள் என மூன்று பிரிவுகள்
உள்ளன.

துறைத் தலைவர் என்ற வகையில், தொழிலாளர் நல
ஆணையாளர் பல்வேறு சட்டப்படிக்கான பணிகளையும் பிற
பணிகளையும் புரிவதற்கு அவருக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்
ளது. 1947 ஆம் ஆண்டு, தொழில் தகராறுகள் சட்டத்தின்கீழ்
தமிழ் நாடு மாநிலம் முழுவதும் தொழில் தகராறுகளில் சம
ரசம் செய்வது அவருடைய பணிகளில் முக்கியமானதாகும்.
பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களின் கீழ் அவருக்கு
அளிக்கப்பட்டுள்ள பிற சட்டப்படிக்கான பணிகள் தவிர,
1923 ஆம் ஆண்டு தொழிலாளர் இழப்பீட்டுச் சட்டத்தின்கீழ்
தொழிலாளர் இழப்பீட்டு ஆணையாளராகவும், 1926 ஆம்
ஆண்டு தொழில் சங்கங்கள் சட்டத்தின்கீழ் தொழிற்சங்கப்
பதிவாளராகவும், 1946 ஆம் ஆண்டு தொழில் வேலை வாய்ப்புச்
(நிலையாணைகள்) சட்டத்தின் கீழ் சான்றளிக்கும் அதிகாரியாக
வும் உள்ளார்.

தொழிலாளர் நலன் சம்பந்தப்பட்ட பல்வேறு விவகாரங்
களில் முடிவு செய்வதிலும், பல்வேறு தொழிலாளர் நலச் சட்
டங்களைச் செயல்படுத்துவதிலும் ஆலோசனை கூறுவதற்காக
அரசு அமைத்த சட்டப்படிக்கான பிரிவுகள், பிற பிரிவுகள்
ஆகியவற்றின்கீழ் வரும் பல்வேறு முத்தரப்புச் சங்கங்களுடன்
தொழிலாளர் நல ஆணையாளர் தொடர்பு கொண்டுள்ளார்.

தொழிலாளர் நல ஆணையாளருக்கு அளிக்கப்பட்ட பல்
வேறு சட்டப்படிக்கான பணிகளையும் பிற பணிகளையும் நிரு
வகிப்பதில் அவருக்கு தலைமையிடத்திலும், வட்டாரங்களி
லும் முது நிலை அதிகாரிகள் உதவி புரிகின்றனர். தொழிலாளர்
நலப் பிரிவில், சமரச தரப்பில் அவருக்கு தொழிலாளர் நல
இணை ஆணையாளர்கள் நால்வரும் (தலைமையிடத்தில் இருவர்
மதுரையில் ஒருவர், கோவையில் ஒருவர்) தொழிலாளர் நலத்
... ஆணையாளரும். தொழிலாளர் நல உதவி ஆணை



...ளரும் (தலைமையிடம்) உதவி புரிகின்றனர். நிருவாகத்தில்,
தொழிலாளர் நல ஆணையாளருக்கு, தொழிலாளர் நல இணை
ஆணையாளர் ஒருவர் (நிருவாகம்) தவிர, தொழிலாளர் நல
உதவி ஆணையாளரும் (பணியாளரமைப்பு-பொது) நிருவாக
அதிகாரிகள் இருவரும் [இவர்களில் ஒருவர் நிருவாக அதிகாரி
(பொது) என்றும், இன்னொருவர் மக்கள் தொடர்பு அதிகாரி
என்றும் அழைக்கப்படுகிறார்] உதவி புரிகின்றனர். எடைகள்
அளவைகள் சட்டத்தை செயற்படுத்துவதில், தலைமையிடத்
திலுள்ள தொழிலாளர் நலத் துணை ஆணையாளர்களில்
ஒருவர் 'எடைகள்-அளவைகள் கட்டுப்பாடு அதிகாரி' என
அழைக்கப்படுகிறார். இவருடைய பணிகளில், நிருவாக அதிகாரி
ஒருவர் இவருக்கு உதவி புரிகிறார். தலைமையிடத்தில், 1948
ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியச் சட்டத்தைச் செயற்
படுத்துவதற்காகத் தொழிலாளர் நல ஆணையாளருக்கு துணை
ஆணையாளர் உதவி புரிகிறார். இவர் தொழிலாளர் நலத்
துணை ஆணையாளர் (குறைந்த அளவு ஊதியங்கள்) என
அழைக்கப்படுகிறார். இவருடைய பணிகளில் நிருவாக அதிகாரி
ஒருவர் இவருக்கு உதவி புரிகிறார். அட்டவணையிடப்பட்ட
பல்வேறு தொழில்களில் தொழிலாளர்களுக்கு குறைந்த அளவு
ஊதிய வீதங்களை நிர்ணயிப்பதில், திருத்துவதில் ஆலோ
சனை அளிப்பதற்காக 1948 ஆம் ஆண்டு குறைந்த அளவு
...தியங்கள் சட்டதின்படி அவ்வப்போது அரசால் நியமிக்
கப்படுகிற ஆலோசனைக் குழுக்களின் தலைவராக இத்தொழி
லாளர் நலத் துணை ஆணையாளர் அறிவிக்கப்பட்டு வருகிறார்.
மேலும், மேற்சொன்ன சட்டத்தின்படி அமைக்கப்பட்டுள்ள
முத்தரப்பு மன்றமான குறைந்த அளவு ஊதியங்கள் (மாநில)
ஆலோசனை வாரியத்தின் செயலாளர்ராகவும் இவர் செயல்
பட்டு வருகிறார்.

கடைகள் -நிறுவனங்கள் சட்டத்தின் கீழும், பணிக்கொடை
வழங்கல் சட்டத்தின்கீழும் வழக்குகளை விரைந்து முடிவு செய்
வதற்காகத் தொழிலாளர் நலத் துணை ஆணையாளர் ஒருவர்.
இவர் தொழிலாளர் நலத்துணை ஆணையாளர் (மேல் முறை
யீடு) என்று அறிவிக்கப்பட்டுள்ளார். தலைமையிடத்தில் உள்ள
இவருக்கு செங்கற்பட்டு மாவட்டத்திலும், சென்னையிலும்
தமிழ்நாடு 1947 ஆம் ஆண்டு கடைகள், நிறுவனங்கள் சட்டத்
தின் 41 ஆம் பிரிவின் கீழ் தாக்கல் செய்யப்படுகிற வழக்குகளை
விசாரிக்கவும், 1972 ஆம் ஆண்டு பணிக் கொடை வழங்கல்
சட்டத்தின் 7 ஆம் பிரிவின் கீழ் செய்யப்படும் மேல்முறை
யீடுகளை முடிவு செய்யவும் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது
சென்னையிலுள்ள தொழிலாளர் நல வட்டாரத் துணை ஆணை
...யாளர்கள் 1 மற்றும் 2 ஆகிய இருவரின் பணிச்சுமைகளைக்
குறைக்கும் நோக்குடன் இத்தனி அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்
ளது. இதனால் தொழிற்சாலைகள் பெருமளவில் உள்ள
சென்னை, செங்கற்பட்டு மாவட்டங்களில் உள்ள பெருந்

[1986 மே 7

தொழில் பிரிவுகளில் ஏற்படும் தொழில் தகராறுகளை சமரசம்
செய்து தீர்த்து வைக்கவும் அவர்களுக்குப் போதிய கால அவ
காசம் இருக்கும்.

நிருவாக வசதியின் பொருட்டும், தொழிலாளர் நலச் சட்
டங்களின் கீழ் வழக்குகளை விரைந்து திறம்பட முடிவு செய்
யவும், பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களைச் செயற்
படுத்தவும் இம்மாநிலம் 7 வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்
டுள்ளது. ஒவ்வொரு வட்டாரமும் தொழிலாளர் நலத் துணை
ஆணையாளர் பொறுப்பின்கீழ் செயற்படுகிறது. தலைமை
யிடத்தில் இவருக்கு தொழிலாளர் நல உதவி ஆணையாளர்
களும், சமரசப் பிரிவில் தொழிலாளர் நல அதிகாரிகளும் சட்
டங்களை செயற்படுத்தும் பிரிவில் தொழிலாளர் நல ஆய்
வாளர்களும், மலைத் தோட்டத் தொழிலாளர் நல ஆய்வாளர்
களும் உதவி புரிகின்றனர். தொழிலாளர் நலச் சட்டங்களைச்
செயற்படுத்துவதிலும், எடைகள், அளவைகள், சட்டத்தை
நிருவகிப்பதிலும் தொழிலாளர் நல ஆய்வாளருக்கு தொழிலாளர்
நலத் துணை ஆய்வாளர்களும், தொழிலாளர் நல உதவி
ஆய்வாளர்களும், முத்திரையிடும் ஆய்வாளர்களும் (இப்பதவி
இருக்குமிடங்களில்) உதவி புரிகின்றனர்.

மதுரை, திருச்சி, திருநெல்வேலி ஆகிய வட்டாரங்களில்
உள்ள தொழிலாளர் நலத் துணை ஆணையாளர்கள் மதுரை
யிலுள்ள தொழிலாளர் நல இணை ஆணையாளரின் மேற்
பார்வையில் செயற்படுகின்றனர். கோயம்புத்தூர், சேலம்
ஆகிய வட்டாரங்களிலுள்ள தொழிலாளர் நலத் துணை
ஆணையாளர்கள், கோயம்புத்தூரிலுள்ள தொழிலாளர் நல
இணை ஆணையாளரின் மேற்பார்வையில் செயற்படுகின்றனர்.
இது போலவே சென்னையியிலும், சென்னை தொழிலாளர் நல
துணை ஆணையாளர் 1 மற்றும் 2 ஆகியோர் மற்றும் அவர்
களுடைய சார் நிலை அலுவலர்களின் பணிகளை மேற்பார்வை
யிடுவதற்காகச் சென்னையிலும் (தொழிலாளர் நல இணை
ஆணையாளர் பதவிப் பொறுப்பில் அமையும்) வட்டாரத்தை
ஏற்படுத்தக் கருதப்பட்டுள்ளது.

மலைத் தோட்டத் தொழிலாளர் நலச் சட்டத்தை நிரு
வகிப்பதில், மலைத் தோட்ட ஆய்வாளர்கள் தவிர, ஆதக
மண்டலத்தில் ஒருவர் நாகர்கோயிலில் ஒருவர் என மருத்துவ
அலுவலர்கள் இருவர் உள்ளனர். இந்த அலுவலர்கள்
மலைத் தோட்ட ஆய்வாளர்களாக அறிவிக்கப்பட்டுள்ளனர்
மலைத் தோட்டத் தொழிலாளர் சட்டத்தின்கீழும், அதன்
கீழ் இயற்றப்பட்ட விதிகளின் கீழும் அளிக்கப்படும் மருத்துவ
வசதிகள் தொடர்பான அலுவலர்களைக் கவனிப்பது இவர்
களின் பொறுப்பாகும். மலைத் தோட்ட ஆய்வாளர்களும்,
மருத்துவ அலுவலர்களும் சட்டங்களைச் செயற்படுத்தும் பிரி
விலுள்ள வட்டாரங்களுடன் இணைக்கப்பட்டிருந்த போதி
லும், அவர்கள் தொழிலாளர் நல இணை ஆணையாளரின்



1986 மே 7]

நிருவாகம்) கட்டுப்பாட்டின் கீழ் பணிபுரிகின்றனர். இவர்
மலைத் தோட்டத் தலைமை ஆய்வாளராவார். இது போன்று,
மோட்டார் போக்குவரத்து தொழிலாளர்கள் சட்டத்தையும்,
1966 ஆம் ஆண்டு பீடி, சுருட்டு தொழிலாளர்கள் (பணி
நிபந்தனைகள்) சட்டத்தையும் செயற்படுத்துவதில் தொழிலாளர்
நல ஆய்வாளர்கள், தொழிலாளர் நலத் துணை ஆய்வாளர்கள்
தொழிலாளர் நல உதவி ஆய்வாளர்கள் ஆகியோர் தொழிலாளர்
நலத் துணை ஆணையாளரின் (ஆய்வு) வழிகாட்டுதலுக்கிணங்க
பணிபுரிகிறார்கள். இவர் அந்தந்தச் சட்டங்களின் கீழ்
செயற்படுகிற தலைமை ஆய்வாளருமாவார்.

முன்னாள் இராமநாதபுரம் மாவட்டம் காமராசர், பசும்
பொன் முத்துராமலிங்கம், இராமநாதபுரம் என மூன்றாகப்
பிரிக்கப்பட்டு முறையே விருதுநகர், சிவகங்கை, இராமநாதபுரம்
ஆகியவற்றைத் தலைமையிடமாகக் கொண்டு 3 புதிய மாவட்
டங்கள் அமைக்கப்பட்டன. இதைப் போல மதுரை மாவட்டம்
இரண்டாகப் பிரிக்கப்பட்டு, திண்டுக்கல்லைத் தலைமை
யிடமாகக் கொண்ட அண்ணா மாவட்டம் அமைக்கப்பட்டது.
அரசு இந்த வகையில் புதிதாக 3 தொழிலாளர் நல அலுவலர்கள்,
4 தொழிலாளர் நல ஆய்வாளர் பதவிகளையும், அவர்களுக்
கான துணைப் பணியாளர் பதவிகளையும் ஏற்படுத்த அனுமதி
வழங்கியது.

அமைப்பின் கீழ் வராத தொழிலாளர்களுக்கு தொகுதிப்
பணிக் கொடைத் திட்டத்தைக் கொண்டுவர அரசிற்கு உத
வும் வகையில் அவர்களைக் குறித்த புள்ளிவிவரத் தகவல்களைச்
சேகரிப்பதற்காக அரசு 'தலைமையிடத்தில் தொழிலாளர் நல
உதவி ஆணையாளர் ஒருவர், தொழிலாளர் உதவி ஆய்வாளர்
ஐவர் ஆகியோரும், உரிய துணைப் பணியாளரும் அடங்கிய
தனிப் பணியாளர் அமைப்பை ஏற்படுத்த அரசு அனுமதி
வழங்கியது. சென்னை நீங்கலாக மற்ற வட்டாரங்களில் இவை
தொடர்பான மதிப்பீட்டில் ஆய்வை மேற்கொள்வதற்காக (அந்
தந்த வட்டாரங்களில் உள்ள தொழிலாளர் ஆய்வாளர்களின்
உதவியைப் பெற்று இப்பணி மேற்கொள்ளப்படும்). இதற்கென
அனுமதிக்கப்பட்ட மேற்சொன்ன தொழிலாளர் நல உதவி
ஆய்வாளர் ஐவரும் முகமையில் அனுப்பப்பட்டுள்ளனர். வட்
டாரங்களில் மதிப்பீட்டு ஆய்வு முடிந்த பின்னர் இந்த 5
தொழிலாளர் உதவி ஆய்வாளர்களும் சென்னை வட்டாரங்
களிலுள்ள தொழிலாளர் ஆய்வாளர்களுடன் சேர்ந்து சென்னை,
செங்கல்பட்டு மாவட்டங்களில் அமைப்பின் கீழ் வராத தொழி
லாளர் குறித்த மதிப்பீட்டு ஆய்வுப்பணியைச் செய்வார்கள்.

தொழிற்சாலைகளுக்குப் பொருந்தும் தொழிற்சாலைகள்
சட்டத்தையும், ஏனைய தொழிலாளர் நலச் சட்டங்களையும்
நிருவகிப்பதில் தொழிலாளர் நல ஆணையாளருக்கு தலைமை
யிடத்தில் தொழிற்சாலைகளின் தலைமை ஆய்வாளர்கள்

[1986 மே 7

இருவர் உதவி புரிகின்றனர். ஒருவர் சுகாதாரத்தையும், பாது
காப்பையும் கவனித்துக் கொள்கிறார். மற்றவர் பொது நிரு
வாகத்தையும், ஆய்வுகளையும் கவனித்துக் கொள்கிறார்.
தொழிற்சாலைகள் பிரிவு முழுவதற்கும் பொறுப்பு வகிக்கும்
இந்தத் தலைமை ஆய்வாளர் இருவரும் தொழிலாளர் நல
ஆணையாளருக்கு 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்
டத்தின் 8 ஆம் பிரிவின்படி துணை புரியும் வகையில் பணி புரி
கிறார்கள். தொழிற்சாலைகள் பிரிவு தொழிலாளர் நலத்
துறையின் ஓர் அங்கம் ஆகும்.

தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளர் (நிருவாகம்-ஆய்வு)
தொழிற்சாலைகள் சட்டத்தையும் இது தொடர்பான மற்ற
சட்டங்களையும் செயற்படுத்துவதற்குப் பொறுப்பாவார்.
தொழிற்சாலைகள் சட்டத்தையும் இது தொடர்பான மற்ற
சட்டங்களையும் நிருவகிப்பதில் அவருக்கு தொழிற்சாலைகள்
இணைத் தலைமை ஆய்வாளர்கள் ஐவரும் பல்வேறு வட்டாரங்
களில் 13 துணைத் தலைமை ஆய்வாளர்களும் 44 தொழிற்
சாலை ஆய்வாளர்களும் 30 தொழிற்சாலை உதவி ஆய்வாளர்
களும் உதவி புரிகின்றனர். தலைமையிட அளவில், தொழிற்
சாலைகள் தலைமை ஆய்வாளருக்கு (நிருவாகம்-ஆய்வுகள்)
தொழிற்சாலைகள் துணைத் தலைமை ஆய்வாளர் ஒருவரும்
தொழிற்சாலைகள் ஆய்வாளர் ஒருவரும் (இவர் நிருவாக அதி
காரி எனப்படுகிறார்) உதவி புரிகின்றனர்.

தொழிற்சாலைகள் துணைத் தலைமை ஆய்வாளர்களின்
வட்டார அலுவலகங்கள், சென்னை (4 வட்டங்கள்) வேலூர்,
சேலம், திருப்பூர், ஈரோடு, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி,
சிவகாசி, மதுரை, திருநெல்வேலி ஆகிய இடங்களில் செயற்
படுகின்றன.

தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளர் (சுகாதாரம்- பாது
காப்பு) தொழிலாளர்களின் பாதுகாப்பு, சுகாதாரம், பணி
நிலைகளுக்குப் பொறுப்பாவார். தொழிற்சாலைகள் தலைமை
ஆய்வாளர் (சுகாதாரம்-பாதுகாப்பு) பொறுப்பின் கீழ் சென்னை
யில் தொழில் சுகாதாரம்-உடல் நலப் பிரிவு இணைந்த
ஆய்வுக் கூடம் ஒன்று செயல்படுகிறது. இப்பிரிவு தலைமை
மருத்துவரும் (தொழிற்சாலைகள்) சான்றளிக்கும் மருத்துவர்கள்
(மருத்துவ அதிகாரிகள்) (தொழிற்சாலைகள்) ஆறு பேரும்
நிருவகிக்கின்றனர். இவர்கள் சென்னை, வேலூர், சேலம்,
திருச்சிராப்பள்ளி, சிவகாசி, திருநெல்வேலி ஆகிய இடங்களில்
உள்ளனர். இம் மருத்துவ அதிகாரிகள் 1948 ஆம் ஆண்டு
தொழிற்சாலைகள் சட்டத்தின் 10 ஆம் பிரிவின்படியும், தமிழ்
நாடு 1950 ஆம் ஆண்டு தொழிற்சாலை விதிகளின்படியும்
சான்றளிக்கும் மருத்துவர்களின் கடமைகளைப் புரிகின்றனர்.



1986 மே 7]

மருத்துவப் பணிகள் உதவி இயக்குநரின் பதவித் தரத்தி
லுள்ள தலைமை மருத்துவ அதிகாரி, சென்னையிலுள்ள தொழிற்
சாலை ஆய்வாளர் அலுவலகத்துடன் இணைக்கப்பட்ட தொழில்-
சுகாதாரம்-உடல்நலப் பிரிவு இணைந்த ஆய்வுக் கூடத்திற்கும்
பொறுப்பு வகிக்கிறார். இவர் அபாயகரமான தொழிற்சாலை
களில் பணிபுரியும் தொழிலாளர்களை மருத்துவ சோதனை
செய்வதையும் உயிர்மங்கள் மாதிரிகளை ஆய்வுக் கூடத்தில் ஆய்வு
செய்யும் பணியையும், தொழிலில் ஏற்படும் அபாயங்கள் குறித்து
ஆய்வு நடத்துவதையும் மேற்கொள்கிறார். அமைப்பின் கீழ்
வராத தொழிலாளர்களுக்கு இது போன்று மருத்துவப் பரி
சோதனை செய்வதற்கு மதுரையில் மருத்துவப் பிரிவு ஒன்றும்
அமைக்கப்பட்டுள்ளது. மதுரையிலுள்ள இந்நிலையம் தொழி
லாளர் அரசுக் காப்புறுதி திட்டத்தின் கீழ் வராத தொழிலாளர்
களுக்கு சிகிச்சையளிப்பதுடன் நோய்த் தடுப்பு மருத்துவப்பணி
வசதியும் அளிக்கிறது.

சென்னை, கோயம்புத்தூர், மதுரை ஆகிய இடங்களில்
தொழிற்சாலை தலைமை ஆய்வாளரின் (சுகாதாரம்-பாது
காப்பு), கட்டுப்பாட்டின் கீழ் மூன்று பாதுகாப்புப் பிரிவுகள்
இயங்குகின்றன.

இந்தப் பாதுகாப்புப் பிரிவுகளின் பணிகளை மேம்படுத்தும்
நோக்குடன் இப்பிரிவுகளுக்கு பொறுப்பு வகித்த தொழிற்
சாலைகள் உதவி ஆய்வாளர் பதவிகள் தொழிற்சாலை ஆய்வாளர்
பதவிகளாக உயர்த்தப்பட்டன. இது தவிர இந்த பாதுகாப்புப்
பிரிவுகளின் அலுவலர்களது பணிகளை மேற்பார்வையிடு
வதற்காக தொழிற்சாலைகள் இணைத் தலைமை ஆய்வாளர்
(சோதனை செய்தல்-பாதுகாப்பு) பதவி ஒன்றையும் அவருக்
குரிய துணைப் பணியாளர் பதவிகளையும் ஏற்படுத்த அரசு
அனுமதி வழங்கியுள்ளது.

இந்த பாதுகாப்புப் பிரிவுகளின் பணிகளைக் குறித்து இவ்
வறிக்கையின் 4 ஆம் அத்தியாயத்தில் சுருக்கமாக விளக்கப்
பட்டுள்ளது.

தலைமையிட அளவில், குழந்தை, பெண் தொழிலாளர்
தொடர்பான பாதுகாப்பு-சுகாதாரம் பற்றிய விதித்துறைகளைச்
செயற்படுத்துவதில் தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளருக்கு
(சுகாதாரம்-பாதுகாப்பு) தொழிற்சாலை பெண் ஆய்வாளர் ஒரு
வர் உதவி புரிகின்றார்.

மேற்சொன்னவை தவிர, தொழிற்சாலைகள் தலைமை ஆய்
வாளரின் (சுகாதாரம்-பாதுகாப்பு) மேற்பார்வையின் கீழ்
காற்றழுத்த சாதனங்கள் பிரிவு செயல்படுகிறது. இப்பிரிவின்
கீழ், சென்னை (இரு அதிகாரிகள்) மதுரை, கோயம்புத்தூர்
ஆகிய இடங்களிலுள்ள நான்கு துணைத் தலைமை ஆய்வாளர்,
கள் துறை மேற்பார்வையின் கீழ் உள்ள தொழிற்சாலைகளில்

[1986 மே 7

இந்தியத் தர நிறுவனம் நிர்ணயித்த தரத்தின்படி, காற்றழுத்தச்
சாதனங்களைச் சோதனை செய்யும் பணியைக் கவனிக்கின்றனர்.
இம்மாநிலத்திலுள்ள காற்றழுத்த சாதனங்களைச் சோதனை
செய்யும் நடைமுறையில், இத்துணைத் தலைமை ஆய்வாளர்
களுக்கு தொழிற்சாலை ஆய்வாளர் ஒவ்வொருவரும் உதவி புரி
கின்றனர்.

இந்த ஆண்டில் புதிதாக தொழிற்சாலைகள் இணைத்
தலைமை ஆய்வாளர் (சோதனை செய்தல்-பாதுகாப்பு) பதவி
ஒன்றை ஏற்படுத்த அரசு அனுமதி வழங்கியது. இவர் தொழிற்
சாலைகள் துணைத் தலைமை ஆய்வாளரின் (காற்றழுத்தச்
சாதனங்கள்) பணியை மேற்பார்வை செய்கிறார். இவ்விரு
அலுவலர்களும் தமது துணைப் பணியாளர்களுடன் சென்னை
யைத் தலைமை இடமாகக் கொண்டு செயல்பட்டு வருகின்
றார்கள். இவர்களது பணி, சென்னையைத் தலைமை இட
மாகக் கொண்டு அமைந்துள்ள காற்றழுத்தச் சாதனங்கள்
சோதனைக் கோட்டம், பளு தூக்கிகள் சோதனைப் பிரிவு,
பாதுகாப்புப் பிரிவு ஆகியவற்றை திறம்பட மேற்பார்வை செய்து
வழி நடத்துவதாகும். நடப்பாண்டில் புதிதாக சென்னையில்
ஒருவரும், மதுரையில் ஒருவருமாக, தொழிற்சாலைகள் வட்டார
இணைத் தலைமை ஆய்வாளர்கள் இருவர், துணைப் பணியாளர்
களுடன் நியமிக்கப்பட்டனர். தொழிற்சாலைகள் இணைத்
தலைமை ஆய்வாளர் (உற்பத்தித் திறன் குழு) பதவி ஒன்றும்
அவருக்குரிய துணைப் பணியாளர்கள் பதவிகளும் ஏற்படுத்த
அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தொழிற்சாலைகளில் உற்பத்தித்
திறனை மேம்படுத்துவது இவர்களது பணியாகும். இந்த உற்
பத்தித்திறன் குழு முற்றிலும் ஆலோசனை வழங்கும் குழு ஆகும்.
இக் குழு உற்பத்தித் திறனை மேம்படுத்தல், கூடுதல் வளவாயில்
களை, கண்டறிதல் உற்பத்தி நடைமுறையில் பொருட்கள்
வீணாவதைத் (கழிவு ஆவதை) தடுத்தல், கால ஆய்வு, இயக்க
ஆய்வு ஆகியவற்றை மேற்கொள்வதன் மூலம், வேலைக்கான
அடிப்படை அளவீடுகளை (Work Norms) வரையறுத்தல்,
வேலை பகுப்பாய்வு, வேலைப் பாதுகாப்புப் பகுப்பாய்வு முதலிய
வற்றைச் செய்தல், பரிசு வழங்கும் திட்டத்தை ஏற்படுத்துதல்,
தொழிலாளர்கள், மேற்பார்வையாளர்கள் முதலியோருக்கு
முறையான பயிற்சி அளித்தல் முதலான பணிகளை இது கவனிக்
கும்.

தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையத்தில் தொழிலாளர்
நிருவாகத்தில் தொழில் முறை பட்டப் படிப்பு வகுப்பு தொடங்கு
தல் போன்ற புதிய பயிற்சி செயற் குறிப்புகள் கொண்டு வரப்
பட்டுள்ள காரணத்தால், அதற்கேற்பட்டுள்ள கூடுதல் பொறுப்
பினை நிறைவேற்ற இயலும் வகையில், நிலையப் பணியாளர்
களின் எண்ணிக்கை கூடுதலாக்கப்படுகிறது. இந்நிலையம்
இயக்குநர் ஒ [illegible] தலைவராகக் கொண்டு தனித்
துறையாகச் [illegible]



1986 மே 7]

அத்தியாயம் III.

தொழில் உறவுகள்

1947 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டம்.

இந்த ஆய்வு ஆண்டில் தகராறுகள் சம்பந்தப்பட்ட மொத்த
வழக்குகள் 9,369-ல் 7,404 வழக்குகளில் இணக்க அதிகாரியால்
தீர்ப்பு வழங்கப்பட்டது. இதன் விவரங்களை இணைப்பு 1-ல்
காண்க.

பணி நிறுத்தங்கள்.

1985 ஆம் ஆண்டில், ஏற்பட்ட 212 வேலை நிறுத்தங்கள்,
கதவடைப்புகள் ஆகியவற்றின் காரணமாக, வீணான உழைப்பு
நாட்கள் 35,05,226 ஆகும். முந்தைய ஆண்டுடன் ஒப்பிட்டு
இவ்வாண்டில் நடைபெற்ற வேலை நிறுத்தங்கள், கதவடைப்பு
கள் ஆகியவற்றின் எண்ணிக்கை இணைப்பு 11-ல் கொடுக்கப்
பட்டுள்ளது. வேலை நிறுத்தத்தின் காரணமாக, வீணான
உழைப்பு நாட்கள் 35,05,226-ல் பின்வரும் முக்கியமான இரண்டு
வேலை நிறுத்தங்களின் காரணமாக வீணான உழைப்பு நாட்
களின் எண்ணிக்கை 19,09,932.

1. தமிழ்நாடு முழுவதிலுமுள்ள துணி ஆலைகளில் ஊதி
யம், பிற கோரிக்கைகள் தொடர்பாக 1,42,367 தொழிலாளர்
கள், 16–7–1985 முதல் 25–7–1985 வரை பங்கு கொண்ட
வேலை நிறுத்தம்.

2. கோயம்புத்தூர், பெரியார், திருநெல்வேலி, செங்
கல்பட்டு, சேலம், கன்னியாகுமரி, பசும்பொன் முத்துராமலிங்கம்
மாவட்டங்களில் உள்ள 92 துணி ஆலைகளில் ஊதியக் கொடை
கோரிக்கைகள் தொடர்பாக 9–11–1985 முதல் 14–12–1985
வரை 55,000 தொழிலாளர்கள் பங்கு கொண்ட வேலை நிறுத்
தம்.

1985 ஆம் ஆண்டில் நடைபெற்ற வேலை நிறுத்தங்கள்,
கதவடைப்புகள் ஆகியவை குறித்து துறை அலுவலர்களால்
தீர்வு காணப்பட்ட விவரங்கள் இணைப்பு 3-ல் காணலாம்.

1984, 1985 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற வேலை நிறுத்
தங்கள், கதவடைப்புகள் பற்றிய தொழில்வாரியான விவரங்கள்
இணைப்பு 4-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

இம்மாநிலத்திலுள்ள தொழில் நடுவர் மன்றத்திற்கு தொழி
லாளர் நீதி மன்றங்களுக்குத் தீர்ப்புக்காக அனுப்பப்பட்ட
வழக்குகளின் எண்ணிக்கை 33-சி(2) பிரிவின் கீழ் தொழிலாளர்

நீதிமன்றங்கள் முடிவு செய்த வழக்குகளின் எண்ணிக்கை ஆகி
யவை பற்றிய விவரங்களைக் காட்டும் அறிக்கை, இணைப்பு
4-லுள்ள இக்குறிப்புடன் இணைக்கப்பட்டுள்ளது.

### இந்த ஆய்வு ஆண்டில் தீர்வு காணப்பட்ட முக்கிய விவகாரங்கள்.

துறை அலுவலர்களின் முயற்சியால் 7,404 தொழில் தக
ராறுகள் தீர்த்து வைக்கப்பட்டன. இது பற்றிய விவரங்களை
இணைப்பு 3-ல் காணலாம், தொழிலாளர் நல ஆணையாளரும்
துறையின் ஏனைய முதுநிலை அதிகாரிகளும் மேற்கொண்ட
முயற்சியின் பயனாக பின்வரும் தொழில் தகராறுகள் தீர்வு
செய்யப்பட்டன.

### துணித் தொழில்.

1. ஊதிய உயர்வு அகவிலைப்படி முதலிய பொதுவான கோரிக்கைகள் :

ஊதிய உடன்பாடு 1984இல் காலாவதி ஆனதையடுத்து,
ஊதிய உயர்வு, அகவிலைப்படி முதலிய பொதுவான கோரிக்கை
கள் தொடர்பாக, தமிழ்நாடு துணித்தொழில் சங்கங்களின்
கூட்டு நடவடிக்கைக் குழு 16–7–1985 முதற்கொண்டு வேலை
நிறுத்தம் செய்யப் போவதாக தமிழ்நாட்டிலுள்ள துணி ஆலை
களின் நிருவாகிகளுக்கு வேலை நிறுத்த அறிவிப்புக் கொடுத்தனர்.
இது தொடர்பாக தொழிலாளர் நல தனித் துணை ஆணை
யாளர், தொழிலாளர் நல ஆணையாளர் ஆகியோர் முன்னிலை
யில் நடைபெற்ற இணக்கப் பேச்சுவார்த்தைகளின்போது
தென்னிந்திய ஆலைகள் சங்கத்தின் சார்பாக நிருவாகத்தினர்
அறிவியல் முறையில் வேலைக்கான அடிப்படை அளவுகளை
நிர்ணயித்தல், அகவிலைப்படி, வீட்டு வாடகைப்படி முதலிய
வற்றின் அமைப்பை மாற்றியமைத்தல் போன்ற எதிர்
கோரிக்கைகளை முன் வைத்தனர். ஆனால், தொழிற்சங்கங்
களோ ஊதிய உயர்வு பிரச்சனை குறித்து மட்டுமே பேச்சு
வார்த்தை நடத்தி, தொழில் வாரியான அடிப்படையில் எவ்
வித நிபந்தனையுமின்றித் தீர்வு காண வேண்டுமென வலியுறுத்
தின. இவ்வகையில் உடன்பாடு காண இயலாததால், தொழி
லாளர் நல ஆணையாளர் அவருடைய இணக்க அறிக்கையை
அரசிற்கு அனுப்பினார். தொழிற் சங்கங்களின் கோரிக்கைகள்
சிலவற்றையும், நிருவாகத்தினரின் எதிர்க் கோரிக்கைகளையும்
தனி தொழில் நடுவர் மன்றத்தின் தீர்ப்பிற்கு விட்டது. தொழி
லாளர்களுக்கு இடைக்காலத் தொகைகள் வழங்க தொழில் தக
ராறுகள் சட்டத்தின் 10-பி பிரிவின் கீழ் துணி ஆலை நிருவாகத்
தினருக்கு அரசு உத்தரவுகள் பிறப்பிக்கவும் செய்தது. ஆனால்,
துணி ஆலைத் தொழிலாளர்களோ, ஏற்கனவே திட்டமிட்டபடி
16–7–1985 முதற் கொண்டு வேலை நிறுத்தம் மேற்கொண்டனர்.





அதன் பின்னர், மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர்
தலையிட்டதன் பேரில், துணி ஆலைத் தொழிலாளர்கள் அவர்
களுடைய வேலை நிறுத்தத்தைத் திரும்பப் பெற்று, 25–7–1985
அன்று வேலைக்குத் திரும்பினர். அத்துடன், கழிவு பஞ்சா
லைகள் தொடர்பான தகராறையும் அரசு நடுவர் தீர்ப்பிற்கு
விட்டது. மேலும், முதலில் நடுவர் மன்றத் தீர்ப்பிற்கு விட
மறுத்த தகராறுகள் குறித்து அரசு மறு பரிசீலனை செய்தது.
சில தகராறுகள் பின்னர் நடுவர் மன்றத் தீர்ப்பிற்கு விடப்
பட்டது.

2. 1984 (1984–85) ஆம் ஆண்டிற்கு துணி ஆலை தொழி லாளர்கள் ஊதியக்கொடை கோரிக்கை :

தமிழ்நாட்டிலுள்ள துணி ஆலைத் தொழிலாளர்களுக்கு
1984 (1984–85) ஆம் ஆண்டிற்கு ஊதியக்கொடை வழங்கும்
விவகாரத்தைப் பொறுத்தவரை, கோயம்புத்தூர் வட்டாரம்
நீங்கலாகப் பிற பகுதிகளிலுள்ள துணி ஆலைகளில் உள்ள தொழி
லாளர்களுக்கு ஊதியக்கொடை வழங்கும் பிரச்சனைக்கு சுமூக
மான தீர்வு காணப்பட்டது. கோயம்புத்தூர் வட்டாரத்தில்
சட்டப்படிக்கான ஊதியக் கொடையுடன், முந்தைய ஆண்டு
களில் இதுவரை பின்பற்றி வந்த அடிப்படையிலேயே கூடுதல்
தொகைகள் வழங்கப்பட வேண்டுமென தொழிற்சங்கங்கள்
கோரின. ஆனால், நிருவாகத்தினரோ ஊதியக்கொடை வழங்
கல் சட்டத்திற்கு இணங்க அல்லாது, கூடுதல் தொகை ஏதும்
வழங்கத் தயாராக இல்லை. இது குறித்து கோயம்புத்தூர்
தொழிலாளர் நல இணை ஆணையாளர் முதல் நிலைப் பேச்சு
வார்த்தைகள் நடத்தினார். தொழிலாளர் நல சிறப்புத் துணை
ஆணையாளர், தொழிலாளர் நல ஆணையாளர் ஆகியோர்
முன்னிலையில் மேற்கொண்டும் பேச்சுவார்த்தைகள் நடை
பெற்றன. இடை நிகழ்வாக, 1982–83 ஆம் ஆண்டுகளுக்கு
வழங்கப்பட்ட கூடுதல் தொகைகளை முந்தைய உடன்பாடுகளின்
படி சரிக்கட்டும் விவகாரம் குறித்தும் விவாதிக்கப்பட்டது. இது
குறித்து இறுதியான உடன்பாடு ஏதும் காணப்படாததால்,
தொழிலாளர் நல ஆணையாளர் சில ஆலோசனைகள் கூறினார்.
அவை :—

(1) 1984 (1984–85) ஆம் ஆண்டிற்கான ஊதியக்கொடை
1965 ஆம் ஆண்டு ஊதியக்கொடை வழங்கல் சட்டத்தின்படி
வழங்கப்பெறலாம்.

(2) முந்தைய ஆண்டுகளில் வழங்கப்பட்ட கூடுதல் தொகை
களை சரிக்கட்டும் விஷயம் குறித்து தனியே விவாதிக்கப்பட்டு
தொழிலாளர் நல ஆணையாளர் முன்னிலையில் தீர்வு காணப்
படலாம்.

(3) தொழிலாளர்கள் விவகாரத்திற்குட்பட்ட ஊதியக்
கொடையைப் பெற்று இது குறித்து பின்னர் நடவடிக்கை மேற்
கொள்ளலாம்.

கூடுதல் இடைக்காலத் தொகையொன்று வழங்குவது குறித்து
மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் 21–11–1985 இல்
ஆலோசனை கூறினார்.

மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சரின் ஆலோசனைக்கு
மாறாக தேசிய துணைத் தொழில் நிறுவன ஆலைகள் 10-ல்
உள்ள தொழிலாளர்கள் நீங்கலாகப் பிற தொழிலாளர்கள்
25–11–1985 முதற் கொண்டு படிப்படியாக வேலைக்குச் செல்லத்
தொடங்கினர். 28–11–1985 முதற் கொண்டு எல்லா ஆலை
களிலுமே வேலை மீண்டும் தொடங்கியது. இருதரப்பினருக்கு
மிடையே நடைபெற்ற பரஸ்பர பேச்சு வார்த்தைகளை அடுத்து
தேசியத் துணித் தொழில் நிறுவனத் தொழிலாளர்கள்
7–11–1985 முதற் கொண்டு மீண்டும் வேலைக்குத் திரும்பினர்.

3. தமிழ்நாடு துணித் தொழில் நிறுவனம், கிருஷ்ணாபுரம்
விசைத்தறி ஆலை, மதுரை :—

மதுரை, கிருஷ்ணாபுரம் விசைத்தறி ஆலைத் தொழிலாளர்
கள் ஊதிய உயர்வு, தற்காலிக தொழிலாளர்களின் பணியை
முறைப்படுத்தல் முதலானவை தொடர்பான அவர்களுடைய
கோரிக்கைகளை வலியுறுத்தி, 29–8–1985 முதற் கொண்
வேலை நிறுத்தம் செய்யத் தொடங்கினர். சென்னை தொழி
லாளர் நல இணை ஆணையர் (இணக்கம்) பல்வேறு நாட்களிலும்,
இறுதியாக 31–10–1985-லும் பேச்சுவார்த்தைகள் நடத்தியதின்
விளைவாக தொழில் தகராறுகள் சட்டத்தைச் சேர்ந்த 12(3)
பிரிவின்படி உடன்படிக்கை கையெழுத்தாகியது. இந்த
உடன்படிக்கையின்படி தொழிலாளர்கள் 4–11–1985-இல்
வேலைக்குத் திரும்பினர்.

4. லட்சுமி சண்முகா நூற்பாலை, நமனசமுத்திரம், புதுக்
கோட்டை :—

புதுக்கோட்டை மாவட்டம் நமனசமுத்திரத்திலுள்ள
லட்சுமி சண்முகா நூற்பாலை செயற்படுவது 17–5–1985 முதற்
கொண்டு நின்று விட்டது. அதற்கு முன்னர், நிதித் தொல்லை
கள் காரணமாக இந்த நூற்பாலை ஒழுங்காக செயற்பட்டுவர
வில்லை. தொழிலாளர்களுக்கு 1985 மார்ச்சு, ஏப்ரல் மாதங்
களுக்குரிய ஊதியங்கள் வழங்கப்படவில்லை. ஆகவே, இவ்
வாலைத் தொழிலாளர்கள் (சுமார் 600 பேர்) ஊதியம், ஊதியக்
கொடை முதலானவை வழங்கக் கோரி நேரடி நடவடிக்கையில்
இறங்கினர். இவ்விவகாரம் குறித்து, முதலில் புதுக்கோட்டை
மாவட்ட ஆட்சித் தலைவர் முன்னிலையிலும், பின்னர்,
திருச்சிராப்பள்ளி தொழிலாளர் நல துணை ஆணையர் முன்னிலை
யிலும், பேச்சு வார்த்தை நடைபெற்றது. ஆனால் உடன்பாடு
காண இயலவில்லை. இந்த ஆலையில் விரைவில் வேலை மீள
மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தலையிட்டார்.





அதை அடுத்து, சென்னை தொழிலாளர் நல இணை ஆணை
பாளர் (நிர்வாகம்) இது குறித்துப் பேச்சு வார்த்தை நடத்தி
உடன்பாட்டிற்கு ஒரு வழி வகுத்தார். இதன் அடிப்படையில்
திருச்சிராப்பள்ளி தொழிலாளர் நலத் துணை ஆணையர்
இணக்கப் பேச்சு வார்த்தைகள் நடத்தி 3–7–1985-ல் உடன்
பாடொன்று கண்டார். அந்த உடன்பாட்டின் விளைவாக
தொழிலாளர்கள் 4–7–1985 முதற்கொண்டு வேலைக்குத் திரும்
பினர்.

பொறியியல் தொழில்.

5. அசோக் லேலண்ட் நிறுவனம், ஓசூர் :—

தொழிலாளர்களின் கோரிக்கை மனுவை பைசல் செய்வது
தொடர்பாகத் தொழிலாளர் நலத் துறையில் பேச்சு வார்த்தை
கள் நடக்க வேண்டியிருந்த சூழ்நிலையில், தொழிலாளர்களின்
உற்பத்தித் திறன் குறைவாக இருக்கிறதென்று காரணங்காட்டி
இத் தொழிற்சாலையில் உற்பத்திப் பணிகளை நிர்வாகத்தினர்
தற்காலிகமாக நிறுத்தினர். இது குறித்து தொழிலாளர் நல
தனித் துணை ஆணையர் அடுத்தடுத்துப் பேச்சுவார்த்தைகள்
நடத்தினார். மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தலை
இட்டதன் பேரிலும், தொழிலாளர் நல ஆணையரின் ஆலோசனை
யின் பேரில் இரு தரப்பினருக்கிடையேயும் ஒருமித்த கருத்து
உருவானதை அடுத்தும், தொழிலாளர் நல தனித் துணை ஆணை
யர் முன்னிலையில் தொழிற் தகராறுகள் சட்டத்தைச் சேர்ந்த
12 (3) பிரிவின் கீழ் 9–8–1985-இல் உடன்பாடொன்று காணப்
பட்டது. அதை அடுத்து இந் நிறுவனத்தைச் சேர்ந்த
தொழிலாளர்கள் 12–8–1985-ல் வேலைக்குத் திரும்பினர்.

இவ்வுடன்பாட்டின் காரணமாக, 1,400 தொழிலாளர்
கள் பயனடைந்தனர். இது தொழிலாளர் ஒவ்வொருவருக்கும்
ஒட்டுமொத்த உடன்பாட்டு அனுகூலத் தொகையாக ரூ. 800
பெறவும், அத்துடன், ஊதியம், அகவிலைப்படி, வீட்டு வாடகைப்
படி, வாகனப்படி உயர்வு முதலான வகைகளில் ஒவ்வொரு
வருடைய சம்பளமும் மாதமொன்றிற்கு ரூ. 160 உயரவும் வழி
வகுத்தது. ரூ. 100 ஊக்கத் தொகை பெறக் கூடிய வகையில்
உற்பத்தித் திறன் அளவை குறைந்தபட்சம் 50 சதவீதமாகப்
பேணிவரத் தொழிலாளர்கள் உத்திரவாதம் அளிக்கவும் இந்த
உடன்பாடு வகை செய்கிறது.

6. தமிழ்நாட்டிலுள்ள கூட்டுறவு, பொது, தனியார் துறை
சர்க்கரை ஆலைகள் :—

19–3–1982-இல் செய்து கொண்ட முந்தைய உடன்பாடு
காலாவதியான பிறகு, சர்க்கரைத் தொழிலில் ஊதிய உயர்வு
குறித்துத் தொழில் தகராறு ஏற்பட்டது. கோரிக்கைகள் மனு

வின் அடிப்படையில், சம்பந்தப்பட்ட தரப்பினர் பேச்சுவார்த் தைக்கு அழைக்கப்பட்டனர். சென்னை தொழிலாளர் நல இணை ஆணையாளர் (இணக்கம்) பேச்சு வார்த்தைகள் நடத்தினார். பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வந்த போது, சர்க்கரைத் தொழிலுக்கான மூன்றாம் ஊதியக் குழு அமைக்கப் படுவதாக மத்திய அரசு அறிவித்தது. அத்தகைய சூழ்நிலை களில், ஊதியக் குழுவின் பரிந்துரைக்கு அல்லது இடைக்கால நிவாரணம் குறித்து ஊதியக் குழுவின் அறிவிப்பிற்கு பொறுத்து இருப்பது முறையானதாக இருக்குமென சர்க்கரைத் தொழில் நிருவாகத்தினர் ஒரு முடிவிற்கு வந்தனர். மாறாக, ஒவ்வொரு விவகாரம் குறித்தும் தனித் தனியே இறுதி உடன்பாட்டை அவர்கள் காண்பது கடந்த கால வழக்கமாக இருந்ததால் தமிழ் நாட்டைப் பொறுத்த வரை இது குறித்து ஓர் உடன்பாடு காண நிருவாகத்தினர் முன் வருவதுதான் உகந்ததாக இருக்குமென தொழிற் சங்கங்கள் வாதிட்டன.

தொழிலாளர் நல இணை ஆணையாளர் (இணக்கம்) முன்னிலையிலும், பின்னர் தொழிலாளர் நல ஆணையாளர் முன்னிலையிலும் நடந்த பேச்சு வார்த்தைகளின் பலனாகத் தற்காலிகமாக இடைக்கால நிவாரணம் அளிக்க நிர்வாகத்தினர் ஒப்புக் கொண்டனர்.

சர்க்கரை தொழில் குறித்த மூன்றாம் ஊதியக் குழு இறுதி முடிவு எடுப்பதை எதிர்பார்த்து 30—11—1985-ல் ஓர் உடன்பாடு காணப்பட்டது.

7. தமிழ்நாட்டிலுள்ள பீடி ' தயாரிப்பு நிறுவனங்கள் :—

(i) தமிழ்நாட்டிலுள்ள பீடி தயாரிப்பு நிறுவன்த் தொழி லாளர்களின் பிரதிநிதித் தொழிற் சங்கங்கள், பல ஊதியம், அகவிலைப்படி முதலியவற்றை உயர்த்தக்கோரி 1985 ஏப்ரல் இறுதியில் புதிய கோரிக்கை மனுவை முன் வைத்தனர். சென்னை தொழிலாளர் நலத் தனி துணை ஆணையர் சம்பந்தப்பட்ட தரப்பினருடன் அடுத்தடுத்துப் பேச்சு வார்த்தைகள் நடத்தி னார். இறுதியா்க (1) வட ஆற்காடு, (2) சென்னை, செங்கற் பட்டு, (3) திருச்சி வட்டாரங்கள் தொடர்பாக தொழிற் தகரா றுகள் சட்டத்தைச் சேர்ந்த 12 (3) பிரிவின் கீழ் 3—7—1985-ல் உடன்பாடுகள் கண்டார்.

இந்த உடன்பாடுகளின்படி 1,000 ஜாடி பீடிகள் சாதா பீடிகள் சுற்ற ரூ. 1.50 ஊதிய உயர்வு அளிக்கப்பட்டுள்ளது. சுற்றப்படுகின்ற 1,000 பீடிகளுக்கு ஊதியக் கொடை 10 காசு உயர்த்தப்பட்டது. இந்த உயர்வுகள் 10—7—1985 அன்றி லிருந்து வழங்கப்பட்ட மூலப் பொருட்களுக்கு பொருந்துவ [illegible] இருந்தன.





(ii) இம்மாநிலத்திலுள்ள பீடித் தொழிலாளர்களின் பிரதி நிதித் தொழிற் சங்கங்கள் பல இந்திய உச்ச நீதி மன்றத்தின் உத்தரவுகளின்படியும் பீடி சுருட்டு தொழிலாளர்கள் (பணி நிலைமைகள்) சட்ட விதித் துறைகளின்படியும் வருங்கால வைப்பு நிதித் திட்டத்தை செயற்படுத்தக் கோரி, தொழி லாளர் நல ஆணையரிடம் முறையீடுகள் செய்தன. தொழி லாளர் நல தனித் துணை ஆணையர் பல்வேறு நாட்களில் பேச்சு வார்த்தைகள் நடத்தி, இறுதியாக 23—12—1985-ல் ஓர் உடன்பாடு கண்டார். அதன் அடிப்படையில் இவர் சம்பந்தப் பட்ட தரப்பினருக்கு அறிவிப்பு வெளியிட்டார்.

8. தமிழ்நாடு சிறு தொழில் கழகம் (டான்சி), சென்னை :—

பொது ஊதிய உடன்பாடு 1981-ல் முடிவுக்கு வந்ததை அடுத்துத் தமிழ்நாட்டிலுள்ள டான்சி நிறுவனத்தைச் சேர்ந்த தொழிலாளர் பிரதிநிதி தொழிற் சங்கங்கள் பல ஊதியம், அகவிலைப்படி, வீட்டு வாடகைப்படி முதலியவற்றின் உயர்வு குறித்துக் கோரிக்கை மனு ஒன்றை முன் வைத்தன.

மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் ஊரகத் தொழில் அமைச்சர் ஆகியோர் முன்னிலையில் பேச்சு வார்த்தைகள் இடம் பெற்றன. அவர்களுடைய நன் முயற்சிகளின் பயனாக் கருத்து வேறுபாடுகளும் கோரிக்கைகளும் இவையென இனங் கண்டறி யப்பட்டன. இதை அடுத்து, தொழிலாளர் நல இணை ஆணையர் (நிர்வாகம்) முன்னிலையில் 10—6—1985-ல் இறுதி யாக இணக்கப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. மாண்பு மிகு அமைச்சர்களின் ஆலோசனையின் பேரில் தொழிற் தகராறுகள் சட்டத்தைச் சேர்ந்த 12 (3) பிரிவின் கீழ் உடன் பாடொன்று ஏற்பட்டது.

இந்த உடன்பாட்டின்படி, இம்மாநிலத்திலுள்ள டான்சி உற்பத்திப் பிரிவுகள் 56-லும் பணியாற்றி வந்த 4,000 தொழி லாளர்கள் நன்மையடைந்தனர். அதாவது, தொழிலாளர் ஒவ்வொருவருடைய மாதச் சம்பளமும் ரூ. 65 முதல் 100 வரை உயர்ந்தது. அது மட்டுமின்றி குடும்ப நல நிதித் திட்டத் தின் கீழ் வழங்கப்படுகின்ற ரூ. 10,000, ரூ. 20,000 ஆக உயர்ந்துள்ளது.

9. தமிழ்நாடு சிமெண்ட்ஸ் :—

தமிழ்நாடு சிமிட்டி நிறுவனத்தைச் சேர்ந்த அரியலூர் சிமிட்டி ஆலை, ஆலங்குளம் சிமிட்டி ஆலை, ஆலங்குளம், மாயனூர், தமிழ்நாடு ஆஸ்பெஸ்டாஸ் தொழிற் பிரிவுகள் ஆகியவற்றின் தொழிற் சங்கங்கள் 1984—85 ஆம் ஆண்டிற்கான ஊதியக் கொடை விவகாரம் குறித்து வேலை நிறுத்த அறிவிப்புக் கொடுத் தன. தொழிலாளர் நல தனித் துணை ஆணையர் இதில்

1986 மே 7]

தலையிட்டதின் பேரில், வேலை நிறுத்தம் தவிர்க்கப்பட்டு இரு தரப்பினருக்கிடையேயும் அவர் முன்னிலையில் 6–11–1985-ல் தொழிற் தகராறுகள் சட்டத்தைச் சேர்ந்த 12 (3) பிரிவின் கீழ் உடன்பாடொன்று காணப்பட்டது. 1984–85 ஆம் ஆண்டிற்கு குறைந்தபட்ச ஊதியக் கொடையாக 8.33 சதவீதமும் ஒரு மொத்தத் தொகையாக ரூ. 550-ம் வழங்கப்பெறும் வகையில் உடன்பாட்டில் வழி காணப்பட்டது. இந்த உடன்பாட்டின் பயனாக 3,000 தொழிலாளர்கள் நன்மை அடைந்தனர்.

10. தமிழ்நாடு மின்சார வாரியம் :—

தமிழ்நாடு மின்சார வாரியத்தைச் சேர்ந்த தொழிலாளர்களின் பிரதிநிதி தொழிற்சங்கங்களால் நிர்வாகத்திற்கு எதிராக ஊதிய விகிதம், அகவிலைப்படி, வீட்டு வாடகைப்படி முதலானவற்றை உயர்த்தக் கோருவது உள்ளிட்ட பல கோரிக்கைகள் அடங்கிய தொழிற் தகராறு எழுப்பப்பட்டது. சென்னை தொழிலாளர் நல ஆணையர் இவ் விவகாரத்தில் ஈடுபட்டு சம்பந்தப்பட்ட தரப்பினருடன் பேச்சு வார்த்தைகள் நடத்தினார். சென்னை தொழிலாளர் நல ஆணையர் முன்னிலையில் 21–10–1985-ல் நடைபெற்ற இணக்கப் பேச்சு வார்த்தைகளின் விளைவாக, தொழிற் தகராறுகள் சட்டத்தைச் சேர்ந்த 12 (3) பிரிவின்படி சம்பந்தப்பட்ட தரப்பினரிடையே ஓர் உடன்பாடு காணப்பட்டது. அதே நாளில், பணிச்சுமை அளவு நிர்ணயம் தொடர்பாகவும் தொழிலாளர் நல ஆணையர் முன்னிலையில் தொழிற் தகராறுகள் சட்டத்தைச் சேர்ந்த 12(3) பிரிவின்படி சம்பந்தப்பட்ட தரப்பினரிடையே தனியே ஓர் உடன்பாடு காணப்பட்டது. இந்த உடன்பாடுகளின் காரணமாக, இம் மாநிலம் முழுவதிலுமுள்ள சுமார் 82,000 தொழிலாளர்கள் நன்மை அடைந்தனர்.

11. விம்கோ தீப்பெட்டி நிறுவனம், சென்னை :—

தி வெஸ்ட்டர்ன் இந்தியன் மேச் பேக்டரி தொழிலாளர்கள் தொழிற் சங்கமானது ஊதியம், அகவிலைப்படி உயர்வு, பணி நிலைமைகள் குறித்த கோரிக்கைகளுக்காக 24–4–1985-க்குப் பிறகு தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் மேற்கொள்ளப் போவதாக வேலை நிறுத்த அறிவிப்புக் கொடுத்தது. தொழிலாளர் நலத் தனித் துணை ஆணையாளர் முன்னிலையில் சமரசப் பேச்சு வார்த்தைகள் நடைபெற்றதின் .பலனாக, தொழில் தகராறுகள் சட்டத்தைச் சேர்ந்த 12(3) ,பிரிவின்படி 14–10–1985-இல் உடன்பாடொன்று காணப்பட்டது. இந்த உடன்பாட்டினால், 720 தொழிலாளர்கள் பயன் அடைந்தனர். இதன் காரணமாக, நிரந்தர தொழிலாளர் ஒவ்வொருவரும் மாதமொன்றிற்கு ரூ. 160 சம்பள உயர்வும், ஒட்டுமொத்தத் தொகை ரூ. 1,100-ம் பெறுகின்றனர். தொழிலாளர்களின் வாரிசுகள் 37 பேர் நிரந்தரமாக்கப்படவும் வகை செய்யப்பட்டுள்ளது.



1986 மே 7]

12. நெய்வேலி பழுப்பு நிலக்கரிக் கழகம், நெய்வேலி :

நெய்வேலி பழுப்பு நிலக்கரிக் கழகத் தொழிலாளர்கள் சார்பாக, பல்வேறு தொழிற் சங்கங்கள் 1984-85 ஆம் ஆண்டிற்கான ஊதியக் கொடை சம்பந்தமாக அவர்களுடைய நிருவாகத்திற்கெதிராக தொழில் தகராறு எழுப்பினர். அதை அடுத்து சென்னை தொழிலாளர் நல இணை ஆணையாளர் (நிருவாகம்) சம்பந்தப்பட்ட தரப்பினருடன் பேச்சு வார்த்தை நடத்தினார். 1-11-1985 இல் நடைபெற்ற சமரசப் பேச்சு வார்த்தையின் போது 1947 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தைச் சேர்ந்த 12 (3) பிரிவின்படி, அவர் முன்னிலையில் ஓர் உடன்பாடு காணப்பட்டது. அதன்படி, தொழிலாளர் ஒவ்வொருவரும் 20 சதவீத ஊதியக் கொடை பெறுவர். நல்லெண்ணத்தின் அடையாளமாக, அவர்கள் ஒவ்வொருவருக்கும் ரூ. 260 இடைக்காலத் தொகை வழங்கப்படும். இந்த உடன்பாட்டின் விளைவாக சுமார் 12,000 தொழிலாளர்கள் பயன் அடைவர்.

13. சென்னை ரப்பர் தொழிற்சாலை :

சென்னையிலுள்ள, சென்னை ரப்பர் தொழிற்சாலை (திருவொற்றியூர்) பிரிவு நிருவாகத்தினர் தங்கள் நிறுவன தொழிலாளர்களின் தொழிற் சங்கம் முறையீடு செய்து கொண்ட தகராறைப் பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டு சுமுகமானதொரு தீர்வு காணும்படி சென்னை தொழிலாளர் நல ஆணையாளரை 16-5-1985 ஆம் நாளிட்ட கடிதத்தின் மூலம் கேட்டுக் கொண்டனர். அதன் பின்னர், தொழிலாளர் நல ஆணையாளர் சம்பந்தப்பட்ட தரப்பினருடன் சமரசப் பேச்சு வார்த்தைகள் நடத்தினார். 16-5-1985இல் நடைபெற்ற பேச்சு வார்த்தைகளின் போது தொழில் தகராறுகள் சட்டத்தைச் சேர்ந்த 12 (3) பிரிவின்படி இருதரப்பாரிடையேயும் அவர் முன்னிலையில் ஓர் உடன்பாடு காணப்பட்டது. இந்த உடன்பாட்டினால் சுமார் 961 தொழிலாளர்கள் பயனடைந்தனர்.

14. அரசு ரப்பர் கழகம், பரளியாறு கோட்டம், கன்னியாகுமரி மாவட்டம்:

அரசு ரப்பர் தோட்டக் கழகத்தைச் சேர்ந்த நாகர்கோவில் பரளியாறு கோட்டத் தொழிலாளர்கள் வேலைமுறை ஏற்பாட்டை ரத்து செய்ததை ஆட்சேபித்தும், ஏனைய குறைகளைத் தீர்க்குமாறு வலியுறுத்தியும் 11-5-1985-லிருந்து வேலை நிறுத்தம் மேற்கொண்டனர். முதலில் நாகர்கோவில் தொழிலாளர் நல உதவி ஆணையாளர் (இணக்கம்) இத் தகராறை பேச்சு வார்த்தைக்கு எடுத்துக் கொண்டார். அவருடைய நிலையில் உடன்பாடு காண இயலாததால், அவர் தம்முடைய இணக்க அறிக்கையை 21-6-1985 இல் சமர்ப்பித்தார். திருநெல்வேலி தொழிலாளர் நலத் துணை ஆணையாளர் முன்னிலையில் தொடர்ந்து நடந்த

பேச்சு வார்த்தையும் தோல்வியுற்றதால், சென்னை தொழிலாளர் நல ஆணையாளர் (இணக்கம்) முன்னிலையில் பேச்சு வார்த்தைகள் நடைபெற்றன. பல்வேறு தேதிகளில் விவாதம் நடைபெற்ற பிறகு, 22-8-1985 இல் 1947 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தைச் சேர்ந்த 12 (3) பிரிவின் கீழ் உடன்பாடொன்று ஏற்பட்டது. அந்த உடன்பாட்டின் வரையறைகளின்படி இருதரப்பாரும் சேகரிப்பு நிலை குறித்த விவகாரம் பற்றிய நேரடி பேச்சுவார்த்தை நடத்த ஒப்புக் கொண்டனர். வேலை நிறுத்தம் 26-8-1985 இல் திரும்பப் பெறப்பட்டது.

15. சேஷசாயி காகித-அட்டைகள் தயாரிப்பு நிறுவனம், ஈரோடு

(i) 1983—88 ஆண்டுகளுக்கான ஊதியக்கொடை தகராறு :

இந்நிறுவனத்தைச் சேர்ந்த தொழிலாளர் பிரதிநிதி தொழிற் சங்கங்கள் 1983—84 ஆம் ஆண்டிற்கான ஊதியக்கொடை தொடர்பாக, தொழில் தகராறு ஒன்றை கிளப்பியது. தொழிலாளர் நல ஆணையாளர் முன்னிலையில் நடைபெற்ற சமரச பேச்சு வார்த்தைகளின் பலனாக 1983—84, 1984—85, 1985—86, 1986—87, 1987—88 ஆம் ஆண்டுகளுக்குரிய ஊதியக் கொடை தொடர்பாக, தொழில் தகராறுகள் சட்டத்தைச் சேர்ந்த 12(3) பிரிவின் கீழ் 28—12—1985 அன்று இரண்டு உடன்பாடுகள் காணப்பட்டன. உற்பத்தித் திறன் அடிப்படையில் ஊதியக் கொடை வழங்கவும் அந்த உடன்பாட்டில் வகை செய்யப்பட்டுள்ளது. இந்த உடன்பாட்டின் பயனாக 2,000 தொழிலாளர்கள் பயனடைந்தனர்.

(ii) ஊதியம், படிகள் :

பதவித் தரங்கள், அகவிலைப்படி உயர்வும் தளவாட செயல்பாட்டு சீரமைப்பு, ஊதியக் கொடை, வீட்டு வாடகைப்படி முதலானவற்றின் உயர்வு ஆகிய கோரிக்கைகளை வலியுறுத்தி 17—8—1984-லிருந்து அல்லது அதற்குப் பிறகு வேலை நிறுத்தம் மேற்கொள்வதாக சேஷசாயி காகித-அட்டைகள் தயாரிப்பு நிறுவன தொழிலாளர் பிரதிநிதி தொழிற் சங்கங்கள் அறிவிப்பு கொடுத்தன. சேலம் தொழிலாளர் நல அதிகாரி, சேலம் தொழிலாளர் நல துணை ஆணையாளர், தொழிலாளர் நல இணை ஆணையாளர் (நிருவாகம்), தொழிலாளர் நல ஆணையாளர் ஆகியோர் முன்னிலையில் பல்வேறு நாட்களில் நடைபெற்ற பேச்சு வார்த்தைகளின் பலனாக, வேலை நிறுத்தம் தவிர்க்கப்பட்டது. தொழிலாளர் நல ஆணையாளர் முன்னிலையில் 10—7—1985இல் நடைபெற்ற இறுதி பேச்சு வார்த்தையின் போது தொழில் தகராறுகள் சட்டத்தைச் சேர்ந்த 12 (3) பிரிவின்கீழ் ஓர் உடன்பாடு காணப்பட்டது. இதன் விளைவாக 2,000 தொழிலாளர்கள் பயனடைந்தனர். இந்த உடன்பாட்டின் மூலம் தொழிலாளர்களுக்கு ரூ. 76-க்குக் குறையாமல் ஊதிய உயர்வு அளிக்கப்பட்டது. சலுகை, வீதங்களில் அவர்களுக்கு உணவு வசதிகளும், இலவச சீருடையும் அளிக்கப்பட்டன. இந்த உடன்பாடு ஐந்து ஆண்டுகளுக்கு செயலில் இருக்கும்.





வழக்கு தொடருதல் :

1985 ஆம் ஆண்டிலும், இந்நாள் வரையிலும் பின்வரும் இனங்களில் வழக்குகள் தொடர அரசு அனுமதியளித்துள்ளது:—

1, ஸ்ரீ ரங்கராஜ் இன்ஜினீயரிங் ஒர்க்ஸ், சிதம்பரம்—தீர்ப்பைச் செயல்படுத்தாமை.

2. திருவாளர்கள் ஸ்ரீதேவி ப்ராடக்ஸ், சென்னை—தீர்ப்பைச் செயல்படுத்தாமை.

3. ஸ்பியர்ட் பேக்ட் என்டர்பிரைஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை—உடன்பாட்டினைச் செயல்படுத்தாமை.

4. சி. எம். கணேசன் அண்ட் கம்பெனி, சென்னை—தீர்ப்பைச் செயல்படுத்தாமை.

5. கெண்ட் செராமிக்ஸ் டைல்ஸ் அண்ட் கம்பெனி (பிரைவேட்) லிமிடெட், சென்னை—தீர்ப்புகளைச் செயல்படுத்தாமை.

6. திருவாளர்கள் ஸ்வீட் புட்ஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை—உடன்பாட்டினைச் செயல்படுத்தாமை.

முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து நிதியுதவி :

பின்வரும் நிறுவனங்களைப் பொறுத்தமட்டில் 1985 ஆம் ஆண்டிலும் இந்நாள் வரையிலும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தொழிலாளர்களுக்கு நிவாரணம் வழங்க அரசு ஒப்புதலளித்துள்ளது:—

| நிறுவனத்தின் பெயர்கள். | தொழிலாளர்களின் எண்ணிக்கை. | ஒப்புதலளிக்கப்பட்ட தொகை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 ஸ்ரீஹரி மில், கோயம்புத்தூர் .. | 657 | 1,31,400 |
| 2 இந்தியா போர்ஜ் அண்ட் டிராப் ஸ்டேம்பிங் எக்குப்மெண்ட்ஸ் லிமிடெட், சென்னை .. | 498 | 99,600 |
| 3 வசந்தா மில்ஸ், கோயம்புத்தூர் | 1,351 | 2,70,200 |
| 4 ராமகிருஷ்ணா இண்டஸ்டிரிஸ் பிரைவேட் லிமிடெட், கோயம்புத்தூர் .. .. | 400 | 80,000 |
| 5 மினி சிமெண்ட் பேக்டரி, மதுவத்தூர், திருச்சி மாவட்டம் .. | 72 | 14,400 |

[1986 மே 7

மூடப்பட்ட தொழில் பிரிவுகளை மீண்டும் திறப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கை :

மூடப்பட்ட தொழில் பிரிவுகளின் தொழிலாளர்களுக்கு ரொக்க நிவாரணம் வழங்குவதைத் தவிர, இம்மாநிலத்தில் மூடப்பட்ட துணி ஆலைப் பிரிவுகளையும், ஏனைய தொழில் பிரிவுகளையும் மீண்டும் திறப்பதற்கு அரசு நடவடிக்கைகள் எடுக்கிறது.

மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர், தொழிலாளர் நிருவாகம், நிதியுதவி நிறுவனங்கள் ஆகியவற்றுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளுடன், பின்வரும் அரசு ஆணையாளர்-செயலாளர்களை உறுப்பினர்களாகக் கொண்டு அரசு 1986 ஆம் ஆண்டு ஜனவரியில் ஒரு குழுவை அமைத்துள்ளது.

1. அரசு ஆணையாளர்—செயலாளர், நிதித்துறை.

2. அரசு ஆணையாளர்—செயலாளர், தொழில் துறை.

3. அரசு ஆணையாளர்—செயலாளர், கைத்தறி துணி, கதர்த் துறை.

4. அரசு ஆணையாளர்—செயலாளர், தொழிலாளர் நலத்துறை.

மூடப்பட்ட பொறியியல் துணி ஆலைப் பிரிவுகளை மீண்டும் திறப்பதற்கான வாய்ப்புகளைக் கண்டறிவதற்காக இக்குழு விரைவாக நடவடிக்கை எடுத்து வருகிறது.

1947 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் அத்தியாயம் 5-பி—இன்கீழ் தாக்கல் செய்யப்படும் விண்ணப்பங்கள் :

இந்த அத்தியாத்தின்கீழ் தாக்கல் செய்யப்படும் விண்ணப்பங்களை விசாரித்து முடிவு செய்வதற்கான அதிகாரிகளாக பின்வரும் அதிகாரிகளை அரசு நியமித்துள்ளது.

25-M (தற்காலிக தொழில் நிறுத்தம்) :

இப்பிரிவின் செயல் நோக்கத்திற்காக தமிழ்நாடு மாநிலம் முழுவதற்கும் சென்னை தொழிலாளர் நல இணை ஆணையாளர் (இணக்கம்) அதிகாரியாவார்.

25-N (ஆட்குறைப்பு) :

இப்பிரிவின் செயல் நோக்கத்திற்காக தமிழ்நாடு மாநிலம் முழுவதற்கும் சென்னை தொழிலாளர் நல ஆணையாளர் அதிகாரியாவார்.



86 மே 7]

5-O (கதவடைப்பு) :

ஆய்வு அதிகாரம், தீர்ப்புக்காக நடுவர் மன்றத்திற்கு தெரி க்கும் அதிகாரம் ஆகியவை நீங்கலாக இப்பிரிவின்கீழ் மாநில ரசு செலுத்தத்தக்க அதிகாரங்கள் தொழிலாளர் நல ஆணை ாளரும் செலுத்தத்தக்கதாகும் என்று தமிழ்நாடு அரசு கட்டளை ட்டுள்ளது.

1985 ஆம் ஆண்டில் இவ்வதிகாரி பின்வரும் விண்ணப்பங் ளை முடிவு செய்துள்ளார் :—

| ிண்ணப்பங்களின் தன்மை. | வரப்பெற்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கை. | முடிவு செய்யப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை. | முடிவு செய்யப்படாத விண்ணப்பங்களின் எண்ணிக்கை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 5-M பிரிவின்கீழ் தற்காலிகமாகத் தொழிலை நிறுத்துவதற்கு அனுமதி கேட்கும் விண்ணப்பம். | 5 | 3 | 2(முறையே 8—1—86 அன்றும் 13—2—86 அன்றும் முடிவு செய்யப்பட்டன). |
| 25-N பிரிவின்கீழ் ஆட்குறைப்பு செய்வதற்கு அனுமதி கேட்கும் விண்ணப்பம். | 2 | 1+1* | இல்லை (* ஒரு விண்ணப்பம் திரும்பப் பெறப்பட்டது). |
| 25-O பிரிவின்கீழ் தொழில் கதவடைப்பு செய்வதற்கான அனுமதி கேட்கும் விண்ணப்பம். | 2 | 1 | 1 (இவ் விண்ணப்பம் 27—1—86 அன்று முடிவு செய்யப்பட்டது). |

தொழிற் சங்கங்கள் :

1—1—85 அன்றுள்ளவாறு பதிவு செய்யப்பட்ட தொழிற்சங்கங்களின் எண்ணிக்கை 4,104. இவ்வாண்டில் 532 தொழிற்சங்கங்கள் புதிதாக பதிவு செய்யப்பட்டன. 313 தொழிற்சங்கங்கள் பதிவு

ரத்து செய்யப்பட்டது. ரத்து செய்யப்பட்ட 8 தொழிற் சங்கங்களின் பதிவு திரும்ப அளிக்கப்பட்டது. இரண்டு தொழிற் சங்கங்கள் கலைக்கப்பட்டன. 1985 ஆம் ஆண்டு இறுதியில் இருந்த நிலவரப்படி, பதிவு செய்யப்பட்டுள்ள தொழிற் சங்கங் களின் எண்ணிக்கை 4,329 ஆகும்.

சுமுகமான தொழில் உறவுக்குப் பரிசு வழங்கும் திட்டம் :

தொழில் நிறுவனங்களில் நிருவாகத்தினருக்கும், அவர்களால் நியமிக்கப்பட்ட தொழிலாளர்களுக்குமிடையே சுமுகமான தொழில் உறவு தொடர்ந்து நிலவுவதையும், தொழிற்சாலையில் அமைதி நிலவுவதையும் ஊக்குவிக்கும் பொருட்டு, அரசு '' சுமுகமான தொழில் உறவுக்குப் பரிசு வழங்கும் திட்டம்'' என்று அழைக்கப் படும் திட்டம் ஒன்றை வகுத்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் ஒவ் வோராண்டும் பரிசுக்குரியவர்களைத் தேர்ந்தெடுக்க தொழி லதிபர், தொழிலாளர் பிரதிநிதிகளுடன், ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி ஒருவர் தலைமையின்கீழ் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அக்குழு பரிந்துரைத்ததன் அடிப் படையில் 1981 ஆம் ஆண்டுக்கு பரிசு பெறுவதற்குரியவர்கள் தெரிந்தெடுக்கப்பட்டு முதல் பரிசாக சுழற்கேடயம் ஒன்றையும்; நிலையாக வைத்துக் கொள்ளக் கூடிய கேடயம் ஒன்றையும், இரண்டாம் பரிசாக, தகுதிச் சான்றிதழ் ஒன்றையும், இதற்கென சென்னையில் 24–1–1984 அன்று நடத்தப்பட்ட விழாவில் 1982 ஆம் ஆண்டுக்கு பரிசு பெறுவதற்குரியவர்களை அரசு தெரிந் தெடுத்து ஒப்புதலளித்துள்ளது. 1983, 1984 ஆம் ஆண்டுக்கு பரிசு பெறுவதற்குரியவர்களைத் தெரிந்தெடுப்பதற்காக நிரு வாகங்களும், தொழிற்சங்கங்களும் அனுப்பிய விண்ணப்பங்களை குழு பரிசீலித்து வருகிறது.

முக்கியமான ஆய்வுக் குழுக்கள் :

1. சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவதைத் தடை செய்வது குறித்து ஹரிபாஸ்கர் குழு.

பல்வேறு நிறுவனங்களிலும் தொழிற்சாலைகளிலும் சிறுவர் களை வேலைக்கு அமர்த்துவது பற்றிய பிரச்சினைகளை ஆய்ந்து ஆய்வு செய்வதற்காக முன்னாள் வருவாய்த்துறை வாரிய உறுப் பினர் திரு. ஹர்பன் சிங், ஐ.ஏ.எஸ். அவர்களை அரசு 1974 ஆம் ஆண்டில் நியமித்தது. திரு. ஹர்பன் சிங், ஐ.ஏ.எஸ். அவர்கள் தீப்பெட்டி தயாரிப்பு, பட்டாசு வாணவெடிகள் தயாரிப்பு ஆகிய பல்வேறு தொழிற்சாலைகளைப் பார்வையிட்ட பின்னரும் அதிகாரிகள், பணியாளர்கள், தொழிற் சங்க பிரதிநிதிகள், சிறு குழந்தைகளின் பெற்றோர்கள் ஆகியோருடன் விரிவாக விவாதங்கள் நடத்திய பின்னரும் 1976 செப்டம்பரில் தன் னுடைய அறிக்கையை அளித்தார்.



இவ்வறிக்கை 8–2–1979 அன்று மாநில அமைச்சரவைக் கூட்டத்தில் வைக்கப்பட்டது. அக்கூட்டத்தில் சில முடிவுகள் எடுக்கப்பட்டன.

மாநில அமைச்சரவை முடிவுகளை சம்பந்தப்பட்ட துறை கள் எந்த அளவுக்குச் செயல்படுத்தியுள்ளன என்பதைக் கண்டறியும் பொருட்டு, அரசு நிலச் சீர்திருத்த ஆணையாளர் திரு. ஹரி பாஸ்கர், ஐ. ஏ., எஸ். அவர்களைத் தலைவராக வும், தொழிலாளர் நல இணை ஆணையாளர் (இணக்கம்), சமூக நலத்துறை கூடுதல் இயக்குநர் ஆகியோரை உறுப்பினர் களாகக் கொண்டும் தொழிலாளர் நலத்துறையின் 19–3–1984 ஆம் நாளிட்ட 618 ஆம் எண் அரசாணையில் குழு ஒன்றை அமைத்துள்ளது.

மேற்சொன்ன குழு, தொழிற்சாலைகளை நேரில் சென்று பார்வையிட்டு விசாரணை செய்த பின்னர் 31–7–1983 அன்று அரசுக்கு தன்னுடைய அறிக்கையை அளித்தது. குழு வின் அறிக்கையை அரசு பரிசீலித்து வருகிறது.

2. தோல் பதனிடும் தொழிலாளர்களுக்கான துணைக்குழு :

25–4–1985 அன்று புதுடில்லியில் தோல் தொழிலாளர் களுக்குக்கான முக்கூட்டு ஆய்வுக்குழு முதல் கூட்டத்தில் தமிழ்நாடு தொழிலாளர் நலத்துறைச் செயலாளர், விஞ் ஞானிகள், மைய தோல் ஆராய்ச்சி தொழிற்சாலை, தொழி லதிபர்கள் பிரதிநிதி ஒருவர், தொழிலாளர்கள் பிரதிநிதி ஒருவர் அகியோர் அடங்கிய தமிழ் நாட்டுக்குழு தோல் தொழிலாளர்களின் நிலைமையைப் பற்றி கருத்தை அளிப்ப தற்காக தமிழ்நாட்டில் தொழிற்சாலைகளை விசாரணை செய்து பார்வையிட்டு அரசுக்கு அறிக்கை அனுப்ப வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது.

அதன்படி தோல் தொழிலாளர்களின் வேலை வாழ்க்கை நிலைமைகளை ஆய்ந்து ஆய்வு செய்வதற்காக மேற்சொன்ன உறுப்பினர்கள் அடங்கிய ஒரு துணைக்குழுவை தமிழ்நாடு அரசு தொழிலாளர் நலத்துறையின் 11–6–1985 ஆம் நாளிட்ட 1,173 ஆம் எண் அரசாணையில் நியமித்தது. மேற்சொன்ன துணைக்குழு தோல் தொழிலாளர்கள் அதிகமாக உள்ள பகுதிகளை பார்வையிட்டு விசாரணை செய்த பின்னர் அரசுக்கு தன்னுடைய அறிக்கையை அனுப்பியது. முக்கூட்டு ஆய்வுக்குழு பரிசீலிப்பதற்காக அதன் முன் வைப்பதற்கு இவ்வறிக்கை மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

பணி நிலைமையையும் உற்பத்தித் திறனையும் மேம்படுத்துவது குறித்து தீவிரமாகப் பயிற்சி அளிப்பதே இதன் முக்கிய பணியாகும், இத்திட்டங்கள் சென்னையில் 1985 செப்டம்பர் 25 முதல் 1985 அக்டோபர் 17 வரை நடைபெற்றன. இவற்றில் உள்ளூரிலுள்ள மூன்று தொழில் பேட்டைகளிலிருந்து 29 பேர் பங்கு கொண்டனர். பயிற்சித் திட்டத்தின் பயன்களைப் பரப்பும் பொருட்டு, அக்டோபர் 15 முதல் 17 வரை குறுகிய பயிற்சி வகுப்பும் நடத்தப்பட்டது. இதில் தமிழ் நாட்டில் பல்வேறு பகுதிகளிலுள்ள தயாரிப்பு நிலையங்களிலிருந்து 45 பேர் பங்கு கொண்டனர். அனைத்து நாட்டு தொழிலாளர் நல அமைப்பு வல்லுநர் ஒருவர் மாவட்ட அளவிலான பயிற்சித் திட்டத்தை மதுரையில் 1986 ஜனவரி 20, 21 அன்றும் திருநெல்வேலியில் 23—1—1986 அன்றும் நடத்தினார். இதில் 26 பேர் பங்கு கொண்டனர்.

உரிமையாளர்கள்/தொழில் முனைவர்கள் தங்கள் தொழிற்சாலைகளில் பணிநிலைகளை ஆராயவும், மேம்பாடுகளைத் தெரிவிக்கவும், குறிப்பிட்ட காலத்திற்குள் அக்கருத்துக்களை மேற்கொள்ளவும் அவர்களுக்கு வழிகாட்டிக் குறிப்புகள் அளிக்கப்பட்டது. இது, சட்டத்தைச் செயற்படுத்தும் அதிகாரிகள் எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் பணி நிலைமைகளையும், பாதுகாப்பையும் மேம்படுத்த அவர்களுக்கு உதவியுள்ளது.

ஐக்கிய தேசிய மேம்பாட்டுத் திட்டம்.

மத்திய அரசின் ஐக்கிய தேசிய மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தொழில் பிரிவுகளில் பொதுவாக பணி நிலைமைகளை மேம்படுத்தவும் குறிப்பாக பாதுகாப்பு சுகாதார அளவை மேம்படுத்தவும், தொழிற்சாலை சுகாதாரத்தில் வசதிகளை அவர்களே செய்து கொள்ளுமாறு ஊக்குவிக்கவும் கருதப்படுகிறது.

மாநிலப் பாதுகாப்புப் பரிசுகள் ஷரம்வீர்,

நிருவாகிகள், தொழிலாளர்கள் ஆகிய இரு தரப்பினரின் நலனையும் பேணிவரும் வகையில் தொழிற்சாலைகளில் பாதுகாப்பு நடவடிக்கைகள் சிறந்த முறையில் நடைபெறுவதைப் பாராட்டுவதற்காக 1966 ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்ட மாநிலப் பாதுகாப்புப் பரிசு வழங்கும் முறை அண்மையில் சிறிது மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. சுழற்கேடயம் வழங்கும் நடைமுறை நிறுத்தப்பட்டுள்ளது. பரிசு பெறுபவர்களுக்கு தற்போது தனித்தனியாக கேடயம் வழங்கப்படுகிறது. இவற்றை அவர்களே வைத்துக் கொள்ளலாம். இது தவிர, தொழிற்சாலையில் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும் உற்பத்தித் திறனையும், திறமையையும் அதிகரிப்பதற்கும், புதிய கண்டு

பிடிப்புகளும், பணி முறைகளை மேம்படுத்தவும் கழிவு பொருள்களைக் குறைத்தல் முதலியவை குறித்தும் கருத்துத் தெரிவிக்கும் தொழிலாளர்களை ஊக்குவிக்கும் வகையில் அவர்களுக்குப் பாதுகாப்புப் பரிசுகளும், ஷரம்வீர் பரிசுகளும் வழங்கப்படுகின்றன.

1982, 1983 சாதனை ஆண்டுகளுக்கு மாநில பாதுகாப்பு பரிசுகளுக்கும், ஷரம்வீர் பரிசுகளுக்கும் விண்ணப்பங்கள் வரப் பெற்று பரிசீலிக்கப்பட்டுள்ளன. பரிசுபெறும் தொழிற்சாலை களுக்கும் பரிசு வழங்குவதற்கான விழா இவ்வாண்டில் நடை பெற உள்ளது.

பாதுகாப்புப் பிரிவுகளின் பணிகள் :

சென்னை, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களி லுள்ள மூன்று பாதுகாப்பு பிரிவுகளும் தொழிற்சாலை ஆய் வாளர் ஒருவரால் நிருவகிக்கப்படுகிறது. பாதுகாப்புப் பிரிவுகளின் முக்கிய நோக்கங்கள் வருமாறு :—

1. விபத்து பற்றிய புள்ளி விவரங்களைச் சேகரித்து அவற்றைத் தொகுத்தல்;

2. பாதுகாப்பு ஆய்வுகள், தொழில் சுகாதார ஆய்வுகள் நடத்துதல்;

3. தீ, தூசு, நச்சு வாயு, புகை முதலியவற்றால் ஏற்படும் தனி அபாயங்களை ஆய்வு செய்தல்;

4. சிறப்பு வகை பாதுகாப்பு முறைகளை வடிவமைத்தல்;

5. பாதுகாப்பு வகுப்புகளை நடத்துதல்;

6. சாதாரணமாகப் பயன்படுத்தும் எந்திரங்கள், நடை முறைகள் குறித்து கையேடுகளை வெளியிடுதல்;

7. தொழிற்சாலைகளிலிருந்து தொழில் கழிவுகள், வெளியேற்றப்படுவதால் ஏற்படும் சுற்றுப்புறத் தூய்மைக் கேடு, காற்று தூய்மைக் கேடு தொடர்பான பிரச்சினைகளை ஆராய்ந்து, அவை தீங்கு விளைவிக்காமலிருப்பதற்கு வழி வகைகளை வகுத்தல், மூன்று பாதுகாப்புப் பிரிவுகளும் தொழிற்சாலை தலைமை ஆய்வாளரின் (சுகாதாரம்-பாது காப்பு) கட்டுப்பாட்டின் கீழ் செயல்படுகின்றன.

இப்பாதுகாப்பு பிரிவுகளுக்குத் தலைமை வகிக்கும் உயர் நிலைமையிலுள்ள அதிகாரிகள் திறம்பட இப்பிரிவுகளின் செயல்திறனை மேம்படுத்தும் பொருட்டு மதுரை, கோயம் புத்தூர் ஆகிய இடங்களிலுள்ள பாதுகாப்புப் பிரிவுகளின்



தொழிற்சாலை ஆய்வாளர் பதவிகள் தொழிற்சாலைத் தலைமைத் துணை ஆய்வாளர் பதவிகளாக நிலை உயர்த்தப் பட்டன. மேற்சொன்ன பிரிவுகள் ஒவ்வொன்றிலும் உள்ள தொழிற் சாலை உதவி ஆய்வாளர் பதவி, தொழிற்சாலை ஆய்வாளர் பதவி யாக நிலை உயர்த்தப்பட்டுள்ளது. சென்னையிலுள்ள பாது காப்புப் பிரிவை தொழிற்சாலை ஆய்வாளர் ஒருவரும், தொழிற்சாலை உதவி ஆய்வாளர் ஒருவரும் துணைப் பணி யானர்களும் நிருவகித்து வருகின்றனர்.

பாதுகாப்புப் பிரிவுகள் தொழிற்சாலைப் பாதுகாப்பு குறித்து செய்திப் படங்களைத் திரையிடுவது தவிர பாது காப்பு ஆய்வுகள், கருத்தரங்கு கலந்தாராய்வு ஆகிய வற்றையும் நடத்துகின்றன. இவ்வாண்டில் 332 பாது காப்பு வகுப்புகள் நடத்தப்பட்டன. இதனால், 9,965 தொழிலாளர்கள் பயனடைந்தனர். அதிக விபத்துக்கள் தொழிற்சாலைகளில் நடைபெற்றதாகத் தெரிவிக்கப்பட்ட இவ்வாண்டில் 36 பாதுகாப்பு ஆய்வுகள் நடத்தப்பட்டன. ஆய்வுகளின் முடிவுகள் நிருவாகத்தினர் பின்பற்றுவதற்காக அவர்களுக்கு தெரிவிக்கப்பட்டு வருகின்றன. தொழிற்சாலை பாதுகாப்பு குறித்த காலாண்டு பத்திரிகையை பாதுகாப்புப் பிரிவுகள் வெளியிட்டு வருகின்றன. தொழிலாளர்களுக்கும், நிர்வாகத்தினருக்கும் பாதுகாப்புப் பற்றி எடுத்தியம்பும் பொருட்டு இப்பத்திரிகைகளில் பாதுகாப்பு, விபத்து பற்றிய விரிவான கட்டுரைகள், கருத்துப் படங்கள் ஆகியவை இடம் பெறுகின்றன.

உற்பத்தித் திறன் குழுவை ஏற்படுத்தல் :

உற்பத்தித் திறன் 20 அம்சத் திட்டத்தின் கீழ் வரும் ஒரு முக்கிய அம்சமாக இருப்பதால் நாட்டில் உற்பத்தித் திறனை மேம்படுத்துவதில் இந்திய அரசு மிகுந்த நாட்டம் கொண் டுள்ளது.

இத்திட்டத்தைத் திறம்படச் செயற்படுத்துவதற்காகத் தொழிற்சாலைகள் தலைமை இணை ஆய்வாளர் (உற்பத்தித் திறன் குழு) பதவி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ஆலோசனை நல்கும் அமைப்பான உற்பத்தித் திறன் குழு உற்பத்தித் திறனை மேம்படுத்தல், அதிக ஆதாரங்களை பயன் படுத்துதல், வீணாவதை நீக்குதல், கால ஆய்வு/இயக்க ஆய்வு நடத்துவதன் மூலம் பணிக் கோட்பாடுகளை வரையறுத்தல், வேலை பகுப்பாய்வு, வேலை பாதுகாப்பு பகுப்பாய்வு நடத் துதல், பரிசு வழங்கும் திட்டத்தைக் கொண்டு வருதல், தொழிலாளர்களுக்கும் மேற்பார்வையாளர்களுக்கும் முறையாகப் பயிற்சி அளித்தல் போன்ற பணிகளைப் புரியும். இந்த ஆண்டில் அரசு இப்பிரிவுக்காக ரூ. 1.19 இலட்சம் ஒதுக்கி யுள்ளது.

[1986 மே

அழுத்தக் கருவிகளைச் சோதிக்கும் பிரிவு :

தொழிற்சாலைகளில் நிறுவப்பட்டுள்ள அழுத்தக் கருவிகள் கலன்கள் ஒவ்வொன்றும் தகுதி வாய்ந்த அதிகாரிகளால் முழுவதுமாக சோதனை செய்து, அவை செயல்படுத்துவதற்குகந்த முறையில் நல்ல நிலையில் சான்றிதழ் வழங்க வேண்டுமென்று, 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டமும், தமிழ்நாடு 1950 ஆம் ஆண்டு தொழிற்சாலை விதிகளும் வரையறுக்கின்றன. இதற்கு முன்னர் இந்த ஆய்வுகளையும் சோதனைகளையும், தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளரால் (சுகாதாரம்-பாதுகாப்பு) தகுதி வாய்ந்தவர்களென சான்றளிக்கப்பட்டுள்ள தொழிற்சாலைப் பொறியாளர்களால் அல்லது வெளி முகவரமைப்புகளால் நடத்தப்பட்டன. அழுத்தக் கருவிகளை/கலன்களை ஆய்வு செய்து சோதனையிடும் இம்முக்கியப் பணியை தொழிற்சாலைகள் ஆய்வாளர் அலுவலகத்தில் உள்ள தகுதி வாய்ந்த பொறியாளர்கள் மேற்கொள்ள வேண்டுமென்றும் அரசு தற்போது தீர்மானித்துள்ளதால் சென்னை வடக்கு, தெற்கு, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய நான்கு இடங்களில் அழுத்தக் கருவிகள் சோதிக்கும் பிரிவுகளை அரசு ஏற்படுத்தி, இப்பிரிவுகளை நிருவகிக்க தொழிற்சாலை தலைமை துணை ஆய்வாளர் நால்வ… நியமித்துள்ளது.

இம்மாநிலத்தில் சுமார் 5,409 அழுத்தக் கருவிக் கலன்கள் உள்ளன.

1985 ஆம் ஆண்டில் சோதனை செய்யப்பட்ட கலன்களின் எண்ணிக்கை வருமாறு :—

| | |
|---|---|
| வெளியார் கலன்கள் .. .. .. | 3,159 |
| துறை கலன்கள் .. .. .. .. | 316 |
| நீர்மத்தின் அழுத்த ஆற்றல் .. .. | 6 |
| மொத்தம் .. | 3,481 |

இதற்காக வசூலிக்கப்பட்ட கட்டணம் ரூ. 3,18,204 85 ஆகும்.

தூக்கு பொறிகள், மின்தூக்கிகளின் கயிறு கம்பிகள், பார… தூக்கிகள் முதலியவற்றைச் சோதனையிடுதல்.

தொழிற்சாலைத் தலைமை ஆய்வாளர் ஒப்புதலளித்த தகுதி வாய்ந்த நபர்கள் குறிப்பிட்ட காலத்திற்கொரு முறை பாரந்தூக்கிகள், மின் தூக்கிகள், தூக்கு கருவிகள், கம்பி



1986 மே 7]

கயிறுகள், தூக்கு பொறிகள் முதலியவற்றைச் சோதனை செய்வதற்கான நடைமுறையை தொழிற்சாலைகள் சட்டம் வரையறுக்கிறது. இம்மாநிலத்தில் சுமார் 12,000 தூக்கு கருவிகளும், 30,000 பாரந் தூக்கிகளும், 1,000 மின் தூக்கிகளும் உள்ளன. துறையே சோதனை செய்யும் பொறுப்பை மேற்கொள்ள அரசு கருதியிருப்பதால், சென்னையில் தொழிற்சாலைகளைத் தலைமை இணை ஆய்வாளர் (சோதனை—பாதுகாப்பு பிரிவுகள்) பதவி ஒன்றுக்கும், துணைப் பணியாளர் பதவிகளுக்கும் தற்போதுள்ள பாதுகாப்புப் பிரிவுகளிலுள்ள பணியாளர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கும் ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது.

மாநிலப் பாதுகாப்பு ஆய்வாளர் அலுவலகத்தில் தொழிற்சாலை சுகாதார நுப்புரவு சூழல் ஒருங்கிணைந்த பிரிவும், ஆய்வகமும்.

இம்மாநிலத்தில் தொழில் வழியாக ஏற்படும் நோய்களைக் கட்டுப்படுத்தவும், தடுக்கவும் 1971 ஆம் ஆண்டில் தொழிற்சாலை சுகாதார துப்புரவு சூழல் ஒருங்கிணைந்த பிரிவிற்கும், ஆய்வு கூடத்திற்கும், அனுமதி வழங்கப்பட்டது. இப்பிரிவு சென்னையில் செயல்பட்டு வருகின்றது. இப்பிரிவு மாநில தொழிற்சாலை ஆய்வாளர் அலுவலகத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. அபாயகரமான பணியில் ஈடுபட்டுள்ள அங்கொன்றும் இங்கொன்றுமான தொழிலாளர்களை ஆய்வு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. பரிசோதனைக் கூடத்தில் ஆய்வுசெய்வதற்காக தொழிலாளர்களிடமிருந்து ரத்தம், சிறுநீர் முதலியவற்றின் மாதிரிகள் சேகரிக்கப்பட்டன. தொழில் வகையில் ஏற்படும் சுகாதாரக் கேடுகளை குறிப்பிட்ட காலத்திற்கொருமுறை ஆய்வு செய்வதற்கான பணியும் மேற்கொள்ளப்பட்டது. பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு முறையான சிகிச்சை அளிப்பது குறித்தும், பணிபுரியும் சுற்றுப்புறச்சூழ்நிலைகளை மேம்படுத்துவதுகுறித்தும், தொழில் வகையில் ஏற்படும் சுகாதாரக்கேடுகளைத் தவிர்ப்பதற்கு தொழிலாளர்கள் அனைவருக்கும் பாதுகாப்பு சாதனங்கள் வழங்க வேண்டிய அவசியம் குறித்தும் தேவையான அறிவுரையுடன், பரிசோதனைகளின் முடிவுகள் நிருவாகத்தினருக்கு அனுப்பப்பட்டன.

1985 ஆம் ஆண்டில் சுற்றுப்புறச் சூழல் குறித்து பின்வரும் ஆய்வு சென்னை, தலைமை மருத்துவ அதிகாரியால் (தொழிற்சாலைகள்) நடத்தப்பட்டது—

| | |
|---|---|
| 1. மைக்கோ ஃபாம் கெமிகல்ஸ் லிமிடெட், மேட்டூர் அணை. | தொழிற்சாலையில் பயன்படுத்தப்படும் குளோரின் பென்சேன் நைட்ரசன் சல்பைட், B.H.C. (திரவம்), B.H.C. (திடம்) ஆகியவை காணப்படும். பல்வேறு இடங்களிலிருந்து காற்று மாதிரிகள் சேகரிக்கப்பட்டன. |

| | |
|---|---|
| 2. சேஷசாயி பேப்பர் வாரியங்கள் லிமிடெட், பள்ளிப்பாளையம், ஈரோடு. | தொழிற்சாலையிலிருந்து 17 காற்று மாதிரிகள் சேகரிக்கப்பட்டன. |
| 3. தாரங்கதாரா கெமிகல் ஒர்க்ஸ் லிமிடெட், சாகுபுரம். | சுற்றுப்புறச் சூழல் மருத்துவ ஆய்வும் நடத்தப்பட்டு, அதற்குரிய மாதிரிகளும் சேகரிக்கப்பட்டன. |

வடஆற்காடு மாவட்டத்தில் ஆரணியிலுள்ள பட்டுத் தொழிற்சாலைகள் சிலவற்றில் சப்தம் பற்றிய ஆய்வு நடத்தப்பட்டன. தொழிற்சாலைகளில் 39 இடங்களில் சப்தங்களின் அளவு கணக்கிடப்பட்டது.

தொழிலாளர் சுகாதார நலனிற்கான மருத்துவப் பிரிவு.

மதுரையில் இயங்கும் மருத்துவப் பிரிவு தொழிலாளர்கள் செறிந்துள்ள பகுதிகளான பசுமலையில் ஒன்றும், செல்லூரில் ஒன்றும் என இரு சிறு மருந்தகங்களைக் கொண்டுள்ளது. இவை, அமைப்பு ரீதியின் கீழ் வராத தொழிலாளர்களுக்கு மருத்துவ வசதிகள் அளித்து வருகின்றன. இந்த ஆண்டில் இந்நிலையங்களில் 2,471 பேருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது.

மருத்துவ அதிகாரிகள் (தொழிற்சாலைகள்) :

தொழிற்சாலைகளில் பணிபுரிய இளைஞர்களுக்குத் தகுதிச் சான்றிதழ்களை வழங்குவதற்கும், குறிப்பிட்ட சில அபாயம் நிறைந்த பணிகள், பணி முறைகள் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ளவர்களைச் சட்டத்தில் கோரப்பட்டுள்ளவாறு குறிப்பிட்ட காலத்திற்கொருமுறை மருத்துவப் பரிசோதனை செய்து சான்றிதழ் வழங்குவதற்கும் சென்னை, வேலூர், சேலம், சிவகாசி, திருச்சி, திருநெல்வேலி ஆகிய இடங்களில் சான்றிதழ் வழங்கும் 6 அறுவை சிகிச்சை மருத்துவர்கள் பதவிகள் உருவாக்கப்பட்டுள்ளன.

தொழிற்சாலைகளிலுள்ள மருத்துவ அதிகாரிகள், முனைப்பாக தங்களுடைய பணிகளை ஆற்ற ஏதுவான வகையில், அவர்களை தொழிற்சாலைகளின் கூடுதல் ஆய்வாளர்களாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டில், இம்மருத்துவ அதிகாரிகள், 4,030 தொழிலாளர்களை பரிசோதித்துள்ளனர். வசூலிக்கப்பட்ட கட்டணங்கள் ரூ. 57,702 ஆகும்.



இரசாயனத் தொழிற்சாலைகள் குறித்த பணிக்குழு :

போபாலில் நடைபெற்ற பெரு விபத்திற்குப் பின்னர், இரசாயன அபாயம் விளைவிக்கிற அனைத்துத் தொழிற்சாலைகளின் பாதுகாப்புக் கூறுகளை ஆய்வு செய்து சீராக்க மாநில அரசுகளை மத்திய அரசு கோரியுள்ளது. மத்திய அரசு அளித்த வழிகாட்டிக் குறிப்புகளின் அடிப்படையில் தொழில் முறையிலான சுகாதாரக் கேடுகள் நிறைந்த தொழில்கள் குறித்தும் இரசாயனத் தொழிற்சாலைகளிலுள்ள பாதுகாப்பு விதித் துறைகளை செயல்படுத்தவும், அபாயம் விளைவிக்கும் ஏனைய தொழில்கள், அதிகளவில் நச்சுப் பொருள் அடங்கிய பணிமுறைகள் குறித்தும், நாளது வரையிலான தகவல்களை அளிக்கும் பொருட்டு, தொழிற்சாலைகளின் தலைமை ஆய்வாளரான (நிருவாகம்-ஆய்வுகள்) திரு. எம். டி. தண்டபாணி அவர்களை உறுப்பினர்-செயலாளராகவும் கொண்டு சென்னை பல்கலைக் கழக முன்னாள் துணை வேந்தர் டாக்டர் சாந்தப்பா அவர்கள் தலைமையின்கீழ் பணிக்குழு (உயர் அதிகாரக் குழு) ஒன்றை 1985-ஆம் ஆண்டு மார்ச் திங்களில் மாநில அரசு அமைத்தது. மணலியிலும், அதற்கருகாமைப் பகுதிகளிலுமுள்ள இரசாயனத் தொழிற்சாலைகளை ஆய்வு செய்தது பற்றிய இடைக்கால அறிக்கையை பணிக்குழு 1985ஆம் ஆண்டு செப்டம்பரில் அரசுக்கு அளித்தது. பணிக்குழுவின் பதவிக் காலம் 1986ஆம் ஆண்டு மார்ச் வரையில் நீடிக்கப்பட்டுள்ளது. பணிக்குழு, தங்களுடைய ஆய்வுப் பணியை முடித்து, முடிவான அறிக்கையை விரைவில் அளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## அத்தியாயம் 5.

தொழிலாளர் நல நிருவாகம் :

பயன்தரும் ஏனைய தொழிலாளர் நலச் சட்டங்களை செயல்படுத்துவது குறித்த விவரங்கள் இந்த அத்தியாயத்தில் விரிவாக விளக்கப்பட்டுள்ளன :—

தமிழ்நாடு 1947-ஆம் ஆண்டு கடைகள்—நிறுவனங்கள் சட்டம் :

1985-ஆம் ஆண்டில் இச்சட்டத்தின்கீழ் செயல்பட்ட கடைகள், நிறுவனங்கள் ஆகியவற்றின் எண்ணிக்கை, அவற்றில் பணியமர்த்தப்பட்டவர்களின் எண்ணிக்கை ஆகியவை கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| | |
|---|---|
| இச்சட்டத்தின் கீழ் வரும் நிறுவனங்கள் .. | 2,77,370 |
| பணியமர்த்தப்பட்ட நபர்களின் எண்ணிக்கை | 2.74,000 |

நிரந்தர, தற்காலிக விதிவிலக்குகள் :

இந்த ஆண்டில், தமிழ்நாடு 1947-ஆம் ஆண்டு கடைகள்-நிறுவனங்கள் சட்டம் செயல்படுவதிலிருந்து, ஓர் இனத்திற்கு நிரந்தரமாகவும்; 2 இனங்களுக்கு தற்காலிகமாகவும் (பொருட்காட்சிகள், திருவிழாக்கள் தவிர ஏனையவை) அரசு விதி விலக்கு அளித்துள்ளது. தொழிலாளர் நல ஆணையாளர், பொருட்காட்சிகள், திருவிழாக்கள் உட்பட 28 தற்காலிக விதிவிலக்குகளை அளித்துள்ளார்.

தொழிலாளர் நலத் துணை ஆணையாளர் 71 இனங்களில் தற்காலிக விலக்களிப்பு அளித்ததுடன், 6 இனங்களில் இச்சட்டம் செயல்படுவதைத் தற்காலிகமாக நிறுத்தி வைக்கவும் அனுமதி வழங்கியுள்ளார்.

இச்சட்டத்தின் 51-ஆம் பிரிவின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பம் ஒன்று ஆண்டின் தொடக்கத்திலேயே நிலுவையாக இருந்தது. இந்த ஆண்டில் 2 விண்ணப்பங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. 2 இனங்களில் தொழிலாளர் நல ஆணையாளர் ஆணைகளைப் பிறப்பித்துள்ளார். ஆண்டு இறுதியில் விண்ணப்பம் ஒன்று நிலுவையாகவுள்ளது.

இந்த ஆண்டில், இச்சட்டத்தின் விதித் துறைகள் " சேத்தியா தோப்பு " பேரூராட்சிக்கு நீட்டிக்கப்பட்டுள்ளன.

இச்சட்டத்தின் 41-ஆம் பிரிவின் கீழ், நடத்தப்பட்ட ஆய்வுகள், தொடரப்பட்ட வழக்குகள், முடித்து வைக்கப்பட்ட இனங்கள் குறித்த விவரங்கள் முறையே 5, 7, 8 ஆம் எண்களுள்ள இணைப்புகளில் கொடுக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு 1958-ஆம் ஆண்டு உணவகங்கள் சட்டம் :

இச்சட்டத்தின் கீழ், 1985-ஆம் ஆண்டில், 26,133 நிறுவனங்கள் இருந்தன. அவற்றில் 74,926 தொழிலாளர்கள் பணிபுரிந்தனர். ஆய்வு ஆண்டில், பதிவுக் கட்டணம்/புதுப்பித்தலுக்குரிய கட்டணம்/கூடுதல் கட்டணம் என்ற வகையில் 3,18,625.55 ரூபாய் கிடைத்தது.

இவ்வாண்டில், இச்சட்டத்தின் விதித்துறைகள் 'சேத்தியா தோப்பு' பேரூராட்சிக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளன. இச்சட்டத்தின் 19-ஆம் பிரிவின் கீழ் நடத்தப்பட்ட ஆய்வுகள், தொடரப்பட்ட வழக்குகள், முடித்து வைக்கப்பட்ட மேல் முறையீடுகள் ஆகியவை பற்றிய விவரங்கள் 5, 7, 8 ஆம் இணைப்புகளில் கொடுக்கப்பட்டுள்ளன.



விதிவிலக்குகள் :

குறிப்பிட்ட சில பதிவேடுகள், ஆவணங்கள் ஆகியவற்றை பராமரித்து வருவதில் இருந்து குறிப்பிட்ட சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு இச்சட்டத்தின் விதித்துறைகளிலிருந்து சென்னை-34, வருமான வரி—மத்திய ஆயத் தீர்வைத் துறைப் பணியாளர்கள் கூட்டுறவு சிற்றுண்டிச் சாலைக்கு அரசு இவ்வாண்டில் முற்றிலும் விலக்களித்துள்ளது. மேலும், சில நிபந்தனைகளுக்குட்பட்டு, பல்லாவரம் ஓட்டல் உடுப்பி, ஸ்ரீ கிருஷ்ணா பவனுக்கும், சென்னை, வாலாஜா சாலை, அன்னபூர்ணா கேஃபிடீரியாவிற்கும் சில பதிவேடுகள், ஆவணங்கள் வைத்து வருவதிலிருந்து ஓரளவு அரசு இவ்வாண்டில் விலக்களித்துள்ளது.

1966-ஆம் ஆண்டு பீடி, சுருட்டுத் தொழிலாளர்கள் (பணி நிலைமைகள்) சட்டம், தமிழ்நாடு 1968-ஆம் ஆண்டு பீடி, சுருட்டுத் தொழிலாளர்கள் (பணி நிலைமைகள்) விதிகள் :

இம் மாநிலத்தில் பீடி, சுருட்டு தயாரிக்கும் தொழில் வளாகங்கள் 1,313 உள்ளன. இவற்றில், சுமார் 10,800 தொழிலாளர்கள் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர். வணிகக் குறி உரிமையாளர்கள் 361 பேர் உள்ளனர். பீடித் தொழிலில் வீட்டில் தங்கி பணிபுரியும் சுமார் 2,00,000 தொழிலாளர்கள் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

மேற்கூறிய இக்கால அளவில் உரிமக் கட்டணமாக 27,880.00 ரூபாய் வசூலிக்கப்பட்டுள்ளது.

இச்சட்டத்தின் கீழ் ஆய்வாளர்களால் நடத்தப்பட்ட ஆய்வுகள், தொடரப்பட்ட வழக்குகள் ஆகியவை குறித்த விவரங்கள், 5, 7 ஆம் இணைப்புகளில் கொடுக்கப்பட்டுள்ளன.

பீடித் தொழிலாளர் நலம் :

பீடித் தொழிலாளர்கள் நலனுக்காக மத்திய அரசு செஸ் வரி வசூலிக்கிறது. மேலும், நல நடவடிக்கைகளுக்காக அமைப்பு ஒன்றையும் ஏற்படுத்தியுள்ளது. இந்த அமைப்பு, இத்துறை அதிகாரிகளின் உதவியுடனும், ஒத்துழைப்புடனும் இவ்வாண்டில் தமிழ் நாட்டில் கீழ்க்காணும் நல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

வீட்டு வசதி :

இதுவரையில் வட ஆர்க்காடு மாவட்டம் வேலூருக்கு அருகே சத்துவாச்சாரியில் 150 வீடுகள் கட்டப்பட்டு, பீடித் தொழிலாளர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன.

திருச்சிராப்பள்ளி மாவட்டம், நாவல்பட்டியிலும், திருநெல்வேலி மாவட்டம் முக்கூடல், மேலப்பாளையம் ஆகிய இடங்களிலும், பெரியார் மாவட்டம் ஈரோட்டிலும் பீடித் தொழிலாளர்களுக்காக 150 வீடுகளைக் கட்டுவதற்குரிய செயற்குறிப்புகள் பரிசீலனையில் உள்ளன. இது குறித்து, வருவாய் துறை அதிகாரிகளுடன் தொடர்பு கொள்ளப்பட்டுள்ளது.

**சுகாதாரம் :**

**முக்கூடலில் 50 படுக்கை வசதி கொண்ட மருத்துவமனை ஒன்றைக் கட்டுதல் :**

முக்கூடலில் 50 படுக்கை வசதி கொண்ட மருத்துவமனை ஒன்றைக் கட்டுவதற்காக நிலத்தைக் கையகப்படுத்துமாறு திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் ஏற்கனவே கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார். இதுபற்றி வருவாய்த் துறை அதிகாரிகளுடன் கலந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

சென்னை, குடியாத்தம் ஆகிய இடங்களிலுள்ள நிலையான மருந்தகங்களை இயங்கும்-நிலையான மருந்தகங்களாக மாற்றுவது குறித்து செயற் குறிப்புகள் மத்திய அரசின் பரிசீலனையில் உள்ளன. இயங்கும்-நிலையான மருந்தகத்தை அமைக்க மேல் விஷாரத்தில் தகுந்த கட்டிடம் ஒன்றைப் பெறுமாறு வட ஆற்காடு மாவட்ட ஆட்சித் தலைவரை ஹைதராபாத் தொழிலாளர் நல ஆணையாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

இம்மாநிலத்தில் தற்போதுள்ள அனைத்து மருத்துவ நிலையங்களும் பீடித் தொழிலாளர்களுக்கும் அவர்களுடைய குடும்பத்தினருக்கும் தொடர்ந்து மருத்துவச் சிகிச்சை அளித்து வருகின்றன.

விரிவான சுகாதார பாதுசாப்புத் திட்டத்தின்கீழ் தமிழ்நாடு அரசு நிறுவியுள்ள மருத்துவ நிலையங்களும், பீடித் தொழிலாளர்களுக்கும் அவர்களுடைய குடும்பத்தினருக்கும் தொடர்ந்து மருத்துவ சிகிச்சை அளித்து வருகின்றன.

சென்னையில் 1-10-1985 ஆம் நாளன்று நடைபெற்ற பீடித் தொழிலாளர்கள் பற்றிய மாநில ஆலோசனைக் குழுக்கூட்டத்தின் பரிந்துரைகளையொட்டி, திருச்சிராப்பள்ளி, வேலூர் ஆகிய இடங்கள் ஒவ்வொன்றிலும் 50 படுக்கை வசதிகொண்ட மருத்துவ மனைகளைக் கட்டும் பணியை மேற்கொள்ளுமாறு ஹைதராபாத் தொழிலாளர் நல ஆணையாளர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்.



படிப்புதவித் தொகைகள் :

இந்த ஆண்டில் தமிழ்நாட்டில் பீடித் தொழிலாளர்களின் பள்ளி செல்லும் குழந்தைகளுக்கு படிப்புதவித் தொகைகள் வழங்கிய வகையில் 3,88,806.50 ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

1976 ஆம் ஆண்டு பீடித் தொழிலாளர்கள் நல நிதிச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழ் தமிழ்நாடு மாநிலத்திற்காக மத்திய அரசு அமைத்த ஆலோசனைக்குழு சென்னையில் 1-10-1985 ஆம் நாளன்று கூடி, இம்மாநிலத்திலுள்ள பீடித் தொழிலாளர்களுக்குரிய நல நடவடிக்கைகளை அதிகரிப்பதற்குரிய பல்வேறு நடவடிக்கைகள் பற்றி விவாதித்தது.

*1955 ஆம் ஆண்டு உழைக்கும் பத்திரிகையாளர்கள்—பிற செய்தித்தாள் பணியாளர்கள் (பணி நிலைமைகள்—பல்வேறு விதித்துறைகள்) சட்டம்.*

இச்சட்டம் வெளியூர்களில் தொழிலாளர் நல ஆய்வாளர்களாலும், சென்னை மாநகரில் தொழிலாளர் நல (சென்னை) அலுவலகத்திலுள்ள மக்கள் தொடர்பு அதிகாரியாலும் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இச்சட்டத்தின் கீழ் ஆய்வாளர்கள் நடத்திய ஆய்வுகளின் எண்ணிக்கை 7 ஆம் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

*செய்தித்தாள் பணியாளர்களுக்காக '' பலேகர் '' நடுவர் மன்றம் தெரிவித்த பரிந்துரைகளைச் செயல்படுத்துதல்.*

112 வெளியீடுகளை (செய்தித்தாள்கள்-பத்திரிகைகள்) 39 செய்தித்தாள் நிறுவனங்கள் '' பலேகர் '' நடுவர் மன்றத்தின் பரிந்துரைகளைச் செயல்படுத்தியுள்ளன. '' பலேகர்'' பரிந் துரைகளைச் செயல்படுத்தாததற்காக சென்னை-4 ''மதராஸ் லா ஜர்னல் '' அலுவலகத்தின் நிருவாகத்தினர் மீது வழக்குத் தொடர தொழிலாளர் நலத் துறையின் 23-9-1985 ஆம் நாளிட்ட 2047 ஆம் எண்ணுள்ள அரசாணையில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

உழைக்கும் பத்திரிகையாளர்களைப் பொறுத்தமட்டில் ஊதிய விதங்களை நிர்ணயிக்கவும், திருத்தியமைக்கவும் '' ஊதியக் குழு ஒன்றை '' மத்திய அரசு அமைத்து மேற்கூறிய இக்குழுவின் தலைவராக மத்திய பிரதேச உயர் நீதிமன்ற ஓய்வுபெற்ற நீதிபதி திரு. யு. என். பச்சாவட் (Bachowat) அவர்களை நியமித்துள்ளது.
(S.O. 527.E. நாள்: 17-7-1985.)

1961 ஆம் ஆண்டு மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர்கள் சட்டம்.

1961 ஆம் ஆண்டு மோட்டார் ஊர்திப் போக்குவரத்துத் தொழிலாளர்கள் சட்டத்தின் விதித்துறைகளும், இச்சட்டத்தின் கீழ் இயற்றப்பட்ட விதிகளும் இத்துறை அதிகாரிகளால் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

ஆய்வு ஆண்டில், 1,551 மோட்டார் ஊர்திப் போக்குவரத்து நிறுவனங்கள் உள்ளன. இவற்றில் 68,764 தொழிலாளர்கள், பணிபுரிகின்றனர். இந்த ஆய்வு ஆண்டில் 98,085.38 ரூபாய் பதிவுக் கட்டணமாக வசூலிக்கப்பட்டது.

ஆய்வாளர்கள் நடத்திய ஆய்வுகள், விதித்துறைகளை மீறியவர்கள் மீது ஆய்வாளர்கள் தொடுத்த வழக்குகள் ஆகியவை பற்றிய விவரங்கள் 5, 7 ஆம் இணைப்புகளில் கொடுக்கப்பட்டுள்ளன.

விதிவிலக்கு :

தோட்டத் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலதிபர்களுக்கு மோட்டார் ஊர்திப் போக்குவரத்துத் தொழிலாளர்கள் சட்டத்தின் விதித்துறைகள், இச்சட்டத்தின் கீழ் இயற்றப்பட்ட விதிகள் ஆகியவற்றிலிருந்து 3 ஆண்டுக் காலத்திற்கு முற்றிலுமாக இந்த அறிக்கை ஆண்டில் விலக்களிக்கப்பட்டுள்ளது.

1976 ஆம் ஆண்டு விற்பனை வளர்ச்சிப் பணியாளர்கள் (பணி நிலைமைகள்) சட்டம் —

மருந்தாக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களுக்குப் பொருந்துமாறு செய்யப்பட்ட இச்சட்டம், சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட ஆய்வாளர்களால் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

1951 ஆம் ஆண்டுத் தோட்டத் தொழிலாளர்கள் சட்டம்—

இந்த ஆண்டின் தொடக்கத்தில் 460 தோட்டங்கள் இருந்தன. இவற்றில், சுமார் 92,301 தொழிலாளர்கள் பணிபுரிந்தனர். இவ்வாண்டில் 31 தோட்டங்கள் பதிவு செய்யப்பட்டன. இவற்றில் 1,030 தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர். 579 தொழிலாளர்கள் பணிபுரியும் 6 தோட்டங்கள் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டன. இவ்வாண்டின் இறுதியில் 485 தோட்டங்கள் பட்டியலில் இடம் பெற்றிருந்தன. 31–12–1985 ஆம் நாள் நிலவரப்படி தோட்டத் தொழிலாளர்களின் தோராயமான எண்ணிக்கை 92,752 ஆகும்.



சென்னை தொழிலாளர் நல இணை ஆணையாளர் (நிருவாகம்) தோட்டங்களின் தலைமை ஆய்வாளராவார். இச்சட்டத்தின் விதித்துறைகளைச் செயல்படுத்துவதில் இவருக்கு உதவி புரிய தோட்ட ஆய்வாளர்கள் 7 பேர் உள்ளனர். அவர்களின் தலைமையிடங்கள் உதகமண்டலம், குன்னூர், கூடலூர், வால்பாறை, ஏர்க்காடு, திண்டுக்கல், நாகர்கோயில் ஆகிய இடங்களில் உள்ளன. இவைகளைத் தவிர நாகர்கோயில், உதகமண்டலம் ஆகிய இரு இடங்களிலும் பணிபுரியும் மருத்துவர் இருவர், இச்சட்டத்தின் கீழ் மருத்துவ வசதி அளிப்பதோடு, தோட்டப் பகுதிகளிலுள்ள மருத்துவ மனைகள், மருந்தகங்கள் ஆகியவற்றையும், ஆய்வு செய்கின்றனர். இவ்வாண்டில் இம்மருத்துவ அதிகாரிகள், 1951 ஆம் ஆண்டு தோட்டத் தொழிலாளர்கள் சட்டத்தின் தொடர்புடைய விதித்துறைகளின் கீழ் வழக்கமான 441 ஆய்வுகளையும், 5 தனி ஆய்வுகளையும், 9 திடீர் ஆய்வுகளையும் மேற்கொண்டனர்.

இச்சட்டத்தின் கீழ் நடத்தப்பட்ட ஆய்வுகள், தொடரப்பட்ட வழக்குகள் ஆகியவை குறித்த விவரங்கள் 5, 7 ஆம் இணைப்புகளில் கொடுக்கப்பட்டுள்ளன.

கோயம்புத்தூர் தொழிலாளர் நல நீதிமன்றம், தமிழ் நாடு 1955 ஆம் ஆண்டு தோட்டத் தொழிலாளர்கள் விதிகளில் விதி 51(2)ன் கீழ் தொடுக்கப்பட்ட நான்கு மனுக்களை முடித்து வைத்தது.

தோட்டத் தொழிலாளர்கள் வீட்டுவசதி ஆலோசனைக் குழு.

அரசு, தோட்டத் தொழிலாளர்கள் வீட்டுவசதி ஆலோசனைக் குழுவை, தொழிலாளர் நலத்துறை அரசு ஆணையாளர்-செயலாளர் தலைமையின்கீழ் 2–5–1985 ஆம் நாளன்று மாற்றி அமைத்தது. இக்குழுவின் முதல் கூட்டம் 27–5–1985 ஆம் நாளன்று, உதகமண்டலத்தில் நடைபெற்றது. தோட்டத் தொழிலில் பணியமர்த்தப்பட்டுள்ள தொழிலாளர்களுக்கு வீட்டுவசதி அளித்தல், ஏனைய தொடர்புடைய வசதிகள் அளித்தல் ஆகியவை குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை பற்றி இக்கூட்டத்தில் ஆய்வு செய்யப்பட்டது. தோட்டத் தொழிலாளர்களுக்காக வீட்டுவசதி கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்துவது குறித்த கருத்து பற்றி இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. மேற்கொண்டும் பரிசீலனை செய்வதற்காக இக்குழுவிற்கு அவசியமான செயற்குறிப்புகளை அளிக்க இது பற்றி தொழிலாளர் நல இணை ஆணையாளர் (நிருவாகம்) ஆய்வு செய்து வருகிறார்.

1970 ஆம் ஆண்டு ஒப்பந்தத் தொழிலாளர்கள் (முறைப்படுத்தல்-நீக்குதல்) சட்டம்.

இச்சட்டம், இப்பொழுநிலத்தில், தொழிலாளர் நல-தொழிற்சாலைகள் ஆய்வாளர் அலுவலகத்தால் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. இவ்வாண்டில், இச்சட்டத்தின் கீழ், பதிவு

செய்யும் அதிகாரிகள் 76 பேர்களை முதன்மைத் தொழிலதிபர்
கள் என்று பதிவு செய்துள்ளனர். உரிமம் வழங்கும் அதிகாரி
கள் 765 ஒப்பந்தக்காரர்களுக்கு உரிமங்களை வழங்கியுள்ளனர்.

இக்கால அளவில் 9,100 ரூபாய் பதிவுக் கட்டணமாகவும்,
15,570.66 ரூபாய் உரிமக் கட்டணமாகவும் வசூலிக்கப்பட்
டுள்ளன.

செய்யப்பட்ட ஆய்வுகள், தொடரப்பட்ட வழக்குகள், முடிவு
செய்யப்பட்ட வழக்குகள் ஆகியவை குறித்த விவரங்கள் 5, 7
ஆம் இணைப்புகளில் கொடுக்கப்பட்டுள்ளன.

ஆலோசனைக் குழு:

1977 ஆம் ஆண்டு முதல் ஒப்பந்தத் தொழிலாளர் நல
மாநில ஆலோசனைக் குழு செயல்பட்டு வருகிறது. இக் குழு
அளித்த பரிந்துரைகளின் அடிப்படையில் பல்வேறு தொழில்களில்
உள்ள ஒப்பந்தத் தொழிலாளரை முறைப்படுத்த/நீக்க அரசு
நடவடிக்கை எடுத்துள்ளது. இந்த ஆய்வாண்டில் இக் குழு இரு
முறை 8–7–1985, 28–8–1985 அன்று கூடியது.

மணலி, சென்னை உர நிறுவனத்தில் ஒப்பந்தத் தொழி
லாளர் முறை இருப்பது பற்றி ஆராய ஏற்கெனவே அமைக்கப்
பட்ட இரசாயனத் தொழில் குறித்து துணைக் குழுவை மீண்டும்
அமைக்க அரசு இந்த ஆண்டில் ஆணையிட்டுள்ளது.

1946 ஆம் ஆண்டு தொழிற்சாலை வேலை வாய்ப்பு (நிலை
ஆணைகள்) சட்டம் :

1985 ஆம் ஆண்டில், சான்றிதழ் வழங்கும் அதிகாரிகள் 226
நிறுவனங்களின் நிலை ஆணைகளுக்குச் சான்றிதழ் வழங்கினர்.
51 இனங்களில், நிலை ஆணைகளின் திருத்தங்களுக்குச் சான்
றிதழ் வழங்கினர். இவ்வாண்டில் மேல் முறையீட்டு அதிகாரி
மன்றங்கள் என்ற முறையில் தொழிலாளர் நல நீதிமன்றம் இச்
சட்டத்தின் 6 ஆம் பிரிவின் கீழ் 2 மேல் முறையீடுகள் மீது
தீர்ப்பு வழங்கியது. இச் சட்டத்தின் 13–ஏ எனும் பிரிவின்
கீழ் வரப்பெற்ற 3 மனுக்களின் மீது இந்நீதிமன்றங்கள் தீர்ப்
பளித்தன.

தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு தொழில் நிறுவனங்கள் தேசிய
பண்டிகை விடுமுறைகள்) சட்டம் :

இவ்வாண்டில், தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள், ஆய்வாளர்
கள் மேற்கொண்ட ஆய்வுகள் ஆகியவை குறித்த விவரம் 5, 7
ஆகிய இணைப்புகளில் கொடுக்கப்பட்டுள்ளது. இச்சட்டம்,
இத்துறையின் மூலம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.



மாநிலத் தொழிலாளர் ஆலோசனைக் குழு தெரிவித்தபடி,
தேர்தல் நாட்கள் அனைத்தையும் தேசிய விடுமுறை நாட்களாகச்
சேர்க்க அரசு இச்சட்டத்திற்குத் திருத்தம் கொண்டு வர இருக்
கிறது.

தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு தொழில் நிறுவனங்கள் (தொழி
லாளர்களுக்கு நிலையான அந்தஸ்து வழங்கல்) சட்டம் :

இச்சட்டம், 24 திங்கள்களில் 480 நாட்கள் தொழிலாளர்கள்
தொடர்ந்து பணியாற்றியிருந்தால் அவர்களுக்கு நிலையான அந்
தஸ்து அளிக்க வகை செய்கிறது. இச்சட்டம், இம்மாநிலத்தில்,
தொழிலாளர் நல ஆய்வாளர் அலுவலகத்தாலும், தொழிற்சாலை
ஆய்வாளர் அலுவலகத்தாலும் 1–1–1982-லிருந்து செயல்படுத்
தப்பட்டு வருகிறது. தொழில் நிறுவன அதிபர்கள் சிலர் இச்
சட்டத்தின் விதித்துறைகளை எதிர்த்து சென்னை உயர்நீதி
மன்றத்தில் வழக்கு தொடுத்தனர். மேற்சொன்ன சட்டத்தின்
செயல் திறனைச் சரி என்று கூறி உயர்நீதிமன்றம் அந்த ரிட்
மனுக்களுக்குத் தீர்ப்பளித்தது. அவ்வாறு தீர்ப்பளித்தபோது—
(a) தொழிற் பயிற்சி பெறுபவர்கள் பதிலிகள் (Badlies)
ஆகியோருக்கு இச்சட்டம் பொருந்தாது என்றும்,
(b) இச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் வரம்பு நிபந்தனை
செயல் திறனற்றது என்றும் தெரிவித்தது.

இத்தீர்ப்புக்கெதிராக உச்சநீதிமன்றத்தில் அரசு மேல்முறை
யீடு செய்துள்ளது. உயர்நீதிமன்றம் 5918/82 ஆம் எண் ரிட்
மனுவில் அளித்த தீர்ப்பினால் ஏற்பட்ட சில இடையூறுகளை
நீக்கவும் தொழிலாளர்களுக்குப் பயனளிக்கவும் இச்சட்டத்தின்
3 ஆம் பிரிவை அரசு இவ்வாண்டில் திருத்தியுள்ளது.

வீட்டு வாடகைப்படி வழங்க புதிய சட்டம் :

மாநிலத் தொழிலாளர் ஆலோசனைக்குழு தெரிவித்தபடி இங்
குள்ள தொழிலாளர்களுக்கு வீட்டு வாடகைப்படி வழங்க புதிய
சட்டம் ஒன்றை விரைவில் அரசு கொண்டு வர இருக்கிறது.

## அத்தியாயம்—VI.

### ஊதிய நிர்ணயச் சட்டங்கள்

1948 ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டம்.

1985–86 ஆம் ஆண்டில் அரசு கீழ்க்காணும் வேலைகளைப்
பொறுத்தமட்டில் குறைந்த அளவு ஊதிய விகிதத்தைத் திருத்தி
அமைத்துள்ளது :—

(1) யாதொரு மலைத் தோட்டத்தில் வேலை (தேயிலை,
காப்பி, ரப்பர், சின்கோனா).

(2) தோல் பதனிடும் தொழிற்சாலைகளிலும், தோல் பொருள் தயாரிப்பிலும் வேலை.

(3) சலவை நிலையங்கள், துணி வெளுப்பு தொழிலில் வேலை (கம்பளி உட்பட).

(4) நார்ப்பொருள் தயாரிப்பில் வேலை.

(5) அரிசி, மாவு, பருப்பு ஆலைகளில் வேலை

(6) மூக்குப்பொடி தயாரிப்புத் தொழிலில் வேலை.

(7) அச்சகத்தில் வேலை.

(8) செங்கல், ஓடு தயாரிப்புத் தொழிலில் வேலை.

பின்வரும் தொழில்களைப் பொறுத்தமட்டில் குறைந்த அளவு ஊதிய வீதங்களை அரசு முதல்தடவையாக நிர்ணயித்துள்ளது :-

(1) கொள்கலன்கள் (பாத்திரங்கள்) தயாரிப்புத் தொழிலில் வேலை.

(2) ஆட்டோ ரிக்ஷாக்கள், வாடகை மோட்டார் வண்டிகளில் வேலை.

பின்வரும் வேலைகளைப் பொறுத்த மட்டில், குறைந்த அளவு ஊதிய வீதத்தை நிர்ணயித்தல், குறைந்த அளவு ஊதிய ஆலோசனைக் குழுக்களின் பரிந்துரைகள் பரிசீலனையில் உள்ளன :—

(1) அரசு மோட்டார் போக்குவரத்தில் வேலை.

(2) தேயிலைத் தொழிற்சாலையில் வேலை.

(3) பீடி சுற்றும் வேலை.

பின்வரும் வேலைகளைப் பொறுத்தமட்டில் குறைந்த அளவு ஊதிய வீதத்தை நிர்ணயித்தல்/திருத்தியமைத்தல் ஆகியவற்றிற்காகக் குறைந்த அளவு ஊதிய ஆலோசனை குழுக்களை அமைப்பதற்கான செயற்குறிப்புக்கள் பரிசீலனையில் உள்ளன :—

(1) கழிவுப் பஞ்சாலையில் வேலை (நிர்ணயித்தல்).

(2) வனத் தொழிலில் வேலை (நிர்ணயித்தல்).

(3) டின் தயாரிப்புத் தொழிலில் வேலை (நிர்ணயித்தல்).

(4) கடைகள், வணிக நிறுவனங்களில் வேலை (திருத்தியமைத்தல்).

(5) காப்பி பதப்படுத்தும் தொழிலில் வேலை (திருத்தியமைத்தல்).

(6) திரைப்படத் தொழிலில் வேலை (திருத்தியமைத்தல்)

(7) செயற்கை வைரம் அறுப்பதில் வேலை (திருத்தியமைத்தல்).

(8) திரைப்படத் தயாரிப்பு தொழிலில் வேலை (திருத்தியமைத்தல்).



கள் இறக்குதல், பதனீர் இறக்குதல் போன்ற வேலைகளைக் குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் அட்டவணையில் அரசு சேர்த்துள்ளது. மேற்சொன்ன வேலைக்குக் குறைந்த அளவு ஊதிய வீதங்களை நிர்ணயிக்க இயலும். அமைப்பு ரீதியில் இராத மேலும் பல வேலைகளை 1948 ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் கீழ் கொண்டு வர அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

கீழ்க்காணும் புதிய வேலைகளை மேற்படி சட்டத்தின் அட்டவணையில் சேர்க்கக் கருதியிருப்பது குறித்து அரசு தொடக்க அறிவிக்கை வெளியிட்டு அதற்கு மறுப்புரைகளையும் கருத்துக்களையும் கேட்டுள்ளது —

1. கடல் வாழ் உயிரின உணவுப் பொருள் தொழிலில் வேலை.

2. காலணி தயாரிப்புத் தொழிலில் வேலை.

3. இரசாயனத் தொழில், வடிசாலை ஆகியவற்றில் வேலை.

4. தோல் பொருள் தயாரிப்புத் தொழிலில் வேலை.

5. சோடா, கலர் தயாரிப்புத் தொழில், மது பானம் தயாரிப்பு ஆலை ஆகியவற்றில் வேலை.

6. சேர்க்கை உறுப்புக்கள் உட்பட வானொலி தயாரிப்புத் தொழிலில் வேலை.

7. பாலிதீன் தயாரிப்பு, நுரைப்பல் செய்முறைப்படுத்துதல், பிளாஸ்டிக் தயாரிப்புத் தொழில் ஆகியவற்றில் வேலை.

8. பேக்கரி, பிஸ்கட் தயாரிப்புத் தொழிலில் வேலை.

9. பட்டு இழை முறுக்கேற்றும் ஆலையில் வேலை.

வேளாண்மை தொழிலாளர்களைப் பொறுத்தமட்டில் 1983 இல் திருத்தியமைக்கப்பட்ட குறைந்த அளவு ஊதிய வீதங்கள் இன்னும் நடைமுறையில் உள்ளன. தமிழ்நாட்டில் கிழக்குத் தஞ்சாவூர் மாவட்டத்தில் 11 வட்டங்கள் தவிர, ஏனைய எல்லாப் பகுதிகளிலும் இந்த ஊதிய வீதங்கள் நடைமுறையில் உள்ளன. மேற்படி 11 வட்டங்களில் தமிழ்நாடு வேளாண் தொழிலாளர் நியாய ஊதியங்கள் சட்டம் செயலில் இருக்கிறது. இந்த ஊதிய வீதங்களை மேலும் திருத்தியமைப்பது குறித்து விசாரித்து ஆலோசனை கூற ஒரு குழுவை அமைக்க அரசு கருதியுள்ளது. வேளாண்மைத் துறையில் குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தை வருவாய் நிருவாகத்தினர் செயல்படுத்துகின்றனர். 1985 இல் ஆய்வாளர்கள் 7,664 தடவை சோதனை நடத்தியுள்ளனர். 557 கோரிக்கைகள் தீர்க்கப்பட்டுள்ளன.

[1986 மே 7

தமிழ்நாடு வேளாண் தொழிலாளர் நியாய ஊதியங்கள் சட்
டத்தின் படிக்கான குறைந்தளவு ஊதிய வீதங்கள் 1985 ஜூன்
மாதத்தில் திருத்தியமைக்கப்பட்டுள்ளன. நியாய ஊதியச் சட்
டத்தை ரத்து செய்து விட்டு அதற்குப் பதிலாக குறைந்தளவு
ஊதியங்கள் அறிவிக்கையைக் கிழக்கு தஞ்சாவூர் மாவட்டத்திலும்
கொண்டு வரத் திட்டமிடப்படுகிறது.

இந்த ஆண்டில் குறைந்த அளவு ஊதியங்கள் (மாநில) ஆலோ
சனைக் குழு இருமுறை 11–3–1985, 7–8–1985 ஆம் நாளில்
கூடியது.

1948 ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின்
20 ஆம் பிரிவின்படி அதிகாரிகள் என்ற முறையில் தொழிலாளர்
நல நீதிமன்றங்களில் நீதிபதிகள் குறைந்த அளவு ஊதியம் வழங்க
வேண்டுமெனக் கோரி 1985 இல் வரப்பெற்ற 5 மனுக்களை
விசாரணை செய்து தீர்ப்பளித்தனர்.

தொழிலாளர் நீதிமன்றங்களில் நீதிபதிகளுக்குப் பதிலாக
தொழிலாளர் நல துணை ஆணையாளர்களை (பணியாளர் இழப்
பீட்டு ஆணையாளர்) குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் 20
ஆம் பிரிவின்படிக்கான அதிகாரிகளாக அரசு இப்போது
அறிவிக்கை வெளியிட்டு தொழிலாளர் நலத் துறையின்
9–1–1986 ஆம் நாளிட்ட 82 ஆம் எண் ஆணையில் உத்தர
விட்டுள்ளது. மத்திய அரசின் கீழ் வரும் வேலைகளுக்கும் இது
போன்ற அறிவிக்கை அரசு வெளியிட்டுள்ளது. மேற்சொன்ன
அரசாணையில் 3 ஆம் எண். அறிவிக்கையைக் காண்க. இதனால்
அட்டவணையிடப்பட்ட வேலையில் உள்ள தொழிலாளர்கள்
1948 ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின்படி
தங்களுக்குச் சேர வேண்டிய ஊதியத்தைக் கேட்டுப் பெற உரிமை
கோரிக்கை அதிகார மன்றங்களை எளிதில் அணுக முடியும்.

திருத்தங்கள்.

தொகையைப் பிடித்தம் செய்வதற்கான நடைமுறையை எளிமைப்
படுத்த 1936 ஆம் ஆண்டு ஊதியம் வழங்கல் சட்டத்தைத்
திருத்தம் செய்வதற்கான புதிய சட்ட முன்வடிவு.

தற்போது அதிகாரிகள் மாஜிஸ்டிரேட் விதித்துள்ள அபரா
தத்தைப் போலவே தொகையை பிடித்தம் செய்யுமாறு சம்
பந்தப்பட்ட மாஜிஸ்ட்டிரேட்டுக்கு விண்ணப்பம் செய்து கொள்
கின்றனர். மாஜிஸ்ட்டிரேட்டுக்கள் சிலர் அவ்வாறு நேரடியாக
தொகையை பிடித்தம் செய்வதற்குப் பதிலாக அந்த இனத்தின்
தகுதிகளையும் விசாரிக்கின்றனர். இதனால் தான் இத்திருத்தம்
கொண்டுவர வேண்டிய அவசியம் ஏற்பட்டது.



1986 மே 7]

28–1–1986 அன்று மாநிலச் சட்டப் பேரவையில் சட்ட முன்
வடிவு கொண்டு வரப்பட்டு, அதன் மூலம் தமிழ்நாட்டுக்குப்
பொருந்துகிற 1936 ஆம் ஆண்டு ஊதியம் வழங்கும் சட்டத்தின்
15 ஆம் பிரிவு திருத்தப்பட்டுள்ளது. இத்திருத்தத்தின் பயனாக
இச்சட்டத்தின் கீழ் உத்திரவிடப்பட்ட தொகைகளை நிலவரி
பாக்கியைப் போலவே வசூலிக்க மாவட்ட ஆட்சியர்களுக்கு
சான்றிதழ் வழங்க ஊதியம் வழங்கல் அதிகாரிகள் (தொழி
லாளர் நலத்துறை ஆணையர்) அதிகாரம் பெறுகின்றன.

இச்சட்ட முன்வடிவு மாநில சட்டமன்றத்தால் நிறைவேற்றப்
பட்டு குடியரசுத் தலைவரின் இசைவு பெறவிருக்கிறது.

வணிக நிறுவனங்களுக்கு இச்சட்டத்தை நீட்டித்தல் :

1947 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள், நிறுவனங்கள் சட்
டத்தின் 2(3) பிரிவில் கூறியுள்ளபடி 20 பேரும் அதற்கு மேலும்
வேலைக்கு அமர்த்தியுள்ள வணிக நிறுவனங்களை இச்சட்டத்தின்
வரம்பின்கீழ் கொண்டு வந்து 24–1–1986 ஆம் நாளிட்ட 128 ஆம்
எண் அரசாணையை அரசு பிறப்பித்துள்ளது.

1936 ஆம் ஆண்டு ஊதியம் வழங்கல் சட்டம் :

இச்சட்டம், தொழிற்சாலைகளைப் பொறுத்தமட்டில்
தொழிற்சாலை ஆய்வாளர் அலுவலகத்தாலும், ஏனைய தொழில்
நிறுவனங்களைப் பொறுத்த மட்டில் தொழிலாளர் நல ஆய்வாளர்
அலுவலகத்தாலும் செயல்படுத்தப்படுகிறது.

நடத்தப்பட்ட ஆய்வுகள், தொடரப்பட்ட வழக்குகள் ஆகி
யவை பற்றிய விவரம், 5, 7 ஆம் இணைப்புகளில் கொடுக்கப்
பட்டுள்ளன.

தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு வாழ்க்கைப்படி வழங்கல்
சட்டம்:

தொழிலாளர்கள் தற்காலிகமாக வேலையிலிருந்து நீக்கப்
பட்டிருக்கும்போது, அவர்களுக்கு தொழிற்சாலை நிருவாகத்தினர்
வாழ்க்கைப்படி வழங்குவதை இச்சட்டம் கட்டாயமாக்குகிறது.

வாழ்க்கைப்படி வழங்கல் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் படி
இவ்வாண்டு தொடக்கத்தில் வாழ்க்கைப்படி வழங்கக் கோரி
வரப்பெற்ற 130 கோரிக்கை மனுக்கள் குறித்து முடிவு செய்யப்
படாமல் இருந்தன. இவ்வாண்டில் அத்தகைய 279 மனுக்கள்
துறை அலுவலர்களால் பெறப்பட்டன. இவற்றுள் 266 மனுக்
கள் குறித்து முடிவு செய்யப்பட்டது. இவ்வாண்டின் இறுதி
நிலவரப்படி 143 மனுக்கள் குறித்து முடிவு செய்யப்படவில்லை.

மேற்படி சட்டத்தின் 7 ஆம் பிரிவின்படி அதிகாரி பிறப்பித்த உத்தரவுக்கு எதிராக மேல்முறையீடு செய்து கொள்ள வகை செய்து, தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு வாழ்க்கைப்படி வழங்கல் விதிகளை அரசு திருத்தியுள்ளது. மேல்முறையிட்டு மனுவின் மீது அதிகாரி பிறப்பித்த உத்தரவால் பாதிக்கப்பட்டவர் இரண்டாவது மேல்முறையீட்டை அரசுக்கு கொடுக்கவும் இந்த விதிகள் வகை செய்கின்றன. இந்த விதிகளுக்கிணங்க தொழிலாளர் நல துணை ஆணையாளர் அலுவலகத்தில் உள்ள தொழிலாளர் நல உதவி ஆணையாளர்களை 7 ஆம் பிரிவின் படிக்கான அதிகாரியாக அறிவித்து அரசு அறிவிக்கை வெளியிட்டுள்ளது. மேலும், தொழிலாளர் நல உதவி ஆணையாளரின் ஆணையை எதிர்த்து செய்து கொள்ளப்படும் மேல்முறையீடுகளை விசாரிக்க தொழிலாளர் நல துணை அதிகாரிகளுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

அத்தியாயம் 7.

சமூகப் பாதுகாப்பு.

1952-ம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி பல்வகை விதித்துறைகள் சட்டம்.

இச்சட்டத்தின் விதித்துறைகள் 1985 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள் நிலவரப்படி 173 தொழிற்சாலைகளுக்கு அல்லது குறிப்பிட்ட வகை தொழில் நிறுவனங்களுக்குப் பொருந்து மாறு செய்யப்பட்டுள்ளன. இச்சட்டத்தின் விதித்துறைகளின் படி வருங்கால வைப்பு நிதி, குடும்ப ஓய்வூதியம், காப்புறுதி ஆகியவற்றிற்காக மூன்று திட்டங்கள் செயலில் உள்ளன.

இந்த ஆண்டில் இச்சட்டம், புதிய தொழில்கள் எதற்கும் நீட்டிக்கப் படவில்லை.

நிறுவனங்களையும், சந்தாதாரர்களையும் இத்திட்டத்தின்கீழ் கொணருதல் :

1985 ஆம் ஆண்டு டிசம்பர் இறுதிவரை இச்சட்டத்தின் கீழ் கொணரப்பட்ட நிறுவனங்கள், சந்தாதாரர்கள் ஆகியோர் தொடர்பான விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| (1) | விலக்களிக்கப் பட்டவை. (2) | விலக்களிக்கப் படாதவை. (3) | மொத்தம். (4) |
|---|---|---|---|
| நிறுவனங்களின் எண்ணிக்கை. | 414 | 18,120 | 18,534 |
| சந்தாதாரர்களின் எண்ணிக்கை. (தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி). | 3,41,676 | 12,73,006 | 16,14,682 |



1971 ஆம் ஆண்டு தொழிலாளர் குடும்ப நல ஓய்வூதிய திட்டத்தின் கீழ்வரும் சந்தாதாரர்கள்.

1985 ஆம் ஆண்டு டிசம்பர் இறுதிவரை இத்திட்டத்தின் கீழ் வந்துள்ள சந்தாதாரர்களின் எண்ணிக்கை 12,14,510 ஆகும்.

1976 ஆம் ஆண்டு பணியாளர் வைப்பீட்டுடன் இணைந்த காப்புறுதித் திட்டத்தின் கீழ் உறுப்பினராதல்.

1952 ஆம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி பல்வகை விதித்துறைகள் சட்டத்தின் கீழ் வருகின்ற தொழிற்சாலைகள் அல்லது வகை நிறுவனங்களைச் சேர்ந்த உறுப்பினர்கள் அனைவரும் இத்திட்டத்தில் தாமாகவே 1-8-1976 முதல் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். தொழிலதிபர் தான் வேலைக் கமர்த்தியுள்ள ஒவ்வொரு பணியாளருக்கும் அவருடைய அடிப்படை ஊதியம், அகவிலைப்படி, வேலையில் வைத்துக் கொள்வதற்கானபடி (ஏதேனும்) ஆகியவற்றில் 0.5 சதவீதத்தை சந்தா தொகையாகக் கொடுக்க வேண்டும். பணியாளர் இந்த நிதித் தொகை எதுவும் செலுத்த வேண்டியதில்லை.

ஆயினும், ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்தின் கூட்டு காப்புறுதித் திட்டத்தின் மூலம் கூடுதல் பயன்பெறும் ஏற்பாட்டைத் தொழிலதிபர்கள் செய்திருக்கும் பொழுது, அவர்கள் பணியாளர் வைப்பீட்டுடன் இணைந்த காப்புறுதித் திட்டத்தில் சேருவதிலிருந்து மேற்படி சட்டத்தின் 17(2) (எ) பிரிவின்படி விலக்களிக்கப் படுகிறது. இதுவரை 56,134 பணியாளர்கள் சம்பந்தப்பட்ட 166 நிறுவனங்களுக்கு இந்த விலக்களிக்கப்பட்டுள்ளது.

கேட்பு, வசூல், நிலுவை :

மேற்சொன்ன மூன்று திட்டங்களின் கீழ் 1985 ஆம் ஆண்டிற்கான கேட்பு, வசூல். நிலுவை விவரம் வருமாறு :—

| (1) | தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி. (2) | தொழிலாளர் குடும்ப ஓய்வூதியம். (3) | தொழிலாளர் வைப்பீட்டுடன் இணைந்த காப்புறுதி. (4) |
|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்). | | |
| கேட்பு .. | 7,725.71 | 1,331.42 | 275.37 |
| வசூல் .. | 7,256.33 | 1,299.11 | 264.86 |
| நிலுவை .. | 469.38 | 32.31 | 10.51 |

[1986 மே 7

மேலே குறிப்பிட்டுள்ள நிலுவைத் தொகையில் பெரும் பகுதி பின்வரும் வகைத் தொழில் நிறுவனங்களிடமிருந்து வசூலிக்கப்படாது முடங்கிக் கிடக்கின்றன :—

| | தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி. ரூபாய் (இலட்சத்தில்). |
|---|---|
| 1 தேசிய துணி ஆலை நிறுவனம் மேற்கொண்ட நலிந்த துணி ஆலைகளைப் பொறுத்த மட்டில் நிலுவைகள் .. .. | 57.15 |
| 2 மேற்கூறிய திட்டம் பொருந்துவதை எதிர்த்து ரிட் மனுக்களைத் தாக்கல் செய்து, தடையாணை பெற்றுள்ள நிறுவனங்கள் .. .. .. .. | 82.96 |
| 3 கலைக்கப்படும் நிலையிலுள்ள நிறுவனங்கள் .. | 100.74 |
| 4 மூடப்படும் நிலையிலுள்ள நிறுவனங்கள் .. | 37.05 |
| மொத்தம் .. | 277.90 |

நாட்டுடமையாக்கப்பட்ட ஆலைகளிடமிருந்து அவை நாட்டுடமையாவதற்கு முன்பிருந்த காலத்திற்குரிய நிலுவைத் தொகையை வசூலிப்பது பற்றி மத்திய அரசு பரிசீலித்து வருகிறது.

பணியாளர் வருங்கால வைப்பு நிதி கணக்கு 1-ல் மிகுதியாக உள்ள ரூ. 191.48 இலட்சத்தை வசூலிக்க சட்ட திட்டங்களில் வகை செய்துள்ள தண்டனை விதித்துறைகளை கைக்கொண்டு வரி வசூல் சான்றிதழ்களை பிறப்பித்தும், நீதிமன்றங்களில் குற்றங்களைத் தாக்கல் செய்தும் திறம்பட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

பணியாளர்கள் வருங்கால வைப்பு நிதிக் கணக்குகளை முடித்து தொகை கொடுத்துத் தீர்த்தல்.

1985 ஆம் ஆண்டு 57,128 இனங்களைப் பொறுத்த மட்டில் வருங்கால வைப்பு நிதிக் கணக்குகளை இறுதியாக்கித் தொகை வழங்கித்தீர்ப்பது தொடர்பான 3,037.12 இலட்ச ரூபாய் வழங்கப்பட்டது.



1986 மே 7]

1985 ஆம் ஆண்டில் வரப்பெற்ற உரிமைக் கோரிக்கைகள், தொகை கொடுத்துத் தீர்க்கப்பட்டவை, திருப்பி அனுப்பப்பட்டவை, தொகை கொடுத்துத் தீர்க்கப்படாமலுள்ள உரிமை கோரிக்கைகள் ஆகியவை குறித்த விவரங்களைக் காட்டும் விவர அறிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| | |
|---|---|
| (அ) 31–12–1984 ஆம் நாள் நிலவரப்படி தொகை கொடுத்துத் தீர்க்கப்படாமலிருந்த உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை. .. .. .. | 5,425 |
| (ஆ) 1985 ஆம் ஆண்டில் வரப்பெற்ற உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை .. .. | 71,274 |
| (இ) தொகை கொடுத்துத் தீர்க்கப்பட வேண்டியிருந்த உரிமைக் கோரிக்கைகளின் மொத்த எண்ணிக்கை .. .. | 76,699 |
| (ஈ) 1985 ஆம் ஆண்டில் தொகை கொடுத்துத் தீர்க்கப்பட்ட உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை .. .. .. | 57,128 |
| (உ) குறைபாடுகளைச் சரி செய்வதற்காகத் திருப்பி அனுப்பப்பட்ட உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை .. .. | 14,806 |
| (ஊ) 31–12–1985 ஆம் நாள் நிலவரப்படி தீர்க்கப்படாமலிருந்த உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை .. .. .. | 4,765 |

1985 ஆம் ஆண்டில் தொகை கொடுத்துத் தீர்க்கப்பட்ட உரிமைக் கோரிக்கைகள் பற்றிய பகுப்பாய்வு:

| | எண்ணிக்கை. |
|---|---|
| (அ) இறப்பு .. .. .. .. .. | 2,944 |
| (ஆ) வயது முதிர்வு பெற்றமை .. .. | 7,540 |
| (இ) நிரந்தரமாக இயலாமையுற்றது .. .. | 396 |
| (ஈ) பதவியை விட்டு விலகியது .. .. | 40,103 |
| (உ) ஆட்குறைப்புச் செய்யப்பட்டது .. .. | 5,334 |
| (ஊ) இடம் பெயர்தல் .. .. .. | .. |
| (எ) பணியிலிருந்து நீக்கப்பட்டது .. .. | 55 |
| (ஏ) புல்வகை .. .. .. .. .. | 756 |
| மொத்தம் .. | 57,128 |

1971 ஆம் ஆண்டு தொழிலாளர் குடும்ப நல ஓய்வூதிய திட்டத்தின்கீழ் தொகை கொடுத்துத் தீர்க்கப்பட்டவை :—

(அ) 31—12—1984 ஆம் நாள் நிலவரப்படி முடிக்கப்பெறாமலிருந்த கோரிக்கைகளின் எண்ணிக்கை .. .. .. .. 5,890

(ஆ) 1985 ஆம் ஆண்டு வரப்பெற்ற கோரிக்கைகளின் எண்ணிக்கை .. .. .. .. [illegible],289

(இ) தொகை கொடுத்துத் தீர்க்கப்பட உள்ள மொத்தக் கோரிக்கைகளின் எண்ணிக்கை .. .. 30,179

(ஈ) 1985 ஆம் ஆண்டு தொகை கொடுத்துத் தீர்க்கப்பட்ட கோரிக்கைகளின் எண்ணிக்கை. 28,121

(உ) குறைபாடுகளை சரிசெய்து அனுப்பி வைக்குமாறு கூறி திருப்பி அனுப்பப்பட்ட உரிமைக்கோரிக்கைகளின் எண்ணிக்கை.. 10,354

(ஊ) 31—12—1985 ஆம் நாள் நிலவரப்படி முடிவுறாமல் இருந்த கோரிக்கைகளின் எண்ணிக்கை .. .. .. .. 5,704

1985 ஆம் ஆண்டில் தொகை கொடுத்து தீர்க்கப்பட்ட 46,561 கோரிக்கைகளுக்காக வழங்கப்பட்ட தொகை ரூ. 1,41.61 இலட்சமாகும்.

1985 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் நாள் நிலவரப்படி ஒய்வூதியம் பெறும் குடும்பங்களின் எண்ணிக்கை 1,715 ஆகும்.

1976 ஆம் ஆண்டு தொழிலாளர்கள் வைப்பீட்டுடன் இணைந்த ஈட்டுறுதித் திட்டத்தின்கீழ் தொகை கொடுத்துத் தீர்க்கப்பட்டவை :

(அ) 31—12—1984 ஆம் நாள் நிலவரப்படி முடிக்கப்படாமல் இருந்த கோரிக்கைகளின் எண்ணிக்கை .. .. 775

(ஆ) 1985 ஆம் ஆண்டில் வரப்பெற்ற கோரிக்கைகளின் எண்ணிக்கை .. [illegible]

(இ) தொகை கொடுத்து தீர்க்கப்பட உள்ள மொத்தக் கோரிக்கைகளின் எண்ணிக்கை [illegible]

(ஈ) 1985 ஆம் ஆண்டில் தொகை கொடுத்துத் தீர்க்கப்பட்ட கோரிக்கைகளின் எண்ணிக்கை [illegible]





(உ) திருப்பி அனுப்பப்பட்ட உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை .. .. .. 2,146

(ஊ) 31—12—1985 ஆம் நாள் நிலவரப்படி நடவடிக்கை எடுக்காமல் நிலுவையாக இருந்த உரிமைக் கோரிக்கை மனுக்களின் எண்ணிக்கை .. .. .. .. 561

தொகை கொடுத்துத் தீர்க்கப்பட்ட கோரிக்கைகளைப் பொறுத்தமட்டில் வழங்கப்பட்ட தொகை ரூ. 1,15.44 இலட்சமாகும்.

**முன்பணங்கள் :**

89,990 இனங்களைப் பொறுத்தமட்டில் சந்தாதாரர்களுக்கு மொத்தம் ரூ. 15.48 கோடி முன்பணமாக வழங்கப்பட்டது.

1985 ஆம் ஆண்டில் சந்தாதாரர்களுக்கு வழங்கப்பட்ட முன் பணங்கள் பற்றிய விவரங்கள் அட்டவணை 9-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

1985 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் நாளன்று உள்ள பொதுத்துறை நிறுவனங்களில் 1952 ஆம் ஆண்டு தொழிலாளர் நலக் காப்புறுதித் திட்டம்-பல்வகை விதித்துறைகள் சட்டத்தைச் செயல்படுத்துதல் செயல்படுத்தாமல் இருத்தல் பற்றிய விவரம் இணைப்பு 10-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

1985 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் நாளன்றுள்ளபடி 159 பிரிவுகள் 3 சட்டதிட்டங்களின் விதித்துறைகளைச் செயல்படுத்தத் தொடங்க வேண்டும். 1952 ஆம் ஆண்டு தொழிலாளர் நலக் காப்புறுதித் திட்டம்-பல்வகை விதித்துறைகள் சட்டம் அதன்கீழ் துறை நிறுவனங்கள் இயற்றிய திட்டப்பணி ஆகியவற்றைச் செயல்படுத்துவதில் உள்ள இடர்பாடுகளைப் பற்றி அறிந்துகொள்வதற்காக தமிழ்நாடு அரசு தொழிலாளர் நலத்துறை செயலாளரின் தலைமையில் கூட்டம் ஒன்று 20—12—1985 அன்று கூட்டப்பட்டது. இதில் பங்கேற்றவர்கள் மேற்சொன்ன சட்டத்தில் 17(1)(ஏ), 17(1)(பி) பிரிவுகளிலிருந்து விலக்களிக்குமாறு கேட்டுக்கொள்ள கடைசி நாள் 31—1—1986 என தொழிலாளர் நலத்துறை செயலாளர் நிர்ணயித்தார்.

தொழிலாளர் நலக் காப்புறுதித் திட்டம் :

இம்மாநிலத்தில் தொழிலாளர் நல காப்புறுதித் திட்டம் 1955 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மின் சக்தியை பயன்படுத்துகின்ற 10 பேரும் அதற்கு மேற்பட்டும் பணியாளர்களைக் கொண்ட தொழிற்சாலைகளுக்கும் மின் சக்தியைப்

பயன்படுத்தாத 20 பேர் அல்லது அதற்கு மேல் பணியாளர்களைக் கொண்ட தொழிற்சாலைகளுக்கும் இத்திட்டம் பொருந்திய புதிய துறைகளில் 20ம் அதற்கு மேலும் பணியாளர்கள் உள்ள கடைகள், ஓட்டல்கள், உணவகங்கள், பத்திரிகைகள் நிறுவனங்கள், திரையரங்குகள் உள்பட திரைப்பட நிறுவனங்கள் தனியார் மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள் ஆகியவையும் இத்திட்டத்தின்கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன. 1,000 ரூபாய்க்குக் குறைவாக ஊதியம் பெறும் ஊழியர்கள் தொழிலாளர் நலக் காப்புறுதிச் சட்டத்தின்கீழ் பயன்பெறுவர். இந்த ஊதிய உச்ச வரம்பு 27—1—1985 முதல் ரூ. 1,600க்கு உயர்த்தப்பட்டுள்ளது. இத்திட்டம், தமிழ்நாடு மாநிலத்தில் அனைத்து மாவட்டங்களுக்கும் நீட்டிக்கப்பட்டு பின்வரும் பயன்களுக்கு வகை செய்கிறது :—

(1) மருத்துவ உதவி—மருத்துவப் பொருட்களாக வழங்கப்படுகிறது.

(2) உடல் நலமின்மைக்கான உதவி—பணமாக அளிக்கப்படுகிறது.

(3) தற்காலிகமாக ஏலாமையுற்றோருக்கு உதவி—பணமாக அளிக்கப்படுகிறது.

(4) நீடித்த உடல் நலமின்மைக்கான உதவி-பணமாக அளிக்கப்படுகிறது.

(5) பேறுகால உதவி—பணமாக அளிக்கப்படுகிறது.

(6) இறுதிச் சடங்குக்குரிய செலவுத் தொகை—பணமாக அளிக்கப்படுகிறது.

(7) நிரந்தரமாக ஏலாமையுற்றோருக்கு உதவி—பணமாக அளிக்கப்படுகிறது.

(8) நீடித்த உடல் நலமின்மைக்கான உதவி—பணமாக அளிக்கப்படுகிறது.

(9) சார்ந்துள்ளவர்கள் நல உதவி—பணமாக அளிக்கப்படுகிறது. காப்புறுதி செய்துகொண்டவர்களின் எண்ணிக்கை தொடர்பான விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| | |
|---|---|
| (அ) தொழிலாளர்களின் எண்ணிக்கை .. .. | 5,10,000 |
| (ஆ) காப்புறுதி செய்துகொண்டவர்களின் மொத்த எண்ணிக்கை .. .. .. | 5,65,000 |
| (இ) இதில் அடங்கிய குடும்பங்களின் எண்ணிக்கை | 5,65,000 |
| (ஈ) பயனடைவோரின் மொத்த எண்ணிக்கை .. | 21,9[illegible]00 |

மருத்துவ வசதிக்காகச் செலவிடப்படும் மொத்த தொகையை மாநில அரசும் தொழிலாளர் நலக் காப்புறுதிக் கழகமும் 1:7 என்ற விதத்தில் பகிர்ந்து கொள்ளுகின்றன. இக்கழகம்





மருத்துவச் செலவிற்காக செலவிடப்படும் தொகைக்கு உச்ச வரம்பு நிர்ணயித்துள்ளது. தற்போதுள்ள உச்சவரம்பு தொழிலாளரின் குடும்பம் ஒன்றுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 130 ஆகும். (காப்புறுதி செய்துகொண்டவர்களுக்கும், அவர்களுடைய குடும்பத்தினருக்கும் முழு மருத்துவ வசதி).

மேற்சொன்ன உச்சவரம்பிற்கு மேற்பட்டு ஒவ்வொரு தொழிலாளருக்கும் ஆண்டொன்றுக்கு மருந்துகள், மருத்துவப் பொருட்கள் வாங்குவதற்காக ரூ. 25க்கு மேற்பட்டு ஆனால் ரூ. 55-க்கு உட்பட்டு தொகை தொடர்ந்து வழங்கப்படும்.

தொழிலாளர் நல காப்புறுதித் திட்டத்தின் கீழ் அயன்புரம், (சென்னை), கே.கே. நகர் (சென்னை), மதுரை, கோயம்புத்தூர் வேலூர் (வட ஆற்காடு மாவட்டம்), ஆகிய இடங்களுக்கு ஐந்து மருத்துவமனைகளும் 130 நிலையான மருந்தகங்களும் நடமாடும் மருந்தகங்களும், 2 பயன்பாட்டு மருந்தகங்களும், 1 பகுதி நேர மருந்தகமும் செயல்பட்டு வருகின்றன. மேற்கூறிய ஐந்து தொழிலாளர் நல ஈட்டுறுதி மருத்துவமனைகளில் உள்ள படுக்கைகளின் எண்ணிக்கை வருமாறு :—

| | படுக்கைகள். |
|---|---|
| தொழிலாளர் நல ஈட்டுறுதி மருத்துவமனை அயன்புரம், சென்னை .. .. | 616 |
| 2. தொழிலாளர் நல ஈட்டுறுதி மருத்துவமனை, கே.கே. நகர், சென்னை .. .. | 234 |
| 3. தொழிலாளர் நல ஈட்டுறுதி மருத்துவமனை மதுரை .. .. .. .. | 209 |
| 4. தொழிலாளர் நல ஈட்டுறுதி மருத்துவமனை, கோயமுத்தூர் .. .. .. .. | 540 |
| 5. தொழிலாளர் நல ஈட்டுறுதி மருத்துவமனை, வேலூர், வட ஆற்காடு மாவட்டம் .. | 59 |

1923 ஆம் ஆண்டு தொழிலாளர்களுக்கு இழப்பீடு வழங்கல் சட்டம்.

1923 ஆம் ஆண்டு தொழிலாளர்களுக்கு இழப்பீடு வழங்கல் சட்டம் பின்வரும் நேர்வுகளில் இழப்பீடு வழங்க வகை செய்கிறது :—

(அ) தொழிற்சாலைகளில் பணியில் ஈடுபட்டிருக்கும்போது ஏற்படும் விபத்து :

(ஆ) தொழிலால் நோய் ஏற்பட்டு மரணமடைதல் அல்லது
ஏலாமையுறுதல்: இச்சட்டம் தொழிற்சாலைகள், சுரங்கங்கள்,
மலைத் தோட்டங்கள், போக்குவரத்து நிறுவனங்கள், கட்டிடப்
பணியாளர்கள், இரயில்வே பணியாளர்கள், குறிப்பிட்ட சில
தீங்கு விளைவிக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ள பணியாளர்கள்
(தொழிலதிபர்களின் வர்த்தக அல்லது வணிக காரியங்களுக்காக
அன்றி வேறு காரியங்களுக்கு நியமிக்கப்பட்டு உள்ள நாட் கூலி
பெறும் பணியாளர்கள் நீங்கலாக) ஆகியோருக்கு பொருந்தும்.

தொழிலாளர் இழப்பீட்டுத் தொகை வழங்குதல் ஆணையாள
ரால் முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் விவரம் இணைப்பு
8-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

தொழிலாளர் விபத்துத் துயர் தணிப்பு நிதி :

ரூ. 15,000 தொடர் மானியத்துடன் இந்த நிதியை அரசு
ஏற்படுத்தியுள்ளது. 1923 ஆம் ஆண்டு தொழிலாளர்கள் இழப்
பீட்டுச் சட்டத்தின் கீழ் இழப்பீடு வழங்குவதற்குத் தொழிலதிபர்
களிடம் நிதி வசதி இல்லாதிருந்தால் அல்லது வேறு காரணங்
களை முன்னிட்டு தொழிலாளர்கள் அல்லது அவர்களைச் சார்ந்
துள்ளோர் அச்சட்டத்தின்கீழ் இழப்பீட்டுத்தொகை பெறஇயலாது
போனால் இந்நிதியிலிருந்து உதவித்தொகை அளிக்கப்படும். இழப்
பீடு வழங்கப் போதுமான நிதி வசதி இல்லாத சிறிய ஒப்பந்த
காரர்களிடம் பணிபுரியும் தொழிலாளர்கள்விபத்தில்மரணமடைந்
தால் அல்லது காயமடைந்தால் அவர்களும் நிதியிலிருந்து உதவித்
தொகை பெறுவர். இவ்வாண்டில் இந்நிதியிலிருந்து 3 இனங்
களில் ரூ. 6,500 தொகை வழங்க சென்னை தொழிலாளர் நல
ஆணையாளர் அனுமதித்துள்ளார்.

1972 ஆம் ஆண்டு பணிக் கொடை வழங்கல் சட்டம் :

இச்சட்டம் 1972 செப்டம்பர் முதல் இம்மாநிலத்தில் செயல்
படுத்தப்பட்டு வருகிறது. தொழிலாளர் நல வாட்டாரத்
துணை ஆணையாளர்கள் அலுவலகத்தைச் சேர்ந்த உதவி ஆணை
யாளர்களும், தொழிலாளர் நல வட்டாரத் துணை ஆணையாளர்
களும் அவரவர் அதிகார வரம்புப் பகுதியில் இச்சட்டத்தின் கீழ்
முறையே கட்டுப்பாட்டு அலுவலர்களாகவும், மேல் முறையீட்டு
அலுவலர்களாகவும் அறிவிக்கப்பட்டுள்ளனர். இந்த
அலுவலர்கள் இச்சட்டத்தின் கீழ் 1985 ஆம் ஆண்டில் பெற்று,
தீர்த்து வைத்த வழக்குகளின் விவரங்கள் 8-ஆம் இணைப்பில்
உள்ள விவர அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ளன.

அமைப்பு ரீதியில் வராத தொழிலாளர்களுக்கான தொகுப்புப்
பணிக்கொடை நிதித் திட்டம் :

விரிவான ஆய்வுப் பணியை மேற்கொண்ட பின்னர் வறிய
நிலையிலுள்ள மக்களுக்குப் பாதுகாப்பும் உதவியும் அளிக்
கும் நோக்குடன் தொகுப்புப் பணிக் கொடைத் திட்டம் ஒன்றை





அமைப்பு ரீதியில் வராத தொழிலாளர்களின் நலனுக்காக அரசு
முடிவு செய்துள்ளது. தொழிலாளர் நல உதவி ஆணையாளர்
தலைமையில் 5 தொழிலாளர் நல உதவி ஆய்வாளர்கள் அடங்கிய
தனிப்பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது. தொழிலாளர்-தொழில்
நிறுவனங்கள் பற்றி ஆய்வுப் பணி நடைபெற்று வருகிறது.

## அத்தியாயம் 8.

## தொழிலாளர் நலப் பணிகள்.

தொழிற்சாலைத் தொழிலாளர் சகாய வாடகை வீட்டு வசதித்
தனியார் துறை தொழிலதிபர் திட்டம்.

1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் 2 (1)
பிரிவின் கீழ் வரும் தொழிலாளர்களின் பயனுக்காக வீடுகள் கட்ட
தனியார் தொழிலதிபர்களுக்கு இத்திட்டத்தின் கீழ் நிதியுதவி
அளிக்கப்படுகிறது.

சிறிய இரு அறைகளைக் கொண்ட (இரு மாடிகள்) வீடுகள்
கட்டுவதற்கு உச்சவரம்புத் தொகையாக ரூ. 5,350-ம் சிறிய
இரு அறைகளைக் கொண்ட வீடுகள்(பல மாடிகள்) கட்டுவதற்கு
உச்சவரம்புத் தொகையாக ரூ. 6,050ம், முறையான இரு அறை
களைக் கொண்ட வீடுகள் (இரு மாடிகள்) கட்டுவதற்கு உச்ச
வரம்புத் தொகையாக ரூ. 7,600-ம், முறையான இரு அறை
களைக் கொண்ட வீடுகள் (பல மாடிகள்) கட்டுவதற்கு உச்ச
வரம்புத் தொகையாக ரூ. 8,500-ம், இத்திட்டத்தின் கீழ் வழங்க
வரையறை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தை இந்திய
அரசு தற்போது நிறுத்தி விட்டது. மாநில அளவில் தொழிற்
சாலைத் தொழிலாளர்களுக்கென புதிய திட்டம் ஒன்று உரு
வாக்கப்பட்டு வருகிறது.

இத்திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து 1,370 வீடுகள் தனி
யார் தொழிலதிபர்களால் கட்டப்பட்டுள்ளன. இது வரை
செலவிட்ட தொகை ரூ. 54,32 இலட்சமாகும்.

மலைத் தோட்டத் தொழிலாளர்கள் வீட்டு வசதித் திட்டம் :

குடியிருப்பு ஒன்றுக்கு 4,000 ரூபாய் என்ற உச்சவரம்புச்
செலவு அடிப்படையில், தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்ட,
மலைத் தோட்ட உரிமையாளர்களுக்கு நிதி உதவி அளிக்க இத்
திட்டம் வகை செய்கிறது. இத்தொகையில் 50 சதவீதம் கட
னாகவும் 37·50 சதவீதம் உதவித் தொகையாகவும் வழங்கப்
படுகிறது.

அறிக்கையாண்டில் வீட்டு வசதி-நகர்ப்பகுதி வளர்ச்சித்துறையின் மூலம் பின்வரும் புதிய திட்டங்களுக்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது :—

| | வீடுகளின் எண்ணிக்கை. | கடன். | உதவித் தொகை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 திருவாளர்கள் சேர்வராயன் எஸ்டேட், ஏர்க்காடு .. .. | 15 | 30,000 | 22,500 |

இத்திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து இதுவரை ரூ. 28.30 இலட்சம் செலவில் 1,107 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் :

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சரின் தலைமையின் கீழ் செயல்பட்டு வரும் தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் தொழிலாளர்களின் நன்மைக்காக தொழிற்சாலைப் பணியாளர்கள் அவர்களுடைய குடும்பத்தினர் ஆகியோருக்கு நல்வாழ்வு வசதிகள் செய்து கொடுக்கும் வகையிலான பல பணிகளை மேற்கொண்டுள்ளது. பல திட்டங்களை அண்மையில் நிறைவேற்றவும் கருதியுள்ளது. தொழிற்சாலைத் தொழிலாளர்களுக்கும் அவர்களுடைய குடும்பத்தினருக்கும் மேலும் நலம் பயக்கும் பல திட்டங்களையும் அண்மையில் நிறைவேற்றவும் கருதியுள்ளது.

1985 ஆம் ஆண்டில் பின்வரும் நிலையங்கள் புதிதாகத் தொடங்கப்பட்டுள்ளன :—

1. அரியமங்கலத்திலுள்ள குழந்தைகள் காப்பு இல்லம், தொழிலாளர் நல நிலையமாக மாற்றப்பட்டுள்ளது.

2. நாகர்கோயிலில் தொழிலாளர் நல நிலையம் ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாரியம் செயல்படுத்திய நலத் திட்டங்கள் அவற்றின் மூலம் பயனடைந்தோர் எண்ணிக்கை ஆகியவற்றின் விவரம் வருமாறு :

| தொழிலாளர் நல நிலையங்கள். (1) | 1984—85 (2) | 1985—86 (3) |
|---|---|---|
| (1) தையல் பயிற்சி நிலையங்கள் : | | |
| (i) நிலையத்தின் மொத்த எண்ணிக்கை .. .. | 44 | 47 |
| (ii) பயிற்சி பெற்றவர்களின் மொத்த எண்ணிக்கை .. | 1,572 | 1,572 |



| (1) | (2) | (3) |
|---|---|---|
| (2) பாலர் பள்ளிகள் : | | |
| (i) நிலையங்களின் மொத்த எண்ணிக்கை | 37 | 39 |
| (ii) பயனடைந்த குழந்தைகளின் மொத்த எண்ணிக்கை .. | 1,927 | 1,601 |
| (3) குழந்தைக் காப்பகங்கள்— | | |
| (i) காப்பகங்களின் மொத்த எண்ணிக்கை .. .. .. | 6 | 5* |
| (ii) பயனடைந்த குழந்தைகளின் மொத்த எண்ணிக்கை .. | 287 | 287 |
| (4) படிப்பகங்கள்— | | |
| (அ) படிப்பகங்களின் மொத்த எண்ணிக்கை .. .. .. | 10 | 11 |
| (ஆ) பயன் பெறும் தொழிலாளர்களின் மொத்த எண்ணிக்கை | 61,167 | 67,167 |

* இரண்டு நிலையங்கள் மகளிர் மன்றங்களால் நடத்தப்பட்டு வருகின்றன.

(5) ஏனைய திட்டங்கள்—

| | பயனடைந்தோரின் எண்ணிக்கை | |
|---|---|---|
| | 1984—85 | 1985—86 |
| (1) | (2) | (3) |
| (அ) தொழிலாளர்களுக்கு மூக்குக் கண்ணாடிக்கான செலவுத் தொகையைத் திருப்பிக் கொடுத்தல் .. .. .. .. | 1,030 | 826 |
| (ஆ) தொழிலாளர் குழந்தைகளுக்கு தட்டச்சு, சுருக்கெழுத்துப் படிப்புக் கட்டணங்கள் .. | 917 | 2,059 |
| (இ) புத்தக வங்கி .. .. | 51,361 | 41,765 |
| (ஈ) ஈமச் சடங்கிற்குரிய செலவுகள் .. .. .. .. | 638 | 653 |

| (1) | தொகை ரூபாய் 1984–85 (4) | 1985–86 (5) |
|---|---|---|
| (அ) தொழிலாளர்களுக்கு மூக்குக் கண்ணாடிக்கான செலவுத் தொகையைத் திருப்பிக் கொடுத்தல் | 60,187.00 | 48,140.00 |
| (ஆ) தொழிலாளர் குழந்தைகளுக்கு தட்டச்சு, சுருக்கெழுத்துப் படிப்பு கட்டணங்கள் .. .. | 1,06,710.00 | 1,41,938.00 |
| (இ) புத்தக வங்கி .. | 17,28,583.70 | 11,57,859.60 |
| (ஈ) ஈமச் சடங்கிற்குரிய செலவுகள் .. .. .. | 1,27,600.00 | 1,30,600.00 |

6) படிப்புதவித் தொகை :

பின்வரும் படிப்புகளுக்காக வாரியம் நிதியுதவியும் அனுமதித்துள்ளது :—

| (1) | பயனடைந்தோரின் எண்ணிக்கை. 1984–85 (2) | 1985–86 (3) |
|---|---|---|
| (அ) சட்டத்தில் பட்டப் படிப்பு .. .. | 2 | 6 |
| (ஆ) பொறியியல் பட்டப் படிப்பு .. .. | 23 | 89 |
| (இ) பொறியியல் பட்டயப் படிப்பு .. .. | 59 | 254 |
| (ஈ) மருத்துவப் பட்டப் படிப்பு .. .. | 9 | 22 |
| (உ) மருத்துவப் பட்டயப் படிப்பு .. .. | .. | 4 |
| (ஊ) தொழிற் பயிற்சி நிலையங்கள் .. .. | 31 | 66 |
| (எ) மேல் நிலைப் பள்ளி கல்வி | 24 | 46 |



| (1) | தொகை ரூபாய் 1984–85 (4) | 1985–86 (5) |
|---|---|---|
| (அ) சட்டத்தில் பட்டப் படிப்பு .. .. | 2,000.00 | 6,000.00 |
| (ஆ) பொறியியல் பட்டப் படிப்பு .. .. | 22,561.80 | 89,000.00 |
| (இ) பொறியியல் பட்டயப் படிப்பு .. .. | 32,032.15 | 1,52,200.00 |
| (ஈ) மருத்துவப் பட்டப் படிப்பு .. .. | 9,000.00 | 22,000.00 |
| (உ) மருத்துவப் பட்டயப் படிப்பு .. .. | .. | 2,400.00 |
| (ஊ) தொழிற் பயிற்சி நிலையங்கள் .. .. | 9,596.00 | 19,800.00 |
| (எ) மேல் நிலைப் பள்ளி கல்வி | 12,000.00 | 2,300.00 |

விடுமுறை இல்லம் :

தொழிற்சாலைத் தொழிலாளர்கள் அவர்களுடைய குடும்பத்தினர் ஆகியோரின் பயனுக்காக, குறைந்த வாடகைக்கு விடுமுறை இல்லம் (Holiday Home) ஒன்று திருநெல்வேலி மாவட்டம் குற்றாலத்தில் கட்டப்பட்டுள்ளது. ஒரே சமயத்தில் 58 பேர் இதில் தங்கலாம்.

மாமல்லபுரத்தில் மற்றொரு விடுமுறை இல்லம் ரூ. 21.80 இலட்சம் செலவில் கட்டப்பட்டு வருகிறது. இது விரைவில் முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. உதகமண்டலம், கொடைக்கானல் ஆகிய இடங்களிலும் விடுமுறை இல்லம் கட்டத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வார்டு :

சென்னை, தாம்பரம், காசநோய் நலம்பேண் மருத்துவமனையில் தொழிற்சாலை தொழிலாளர்களுக்கென்று 1978 ஆம் ஆண்டில் ரூ. 3.64 இலட்சம் செலவில் 26 படுக்கை வசதிகளுடன் கூடிய காச நோய் தனி வார்டு ஒன்று கட்டப்பட்டது.

**ஓய்வு இல்லம் :**

கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறையில் தொழிலாளர்களுக்காக ஓய்வு இல்லம் ஒன்று வாடகைக் கட்டிடத்தில் நடத்தப்பட்டு வருகிறது. ஒரே சமயத்தில் 15 பேர் வரை இதில் தங்கலாம். பெயரளவு வாடகையே வசூலிக்கப்படுகிறது.

தொழிற்சங்கத் தலைவர்களுக்கான ஓய்வு இல்லம் :

தொழிற் சங்கத் தலைவர்கள் தங்குவதற்காக, சென்னை-6, தேனாம்பேட்டையில் ரூ. 10 இலட்சம் செலவில் ஓய்வு இல்லம் (ஜீவா இல்லம்) ஒன்றை வாரியம் கட்டியுள்ளது.

போட்டி விளையாட்டுக்கள் :

தொழிலாளர்களையும் அவர்களைச் சார்ந்துள்ளோரையும் ஊக்கப்படுத்துவதற்காக தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் ஒவ்வோராண்டும் மாவட்ட, மண்டல, மாநில அளவில் ஆண்டுப் போட்டி விளையாட்டுக்களை நடத்தி வருகிறது. 1984—85 ஆம் ஆண்டில் மாநில அளவிலான ஆறாம் ஆண்டுப் போட்டி விளையாட்டுக்கள் 1985 செப்டம்பரில், சென்னையில் நடைபெற்றன.

ஏலாமையுற்ற தொழிலாளர்களுக்கும் செயற்கை உறுப்புகள் வழங்குதல் :

ஏலாமையுற்ற தொழிலாளர்கள் 33 பேர்களுக்கு இவ்வாண்டில் ரூ. 7,472 செலவில் செயற்கை உறுப்புகளை வாரியம் வழங்கியுள்ளது.

செவிக் கருவிகள் : மூன்று சக்கர வண்டிகள் :

தேவைப்படும் தொழிலாளர்களுக்குச் செவிக் கருவிகளையும் மூன்று சக்கர வண்டிகளையும் வாரியம் வழங்கி வருகிறது.

| | பயனடைந்தோர் எண்ணிக்கை. | தொகை ரூபாய். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| மூன்று சக்கர வண்டிகள் .. | 5 | 7,800.00 |
| செவிக் கருவிகள் | 11 | 5,088.00 |



வாரியம் செயல்படுத்தவிருக்கும் புதிய திட்டங்கள் :

(1) பின்வரும் இடங்களில் தொழிலாளர் நல நிலையங்களைத் தொடங்கக் கருதப்பட்டுள்ளது :—

தண்டையார்பேட்டை (சென்னை), ஈரோடு, அருப்புக்கோட்டை (காமராஜர் மாவட்டம்), ஓசூர் (தர்மபுரி மாவட்டம்), கள்ளக்குறிச்சி (தென்னாற்காடு மாவட்டம்) ஒண்டிப்புதூர் (கோயம்புத்தூர் மாவட்டம்), குமாரபாளையம் (சேலம் மாவட்டம்), ஆலங்குளம்.

(2) தூத்துக்குடியில் மேலும் ஒரு குழந்தை நல நிலையத்தை ஏற்படுத்த வாரியம் முடிவு செய்துள்ளது.

(3) பின்வரும் இடங்களில் தையல் பயிற்சி நிலையங்களைத் தொடங்க வாரியம் முடிவு செய்துள்ளது :—

மாஞ்சோலை (திருநெல்வேலி மாவட்டம்), கீழ் கோதை யாறு (கன்னியாகுமரி மாவட்டம்), வால்பாறை (அருவி) சோலையாறு (கோயம்புத்தூர் மாவட்டம்), பந்தலூர் (நீலகிரி மாவட்டம்).

(4) வால்பாறையில் படிப்பகம் ஒன்றை நிறுவ வாரியம் தீர்மானித்துள்ளது.

(5) தொழிலாளர்களின் குழந்தைகளுக்காக சிவகாசியில் (காமராஜர் மாவட்டம்) 20 படுக்கைகள் கொண்ட குழந்தை சிகிச்சை தனி மருத்துவ நிலையத்தைக் கட்டுவதற்கு வாரியம் முடிவு செய்துள்ளது.

(6) திருவொற்றியூர் (செங்கற்பட்டு மாவட்டம்), மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, சேலம், ஈரோடு ஆகிய இடங்களில் தையல் பயிற்சி நிலையம், பாலர் பள்ளி, படிப்பகம், நூலகம், மனையக விளையாட்டுக்கள் (Indoor Games) ஆகியவற்றுடன் பல் நோக்கு தொழிலாளர் நல நிலையத்தைத் தொடங்கவும் வாரியம் முடிவு செய்துள்ளது.

(7) தொழிலாளர்களுக்கான காசநோய் சிகிச்சை வார்டுகளை
வேலூர், ஆச்சாரிபள்ளம் (கன்னியாகுமரி மாவட்டம்), ஆண்டி
பட்டி (மதுரை) ஆகிய இடங்களில் உள்ள காசநோய் நலம்
பேண் மருத்துவமனையிலும், திருப்பூர் (கோயம்புத்தூர் மாவட்
டம்), ஈரோடு (பெரியார் மாவட்டம்) ஆகிய இடங்களிலுள்ள
அரசினர் மருத்துவமனைகளிலும் கட்டுவதற்கு திட்டமிடப்
பட்டிருக்கிறது.

(8) உடல் ஊனமுற்ற தொழிலாளர்கள், தொழிலாளர்களின் உடலூனமுற்ற குழந்தைகள் ஆகியோருக்கு செயற்கைக் கால்களை வழங்குதல்.

(9) உடல் ஊனமுற்ற தொழிலாளர்களுக்கு மூன்று சக்கர வண்டிகள் வழங்குதல்.

(10) தொழிலாளர்கள் அவர்களுடைய குழந்தைகள் ஆகியோருக்குச் செவிக் கருவிகள் வழங்குதல்.

சட்ட உதவி :

உயர் நீதிமன்றத்தில் வழக்குகள் தொடர்பாக, தொழிற் சங்கங்களுக்கு ஆகும் சட்டச் செலவுகளுக்காக, சில நிபந்தனைகளுக்குட்பட்டு ரிட் மனு ஒன்றுக்கு அல்லது ரிட் மேல் முறையீடு ஒன்றுக்கு ரூ. 150 என்ற விதத்தில் நிதியுதவி அளிப்பதற்கான திட்டம் ஒன்றுக்கு அரசு அனுமதி அளித்துள்ளது. சட்ட உதவிக்கு அனுமதி வழங்க, தொழிலாளர் நல ஆணையாளருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

தொழிலாளர்கள் இழப்பீட்டுத் தொகைச் சட்டத்தின் கீழ் இழப்பீடு கோரும் ஏழ்மை நிலையிலுள்ள தகுதிவாய்ந்த தொழிலாளர்களுக்கு அல்லது அவர்களைச் சார்ந்திருப்பவர்களுக்கு மாநில அரசுச் செலவில் சட்ட உதவி அளிப்பதற்காக அரசு ஆண்டொன்றுக்கு ரூ. 1,000 ஒதுக்குகிறது. காயம் அடைந்த தொழிலாளர்களுக்கு இழப்பீட்டுத் தொகை கூடுதல் ஆணையாளர்கள் பிறப்பித்த ஆணைகளை எதிர்த்து நிருவாகத்தினர் உயர் நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்து கொள்ளும்போது சம்பந்தப்பட்ட தொழிலாளர்கள் உயர் நீதிமன்றத்தில் தங்கள் தரப்பில் எடுத்துரைத்து வழக்காட சட்ட உதவி பெறத் தகுதியுடையவராவர். இவ்வாறு உதவி பெற, இழப்பீட்டுத் தொகை கூடுதல் ஆணையாளர்களின் முன்னிலையில் நடைபெற்ற சட்ட நடவடிக்கைகளின்போது அவர்களுக்கு அத்தகைய சட்ட உதவி அளிக்கப்பட்டது.

தொழிலாளர் நல சட்ட ஆலோசனைக் குழுக்கள் :

சென்னை, கோயம்புத்தூர், மதுரை ஆகிய மூன்று இடங்களில் மூன்று சட்ட ஆலோசனைக் குழுக்கள் செயல் பட்டு வருகின்றன. இவற்றை ஓய்வு பெற்ற நீதிபதிகளும், ஓய்வு பெற்ற தொழிலாளர் நல அதிகாரிகளும் நிருவகித்து வருகின்றனர். ஏழ்மை நிலையிலுள்ள மக்களுக்குச் சட்ட உதவி அளிப்பது குறித்து ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட தனிநபர் குழு அளித்த பரிந்துரைக் கிணங்க, அரசு இச்சட்ட ஆலோசனைக் குழுக்களை அமைத்துள்ளது. இக்குழுக்கள் தொழிலாளர்களிடமிருந்து வரும் மனுக்களை கருணை உணர்வோடு பரிசீலனை செய்து, அவர்களுடைய துயரை நீக்குவதற்காக அவர்களுக்கு



உரிய நீதி கிடைக்கும் வகையில் பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்கள் தொழிலாளர் நலன் தொடர்புடைய ஏனைய நடைமுறைகள் ஆகியவற்றின் கீழ் அவர்கள் அணுக வேண்டியவர்களைப் பற்றியும் அவர்கள் பின்பற்ற வேண்டிய நடை முறைகளைப் பற்றியும் ஆலோசனை வழங்குகிறது. இக்குழுக்கள் இவ்வாண்டில் 240 முறையீடுகளை முடித்து வைத்துள்ளன.

## அத்தியாயம் 9

## பயிற்சி.

**தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையத்தின் பணிகள்.**

தமிழ்நாடு அரசால் 1973 ஆம் ஆண்டு மார்ச் திங்களில் ஏற்படுத்தப்பட்ட தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையந்தான் தென்னிந்தியாவில் முதன் முதலில் ஏற்படுத்தப்பட்ட தொழிலாளர் கல்வி நிலையமாகும். மாநில அரசு இந்நிலையத்தை 30-3-1978 ஆம் நாளிலிருந்து முதல் நிலை நிலையமாக தரம் உயர்த்தியது. பின்வரும் பணிகளை ஆற்றுவதற்காகத் தமிழ்நாடு அரசு தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையத்தை ஏற்படுத்தியது. அவையாவன :—

(1) நல்ல தொழிற் சங்கங்களை ஏற்படுத்துதல், (2) தொழிலாளர்களுக்கும் நிருவாகத்தினருக்குமிடையே சுமுகமான உறவை ஏற்படுத்துதல், (3) தொழிலாளர் நலத் துறை அதிகாரிகளின் திறமையினை வளர்த்தல், (4) வெளியீடுகள் மூலம் கல்வி அறிவைப் பரப்புதல். 1978-ல் இந்த நிலையம் முதல் நிலை நிலையமாக தரம் உயர்த்தப்பட்டது.

பயிற்சித் திட்டங்கள் :—

1. தொழிற் சங்க தலைமைத் திட்டம்.

(i) இந்நிலையம் இதுவரையிலும் 15 பயிற்சி வகுப்புகளை நடத்தி 369 பேருக்குப் பயிற்சி அளித்துள்ளது.

(ii) கூட்டுறவு நிறுவனங்கள், பொதுத் துறை நிறுவனங்களிலிருந்து வரும் அதிகாரிகளுக்குத் தொழிலாளர் சட்டங்களில் புத்தறிவுப் பயிற்சி வகுப்புகள் : இவ்வாண்டில் 4 பயிற்சி வகுப்புகள் நடத்தியது. 59 அதிகாரிகளுக்குப் பயிற்சியளிக்கப்பட்டது. இதுவரை, இத்தகைய 40 புத்தறிவுப் பயிற்சி வகுப்புகள் நடத்தி 596 அதிகாரிகளுக்குப் பயிற்சியளிக்கப்பட்டது.

(iii) தொழிலாளர் நல அதிகாரிகள், தொழிலாளர் நல துணை ஆய்வாளர், தொழிற்சாலைகள் ஆய்வாளர்கள் ஆகியோருக்கு நினைவுகூர் பயிற்சி அளித்தல் :

இந்நிலையம் இதுவரை 17 பயிற்சி வகுப்புகள் நடத்தி 204 அதிகாரிகளுக்கு பயிற்சி அளித்துள்ளது.

(iv) பொதுத் துறை நிறுவனங்களிலுள்ள அலுவலக உதவி யாளர்களுக்கு அடிப்படைப் பயிற்சி அளிக்கும் திட்டம் :

இந்நிலையம் இதுவரையிலும் 6 பயிற்சி வகுப்புகள் நடத்தி பொதுத் துறை நிறுவனங்களின் 166 அலுவலக உதவியாளர் களுக்கு பயிற்சி அளித்துள்ளது.

(v) மேற்பார்வையிடும் திறனை வளர்க்கும் திட்டம் :

இதுவரையிலும் 30 வகுப்புகள் நடத்தப்பட்டு 929 மேற் பார்வையாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

(vi) கடைகள், வணிக நிறுவனங்களும் தொழிலாளர் நலச் சட்டங்களும் என்பது குறித்த கருத்தரங்கு :

இந்நிறுவனம் இதுவரையிலும் 52 கருத்தரங்குகளை நடத்தி 6,150 பேருக்குப் பயிற்சி அளித்துள்ளது. இப்பயிற்சி கிட்டத்தட்ட தமிழ் நாட்டிலுள்ள அனைத்து மாவட்ட தலை நகரங்களிலும், முக்கிய தலை நகரங்களிலும் நடத்தப்பட் டுள்ளது.

(vii) தொழிலாளர் நலச் சட்டங்களின் கீழ் பதிவேடுகள், படிவங்களை வைத்து வருவது குறித்த கருத்தரங்கு :

இதுவரையிலும் இந்நிலையம் 13 பயிற்சி வகுப்புகள் நடத்தி 609 பேருக்குப் பயிற்சி அளித்துள்ளது.

(viii) பீடி, சுருட்டு தொழிலாளர்களுக்குப் பயிற்சித் திட்டங் கள் :

சென்னை, தூத்துக்குடி, திருச்சி, சேலம், ஈரோடு வேலூர், இராணிப்பேட்டை, மேலப்பாளையம், அம்பாசமுத் திரம் ஆகிய 9 இடங்களில் இவ்வகுப்புக்கள் நடத்தப்பட்டன. 1984 ஆம் ஆண்டில் 7 பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு 326 பேருக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது.

(ix) தொழிலாளர் நல உதவி ஆய்வாளர், கண்காணிப்பாளர் களுக்கு நினைவுகூர் பயிற்சி :

இந்நிலையம் 20 பயிற்சி வகுப்புகள் நடத்தி 440 பேருக்குப் பயிற்சி அளித்துள்ளது.





(x) முக்கியத் தொழிலாளர் பிரச்சினைகள் குறித்த கருத்தரங்கு:

நிர்வாகப் பணியாளர்கள், தொழிலாளர் தலைவர்களுக்காக இந்த நிறுவனத்தில் பல்வேறு தலைப்புகள் மீது கருத்தரங்குகள் நடத்தப்படுகின்றன. அதுபோன்ற சில திட்டங்கள் பற்றிய விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

அ. ஒழுங்கு நடவடிக்கை வழக்குகள் நடத்துவது குறித்த கருத்தரங்குகள் :

398 பேர்கள் அடங்கிய 9 கருத்தரங்குகள் இதுவரை நடத்தப்பட்டன.

ஆ. பல தொழில் சங்கங்கள் பற்றிய பிரச்சினைகள் :

1984-ல் கோயம்புத்தூரில் இதுவரை இரண்டு பயிற்சி வகுப்பு கள் நடத்தப்பட்டு அதில் 103 பேர் கலந்து கொண்டனர்.

இ. வேலை நிறுத்தமும் கதவடைப்பும் :

இதுவரை 173 நபர்கள் கொண்ட கருத்தரங்கு நான்கு நடத்தப்பட்டது.

3. உழைப்பவர் உலகம் :

1978 ஆம் ஆண்டு முதல் நீதித் துறையின் முடிவுகள், தொழிலாளர் நலச் சட்டங்கள், திருத்தங்கள், அறிவிக்கை கள் முதலியன குறித்து தொழில் உறவுகள் குறித்து சம்பந்தப்பட்ட மக்களுக்கு அறிவுறுத்தும் பொருட்டு "உழைப்பவர் உலகம்" என்ற மாதாந்திர தமிழ்ப் பத்திரிகை வெளியிடப்படுகிறது. இந்த பத்திரிகையில் உள்ள வினா—விடை பகுதியை மக்கள் விரும்பிப் படிக்கின்றனர். வாழ்க்கைச் செலவுப் புள்ளி பற்றிய புள்ளி விவரங்கள் அரசு அறிவிக்கைகள் ஆகியன இந்தப் பத்திரிகையில் இடம் பெறுகின்றன.

4. தொழிலாளர் நல நிருவாகத்தில் பட்ட மேற்படிப்பு பட்டயக் கல்வி :

இதுவரை 161 பேர்களுக்குத் தொழிலாளர் நல நிரு வாகத்தில் பட்டயம் வழங்கப்பட்டுள்ளது.

5. ஆராய்ச்சிப் பிரிவு :

1981—82 ஆம் திட்டப் பணியில் தொழில் உறவுகள், தொழி லாளர் நிருவாகம், தொழிலாளர் நலன் ஆகிய துறை களில் ஆராய்ச்சித் திட்டங்களை மேற் கொள்ள வேண்டி

இந்நிறுவனத்தில் ஆராய்ச்சிப் பிரிவு ஒன்றை அரசு உருவாக்கியது. ''நடுவர் மன்றம் தீர்ப்பளித்ததில் ஏற்படும் கால தாமதம்'' மீதான ஆய்வு முடிவடைந்து விட்டது. இந்த ஆண்டு இந்த ஆராய்ச்சிப் பிரிவு தமிழ்நாட்டில் தொழிலாளர் நல நிர்வாகம் என்ற தலைப்பில் புத்தகம் ஒன்றை வெளியிட்டுள்ளது. தற்போதுள்ள துணை ஆய்வாளர் பதவியுடன் ஒரு புள்ளி விவர ஆய்வாளர் ஆராய்ச்சி அதிகாரி பதவிக்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

6. தொழில் கல்வி பட்டப் பாட முறைகள் :

1984–85 ஆம் ஆண்டுத் திட்டப் பணிகளில் ''பேச்சலர் ஆஃப் லேபர் மானேஜ்மெண்ட் (B. L. M.) என்றழைக்கப்படுகிற தொழிலாளர் நல நிருவாகத்தில் பட்டப் பாட முறையை நடத்துவதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. தொழிலாளர் நல நிர்வாகத்தில் பட்டப் பாட முறைக்குப் பிறகு இரு ஆண்டு பட்ட மேற்படிப்பு தொடங்கப்படும். பல்கலைக் கழக இணைப்பு பெற்றவுடன் இந்தப் பட்டப் பாடமுறை தொடங்கப்படும். பிளஸ் 2 கல்வி நிலைக்குப் பிறகு தொழிலாளர் நல நிர்வாகப் பணியில் உரிய ஆர்வமுள்ள மாணவர்களைத் தெரிந்தெடுத்து அவர்களுக்கு ஐந்தாண்டுத் தீவிரப் பயிற்சி அளிக்கப்படும். இதனால் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். மேலும், தொழில் கல்வி முறையில் நன்கு பயிற்சி பெற்றவர்களைத் தொழிலாளர் நல நிர்வாகத் துறையில் கொண்டுவர இது வகை செய்யும். நலப் பணிக்கும் தொழிலமைதிக்கும், தொழில் வளத்திற்கும் இது வழி கோலும், துணைப் பணியாளர்களுடன் பேராசிரியர் பதவி ஒன்றுக்கும் உதவிப் பேராசிரியர்கள் பதவி இரண்டுக்கும் அரசு அனுமதி வழங்கியுள்ளது.

7. நூலகம் :

இந் நிறுவன நூலகத்தில் 3,120 புத்தகங்களும், 40 பருவ வெளியீடுகளும் உள்ளன.

## அத்தியாயம் 10.

எடைகள்—அளவைகள்—

தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு எடைகள்—அளவைகள் (செயற் படுத்தல்) சட்டம் :

தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு எடைகள்—அளவைகள் (செயற்படுத்தல்) சட்டம், குறைவாக எடை போடுதல் அளவையிடும் சட்டம் ஆகியவற்றின் விதிந்துறைகள் எடைகள், அளவைகள். கட்டுப்பாட்டு அதிகாரியின் நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழ் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. இவர் தொழிலாளர் நல இணை



ஆணையாளரும் (ஆய்வு) ஆவார். இவருக்கு உதவியாக இம் மாநிலத்திலுள்ள தொழிலாளர் நல ஆய்வாளர்கள், தொழிலாளர் நலத் துணை ஆய்வாளர்கள் தொழிலாளர் நலத் துறை உதவி ஆய்வாளர்கள், சென்னை மாநகர், செங்கற்பட்டு, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களிலுள்ள எடை—அளவைகளில் முத்திரையிடும் ஆய்வாளர்கள் ( Samping Inspector ) சென்னை, செங்கற்பட்டு, கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களில் மூன்று தொழிலாளர் நல துணை ஆய்வாளர்கள் (பிரிவு) ஆகியோர் இவருக்கு உதவியாகப் பணியாற்றுகின்றனர்.

எடை-அளவைகள் குறைவாக போடப்படுதல், தவறான எடைகள் - அளவைகள் ஆகியவற்றைப் பயன்படுத்துவதை தவிர்ப்பதற்காக அடிக்கடி ஆய்வுகள் நடத்துதல், திடீர் சோதனை நடத்துதல், கிராமங்களில் ஆய்வுகள் நடத்துதல், உட்பட கூட்டாக அடிக்கடி சோதனை இடுதல் தமிழ்நாடு எடைகள்-அளவைகள் சட்டத்தின் கீழ் குற்றமிழைப்பவர்கள் மீது சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் போன்ற தீவிர நடவடிக்கைகளை இத்துறை மேற்கொண்டுள்ளது.

1985-ம் ஆண்டில் எடைகள்—அளவைகள் சட்டம், விதிகள் ஆகியவற்றை மீறியதற்காக 17,599 வழக்குகள் போடப்பட்டன. கடந்த ஆண்டில் போடப்பட்டு தீர்ப்பளிக்கப்படாமலிருந்த 15,464 வழக்குகளுக்கும் தண்டனை வழங்கப்பட்டுள்ளது. ரூ. 11,00,964 அபராதத் தொகை விதிக்கப்பட்டது. எடை-அளவைகளில் முத்திரையிடுவதற்குரிய கட்டணமாக 1985-ம் ஆண்டில் ரூ. 63,11,524.45 பைசே வசூலிக்கப்பட்டது.

1984-85 ஆகிய ஆண்டுகளில் இச்சட்டத்தின் கீழ் எடை-அளவைகள் கட்டுப்பாட்டு அதிகாரி எடை—அளவைகள் உதவிக் கட்டுபாட்டு அதிகாரி ஆகியோர் பழுதுபார்ப்பவர்கள், விற்பனையாளர்கள், தயாரிப்பாளர்கள் ஆகியோருக்கு வழங்கிய உரிமங்கள் (புதிய, புதுப்பித்தல்) அவர்களிடமிருந்து வசூலிக்கப்பட்ட உரிமக் கட்டணம் பற்றிய விவரம் வருமாறு :—

| ஆண்டு. | பழுது பார்ப்ப வர்கள். | விற்பனை யாளர்கள். | தயாரிப் பாளர்கள். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1984 .. .. | 293 | 606 | 136 |
| 1985 .. .. | 310 | 655 | 156 |

1985-ல் விற்பனையாளர், தயாரிப்பாளர், பழுதுபார்ப்பவர் ஆகியோரிடமிருந்து 1985-ம் ஆண்டில் வசூலிக்கப்பட்ட உரிமக் கட்டணம் ரூ. 2,05,596.00 ஆகும். எடைகள்-அளவைகள்

கட்டுப்பாட்டு அதிகாரி, மாவட்டங்களிலுள்ள சார்பு அதிகாரிகள் கூட்டத்தை அவ்வப்போது கூட்டி மேற்சொன்ன சட்டத்தின் விதித்துறைகளைச் செயற்படுத்தும் பணித் தொடர்பாக மறு ஆய்வு செய்கிறார். தவறிழைக்கும் வணிகர்களை திருத்துவதற் காக நடவடிக்கைகள் மேற்கொள்ளும் பொருட்டு, அவர் கூட்டாக திடீர் சோதனைகள் நடத்துகிறார்.

1985-ம் ஆண்டில் மாநிலம் முழுவதிலும் உள்ள வணிகர் களைச் சோதனையிடும் பொருட்டு இத்துறை 3,18,990 ஆய்வு கள் மேற்கொண்டது. எடைகள்-அளவைகள் சட்டம், விதிகள் ஆகியவற்றை கிராமப் பகுதிகளில் தீவிரமாக செயற்படுத்தும் பொருட்டு சார்நிலை அதிகாரிகள், கிராமங்களில் முறையான வாலாயமான ஆய்வுகள் மேற்கொள்கின்றனர். 1985 ஆம் ஆண்டில் 12,164 கிராமங்களில் 76,234 வணிகர்களை சார்நிலை அதிகாரிகள் ஆய்வு செய்தனர்.

1985-ம் ஆண்டில் 20, 21, 22—2—1985 ஆம் நாட்களில் மாநிலம் முழுவதிலும் சமையல் எரிவாயு சிலிண்டர்களைத் திடீர் சோதனை செய்வதற்கு தொழிலாளர் ஆய்வாளர் ஏற்பாடு செய் திருந்தார். விற்பனை செய்யும் கடைகளில் வைத்து 2,666 சமையல் எரிவாயு சிலிண்டர்களும், அவை கொடுக்கப்படுமிடங் களில் 267 சிலிண்டர்களும், சோதனையிடப்பட்டதில் பின் வரும் குறைபாடுகள் கண்டுபிடிக்கப்பட்டன. இக்குறைபாடுகளை நீக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

1. விற்பனையாளரிடமிருந்த 267 சிலிண்டர்களில் அளவு குறைவாக இருந்தது.

2. அவை கொடுக்கப்படும் இடங்களில் 26 சிலிண்டர்களில் அளவு குறைவாக இருந்தது.

1985-ம் ஆண்டில் கூட்டாக நடத்தப்பட்ட திடீர், தீவிர சோதனைகளின்போது கைப்பற்றப்பட்ட தவறான குறைபாடாக உள்ள அல்லது மீண்டும் சரிபார்க்கப்படாத பல்வேறு எடைகள் அளவைகள் பற்றிய விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :

| | |
|---|---|
| எடைகள் .. .. .. | 20,331 |
| கொள்ளளவுக் கருவிகள் .. | 15,429 |
| நிறுவைக் கருவிகள் .. .. | 598 |
| அளவைக் கருவிகள் .. .. | 582 |
| தராசுகள் (பீம் ஸ்கேல்ஸ்) .. | 2,858 |

கைப்பற்றப்பட்ட கருவிகள், நீதிமன்ற நடைமுறைக்கு உட்பட்டு நீதிமன்ற ஆணைகளின்படி முடிவு செய்யப்படும். கைப்பற்றப் பட்ட ஏனையவற்றைப் பொறுத்தவரையில் தமிழ்நாடு எடைகள் அளவைகள் சட்டத்தின்கீழ் அவற்றை பறிமுதல் செய்து அரசிடம்



ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அந்தந்த வட்டா சார்நிலை பணியாளர்கள் ஒத்துழைப்புடன், காலாண்டுக்கொரு முறை இச்சட்டத்தின் கீழ் வட்டாரத்துறை ஆய்வாளர்கள் திடீர் சோதனை நடத்துமாறு உத்தரவிடப்பட்டுள்ளனர். இது, எடைகள் அளவைகளில் வணிகர்கள் வியாபாரிகளுக்கு பொறுப் புணர்வை ஏற்படுத்தியுள்ளது.

எடைகள், அளவைகளின் தரம் (சிப்பம் கட்டப்பட்ட பொருட்கள்) குறித்த விதிகள் :—

இருபது அம்சத் திட்டத்தின் கீழ் நுகர்வோரின் நலன்களைப் பாதுகாப்பதற்காக எடைகள், அளவைகளின் தரம் (சிப்பம் கட்டப்பட்ட பொருட்கள்) குறித்த விதிகள் இம்மாநிலத்தில் கண்டிப்பாகச் செயல்படுத்தப்படுகின்றன.

மேற்சொன்ன விதியின்படி பொருட்கள் சிப்பம் கட்டி விற்கப் படுமானால், அதன் எடை, சில்லறை விலை, உள்ளூர் வரி ஆகியவை குறித்த விவரங்கள் அச்சிப்பத்தின் மேலேயே தெளி வாகக் குறிப்பிடப்படவேண்டும். சில்லறை விற்பனையாளர்கள் அவர்கள் விற்பனை செய்யும் ஒவ்வொரு சிப்பம் கட்டப்பட்ட பொருட்களின் மீதும் உள்ளூர் வரியைக் குறிப்பிட இயலாதென்று தெரிவித்தனர். ஏனெனில், உற்பத்தியாளர்கள் ஒவ்வொரு சிப்பத்தின் மீதும் உள்ளூர் வரியைக் குறிப்பிடுவதில்லை. இந்த இடர்பாட்டினை நீக்கும் வகையில் ஒவ்வொரு பொருளின் மீதும் செலுத்த வேண்டிய உள்ளூர் வரி பற்றிய விவரங்களை நுகர் வோர் கண்ணில் நன்குபடும் இடத்தில் எழுதி வைத்து நுகர் வோரின் கவனத்தை ஈர்க்கும் வகையில் சில்லறை விற்பனை யாளர் செயல்படத் தக்கவாறு இவ்விதியினைத் திருத்துமாறு தெரிவித்த ஆலோசனையை இந்த அரசு பரிசீலித்து வருகிறது. இது இப்பிரச்சினையை எளிதாகத் தீர்க்கும்.

சில்லறை சிகரெட்டு விற்பனையாளர்கள் நுகர்வோரிடம் கூடுதல் விலை பெற்று ஏமாற்றாதிருக்கும் வகையில் இவ்விதி களைச் செயல்படுத்தும் அதிகாரிகளை கடைகளைச் சோதனை யிட்டு தவறிழைக்கும் கடைக்காரர்கள் மீது அபராதத் தண்டனை நடவடிக்கை எடுக்குமாறு இத்துறை தேவையான உத்தரவு களைப் பிறப்பித்துள்ளது.

ஆயுள் காப்புறுதி—பணி ஓய்வு நல சிறப்புத் திட்டம் :

சிறிய ஓரளவு நிலம் வைத்திருக்கும் உழவர்கள், உழவுத் தொழிலாளர்கள், கிராம கைவினைஞர்கள், கட்டிடத் தொழி லாளர்கள், சுமை ஏற்றி இறக்கும் தொழிலாளர்கள், கைவண்டி இழுப்பவர்கள், துணி வெளுப்பவர்கள், முடி திருத்துபவர்கள் ஆகியோரை இதற்கென தொடங்கப்பட்ட சிறப்புத் திட்டத்தில்

சேர்த்து, அவர்களிடமிருந்து திங்கள்தோறும் சிறு சந்தாத் தொகையை வசூலிப்பதன்மூலம் அவர்களுக்கு ஆயுள் காப்புறுதியும் பணி ஓய்வுப் பலன்களும் கிடைக்கச் செய்யும் திட்டம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 1984 ஆம் ஆண்டு சுதந்திரத் தினக் கொண்டாட்டத்தின்போது அறிவித்த மக்கள் நலத் திட்டங்கள் பலவற்றுள் ஒன்றாகும். இதன்படி, ஆயுள் காப்புறுதி பணி ஓய்வு நல சிறப்புத் திட்டத்தை அரசு அனுமதித்தது.

2. இம்மாநிலத்தில் 18 வயது முதல் 58 வயது வரையுள்ள உழவுத் தொழிலாளர்கள், சிறு—ஓரளவு நிலம் வைத்திருக்கும் உழவர்கள், கிராமக் கைவினைஞர்கள், சுமை ஏற்றியிறக்கும் தொழிலாளர்கள், கைவண்டி இழுப்பவர்கள், துணி வெளுப்பவர்கள், முடி திருத்துபவர்கள், லாரி ஓட்டுநர்கள், லாரி துடைப்பவர்கள், டாக்சி ஓட்டுபவர்கள், ஆட்டோ ஓட்டுபவர்கள், சைக்கிள் ரிக்ஷா ஓட்டுபவர்கள், காய்கறிகள், பழங்கள், உப்பு முதலியவற்றை விற்பவர்கள் ஆகியோர் இத்திட்டத்தின் மூலம் பயனடைவர்.

3. இத்திட்டத்தில் சேர விரும்புவோர் திங்கள்தோறும் 10 ரூபாய் வீதம் அவர்கள் 58 வயதடையும் வரை செலுத்த வேண்டும். இத்திட்டம், ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்தின் உடனுழைப்புடன் செயற்படுத்தப்படும். உறுப்பினர் ஒவ்வொரு வரும் ஆண்டொன்றுக்குப் பிரிமியத் தொகையாக 45 ரூபாயை ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்திடம் செலுத்துவர். ஒருவர் இறக்க நேர்ந்தால், தொழிலாளரின் நேமகதாரருக்கு ஆயுள் ஈட்டுறுதி கழகம் 5,000 ரூபாய் வழங்கும். அதனுடன், அவ்வுறுப்பினர் செலுத்திய தொகையைப் பொறுத்து சரகம் ஓரளவு தொகையை வழங்கும்.

4. 58 வயது முடிவடைந்தவுடன், அவர் தொகை செலுத்திய கால அளவிற்கேற்ப, பணி ஓய்வுப் பலனாக அவ்வுறுப்பினருக்குத் தொகை வழங்கப்படும். 10 ஆண்டுகள் தொகை செலுத்திய உறுப்பினர் 1,200 ரூபாயும், 20 ஆண்டுகளுக்கு 4,300 ரூபாயும் 25 ஆண்டுகளுக்கு 7,400 ரூபாயும், 30 ஆண்டுகளுக்கு 12,400 ரூபாயும், 35 ஆண்டுகளுக்கு 20,400 ரூபாயும், 40 ஆண்டு களுக்கு 33,500 ரூபாயும் பெறுவார்.

5. இத்திட்டத்தில் சேர்ந்த பின்னர் இறந்துவிட்ட 215 பேருக்கும் அதிகமானவர்களுக்கு ஈட்டுறுதித் தொகை 5,000 ரூபாயை இந்தியா ஆயுள் ஈட்டுறுதிக் கழகம் இதுவரை வழங்கியுள்ளது. இத்திட்டத்திற்குப் பொதுமக்களிடமிருந்து நல்ல வரவேற்பு கிட்டியுள்ளது.

விபத்து நிவாரணத் திட்டம்

இத்திட்டம் உழவுத் தொழிலாளர்கள், சிறு—ஓரளவு நிலம் வைத்திருக்கும் உழவர்கள், கிராமக் கைவினைஞர்கள் ஆகியோருக்கான ''விபத்து நிவாரணத் திட்டம்'' எனப் பெயர் பெறும்.



நிலமற்ற உழவுத் தொழிலாளர்கள், 2, 5 ஏக்கருக்கும் குறை
வாக நிலம் வைத்திருக்கும் சிறு—ஓரளவு நிலம் வைத்திருக்கும்
உழவர்கள், கிராமக் கைவினைஞர்கள் ஆகியோர் தொழிலில்
ஈடுபட்டிருக்கையில் விபத்து காரணமாக உயிரையோ அல்லது
கை—கால்களையோ இழக்க நேரிட்டால் நிவாரணம் அளிக்கும்
வகையில் இத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. வெள்ளம்,
வறட்சி, ஏனைய இயற்கைச் சீற்றங்கள் ஆகியவற்றின் காரண
மாக உறுப்பினர்களுக்கு ஏற்பட்ட சேதத்திற்கு இழப்பீட்டுத்
தொகை வழங்குவதன் மூலம் நிவாரணம் அளிப்பதுடன், தொழி
லாளர் வேலை செய்து கொண்டிருக்கையில், இறந்துவிட்டால்
அவருடைய குடும்பத்திற்கு அல்லது தொழிலாளர் வேலை செய்து
கொண்டிருக்கையில் விபத்தில் சிக்க நேர்ந்தால் அத்தொழிலாள
ருக்குக் காயத்தின் தன்மையைப் பொறுத்து 5,000 ரூபாய் முதல்
10,000 ரூபாய் வரை தொகை வழங்கப்படும். இத்திட்டம்
தமிழ்நாடு மாநிலத்திலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் செயற்
படுத்தப்படும். இத்திட்டம், அறிஞர் அண்ணா பிறந்த நாளான
15—9—1984 அன்று செயலுக்குக் கொண்டு வரப்பட்டது.

2. இத்திட்டத்தின் கீழ்வரும் விபத்துக்களும் அவற்றிற்கு வழங்கப்படும் இழப்பிட்டுத் தொகையும் வருமாறு :—

| விபத்தின் தன்மை. | இழப்பீட்டுத் தொகை ரூபாய். |
|---|---|
| 1. தொழிலாளர் வேலை செய்து கொண்டிருக்கையில் விபத்து காரணமாக இறத்தல். | 10,000 |
| 2. தொழிலாளர் வேலை செய்து கொண்டிருக்கையில் விபத்து காரணமாக கைகால்கள் இரண்டையும் அல்லது இரு கண்களை அல்லது கை கால்களில் ஒன்றையும் கண் ஒன்றையும் இழத்தல், | 10,000 |
| 3. தொழிலாளர் வேலை செய்து கொண்டிருக்கையில் விபத்து காரணமாக கைகால்களில் ஒன்றை அல்லது ஒரு கண்ணை இழத்தல். | 5,000 |

1984 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களிலிருந்து இத்திட்ட
தின்கீழ் 71 பேர் பயனடைந்தனர். முதலமைச்சரின் பொது
நிவாரண நிதியிலிருந்து 4,26,000 ரூபாய் அனுமதிக்கப்பட்டு
உள்ளது.

தொழிலாளர் விபத்து சமூகப் பாதுகாப்புத் திட்டம்:

ஏழை குடும்பங்களுக்காக, மத்திய அரசு, விபத்து ஈட்டுறுதிச்
சமூகப் பாதுகாப்புத் திட்டத்தை 1985-86 ஆம் ஆண்டிற்கான
வரவு-செலவுத் திட்ட கூட்டத் தொடரில் அறிவித்தது. ஆயுள்

[1986 மே 7

ஈட்டுறுதித் திட்ட உறுப்பினர் ஒருவர் விபத்தில் இறந்துவிடின் அவருடைய குடும்பத்திற்கு ஈட்டுறுதி நிறுவனம் 3,000 ரூபாய் வழங்கும். பிரிமியத் தொகையை மத்திய அரசு செலுத்தும்.

2. இத்திட்டத்தின் மூலம் நிலமற்ற உழவுத் தொழிலாளர்கள் சிறு-ஓரளவு நிலம் வைத்திருக்கும் உழவர்கள், பரம்பரைக் கை வினைஞர்கள் ஆகியோர் பயன்பெறுவர்.

3. இத்திட்டம், இம்மாநிலத்தில் ஏழு மாவட்டங்களில் செயற்படுத்தப்படும். அவை, தருமபுரி, கன்னியாகுமரி, மதுரை, வட ஆர்க்காடு, திருச்சிராப்பள்ளி, இராமநாதபுரம், புதுக் கோட்டை ஆகிய மாவட்டங்களாகும்.

4. மத்திய அரசு தெரிந்தெடுத்த ஏழு மாவட்டங்களில், விபத்து நிவாரணத் திட்டத்துடன் இத்திட்டத்தையும் செயற் படுத்த இவ்வரசு, மத்திய அரசுக்குத் தங்கள் இசைவைத் தெரிவித்துள்ளது. முதல் நிலையில், அரசு 10,000 ரூபாயை அனுமதிக்கும். பொது ஈட்டுறுதி நிறுவனம் பெயர் குறிப்பிடுகிற ஈட்டுறுதி நிறுவனத்திடமிருந்து 3,000 ரூபாய் பின்னர் திரும்பப் பெறப்படும்.

தமிழ் நாட்டில் கொத்தடிமை ஒழிப்புத் திட்டம்.

1976 ஆம் ஆண்டு கொத்தடிமை முறை (ஒழிப்புச்) சட்டம் தமிழ் நாட்டில் 1976 ஆம் ஆண்டிலிருந்து செயற்படுத்தப் பட்டு வருகிறது. 1976 ஆம் ஆண்டிலிருந்து, 33,132 கொத் தடிமைகள் கண்டறியப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளனர். இவர் களில் 32,578 கொத்தடிமைகளுக்குப் புதுவாழ்வு அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. இதில் 24,945 கொத்தடிமைகள், தென் ஆர்க்காடு மாவட்டம் கல்ராயன் குன்றுகளைச் சேர்ந்த ஜாகிர் தார்களிடமருந்து விடுவிக்கப்பட்டு, அவர்களுக்கு அவ்விடத் திலேயே புதுவாழ்வு அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

இந் நிதியாண்டில், 1,100 கொத்தடிமைகளுக்குப் புதுவாழ்வு அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று மத்திய அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது. இவ்வரசு, 1,112 கொத்தடிமைகளுக்கு 9.30 இலட்சம் ரூபாய் செலவில் புதுவாழ்வு அமைத்துக் கொடுத்து இலக்கை எய்தியுள்ளது. இத்திட்டத்திற்காக, இவ்வரசு, இது வரை 44.50 இலட்சம் ரூபாய் செலவுத் தொகைக்கு அனுமதித் துள்ளது. மத்திய அரசின் ஆதரவு பெற்ற திட்டங்களின் கீழ் கொத்தடிமை ஒவ்வொருவருக்கும் 4,000 ரூபாயிலிருந்து 6,000 ரூபாய் வரை செலவுத் தொகையின் உச்ச வரம்பைத் தற்போது மத்திய அரசு உயர்த்தியுள்ளது.

இம்மாநிலத்தில், இச்சட்டத்தை மேலும் கவனமாகச் செயற் படுத்துமாறு இவ்வரசு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் [illegible] வரையும் முடுக்கியுள்ளது.



1986 மே 7]

தொழில் தகராறுகள்.

| விவரம். (1) | 1985 (1984 ஜனவரி முதல் நாளிலிருந்து 1984 டிசம்பர் 31-ஆம் நாள் வரை). (2) | 1985 (1985 ஜனவரி முதல் நாளிலிருந்து 1985 டிசம்பர் 31-ஆம் நாள் வரை). (3) |
|---|---|---|
| (அ) ஆண்டு தொடக்கத்தில் முடிவுறாமல் இருந்த புகார்கள் மற்றும் தகராறுகளின் எண்ணிக்கை. .. .. .. | 1,954 | 1,900 |
| (ஆ) இந்த ஆண்டில் வரப்பெற்ற புகார்கள்/எழுந்த தகராறுகளின் எண்ணிக்கை .. .. .. | 7,871 | 7,469 |
| (இ) முந்தைய ஆண்டுகளில் முடிவுறாதிருந்த புகார்கள். தகராறுகள் உட்பட புலன் விசாரணை செய்யப்பட்ட புகார்கள், தகராறுகளின் எண்ணிக்கை .. | 7,925 | 9,369 |
| (ஈ) சமரச அலுவலர்களின் உதவியுடன் தீர்வு காணப்பட்ட தகராறுகளின் எண்ணிக்கை .. | 6,277 | 7,404 |
| (உ) தொழிலாளர்கள் நீதிமன்றங்கள் மற்றும் தொழில் நடுவர் நீதிமன்ற தீர்ப்பிற்கு விடப்பட்ட தகராறுகளின் எண்ணிக்கை .. | 1,646 | 1,655 |
| (ஊ) நடுவர் நீதிமன்ற தீர்ப்பிற்கு விடப்பட்ட தகராறுகளின் எண்ணிக்கை .. .. | [illegible] | [illegible] |
| (எ) ஆண்டு இறுதியில் முடிவுறாமல் இருந்த தகராறுகளின் எண்ணிக்கை .. .. .. | 1,900 | 1,96[illegible] |

1985-ஆம் ஆண்டில் நடந்த வேலை நிறுத்தங்களும் கதவடைப்புகளும்.

| விவரம். (1) | 1984 (1984-ஆம் ஆண்டு ஜனவரி 1-ஆம் நாளிலிருந்து 1984-ஆம் ஆண்டு டிசம்பர் 31-ஆம் நாளன்று முடிய). (2) | 1985 (1985-ஆம் ஆண்டு ஜனவரி 1-ஆம் நாளிலிருந்து 1985-ஆம் ஆண்டு டிசம்பர் 31-ஆம் நாளன்று முடிய). (3) |
|---|---|---|
| 1. கதவடைப்புகள் உட்பட வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கை | 211 | 212 |
| 2. வீணான உழைப்பு நாட்கள் .. | 37,08,409 | 35,05,226 |

1985-ஆம் ஆண்டில் நடந்த வேலை நிறுத்தங்கள், கதவடைப்புகள் ஆகியவை குறித்து தீர்வு காணப்பட்ட வழிமுறைகள்.

| | |
|---|---|
| (1) நேரடி பேச்சு வார்த்தை மூலமாக தீர்வு காணப்பட்டவை .. .. .. | 25 |
| (2) தாங்களாகவே முன்வந்து வேலை தொடங்கியவை .. .. .. .. | 22 |
| (3) தொழிலாளர் நலத்துறை அலுவலர்களாலும் அரசாலும் தீர்த்து வைக்கப்பட்டவை .. | 141 |
| (4) மூடப்பட்டவை .. .. .. .. | 3 |
| (5) தீர்ப்பு வழங்குதல் .. .. .. .. | 1 |
| (6) ஆண்டு இறுதியில் பேச்சுவார்த்தையில் இருந்தவை .. .. .. .. | 20 |



(i) தொழில்வாரியாக வேலை நிறுத்தங்கள், கதவடைப்புகள் குறித்த விவரங்கள்.

| தொடர் எண்ணும் தொழிலும். | வேலை நிறுத்தங்கள், கதவடைப்புகள் எண்ணிக்கை. | | ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் எண்ணிக்கை. | | இழந்த உழைப்பு நாட்கள். | |
|---|---|---|---|---|---|---|
| | 1984 | 1985 | 1984 | 1985 | 1984 | 1985 |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1. துணி நெசவு .. .. | 109 | 85 | 62,093 | 2,19,353 | 24,81,381 | 26,70,879 |
| 2. பொறியியல் .. .. | 50 | 84 | 19,496 | 12,840 | 6,18,585 | 4,92,574 |
| 3. தோல் பதனிடும் தொழிற்சாலைகள் .. .. | 3 | 1 | 245 | 55 | 15,829 | 715 |
| 4. புகையிலை, பீடித்தொழில் .. | 2 | 1 | 295 | 650 | 3,536 | 52,000 |
| 5. மலைத் தோட்டங்கள் .. | 9 | 12 | 12,090 | 2,111 | 1,93,430 | 67,620 |
| 6. ஏனையவை .. .. | 38 | 29 | 18,093 | 11,875 | 3,95,648 | 2,21,438 |
| மொத்தம் .. | 211 | 212 | 1,12,312 | 2,46,884 | 37,08,409 | 35,05,226 |

தீர்ப்பு வழங்குதல் :

| (1) | தீர்ப்புக்கு அனுப்பப் பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. 1984. (2) | 1985. (3) | தீர்ப்புகள் வழங்கப் பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. 1984. (4) | 1985. (5) |
|---|---|---|---|---|
| (அ) சென்னை தொழில் நடுவர் மன்றம் .. | 104 | 97 | 58 | 45 |
| (ஆ) தொழிலாளர் நீதிமன்றங்கள் .. | 1,542 | 1,558 | 1,194 | 1,203 |
| (இ) நடுவர் தீர்ப்புக்கு அனுப்பப்பட்டவை .. | 2 | 2 | 1 | .. |
| (ஈ) தொழிலாளர் நீதிமன்றங்கள் முன்பு 33சி (2) ஆம் பிரிவின் கீழ் தாக்கல் செய்யப் பட்ட விண்ணப்பங்களில் முடிவு செய்யப் பட்டவை .. .. | 1,823 | 3,260 | 1,942 | 2 291 |

(iii) தொழில் தகராறுகள் சட்டத்தின் 33சி (1) ஆம் பிரிவின்கீழ் பாக்கித் தொகைகளை வசூலிப் பதற்கான அரசு ஆணை பிறப்பித்த விவரங்கள்—

| ஆண்டு. (1) | இனங்களின் எண்ணிக்கை. (2) | தொகை. (3) ரூ. பை. |
|---|---|---|
| 1984 .. .. .. .. | 28 | 1,03.376.74 |
| 1985 .. .. .. .. | 20 | 7,12,279.24 |



பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களின் கீழ் தொடரப்பட்ட வழக்குகள், முடிக்கப்பட்ட வழக்குகள் குறித்த விவரங்கள்.

| சட்டத்தின் பெயர். (1) | தொடக்கத்தில் முடிவு பெறாமல் இருந்தவை. (2) | இந்த ஆண்டில் அனுமதிக் கப் பட்டவை. (3) | முடிக்கப் பட்டவை. (4) | தண்டனை அளிக்கப் பட்டவை. (5) |
|---|---|---|---|---|
| (1) 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டம் .. .. .. | 2,308 | 2,519 | 2,344 | 2,183 |
| (2) தமிழ்நாடு 1947 ஆம் ஆண்டு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டம் .. | 5,905 | 25,228 | 23,115 | 22,926 |
| (3) தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு உணவகங்கள் சட்டம் .. .. .. | 1,481 | 3,106 | 3,050 | 3,006 |
| (4) 1961 ஆம் ஆண்டு மோட்டார் போக்கு வரத்துத் தொழிலாளர் சட்டம் .. | 164 | 269 | 244 | 233 |
| (5) 1970 ஆம் ஆண்டு ஒப்பந்தத் தொழிலாளர் (முறைப்படுத்தலும் நீக்குதலும்) சட்டம். | 44 | 140 | 101 | 99 |
| (6) 1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய பண்டிகை விடு முறை நாட்கள்) சட்டம் .. | 2,157 | 6,742 | 6,499 | 6,437 |
| (7) 1951 ஆம் ஆண்டு மலைத்தோட்ட தொழிலாளர் சட்டம் .. .. .. | 56 | 119 | 85 | 82 |

| சட்டத்தின் பெயர். | விடுதலை பெறப் பட்டவை. | தண்டிக் கப் பட் டவை. | திரும்பப் பெறப் பட்டவை. | தள்ளி விடப் பட்டவை. | முடிவுறாமல் உள்ளவை. | பெறப் பட்ட அபராதத் தொகை |
|---|---|---|---|---|---|---|
| | (6) | (7) | (8) | (9) | (10) | (11) |
| | | | | | | ரூ.பை. |
| (1) 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டம் .. | 45 | 14 | 10 | .. | 2,483 | 5,69,99,000 |
| (2) தமிழ்நாடு 1947 ஆம் ஆண்டு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டம் .. | 14 | 118 | 49 | 8 | 8,018 | 9,49,797.00 |
| (3) தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு உணவகங்கள் சட்டம் .. | 18 | 12 | 14 | .. | 1,537 | 1,90,604.00 |
| (4) 1961 ஆம் ஆண்டு மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர் சட்டம் .. | 1 | 8 | 2 | .. | 178 | 35,720.00 |
| (5) 1970 ஆம் ஆண்டு ஒப்பந்தத் தொழிலாளர் (முறைப்படுத்தலும் நீக்குதலும்) சட்டம் .. .. | .. | .. | 2 | .. | 83 | 14,940.00 |
| (6) தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு தொழில் நிறுவனங்கள் (தேசிய பண்டிகை விடுமுறை நாட்கள்) சட்டம். | 19 | 29 | 17 | .. | 2,400 | 2,10,755.00 |
| (7) 1951 ஆம் ஆண்டு மலைத் தோட்ட தொழிலாளர் சட்டம் .. | 1 | 2 | .. | .. | 90 | 15,795.00 |



| வரிசை எண்ணும் சட்டத்தின் பெயரும். | தொடக்கத்தில் முடிவு பெறாமல் இருந்தனவை. | இந்த ஆண்டில் அனுமதிக் சப் பட்டவை | முடிக்கப் பட்டவை. | தண்டனை அளிக்கப் பட்டவை. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| (8) 1936 ஆம் ஆண்டு ஊதியங்கள் வழங்குதல் சட்டம். .. | 609 | 1,229 | 1,207 | 1,183 |
| (9) 1948 ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டம் .. | 996 | 2,011 | 1,986 | 1,961 |
| (10) 1961 ஆம் ஆண்டு மகப்பேறு பயன் சட்டம் | 43 | 94 | 103 | 103 |
| (11) 1972 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிச் சட்டம் .. | 2 | .. | 1 | .. |
| (12) 1966 ஆம் ஆண்டு பீடி, சுருட்டு தொழிலாளர் (பணி நிலைமை சட்டம்) .. | 97 | 238 | 248 | 246 |
| (13) 1938 ஆம் ஆண்டு சிறுவர்களை வேலைக்கு வைத்துக் கொள்ளுதல் சட்டம் .. | .. | 2 | 1 | 1 |
| (14) 1955 ஆம் ஆண்டு உழைக்கும் பத்திரிகையாளர்கள் ஏனைய செய்தித்தாள் தொழிலாளர்கள் (பணி நிபந்தனைகள் பல்வகை விதித் துறைகள்) சட்டம் .. | .. | 1 | .. | .. |
| (15) தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு வாழ்க்கைப்படி வழங்குதல் சட்டம் .. | 3 | .. | 2 | .. |

| வரிசை எண்ணும், சட்டத்தின் பெயரும். | விடுதலை பெறப் பட்டவை. | தண்டிக்கப் பட்டவை. | திரும்பப் பெறப் பட்டவை. | தள்ளி விடப் பட்டவை. | முடிவுறாமல் உள்ளவை. | பெறப்பட்ட அபராதத் தொகை. |
|---|---|---|---|---|---|---|
| | (6) | (7) | (8) | (9) | (10) | (11) |
| | | | | | | ரூ. பை. |
| (8) 1936ஆம் ஆண்டு ஊதியங்கள் வழங்குதல் சட்டம். | 5 | 8 | 11 | .. | 621 | 73,820.00 |
| (9) 1948ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டம். | 7 | 13 | 5 | .. | 1,021 | 1,49,280.00 |
| (10) 1961ஆம் ஆண்டு மகப்பேறு பயன் சட்டம் .. | .. | .. | .. | .. | 34 | 7,685.00 |
| (11) 1972ஆம் ஆண்டு தமிழ் நாடு தொழிலாளர் நல நிதிச் சட்டம் .. | .. | .. | 1 | .. | 1 | .. |
| (12) 1966ஆம் ஆண்டு பீடி, சுருட்டுத் தொழிலாளர் (பணி நிலைமை) சட்டம். | 2 | .. | .. | .. | 87 | 33,330.00 |
| (13) 1938ஆம் ஆண்டு சிறுவர்களை வேலைக்கு வைத்துக் கொள்ளுதல் சட்டம் .. | .. | .. | .. | .. | 1 | 200.00 |
| (14) 1955ஆம் ஆண்டு உழைக்கும் பத்திரிகையாளர்கள் ஏனைய செய்தித்தாள் தொழிலாளர்கள் (பணி நிபந்தனைகள் பல்வகை விதித்துறைகள்) சட்டம் | .. | .. | .. | — | 1 | .. |
| (15) தமிழ்நாடு 1981ஆம் ஆண்டு வாழ்க்கைப்படி வழங்கும் சட்டம் .. | .. | .. | .. | .. | 1 | 2,000.00 |



தொழிலாளர் நலச் சட்டத்தின் கீழ் வரும் நிறுவனங்கள், தொழிலாளர்கள், வசூலிக்கப்பட்ட உரிமத் தொகை ஆகியவை பற்றிய விவரம்.

| ஆண்டு. | நிறுவனங்களின் எண்ணிக்கை. | அமர்த்திக்கொள்ளப் பட்ட பணியாளர்களின் எண்ணிக்கை. | வசூலிக்கப்பட்ட உரிம பதிவுத் தொகை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | | ரூ. |
| அ. அமைப்பு ரீதியான தொழில்கள்.— | | | |
| 1. 1948ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டம். | | | |
| 1984 .. .. | 12,562 | 7,93,769 | 64,51,572 |
| 1985 .. .. | 13,011 | 8,02,749 | 1,01,05,413 |
| 2. 1951ஆம் ஆண்டு மலைத் தோட்டத் தொழிலாளர் சட்டம்— | | | |
| 1984 .. .. | 460 | 92,801 | இதற்கு அவசியமில்லை. |
| 1985 .. .. | 485 | 92,752 | இதற்கு அவசியமில்லை. |
| 3. 1961ஆம் ஆண்டு மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர்கள் சட்டம்— | | | |
| 1984 .. .. | 1,592 | 58,843 | 80,981.88 |
| 1985 .. .. | 1,551 | 68,764 | 98,085.38 |

(ஆ) அமைப்பு ரீதியில்லாத தொழில்கள்—

1. 1966 ஆம் ஆண்டு பீடி, சுருட்டுத் தொழிலாளர்கள் (பணி நிலைமைகள்) சட்டம்.

| | | | |
|---|---|---|---|
| 1984 .. .. | 1,218 | 11,993 (வீட்டிலிருந்து பணி புரிவோர் 2 இலட்சம்) | 23,656.00 |
| 1985 .. .. | 1,313 | 12,791 (வீட்டிலிருந்து பணி புரிவோர் 2 இலட்சம்) | 37,680.00 |

2. 1947 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் நிறுவனங்கள் சட்டம்—

| | | | |
|---|---|---|---|
| 1984 .. .. | 2,80,769 | 2,65,292 | இதற்கு அவசியமில்லை. |
| 1985 .. .. | 2,77,370 | 2,74,000 | |

3. 1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஓட்டல் நிறுவனங்கள் சட்டம்—

| | | | |
|---|---|---|---|
| 1984 .. .. | 25,900 | 74,238 | 2,92,771.00 |
| 1985 .. .. | 26,133 | 74,926 | 3,18,625.55 |



பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களின் கீழ் ஆய்வாளர்கள் ஆய்வு செய்த விவரம் :

| சட்டத்தின் பெயர். (1) | முறையான ஆய்வு. (2) | விடுமுறை ஆய்வு. (3) | சிறப்பு ஆய்வு. (4) | இடர் ஆய்வு. (5) | இரவு நேர ஆய்வு. (6) | சோதனை ஆய்வு. (7) |
|---|---|---|---|---|---|---|
| 1 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டம் (URF ஆய்வு). .. .. .. | 20,599<br>3,495 | 1,978 | 3,101 | 809 | 1,408 | 3,555 |
| 2 தமிழ்நாடு 1947 ஆம் ஆண்டு கடைகள் நிறுவனங்கள் சட்டம் .. .. | 3,49,112 | 38,888 | 8,027 | 13,251 | 10,923 | .. |
| 3 1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஓட்டல் நிறுவனங்கள் சட்டம் .. .. | 42,185 | 837 | 620 | 543 | 109 | .. |
| 4 1961 ஆம் ஆண்டு மோட்டார் போக்குவரத்து தொழிலாளர்கள் சட்டம் .. .. | 3,718 | 23 | 163 | 101 | .. | 245 |
| 5 1955 ஆம் ஆண்டு உழைக்கும் பத்திரிகையாளர்கள், பத்திரிகைத் தொழிலாளர்கள் (பணி நிலைமைகள் பல்வகை விதித் துறைகள்) சட்டம் — .. — — | 30 | — | — | — | — | — |
| 6 1970 ஆம் ஆண்டு ஒப்பந்தத் தொழிலாளர்கள் (முறைப்படுத்தல் நீக்குதல்) சட்டம் .. | 1,207 | .. | .. | — | — | — |
| 7 தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு தொழில் நிறுவனங்கள் (தேசிய பண்டிகை விடுமுறைகள்) சட்டம் .. .. .. .. | 1,58,406 | 3,211 | 1,772 | 1,254 | 1,048 | — |
| 8 1951 ஆம் ஆண்டு மலைத் தோட்டத் தொழிலாளர் சட்டம் .. .. | 2,153 | 278 | 54 | 97 | — | — |
| 9 1937 ஆம் ஆண்டு ஊதியம் வழங்கல் சட்டம். | 53,673 | 258 | 63 | 170 | — | — |
| 10 1948 ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியச் சட்டம் .. .. .. .. | 68,142 | 617 | 168 | 1,946 | — | — |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
|---|---|---|---|---|---|---|
| 11 1966 ஆம் ஆண்டு பீடி, சுருட்டு தொழிலாளர்கள் (பணி நிலைமைகள்) சட்டம் .. | 2,242 | 29 | 68 | 45 | .. | .. |
| 12 1938 ஆம் ஆண்டு சிறுவர்களை வேலைக்கு அமர்த்துதல் சட்டம் .. .. .. | 148 | 39 | 19 | 4 | .. | .. |
| 13 1961 ஆம் ஆண்டு மகப்பேறு பயன் சட்டம் .. | 12,158 | 86 | 21 | 35 | .. | .. |
| 14 தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு தொழில் நிறுவனங்கள் (தொழிலாளர்களை நிரந்தரப்படுத்துதல்) சட்டம் .. .. .. | 7,849 | 86 | 21 | 23 | .. | .. |
| 15 1976 ஆம் ஆண்டு சம ஊதியச் சட்டம் .. | 7,120 | .. | .. | .. | .. | .. |

(அ) பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களின் கீழ் துறை அலுவலர்களால் முடிவு செய்யப்பட்ட வழக்குகள்.

| தொடர் எண்ணும் விவரங்களும். | தமிழ்நாடு உணவகங்கள் சட்டம். | | தமிழ்நாடு கடைகள் நிறுவனங்கள் சட்டம். | | பணிக்கொடை வழங்கல் சட்டம். | |
|---|---|---|---|---|---|---|
| | 1984 | 1985 | 1984 | 1985 | 1984 | 1985 |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1 தொடக்கத்தில் முடிவுறாமல் இருந்த வழக்குகள் .. .. .. .. .. | 46 | 9 | 175 | 171 | 340 | 348 |
| 2 இவ்வாண்டில் வரப்பெற்ற வழக்குகளின் எண்ணிக்கை .. .. .. .. | 82 | 106 | 187 | 180 | 1,398 | 2,239 |
| 3 மொத்த வழக்குகளின் எண்ணிக்கை .. | 128 | 115 | 362 | 351 | 1,733 | 2,587 |
| 4 நடப்பாண்டில் முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை .. .. | 119 | 106 | 191 | 231 | 1,385 | 1,226 |
| 5 ஆண்டு முடிவில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை .. .. .. | 9 | 9 | 171 | 120 | 348 | 1,361 |



(ஆ) தொழிலாளர் நலத்துறைத் துணை ஆணையாளர்களால் முடிவு செய்யப்பட்ட வழக்குகள்.

| விவரங்கள். | தொழிலாளர் இழப்பீட்டு சட்டம். | | ஊதியம் வழங்கல் சட்டம். | | பணிக்கொடை வழங்கல் சட்டம். | |
|---|---|---|---|---|---|---|
| | 1984 | 1985 | 1984 | 1985 | 1984 | 1985 |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1 ஆண்டு தொடக்கத்தில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை. | 360 | 413 | 317 | 497 | 75 | 120 |
| 2 இவ்வாண்டில் வரப்பெற்ற வழக்குகளின் எண்ணிக்கை. | 980 | 845 | 706 | 1,016 | 373 | 177 |
| 3 மொத்தம் .. .. .. .. .. | 1,340 | 1,258 | 1,023 | 1,513 | 448 | 297 |
| 4 இவ்வாண்டில் முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | [927 | 838 | 526 | 650 | 328 | 190 |
| 5 ஆண்டு முடிவில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை. | 413 | 420 | 497 | 863 | 120 | 107 |

தொழிலாளர் வருங்கால வைப்பு நிதித் திட்டத்தின் கீழ் சந்தாதாரர்களுக்கு வழங்கப்பட்ட முன் பணம் பற்றிய விவரங்கள்.]

| நோக்கம். | இனங்களின் எண்ணிக்கை. |
|---|---|
| (1) | (2) |
| (அ) ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்தின் பாலிசிகளுக்குத் தொகை கொடுக்க (P65) .. .. .. .. | 11,688 |
| (ஆ) குடியிருப்பு மனை அல்லது வீடு அல்லது தனிக் குடியிருப்பு வாங்க அல்லது வீட்டுமனை வாங்கவும், அரசு முகவரமைப்புகளின் கடனைத் தீர்க்க (P68 B & 68BB). | 9,122 |
| (இ) 15 நாட்களுக்கு மேல் கதவடைப்பு செய்யப்பட்ட அல்லது மூடப்பட்ட நிறுவனங்களின் பணியாளர்களுக்கு வழங்கப்பட்ட முன் பணம் (P68R). | 7,883 |
| (ஈ) உறுப்பினருக்கு/அவருடைய குடும்பத்தில் உள்ளவர்களுக்கு உடல் நலக் குறைவு ஏற்பட்டு அவர்களின் மருத்துவ சிகிச்சைக்கான செலவிற்காக (P68J). | 358 |
| (உ) உறுப்பினர்களின் திருமணத்திற்கு, உறுப்பினரின் மகள்கள், மகன்கள், சகோதரிகள், சகோதரர்கள் திருமணத்திற்கு உறுப்பினரின் மகன், மகள் ஆகியோரின் உயர் கல்விக்கு (P68K). | 12,496 |
| (ஊ) பத்தி 68-Lன்படி வழங்கப்பட்ட முன் பணம் .. .. .. .. .. .. .. | 41,737 |
| (எ) மின்வெட்டு காரணமாகத் தொழிற்சாலைகளில் லே-அப் இருக்கும்போது ஊதியத்தில் குறைவு ஏற்பட்டு அவதியுறும் தொழிலாளர்களுக்கு (பத்தி 68M). | .. |
| (ஏ) உடல் ஊனமுற்றவராக உள்ள சந்தாதாரர்கள் இடர்பாட்டைக் குறைக்க கருவிகள் வாங்குவதற்கு (பத்தி 68N). | 1 |



31—12—1985 ஆம் நாள் நிலவரப்படி, அரசுத் துறை நிறுவனங்கள், 1952 ஆம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்புநிதி பல்வகை விதித் துறைகள் சட்டத்தைச் செயல்படுத்துவதில் தற்போதைய நிலையைக் காட்டும் விவர அட்டவணை :

| நிறுவனங்களின் வகை. | இத்திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை. | | | இத்திட்டத்தைச் செயற்படுத்தும் நிறுவனங்களின் எண்ணிக்கை. | | | இத்திட்டத்தைச் செயற்படுத்தாத நிறுவனங்களின் எண்ணிக்கை. | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | விலக்களிக்கப்பட்டது. | விலக்களிக்கப்படாதது. | மொத்தம். | விலக்களிக்கப்பட்டது | விலக்களிக்கப்படாதது. | மொத்தம். | விலக்களிக்கப்பட்டது | விலக்களிக்கப்படாதது. | மொத்தம். |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
| மத்திய அரசின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் பொது நிறுவனங்கள்/கழகங்கள். | 24 | 10 | 34 | 24 | 7 | 31 | .. | 3 | 3 |
| மாநில அரசின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் பொது நிறுவனங்கள்/கழகங்கள். | 115 | 74 | 189 | 65 | 74 | 139 | 50 | .. | 50 |
| மாநில அரசுத் துறை வகையில் நடத்தும் நிறுவனங்கள். | 67 | 84 | 151 | 24 | 21 | 45 | 42 | 63 | 106 |
| நகராட்சி/மாநகராட்சிகளின் கீழ் வரும் உள்ளாட்சி மன்ற அமைப்புகள். | 5 | 11 | 16 | 5 | 11 | 16 | .. | .. | .. |
| மொத்தம் .. | 211 | 179 | 390 | 118 | 113 | 231 | 93 | 66 | 159 |

## இணைப்பு II.

### அத்தியாயம் I.

வேலை வாய்ப்புகள் :

1.1. தமிழ்நாட்டில் 41 வேலைவாய்ப்பகங்கள் இயங்கி வருகின்றன. அவற்றில் 8 துணை வேலைவாய்ப்பு அலுவலகங்கள், 6 சிறப்பு வேலைவாய்ப்பகங்கள் (4 தொழில் நுட்பப் பிரிவு அலுவலகங்கள், உடல் ஊனமுற்றோருக்கு ஒரு அலுவலகம் மற்றும் தொழில் மற்றும் செயல் வேலைவாய்ப்பு அலுவலகம் ஒன்று) சென்னை, மதுரை, அண்ணாமலை நகர் ஆகிய இடங்களில் செயல்படும் 3 பல்கலைக் கழக வேலைவாய்ப்புத் தகவல் மற்றும் வழிகாட்டும் நிலையங்கள் ஆகியவையும் அடங்கும்.

வேலைக்காக பதிவு செய்துள்ள மனுதாரர்கள், வேலை அளிக்கப்பட்டவர்கள், வேலைக்காக வேலை வாய்ப்பகங்களில் செல்லுபடிப் பதிவேட்டில் (Live Register) காத்திருப்பவர்கள் அறிவிக்கப்பட்ட வேலை காலியிடங்களின் எண்ணிக்கை, வேலை வாய்ப்பகங்களை பயன்படுத்திக் கொண்ட அரசுத் துறை, தனியார் துறையைச் சேர்ந்த தொழிலதிபர்களின் எண்ணிக்கை விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| விவரங்கள். (1) | 1-1-1984 முதல் 31-12-1984 வரை. (2) | 1-1-1985 முதல் 31-12-1985 வரை. (3) |
|---|---|---|
| 1 தமிழ் நாட்டிலுள்ள வேலை வாய்ப்பகங்களால் பதிவு செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை. | 5,31,863 | 5,32,721 |
| 2 அறிவிக்கப்பட்ட காலியிடங்களின் எண்ணிக்கை. | 84,723 | 74,673 |
| 3 வேலைக்கு அமர்த்தப்பட்டவர்களின் எண்ணிக்கை. | 60,298 | 52,390 |
| 4 வேலைவாய்ப்பு அலுவலகங்களை உபயோகித்த வேலையளிப்போர்களின் எண்ணிக்கை. | 21,661 | 19,495 |
| 5 டிசம்பர் திங்கள் 31-வது நாளின் நிலவரப்படி வேலை வாய்ப்பகப் பதிவேட்டிலுள்ள விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை. | 17,07,940 | 20,81,257 |



தொழில் மற்றும் நிர்வாக வேலைவாய்ப்பு அலுவலகம் :

1.2. இந்த அலுவலகம் உயர்ந்த தொழில் அனுபவம், அறிவியல், பொறியியல் மற்றும் நிர்வாக மேற்பார்வை பணிக் கல்வித் தகுதியுடையவர்களின் தேவைகளை கவனிக்கிறது. அரசுத் துறை தனியார் துறையைச் சேர்ந்த முதன்மையான தொழிலதிபர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு, தகுதியுள்ள விண்ணப்பதாரர்களைத் தகுந்த வேலையில் அமர்த்த நடவடிக்கை எடுத்து வருகிறது. 1—1—1985 முதல் 31—12—1985 வரையான காலத்தில் இந்த அலுவலகம் ஆற்றிய பணிகளின் புள்ளி விவரங்கள் சென்ற ஆண்டிற்கான இதே விவரங்களுடன் ஒப்பிட்டு, கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| (1) | 1-1-1984 முதல் 31-12-1984 வரை. (2) | 1-1-1985 முதல் 31-12-1985 வரை. (3) |
|---|---|---|
| பதிவு செய்தவர்கள் .. .. | 15,966 | 15,891 |
| வேலையில் அமர்த்தப்பட்டவர்கள். | 2,571 | 2,196 |
| டிசம்பர் 31 முடிய செல்லுபடிப் பதிவேட்டில் உள்ளவர்கள். | 37,031 | 49,572 |

உடல் ஊனமுற்றோருக்கான சிறப்பு வேலைவாய்ப்பு அலுவலகம் :

1.3. உடல் ஊனமுற்ற விண்ணப்பதாரர்களைப் பதிவுசெய்து அவர்களை வேலையில் அமர்த்தும் நோக்குடன் சென்னையில் சிறப்பு வேலை வாய்ப்பகம் ஒன்றும், மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, சேலம், தஞ்சாவூர் மற்றும் நாகர்கோவில் ஆகிய மாவட்டங்களிலுள்ள வேலைவாய்ப்பு அலுவலகங்களில் ஊனமுற்றோர்களுக்காக 6 தனிப் பிரிவுகளும் இயங்கி வருகின்றன. இவ்வலுவலகங்கள் அரசுத்துறை, தனியார் துறையைச் சேர்ந்த தொழில் அதிபர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு, எல்லாவித உடல் ஊனமுற்றோருக்கும் வேலைவாய்ப்பு அளித்து வருகின்றன. 1-1-1985 முதல் 31-12-1985 வரையிலான காலத்தில் பதிவு செய்த மனுதாரர்கள், வேலையில் அமர்த்தப்பட்டவர்

களின் எண்ணிக்கை ஆகியவை சென்ற ஆண்டிற்கான விவரங்களுடன் ஒப்பிட்டு கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| | 1-1-1984 முதல் 31-12-1984 வரை. | | |
|---|---|---|---|
| | பதிவு செய்த வர்கள். | வேலையில் அமர்த்தப் பட்டவர் கள். | செல்லுபடி பதிவேட்டில் உள்ள வர்கள். |
| (1) | (2) | (3) | (4) |
| பார்வையற்றோர் .. | 344 | 68 | 1,398 |
| காது கேளாதோர் .. | 376 | 104 | 1,127 |
| கை, கால் ஊனமுற்றோர். | 5,033 | 1,906 | 18,820 |
| மொத்தம் .. | 5,753 | 2,078 | 21,345 |

| | 1-1-1985 முதல் 31-12-1985 வரை. | | |
|---|---|---|---|
| | பதிவு செய்த வர்கள். | வேலையில் அமர்த்தப் பட்ட வர்கள். | செல்லு படி பதி வேட்டில் உள்ளவர்கள். |
| (1) | (5) | (6) | (7) |
| பார்வையற்றோர் .. | 230 | 62 | 1,509 |
| காது கேளாதோர் .. | 194 | 48 | 1,153 |
| கை, கால் ஊனமுற்றோர். | 3,926 | 1,072 | 19,083 |
| மொத்தம் .. | 4,350 | 1,182 | 21,745 |

மேலும் உடல் ஊனமுற்றோருக்கான சிறப்புப் பிரிவு ஒன்று காஞ்சிபுரத்தில் விரைவில் அமைக்கப்பட உள்ளது.

1.4. தொழில் நுட்ப மனுதாரர்களுக்காக நான்கு வேலை வாய்ப்பகங்கள் சென்னை, திருச்சிராப்பள்ளி, மதுரை மற்றும் கோயம்புத்தூரில் இயங்கி வருகின்றன. இவ்வலுவலகங்கள் தொழில் நுட்ப தகுதி பெற்றோரையும் தொழில் பயிற்சிப் பள்ளி (ஐ.டி.ஐ.)யில் பயிற்சிப் பெற்ற கைவினைஞர்களுக்கும் பதிவு செய்து பொதுத் துறையிலும் தனியார் துறையிலும், அவர்களைத் தகுந்த பணியில் அமர்த்தும் பணியினை செய்து வருகின்றன.



வேலை நிலவரத்தகவல் திட்டம் (Employment Market Information)

2.1. இத்திட்டத்தின்கீழ் 25 அல்லது அதற்கு மேற்பட்ட பணியாளர்கள் உள்ள (வேளாண்மை நீங்கலாக) எல்லா தனியார் துறை நிறுவனங்களிலிருந்தும், அனைத்துப் பொதுத்துறை நிறுவனங்களிலிருந்தும், காலாண்டுக்கொருமுறை வேலை நிலவரத் தகவல் கட்டாயமாகத் திரட்டப்படுகிறது. 10 முதல் 24 பணியாளர்கள் பணியாற்றும் தனியார் துறையைச் சேர்ந்த நிறுவனங்களிலிருந்தும் இத்தகவல் தாங்களாகவே முன்வந்து அளிக்கும் வேலையளிப்போரிடமிருந்து திரட்டப்படுகிறது. இவ்வாறு தகவல் திரட்டும் பணி தொழில் சங்க அமைப்பு ரீதியான துறைகளில் மட்டும் (Orgauised Sector) மேற்கொள்ளப்பட்டது. 31-3-1985, 30-6-1985 ஆகிய தேதிகளுடன் முடியும் இரண்டு காலாண்டுகளில் தகவல் கேட்கப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை, பொதுத்துறை, தனியார் துறையைச் சார்ந்த நிறுவனங்களில் வேலையிலிருப்பவர்களின் எண்ணிக்கை ஆகிய புள்ளி விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| வரிசை எண், காலாண்டு. | நிறுவனங்களின் எண்ணிக்கை. | |
|---|---|---|
| | பொது நிறுவனம். | தனியார் நிறுவனம். |
| (1) | (2) | (3) |
| 1 31-3-1985 .. .. | 10,299 | 12,247 |
| 2 30-6-1985 .. .. | 10,372 | 12,177 |

| | நிறுவனங்களில் வேலையில் உள்ளவர்களின் மொத்த எண்ணிக்கை. | |
|---|---|---|
| | பொது நிறுவனம். | தனியார் நிறுவனம். |
| (1) | (2) | (3) |
| 1 31-3-1985 .. .. | 14,27,100 | 6,99,688 |
| 2 30-6-1985 .. .. | 14,29,050 | 6,96,606 |

சுய வேலைவாய்ப்புத் திட்டம் :

2.2. இத்துறையால் செயல்படுத்தப்படும் கிராமப்புற சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் பல தொழிற்பிரிவுகளில் பயிற்சி பெற்றவர்களுக்கு கடனுதவி பெற்றுத் தரப்படுகிறது. 31-12-1985 வரை 3,470 நபர்களுக்கு ரூ 1.41 கோடி கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.

[1986 மே

வாழ்க்கைத் தொழிலுக்கு வழிகாட்டுதலும், வேலைவாய்ப்பு
ஆலோசனை அளித்தலும்.

2.3. தமிழ்நாட்டில் 19 மாவட்டங்களில், மாவட்டத்திற்கு
ஒன்றாக 19 வாழ்க்கைத் தொழில் வழி காட்டும் பிரிவுகள் செயல்
பட்டு வருகின்றன. இப்பிரிவுகள் வேலைவாய்ப்பு அலுவலகங்
களில் பதிவு செய்துள்ள வேலை தேடுவோர்க்கு தொழில் வேலை
வாய்ப்பு பயிற்சி/தொழில் பழகு வசதிகள் குறித்த விவரங்களை
அளிக்கின்றன. மாணவர்கள் வேலை தேடுவோரின் பயனுக்
காக, காலாண்டுதோறும் வழிகாட்டிச் செய்தி அறிக்கைகளைத்
தயாரிக்கின்றன. வாழ்க்கைத் தொழில் வழிகாட்டும் கண்
காட்சிகள், குறிப்பிட்ட கால இடைவெளியில், வாழ்க்கைத்
தொழில் நெறிகளை பரப்புவதற்காக நடத்தப்பட்டு வருகின்
றன. வாழ்க்கைத் தொழில் வழிகாட்டும் பிரிவுகளில் நடை
பெறும் பணிகளின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| (1) | 1–1–1984 முதல் 31-12-1984 வரை. (2) | 1–1–1985 முதல் 31-12-1985 வரை. (3) |
|---|---|---|
| 1. கூட்டுக் கலந்துரையாடல்களின் எண்ணிக்கை .. .. .. | 3,385 | 3,541 |
| 2. கூட்டுக் கலந்துரையாடல்களில் கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கை .. .. .. | 61,969 | 74,572 |
| 3. பதிவு செய்யும்போது வழிகாட்டும் தகவல் பெற்றவர்கள் .. .. | 16,475 | 17,346 |
| 4. பணியில் அமர்த்தப்பட்ட/தொழில் பழகும் பயிற்சியில் சேர்க்கப் பட்டவர்களின் எண்ணிக்கை .. | 1,214 | 1,217 |
| 5. பள்ளிகள்/கல்லூரிகளில் நடத்தப் பட்ட தொழிற் பயிற்சி உரை களின் எண்ணிக்கை .. .. | 354 | 372 |
| 6. தொழில் பழகும் பயிற்சி/படிப்பு உதவித் தொகை மேல் படிப்புக் காக அனுப்பப்பட்ட விண்ணப் பங்களின் எண்ணிக்கை .. | 8,464 | 12,450 |

2.4. மேலும் பல்கலைக்கழக வேலைவாய்ப்புத் தகவல் மற்
றும் வழிகாட்டும் நிலையங்களும், பல்கலைக் கழக மாணவர்
களுக்கு தொழில் நெறிவழிகாட்டும் பொருட்டு செயல்படுகின்றன.



1986 மே 7]

2.5. சென்னையில் உள்ள வேலைவாய்ப்பு மற்றும் பயிற்
சித்துறை இயக்ககத்திலுள்ள மாநில வாழ்க்கைத் தொழில் வழி
காட்டல் பிரிவு, 38 தொழில் பயிற்சி நிலையங்களில் சுமார்
30,000 விண்ணப்பதாரர்களுக்கு திறனாய்வுத் தேர்வு (Aptitude
Test) நடத்தியது. தொழில் பயிற்சி நிலையங்களில் பல்
வேறு தொழில்களில் சேர்த்துக்கொள்ளப்படுவதற்காக இத்
தேர்வு நடத்தப்பட்டது. சென்னை/மதுரை பல்கலைக் கழகத்
தகவல் வழிகாட்டும் நிலையம், இராமநாதபுரம் மாவட்ட வேலை
வாய்ப்பு அலுவலகம் மற்றும் உதகமண்டலத்திலுள்ள பழங்குடி
யினருக்கான சிறப்பு வழிகாட்டும் நிலையம் ஆகியவை தொழில்
தகவல் கண்காட்சிகளை நடத்தியுள்ளன.

2.6. பழங்குடி இனத்தவருக்கு தொழில் நெறி வழிகாட்டும்
ஆலோசனைகளை வழங்கவும் தகுதியுள்ள பழங்குடி இனத்த
வரை வேலையில் அமர்த்துவதற்குத் தகுந்த வேலைவாய்ப்புக்
களைக் கண்டறியவும், உதகமண்டலத்தில் பழங்குடியினருக்காகத்
தொழில் நெறி வழிகாட்டும் சிறப்பு அலுவலகம் ஒன்று அமைக்
கப்பட்டுள்ளது. இவ்வலுவலகத்தின் பணி பற்றிய விவரங்கள்
கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| (1) | 1–1–1984 முதல் 31-12-1984 வரை. (2) | 1–1–1985 முதல் 31-12-1985 வரை. (3) |
|---|---|---|
| 1. பெருமளவில் பழங்குடியினர் வாழு கின்ற இடங்களுக்கு நேரில் சென்று பதிவு செய்த பழங்குடி யினரின் எண்ணிக்கை .. | 171 | 249 |
| 2. பதிவு செய்து கொண்ட காலத்தில் வழிகாட்டப்பட்ட பழங்குடியின ரின் எண்ணிக்கை .. .. | 246 | 296 |
| 3. தொழில் பயிற்சி வசதி குறித்து தனிப்பட்ட வகையில் தகவல் வரப்பெற்ற பழங்குடியினரின் எண்ணிக்கை .. .. | 421 | 362 |
| 4. ஆதி திராவிடர் நல பள்ளிகள்/விடுதி களில் பழங்குடியினருக்காக நடத் தப்பட்ட தொழிற் பயிற்சி உரை களின் எண்ணிக்கை .. .. | 26 | 41 |

**வேலை வாய்ப்பு தொடர்பு அலுவலகப் பிரிவு :**

2.7. சென்னை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்ககத்தில் உள்ள இப்பிரிவு பர்மா மற்றும் ஸ்ரீலங்கா ஆகிய நாடுகளிலிருந்து தாயகம் திரும்பிய அகதிகளுக்கு தகுந்த வேலை வாய்ப்பு, பயிற்சி வசதிகள் ஆகியவற்றைப் பெற உதவுகிறது. இப்பிரிவில் நடைபெறும் பணிகளின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| (1) | 1-1-1984 முதல் 31-12-1984 வரை. (2) | 1-1-1985 முதல் 31-12-1985 வரை. (3) |
|---|---|---|
| 1 அகதி விண்ணப்பதாரர்கள் உட்பட வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சிகள் பற்றிய அறிவுரைகள் அளிக்கப்பட்ட விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை .. .. .. | 1,021 | 975 |
| 2 அகதி விண்ணப்பதாரர்களை பணியில் அமர்த்துவதற்கென பெறப்பட்ட பணி காலியிட அறிவிப்புகள் .. .. .. | 152 | 132 |
| 3 பணி மற்றும் பயிற்சி காலியிட அறிவிப்புகளுக்கு பரிந்துரைக்கப்பட்ட அகதி விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை .. .. | 659 | 145 |
| 4 பணி மற்றும் பயிற்சியில் அமர்த்தப்பட்ட அகதி விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை .. .. | 95 | 55 |
| 5 பர்மா, ஸ்ரீலங்கா அகதிகளிடமிருந்து மட்டும் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி வேண்டி பெறப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை | 1,768 | 1,821 |
| 6 அகதிகள் அல்லாத அனைத்து விண்ணப்பதாரர்களிடமிருந்து வேலை வாய்ப்பு கோரி பெறப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை .. | 9,633 | 8,228 |



வேலைவாய்ப்பு அலுவலகங்கள் 1959 ஆம் ஆண்டு (பதவி காலியிடங்களை கட்டாயமாக வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கு தெரிவித்தல்) சட்டத்தைச் செயற்படுத்துதல் :

3.1. இச்சட்டத்தின் விதிகளின்படி, பொதுத்துறையின்கீழ் வரும் நிறுவனங்கள் மற்றும் 25-ம் அதற்கு மேற்பட்ட பணியாளர்களைக் கொண்ட தனியார் துறை நிறுவனங்கள் (வேளாண்மை நீங்கலாக) ஆகியவை அதனதன் நிறுவனங்களில் ஏற்படும் காலியிடங்களை, அந்நிறுவனங்கள் அமைந்துள்ள இடங்களின் எல்லைக்குட்பட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கு அறிவிக்க வேண்டும். 30–9–1985 அன்றைய நிலவரப்படி இச்சட்ட வரம்பிற்குள் 14,317 நிறுவனங்கள் அடங்கியுள்ளன. இந்நிறுவனங்கள் மூலமாக அறிவிக்கப்பட்ட மற்றும் நிரப்பப்பட்ட காலியிடங்களின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :

| காலம். (1) | அறிவிக்கப் பட்ட காலியிடம். (2) | நிரப்பப் பட்ட காலியிடம். (3) |
|---|---|---|
| 1–1–1984 முதல் 31–12–1984 வரை | 84,615 | 57,600 |
| 1–1–1985 முதல் 31–12–1985 வரை | 69,274 | 52,287 |

**குடும்பத்திற்கு ஒருவர் வேலைத் திட்டம் :**

4.1. தமிழக அரசு, தற்போது பொது பிரச்சனையாக உள்ள வேலையில்லா திண்டாட்டத்தைச் சமாளிக்கும் பொருட்டு "குடும்பத்தில் ஒருவருக்கு வேலை அளிக்கும் திட்டத்தை" கொள்கையாக ஏற்றுக் கொண்டு முனைப்புடன் செயலாற்றி வருகிறது.

**சென்னையில் வீட்டுச் சேவை மையங்கள் நிறுவுதல் :**

4.2. படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்களிடையே சுய வேலைவாய்ப்பைப் பெருக்குவதன் பொருட்டும், அந்தந்த பகுதிகளிலுள்ள வீடுகளில் ஏற்படும் தேவைகளை/பழுதுகளை, ஈடு சரி செய்வதன் பொருட்டும் மின்சாரப் பணியாளர், தச்சுப் பணியாளர், குழாய் பழுது பார்ப்பவர் ஆகியோரை கொண்ட வீட்டு சேவை மையங்கள் சென்னையில் ஏழு இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன. இந்த வீட்டுச் சேவை மையங்களில் பணியாற்றும் தொழில்நுட்பப் பணியாளர்கள், பல்வேறு பகுதிகளில் உள்ள வீடுகளில் ஏற்படும் பழுதுகளை சரிபார்ப்பதன் மூலம் நாள் ஒன்றுக்கு ரூ. 20 முதல் 25 வரை வருமானம் பெறுகின்றனர். இத்திட்டம் மதுரை, சேலம், கோயம்புத்தூர், திருச்சி மற்றும் வேலூர் ஆகிய நகரங்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது.

[1986 மே 7

**பாத்திரம் தூய்மைப்படுத்தும் பயிற்சி :**

4.3. வறுமைக் கோட்டின் கீழ் உள்ள வேலை வாய்ப்பற்றவர் களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் பொருட்டு பாத்திரம் தூய் மைப்படுத்தும் திட்டத்தில் அவர்களுக்கு பயிற்சி அளித்து அவர் களை பல்வேறு உணவகங்களில் பணியில் அமர்த்தும் பணி செயல் படுத்தப்படுகிறது. இப்பயிற்சியின் காலம் 10 வாரங்களாகும். இதுவரையிலும் பாத்திரம் தூய்மைப்படுத்தும் திட்டத்தில் 37 நபர்கள் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளனர்.

**தோட்டக் கலையில் பயிற்சி :**

4.4. குறைந்த கல்வித் தகுதியுள்ள வேலைவாய்ப்பற்ற இளைஞர்களிடையே சுயவேலை வாய்ப்பினை ஊக்குவிக்கும் பொருட்டு, மூன்று மாதங்கள் தோட்டக் கலையில் பயிற்சி அளிக்கப்படுகிறது. இதுவரையில் 43 நபர்கள் இத்தோட்டக் கலையில் தங்களது பயிற்சியினை பெற்றுள்ளனர்.

**வீட்டை பராமரிக்கும் கலையில் பயிற்சி :**

4.5. இத்திட்டத்தின் கீழ் ஆதரவற்ற மற்றும் அனாதை பெண்களுக்கு வீட்டை பராமரிக்கும் கலையில் 4 மாத பயிற்சி அளிக்கப்படுகிறது. இதுவரை 11 நபர்கள் தங்களது பயிற்சி யினை வெற்றிகரமாக முடித்துள்ளனர்.

**பூந்தமல்லி கிராமப்புற வேலைவாய்ப்பு அபிவிருத்தி திட்டம் :**

4.6. பூந்தமல்லியைச் சுற்றியுள்ள இடங்களில் வாழும் வேலையில்லாத குடும்பங்களுக்கு வேலைவாய்ப்பளிக்கும் நோக்கத் துடன், பூந்தமல்லிக்கு அருகில் உள்ள கூடப்பாக்கம் என்ற இடத்தில் கிராமப்புற வேலைவாய்ப்பு அபிவிருத்தி சங்கம் நிறுவப் பட்டுள்ளது. இவர்களுக்கு கீழ்காணும் தொழில் பயிற்சி பிரிவு களில் பயிற்சி அளிப்பதற்காக ரூ. 30 இலட்சம் முதலீடு செய்யப் பட்டுள்ளது.

1. தையல்வேலை, தொழிற்சாலைக்குத் தேவையான தோல் கையுறைகள் தயாரித்தல்.

2. தச்சு வேலை.

3. செங்கல் தயாரிப்பு.

4. கட்டிடம் கட்டுதல்.

5. இரும்புத் தகடுகளை பற்றவைத்து சாமான்கள் செய்தல்.

6. பேக்கரி மற்றும் உணவுத் தயாரிப்புகள்.



1986 மே 7]

7. பிளாஸ்டிக் சாமான்கள்.

8. இராசாயனப் பொருட்கள் தயாரித்தல்.

9. இயந்திரங்கள் பழுது பார்க்கும் நிலையம்.

10. மின் இயக்க சாதனங்கள் தயாரித்தல்.

**வேலை வாய்ப்பற்றோர் உதவித் தொகை திட்டம்**

5.1. படித்த வேலையற்றோர் துயரை களையும் பொருட்டு 1—7—1980 முதல் " வேலையற்றோர் உதவித் தொகை " என்னும் திட்டத்தை அரசு அமுல்படுத்தி வருகிறது. இந்தத் திட்டத்தில் பயன்பெறுவோர் வேலைவாய்ப்பகத்தில் பதிவுசெய்து உயிர்ப்பதிவேட்டில் ஐந்து ஆண்டுகள் இருக்க வேண்டும். இந்த திட்டத்தை செயல்படுத்துவதற்கான விளக்கமான வழி முறைகள் வகுக்கப்பட்டுள்ளன. கீழ்க்கண்ட இனத்தவர்களுக்கு உதவித் தொகை அளிக்கப்படுகிறது.

| வரிசை எண். | நபர்கள். | தொகை மாதம் ஒன்றுக்கு. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 | பட்டதாரிகள்/முது நிலைப் பட்டதாரிகள் .. | 100 |
| 2 | பிளஸ் 2 புகுமுக வகுப்பு தேறியவர்கள் .. | 75 |
| 3 | இடைநிலை தர ஆசிரியர்கள் .. .. | 50 |
| 4 | உயர் தொடக்க நிலைத்தர ஆசிரியர்கள் | 50 |
| 5 | உடற்பயிற்சி கல்வி ஆசிரியர்கள் (உயர் தொடக்க நிலை/தொடக்க நிலை). | 50 |
| 6 | தமிழாசிரியர்களும் பிறமொழி ஆசிரியர்களும் | 50 |
| 7 | கைவினைப் பயிற்சி ஆசிரியர்கள் .. .. | 50 |
| 8 | பொறியியல் பட்டயம் பெற்றவர்கள் .. | 50 |
| 9 | எஸ். எஸ். எல். சி. தேறியவர்கள் .. | 50 |

5.2. உதவித் தொகை ஒவ்வொரு மூன்று மாதங்களுக்கு ஒரு முறை அளிக்கப்படுகிறது. மூன்று ஆண்டுகள் அல்லது வேலையில் அமரும் வரை, இதில் எது முதலில் நிகழ்கின்றதோ அதுவரை தொகை அளிக்கப்படும். 1—1—1984 முதல் 31—12—1984 முடிய 24,461 வேலையற்ற நபர்கள் பயனடையும் வகையில் ரூ. 18.90 இலட்சம் உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. 1—1—1985 முதல் 31—12—1985 முடிய 70,334 வேலையற்ற நபர்கள் பயன் அடையும் வகையில் ரூ. 561.40 இலட்சம் உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. 15—9—1984 முதல் எஸ். எஸ். எல். சி., பி. யு. சி., பிளஸ் 2 தேறியவர்களுக்கும் இத்திட்டம் விரிவாக்கப்பட்டதால் 1984-ம் ஆண்டைக் காட்டிலும் 1985-ம் ஆண்டில் கூடுதலாக செலவழிக்கப்பட்டுள்ளது.

## அத்தியாயம் 2

### பயிற்சிப் பிரிவு.

6.1. தமிழ் நாட்டில் 40 அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்கள்இயங்குகின்றன. இவை ஆண்களுக்கும் பெண்களுக்கும் பல தொழிற் பிரிவுகளில் பயிற்சி அளிக்கின்றன. பயிற்சியளிக்கப் படும் தொழிற் பிரிவுகளில் சில பின்வருமாறு :—

1. பொறிப் பகுதி பொருத்துபவர் (Fitter)
2 கடைசல் பிடிப்பவர் (Turner)
3 இயந்திர வேலையாள் (Machinist)
4 கம்மியர் (வானொலி, டெலிவிஷன் (Mechanic Radio and Televission)
5 எலக்ட்ரானிக் மெகானிக் (Electronic Mechanic)
6 துணி வெட்டுதலும் தையல் வேலையும் (Cutting and Tailoring)
7 சுருக்கெழுத்து தட்டச்சு முறை (Stenography)

பயிற்சி முடிந்த பிறகு இந்த திறமையான கைவினைஞர்கள் தாங்களாகவே தகுந்த வேலைகளில் அமர்கிறார்கள். சிலர் சுய வேலைவாய்ப்பில் ஈடுபடுகிறார்கள். ஓராண்டு, ஈராண்டு பயிற்சிக் காலம் கொண்ட வெவ்வேறு தொழிற் பிரிவுகளில் 15,000 பேர்கள் பயிற்சி பெறுகின்றனர். மகளிருக்கென தனியாக 5 தொழிற் பயிற்சி நிலையங்கள் இயங்குகின்றன. தற் பொழுது 938 மகளிர் பயிற்சி பெறுகிறார்கள். இதுவரையில் 1975 முதல் 1985 வரை நடைபெற்ற அகில இந்தியத் தொழிற் தேர்வுகளில் கலந்து கொண்ட 84,415 பயிற்சியாளர்களின் 71,272 பேர் ஆண்களும் பெண்களுமாக தேர்ச்சி பெற்றுள்ளனர்.

6.2. மாறிவரும் தொழில் நுட்ப சூழ்நிலைக்கேற்றவாறு மிக நவீன நுட்பமான இயந்திரங்களைக்கையாள்வதற்கு அட்வான்ஸ்டு வொகேஷனல் டிரெயினிங் சிஸ்டம் (Advanced Vocational Training System) மூலமாக அம்பத்தூர் மற்றும் கோயம்புத்தூர் தொழிற்பயிற்சி நிலையங்களில் அரசு தொழிலாளர்களுக்கு பயிற்சியளிக்கிறது. இதுவரையில் இத் திட்டத்தின் கீழ் 2,767 தொழிலாளர்கள் பயன் பெற்றுள்ளனர்.

6.3. வேலை பழகுநர் சட்டம், 1961-இன் கீழ் அரசு 1,572 நிறுவனங்களைக் கொண்டு வந்துள்ளது. இதுவரையில் 63,000 தொழிற் பழகுநர்கள் பயனடைந்துள்ளனர். தற்பொழுது 11,480 தொழில் பழகுநர்கள் பயிற்சி பெற்று வருகின்றார்கள்.





6.4. ஊரக ஏழை விவசாயிகள் நிலமற்ற விவசாய தொழி லாளர்கள் மற்றும் வறுமைக் கோட்டின் கீழுள்ள மக்களைச் சேர்ந்த இளைஞர்களுக்கு (Trysem) என்ற திட்டத்தின் கீழ் சுயவேலை வாய்ப்பில் ஈடுபட அரசு பயிற்சியளிக்கிறது. இத் திட்டத்தின் கீழ் 28 தொழிற் பயிற்சி நிலையங்களில் 20 தொழிற் பிரிவுகளில் பயிற்சியளிக்கப்படுகிறது. இதுவரையில் 15,000 ஊரக இளைஞர்கள் இத்திட்டத்தின் கீழ் பயனடைந் துள்ளனர். தற்பொழுது 750 இளைஞர்கள் பயிற்சி பெற்று வருகிறார்கள்.

6.5. அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் சேருவதற் கான இட நெருக்கடி ஆண்டுதோறும் அதிகரித்துக் கொண்டு போவதால் பின்தங்கிய மாவட்டங்களான இராமநாதபுரம் மாவட் டத்தில் இராமநாதபுரத்திலும், தர்மபுரி மாவட்டத்தில் தர்ம புரியிலும் இரண்டு தொழிற் பயிற்சி நிலையங்களை 1986–87 இல் துவக்க அரசு திட்டமிட்டுள்ளது.

6.6. தொழிலாளர்களுக்கான மாலை நேர வகுப்புத் திட்டத் தின் கீழ் தொழிலாளர்களுக்கு கருத்தியல் பாடங்களில் பயிற்சி யளிக்க அரசு வசதிகள் செய்து கொடுத்துள்ளது. தொழிற் நிறுவனங்கள் நிறைந்த அம்பத்தூர், கிண்டி, வடசென்னை, , கோயம்புத்தூர், மதுரை, திருச்சி, மேட்டூர் அணை ஆகிய இடங்களி லுள்ள அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் இப்பயிற்சித் திட்டம் செயல்பட்டு வருகிறது. கடந்த 10 வருடங்களில் 6,253 தொழிலாளர்கள் இத்திட்டத்தினால் பயனடைந்துள்ளனர். தற்பொழுது 1,300 தொழிலாளர்கள் பயிற்சி பெற்று வருகிறார் கள்.

6.7. வேலையிழந்த பொற்கொல்லர், மாதிரியமைப்புச் செய்பவர் (Pattein Maker) கைத்தறி நெசவாளர்கள் ஆகியோருக்கு சில தொழிற் பிரிவுகளில் பயிற்சியளிக்க அரசு ஒரு தனி பயிற்சித் திட்டத்தை நடத்தி வருகிறது. இதுவரையில் 674 பேர் பயனடைந்துள்ளனர்.

6.8. இவ்வாறு மாபெரும் பயிற்சித் திட்டத்தை செயல் படுத்தி வரும் அதே சமயத்தில், அரசு பயிற்சியாளர்களுக்கு வேண்டிய மிக அத்தியாவசிய வசதிகளை செய்து தருவதில் மிக்க கவனமாக உள்ளது. பயிற்சியாளர்களுக்கு பயிற்சிக்குத் தேவையான கருவிகள் மற்றும் தளவாடங்கள், கட்டிடங்கள், தங்குவதற்கு தேவையான விடுதிகள் ஆகிய வசதிகளை அரசு அளித்து வருகிறது. அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் அளிக்கப்பட்டு வரும் இலவசப் பயிற்சித் திட்டம் ஏழை மக்களின் வளர்ச்சிக்கு மிகவும் உதவி வருகிறது. இவர்கள் பயிற்சி பெற்று திறமை மிக்க கைவினைஞர்களாகி நம்முடைய தொழில் வளர்ச் சியை ஊக்குவிக்கிறார்கள்.

## அத்தியாயம் 3.

### அயல் நாட்டு வேலை வாய்ப்பு நிறுவனம்

7.1. அயல்நாட்டு வேலை வாய்ப்பு நிறுவனம் (தமிழக அரசை சார்ந்தது) 1956 ஆம் ஆண்டில் நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக 1978 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 30ம் தேதி அன்று நிறுவப்பட்டது.

2. இந்நிறுவனம் ரூ. 50 இலட்சத்தை அங்கீகரிக்கப்பட்ட மூலதனமாகக் கொண்டுள்ளது. இத்தொகை, ஒவ்வொன்றும் ரூ.1,000 ஆக 5,000 சரி சம பங்குகளாக பிரிக்கப்பட்டுள்ளது. ரூ. 10 இலட்சமாக இருந்த செலுத்தப்பட்ட மூலதனத்தை (Paid up capital) 1984–85 ஆம் ஆண்டு ரூ. 20 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

இந்நிறுவனத்தின் நோக்கங்கள்:—

(1) திறமை பெற்ற, ஓரளவு திறமை பெற்றவர்களுக்கு வெளிநாடுகளில் வேலை வாய்ப்பை பெற்றுத் தருவது.

(2) தொழிலாளர்களால் ஈட்டிய வருமானத்தை முதலீடு செய்தல்.

(3) வெளிநாடுகளிலும், இந்தியாவிலும் இணைந்த தொழில் அமைப்புகளை அமைத்தல்.

(4) இந்தியப் பொருட்களை ஏற்றுமதி செய்வது.

7.2. வெளிநாடுகளில் இம் மாநிலத்தை சேர்ந்த தொழிலாளருக்கு வேலை தேடித் தருவதில் இந்த நிறுவனம் தற்பொழுது தீவிரமாக பணியாற்றி வருகிறது. வெளிநாடுகளில் வேலை பெற விழையும் தொழிலாளர்களை பதிவு செய்து கொள்கிறது. 1984–85 ஆம் ஆண்டு வரை 1,422 நபர்களை வெளிநாட்டுக்கு அனுப்பியுள்ளது. 1985–86 ஆம் ஆண்டில் மட்டும் இந்நிறுவனம் 1,300 நபர்களை வெளிநாட்டுக்கு அனுப்பும். 1986–87 ஆம் ஆண்டில் இந்த எண்ணிக்கை கணிசமாக உயரும். 1984–85 ஆம் ஆண்டு வரை இருந்த 4 மத்திய கிழக்கு நாடுகளுடன் புதியதாக 7 நாடுகளில் வேலை வாய்ப்புகள் உள்ளது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

7.3. தொடக்கக் காலத்தில் இந்நிறுவனம் ரூ. 14.76 இலட்சம் வரை இழந்துள்ளது. 1985–86 ஆம் ஆண்டு இந்த இழப்பை ஈடு கட்டி இலாபம் ஈட்ட துவங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.



## அத்தியாயம் 4.

### கோரிக்கை 58. பல்வகை மூலதனச் செலவு.

495.ஏ. ஏனைய சமூக சமுதாய நலப்பணிகள்.—

ஏபி. வேலைவாய்ப்பு.—

8.1. கைவினைஞர் பயிற்சித் திட்டம் மற்றும் தொழிற் பழகுநர் பயிற்சித் திட்டம் ஆகியவற்றை செயல்படுத்த ரூ. 19.43 இலட்சம், 1986–87 ஆம் வருடத்திய திட்ட மதிப்பீட்டில் ஒதுக்கப்பட்டுள்ளது. இது பகுதி-1 திட்டத்தில் மூலதனச் செலவாகும். இத்தலைப்பின் கீழ் எடுத்துக் கொள்ளப் பட்டிருக்கும் சில துணை திட்டங்கள் பின் வருமாறு:—

தொழிற் பயிற்சி நிலையங்களில் பணியாளர்களுக்கு குடியிருப்புகள் கட்டுதல்.

8.2. இம் மாநிலத்திலுள்ள 25 தொழிற் பயிற்சிநிலையங்களில் பணியாற்றும் பணியாளர்களில் தெரிந்தெடுக்கப்பட்ட பணியாளர்களுக்கு நிலையான குடியிருப்புகள் உள்ளன. 1986–87 ஆம் வருடத்திய வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 1,000 பணியாளர்களின் குடியிருப்புகளின் பராமரிப்புக்காக அடையாள நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

கடலூர் (மகளிர்) மற்றும் அரக்கோணம் தொழிற்பயிற்சி நிலையங்களில் இயந்திரங்கள் கருவிகள், வாங்க மற்றும் கட்டிடங்களுக்கு வகை செய்தல்.

8.3. 1986–87 வருடத்திய வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில், கடலூர் (மகளிர்) மற்றும் அரக்கோணம் தொழிற் பயிற்சி நிலையங்களில் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வாங்க ரூ. 17,000 ஒதுக்கீடும், அரக்கோணம் தொழிற் பயிற்சி நிலையத்தில் கட்டிடம் கட்டுவதற்கு ரூ. 1,000 அடையாள நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டுள்ளன.

தொழில் பழகுநர் பயிற்சித் திட்டம்.

8.4. 1986–87 வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில், கிண்டியிலுள்ள அடிப்படைப் பயிற்சி மையத்தில் தேவையான சாதனங்களை வாங்குவதற்கென்று ரூ. 1,000 அடையாள நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

136487

தொழில்களை பலதிறப்படுத்துதல்.

1985–86 ஆம் வருடத்தில் ஓசூர், திண்டுக்கல், மேட்டூர் பணிமனையும் விருதுநகர் அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்தின் பணிமனைகளும் கூடுதல் வகுப்பறைகளும் கட்டுவதற்கென்று ஆகும் செலவாக ரூ. 22.15 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டு இதன் தொடர்பாக ரூ. 11.77 இலட்சமும், தொழிற் சாதனங்கள் வாங்குவதற்கென்று ரூ. 0.25 இலட்சம் தொழில்களை பலதிறப்படுத்துதல்'' கணக்குத் தலைப்பின் கீழும் 1986–87 திட்ட மதிப்பீட்டின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ளது.

தொழிற்பயிற்சி நிலையங்களில் இல்லாத கருவிகள் மற்றும் சாதனங்கள் வாங்குதல்.

8.6. அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களுக்குரியதும், எளிதில் கிடைக்கப் பெறாததுமான கருவிகள் மற்றும் சாதனங்கள் வாங்குவதற்கு என்று 1986–87 திட்ட மதிப்பீட்டில் ரூ. 19,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

தொழில் பயிற்சி நிலையங்களின் வளர்ச்சி

8–7–1985–86 நிதி ஆண்டில் காந்தி கிராமம் (அண்ணா மாவட்டம்) திருப்பூர் (கோயம்புத்தூர் மாவட்டம்) ஆகிய இடங்களில் இரண்டு தொழிற் பயிற்சி நிலையங்கள் முழுமையாகப் பெண்களுக்கென்றே ஆரம்பிக்கப் பெற்று அவற்றுக்கான இயந்திரங்கள் மற்றும் சாதனங்களை வாங்கவென்று ரூ.6,28,000 மற்றும் வேறு சில தொழிற் பயிற்சி நிலையங்களில் கட்டுமானப் பணிக்கென்று ரூ. 15,000 ஆகியவை 1986–87 திட்ட மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ளன.

தற்போதுள்ள தொழிற்பயிற்சி நிலையங்களில் நவீன வசதிகள் செய்து கொடுத்தல்.

8.8. அம்பத்தூர் மற்றும் கோயம்புத்தூரிலுள்ள தொழிற் பயிற்சி நிலையங்களில் செயல்படுத்தப்பெறும் 'வாழ்க்கைத் தொழில் மேம்பயிற்சித் திட்டத்திற்கான சாதனங்களை வாங்கு வதற்கும் மற்றும் அம்பத்தூர் தொழிற் பயிற்சி நிலையத்தில் மீதமுள்ள கட்டிட கட்டுமானப் பணிகளைப் பூர்த்தி செய் வதற்கும் ரூ 58,000, 1986–87 திட்ட 'மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

V211.31 N86
N86-26-2